RAHMATH RAJAKUMARAN PAGES



ரஹ்மத் ராஜகுமாரன்

2021-PART-4

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

→ பறவைகளின் உலகம்

→ சூஃபிகளின் உலகம்

→ உண்ணும் உணவைக் கவனித்தீர்களா

→ விலங்குகளின் உலகம்

→ பிரபஞ்சத்தின் மொழி கணிதம்

→ ஆன்மாக்களின் உலகம்

→ கராமத்

(அஸ்ஹாபுல் கஹ்பு ' என்கிற குகைத் தோழர்களான வலிமார்களைப் பற்றிய பதிவு ஓரிரு பதிவுகளில் சொல்ல முடியாத நீண்ட நெடிய கராமத்தான வரலாறு)
அது பத்து பதிவுக்கும் மேலாக இருக்கலாம் , **கராமத் 50** பதிவுகளின் தொடரில் கடைசி பத்து பதிவுகள் அஸ்ஹாபுல் கஹ்பு என்ற குகைத் தோழர்களின் வரலாறு பற்றி இன்ஷா அல்லாஹ் எழுதி உள்ளேன்.

இந்த பழமையான கிதாபு===:

" ஜனாப் காஜா முஹம்மது ஆலீம் சாஹிபு அவர்களால் - " அஸ்ஹாபுல் கஹ்பு ஓர் றகீம் "
பழம்பெறும் தமிழ் நடையில் **1924** -ல் தொகுக்கப்பட்ட மிக **அருமையான** வரலாறு) See page 247 to 267

ஆறாவது விரல்

ஒரு சில விஷயங்களை உங்களிடம்
சொல்ல வேண்டியதிருக்கிறது .
இன்றைய உலகம் செல்போன் யுகம்
மனிதனின் ஆறாவது விரல் செல்போன்
பெரும் தொழிலதிபர்கள் முதல்
பூக்காரப் பெண்மணி வரை
அனைவர் கையிலும் செல்போன்.

எல்லோருமே டாக்டர் பட்டம் பெறுமளவுக்கு
எந்நேரமும் குடைந்துகொண்டே இருக்கிறார்கள்.
நீங்கள் கையில் வைத்திருக்கும்
செல்போன் அப்போவே அசாதாரணமானது
தெரியுமா உங்களுக்கு ?
இப்போது அதன் வலிமையைக் கூட்டி,
நாலு சுவற்றிற்குள் நீங்களிருந்து
நோண்டும் விஷயங்கள்,
அந்த உடனேயே நாலு லட்சம் பேருக்கு
மேலாக வெளிச்சம் போட்டு காட்டக்கூடியது.

" நீங்கள் எங்கிருந்தபோதிலும் மரணம்
உங்களை அடைந்தே தீரும்;
மிகப் பலமான உயர்ந்த கோட்டை
கொத்தளத்தின் மீது நீங்கள்
இருந்தபோதிலும் சரியே!" (குர்ஆன் 4 : 78)

உங்களை அடைவது
மரணம் மட்டுமல்ல ;
செல்போன் சிக்னலும்தான்.
உதாரணத்திற்கு சொல்றேன்.
டவர் இல்லாத, கீ பேட் லாக் செய்யப்பட்ட
செல்போன் கூட
உலகளாவிய அவசர எண் 112 மட்டும்
நெட்ஒர்க் இல்லாத இடத்திலும்,
வேறு செல்போன் சேவை நிறுவனத்தின்
நெட்ஒர்க்கில் வேலை செய்யும்.

எனவே
எந்த மின்காந்த அலைக்கற்றையும்
உங்களை
எப்படியும் காட்டிகக்கொடுத்தே தீரும்.
விரல் நுனியில் உலகம்,
நினைத்த நேரத்தில் தொடர்பு,
கருத்துப் பரிமாற்றம்,
பாதுகாப்பு, செய்திகள்...
செல்போன்களால் பலவித

நன்மைகள் இருக்கின்றன.
‘அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு’
செல்போன் பயன்படுத்துவோருக்கும்
இது பொருந்தும்.
பேசுவதற்கும், பல விஷயங்களைத்
தெரிந்துகொள்வதற்கும் ,
அவ்வப்போது செல்போன்களைப்
பயன்படுத்திக்கொள்வதில் தவறே இல்லை.
கால வரைமுறை இல்லாமல்
செல்போன்களைப் பயன்படுத்தத்
துடிப்பதுதான் தவறு. `
வேறு வேலை
செய்துகொண்டிருந்தாலும்,
செல்போன் அழைப்பு மணிக்காகவோ,
வாட்ஸ்அப் செயலிகளின்
ஒலிகளுக்காகவோ
பெரும்பாலோரின் மனம்
ஏங்கிக்கிடக்கின்றன .

அழைப்பு ஒலிகள் குறிப்பிட்ட
கால இடைவெளியில் வரவில்லையெனில்,
உடலுக்குள் பதற்றமான சூழ்நிலை (Anxiety)
உருவாவதாகக் கூறப்படுகிறது.
மின்காந்த அலைக்கற்றை
வானம் தாண்டி செல்லும்
வகையைச் சார்ந்தது என்பது
உங்களுக்குத் தெரியுமா ?

நினைப்பதைக் கூட பதிவு செய்யும்
வானவர்களின் பதிவுச் சீட்டில்
மின் அலைக்கற்றை
பதியாமலிருக்குமா என்னே ?
நபியே! ஒரு நாளை நீங்கள்
அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள்.
அந்நாளில் ...
அவர்களுடைய நாவுகளும்,
அவர்களுடைய கைகளும்,
அவர்களுடைய கால்களும் கூட
அவர்களுக்கு விரோதமாக
அவர்கள் செய்தவைகளைப் பற்றி
சாட்சியம் கூறும்.(குர்ஆன் : 24:24)
நம் புலன்களே நமக்கெதிராய்
சாட்சி சொல்லும் காலத்தில்
ஆறாவது விரலான செல்போனும்
சாட்சி சொல்லாமலா போகும் ?

ரஹ்மத் ராஜகுமாரன் +919486909903 /// +919443446903



லுக்மான் (அலை) அவர்கள்,
தன் மகனுக்கு கூறிய 8 உபதேசங்கள்!

எனதருமை மகனே!
1. நீ தொழுகையில் இருந்தால்,
உன் உள்ளத்தைப் பாதுகாத்துக் கொள்!
2. நீ உணவில் இருந்தால்,
உன் வயிற்றைப் பாதுகாத்துக் கொள்!
3. நீ பிறர் வீட்டில் இருந்தால்,
உன் கண்களைப் பாதுகாத்துக் கொள்!
4. நீ மனிதர்கள் முன் இருந்தால்,
உன் நாவைப் பேணிக் கொள்!

எனதருமை மகனே!
இரு விஷயங்களை மறந்து விடாதே!
1. அல்லாஹ்.
2. மரணம்.

எனதருமை மகனே!
இரு விஷயங்களை மறந்து விடு.
1. நீ பிறருக்கு செய்த உதவி.
2. உனக்கு பிறர் செய்த கெடுதி.

நூல்: தஃப்ஸீர் இப்னு கஸீர்.

→ தமக்கு அறிவுரை கூறுமாறு வேண்டிய மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கிள்று அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியவை:

🖉 பிறரிடம் தர்க்கம் செய்வதற்காக கல்வி கற்க வேண்டாம். கற்றபடி செயலாற்றுவதற்காக கல்வி கற்கவும். கற்றபடி செயலாற்றாவிடின் எவ்வித பயனும் ஏற்படாது. பிறருக்குத்தான் அது பயன்படும்.

🖉 பிறருக்கு நன்மை செய்வீராக! பிறருக்கு ஒருபோதும் தீங்கிழைக்க வேண்டாம்.

🖉 முகத்தை மலர்ச்சியுடன் வைத்திருப்பீராக!

🖉 அழிவு வேலையில் இறங்க வேண்டாம்.

🖉 தாம் செய்த தவற்றினை எண்ணி மனம் வருந்தி ஒருவர் மன்னிப்பு கோரிய பின்னர் நீர் மீண்டும் அவரிடம் அத்தவற்றை எடுத்துரைத்து அவரை இழிவுபடுத்த வேண்டாம்.

🖉 வாழ்நாளெல்லாம் உம் பாவங்களை எண்ணி அழுது கொண்டிருப்பீராக!

🖉 மறுமைக்கான தேட்டத்திலேயே உம்முடைய முயற்சிகள் அமைந்திருக்கட்டும்.

🖉 வியப்புக்குரியவை நிகழ்ந்தாலன்றி வேறு காரணங்களுக்காக சிரிக்க வேண்டாம்.

🖉 உமக்கு தேவையற்ற அலுவல்களில் நீர் தலையிட வேண்டாம்;.

🖉 இன்றைய அலுவலை நாளை செய்யலாம் என்று தள்ளிப் போட வேண்டாம்.

→ அதன்பின்னர் ஹழ்ரத் கிள்று அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமக்கு அறிவுரை பகருமாறு நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வேண்டினார்கள்.

🖉 அல்லாஹ்விற்காக அன்றி வேறெவருக்காகவும் எவர்மீதும் சினமுற வேண்டாம்.

🖉 உலகத்தின் மீது பற்று கொள்ள வேண்டாம். பற்று கொண்டால் அது இறைநம்பிக்கையை உள்ளத்திலிருந்து போக்கடித்து இறைவனுக்கு மாறு செய்யும் தன்மையை உள்ளத்தில் புகுத்தி விடும்.

சுமார் பதினெட்டு நாட்களுக்குப் பின்னர் இருவரும் தத்தம் வழியே பிரிந்து சென்றனர்.

ரஹ்மத் ராஜகுமாரன்

+919486909903 /// +919443446903

பறவைகளின் உலகம் 1



தன் துணைக்கு மஹர் கொடுக்கும் தூக்கணாங் குருவி
ஒவ்வொரு பறவையிலும் அல்லாஹ் ஒவ்வொரு அத்தாட்சியை வைத்துள்ளான். சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு அதில் ஒரு படிப்பினை உள்ளது.

.

உதாரணமாக தூக்கணாங் குருவி என்பது ஒரு பறவை என்று மட்டும் தான் நமக்கு தெரியும். ஆனால், அந்த பறவை கூட மஹர் என்ற திருமணக்கொடை கொடுத்து தான் தனது வாழ்க்கையை தொடங்கும் என்பது யாருக்காவது தெரியுமா ?

.

நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை)களை மகிழ்வோடு (கொடையாக) கொடுத்துவிடுங்கள் - அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்கு கொடுத்தால், அதைத் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்.

(அல்குர்ஆன் 4:4 மேலும், மஹர் பற்றிய திருமறை வசனங்களைப் பார்க்க: 2:236. 4:24,127. 5:5. 30:50, 60:10)
மஹர் என்றால் மணக்கொடை என்று கூறலாம். திருமணத்திற்காக பெண் பார்க்கும் நிகழ்வில் திருமணப் பேச்சில் ஈடுபடும்போது முக்கியமாக மஹர் பற்றியும் பேசப்படும்.பெண் பேசுபவர் மணமகளுக்கு மணக்கொடையாக என்ன தருவார் ? எவ்வளவு தருவார் ? என்பதை மணமகள் அல்லது மணமகள் சார்பில் பேசப்படுவதாகும்.

பெண் பேசுபவரின் செல்வங்களிலிருந்து வைரம், தங்கம் போன்ற ஆபரணங்களாகவும், ரொக்கமாகவும், அசையும் சொத்து, அசையா சொத்து, ஆடைகள், உழைத்தல், கல்விக் கற்பித்தல் போன்றவற்றையும் மணமகளுக்கு மஹராகக் கொடுக்கலாம்.
ஒரு பொற் குவியலையே மஹராக மணமகளுக்குக் கொடுக்கலாம் என அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

'தூக்கணாங் குருவிக்கூடு தூங்கக் கண்டார் மரத்திலே' என்ற பாடல் காதுக்கு
இனிமையாக
இருப்பது போல் கூடுகளும் கண்ணுக்கு விருந்தாக... இருக்கும்.

' இன்றைய தலைமுறைக் குழந்தைகளில் எத்தனை பேர் தூக்கணாங் குருவியையும், அதன் கூட்டையும் பார்த்திருப்பார்கள் என்பது கேள்விக்குரியதே.
ஒரு அற்புதமான கட்டிடக் கலைஞன் பறவையாய் பிறந்து விட்டதே என்று வியக்கும் வண்ணம் ஒரு பறவை கூடுகட்டி வாழ்ந்து வருகிறது. ஒரு அற்புதமான கூட்டினை கட்டுவதற்கு அது பதினெட்டு நாட்கள் எடுத்துக்கொள்கிறது என்றால், அது எவ்வளவு பெரிய வல்லுநராக இருக்க வேண்டும்.
வீடு கட்டியாகி விட்டது. வீட்டுக்கு விளக்கேத்த வேண்டுமே. பறவைகள் மண்ணெண்ணெய்க்கும் மின்சாரத்துக்கும் எங்கு போகும். இயற்கை அதற்கும் வழி சொல்லித் தந்துள்ளது. ஒரு மின்மினிப்பூச்சியை பிடித்து வந்து கூட்டில் வைத்துள்ள ஈரக் களிமண்ணில் அதைப் பதித்து வைத்து கூட்டுக்குள் ஒளியேற்றிக் கொள்கிறது.

ஆண் பறவைதான் கூடுகட்டும். காய்ந்த புல், வைக்கோல், நீண்ட இலைகள் போன்றவைகளை சேகரித்து வந்து கூடுகட்டும். இவற்றை இணைப்பதற்கு ஈரக் களிமண், உலர்ந்த மாட்டு சாணி ஆகியவற்றை கொண்டு வந்து, வீடுகட்ட மனிதன் சிமிண்ட் அல்லது சுண்ணாம்பு கலவையை பயன்படுத்துவது போல், அவற்றை பசையாக்கி புல், வைக்கோல், இலைகள் ஆகியவற்றை இணைத்து வலுவான உறுதியான கூட்டினைக் கட்டுகிறது.

தலைகீழாக தொங்கும் சுரைக்காய் போன்று இருக்கும் இதன் கூட்டின் நீண்ட பகுதியை தனது பெண் துணை உறுதியான பின்னரே ஆண்குருவி கட்டுகிறது. அது வரை கூட்டின் கூண்டுப் பகுதி மட்டுமே இருக்கும். இப்பகுதியை கட்டி முடித்த பின் தனது பெண் துணையை ஆண்குருவி கூட்டி வந்து காட்டும். கூட்டின் உட்பகுதி பெண்குருவிக்கு பிடிக்கவில்லை என்றால் பெண்குருவி ஆண்குருவியை விட்டு பிரிந்து விடும்.

" கொஞ்சம் பொறு ராஜாத்தி ! இதோ கூட்டை சிறிது மாற்றியமைத்து உனக்கு பிடிச்ச மாதிரி கட்டித் தர்றேன். என் அன்பே " என்று கெஞ்சி, கூட்டை மாற்றியமைத்து மீண்டும் பழைய பெண்குருவியை கூட்டி வந்து காட்டும்.
" புடிச்சிருக்கா செல்லோம்"
இவ்வாறு பெண்குருவியின் ரசனைக்கேற்ப கூடுகட்டிய பின் அதை பெண்குருவியும் ஏற்றுக்கொண்ட பின் கூட்டின் நீண்ட பகுதியை ஆண்குருவி கட்டத் தொடங்கும் இந்த நீண்ட பகுதி நாளை பிறக்கப் போடும் குஞ்சுகளுக்காக !
இவை நார்களை, இலைகளை தங்கள் அலகுகளால் நேராக கிழித்து அவற்றை பின்னி கூடுகளைக் கட்டும். இதனால் இதனை ஆங்கிலத்தில் **"வீவர்ஸ் பேர்ட் " (WEAVERS BIRD)** என்று அழைக்கிறார்கள்.
தூக்கணாங்குருவி ஒரு தலைசிறந்த பொறியியலாளரும் கூட. பெண்குருவி ஒரு பருவத்துக்கு மூன்று அல்லது நான்கு முட்டைகளை இடும். இந்த முட்டைகள் கூண்டு பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்படும். காற்று வீசும் திசையை நன்கு கணித்து அதற்கேற்ப கூண்டின் குடுவைப்பகுதியும், நீண்டபகுதியும் அமைக்கப்படும். காற்று எவ்வளவு வேகமாக அடித்தாலும், முட்டைகள் குடுவைப் பகுதிக்குள்ளேயே இருக்கும்படி நீண்ட பகுதி பின்னப்பட்டிருக்கும்.
மேலும், கூட்டின் மீது காற்றின் தாக்கம் இல்லாத மரக்கிளைகளில் இவைகள் கூடுகட்டும். குடுவை போன்ற பகுதியை கட்ட எட்டு நாட்களும், நீண்ட பகுதியை கட்ட பத்து நாட்களும் இவை எடுத்துக்கொள்ளும். கூடுகட்டும் பொருட்களை சேகரிப்பதற்காக இவை சுமார் 500 முறை பறந்து செல்கின்றன.கூட்டைக் கட்ட சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட பதர்களையும், மற்றவற்றையும் சேகரிக்கின்றது.
பெண்குருவி பதினைந்து நாட்கள் அடைகாக்கும். குஞ்சுகள் இறக்கை முளைத்து பறந்து சென்றபின் ஆண்குருவி வேறு கூட்டை கட்ட ஆரம்பிக்கும்.
இவை தானியங்கள், பூச்சி புழுக்கள் ஆகியவற்றை உண்டு உயிர்வாழக்கூடியவை. இவை கூட்டம் கூட்டமாக வாழக்கூடியவை. இவற்றின் கூட்டை தனியாக பார்க்கமுடியாது. ஒரு பகுதியில் குறைந்தது இருபது முப்பது கூடு (வீடு) கள் இருக்கும்.

இந்திய துணைக்கண்டம் முழுவதும் இப்பறவைகளைக் காணலாம். தெற்காசியா, தென்கிழக்காசியாவின் தெற்குப்பகுதிகளில் மட்டும் இப்பறவைகளைக் காணமுடியும்.
சிட்டுக்குருவி இனத்தை சேர்ந்தது தூக்கணாங்குருவி. இக்குருவியின் உச்சந்தலை, மார்பு ஆகியவை மஞ்சள் நிறத்தில் இருக்கும்.பெண்குருவிகள் பொதுவாக மரவண்ண நிறத்தில் இருக்கும்., முட்டையிடும் பருவத்தில் ஆண், பெண் குருவிகள் இரண்டும் அடர்த்தியான பிரகாசமான மஞ்சள், கருப்பு நிறங்களைப் பெற்றிருக்கும் .
இனப்பெருக்கம் இல்லாத காலங்களில் இவை கூடு கட்டுவதில்லை. அக்காலங்களில் இவை மரப்பொந்துகள் போன்ற அடைவிடங்களில் கூடி இரவைக் கழிக்கும்.
பொதுவாக இப்பறவைகள் முட்கள் இருக்கக்கூடிய ஈச்சமரம், கருவேலமரம், இலந்தை மரம் போன்ற மரங்களில் கூடுகளைக் கட்டும். பொதுவாக நீர்வளம் நிறைந்த பகுதிகளை தேடி இவை கூடுகளைக் கட்டும்.
முட்டைகளையும் குஞ்சுகளையும் உணவாக்கிக் கொள்ளவரும் பாம்பு, காகம் ஆகியவைகளிடம் இருந்து தப்பிக்கவே இவ்வாறு கூடுகளை பாதுகாப்பாக கட்டுகின்றன. இவற்றின் கூடுகளை விவசாயக் கிணறுகளுக்குள்ளும் காணலாம்.
தானே கூடு கட்டி அதையை தன் துணைப் பறவைக்கு மஹராக கொடுக்கும் தூக்கணாங் குருவியின் இயற்கையின் நியதியை இன்றைய இளைஞர் சமுதாயம் உற்று நோக்கி, சற்று யோசிக்க வேண்டும். ஏனெனில் பறக்கும் பறவைகள் கூட நம் மனித சமுதாயம் மாதிரிதான் என்று இறைவன்

பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை" (அல்குர்ஆன் : 6:38)
மஹர் ரெடியா ?
ரஹ்மத் ராஜகுமாரன்

Rahmath Rajakumaran

நீங்கள் ஒரு மனைவி(யை விலக்கி விட்டு அவளு)க்கு பதிலாக மற்றொரு மனைவியை (மணந்து கொள்ள) நாடினால், முந்தைய மனைவிக்கு நீங்கள் (பொற்)குவியலையே கொடுத்திருந்த போதிலும், அதிலிருந்து எதையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள் - அபாண்டமாகவும், பகிரங்கமாகப் பாவகரமாகவும், அதனை நீங்கள் (திரும்பி) எடுக்கிறீர்களா?
அதனை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள்? உங்களிடமிருந்து அவள் உறுதியான வாக்குறுதி பெற்று ஒருவர் மற்றவருடன் கலந்து விட்டீர்களே! (அல்குர்ஆன் 4:20,21)
மணமகளின் தந்தையிடம் எட்டு ஆண்டுகள் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்று அதையே மஹராக்கி நபி (மூஸா) அலை அவர்கள் மணமுடித்துள்ளார்கள்.
(அப்போது அவர் மூஸாவிடம்) கூறினார்: 'நீர் எனக்கு எட்டு ஆண்டுகள் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் மீது, என்னுடைய இவ்விரு பெண்களில் ஒருவரை உமக்கு மணமுடித்துக் கொடுக்க நிச்சயமாக நான் நாடுகிறேன் - ஆயினும், நீர் பத்து (ஆண்டுகள்) பூர்த்தி செய்தால், அது உம் விருப்பம். நான் உமக்கு சிரமத்தை கொடுக்க விரும்பவில்லை. இன்ஷா அல்லாஹ், என்னை நல்லவர்களில் உள்ளவராக காண்பீர்.' (அல்குர்ஆன் 28:27)
மஹர் பற்றிய நபிமொழிகளில் சில:
நபித்தோழர் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் திருமணம் முடிந்த செய்தியை அறிந்த நபி (ஸல்) அவர்கள் தமது தோழரிடம் மஹர் பற்றிக் கேள்வி கேட்கும் உரையாடல்:
'இறைத்தூதர் அவர்களே! நான் ஓர் அன்ஸாரிப் பெண்ணை மணமுடித்துக் கொண்டேன்!' என்றார். நபி(ஸல்) 'அவருக்கு என்ன மஹர் கொடுத்தீர்?' எனக் கேட்டார்கள். 'ஒரு பேரீச்சங் கொட்டை எடைக்குத் தங்கம்!' என அவர் பதில் கூறினார். அதற்கு 'ஓர் ஆட்டையேனும் மணவிருந்ததாக அளிப்பீராக!' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நபிமொழிச் சுருக்கம் புகாரி 5153, 5155, 5167. முஸ்லிம் 2788)
ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ''என்னைத் தங்களுக்கு அன்பளிப்பாக வழங்க வந்துள்ளேன்'' என்று தம்மை ஒப்படைத்தார். அவருக்குக் குர்ஆன் ஓதிக் கற்பித்தலை மஹராக்கி இன்னொருவருக்கு நபி (ஸல்) அவர்கள் மணமுடித்து வைத்தார்கள். இந்த செய்தி புகாரி 5030. முஸ்லிம் 2785 நூல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன!
கைபர் வெற்றியின் போது பெண் கைதியாக பிடிபட்ட ஸஃபிய்யா (ரலி) அவர்களை விடுதலை செய்து அவர்களது விடுதலையையே மஹராக ஆக்கி நபி (ஸல்) அவர்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்களை மணமுடித்தார்கள். இந்த செய்தி புகாரி முஸ்லிம் நூல்களில் பதிவு செய்யப்பட்டள்ளன!
மஹரின்றி மணமில்லை என்று சொல்லுமளவுக்கு இஸ்லாமின் ஆதாரங்கள் உள்ளன. எனினும் மணப்பெண் மஹர் எதுவும் வேண்டாமென்று ஒப்புதல் தெரிவித்தும் மணமுடிக்கலாம். இது மணமகளின் விருப்பத்திற்குரியது. திருமணத்தின் போது விதிக்கும் நிபந்தனைகளும் மஹர் எனும் மணக்கொடையில் அடங்கும்!

பறவைகளின் உலகம் 2



இருவாய்ச்சி பறவை : "மனிதர் உணர்ந்துகொள்ள இது மனிதக் காதல் அல்ல! "
ஆங்கிலத்தில் '**மலபார் ஹார்ன்பில்' (Malabar Hornbill)** என்று அழைக்கப்படும் இந்தப் பறவை, தமிழில் 'மலபார் இருவாட்சி' எனப்படுகிறது.
இந்தப் பறவைகள் வெளியேற்றும் கொட்டைகள் மிகவும் வீரியம் கொண்டவை, விழுந்த உடனேயே முளைக்கக்கூடிய தன்மை மிக்கவை காடுகளில் உயரமான மரங்கள் இருப்பதற்கும் வளர்வதற்கும் இவை முக்கிய காரணியாகும்.

ஹார்ன்பில் என்று சொல்லப்படும் மலை மரங்களில்தான் இந்தப் பறவைகள் பெரும்பாலும் இருக்கும் ஆகவே இந்தப் பறவையின் பெயரே ஆங்கிலத்தின் ஹார்ன்பில் என்று அழைக்கப்படுகிறது.

இதன் முக்கியத்துவம் கருதி கேரளாவில் இந்தப் பறவை தேசிய பறவையாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இயற்கைக்கும் மலை மரங்களின் வளர்ச்சிக்கும் பெரும் உறுதுணையாக இருக்கும் இந்த இருவாட்சி பறவை இனங்கள் அழிந்து வருகிறது என்பதுதான் கவலைக்குரிய விஷயம். காடுகளில் உயரமான மரங்கள் வெட்டப்படுவதுதான் இதற்கு முக்கிய காரணம்.
தலையில் விசேஷ கொண்டையுடன் நீண்டு வளைந்த அலகுடன் அடர்த்தியான வண்ணத்தில் விமானம் பறப்பது போல சத்தமிட்டு பறக்கும் இந்தப் பறவை உலகம் முழுவதும் 54 வகைகளில் இருந்தாலும் இந்தியாவில் 9 வகைகள்தான் உள்ளன .அதிலும் தென்னகத்தில் 4 வகைகள்தான் உள்ளது.
மழைக்காடுகளில் இருவாட்சி பறவை இல்லையென்றால், மழை இல்லை . பறவைவைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பறவைகளை உற்று நோக்கினால் நாம் எப்படிப்பட்ட சூழலியலில் வாழ்கிறோம் என புரிந்துவிடும்.

ஒவ்வொரு பறவையும் அதன் நடவடிக்கையும், சூழலியல் பாதிப்புகளுக்கு மனிதர்களுக்கு கொடுக்கும் எச்சரிக்கை மணிதான் பறவைகள். சூழலியல் சுட்டிக்காட்டிகளில் மிக முக்கியமானது இருவாட்சி இப்பறவைகள் எச்சங்களால்தான் காட்டில் இருக்கிற மரங்கள் பெருகுகின்றன. இப்பறவைகள் இருக்கிற காடுகளை மழைக்காடுகள் என அழைக்கிறார்கள். மழைக் காடுகள் இல்லையென்றால் இருவாட்சி பறவைகளும் இல்லை எனப் பறவை ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

காடு வளர்வதற்கு முக்கிய காரணியாக இப்பறவைகள் இருக்கின்றன. இப்பறவைகள் இப்போது அருகி வரும் இனமாக ஐ.நா.வால் அறிவிக்கப்பட்டுள்ளது.
மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மரங்கள் வெட்டப்படுவதால், இருவாட்சிப் பறவைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதாகப் பறவை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். மிகவும் உயரமான மரங்களில் வசிக்கும் இருவாட்சி பறவைகள், மரங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக தன் இனத்தைப் பெருக்கிக்கொள்ள முடியாமல் தவிக்கின்றன.

இருவாட்சி பறவை இனம் அழிந்தால் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் பத்து வகை மரங்கள் அழிந்து விடும் என்கிறார்கள் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள்

"உனக்கென நான்... எனக்கென நீ... இது இருவாச்சி காவியம்!
பறவைகளின் காதலை எந்தப் புனைவும் இல்லாமல் எழுதவேண்டுமானால் இருவாச்சி பறவையை பற்றித்தான் எழுதவேண்டும்.
இணைபிரியாது, வேறு இணை தேடாது, ஒரே இணையுடன் இறுதிகாலம் வரை வாழும் காதல் பறவைகள்தான் இந்த இருவாய்ச்சி
இரைத் தேடுவதில் ஆரம்பித்து இளைப்பாறுவது வரை எங்குச் சென்றாலும் ஆண் பறவையும், பெண் பறவையும் இணைந்தே செல்கின்றன. காதலாகி கருவாகிற இனப்பெருக்க காலத்தில் இருபறவைகளும் அடர்வனத்தில் இருக்கிற மரக்கூடுகளை தேடி அலையும். இயற்கையாக இருக்கும் மரப் பொந்துகள்தான் இப்பறவைகளின் கூடு.
எந்த சூழ்நிலையிலும் தனது இணையை ஆண் பறவை பிரிவதே இல்லை இன்னும் சொல்லப்போனால், உள்ளங்கையில் வைத்து தாங்குவது போலவே தனது இணையை ஆண் பறவை தாங்குகிறது.
இப்படி ஒரு பாசமான பறவைக்கூட்டத்தை வேறு எங்கும் பார்க்கமுடியாது, அது மட்டுமல்ல மரங்களில் கிடைக்கும் பழங்களை விரும்பிச் சாப்பிடும்.

"நான் உனக்கு இரை தேடி தருகிறேன். நீ என் கூட இருந்தால் அதுவே போதும் எனக்கு " - என்று காதலியை தன் பார்வை படும் இடத்தில் வைத்துக் கொண்டு பறந்துபறந்து இரைதேடி வந்து பாசத்தோடு ஊட்டும். கருவுற்றதும் பெண் பறவையின் தியாகம் மிகப் பெரியது. உயரமான மரத்தில் இயற்கையாக அமையப்பெற்ற பொந்தை கூடாகப் பாவித்து உள்ளே போய் உட்கார்ந்து கொள்ளும்,
ஆண் பறவை தனது இணைக்கோ, முட்டைக்கோ ஆபத்து எதுவும் வந்துவிடக்கூடாது என்பதற்காக பொந்தை மண் மரக்கூழ் தன் எச்சில் கலந்து அடைத்துவிடும். இரு வாய்ச்சியின் எச்சில் ஒரு விஷத்தன்மை இருப்பதால் , வேறு எதிரிகள் இந்த பொந்தை நெருங்க முடியாது .பொந்தில் ஒரே ஒரு சிறிய ஓட்டையை மட்டும் போட்டு இருக்கும். அந்த ஓட்டை வழியாகவே தன் இணைக்கு தேவையான உணவை கொண்டு வந்து ஊட்டும்.

இனப்பெருக்க காலத்தில் ஆண் பறவை இரை தேடிச் சென்றுவிடுகிறது. பெண் பறவை சிறகுகளை இழந்து, தன்னுடைய இயற்கைப் பொலிவை இழந்து வயிற்றில் முட்டையுடன் இனப்பெருக்கத்துக்குக் காத்திருக்கிறது.

இரை தேடி திரும்புகிற ஆண் பறவை தன் அலகுகளுக்குள் சேமித்து வைத்திருக்கிற உணவை அந்தக் கூட்டின் துவாரம் வழியாகப் பெண் பறவைக்கு ஊட்டிவிடுகிறது.
இறக்கை இல்லாவிட்டால் ஒரு ஆபத்து அவசரத்திற்கு கூட பறக்க முடியாது என்பது தெரிந்தும் , தனது இறக்கைகள் அனைத்தையும் உதிர்த்து மெத்தை போல உருவாக்கி, அதன் மீது ஒன்றில் இருந்து மூன்று முட்டைகள் வரை போட்டு அடைகாக்க ஆரம்பித்துவிடும்.
கிட்டத்தட்ட ஏழு வாரங்கள் இந்த காட்சி தொடரும். ஏழு வாரங்களுக்கு பிறகு ஆண் பறவை தான் அடைத்த பொந்தை உடைத்து தாய்ப்பறவையையும், குஞ்சுகளையும் வெளியே கொண்டு வரும்.
தாய்ப்பறவைக்கு இறக்கையும் அவ்வளவாக முளைத்திருக்காது. எனவே தாய்ப்பறவை தன் குஞ்சுகளுடன் குலாவிக் கொண்டு மரப்பொந்திலேதான் இருக்கும் .

குஞ்சு பொரித்தாலும், அவைகள் பறக்கப் பழகும் வரை தாய்ப்பறவை பொந்துக்குள்தான் இருக்கும்.
அப்போதும் ஆண் பறவைதான் அவைகளுக்கான உணவை கொண்டு வந்து கொடுக்கும்.
இந்த ஆண் பறவைக் காட்டும் அன்பைப் பற்றி சிந்திக்கும் போது என் மனதில் இந்த குர்ஆன் வசனமும் , நபிமொழியும் நினைவுக்கு வந்தது.

نِسَآؤُكُمْ حَرْثٌ لَّـكُمْ فَاْتُوْا حَرْثَكُمْ اَنّٰى شِئْتُمْ وَقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّكُمْ مُّلٰقُوْهُ وَ بَشِّرِ الْمُؤْمِنِيْنَ
உங்கள் மனைவிகள் உங்கள் விளைநிலங்கள். ஆகவே, உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு சென்று உங்களுடைய பிற்காலத்திற்கு (வேண்டிய சந்ததியை)த் தேடிக் கொள்ளுங்கள். நிச்சயமாக, நீங்கள் அல்லாஹ்வைச் சந்திப்பீர்கள் என்பதையும் உறுதியாக அறிந்து அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். (நபியே! நேர்மையுள்ள) நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி கூறுங்கள்.
(அல்குர்ஆன் : 2:223)

" மனைவிக்குச் சிறந்தவனே மனிதனில் சிறந்தவன். நான் என் மனைவிக்குச் சிறந்தவனாக இருக்கிறேன்'' என்று கூறினார்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.
"மனைவியின் வாயில் ஒரு கவளம் சோறு ஊட்டுவதும் ஒரு அறமே " (நூல்: புகாரி)
கணவன் பார்க்கும்போது அவனை மகிழ்விப்பவள், கணவனுக்குக் கீழ்படிந்து நடப்பவள், தன் விஷயத்திலும், பொருளைச் செலவிடும் விஷயத்திலும் கணவனுக்கு விருப்பமில்லாத போக்கை மேற்கொள்ளாதவள் ஆகிய இப்பண்புகளை உடையவளே சிறந்த மனைவியாவாள்.
(நூல்: நஸாயி)

இந்த இரு வாய்ச்சிப் பறவையின் பெண் பேறுகால கட்டத்தில் மனைவிக்கும், குஞ்சுக்கும் ஆண் பறவை உணவு தேடும் வேளையில் மனிதர்களால் வேட்டையாடப்பட்டோ அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ இறந்து போனால், தாய்ப்பறவையும் அதன் குஞ்சுகளும் ஆண் பறவையை எதிர்ப்பார்த்து எதிர்ப்பார்த்து ஒரு வித பரிதாபக் குரல் எழுப்பி கூவும். ஆண் பறவை வராததாலும், உணவு கிடைக்காததாலும் அந்த பறவை குஞ்சுகளோடு இறந்து போக நேரிடும்.
இருவாய்ச்சி பறவை : "மனிதர் உணர்ந்துகொள்ள இது மனிதக் காதல் அல்ல! "

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 3
(காக்கையின் புத்திசாலித்தனம்)



பிரெண்ட் ஹெயின்ட் ரிஷ் மற்றும் தாமஸ் பக்னியர் (univercity of vermount) ஆகியோர் காகங்களை வைத்து செய்த பரிசோதனைகள் மூலம் அவற்றுக்கு சிந்திக்கும் திறனும், புத்தி கூர்மையும் , அதிக நினைவாற்றலும் குறிப்பாக பறவைகள் ஒவ்வொன்றையும் அடையாளம் கண்டு கொள்ளும் திறனும் காகத்திற்கு உண்டு என்பது தெரியவந்துள்ளது.
தாழம்பூ இலையிலிருந்து நடு காம்பை கிள்ளி எடுத்து அதன் உதவியால் மரப்பொந்தில் உள்ள புழுக்களை கொத்தி எடுத்து சாப்பிடுவதை பலர் பார்த்திருக்கின்றனர்.
அதே மாதிரி நமது சுற்றுப்புறத்தைச் எப்போதுமே சுத்தமாக வைத்துக்கொள்ள உதவுகின்றன.
உதாரணமாக சாப்பிட்ட எச்சில் தட்டை மனிதன் பூங்கா ஒன்றில் வீசியெறிய, அதை ஒரு காகம் எடுத்து குப்பைத்தொட்டில் போடுகிறது (படம்) இதனாலேயே இவை இயற்கைத் துப்புரவாளர்களாக (Natural scavengers) கருதப்படுகின்றன.

உண்மையிலேயே அவற்றுக்கு யோசனை செய்து,செயல்படும் ஆற்றல் இருக்கிறதா..என்பதைப்பற்றி சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
ஓராண்டு முடிந்த காகங்கள் கூண்டுகளில் காகம் உட்காருவதற்கு வழங்கப்படும் ஒரு குறுக்கு கம்புகளில் நீண்ட நூலின் நுனியில் மாமிசத் துண்டு கட்டி தொங்க விடப்பட்டிருந்தது.

மாமிசத்தை எடுப்பதற்கு சிறந்த வழி அந்த கம்பில் உட்கார்ந்தபடி நூலைப் பிடித்து, மேலே இழுத்து நீண்ட கயிற்றை காலிடுக்கில் வைத்துக்கொண்டு,மறுபடியும் நீண்டிருக்கும் மீறி கயிறுகளை மேலே தன் வாயால் தூக்கி மறுபடியும் காலில் இடுக்கில் வைத்துக் கொண்டு, இப்படியாக கயிற்றின் நீளம் குறைத்து மாமிசத்தை பெற்றது.
ஆனால் இளம் காகங்கள் பறந்து வந்து கொத்துவதும், பிடித்து இழுப்பதுமாகவே அங்குமிங்கும் ஆடிய மாமிசத் துண்டுடன் போராடியும் அவற்றை பெற முடியவில்லை .
காக்கை கரைந்துண்ணும் என்று சொல்வார்கள். இரை கிடைத்தால், அதை மற்ற காகங்களையும் அழைத்து பகிர்ந்துண்ணும் என்பது பொதுவான நம்பிக்கை.
ஆனால்,உண்மையில் காக்கைகள் மற்ற ஜீவராசிகளிடமிருந்து தங்கள் உணவை பாதுகாக்க வேண்டிய தன் கூட்டத்தை கூட்டி அழைக்கின்றன. சந்தர்ப்பம் கிடைத்தால் அவைகள் கூட சுயநலமாக செயல்படுவது உண்டு .ஒரே மூச்சில் சாப்பிட்டு தீர்க்கமுடியாத தீனியை பகுதி பகுதியாக பிய்ச்சி எடுத்து அதை மறைத்தும் வைக்கின்றன !

மறைத்து வைப்பதை வேறு காகம் பார்க்கிறதா என்பதையும் நோட்டம் விடுகின்றன. அப்படி வேறு காகம் கண்ணிலாவது பட்டுவிட்டால், உடனே மறைவிடத்தை மாற்றிவிடுகின்றன.
இதற்கெல்லாம் மறைவிடத்தை தேர்வுசெய்வது, மறைத்த இடத்தை நினைவில் வைப்பது, சக காக்கைளை கவனிப்பது, அவற்றின் நோக்கத்தை முன்கணிப்பது போன்ற புத்திக்கூர்மை அவைகளுக்கு நிச்சயம் உண்டு என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது .

காக்கையின் புத்தி கூர்மையைப் பற்றி வள்ளுவர்.
“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது” (குறள் 481)
பொருள்:- பகல் நேரத்தில் பெரிய கோட்டானைச் சிறிய காகம் கூட வென்றுவிடும். அதனால் பகைவரை வெல்லக் கருதும் மன்னன், ஏற்ற காலத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.
பஞ்ச_தந்திரக் கதையில், ஆந்தைகளைக் காகம் எப்படி வென்றது என்பதையும், மஹாபாரதத்தில் அஸ்வத்தாமா படுகொலைகளுக்கு காக்கைகள் எப்படித் புத்திசாலித்தனமாக தூண்டின என்பது பற்றியும் குறிப்பு உள்ளது.

காக்கையின் புத்தி கூர்மைக்கு ஓர் உதாரணம் இந்த காணொளியில் ஒரு காகம் தனக்கு கிடைத்த கடினமான ஒரு பழத்தின் கொட்டையை உடைக்க சாலையில் போகும் வாகனத்தை பயன்படுத்துகிறது. அதுவும் அவைகள் உடைந்த பின்னர், போக்குவரத்து விளக்கை அடையாளம் கண்டு கீழ் இறங்கி வந்து உண்கிறது. அதிகம் மனிதர்கள் வாழும் இடத்தில் காகங்கள் இருப்பதால் அதனை கவனிக்க, புரிந்துகொள்ள முடிகிறது.

https://youtu.be/TvTgRmguSq8
நபி ஆதம் (அலை) அவர்களின் மகன்களில் ஒருவர் காபீல் ,தன் சகோதரர் ஹாபீலோடு ஏற்பட்ட சண்டையில் அவரை கொலை செய்துவிடுகிறார். இந்த கொலைதான் உலகில் முதன் முதலில் செய்யப்பட்ட கொலையாகும். ஆதலால் கொலை செய்தபின் பிணத்தை என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியவில்லை.

فَبَعَثَ اللّٰهُ غُرَابًا يَّبۡحَثُ فِى الۡاَرۡضِ لِيُرِيَهٗ كَيۡفَ يُوَارِىۡ سَوۡءَةَ اَخِيۡهِ‌ ؕ قَالَ يٰوَيۡلَتٰٓى اَعَجَزۡتُ اَنۡ اَكُوۡنَ مِثۡلَ هٰذَا الۡغُرَابِ فَاُوَارِىَ سَوۡءَةَ اَخِىۡ‌ ۚ فَاَصۡبَحَ مِنَ النّٰدِمِيۡنَ ۛۚ
பின்னர் தம் சதோதரரின் பிரேதத்தை (அடக்குவதற்காக) எவ்வாறு மறைக்க வேண்டுமென்பதை அவருக்கு அறிவிப்பதற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான்; அது பூமியை தோண்டிற்று (இதைப் பார்த்த) அவர் “அந்தோ! நான் இந்த காகத்தைப் போல் கூட இல்லாதாகி விட்டேனே! அப்படியிருந்திருந்தால் என் சகோதரனுடைய பிரேதத்தை நான் மறைத்திருப்பேனே!” என்று கூறி, கை சேதப்படக் கூடியவராகி விட்டார். (அல்குர்ஆன் : 5:31)
மனிதனுக்கு கற்றுக் கொடுத்த முதல் ஆசான் காகம்தானோ ?

ரஹ்மத் ராஜகுமாரன் .

Rahmath Rajakumaran
நீடில் பைட்டர் (Niddle Fighter)
1991 ல் கயத்தாறில் அய்யனார் ஊத்து என்கிற கிராமத்தில் செய்யது காட்டன் மில்ஸ் சார்பாக காற்றாலை பண்ணை நிறுவினார்கள் .
காற்றாலைகள் (Micon 250 Kw) டென்மார்க்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகள். இதை நிறுவதற்காக டென்மார்க் இன்ஜினியர்கள் கயத்தாறில் தங்கி இருந்தனர் .
தமிழக தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு டென்மார்க் கம்பெனி பயிற்சி அளித்தது . பயிற்சி பெறும் இன்ஜினியரில் நானும் ஒருவன் .
டென்மார்க் இன்ஜினியர் (Esben kristensen) கயத்தாறு பஜாரில் ஒரு டெய்லர் கடையில் டெய்லர் ராஜாவிடம் ரொம்ப நேரமாக பேசிக் கொண்டிருந்தார் . டெய்லருக்கு இவர் பேசும் ஆங்கிலம் சரிவர புரியவில்லை .
டெய்லருக்கு உதவியாக நான் போய் இருந்தேன் . அவர் பேசிய ஆங்கிலத்தை உள்வாங்கிக் கொண்டு , டெய்லர் ராஜாவிடம் , " கடை போர்டில் " RAJA Toiler ன்னு எழுதி, (Niddle Fighter என்று அடைப்புக்குள்) ஏன் எழுதியிருக்கிறாய் ? என்று டென்மார்க்காரர் உன்னிடம் கேட்கிறார்" என்றேன்.
அதற்கு டெய்லர் ராஜா , "எங்க வாழ்க்கையே ஊசியோடுதானே போராட்டம் . தையல் மிஷின் ஊசி , காஜா போட ஊசி... என்று எங்க வேலையே ஊசியோடுதானே கழிகிறது ..? பண்டிகை காலங்களில் நல்ல செழிப்பாக இருப்போம் .மற்ற காலங்களில் சிரமப்படுவோம். இப்போது மக்கள் ரெடிமேட் பக்கம் தங்கள் கவனம் செலுத்துவதால் , பண்டிகை காலங்கள் கூட சிரமமாக போய்விடுகிறது. இந்த ஊசி நூலைத் தவிர வேறுதொழில் தெரியாது. துணியை மட்டும் சேர்த்து வைத்து தைக்கவில்லை, கூடவே கிழிந்து போன எங்க வாழ்கையையும் ஒட்டுப் போட்டு தைக்கிறோம்; இத்தனை சோகத்தையும் மனசில வைச்சுதான் நான் நீடில் பைட்டர் அந்த இரு வார்த்தைகளையும் என்று போர்டில் குறிப்பிட்டுள்ளேன் " என்றார் .
அவர் சொன்னதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சொல்வதற்கு டென்மார்க் பக்கம் திரும்பினேன் .
டென்மார்க் இன்ஜினியர் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிவதைப் பார்த்தேன். அவர் என்னிடம் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.
டெய்லர் ராஜா ரெடிமேடாக தைத்து வைத்திருந்த ஜீன்ஸ் சர்ட் நான்கையும் அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.
சோகத்தின் உணர்வு கூட சில சமயம் மொழி அவசியம் இல்லாத இசையைப் போல மனிதர்களுக்குள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்பதை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன் .
ர.ரா

பறவைகளின் உலகம் 4
மயில்



இந்தியத்துணைக்கண்டத்து பூர்வீகவாசியானது மயில். இந்தியா முழுவதும் மற்றும் பாகிஸ்தானில் சில இடங்களிலும் மயில் காண்ப்படுகிறது. எனவே இப்பறவையை தேசியப்பறவையாகத் தெரிந்தெடுத்தது மிகவும் பொருத்தமானது.

இதனால் சகலமானவர்கள் அனைவருக்கும் அறிவிப்பதென்னவென்றால் ,1963 -ஆம் ஆண்டு இயற்றிய இந்தியச் சட்டப்படி, மயிலை வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எண்ணிக்கையைப் பொருத்தமட்டில் இந்தியாவைக்காட்டிலும் பாகிஸ்தானில் குறைந்த அளவு மயில்களே காணப்படுகின்றன, அதிகமான மயில்கள் காணப்படுவது நமது நாட்டில் தான்.
பர்மா மற்றும் ஜாவாவில் காணப்படும் மயில் சற்று வித்தியாசமானது; பச்சைவண்ணம் மிகுந்து இருக்கும் அவ்வகை மயிலை **Green Peafowl** என்பர்.

இந்திய மயில்கள் பச்சை நீலமும், பழுப்பு நிறமும் கலந்தனவாய், பல்வண்ண ஜொலிப்பில், பெரிய தோகையோடு கவர்ச்சிகரமாய் வலம்வருபவை. மெஃஸிகோவில் வெள்ளை மயில்கள் காணப்படுகின்றன. வண்ணமயமான மயில்களில் சில குறிப்பிட்டவை தெரிவு செய்து, கலப்பு முறையில் மனிதர்கள் இனப்பெருக்கம் செய்வதில் மயில்கள் வண்ணமற்று உருவாகின்றன. இதற்கு காரணம் உண்மையில் ஒரு மரபணு மாற்றமே ஆகும். இதுவே வெள்ளை மயில்கள் உருவாக காரணம்.

மயிலை, ஆங்கிலத்தில், **Peafowl** என்ற பொதுப்பெயருடன் அழைப்பர். ஆண் மயிலை **peacock** என்றும், பெண்மையிலை peahen என்றும் அழைக்கின்றனர். மனித இனத்தைத்தவிர, மற்ற விலங்கின வகைகளில் பெரும்பாலும் ஆண்களே அழகாய் இருப்பார்கள் என்ற கூற்றிற்கு ஆன்மயிலின் தோகையும் அதை விரித்து அது நடனமாடும் காட்சியும் சான்றுகள். நடனத்தை கண்டு களிக்க
https://youtu.be/iUEnu96vjjw

நன்கு வள்ர்ந்த ஆண்மயிலின் தோகையில் ஆயிரம் கண்கள் இருக்கும் என்பார்கள். மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது என்பார்களே! இதற்குக் காரணம் உண்டு. நமது தலைமுடி தன்னாலேயே உதிர்தல் போல மயிலிறகும் தன்னாலேயே முதிர்ந்து விழவேண்டும்.
இதைவிடுத்து இறகைப்பிடுங்குதல் வலியை உண்டாக்கும். நினைத்த வாக்கிலோ அல்லது பிறர்கேட்பதாலோ மயிலால் தனது இறகை உதிர்க்கமுடியாது.
தரைமட்டத்திலும் தாழ்வான மரக்கிளைகளிலும் குஞ்சுகளுக்குக் கூடமைத்து வாழும் மயில்கள், சைவம் - அசைவம் என இரண்டும் பிடித்தவை. அசைவத்தில் பூச்சிகளும் கணுக்காலிகளுமே இவற்றின் பிரிய உணவு.

சைனாவிலும் ஜப்பானிலும் மயிலை, கருணை தெய்வமாகக் கருதுகிறார்கள். க்வான்-இன்-குவானான் என்பது அந்தக் கருணை தெய்வத்தின் பெயர்.
கிறிஸ்துவம், பேகன், யூதம், இஸ்லாம் உள்ளிட்ட பல சமயங்களிலும் மயில் பற்றி பேசப்படுகிறது.
இஸ்லாமியர்களைப் பொறுத்தமட்டில், மயிலை சொர்க்கத்தின் வாயில் கதவைத் திறக்கும் வரவேற்பாளராகக் கருதுகின்றனர். இது பற்றி சொல்றேன்.

"ஆதமுக்கு எல்லாப் பொருட்களின் பெயரையும் அவற்றின் தன்மைகளையும் கற்றுக் கொடுத்து அவைகளை அந்த மலக்குகளுக்கு முன்பாக்கி சொல்லச் சொல்கிறான் .பின்னர் நாம் "ஆதமுக்கு நீங்கள் பணிந்து ஸுஜூது செய்யுங்கள் எனக் கூறிய பொழுது இப்லீஸைத் தவிர அனைவரும் செய்தார்கள். அவனோபெருமை கொண்டு விலகி நம்முடைய கட்டளை நிராகரிப்பவனாகி விட்டான் "குர்ஆன் (2 : 31 - 34)

ஆதமும் ஹவ்வாவும் சுவனத்தில் இன்புற்று இருக்கையில் , இறைவன் "நீங்கள் இருவரும் சுவனத்தின் பழங்கள் அனைத்துமே உண்டு மகிழ்ந்திருங்கள் ஒரே ஒரு மரத்தைத் தவிர " அந்த அற்புதமான மரம் கோதுமைச் செடி என்றும் துரியான் மரம் என்றும் கூறப்படுகிறது .
தம்பதியர் இருவரும் இறை ஆணைக்கு கட்டுப்பட்டிருந்தனர் .
சைத்தானான இப்லீஸ் அவர்களை கெடுக்க எண்ணி, அவர்களை நெருங்க சுவனத்து மயிலிடம் இஸ்முல் அஃலத்தை சொல்லித் தருவதாக ஆசை கூறி, சுவனத்திற்குள் அழைத்துச் செல்ல வேண்டினான். அதற்கு என்னால் முடியாது ஆனால் ஏழு தலை பாம்புவால் முடியும் என்று பாம்பை அழைத்து வந்தது.

ஏழு தலை பாம்பிறகு ஒட்டகம் போன்ற கால்களும் கூரிய நகங்களும் இருந்தன. பாம்பு இப்லீஸை தன் பல் இடுக்கில் வைத்து சுவனத்திற்குள் சென்றது .இதனால்தான் பாம்புக்கு பல்லில் விஷத்தை வைத்தான். காட்டிக் கொடுத்த மயிலின் அடிப்பாகத்தில் விரிந்த அழகான இறகுகளையும், கால்களில் கூட மிக அழகான இறகுகளும் இருந்ததையும் இறைவன் நீக்கி விட்டான் .
"சைத்தான் தம்பதியரின் மனதில் ஊசலாட்டத்தை உண்டு பண்ண "ஆதமே நிரந்தர வாழ்க்கைக்குரிய மரத்தையும் , அழிவில்லாத அரசாங்கதையும் நான் உங்களுக்கு அறிவிக்கவா?" குர்ஆன் (20 : 120)

"இறைவன் தடுத்து வைத்த மரத்தை நெருங்க வைத்து அதில் உள்ள பழத்தை தின்ன வைத்தான்
"பழத்தை சுவைத்ததும் அவ்விருவரின் மர்ம உறுப்புகளும் அவர்களுக்குத் தெரிந்து அச்சோலையின் இலைகளைக் கொண்டு மூடிக் கொள்ள முயற்சித்தனர் "குர்ஆன் (7: 22)
" இதிலிருந்து நீங்கள் வெளியேறி விடுங்கள் உங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிரியாகி விடுவீர்கள் குர்ஆன் (7 : 24)
ஆதம் (அலை) அவர்களின் தம்பதியருடன் காட்டிக் கொடுத்த மயில், இப்லீஸை உள்ளே தூக்கி சென்ற பாம்பு, இவர்களுடன் சைத்தானும் பூமியில் இறங்கி ஒருவருக்கொருவர் எதிரியாக்கி விட்டான்
சரி - மயில் பாம்பை உண்ணுமா என்ன? விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள்? மயில் பாம்பை உண்ணுவது இல்லை; கொல்ல மட்டுமே செய்கிறது!

பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டுள்ள அந்த பகைமை உணர்ச்சியின் வெளிப்பாடு இது! மயிலின் குஞ்சுகளைக் கபளீகரம் பண்ணுவதற்காகப் பாம்புகள் மயிலின் வசிப்பிடத்திற்குள் அத்துமீறி நுழைவதுண்டு. இதனைத்தடுத்து குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காக மயில்கள் பாம்பைக் கண்ட மாத்திரத்தில் தாக்கி அழிக்கின்றன. கூரிய நகங்களும் அலகும் இந்தப் பாம்பு வேட்டைக்கு ஒத்தாசை செய்கின்றன.

புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மயிலுக்கும் பாம்புக்கும் உள்ள உறவை வேறுவிதமாகச் சித்தரிக்கிறார்கள். பாம்பை அடக்கும் வல்லமை உள்ள ஒரே ஜந்து மயில் மட்டுமே! இதனால் மயில் எங்களது வழிபாட்டுப்பறவை என்கிறார்கள்.

ஒரு கதை: ஒரு புத்தபிட்சு பாம்புத்தொல்லையால் நடுங்கிக் கடவுளை வழிபட்டாராம். அப்போது ஒரு மயில் தோன்றி அந்தப்பாம்பை நேருக்கு நேர் நோக்கியதாம்; அந்தக்ககூரிய பார்வைக்குக்கட்டுப்பட்டு அந்தப் பாம்பானது மயிலின் உடலின்மீது ஏறி அமைதியாகச் சுற்றிக்கொண்டதாம். பாம்புடன், மயில் அங்கிருந்து பறந்து தொலை தூரத்திற்குச் சென்று பாம்பை உதறியதாம். இதனால் பாம்பும் பிழைத்தது; பிட்சுவும் பிழைத்தாராம்.
குன்று தோராடும் மயிலை, குன்றக் குமரனாகிய முருகன் தனது வாகனமாக்கிக்கொண்டது பக்தி இலக்கியம் காட்டும் புது அறிவியல். அதிக வேகத்துடன் அதிக உயரத்தில் பறக்கவியலாத பறவை மயில். தந்தையிடமிருந்து மாங்கனிபெறும் போட்டியில் மயில்மீது ஏறி உலகைவலம் வந்து, பரிசை வேண்டுமென்றே தவறவிட்டு, திருவிளையாடல் புரிந்த அவன் காட்டும் சகோதரபக்தி நம்மை வியக்கவைக்கிறது.
ஆண்-பெண் தொடுப்பில் நம்ம ஊர் பல-நிற மயில்கள் தனித்தன்மை உடையனவாய் இருக்கின்றன. பெண்மயில்கள் பதிவிரதைகளாகும். ஒரு பெண்மயில் ஒரு ஆண் மயிலோடு மட்டுமே உறவு கொள்ளும். ஆண்மயில்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் மயில்களுடன் உறவு கொள்வது உண்டு.
ஆனால் பச்சை மயில்கள் இவ்விஷயத்தில் மிகுந்த கற்புநெறியோடு செயல்படுகின்றன. ஒரு ஆணுக்கு ஒரு பெண் என ஏகபத்தினி-ஏகபதி விரதைகளாய் அவை வாழ்கின்றன.
பொதுவாக, மயில் என்பது ஆற்றல், கம்பீரம், மற்றும் எழிலைக்குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. விஷஜந்துக்களை அடக்கி அவற்றின் விஷத்தைத் தன் தோகையின் வண்ணமாக்கிக் கொள்ளுவதாக பலசமயத்தினரும் நம்புகின்றனர்.

உலகில் பலரும் மயிலை தெய்வவடிவாக நினைக்கும் அதே நேரத்தில், மயிலின் ஆட்டத்தை கர்வத்தின் பிரதிபலிப்பாகக் கருதுகிறார்கள். மயிலின் தோற்றம் பொலிவாக இருந்தாலும் அதன் கால்களும், குரலும் நளினத்தைப் பிரதிபலிக்கவில்லை. மாறாக, அருவருப்பைத் தோற்றுவிக்கின்றன. இதனாலோ என்னவோ ஐரோப்பியர்கள் மயிலின் குரலையும் அதன் இறகையும் தீயசகுனமாகக் கருதுகின்றனர்.
மயிலாசனம் என்பது ராஜகம்பீரத்தின் அடையாளம். இந்தியாவில் மட்டுமல்ல; பாபிலோன் மற்றும் பாரசீகப் பாரம்பரியத்திலும் மயிலாசனம் பரவலாகப் பயன்பட்டுள்ளதை அறிகிறோம். மயிலாசனம் ஆசனங்களில் ஒரு வகையாகும். உடலை இலகுவாக்கிக்கொள்ள இது உறுதியான வழியாகும்.
சூரிய சின்னங்களில், மயில் என்பது ஆன்மாவைக் குறிக்கிறது. ஆன்மா எனும் ஆற்றல் அழியாத தன்மை உடையதாகவும் பலஜென்மங்களை எடுக்கும் தன்மை உடையதாகவும் இருக்கும் தன்மையை மயில் குறிப்பதாக நம்புகிறார்கள் .

மயிலின் தோகை அலங்கார அழகுப்பொருட்களிலும் விசிறிகளிலும் பயன்படுவதோடு. பாரம்பரிய மருத்துவ முறைகளிலும் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக, தமிழ் மருத்துவ முறையில், தொடர் வாந்தியை நிறுத்த மயிலிறகைச்சுட்டு தேனில் குழைத்து அம்மையை, நாவில் தடவுவார்கள்.
மயிலின் இறகு சீக்கிரத்தில் மக்கிப்போகாது; சரியான முறையில் பாதுகாத்தால் நூற்றுக்கணக்கான வருடங்கள் காப்பாற்றமுடியும். பேனா, தொடங்கி, தூரிகை, மருந்து என மஞ்சம் வரைக்கும் பலவகைகளில்

மயிலிறகு நமக்குக் கைகொடுத்துவருகிறது. ஆடை மற்றும் உடுப்புக்களில் மயில் டிசைன் உலக அளவில் பிரபலமானதாகும். இதில் இந்தியர்களாகிய நாம் முன்னோடிகளாக விளங்கி வருகிறோம்.
மயில்கள் 20 ஆண்டுகள் வரை உயிர்வாழும் தன்மை கொண்டது. ஆனால், பூங்காக்கள் மற்றும் மனித தடைக்கு உட்பட்ட பகுதிகளில் 40 ஆண்டுகள் வரை உயிர்வாழும். இந்தியாவில் பெரும்பாலான மயில்கள் மனிதர்கள் வேட்டையாடுவதால் உயிரிழக்கின்றன.
அதிக ஒலியெழுப்பும் பறவைகளில் மயிலும் ஒன்று. சாதாரண நாள்களைவிட, மழைக்காலங்களில் அதிகமுறை ஒலியெழுப்பும். காடுகளில் கேட்கும் மயிலின் குரல் மூலம், புலி போன்ற ஆபத்தான விலங்குகளின் இருப்பைத் தெரிந்து கொள்ளலாம்.

பிறந்து ஒரு நாளே ஆன மயில் குஞ்சுகள், தாயின் உதவியின்றித் தானாகவே நடக்க ஆரம்பிக்கும். உணவு உண்ணவும், நீர் அருந்தவும் செய்யும்.

ஆண் மயிலின் வண்ணமயமான தோகை, பெண் மயில்களை ஈர்க்கவும், பிற விலங்குகள் தாக்க வரும்போது, தனது தோகையை விரித்துக் காட்டி பயமுறுத்தவும் பயன்படுத்தும்.
மயிலின் தோகை, நாம் பார்க்கும் கோணத்துக்கு ஏற்ப வெவ்வேறு நிறங்களை எதிரொளிக்கும்.
மயில் உடலுறவு கொள்ளாது என்றும் ஆண் மயிலின் கண்ணீரை குடிப்பதால் மட்டுமே பெண் மயில் கர்ப்பம் தரிக்கிறது என்ற ஒரு கருத்தை கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனால் மற்ற ஜீவன்களை போல இல்லாமல், மயில்கள் உறவு கொள்ளாத காரணத்தாலே அதன் தோகை புனிதமாக கருதப்படுவதாகவும் ஒரு கருத்து உண்டு.

ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது என்றால், ஆண் மயிலானது தோகையை விரித்து தனக்கு தெரிந்த வித்தையெல்லாம் காட்டி பெண்மயிலை கவர முயற்சிக்கும். பார்க்க சண்டை போட்டுக்கொள்வது போல தெரியும். இந்த விளையாட்டெல்லாம் முடிந்த பின்னர் இனசேர்க்கை நடைபெற்றுவிடும். அதனது பாணியில் உறவு கொள்வதால் பார்க்க, இன சேர்க்கை நடக்காதது போல தோற்றமளிக்கிறது.
ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 5

(புறா)



நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெள்ளத்திலிருந்து மக்களை காப்பாற்றி கப்பலில் பயணித்தார்கள் மக்களும் ஏனைய உயிரினங்களும் கப்பலில் தொடர்ந்து ரொம்பவும் காலம் கடற்பயணம் செய்தார்கள் .

அப்பொழுது வானவில் பல்வேறு வண்ணங்களுடன் காட்சி அளித்ததை கண்டதும் கப்பலிலிருந்தவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.
மழையே நிறுத்துவதாக இறைவன் தங்களுடன் செய்துகொள்ளும் உடன்பாடு அது என்று அவர்கள் அந்த வானவில்லின் வர்ண தோற்றத்துக்கு தங்களுக்குள்ளே விளக்கம் விளக்கம் கூறிக் கொண்டார்கள்.
அதன் பின் நூஹ் (அலை) அவர்கள் உலகின் நிலையை பார்த்து வருமாறு முதலில் கோழியை அனுப்பி வைத்தார்கள் . ஆனால் அது அங்குமிங்கும் சிதறிக் கிடப்பதாக பொறுக்கித் என்பதிலேயே இன்பம் கண்டு திரும்பி வரவே இல்லை. அது கண்டு அவர்கள் அதனை சபித்தனர் இதன் காரணமாக கோழிக்கு சிறகு இருந்தும் அது பறக்கும் தன்மையை இழந்துவிட்டது என்று கூறப்படுகிறது

அதன்பின் நூஹ் (அலை) அவர்கள் அப்பணிக்கு காகத்தை அனுப்பி வைத்தனர் . அதுவோ அங்குமிங்கும் கடந்த பிணங்களைக் கொத்தி தின்பதிலேயே இன்பம் கண்டதனால் அதுவும் திரும்பி வரவே இல்லை. அதுகண்டு நூஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட வெஞ் சினத்திற்கு அளவே இல்லை அதனையும் சபித்தார்கள் . இதன் காரணமாக காகம் மக்களை கண்டு அஞ்சுகிறது என்றும் அது பிணத்தைத் தின்கிறது என்றும் கூறுவர்.

அதன்பின் அப்பணிக்கு புறாவை அனுப்பி வைத்தார்கள். அது தன் சின்னஞ்சிறு அழகில் ஒலிவ மரத்தின் ஒரு சிறு இளம் தளிரை கொண்டு வந்தது . அதை கண்டதும் வெள்ளம் வடிந்துவிட்டது என்பதையும் அதன் காரணமாக மரத்தின் உச்சியில் தண்ணீர் மட்டத்திற்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கிறது என்பதை பாக்கியம் பெற்ற ஒலிவ மரத்தை தவிர்த்து வேறு எல்லா மரங்களும் அழிந்து விட்டன என்பதையும் அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். விரைந்து சென்று இதனைக் கொண்டு வந்ததற்காக அவர்கள் அப்புறாவை வாழ்த்தி அதன் மீது ஏற்பட்ட அன்பின் பெருக்கால் அதன் கழுத்தைச்சுற்றி ஒரு வளையத்தை அணிவித்தார்கள் . அதோடு அது மனிதர்களின் அன்பை பெற்று வாழவேண்டும் என்றும் இறைஞ்சினார்கள் . எனவே அது மனிதர்களுக்கு தகவல் செய்திகளை சேர்க்கும் பொருட்டு அதன் உள்ளுணர்வில் உணர்வை ஏற்படுத்தினான் இறைவன் .

இன்றும் தொடரும் புறா விடு தூது!

புறாவின் கால்களில் கடிதங்களைக் கட்டி அனுப்பும் அஞ்சல் சேவை உலகிலேயே இப்போது இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் மட்டும்தான் தொடர்கிறது. ஒடிஷா காவல்துறையில் இன்னமும் 50 புறாக்களுக்குத் தகுந்த பயிற்சியும், உணவும் அளித்து இதற்காகவே வளர்த்துவருகின்றனர்.

இந்த அரிய, பழங்காலக் கடிதப் போக்குவரத்து சேவையைக் கொண்டாடும் விதத்தில் கடந்த ஏப்ரல் 14-ல் புவனேஸ்வரத்திலிருந்து கட்டாக் நகருக்கு தகவல்களை அனுப்பினர். 25 கிலோ மீட்டர் தொலைவை 20 நிமிடங்களில் கடந்து, பார்வையாளர்களுக்கு உற்சாகம் ஊட்டின புறாக்கள். கலை, கலாச்சாரப் பாரம்பரியத்தைக் காப்பதற்கான இந்திய தேசிய அறக்கட்டளை இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடுசெய்திருந்தது. தகவல் தொழில்நுட்பம் நவீனமடைந்துவிட்ட

இக்காலத்தில் மின்னஞ்சல் சேவை உள்ளிட்ட எல்லாவித சாதனங்களும் விரல் நுனியில் காரியங்களைச் சாதிப்பதால் புறா விடு தூது பொதுவாக வழக்கொழிந்துவிட்டது. இருந்தாலும், ஒடிஷா மாநிலத்தில் இந்தப் பாரம்பரியத்தை அறுத்து எறிய மனமில்லாமல் இன்னமும் தொடர்கிறார்கள். பெரிய புயல், சூறாவளி அல்லது அதுபோன்ற இயற்கைப் பேரிடர்களின்போது மின்சாரம் தடைபட்டால் விரைவாகவும் நிச்சயமாகவும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க புறாக்கள்தான் பயன்படுகின்றன.

ஒடிஷா காவல்துறையில் 1946-ல் 200 புறாக்களுடன் இந்த சேவை தொடங்கப்பட்டது. அதற்கும் முன்னால் இந்தப் புறாக்கள் ராணுவத்தின் அஞ்சல் சேவைப் பிரிவில் செயல்பட்டன. இவை யாரோ-யாருக்கோ எழுதிய கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுக்காது. ஒரு ராணுவப் பாசறையிலிருந்து இன்னொரு பாசறைக்கோ, தலைமையிடத்துக்கோ அனுப்பும் ரகசியச் செய்திகளை வழி மாறாமல் கொண்டுபோய்ச் சேர்க்கும். இப்போதும் காவல்துறையினர் தங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்துக்கு மட்டுமே இதை அடையாளத்துக்குப் பயன்படுத்துகின்றனர். வாகனங்களால் போக முடியாத வழிகளில்கூட இவை பறந்து செல்லும்.

முதலில் கோராபுட் மாவட்டத்தில்தான் இச்சேவை தொடங்கியது. பெல்ஜியம் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு பிறகு உள்நாட்டு இனங்களுடன் கலப்பினமாக்கப்பட்ட 700 புறாக்கள் இச்சேவையில் பயிற்சி பெற்றன. எளிதில் அணுகமுடியாத தொலைதூரத்தில் இருந்த காவல் நிலையங்களுக்குத் தகவல் அனுப்ப இவைதான் பெரிதும் பயன்பட்டன. 1999-ல் பெரு வெள்ளம் ஏற்பட்டபோதும் புயல் வந்தபோதும் இந்தப் புறாக்கள் மிகவும் துடிப்பாகச் செயல்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதாலும் தகவல் தொடர்பு கோபுரங்கள் செயலிழந்ததாலும் ஏற்பட்ட தகவல் தொடர்பு இடைவெளியைப் புறா படைதான் இட்டு நிரப்பியது.

1982-ல் பங்கி என்ற சிறு நகரம் வெள்ளத்தால் சூழப்பட்டபோது அங்கிருந்த நிலைமையைக் காவல் துறை மூலம் பெற்றுவர இந்தப் புறாக்கள்தான் அனுப்பப்பட்டன. இந்தப் புறாக்கள் வெறும் தகவல்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் தூது வேலையைத்தான் செய்தன என்று நினைக்க வேண்டாம். சில குற்றவாளிகளை அவர்களுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்து கண்காணித்து பிடித்தும் கொடுத்துள்ளன!

(மீள் பதிவு)

பறவைகளின் உலகம் 6

(சேவல்)



சேவல்களுக்கு தான்தான் பெரிய ஆள் என்கிற ஓர் ஈகோ எப்போதும் உண்டு .அது குஞ்சாக இருக்கும் காலத்திலேயே அதன் மனதில் 'தான் ' என்கிற அகம்பாவம் இருக்கிறது. இதனால் சேவல் சண்டைக்கு அதன் பயிற்சியாளர்கள் எளிதாக அதற்குள் இருக்கும் ஈகோவை கொம்பு சீவி வளர்க்கிறார்கள் .
சேவல் சண்டை என்பது இரு சேவல்களிடையே நடைபெறும் சண்டையாகும். இயற்கையாக சேவல்கள், பெட்டைகளோடு இணை சேர்வதற்காக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றன. இந்தச் சண்டையில் வெற்றி பெரும் சேவல் பெட்டையுடன் இணை சேர்கிறது.

சேவற்சண்டை எனப்படும் சேவற்போரின் மீது எதற்காக ஆர்வம் வந்தது என்று இன்று வரை தெரியவில்லை.
சிந்து சமவெளி நாகரிகத்தில் சேவல் முத்திரைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. பண்டைய தமிழகத்தில் கீழச்சேரி, மேலச்சேரி என்ற இடங்களில் சேவல் சண்டை நடைபெற்றுள்ளது. தொல்காப்பியம் மற்றும் நன்னூல் போன்றவற்றில் கீழச்சேரி, மேலச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற சேவல் சண்டையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ஆனால் கி.பி 5ம் நூற்றாண்டில் சேவல் சண்டை நடைபெற்றமைக்கான சான்றாக சேவல் நடுகல் கிடைத்துள்ளது. பட்டினப்பாலை, **திருமுருகாற்றுப்படை** போன்ற பழந்தமிழ் நூல்களில் சேவல் சண்டை குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் விழுப்புரம் அருகேயுள்ள அரசலாபுரம் என்ற ஊரில் சேவல் நடுகல் ஒன்று கிடைத்துள்ளது. இதன் காலம் கிபி. ஐந்தாம் நூற்றாண்டு என வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள் அதில் முகையூர் என்ற பகுதியில் மேலச்சேரி என்ற பகுதி சார்பாகப் போரிட்டு மாண்ட சேவலுக்காக வைக்கப்பட்ட குறிப்புகள் கிடைத்துள்ளன.
பொதுவாக தமிழர்கள் மரபில் போரில் இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் வைக்கப்படுவது வழக்கம். அதே போல சேவலுக்கும் நடுகல் வைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் சேவல் சண்டைக்கான முக்கியத்துவத்தினை தெரிவிக்கிறது.
இந்தளூர் பகுதியில் கிடைத்த சேவல் நடுகல்லில் வீரமரணம் அடைந்த சேவலின் பெயர் "பொற்கொற்றி" என்றும், அச்சேவல் கீழச்சேரி எனும் இடத்தைச் சேர்ந்தது எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.
பூம்புகார் நகரத்து மக்கள் சங்ககாலத்தில் கண்டு களித்த விளையாட்டுகளில் ஒன்று கோழிச்சண்டை .இதே போன்ற விளையாட்டுகள் வட அமெரிக்கா, ஆசியாவின் பல பகுதிகளிலும் நடத்தப்படுகின்றன.
கோழிகளில் ஆண்கோழி சேவல் எனப்படும். ஆண் கோழிகள் தன் பெண் கோழியின் ஆதிக்க உரிமைக்காகப் பிற ஆண் கோழிகளோடு சண்டையிட்டுக் கொள்ளும். இந்தச் சண்டையை யாராலும் விலக்க முடியாது.

இரண்டு வயதாகும்வரை சேவலுக்குப் பயிற்சி தருகிறார்கள். குறிப்பாக சண்டைக்குப் பழக்கும் சேவலைத் தண்ணீரில் நீந்தவிட்டு மூச்சு பயிற்சி தருகிறார்கள்.

கிணற்றில் கொண்டு போய் விட்டு சேவலுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். சேவல் களைத்துபோகுமளவு நீந்துகிறது. சேவல் அதிகம் எடை வைத்துவிடக்கூடாது என்பதோடு அது பாய்ந்து சண்டை போட வேண்டும் என்பதிலும் அவர்களுக்கு தனி கவனமிருக்கிறது.
சேவலுக்கு போடப்படும் தீனிக்கு தான் அதிகம் செலவாகும் என்றவர் ஆட்டு ஈரல், முந்திரி, வேகவைத்த இறைச்சி என்று அந்த சேவலை ருதுவான பெண்ணைப் போல பார்த்து பார்த்து வளர்க்க வேண்டும் என்கிறார்கள் .

இந்த பயிற்சிக்குப் பிறகு சேவல்கள் சண்டைக்கு விடப்படுகின்றன. எந்தச் சேவலை எந்தச் சேவலுடன் சண்டைக்கு விட வேண்டும் என்பதில் விதி இருக்கிறது விளையாட்டு வீரன் தயார் ஆவது போல தான் சேவல் தயார் ஆகிறது.
சேவலின் காலில் கட்டப்படும் கத்தி மிகச் சிறியது. இரண்டு அல்லது மூன்று இஞ்ச் அளவில் இருக்கும். அதை சேவலின் வலதுகாலில் கட்டிவிடுவார்கள். கத்தி வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். சேவல் பாய்ந்து காலை அடித்தால் போதும் கத்தி கூராக வெட்டிவிடும்

குத்துச் சண்டை போட்டியைப் போன்றதே சேவற்சண்டையும். குத்து சண்டையில் ஒரு ரவுண்ட் என்பதை சேவற்சண்டையில் ஒரு தண்ணி என்கிறார்கள். அதாவது ஒரு சேவல் மற்ற சேவலை எந்த இடத்தில் தாக்குகிறது எப்படி தாக்குகிறது என்பதை முன்வைத்தது. சேவலின் தரத்திற்கு ஏற்ப அவை எத்தனை தண்ணி விளையாட முடியும் என்று தீர்மானிக்கபடுகிறது.

சில சேவல்கள் பத்து தண்ணி நின்று ஆடக்கூடியதாக இருந்தன. இந்த முறை மட்டுமின்றி ஒரு ரவுண்ட் என்பது பதினைந்து நிமிஷம் முதல் இருபது நிமிஷம் வரை சண்டையிடும் முறையும் இருந்தது. அதில் மூன்று ரவுண்டுகளில் சேவல் சண்டையிடும்.
சேவலின் உடல்வாகு, குறிப்பாக கால்கள் மற்றும் இடுப்பு தான் அதன் சண்டை போடும் வலுவிற்காக முக்கிய அம்சம். அது நிற்கும் வாகிலிருந்தே அதன் வலிமையை கண்டறிந்துவிடலாம்.
அது போலவே சிலிர்த்து சலம்பும் சேவல்கள் அதிகம் நின்று சண்டையிடுவதில்லை. குரைக்கிற நாய் கடிக்காது என்பது போன்றதே அவை. மாறாக சண்டைக்கு பழகிய சேவல்கள் கண்ணில் அடிக்க போகும் வன்மம் தெரிகிறது. அத்துடன் அவை தன் முழு ஆவேசம் பீறிடும் வரை அடிவாங்குகின்றன. சீற்றம் கொண்டுவிட்டால் சேவலின் ஆகிருதி அப்படியே மாறிவிடுகிறது. அது மிகுந்த வன்மத்துடன் பாய்கிறது. தேர்ந்த சண்டைச் சேவல் காலை உபயோகிக்கும் முறை அற்புதமானது. அது கத்தியைச் சுழற்றும் சாமுராய் போல தேர்ந்த துல்லியத்துடன் எதிரியைத் தாக்குகிறது.
ஒரு வேளை அடி தப்பிவிட்டால் உடனே தன் அடுத்த அடியை இன்னொரு விதத்தில் தருகிறது. ஒவ்வொரு பாய்ச்சலில் ஒரு வேகமிருக்கிறது. சேவலின் கண்கள் அலைந்து கொண்டேயிருக்கின்றன. புழுதியும் கூக்குரலும் ஆவேசமுமாக சேவல்கள் பொருந்தும் தருணத்தில் அவை நம் வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சேவல்கள் தானா என்று சந்தேகமாக இருக்கிறது.

சேவற்சண்டை உலகெங்கும் நடைபெறுகிறது. நீண்ட பராம்பரியம் கொண்டது. இந்தியா, சீனா, பெர்சியா நாடுகளில் பலநூற்றாண்டு காலமாக சேவற்சண்டைகள் தொடர்ந்து நடந்து வந்திருக்கின்றன.
லத்தீன் அமெரிக்க நாடுகளில் சேவற்சண்டைகள் மிக பிரலமானவை. நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரான கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ் சண்டை சேவல் பற்றி எழுதியிருக்கிறார்
இன்றும் பெரு மற்றும் மெக்சிகோவில் சேவற்சண்டைக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இந்த சண்டை சென்றிருக்க கூடும் என்று சொல்கிறார்கள். இன்றும் இந்தோனேஷியாவில் சேவற்சண்டை ஆரவாரமாக நடைபெறுகிறது.

நபித்தோழர்களுள் ஒருவர், ஒரு குருவிக்கூட்டிலிருந்து ஒரு குருவிக்குஞ்சைப் பிடித்துக்கொண்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்துகொண்டிருந்தபோது, அக்குஞ்சின் தாய்ப்பறவை அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது.
அதைச் சிறிதும் பொருட்படுத்தாத அவர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று அமர்ந்துவிட்டார்.
இதைக் கண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "உங்கள் கையிலுள்ள குஞ்சைப் பெற்றிடத் தாய்ப்பறவையின் ஏக்கத்தைப் பாருங்கள். நீங்கள் விளையாட அந்தக் குருவிக் குஞ்சுதான் கிடைத்ததா? அதை விட்டுவிடுங்கள். எவ்வுயிர்க்கும் நோவினை கொடுக்காதீர்கள்" என்று கூறினார்கள்.
ஒரு குருவியின் ஏக்கத்தைப் புரிந்துகொண்டு அதன்மீது இரக்கம் காட்டிய அண்ணல் நபியின் ஜீவகாருண்யத்தை இங்கு நாம் நினைவுகூர வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஓர் இடத்தில் தங்கியபோது ஒரு பறவை அவர்களின் தலையின்மேல் பறந்து கொண்டிருந்தது. ஒருவர் தனது முட்டையை எடுத்து அநீதமிழைத்தது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டது போன்று இருந்தது.
நபி (ஸல்) அவர்கள் "உங்களில் இந்தப் பறவையின் முட்டையை எடுத்தவர் யார்?'' என்று கேட்டார்கள். அப்போது ஒரு மனிதர் "அல்லாஹ்வின் தூதரே! நான் அந்த முட்டையை எடுத்தேன்'' என்றார். நபி (ஸல்) அவர்கள் "அதன் மீது கருணைகூர்ந்து அதை திருப்பிக் கொடுத்துவிடு'' என்றார்கள். (முஃஜமுத் தப்ரானி)
நீங்கள் சேவல்கள் கூவுகிற சத்தத்தைக் கேட்டால் அல்லாஹ்விடம் அவனுடைய அருளைக் கேளுங்கள்: ஏனெனில், அவை வானவரைப் பார்த்திருக்கின்றன. (எனவே தான் கூவுகின்றன.)
கழுதை கத்தும் சத்தத்தை நீங்கள் கேட்டால் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். ஏனெனில், அது ஷைத்தானைப் பார்த்திருக்கிறது. (எனவே தான் கத்துகிறது.) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். புஹாரி : 3303 அபூஹுரைரா (ரலி).
“சேவலை திட்டாதீர்கள் அது எம்மை தொழுகைக்காக எழுப்புகின்றது” - நபி (ஸல்) அவர்கள் நூல் : (நஸாஈ)
அப்பேர்பட்ட சேவலை மனிதர்கள் அதன் காலில் கத்தியைக் கட்டி சண்டைக்கு அனுப்புகிறார்கள் .

ரஹ்மத் ராஜகுமாரன் .

பறவைகளின் உலகம் 7

கழுகும் அதன் 7 கொள்கைகளும்



கழுகு (Eagle) ஓர் அற்புதமான பறவை. அதற்குச் சிறப்பான பார்வையும், உயரப் பறக்கும் ஆற்றலும் உள்ளன. உலக நாடுகளின் சின்னங்கள் முதல் வியாபாரப் பொருட்கள் பலவற்றை அலங்கரிப்பதற்குக் காரணம் அதன் சிறப்பான பண்புகள் ஆகும். கழுகிடம் காணப்படும் ஏழு குணாம்சங்கள் உயர்வான மனித வாழ்வை விரும்பும் ஒவ்வொருவருக்கும் அவசியம்.

கொள்கை 1:

கழுகுகள் தனியாக, உயரத்தில் பறக்கும். அவை ஏனைய பறவைகளுடன் சேர்ந்து பறக்காது . ஏனைய பறவைகளும் கழுகுகள் பறக்கும் உயரத்தில் பறக்க முடியாது.
கழுகுகள் கழுகுகளுடன் மட்டும் பறக்கும்!

கொள்கை 2:

கழுகுகள் கூர்மையான பார்வை உடையன. ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஒன்றை அவற்றால் தெளிவாகப் பார்க்க முடியும். கழுகு ஓர் இரையைப் பார்த்ததும், அது தன் பார்வை ஒடுக்கி அதைப் பிடிக்க முயலும். தடைகள் வந்தாலும், அது தன் தன் கவனத்தை திசை திருப்பாது, தன் பார்வையை இரையின்மேல் வைத்திருக்கும்.
தரிசனமும் தடைகளின்போது சிதறாத கவனமும் வெற்றியடையும்!

கொள்கை 3:

பிணந்தின்னிக் கழுகு போல் கழுகு அழுகியவை மற்றும் இறந்தவற்றை உண்ணாது. அது புதிதான இரையினையே உண்ணும்.
எதை உண்பது? எதைத் தெரிவது? எதை விலக்குவது? என்பதில் கழுகுகள் சரியான தெரிவை எடுக்கும்!

கொள்கை 4:

கழுகுகள் புயலை விரும்புகின்றன. புயல் காற்றின் மூலம் அவை மேகங்களின் மேலாக உயர்த்தப்படுகின்றன. இதனால், அவை சிறகினை விரித்து காற்றில் மிதக்கவும், அதன் மூலம்

இளைப்பாறவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்கின்றன. அதே நேரம், மற்றப் பறவைகள் மரக்கிளைகளில் ஒளிந்து கொள்ளும்.
வாழ் நாட்களில் ஏற்படும் புயல்கள் போன்ற சவால்கள், உயரப் பறக்க கிடைக்கும் சந்தர்ப்பங்களாகவும், நன்மையாகவும் மாற்றிக் கொள்ளப்படுகின்றன!

கொள்கை 5:

கழுகு பரீட்சையின் பின்பே நம்பிக்கை வைக்கும். பெண் கழுகு ஓர் ஆண் கழுகை சந்தித்து உறவு கொள்ளு முன், அது ஆண் கழுகுடன் நிலத்திற்குச் சென்று சிறு தடி போன்ற குச்சியை எடுக்கும். பின்பு மேலே ஆணுடன் உயரத்திற்குப் பறந்து சென்று அந்தக் குச்சியினைக் கீழே போட்டுவிட்டு அவதானித்துக் கொண்டிருக்கும்.
நிலத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கும் குச்சியை ஆண் கழுகு விரட்டிச் சென்று, அது நிலத்தில் விழு முன் பிடித்து, அதை உயரப் பறக்கும் பெண் கழுகிடம் சேர்ப்பிக்கும். பெண் கழுகு மீண்டும் குச்சியைக் கீழே போட்டுவிடும். ஆண் கழுகு பிடிப்பதற்காக கீழே செல்லும்.
இவ்வாறு குச்சியை வீழ்த்துவதும், எடுத்து வருவதுமாக பல மணித்தியாலங்களுக்கு பரீட்சை நடைபெறும். பெண் கழுகு ஆண் கழுகிடமுள்ள பொறுப்புணர்வை நிச்சயப்படுத்திக் கொண்டதும் அது உறவு கொள்ள இடமளிக்கும்.
உறவை ஏற்படுத்திக் கொள்ள முன் பொறுப்புணர்வு சோதனைக்கு உள்ளாக்கபடுகின்றது!

கொள்கை 6:

முட்டையிடத் தயாரானதும், ஆணும் பெண்ணும் மலையின் உச்சியிலுள்ள, ஏனைய உயிரினங்கள் இலகுவில் வந்தடைய முடியாத இடத்தினைத் தேர்வு செய்யும். ஆண் முட்களைக் கொண்டு வந்து பாறைப் பிளவில் கூட்டினை அமைக்க ஆரம்பிக்கும்.
அதன் பின் குச்சிகளையும், அதன் மேல் முட்களையும் வைத்துக் கட்டும். அதன்மேல் மிருதுவான புற்களை அடுக்கி முதலாவது அடுக்கினை முடிக்கும். அதன் பின் முட்களைப் பரப்பி, அதன் மேல் புற்களைப் பரப்பும். அதற்கு மேலாக தன் இறகுகளைப் பரப்பி, கூட்டினைக் கட்டி முடித்துவிடும்.
கூட்டின் வெளியேயுள்ள முட்கள் வெளியேயிருந்து எதுவும் கூட்டிற்குள் வருவதைத் தடுக்கும். பெண் கழுகு முட்டையிட்டு பாதுகாக்க, ஆண் கழுகு இரையை வேட்டையாடி கொண்டு வந்து கொடுக்கும்
குச்சுகளைப் பயிற்றுவிக்க பெண் கழுகு அவற்றை கூட்டிற்கு வெளியே எடுத்துவிடும். பயந்த குஞ்சுகள் கூட்டிற்குள் தாவி வந்துவிடும். ஆகவே, குஞ்சுகளை கூட்டிற்கு வெளியே எடுத்துவிட்டதும், கூட்டிலுள்ள இறகுகளை வெளியேற்றி முட்களுடன் கூட்டை விட்டுவிடும். பயந்த குஞ்சுகள் மீண்டும் கூட்டிலுள் தாவியதும், அங்குள்ள முட்கள் அவற்றைக் குத்திவிடும். இதனால் குஞ்சுகள் கூட்டைவிட்டு வெளியேறும். அடுத்து, மலை உச்சியிலிருந்து குஞ்சுகளை தாய்க் கழுகு கீழே தள்ளிவிடும். பயத்தால் அவை கீச்சிட்டு, கீழே விழுமுன் ஆண் கழுகு அவற்றைப் பிடித்து தன் மேல் வைத்துக் கொண்டு மலை உச்சிற்கு கொண்டு வரும். குச்சுகள் இறக்கை அடிக்கத் தொடங்கும் வரை, இவ்வாறு நடைபெறும்.
குடும்பம் இருவரின் பங்குபற்றலாலும் வெற்றி பெறும். முட்கள் குத்துப்போது, வாழ்வு அனுபவப்படாமல், முன்னேறாமல், கற்றுக் கொள்ளமல் அதிக வசதியாக இடத்தில் இருப்பதை உணர்த்துகின்றது.
வாழ்விலுள்ள முட்கள் வளர வேண்டும், கூட்டை விட்டு வெளியேறி வாழ வேண்டும் என்பதை கற்பிக்கின்றன.
உன்னை நேசிப்பவர்கள் உன்னை சோம்பலினால் நலிவுற விடமாட்டார்கள். அவர்களின் செயல் கூடாத செயலாகத் தெரிந்தாலும் நம் வளர்ச்சி, செழிப்பு எனும் நன்மைக்காளுக்காக அவர்கள் நம்மை கடினமான பாதையில் தள்ளுவார்கள்!

கொள்கை 7 :

ஒரு கழுகு வயதாகியதும், அதன் இறக்கை பலவீனமாகி, அது பறக்க வேண்டிய வேகத்தில் பறக்க ஒத்துழைக்காது. அது சாகும் அளவிற்கு பலவீனப்பட்டுள்ளதாக உணர்ந்ததும், மலையிலிருந்து நீண்ட தூரத்திற்கு ஒய்விற்காகச் சென்றுவிடும்.
அங்கிருந்து, தன் உடலிலுள்ள அத்தனை இறகுகளையும் மொட்டையாக வரும்வரை நீக்கிவிடும். அந்த மறைவான இடத்தில் புது இறகுகள் முளைக்கும் வரை தங்கியிருந்து, பின் வெளியே வரும்.
சுமையான, வாழ்க்கைக்குத் தேவையற்ற பழைய விடயங்கள், பழக்க வழக்கங்கள் இடையிடையே நீக்கப்பட வேண்டும்!
உலகில் படைக்கப்பட்ட அத்தனை ஜீவராசிகளுக்கும் ஒரு கொள்கை கோட்பாடு (ஷரியத்) கண்டிப்பாக இருக்கிறது .
பறவை என்பது வானம். அது பூமிக்கு ஒரு நாளும் கட்டுப்பட்டதல்ல - கொரியா பழமொழி
(மீள்)

ரஹ்மத் ராஜகுமாரன்
https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://www.youtube.com/watch%3Fv%3DxJFJ6extMbA&ved=2ahUKEwiJ64jhscXzAhU0juYKHUyGCSMQxa8BegQIChAB&usg=AOvVaw340xZqcgkUhWfvjfOmLUEW

பறவைகளின் உலகம் 8

(மீண்டும் உயிர்த்தெழும் பறவைகள்)



பீனிக்ஸ் பறவை என்பது பாரசீக, கிரேக்க, ரோம, எகிப்திய, சீன மற்றும் **பினோனிக்கன்களின் (Phoenicians)** புராதன கதைகளில் இடம்பெற்ற கற்பனையான ஒரு நெருப்பு பறவை ஆகும்.

புராதன கதைகளின்படி கற்பனை பறவையாகிய பீனிக்ஸ் கடும் சிவப்பு நிற உடலையும் தங்க நிறத்திலான வால் பகுதியையும் கொண்டு காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
இப்பறவையானது தனது ஆயுள் முடிவதாக உணரும் தறுவாயில், தானாகவே தனக்கென்று ஓர் மரத்தின் சிறு கிளைகளைக் கொண்டு கூடு ஒன்றை அமைத்து, அதில் தனக்கு தானே தீ வைத்துக்கொள்ளுமாம். தீ வைத்துக் கொண்ட பீனிக்ஸ் பறவையும் அதன் கூடும் முற்றாக எரிந்து தீர்ந்ததும், அதில் எஞ்சிய சாம்பலில் இருந்து புதிய பீனிக்ஸ் பறவை அல்லது புதிய பீனிக்ஸ் பறவையின் முட்டை தோன்றுவதாக நம்பப்படுகிறது.

பீனிக்ஸ் பறவை ஒரு இலட்சியப் பறவை எனவும், இதற்கு சூரியனைத் தொட வேண்டும் என்பதே வாழ்க்கையின் இலட்சியம் எனவும்,அது சூரியனை நோக்கி பறக்கும் போது, குறிப்பிட்ட தூரம் வரை சென்ற பின் சூரியனின் அதீத வெப்பம் தாங்க முடியாமல், உடல் கருகி மண்ணில் விழுந்து, மீண்டும் உயிர்த்தெழுந்து தொடர்ந்து தனது பயணத்தை தொடருமாம்.
ஆப்பிரிக்காவில் பீனிக்ஸ் பறவை வாழ்ந்ததாகவும், அவை கற்பனை அல்ல எனவும் நம்பப்படுகிறது. பீனிக்ஸ் பறவைகள் தமது முட்டைகளை நெருப்பில் இருந்து வரும் சாம்பலில் அல்லது காட்டுத் தீயினுள் இடும். இதனால் அடைகாக்க வெப்பத்தை நெருப்பிலிருந்தே அதன் முட்டைகள் பெற்று குஞ்சுகள் வெளிவரும். இதனை கண்ட அன்றைய மக்கள் இப்பறவைகள் நெருப்பிலிருந்து பிறப்பதாக தவறாக புரிந்து கொண்டமையால், அவை பற்றி பல்வேறு கட்டுக் கதைகள் உருவாகியது எனவும் ஒரு கருத்து நிலவுகின்றது.

புராணங்களில் சொல்லப்பட்ட கற்பனைப் பறவையோ, நிஜ பீனிக்ஸோ இருக்கட்டும். மனிதன் மரணித்தப் பின் மீண்டும் உயிர்த்தெழுதல் எப்படி என்று கேட்ட, நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பரிசோதனையாக அல்லாஹ் நான்கு பறவைகளைக் கொண்டு விளக்கம் அளித்தாக குர்ஆனில்...
அன்றி, இப்ராஹீம் (இறைவனை நோக்கி) "என் இறைவனே! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய். (அதை) நீ எனக்குக் காண்பி" எனக் கூறியபோது,
அவன் (இதை) "நீங்கள் நம்பவில்லையா?" என்று கேட்டான்.
(அதற்கு) அவர் "நான் நம்பியே இருக்கின்றேன். ஆயினும், (அதனை என் கண்ணால் கண்டு) என்னுடைய உள்ளம் திருப்தியடைவதற்காக (அதனைக் காண்பி)" எனக் கூறினார்.
(அதற்கவன்) "நான்கு பறவைகளைப் பிடித்து நீங்கள் அவைகளைப் பழக்கி, பின்னர் (அவைகளைத் துண்டு துண்டாக ஆக்கி) அவற்றில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு மலையின் மீதும் வைத்துவிட்டு (நடுவில் இருந்துகொண்டு) அவைகளை நீங்கள் கூப்பிடுங்கள். அவை உங்களிடம் பறந்துவந்து சேரும் "
(எனக் கூறி, அவ்வாறு செய்து காண்பித்து) "நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், மிக்க நுண்ணறிவுடையவனுமாக இருக்கின்றான் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்" என்றான். (அல்குர்ஆன் : 2:260)

இதற்கு இணங்க இப்ராஹீம் நபி அவர்கள் நான்கு பறவைகளை தேர்ந்தெடுத்து பழக்கி வளர்த்தார்கள். காகம், கழுகு, சேவல் மயில், ஆகியவை.
இவற்றை அறுத்து பொடிப்பொடியாக அவைகளின் மாமிசங்களை கொத்தி ஒன்றோடு ஒன்று கலந்து சுற்றியுள்ள மலைகளில் ஒவ்வொரு அளவாக வைத்து விட்டார்கள்.


இறைவன் உத்தரவின் பிரகாரம் அவற்றின் தலைகளை மட்டும் தங்கள் கைவசம் வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றின் பெயர் கூவி அழைத்தார்கள். அந்தந்த இனத்தைச் சேர்ந்த பறவைகள் உயிர்த்தெழுந்து , தங்கள் மாமிசங்களுடன் சேர்ந்து தலை இல்லாமல் பறந்து வந்து, அதனதன் தலையுடன் இணைந்து பறக்க ஆரம்பித்தன.எனவே நேரடியாக கண்ணுற்ற இப்ராஹீம் நபிக்கு இறைவனின் வல்லமை மீது அசைக்க முடியாத பூரண நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

ஏன் இந்த நான்கு இனப் பறவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன ?
இந்த நான்கு இன பறவைகள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு காரணம் உண்டு. சில பறவைகளின் தன்மைகள் மனிதனுக்கும் இருக்கின்றன. அதனால் மனிதன் உயர்நிலை அடைவதிலிருந்து தடுக்கப்படுகின்றான் .அவற்றை அறுத்தெறிந்துவிடின், படிப்படியாக உயர் அந்தஸ்தை அடைகின்றான். தன்னை அலங்கரித்தல், தன்னை விட சிறந்தவர் கிடையாது என கர்வம் கொள்ளுதல் என்ற இரு தன்மைகள் மனிதனில் ஏற்படுகின்றன. இவ்விரு தன்மைகளும் மயிலுக்கு உரியவை. இவை இரண்டும் இருக்கும் வரை மனிதன் உயர்வடைய முடியாது. ஆகையால் இவற்றை மனதைவிட்டு அறுத்தெறிய வேண்டும் என்பது மயிலைத் தேர்ந்தெடுக்க காரணம் ஆகும்.
சதா உண்பதையே கவனமாக கொண்டிருப்பவனே கழுகுக்கும், காம நுகழ்ச்சியிலேயே சதாவும் மூழ்கி இருப்பவனைச் சேவலுக்கும் , அதிக பேராசைக்காரனை காகத்திருக்கும் ஒப்பிடுவது உண்டு.
இத்தன்மைகள் அந்தந்த பறவைகளில் இருக்கின்றன. இத்தகைய தன்மைகள் கைக்கொண்டிருக்கிற எந்த மனிதனும் உயர் அந்தஸ்தை பெற முடியாது. அவற்றை மனதிலிருந்து அறுத்தெறிய வேண்டும் என்பதை தத்துவார்த்தமாக இந்த நான்கு பறவைகள் மூலம் சுட்டிக் காண்பிக்கப்படுகிறது.

ரஹ்மத் ராஜகுமாரன் .

பறவைகளின் உலகம் 9

பறவைகளின் வலசை



உணவு, உடை, உறைவிடம்... இந்த மூன்றும் மனிதர்க்கு அடிப்படைத் தேவைகள். நம்மைப் போலவே, பறவைகளுக்கும் அடிப்படைத் தேவைகள் உண்டு.

பருவங்கள் மாறும்போது,அந்தப் பறவைகளால் கடும் குளிரினைத் தாங்க முடியாமல் போவதால் அல்ல, உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதுடன் இருப்பதற்கும் பாதுகாப்பான ஓர் இடம் தேவை. மேலும் இனப்பெருக்கம் செய்வதற்காகவும்தான் பறவைகள் செல்லும் பயணம்தான் ' **வலசை' (Migration).**
இடம் பெயர்வது என்றால் ஒன்றோ இரண்டோ அல்ல. வித விதமான பறவைகள் கோடிக் கணக்கான எண்ணிக்கையில் இடம்பெயரும். அவ்வாறு இடம் பெயர்வதற்காக பறவைகள் பறக்கும் தூரம் சில நூறு மைல்களில் இருந்து பல ஆயிரக் கணக்கான மைல்கள் வரை.

இடம்பெயர்தல் என்றால் நாம் ஒரே ஊரில் அல்லது ஒரே நாட்டில் வீடு மாறுவது போல் அல்லாமல் வட துருவப் பிரதேசத்திலிருந்து தென் துருவப் பிரதேசம் வரை இடம்பெயர்கின்றன. பல பறவைகள், சுமார் 10,000மைல்களிலிருந்து 14,000 மைல்கள் தூரத்திற்கு பறக்கின்றன.

வெயில் காலத்தில் மனிதர்கள் கோடை வாசஸ்தலங்களை நோக்கிச் செல்வதுபோல, குளிர்காலத்தில் மேற்கத்திய நாடுகளில் இருந்து அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இந்தியா உள்ளிட்ட வெப்ப மண்டல நாடுகளுக்குப் பறவைகள் இடம்பெயர்கின்றன.
தாயகத்தில் உகந்த சூழ்நிலை உருவான பிறகு திரும்பிச் செல்கின்றன. குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் இந்த இடம்பெயர்தல்தான் 'வலசை'. இது பறவைகள் புலப்பெயர்வு எனப்படுகின்றது. இவ்வாறு புலம்பெயரும் பறவைகள் இதற்காகப் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றன.
ஒவ்வொரு வருடமும் பகல் பொழுது குறையும் காலங்களில் உணவு கிடைப்பதும் குறைகிறது. அப்போது பல பறவைகள் வெதுவெதுப்பான நல்ல சாதகமான தட்ப வெப்பநிலையை நோக்கி நீண்ட தூரம் பறந்து செல்லத் தம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றன.
இடப்பெயர்ச்சி துவங்குவதற்கு பல நாட்களுக்கு முன்னதாகவே பறவைகள் பயணத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றன. அதிக உணவை உண்டு, கூடுதலாக ஓர் அடுக்கு கொழுப்பை உடலில் சேர்த்துக் கொள்கின்றன.
சில பறவைகள் கூட்டமாக எப்படி அணிவகுத்துச் செல்வது என்று ஒத்திகைகள் கூடப்பார்க்கின்றன. பிறகு, ஒருநாள் ஆழமான மூதாதைப் பண்புகளின் தூண்டலால் உந்தப்பட்டு முன்பின் அறியாத இடங்களுக்கு செல்லத் துவங்குகின்றன.
இடம் பெயரும் பறவைகள் இருவிதமான நேர உணர்வைப் பெற்றுள்ளன. ஒன்று உள்ளூர் நேரத்தைச் சார்ந்தது. மற்றொன்று பருவ நிலை மாற்றம் தொடர்பானது, மேலும் அவை புவிக் காந்தப்புலத்தைச் சார்ந்தது. ஆனால் உலகின் சில பகுதிகளில் தீர்க்கரேகைகள் புவி காந்தப் புலத் தன்மைக்கு ஏற்ப அதிகம் மாறுவதில்லை.

இளம் பறவைகளைக் கொண்டு இலையுதிர் காலத்திலும் , வயதான பறவைகளைக்கொண்டு வசந்த காலத்திலும்இடப்பெயர்வு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
ஆய்வுகளின் படி கால, நேர, இட அடிப்படையில் அமையும் பறவைகளின் வான் பயண உத்திகள், வயதான பறவைகளுக்கு அதிகமாகவே இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.
ரீட்வார்ப்லர் என்ற இனப் பறவைகள் தீர்க்க ரேகையைக் கண்டறிவதுடன் இரு அச்சு வான் பயணமுறையை மேற்கொண்டு வசந்த காலத்தில் தத்தம் வாழிடங்களுக்குச் சரியாக வந்து சேர்கின்றன என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

தி கிரேட் ஆர்டிக் டெர்ன் The great arctic tern என்னும் பறவை வலசைப் போவதற்காக வடதுருவத்தில் இருந்து தென்துருவத்திற்கும் வலசை முடிந்து ஒரு ரிட்ர்ன் ட்ரிப்பும் அடிக்கிறது. இப்பயணம் முழுவதும் மேலே வானமும் , கீழே கடல் பரப்பிலும் மட்டுமே நடைபெறுகிறது.
اَوَلَمْ يَرَوْا اِلَى الطَّيْرِ فَوْقَهُمْ صٰٓفّٰتٍ وَّيَقْبِضْنَ‌ ۛؔ مَا يُمْسِكُهُنَّ اِلَّا الرَّحْمٰنُ‌ اِنَّهٗ بِكُلِّ شَىْءٍۢ بَصِيْرٌ
இறக்கைகளை விரித்துக் கொண்டும், மடக்கிக் கொண்டும் இவர்களுக்கு மேல் ஆகாயத்தில் (அணி அணியாகச் செல்லும் பறவைகளை இவர்கள் கவனிக்கவில்லையா ? ரஹ்மானைத் தவிர, (மற்றெவரும்) அவைகளை (ஆகாயத்தில் தூக்கி)ப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை! நிச்சயமாக அவன் அனைத்தையும் உற்று நோக்கினவனாக இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 67:19)

மேற்கண்ட குர்ஆன் வசனம் பறவைகள் வலசை போகுவதைப் பற்றி குறிப்பிட்டாலும்,ஆர்டிக் டெர்ன் பறவைக்கு கச்சிதமாக பொருந்துகிறது .
இது பறந்து போகும் பாதை முழுவதும் கடல் பிரதேசம் . எந்நேரமும் பறந்து கொண்டிருக்க வேண்டும்.ஓய்வு எடுப்பது கூட கடலில்தான். எப்படி முடியும் ? பயணம் புறப்படும் போது ஒரு மிதக்கும் குச்சியை கொண்டு செல்லும் அந்தக் குச்சியை கடலின் மேற்புறத்தில் மிதக்க விட்டு அதில் இளைப்பாறும்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 24,000 மைல்கள் (40,000 கி.மீ) பறக்கின்றன. இது பூமியைச் சுற்றியுள்ள தூரத்திற்கு சமமான தூரம்.
ஒரு ஆர்க்டிக் டெர்ன் 25 ஆண்டுகள் வாழ முடியும், எனவே கோடைகாலத்திற்கான அதன் வாழ்நாள் தேடலில் அது ஒரு மில்லியன் கிலோமீட்டர் (620,000 மைல்) பறக்க முடியும் - இது பூமியிலிருந்து சந்திரனுக்கு கிட்டத்தட்ட மூன்று மடங்கு தூரம்.
அசகாய சூரத்தனம். கடல் மேல் பறக்கையில் சட்டென்று நீருக்குள் பாய்ந்து ஒரு மீனை கவ்விக்கொண்டு அந்த மீனை காற்றிலேயே தூக்கிப்போட்டுப் பிடித்துப் பறக்கையிலேயே விழுங்கிவிடும். டெர்ன் பறவைகள் தமிழில் ஆலாக்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஓயாமல் பறக்கிற அவற்றின் பெயராலேயே ஆலாய்ப் பறக்கிறான் என்ற சொல்டை வந்திருக்கக்கூடும்.

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 10

(பறவை)



اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يُسَبِّحُ لَهٗ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَالطَّيْرُ صٰٓفّٰتٍ كُلٌّ قَدْ عَلِمَ صَلَاتَهٗ وَتَسْبِيْحَهٗ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِمَا يَفْعَلُوْنَ
வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளும் (இவற்றிற்கு மத்தியில் உள்ளவைகளும் குறிப்பாக) பறவைகளும் (தங்கள்) இறக்கைகளை விரித்(துப் பறந்)த வண்ணமாக அல்லாஹ்வை புகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை (நபியே!) நீங்கள் காண வில்லையா? இவை யாவும் தாங்கள் புகழ்ந்து வணங்க வேண்டிய முறையை நிச்சயமாக அறிந்தே இருக்கின்றன. அல்லாஹ்வும் அவைகள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான். (அல்குர்ஆன் : 24:41)

பறவைகள் பறந்த நிலையிலேயே இறைவனை துதிக்கின்றன அவற்றுக்கு இறைவன் சொல்லிக் கொடுத்து, வழிகாட்டிய முறையில் அவை அவனைத் துதிக்கின்றன. அவனுக்கு வழிபாடு செய்கின்றன. அவற்றின் செயல்பாடுகளை அவன் நன்கு அறிகிறான். அவை ஒவ்வொன்றும் தன் தொழுகையும், துதியையும் நன்கு அறிந்திருக்கின்றன.மேலும் இவை அனைத்தும் தான் நன்கு அறிந்து இருப்பதாகவும் இவற்றில் எதுவும் தனக்கு மறைவானது அல்ல என்றும் இறைவன் தெரிவிக்கின்றான்.

பறவைகளுக்கு நம்மைப் போன்ற கற்பனையும் இல்லை, அதனால் கவலைகளும் இல்லை. இன்று உலகையே உலுக்கும் பொருளாதார நெருக்கடியால் எந்தப் பறவையும் மனச்சோர்வு **(Depression)** நோய்க்கு ஆளாகவில்லை.
பறவைகள் இறக்கைகளை விரித்த வண்ணமாக இறைவனை துதிக்கின்றன.(24:41) இறைவன் அவற்றை (கீழே விழாமல் தாங்கி) தடுத்துக் கொண்டிருப்பதாக சொல்கின்றான். குர்ஆன் (67:19)

பறவைகள் தங்கள் வாழ்வைப் பற்றி சந்தேகப்படுவதில்லை. இறைவனின் மீது முழுநம்பிக்கை வைத்து இரை தேடச் சென்று, முழுவெற்றியுடன் திரும்புகின்றன.
பறவைகளின் இதயம் போன்றவர்கள் என்பது **அல்லாஹ்வின் மீது தவக்கல்** என்னும் முழுப்பொறுப்பும் சாற்றுபவர்கள் என்பது பொருளாகும்.
அல்லாஹ்வின் மீது தவக்கல் என்னும் முழுப் பொறுப்புச் சாட்டும் முறையில் நீங்கள் முழுமையாக நீங்கள் பொறுப்பு சாட்டினால், பறவைகளுக்கு உணவளிப்பது போன்று அல்லாஹ் உங்களுக்கும் உணவளிப்பான். பறவை காலையில் வயிறு ஒட்டியதாகச் செல்கிறது. மாலையில் வயிறு நிரம்பித் திரும்புகிறது. (அறிவிப்பாளர்: உமர் (ரலி) நூல்: திர்மிதி)

இந்த நபிமொழியை நன்றாக கவனியுங்கள், பறவைகள் முயற்சியற்று இருக்கவில்லை. உணவு தேடி கூடுகளை விட்டு பறந்து செல்கின்றன. இறைவன் உணவளிக்கின்றான். எந்த பறவையும் பட்டினியால் இறந்ததில்லை" என சொல்வார்கள்.

பைபிளில் ஒரு வாசகம் " பறவைகளைப் பார்.அவை விதைக்கிறதுமில்லை , அறுக்கிறதுமில்லை - களஞ்சியத்தில் கொண்டுபோய் சேர்ப்பதும் இல்லை " - ஆம் பறவைகள் தெரிந்து வைத்திருக்கின்றன; இயற்கை தன்னை ஏமாற்றாது என்று இருத்தலின் மீது அவற்றிக்கு அபார நம்பிக்கை உண்டு.
இதனால் தானோ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
சொர்க்கத்தில் மக்கள் சிலர் நுழைவார்கள். அவர்களுடைய உள்ளங்கள் பறவைகளின் உள்ளத்தைப் போன்றிருக்கும்.
இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 5462.

பறவைகள் நமது எண்ணங்களுக்குச் சிறகுகள் முளைக்க வைக்கின்றன - பறவைகள் விடுதலையின் அடையாளங்கள். சுதந்திரத்தின் குறியீடுகள். அவைகள் சிறகுகளை விரிக்கும் போது எல்லைகள் நீட்சியடைகின்றன !
பறவைகள் மனிதனுக்கு உந்து சக்தியை உற்பத்தி செய்பவை - அவை அவன் கவிதைகளுக்கு பாடுபொருள்
பழம் விழுங்கிய பறவை பறக்கிறது.
ஒரு மரத்தை சுமந்து கொண்டு !
ஒரு பறவை
பறந்து கொண்டிருக்கும்போது
மிதந்து கொண்டிருக்கிறது
கூடவே வானமும்
பறவையைச் சுட்டார்கள்
விழுந்ததோ
ஒரு துண்டு வானம்
- பாலை நிலவன்
"ஒரு பறவை பாடுவது அதனிடம் பதில் இருக்கிறது எனபதற்காக அல்ல ; அதனிடம் பாடல் இருக்கிறது எனபதற்காகவே அது பாடுகிறது " - மாயா ஏஞ்சலோ
பறவை ஒன்றை வரைந்துவிட்டு
அதன் இறகுகளை
மிகவும் கவனமாய்
செப்பனிட்டுக் கொண்டிருக்கிறேன்
பறந்துவிடும் என்று
பயமாக இருக்கிறது
அதனால்தான்
அதற்கான வானத்தை
நான் இன்னும் வரையவில்லை.
-ஜெம்சித் ஸமான்
பறவைகள் விஞ்ஞானத்திற்கு இடுபொருள்
பறவைகள் எத்தனை எத்தனை அழகு ! அது காகமாக இருந்தாலும் சரி, மயிலாக இருந்தாலும் சரி, பறக்காத பறவைகளும் அழகுதான் .

கோழி தன் குஞ்சுகளைத் சிறகுக்குள் வைத்து பாதுகாக்கிற தாய்மையும் அழகு. கொக்கு மீனுக்காக ஒற்றைக்காலில் இருக்கின்ற தவமும் அழகு. தேன்சிட்டு அலகும் அழகு ,பேசக் கற்றுக் கொள்ளும் மைனாவின் இறகுகளும் அழகு
இயற்கை, தன் அழகை எல்லா உயிர்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறது .
மனிதனோடு வாழ்கின்ற காரணத்தினாலேயே கோழிகளும் வான்கோழிகளும் பறக்கிற வழக்கத்தைத் தொலைத்தன.

பறவைகளைப் பார்க்கும்போது இன்னும் உயரமாய் மேலே செல்ல வேண்டும் என்கிற எண்ணம் மனிதனுக்கு தோன்றுகிறது.
اَلَمْ يَرَوْا اِلَى الطَّيْرِ مُسَخَّرٰتٍ فِىْ جَوِّ السَّمَآءِ مَا يُمْسِكُهُنَّ اِلَّا اللّٰهُ اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ
மேல் ஆகாயத்தில் (பறந்து) செல்லும் பறவைகளை அவர்கள் பார்க்கவில்லையா? அவற்றை (ஆகாயத்தில்) தாங்கி நிற்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவருமில்லை. நம்பிக்கை கொண்ட மக்களுக்கு நிச்சயமாக இதிலும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் : 16:79)
ஒவ்வொரு பறவையும் உணவுக்காக மட்டும் பறப்பதில்லை.
உணவைத் தாண்டிய உள்ளுணர்வால் அவை பறக்கின்றன.
பறப்பது சுகம்
பறப்பது ஞானம்
பறப்பது அனுபவம்
பறப்பது கொண்டாட்டம்
பறப்பது சுதந்திரம்
கூண்டுக் கிளிகளின்
காதலில் பிறந்த
குஞ்சுப் பறவைக்கு....
எப்படி வந்தன?................
எதற்கு வந்தன?..............
"சிறகுகள்".
.... x............x...............x ....
"பேசும் பார் என் கிளி" என்றான்
கூண்டைக் காட்டி.
அந்தக் கிளிக்கு வால் இல்லை.
வீசிப் பறக்கச் சிறகில்லை.
வானம் கைப் பட வழியே இல்லை.
"பேசும்! இப்போது பேசும் பார்!"
என மீண்டும் மீண்டும் அவன் சொல்ல...
"பறவை" என்றால்
"பறக்கும்" எனும்
பாடம் முதலில் படி! என்றேன்.
-கல்யாண்ஜி
எவ்வளவு இனிய பழங்களை தந்தாலும், சுதந்திரம் இல்லை எனில் கூண்டுக்குள் வாழாதவை அவை !
' பற 'அவை காரணப் பெயர் மட்டுமல்ல ;
சுதந்திரத்திற்கான இடுகுறிப் பெயரும் கூட !
(மீள்)

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 11

(இயற்கையின் துப்புரவாளர்கள் : பிணம் தின்னிக் கழுகு)



இயற்கை மனிதனின் உதவியின்றி தன்னை தானே காத்துக்கொள்ளும் அரிய தன்மை வாய்ந்தது. ஆனால் இந்த இயற்கையில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் அதன் விளைவு அபாயகரமாகி விடுகிறது. உதாரணம் மனிதனால் முற்றிலும் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள கழுகு இனம்.

'வல்ச்சர்' என அழைக்கப்படும் பிணம் தின்னி கழுகுகள் இந்தியாவில் 9 வகைகள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் நான்கு வகைகள் உள்ளன. 1990 வரை இந்தியாவில் அனைத்து இடங்களிலும் இப்பறவை காணப்பட்டது.

8 கோடியாக இருந்த இப்பறவையினம் தற்பொழுது வெறும் 1,500 மட்டுமே உள்ளன.இப்பறவையினம் அழிய வாய்ப்பு உள்ளது என்பதை ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கியோலாடியோ பறவைகள் சரணாலயத்தில் 1990களில் கண்டறியப்பட்டது. அதன்பின் 10 வருடங்களில் 97 சதவீதம் பறவைகளை நாம் இழந்து விட்டோம்.

பிணந்தின்னிக் கழுகுகள் சங்கத் தமிழ் நூல்கள் பாறு என்று குறிப்பிடுகின்றன. ஒரு காலத்தில் தமிழகம் எங்கும் பரவி இருந்த இவை சென்னையில் 1950 களில் காகத்தின் எண்ணிக்கையைவிட மிகுதியான எண்ணிக்கையில் இருந்தன. சென்னைக்கு அருகில் உள்ள திருக்கழுக்குன்றம் கோயிலுக்கு ஒரு சோடி பாறுக் கழுகு 20 ஆண்டுகளுக்கு முன்புவரை தினசரி வந்து இரை எடுத்துச் சென்றிருக்கின்றன. ஆனால், இப்போது வருவதில்லை.

இந்த பாறு தற்போது நீலகிரியையும் அதைச்சுற்றிய பகுதிகளிலுமே எஞ்சியுள்ளது. இப்பறவைகளின் அழிவுக்கு அடிப்படைக் காரணம் டைக்ளோஃபினாக் எனப்படும் வலிநிவாரணி. மூட்டுவலி, தசைவலிகளுக்கு வெளியில் தடவும் மருந்தாக இப்போதும் இதை நாம் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். இந்த மருந்து கால்நடைகளுக்கு ஊசி மூலம் செலுத்தப்படுகிறது.

தொடர்ச்சியாக வலிநிவாரணி செலுத்தப்பட்ட கால்நடை இறக்கும்போது, அவற்றின் உடலெங்கும் இந்த வலிநிவாரணி எச்சமாகத் தேங்கிக் கிடக்கிறது இதை உண்ணும் பிணம் தின்னும் கழுகுகள் இறக்கின்றன. கால்நடைகளுக்கான டைக்ளோஃபினாக் இப்போது தடை செய்யப்பட்டுவிட்டாலும், அது பற்றி போதிய விழிப்புணர்வு இல்லாத நிலை நிலவுகிறது.

'டைகிலோவினாக்கிற்கு' மாற்று மருந்தால் 'மெலாக்சிகாம்' போன்ற மருந்துகளின் விலையை குறைக்க வேண்டும். தமிழ்நாட்டில் கழுகுகள் வசிக்கும் ஒரே காடான சத்தியமங்கலம் வனத்தின் பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும்.செயற்கை முறையில் கழுகினை இனப்பெருக்கம் செய்ய வேண்டும். விவசாயிகள், பொதுமக்கள்,கால்நடை மருத்துவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

18 வயதிற்கு மேல் வாழக்கூடிய இப்பறவைகளில் ஆணும், பெண்ணும் வாழ்நாள் முழுவதும் இணை பிரியாமல் சேர்ந்தே வாழும். உயர்ந்த மலை பாறைகளிலும் மரங்களிலும் கூடுகட்டி வாழும் இவை வருடத்தில் ஒருமுறை மட்டுமே இனப்பெருக்கம் செய்து, ஒரு குஞ்சினை மட்டும் ஈனும். இக்குஞ்சுப்பறவை பறக்க 100 நாட்களுக்கு மேல் ஆவதால் இதனை பாதுகாப்பதில் தாயும், தந்தையும் சரிசமமாக பொறுப்பேற்கும்.
கூட்டமாக வாழக்கூடிய இவை, பூமியின் மேல், 1 முதல் 2 கி.மீ., உயரத்தில் வெப்பக்காற்றில் மிதந்து, வெறும் 3 அடி நீளம் உள்ள இறந்த பிராணியை, 4 கி.மீ., தொலைவில் இருந்து பார்க்க கூடிய கண்பார்வை திறன் கொண்டது.

கழுகினம் இறந்த பிராணிகளை அப்புறப்படுத்துவதால் மிகச்சிறந்த துப்புரவு பணியாளர் ஆகிறது. ஒரு சில மணி நேரத்திலேயே இவற்றின் வயிற்றில் உள்ள அமிலம் அழுகிய பிராணிகள் மட்டுமின்றி,அவற்றில் உள்ள கிருமிகளையும் அழித்து விடுகிறது. வெறும் வேட்டையாடிகளாகப் பார்க்கப்படும் கழுகுகள் நோய்க்கிருமிகளையும் சேர்த்து வேட்டையாடுகின்றன, என்கிறார்கள் ஆய்வாளர்கள்.
இதனால் மனிதன் கால்நடைகள் மற்றும் வன உயிரினங்களுக்கு ஆந்திராக்ஸ், கோமாரிநோய், ரேபிஸ் போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பு கிடைக்கிறது கழுகினம் இல்லாததால் இறந்த பிராணிகள் அதிகமாகிறது.
இதனால் பிற பிணம் தின்னிகளான நாய்கள், காகம், எலி போன்றவற்றின் எண்ணிக்கை அதிகமாகிறது. மனிதனுக்கு நாய்கடி, ரேபிஸ் போன்ற சிரமங்கள் அதிகமாக இதுவே காரணம். இக்கழுகினம் இருந்திருப்பின், இன்று தமிழ்நாட்டில் சில கோடிகள் செலவில் மேற்கொண்ட கால்நடைகளுக்கான கோமாரிநோய் தடுப்பு திட்டம் தேவைப்படாமல் இருந்திருக்கும்.
அழிந்து வரும் மற்ற பறவை இனங்களைப் பற்றிப் பேசுவது போன்று பிணம் தின்னி கழுகுகள் பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. கழுகுகள் என்றால் மேசமான உயிரினம் என்ற பார்வை பெரும்பாலும், இருப்பதைப் பார்க்கலாம்.

கழுகுகளைத் தீவிரவாதிகள் போன்றும், மேசமான தலைவர்கள் போன்றும் சித்தரித்து பத்திரிகைகளில் கேலிச்சித்திரங்கள் வெளியிடப்பட்டுவதும் உண்டு. இவை அனைத்து, மறைமுகமாகக் கழுகுகளைப் பற்றிய தவறான எண்ணத்தை வித்திடுவதாகவே ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.
“உலகிலேயே எங்களைப் போல இழிவாகச் சித்தரிக்கப்பட்ட வேறு ஒரு பறவை இருக்குமா என்று தெரியவில்லை. **Origin of Species** எனும் நூலை எழுதிய சார்லஸ் டார்வின் கூட இதற்கு விதி விலக்கு இல்லை. அவர் 'அழுகிய பிணங்களில் களியாட்டம் போடும் ஒரு வெறுக்கத்தக்க பறவை' என்கிறார்.
'வல்சர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கொள்ளைக்காரன் என்றும் சூறையாடுபவன் என்றும் 'மெரியம் வெப்ஸ்டர்' எனும் ஆங்கில அகராதி விளக்கம் சொல்கிறது. விளக்கம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா ? பிணந்தின்னி கழுகு என்ற எங்கள் பெயரை மாற்றுங்கள் . மேலும் பெரும்பாலான கேலிச்சித்திரங்கள் எங்களை ஊழல்வாதிகளோடும்,

கேடுகெட்ட அரசியல்வாதிகளோடும் ,அதிகாரிகளோடும், கொடுமதியாளரோடும் ஒப்பிடுகின்றன” என்று கழுகுகள் பார்வையில் மனிதர்களின் நடவடிக்கை பற்றி அருளகம் அமைப்பைச் சேர்ந்த பாரதிதாசன் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் திருக்குர்ஆனில் பறவைகளால் அழித்துதொழிக்கப்பட்ட கூட்டத்தாரை பறவைகளைக் கொத்தி தின்னப்பட்ட பிணங்களின் உதாரணத்தோடு கூறுகிறான்

وَّاَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا اَبَابِيْلَۙ
அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங்கூட்டமாக அனுப்பி வைத்தான்.
فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّاْكُوْلٍ
அதனால், அவன் அவர்களை(ப் பறவைகளால்) கொத்தித் தின்னப்பட்ட கதிர்களைப்போல் ஆக்கி (அழித்து) விட்டான்.
(அல்குர்ஆன் : 105: 3, 5) என்கின்றான் .

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 12

" ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப்பிடியுங்கள் நாங்கள் வந்து கூடு கட்டுகிறோம்" : சிட்டுக்குருவி
ஒரு சமயம் நபிஸல் அவர்கள் வெட்டுக் கிளியை மதீனா முழுவதும் தேடச் சொன்னார்கள் அப்போதைக்கு அது கிடைக்கவில்லை என்றதும் நபிஸல் அவர்கள் பதட்டம் அடைந்தார்கள்
காரணம் கேட்டதற்கு வெட்டுக் கிளி இப்பூமியில் இல்லாமல் போனால் அன்றைக்கு கியாமத் நாளாக இருக்கும் என்றார்கள்
பின் மதீனாவிற்கு தொலை தூர கிராமத்தில் கண்டுபிடித்தாக சொன்னதும் நபிஸல் அவர்கள் அமைதி பெற்றார்கள்

நம்மைச் சுற்றி உள்ள ஜீவராசிகளின் ஜீன் இல்லாமல் போகும் போது நாம் எதையோ நம் வாழ்க்கையில் இழக்கிறோம்
அன்னப் பறவை கம்பளி யானை தாடிப் புலி கடைசி ஒன்றிலிருந்து காப்பாற்றிய பாண்ட கரடி இப்படி சுமார் 2000 க்கும் மேற்பட்ட ஜீவராசிகள் இல்லாமல் போய்விட்டது
சிட்டுக் குருவியைப் பற்றிய புதுத் தகவல் . . . . . .

என் தகப்பனார் முகம்மது சாகிப் அவர்கள் 97 வயதில் தவறி கீழே விழுந்ததில் காலில் தொடை எலும்பில் சின்ன முறிவு பண்டார விளை வைத்தியர் கட்டுப் போட்டு நடக்க தயாரிக் கொண்டிருக்கிறார்
கடந்த 2 மாதங்களுக்கு மேலாக மேலப்பாளைய மாட்டு சந்தை பக்கம் உள்ள மதீனா நகரில் என் தம்பி வீட்டில் எல்லோரும் ஒன்றாக கூட்டுக் குடும்பமாக ஒரே சமையல் அங்கே எல்லோரும் தங்கி இருந்து என் தகப்பனாரை நன்கு கவனித்து வருகிறோம்

இந்த கான்கிரீட் போட்ட பெரிய பங்களாவில் திடீரென சிட்டுக் குருவிகள் நிறைய வந்தன வீட்டில் ஆங்காங்கே அமர்ந்து கிரீச் சப்தம் . இந்த சப்தம் கேட்டு எவ்வளவு வருடங்கள் ஆச்சி என்று சந்தோஷமாக சொல்லிக் கொண்டிருக்கும் போது ...

எங்கள் கொத்தனார் கணேசன் சொன்னார்
" கூட்டுக் குடும்பமாக இருக்கும் வீட்டில் மட்டும்தான் சிட்டுக் குருவி வாசம் செய்யும் " என்று சொன்னதும் ஆச்சரியமாக இருந்தது மேலும் அவர் சொன்னார் எங்கள் கிராமத்தில் கூட கூட்டுக் குடும்பமாக இருக்கிற வீட்டில் மட்டுமே சிட்டுக்குருவி வாசம் செய்து கூடு கட்டுகிறது அது கான்கிரீட் வீடாக இருந்தாலும் சரி தனிக் குடித்தனம் இருக்கிற ஓலை குடிசையில் சிட்டுக் குருவி வருவது இல்லை

நீங்கள் இதனை ஆய்வு செய்து தகவல் சரியா ? சொல்லுங்கள்
وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَ لَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖۤ اِخْوَانًا وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ فَاَنْقَذَكُمْ مِّنْهَا كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ
இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள்; நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து; அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்; இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள்; அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை - வசனங்களை உங்களுக்கு தெளிவாக்குகிறான். (அல்குர்ஆன் : 3:103)

சிட்டுக்குருவி தெரிந்த ஒற்றுமை என்கிற பண்பு மனிதர்களுக்கு தெரியாமல் போய் விட்டதே ...!
மீள்பதிவு

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 13

கிளி எப்படி பேசுகிறது ?



கிளிகளின் மூளையின் வித்தியாசமான கட்டமைப்புதான் அவைகளை மனிதன் பேசுவதை உள்வாங்கி அதே போல் பேச வைக்கிறது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

கிளிகளின் பேசும் திறன் மற்ற பறவைகளுக்கு இல்லாத விநோதமான தன்மை கிளிகளுக்கு உள்ளது. கிளிகள் மனிதர்களைப் போலவே ஒலி எழுப்ப வல்லவை. பயிற்சி அளித்தால் சில வார்த்தைகளை கூட பிசகு இல்லாமல் உச்சரிக்கும்.

காகம், நைட்டிங்கேல் போன்றவை பாடும் பறவைகளென அழைக்கப்பட்டாலும், இந்த பறவைகளால் வார்த்தைகளை உச்சரிக்க முடியாது.
கிளிகளின் பேசும் திறன் பற்றிய ஆய்வு அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டனர். கிளிகள் எவ்வாறு குரலை உள்வாங்கி கொள்கிறது, உள்வாங்கிய குரலையும் வார்த்தைகளையும் எவ்வாறு பின்பற்றி, அதே போன்று ஒலி எழுப்புகிறது என ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் கிளிகளின் மூளை உடற்கூறு பிற பாடும் பறவைகளின் மூளை உடற்கூற்றில் (Structural differences) இருந்து வேறுப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குரல் கற்றல் திறன் என்பது குரலை உள்வாங்கி கொள்ளும் திறன் ஆகும்.

கிளியின் மூளையில் உள்ள வரையறுக்கப்பட்ட மையம் (defined centers), கிளிகள் குரல்களை உள்வாங்கி கொள்ளும் செயலில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு அறிக்கை 'PLOS ONE' என்னும் ஆய்வு பத்திரிகையில் வெளியானது ஆகும்.

ஆப்பிரிக்க சாம்பல் ஆண் கிளிகள், மனிதர்களின் பேச்சைப் புரிந்து கொள்வதில் திறமை வாய்ந்தவை.மனிதர்களின் குரல்களைக் கேட்டு அவர்களைப் போலவே ஒலி எழுப்பும் ஆற்றல் பெற்ற கிளிகள். சில வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தால் போதும் அதைத் திருப்பிச் சொல்லும்.
இராஜராஜனும் அவரது தமக்கை குந்தவை நாச்சியாருக்கும் இஸ்லாம் மார்க்கம் குறித்த தொடர்புகள் அவனது தந்தையான சுந்தரச்சோழன் ஆட்சிக்காலத்தில் இருந்தே தொடர்ந்து வந்துள்ளது.

இஸ்லாம் மதத்தை பரப்புவதற்காக சோழர் ஆட்சிப்பகுதிக்கு சிரியா நாட்டில் இருந்துவந்த நத்தஹர் (ரஹ்) அவர்களுடன் சிறுவயதில் இருந்து பழகும் வாய்ப்புகள் குந்தவை நாச்சியாருக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் வைதீக மதத்தைவிட்டு குந்தவை நாச்சியார் இஸ்லாம் மதத்திற்கு மாறினார்.
நத்தர் குந்தவை நாச்சியாரை வளர்ப்புப் பிள்ளையாக பாவித்துள்ளார். இஸ்லாம் மதத்தைத் தழுவியபோது, அவருக்கு **"நத்தர்வலி ஹலிமா "**எனப்பெயரிட்டு அழைத்து வந்தார் எனவும், அவரை மாமாஜிகினி என்று மரியாதையுடன் அழைத்து வந்தனர்

குந்தவை நாச்சியார் ஆசையாக வளர்த்துவந்தார். அந்தக் கிளி குந்தவை நாச்சியார் திருக்குர்ஆன் மனப்பாடம் செய்யும்போது, கிளியும் நாச்சியாருடன் திருக்குர்ஆனை ஓதும். நத்தர் இறந்த சில வருடங்களில் குந்தவை நாச்சியாரும் இறந்துள்ளார் என்றும், நத்தரை அடக்கம் செய்த இடத்தின் பக்கத்தில் குந்தவை நாச்சியார் வளர்த்த கிளியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

அல்பைன் இனப்பறவைகளில் எஞ்சியிருப்பவை கீ வகை கிளிகளே. இந்தக் கிளிகள் இங்கு வரும் பயணிகளின் பைகளைத் திறந்து பார்க்கும். சிறுபொருட்களைத் திருடும். வாகனங்களைச் சேதப்படுத்தும்.
-மௌலானா ரூமி எழுதிய மஸ்னவி ஷரீபில் ..

காஷ்மீரில் ஒரு பெரிய வணிகர் இருந்தார். அவர் ஆண்டுதோறும் பாரசீகத்துக்குச் சென்று வணிகம் செய்து வந்தார். (பாரசீகத்தின் தற்போதைய பெயர் ஈரான்). இந்திய சரக்குகளை அங்கே விற்றுவிட்டு ஈரானிய சரக்குகளைக் காஷ்மீருக்குக் கொண்டுவந்து விற்பது அவரது வழக்கம்.

ஒரு முறை பாரசீகத்தில் ஒரு அழகான கிளியைப் பார்த்தார். அது மனிதர்களைப் போலவே பேசுவது கண்டு வியப்படைந்தார். உடனே அந்தக் கிளியை ஒரு விலை பேசி வாங்கிவிட்டார்.
காஷ்மீருக்குத் திரும்பிவந்தவுடன் அழகான, பெரிய கூண்டு செய்து அதற்கு ராஜ உபசாரம் செய்துவந்தார். அவரது குடும்பத்தினரும் அக்கிளியைப் போற்றி வளர்த்தனர். தங்கக் கூண்டு ஆனாலும், கூண்டு என்பது சிறைவாசம்தானே! இருந்த போதிலும் கிளி அழகாகப் பேசி அவர்களை மகிழ்வித்து வந்தது.
ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காஷ்மீர் வணிகருக்கு உடல்நலம் சரியில்லை. உடனே அந்தரங்கக் காரியதரிசியை அழைத்து, “இந்த ஆண்டு நீ போய் பாரசீகத்திலிருந்து சரக்குகளை வாங்கி வா; எனக்கு உடம்பு சரியில்லை” என்றார். எஜமானர் போட்ட உத்தரவை சிரம் மேல் தாங்கி அவரும் பாரசீகத்துக்குப் புறப்படத் தயாரானார்.
எல்லோர் அன்புக்கும் பாத்திரமான கிளி, அவரை அழைத்து, “அன்பரே. நீர் பாரசீகத்துக்குச் செல்லும்போது எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இங்கு எனக்கு ராஜபோக உபசாரம் கிடைத்தாலும் என் சொந்தக்காரர்களைப் பார்க்காமல் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்களை நீங்கள் சந்தித்து நான் குசலம் (நலம்) விசாரித்ததாகக் கூறுங்கள். என் சொந்தக்கார கிளிகள் நீர் செல்லும் நகருக்குக் கிழக்கேயுள்ள தோட்டத்தில்தான் வசிக்கின்றன. மிகப் பெரிய கூட்டம் என்பதால் அந்தக் கிளிகளை நீவீர் எளிதில் இனம் காண முடியும். இடர்ப்பாடு ஏதும் இராது ” என்றது. கடைசியாக நான் அவர்களைப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன வழி என்றும் ஒரு கேள்வியைக் கேளும்; அவர்கள் சொல்லும் பதிலை என்னிடம் மறவாது செப்பும்” என்றும் கிளி பகன்றது. காரியதரிசியும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

வணிகரின் செயலர் பாரசீகத்துக்குச் சென்று வணிகப் பணிகளை செவ்வனே செய்து முடித்தார். திடீரென காஷ்மீரிலுள்ள கிளி சொன்ன விஷயம் நினைவுக்கு வரவே நகருக்கு வெளியேயுள்ள தோட்டத்துச் சென்றார். அந்தக்கிளி சொன்னது போலவே எளிதில் சொந்தக் கார கிளிக்கூட்டத்தைக் கண்டு பிடித்தார். அவர்களுடைய சொந்தக்கார கிளி காஷ்மீரில் அடைபட்டிருப்பதையும் அது “நலம்தானா?” என்று வினவியதையும் செப்பிய பின்னர், ”ஒரு முக்கிய விஷயம் காஷ்மீர் கிளி உங்களையெல்லாம் மீண்டும் பார்க்கவேண்டுமாம். நீங்கள்தான் அதற்கு வழி சொல்லவேண்டுமாம்” என்றார்.
அந்தக் கிளிகளோ கீச்சுக் கீச்சு என்று ஒலி எழுப்பியனவே அன்றி பதில் சொல்லவில்லை. அவரும் மூன்று நான்கு முறை கேட்டுப் பார்த்தார். பலனில்லை. அவர் புறப்படும் முன் ஒரே ஒரு கிளி மட்டும்—வயதான கிளி—இறக்கையெல்லாம் பாதி இழந்துவிட்ட கிளி- தொப்பென்று மரத்திலிருந்து கீழே விழுந்தது. செத்துப்போன கிளி போல சிறகெல்லாம் விரிந்து, மல்லாந்து கிடந்தது. அதைப் பார்த்த செயலர், “ஐயோ பாவம்; தள்ளாத வயது போலும்” என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார்.
காஷ்மீருக்குத் திரும்பிவந்தவுடன் , எஜமானரிடம் – முதலாளியிடம் – வணிக விஷயங்களை ஒப்புவித்தார். அவருக்கும் மிக்க மகிழ்ச்சி. இதைப் பார்த்துக் கொண்டிருந்த கிளி மெதுவாக அவரை அழைத்து “நான் சொன்ன விஷயம் என்னவாயிற்று?” என்று கேட்டது.
அவரும் நடந்ததை நடந்தபடியே சொல்லிவிட்டு கடைசியில் ஒரு கிளி மரத்திலிருந்து கீழே விழுந்து இறந்ததையும் கூறினார்.
இதைக் கேட்டுக்கொண்டே இருந்த கிளி திடீரென கூண்டின் உட்புறத்தில் நிற்கும் மரக்குச்சியில் இருந்து விழுந்து
படபடத்தது. அது சிறகை விரித்து மல்லாந்து கிடந்ததைப் பார்த்துவிட்டு எஜமானரிடம் கிளி திடீரென்று இறந்துவிட்டது என்றார்.
அவரும் அதன் பரிதாபச் சாவைப் பார்த்துவிட்டு வேலைக்கரனைக் கூப்பிட்டு, ஊருக்கு வெளியேயுள்ள தோட்டத்தில் உரிய மரியாதையுடன் அடக்கம் செய்யச் சொன்னார்.

உடனே வேலைக்கரன் அந்தக் கிளியை மிகவும் மரியாதையுடன் எடுத்துக்கொண்டு ஊருக்கு வெளியே ஒரு இலைதழை படுக்கை செய்து அதன்மீது வைத்துவிட்டு, ஒரு குழிதோண்டத் துவங்கினான். இதுவரை இறந்ததுபோல பாவனை செய்த கிளி சிறகடித்துப் பறந்தோடிப் போய்விட்டது!
விடுதலை! விடுதலை!
இந்த கிளி அல்பைன் இன வகை கீ கிளியாக இருக்குமோ ?

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 14

ஆந்தை : பின்புறமும் இரண்டு கண்கள் உண்டு



“ஒருவன் கொலை செய்யப்பட்டால் கொலையாளியிடம் பழி தீர்க்கப்படாதவரை அவனது ஆன்மா சாந்தியடையாமல் வீடுகளின் மேல் ஆந்தை உருவில் பறந்துகொண்டு “தாகம்! தாகம்! என் தாகத்தைத் தணியுங்கள்! என் தாகத்தைத் தணியுங்கள்” என கூச்சலிட்டுக் கொண்டிருக்கும். கொலையாளியை பழிவாங்கினால் மட்டுமே ஆன்மா சாந்தியடையும்” எனவும் நம்பிக்கை கொண்டிருந்தனர். (ஸஹீஹுல் புகாரி),நூல் : ரஹீக் (முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு)
அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்
(இறந்தவரின் எலும்பு ஆந்தையாக மாறிப் பறப்பதாகக் கருதும்) ஆந்தை பற்றிய நம்பிக்கையும் உண்மையல்ல' என்று கூறினார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 4464.
சில நாடோடி கதைகளில் இரவில் பார்வை திறன் கொண்டதோடு, பறக்கவும் முடிகின்ற ஆந்தை பறவையை பேய், பூத, பிசாசுகள் போன்றவற்றோடு தொடர்பு படுத்தி ஒரு துஷ்ட பறவையை சித்தரித்து விட்டனர். இதன் காரணமாக பல இடங்களில் ஆந்தை பறவைகள் காரணமின்றி கொல்லப்பட்டிருக்கின்றன.
ஆந்தைகள் பற்றி சில உண்மைகள்
ஆந்தைகள் பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. ஆந்தைகள் காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் வாழ்கிறது. ஆந்தைகள் 1 கிலோ முதல் 4 கிலோ வரை எடை கொண்டவை.
பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளை விட பெரியதாக இருக்கும். இந்து மத புராணங்களில் ஆந்தையை லட்சுமி தேவியின் வாகனமாக கருதப்படுகிறது.
இந்தியாவின் பழமையான பஞ்சதந்திரக் கதைகளில் சித்தரிக்கப்பட்ட பல பறவைகள் கதாபாத்திரங்களில் ஆந்தையும் முக்கியமான ஒன்று.
மேலை நாடுகளில் ஆந்தை, ஞானத்தின் சின்னமாகவும் அறிவின் சின்னமாகவும் பார்க்கின்றனர். இதனால் தான் பல கல்வி நிறுவனங்கள் ஆந்தையின் சின்னத்தை வைத்திருக்கிறார்கள். நம் நாட்டில் அதை கெட்ட ஒரு சகுனத்தின் குறியீடாக பார்க்கப்படுகிறது.
கிராமப்புறங்களில் ஆந்தை அலறினால் “யாரோ இறக்கப் போகிறார்கள்” என்று பேசிக் கொள்வது வழக்கம்.
மற்ற பறவைகள் பறக்கும் போது படபடவென ஓசை எழுப்பும். ஆனால் ஆந்தையின் இறக்கைகள் மிக மென்மையாக இருப்பதால் பறக்கும்போது ஒலியை எழுப்பாது.
இறக்கைகள் மிருதுவாக இருப்பதால் மழையின் போது பறக்க முடியாமல் போய்விடும். ஆந்தை தனது கழுத்தை 359 டிகிரி அளவுக்கு சுழற்றும் தன்மையுடையது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. பல ஆந்தைகள் முழு இருட்டிலும் ஒளியை கவனித்து வேட்டையாடக் கூடியவை.
ஆந்தைகள் தனது இறக்கைகளை பயன்படுத்தி தண்ணீரில் கடினமாக நீந்தக் கூடிய தன்மை கொண்டது. பெரும்பாலான ஆந்தைகள் பகலிலும் விழித்திருந்து இரையை தேடும்.
கியூபாவில் வசித்துவந்த 3.6 அடி உயரம் கொண்ட உலகின் மிகப்பெரிய ஆந்தை கியூபா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.
மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கொடிய வகை ஆந்தைகள் வருடத்திற்கு 6000 எலிகளை உண்ணும். இதனால் விவசாயிகளுக்கு எலித் தொல்லை இருக்காது.
ஆந்தை கால்களில் உள்ள நீளமான வலுவான நகங்களை பயன்படுத்தி இறையை வேட்டையாடி சாப்பிடும். பனி ஆந்தைகள் 3000 மைல் தூரம் வரை நிற்காமல் பறக்கும் திறமை கொண்டது.
நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் தனிப்பட்ட சிறப்பியல்புகளை வழங்கியுள்ளான் அவற்றில் ஒன்றுதான் நபி (ஸல்) அவர்களின் புனித கண்களின் சிறப்புகள்
இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:
"நான் கிப்லாத் திசையில் மட்டும் பார்க்கிறேன் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அடக்கமாக இருப்பதும் உங்களின் ருகூவும் எனக்குத் தெரியாமலிருப்பதில்லை. நிச்சயமாக என்னுடைய முதுகுக்குப் பின்புறம் உங்களை நான் பார்க்கிறேன்."
ஹழ்ரத் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) புகாரி - 418
இந்த சிறப்பியல்பை அல்லாஹ் ஆந்தைக்கு வழங்கியுள்ளான்
- ஆந்தைக்கு முன்பக்கம் உள்ள இரண்டு கண்களைப் போன்றே தலையின் பின்புறமும் இரண்டு கண்கள் உண்டு. ஆனால், அதில் உண்மையான கண்கள் இருக்காது. எதிரிகள் தனக்குப் பின்னாலிருந்து தாக்காமல் தப்பிப்பதற்காகத்தான் அந்தப் பொய்க் கண்களைக் கொண்டிருக்கும். இதனால் எதிரிகள் தாக்கி ஆந்தை இறப்பதில்லை.
ஆந்தைகளைப் பார்க்கும் ஒவ்வொருவருக்குமே இந்தக் கேள்வி எழும். அவை ஓசையின்றிப் பறக்கும் என்று அனைவருக்குமே தெரியும். ஆனால், அவற்றால் எப்படி ஓசையின்றிப் பறக்க முடிகிறது? முழங்கை அளவுக்குப் பெரிதாக இருக்கும் ஒரு பறவை, இறக்கை அடிக்கும் சத்தம்கூட இல்லாமல் எப்படிப் பறக்கின்றது?
டர்பைன் பிளேடுகள், விமான இறக்கைகள் போன்றவற்றை இதைப் போலவே ஓசையின்றிச் செயல்படும் வகையில் வடிவமைக்க இந்தக் கேள்விக்கான விடை தெரியவேண்டும். அப்படிக் கண்டுபிடிக்கப்படுபவை மூலம், சராசரியாகக் கேட்கும் ஓசையில் 10 டெசிபெல் வரை குறைக்கமுடியும்.
1934-ம் ஆண்டு ஆங்கிலேய விமானியும் பறவை ரசிகருமான ராபர்ட் ரூல் கிரஹாம் என்பவர், ஆந்தைகளின் இறக்கையிலுள்ள மூன்று வடிவங்களை அவற்றின் ஓசையின்மைக்குக் காரணமாக முன்வைத்தார். ராபர்ட் ரூல் கிரஹாம் பறவை ரசிகராக இருந்தது மட்டுமின்றி, ஏரோனாட்டிகல் பொறியாளராகவும் இருந்ததால் அவருக்கு அதுகுறித்த ஓர் அடிப்படையைக் கட்டமைக்க முடிந்தது.
அவர் முதலில் குறிப்பிட்டது, ஆந்தையின் இறக்கையில் இருக்கக்கூடிய சீப்பு போன்ற அமைப்பு. இறக்கையின் இருபுறத்திலும் நுனியிலிருந்து உடலை ஒட்டியுள்ள பகுதி வரை அந்த அமைப்பு நீள்கின்றது.
இரண்டாவதாக, ஆந்தையின் இறக்கை முழுவதுமே வெல்வெட் போன்ற இறகுகளால் மூடப்பட்டிருந்ததைக் கண்டார்.
இறுதியாக, இறக்கையின் நுனியிலுள்ள இறகுகள் கூர்மையான விளிம்பை உருவாக்குகின்றன.
இன்றும்கூட, பல்வேறு ஆய்வாளர்கள் இந்த மூன்றும் ஏதோவொரு வகையில் அவற்றின் ஓசையின்மைக்கு அடிப்படைக் காரணமாக இருப்பதாக ஒப்புக்கொள்கின்றனர்.
ஆனால், ஆந்தையிடம் இன்னும் பல நுட்பமான வழிமுறைகள்கூட இருக்கலாம். அதன் ஓசையின்மையைத் தொழில்நுட்பங்களில் பயன்படுத்த வேண்டுமெனில், முதலில் ஓசை எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.
தரையிரங்கும் விமானத்தைப் பொறுத்தவரை, பெரும்பான்மைச் சத்தம் விமானத்திற்குக் கீழே சுழலும் காற்றினால்தான் ஏற்படுகின்றது. குறிப்பாக, இறக்கைகளுடைய நுனியில் அந்தச் சத்தம் வருகின்றது. இந்த ஓசையைக் குறைக்க ஆந்தையின் இறக்கைச் செயல்பாடுகளைப் பின்பற்றி விமான இறக்கையை வடிவமைக்கலாம்.
ஆந்தைகள் பறக்கும்போது அவற்றுடைய இறக்கைகள் 1,600 ஹெர்ட்ஸ் அதிர்வெண்ணுக்கும் அதிகமாக உள்ள ஓசைகளைக் கழித்துவிடுகின்றன. குறிப்பிட்ட அளவுக்கு மேலிருக்கும் ஓசையைத் தன்னுடைய உடலமைப்பின் மூலம் அவை கட்டுப்படுத்திக்கொள்வதால், இரையைத் துல்லியமாக வேட்டையாட முடிகின்றது. அவை எதிர்பார்க்காத நேரத்தில் தாக்குதல் தொடுக்க முடிகின்றது. இது அவற்றுடைய பரிணாமத்தின் ஒரு பகுதி.
அதேநேரம், ஏரோனாட்டிகல் பார்வையில் மட்டுமே அதைப் பார்ப்பதன்மூலம் அதே முறையை விமானங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று பொறியாளர்கள் கருதுகின்றனர். ஆனால், அதன்

இறக்கையிலுள்ள இயற்பியலை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கிளார்க் போன்ற பறவை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
ஆந்தைகள் பறக்கும்போது அவற்றின் இறக்கைகள் உரசுகின்றன. மேலும் கீழுமாகச் செயல்படுகின்றன. இதை விமான இறக்கைகளில் செய்யமுடியாது. பறப்பதிலுள்ள அடிப்படையான அம்சம்தான், மேலும் கீழுமாக இறக்கைகளை அடிப்பது. திசை மாறும்போது அவை ஒன்றோடு ஒன்று உரசிக்கொள்கின்றன. அப்போது ஓசை எழுகின்றது. அந்த ஓசை, காற்றோடு மோதுவதால் ஏற்படுவதல்ல. இறக்கைகள் உரசுவதால் ஏற்படுகிறது.
ஆந்தையின் வெல்வெட் இறகுகள் மற்றும் கூர்மையான நுனிப் பகுதி, இறக்கைகள் அடிக்கும்போது ஓசை ஏற்படாமல் இருக்க வழி செய்கின்றன. இந்த இடத்தில் ஆந்தைகள் பறக்கும்போது ஏன் ஓசை ஏற்படுவதில்லை என்ற கேள்வியைப் பறவை ஆய்வாளர் கிளார்க் சற்று திருப்பி மற்ற பறவைகள் ஏன் ஓசையெழுப்பிக்கொண்டே பறக்கின்றன என்று கேட்கிறார்.
பறவைகளுடைய உடலமைப்பிலுள்ள அதிசயமிக்க ஓர் அமைப்புதான் இறகுகள். அவை வெற்றிகரமாகப் பறக்கவும் இறகுகள் ஒரு முக்கியக் காரணம். இறகுகளால் உருவான இறக்கை இருப்பதால் மற்ற பறவைகளிடத்தில் ஓசை எழுகின்றது. ஒன்றையொன்று உரசும் சத்தம் நன்றாகவே கேட்கின்றது. ஆனால் ஆந்தைகள் அத்தகைய சத்தம் எழும்பாதவாறு தம்மைத் தகவமைத்துக் கொண்டன.
ஆந்தையும் பெண் குழந்தையும்

Rahmath Rajakumaran

நபி (ஸல்) அவர்களின் புனித கண்களின் சிறப்புகள்
இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:
"நான் கிப்லாத் திசையில் மட்டும் பார்க்கிறேன் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அடக்கமாக இருப்பதும் உங்களின் ருகூவும் எனக்குத் தெரியாமலிருப்பதில்லை. நிச்சயமாக என்னுடைய முதுகுக்குப் பின்புறம் உங்களை நான் பார்க்கிறேன்."
ஹழ்ரத் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) புகாரி - 41

பறவைகளின் உலகம் 15

வாத்தும் தாய்ப்பாசமும்



இந்திய வனத்துறை அதிகாரி சுதாராமன் ஐ.எஃப்.எஸ் தனது ட்விட்டர் பதிவின் வீடியோவில், மலைப்பள்ளத்தில் வாத்து ஒன்று தனது குஞ்சுகளுடன் இருக்கும்போது திடீரென கருமைநிறம் கொண்ட பெரிய மலைப்பாம்பு ஒன்று சரசரவென்று வாத்து இருக்கும் பொந்துக்குள் நுழைகிறது.

உடனே தாய் வாத்து கத்திக்கொண்டே 20 க்கு மேற்பட்ட தனது குஞ்சுகளை வெளியேற்றுகிறது. அதற்குள் பாம்பு முழுமையாக தாய் வாத்தை முழுமையாக உடம்பால் வளைத்து விடுகிறது.

குஞ்சுகள் அனைத்தும் வெளியில் பரிதவிப்புடன் பார்க்க, பாம்பிடம் சிக்கிக்கொண்ட தாய் வாத்து செய்வதறியாது சோகத்துடன் திகைக்கிறது.

பாம்பு தனது வாயை வாத்தின் முகத்திற்கு அருகே வரும்போது வீடியோ முடிகிறது. இந்த வீடியோவை பகிர்ந்து 'இயற்கை விதிகளை விட தாய்மையின் வலிமை அதிகம்' என்று பகிர்ந்திருக்கிறார், சுதா ராமன்

தன் குஞ்சுகளைக் காப்பாற்றிவிட்டு பாம்பிடம் மாட்டிக்கொண்ட தாய் வாத்து: பதற வைக்கும் வீடியோ

https://twitter.com/SudhaRa.../status/1319150476907081733...

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஓர் ஏழைப்பெண் தன்னுடைய இரு பெண்குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு என்னிடம் வந்தார். அவருக்கு நான் மூன்று பேரீச்சம் பழங்களைக் கொடுத்தேன். உடனே அவர் தம் குழந்தைகளில் ஆளுக்கொரு பேரீச்சம் பழத்தைக் கொடுத்துவிட்டு, ஒரு பேரீச்சம் பழத்தைச் சாப்பிடுவதற்காக வாயருகில் கொண்டுசென்றார்.

அந்த ஒரு பேரீச்சம் பழத்தையும் அக்குழந்தைகள் கேட்டனர். உடனே அப்பெண் தாம் சாப்பிட நாடியிருந்த அந்தப் பேரீச்சம் பழத்தை இரண்டாகப் பிட்டு அவ்விரு குழந்தைகளிடையே பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். அவருடைய நிலை என்னை ஆச்சரியப்படுத்தியது.

ஆகவே, அவர் செய்ததை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சொன்னேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவருடைய இச்செயலின் காரணத்தால் அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தைக் கடமையாக்கிவிட்டான்". அல்லது "அவரது இச்செயலின் காரணத்தால் அவரை நரகத்திலிருந்து விடுதலை செய்துவிட்டான்" என்று சொன்னார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 5126.

இந்தத் தாய்ப்பாசம் மட்டும் தாய்க்குள் விதைக்கப் படாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு தாயும் தன் குஞ்சை வீசியெறிந்து விட்டு அதைவிட்டும் அகன்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? இனப்பெருக்கம் ஆரம்பம் முதலே தடைபெற்றிருக்கும்!

உலகம் உருவானதும் தற்செயல், அதில் உயிரின் உருவாக்கமும் தற்செயல், உயிர்களிடையே விதைக்கப்பட்டுள்ள தாய்ப்பாசமும் தற்செயல் என்பன போன்ற அறிவுக்குப் பொருந்தாத வாதங்களுக்கு எப்படித்தான் இவர்கள் பகுத்தறிவுச் சாயம் பூசுகிறார்களோ தெரியவில்லை!

இறைவன் விதைத்ததே தாய்ப்பாசம்

ஆம், இறைவனின் உள்ளமையையும் தன் படைப்பினங்கள் மீது அவன் கொண்ட அளவிலாக் கருணையையும் பறைசாற்றுவதாக தாய்ப்பாசம் விளங்குகிறது. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய நம் இறைவனின் கருணையின் வெளிப்பாடே தாய்ப்பாசம் என்பது. இறைவன் விதைத்ததே தாய்ப்பாசம் என்பது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் அன்பை நூறு பாகங்களாகப் பங்கிட்டான். அவற்றில் தொண்ணூற்று ஒன்பது பாகங்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டான். (மீதியிருக்கும்) ஒன்றையே பூமியில் இறக்கினான்.

இந்த ஒரு பங்கினால்தான் படைப்பினங்கள் ஒன்றன் மீதொன்று பாசம் காட்டுகின்றன. எந்த அளவுக்கென்றால், மிதித்துவிடுவோமா என்ற அச்சத்தால் பிராணி தனது குட்டியைவிட்டுக் கால்குளம்பைத் தூக்கிக்கொள்கிறது.இதை நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி 5311)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:அன்பின் நூறு பாகங்களும் இறைவனுக்கே உரியவையாகும். அவற்றில் ஒன்றை மனிதன் ஜின்,மிருகங்கள், ஊர்வன ஆகியவற்றுக்கிடையே இறக்கினான்.

இந்த ஒரு பங்கினால்தான் அவை ஒன்றன் மீதொன்று பாசம் கொள்கின்றன; பரிவு காட்டுகின்றன. அதன் மூலம்தான் காட்டு விலங்குகூட தன் குட்டிமீது பாசம் காட்டுகிறது. (அவற்றில்) தொண்ணூற்று ஒன்பது பாகம் அன்பை இறைவன் ஒதுக்கி வைத்துள்ளான். அவற்றின் மூலம் மறுமை நாளில் தன் (நல்ல) அடியார்களுக்கு (விஷேசமாக) அன்பு காட்டுவான்.இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி5312)

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 16

(அபாபீல் பறவைகளும் ஸிஜ்ஜில் கற்களும்)



மக்கா புனித பூமி என்பதை அறிவீர்கள். அதற்கு 'உம்முல் குரா" நகரங்களின் தாய்- என்ற பெயரும் உண்டு. அங்குதான் 'பைதுல் அதீக்" எனப்படும் பழமையான ஆலயமான 'கஃபா" உள்ளது. கஃபாவை மக்கள் பெரிதும் மதித்து வந்தனர்.

யமனில் ''ஆப்ரஹா" என்றொரு மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் 'ஸன்ஆ"வில் மிகப் பிரம்மாண்டமான கலை நுணுக்கம் மிக்க ஒரு ஆலயத்தைக் கட்டினான். மக்கள் கஃபாவை விட்டு விட்டு இந்த ஆலயத்திற்கு வருவார்கள் என எதிர்பார்த்தான். அவனது எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்தது.

இதே வேளை, இந்த ஆப்ரஹாவிடம் ஆத்திரமுற்ற சிலர் அவன் காட்டிய ஆலயத்தினுள் மலஜலம் கழித்து விட்டனர். இதனால் ஆத்திரமுற்ற ஆப்ரஹா மன்னன் கஃபாவைத் துண்டு துண்டாகத் தகர்த்துவிட்டால், அதன் பின்னர் தனது ஆலயத்தை நோக்கித்தான் மக்கள் வர வேண்டும் என்று கணக்குப் போட்டான்.

ஒரு நாள் அவன் மிகப் பெரும் யானைப் படையுடன் மக்கா நோக்கிப் படையெடுத்தான். அவன் கஃபாவிற்கு அருகில் வந்த போது அங்குள்ள கால் நடைகளைக் கைப்பற்றிக் கொண்டான். நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களது 200 ஒட்டகங்களையும் பிடித்துக் கொண்டான்.

கஃபா அருகில் வந்த 'ஆப்ரஹா" மக்காவாசிகளுக்கு ஒரு செய்தி அனுப்பினான். 'எனக்கு உங்களுடன் போர் செய்யும் எண்ணம் இல்லை. ஆனால் கஃபாவை உடைப்பது மட்டுமே எனது நோக்கம்" என்பதுதான் அந்தச் செய்தி!

மக்காவின் தலைவர் அப்துல் முத்தலிப் மன்னன் ஆப்ரஹாவைச் சந்தித்தார். மன்னனும் அவரது அழகிய தோற்றம், வயது என்பவற்றைக் கண்ணுற்று அவரை மதித்தான்.

அவர் மன்னனிடம், 'உங்கள் தளபதிகள் என் 200 ஒட்டகங்களை எடுத்துக் கொண்டார்கள். அதை திருப்பித் தாருங்கள்" என்றார். இது கேட்ட மன்னன், 'உங்களது ஆலயத்தை நான் உடைக்க வந்துள்ளேன். நீங்கள் அது பற்றிப் பேசுவீர்கள் என நினைத்தேன் ஆனால், நீங்கள் உங்கள் ஒட்டகத்தைப் பற்றிப் பேசுகின்றீர்களே" என ஆச்சரியத்துடன் கேட்டான்

அதற்கு அப்துல் முத்தலிப், 'ஒட்டகத்திற்கு உரிமையாளன் நான். எனவே, அது பற்றி நான் பேசுகின்றேன். இந்த ஆலயத்திற்கு உரிமையாளனான ஒரு இறைவன் இருக்கின்றான். அதை அவன் பார்த்துக் கொள்வான்" என்று கூறினார்.

அப்துல் முத்தலிபிடம் அவருக்குச் சொந்தமான ஒட்டகம் கொடுக்கப்பட்டது. அவர் கஃபாவுக்கு வந்து அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். இந்தப் படையை எதிர் கொள்ள நம்மிடம் பலம் இல்லையே என வருந்தி அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடினார்கள். பின்னர் மலை உச்சிகளுக்குச் சென்றுவிடுமாறு மக்களுக்கு அப்துல் முத்தலிப் உத்தரவிட்டார்கள்.

அவன் படையில் 13 யானைகள் இருந்தன. அவன் யமனிலிருந்து கிளம்பி 'முகம்மஸ்' என்ற இடத்தில் தனது படையை ஒழுங்குபடுத்தி யானைகளைத் தயார் செய்து மக்காவினுள் நுழைய ஆயத்தமானான்.

மினா மற்றும் முஜ்தலிஃபாவுக்கு இடையே உள்ள 'முஹஸ்ஸிர்' என்ற பள்ளத்தாக்கை அடைந்ததும் அவன் வாகனித்த தலைமை மஹ்மூது யானை திடீரெனதரையில் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டது.

அதனைத் தெற்கு, வடக்கு மற்றும் கிழக்குத் திசை நோக்கி செலுத்தப்பட்டால், விரைந்து சென்றது.யமன் நோக்கிச் செல்லத் திருப்பினால் கூட செல்லத் தயாரானது. ஆனால் கஃபாவை நோக்கி நகர்த்தினால் மட்டும் படுத்துக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதை அசைக்க முடியவில்லை.

அப்போது தான் பல்லாயிரக்கணக்கான 'அபாபீல்" எனும் சிறு பறவைக் கூட்டம் வந்தது. அவற்றின் கால்களிலும் அதன் அலகுகளிலும் " ஸிஜ்ஜில்" என்ற சிறிய கற்கள் இருந்தன. அவை அவற்றை அந்தப் படை மீது வீசின. அப்பறவைகள் உதிர்த்த கற்களைக் கொண்டு யானைகள் மீதும், படை வீரர்கள் மீதும் பட்டு அவர்களை உடுருவித் துளைத்து சென்று மடியச் செய்தன,

இந்த அத்தியாயத்தில் "அபாபீல்' பறவைகளை அனுப்பியதாகச் சொல்கின்றானே ஒழிய அது தற்போது இந்த பூமியில் வாழ்ந்து வருகின்றது என்பதற்கு எந்த ஆதாரமும் திருக்குர் ஆனிலோ நபிகளாரின் பொன்மொழிகளிலோ கிடைக்கவில்லை என்பதாக திருக்குர்ஆன் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் .

சிலர் அது கரிய நிற உடலும், பச்சை நிறக் கழுத்தும், மஞ்சள் நிறக் சொண்டும் உடையனவாயிருந்தன என்று சொல்லப்பட்டாலும் அதுதான் அபாபீல் என்பது குறித்து கருத்து வேறுபாடு நிறைய உண்டு .

"ஷிஜ்ஜில்" கற்களில் சில ஹஜ்ரத் அலீயின் சகோதரி உம்முஹானி வீட்டில் இருந்ததை பார்த்ததாக இபனு அப்பாஸ் (ரலி) அறிவித்தார்கள்.

அந்தக் கற்களால் அடிப்பட்டவர்கள் செத்து மடிந்தனர். ஆணவத்துடன் வந்த யானைப் படை சிதறுண்டு போனது. அந்தப் படையுடன் மன்னன் ஆப்ரஹாவும் அழிக்கப்பட்டான். இந்த நிகழ்வால் கஃபாவின் மதிப்பும், மரியாதையும் உயர்ந்தது.

உலக அழிவு நெருங்கும் போது இந்தக் கஃபா உடைக்கப்படும். யானைப் படை அழிக்கப்பட்ட அந்த ஆண்டு 'ஆமுல் பீல்" -யானை வருடம்- என்று கூறப்படுகிறது. இந்த நிகழ்வு நடந்த ஆண்டில்தான் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

அழிக்கப்பட்ட இந்த யானைப் படை பற்றி சூறா 'அல் பீல்" – யானை வருடம் – எனும் 105வது அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

'யானைப் படையினரை உமது இரட்சகன் எப்படி (அழிய)ச் செய்தான் என்பதை (நபியே!) நீர் அறியவில்லையா?"

'அவர்களது சூழ்ச்சியை அவன் வீணாக்கி விடவில்லையா?"

'அவர்கள் மீது பறவைகளைக் கூட்டம் கூட்டமாக அவன் அனுப்பினான்."

'சூடேற்றப்பட்ட கற்களை அவை அவர்கள் மீது எறிந்தன."

'அதனால், மெல்லப்பட்ட வைக்கோலைப் போன்று அவன் அவர்களை ஆக்கி விட்டான். "குர்ஆன் (105:1-5)

1400 ஆண்டுகள் பழமையான ஸிஜ்ஜில் கல்லை 15 மில்லியன் சவுதி ரியாலுக்கு விற்க மறுத்த சவுதி

இது எவ்வாறு புனிதமானது? செஜில் (Sejil) கல்லைத் தானே கண்டுபிடித்ததாக சலே மஸ்பர் அல் காம்டி (Saleh Musfer Al Gamdi) கூறுகிறார். யேமனின் போர்வீரரான ஆபிரகாவின் (Abraha) படையின் மீது வீசுவதற்காக, எல்லாம் வல்ல அல்லாஹ் சுபஹானஹு தஆலா (அபாபீல்) எனும் பறவை கூட்டத்துடன் அனுப்பிய கல்.

ஏமன் எல்லைக்கு அருகிலுள்ள மலைகளில் வேட்டைப் பயணத்தில் இருந்தபோது இளைஞர் ஒருவர் அந்தக் கல்லைக் கண்டுபிடித்தார்.

இது புனித குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ளது: அவர் கல்லைக் கண்டுபிடித்தவுடன் அது புனித குர்ஆனில் கூறப்பட்டுள்ள கல் என்பதை தாம் அறிந்ததாக அவர் கூறுகிறார். இந்த கல் சரியாக 131 கிராம் எடையுள்ளதாகவும், இது சூரா அல்-பிலில் (Surah Al-Fil) உள்ள குர்ஆன் வசனங்களின் சொற்களின் எண்ணிக்கையை சமமாகக் குறிக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

இப்போது ஜார்ப் பள்ளத்தாக்கு (Jarb valley) என்று அழைக்கப்படும் க்ரீன்வாடி (Green Wadi)யில் கல்லைக் கண்டுபிடித்ததாக காம்டி கூறுகிறார், புனித காபாவை நோக்கிச் செல்வதற்கு முன்பு ஆபிரகாவும் (Abraha), அவரது படைகளும் ஓய்வெடுக்க முடிவு செய்த இடம்.

கல்லின் மதிப்பு 4 மில்லியன் டாலர்: இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தின் காரணமாகவே, காம்டி (Gamdi) கண்டுபிடித்த அந்த கல்லுக்கு 4 மில்லியன் டாலர் (15 மில்லியன் சவுதி ரியால்) விலை நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் அவர் அதை விற்க மறுத்துவிட்டார். வல்லுநர்கள் இந்த கல் கிட்டத்தட்ட 1,442 ஆண்டுகளுக்கு முந்தையது என்று கூறுகிறார்கள்.

காம்டிக்கு தொல்பொருள் ஆய்வில் (archaeologist) உள்ள தனது நண்பர் மூலம் இந்த சலுகை மற்றும் தகவல்கள் கிடைத்தன. பஹாவில் (Baha) உள்ள சுற்றுலாத் துறையும் காம்டியிடம் அந்த கல்லை தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டது, ஆனால் அவர் அதை மறுத்துவிட்டார். அவர் தனது தந்தை மற்றும் தாத்தாவைப் பற்றி கனவில் கண்ட பிறகு இந்தக் கல்லைக் கண்டுபிடித்ததாக அவர் கூறினார், மேலும், அதை இன்னும் யாருக்கும் கொடுக்கும் எந்த வித நோக்கமும் தனக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.


இது உண்மையில் அந்தக் கல் தானா? சரி, உங்களுக்கு அதில் பல கேள்விகள் எழலாம். ஒரு பறவை 131 கிராம் கல்லை அதன் வாயில் எவ்வாறு தூக்கி செல்லும்? ஆனால், மஸ்ஜித் அல் ஹராமைப் பாதுகாக்க அல்லாஹ் எப்படி அபாபீலின் கூட்டத்தை அனுப்பினான் என்ற முழுமையான நிகழ்வை நீங்கள் படித்தால், அது ஒரு அதிசயம் புரியும்.

சிறிய கற்களால் யானைகளின் படையை அழிக்க முடியும் என்று நீங்கள் நம்பினால், அபாபீல் பறவைகள் 131 கிராம் கனமான கற்களை சுமந்து செல்வதும் சாத்தியமே! என்கிறது

ஆதாரம்: Lifeinsaudiarabia.net

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 17
(ஹுத் ஹுத் பறவை)



ஹுத் ஹுத் என்றதுமே இப்பறவையைப் பற்றி அல்குர்ஆனில் வந்துள்ள சம்பவமும் உங்கள் ஞாபகத்திற்கு வந்திருக்கும். சூரா அந்நம்லில் சுலைமான் நபி அவர்களின் சரித்திரத்தைப் படிக்கும் போது ஹுத் ஹுத் என்ற பெயரை கண்டு கொள்ளலாம். இப்பறவைக்கு அல்லாஹ் கொடுத்துள்ள புத்திக்கூர்மையும் அதன் வாழ்க்கை முறையையும் இப்பதிவில் பார்ப்போம் .
ஹுத் ஹுத் என்ற பெயரிலே இப்பறவை சுலைமான் நபி அவர்கள் காலத்திலிருந்தே அழைக்கப்பட்டு வருகிறது. திருக்குர்ஆனில் இடம் பெற்றிருப்பதிலிருந்து சுமார் 1400 ஆண்டுகளாக இப்பெயர் நிலைத்திருப்பதும் ஓர் அற்புதம்தான்.

ஆங்கிலத்தில் Hoopoe என்றும் தமிழில் கொண்டலாத்தி என்றும் அழைக்கப்படுகின்றது. இவை மரங்கொத்தி, மீன்கொத்தி வகையைச் சேர்ந்தவை என்றாலும், அவற்றில் இருந்து வேறுபட்டவை.
ஆங்கிலத்தில் Hoopoe என்ற இப்பெயர் வரக் காரணம் அதன் குரல் எழுப்பும் சப்தம்தான். இவை சப்தமிடும் போது ஹுப்..ஹுப்.. என்ற ஒலியே வெளிப்படும் இதனாலேயே பெயர் வழங்கப்பட்டுள்ளது. தமிழில் கொண்டலாத்தி என்பதற்கு காரணம் அது தன் தலை மேல் இருக்கும் கொண்டையை விரித்து நடனமாடுவதாகும் .
ஹுத் ஹுத் பறவைகள் ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க கண்டங்களில் வாழ்கின்றன. இந்தியா மற்றும் இலங்கையில் இவற்றை காணலாம்.
பாலத்தின் நாட்டில் சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டுள்ள இஸ்ரேலின் தேசிய பறவையும் இதுதான்.
ஆறு,குளம்,குட்டை , வயல், பள்ளத்தாக்கு போன்ற பிரதேசங்களில்தான் இவை வாசம் செய்கின்றன. காரணம் இந்த இடங்களில் தான் இவற்றுக்கு உணவைப் பெற்றுக் கொள்வது இலகுவாக இருக்கும்.
மரங்களை தன் அழகினால் துளையிட்டு பொந்துகள் செய்து அவற்றினுள் கூடுகளை அமைத்து வாழ்கின்றன.

ஹுத் ஹுத் பறவைகளின் கூடுகள் எப்போதும் குப்பை கூளங்களால் நிறைந்திருக்கும். இவற்றின் கூடு துர்நாற்றம் வீசக்கூடியதாகவே இருக்கும்.ஏனெனில் இவை குப்பை பிரியர்கள்.
ஹுத் ஹுத் பறவைகள் பார்ப்பதற்கு மிகவும் அழகானவை. பழுப்பு நிற உடலும் பளிச்சென்ற கறுப்பு வெள்ளை சாம்பல் இறகுகளும் நீண்ட சற்று கீழ் நோக்கி வளைந்த அலகும் கொண்டது.
இதன் விசேஷ அம்சம் தலையில் இருக்கும் கிரீடம் அல்லது விசிறி போன்ற சிறகுதான். தலையின் மேலுள்ள சிறகுகளை அவ்வப்போது சிலுப்பி விறைப்பாக நிற்கவைப்பதால், அவை கொண்டை போன்ற தோற்றத்தை அளிக்கும். அந்நேரத்தில் பெண் துணையிடம் இனப்பெருக்கம் செய்யும். எனினும் எல்லா நேரத்திலும் அவை விரிந்து காணப்படுவதில்லை அப்படி கொண்டையோடு காணும் போதெல்லாம் செவ்விந்தியனின் தலையரங்கம் போன்றே இருக்கும்.

நபி சுலைமான் (அலை) அவர்கள் எங்கு சென்றாலும் இதையும் கூடவே எடுத்துச் செல்வார். இது பூமிக்கு அடியில் தண்ணீர் எங்கு ஓடுகிறது என்பதை சுட்டிக்காட்டும் திறன் படைத்தது.

இதன் தலையில் நீளமான ஊசி போன்ற கொண்டை உள்ளது. பெரும்பாலும் பாலைவனப் பயணத்தின்போது, தண்ணீர் இருக்கும் இடத்தின் மீது தனது ஊசிக் கொண்டையை குடைபோல விரித்து அழகாக ஆடும்.அங்கு தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்து, குழி தோண்டி தண்ணீர் எடுத்து தாகம் தீர்ப்பார்கள்.அதனால் தமிழில் கொண்டலாத்திப் பறவை எனப்படுகிறது.

சுலைமான் (அலை) அவர்களின் சரித்திரத்தில் முக்கிய இடம் பிடித்த பறவைதான் இந்த ஹுத்ஹுத் பறவை . சுலைமான் நபியவர்கள் தமது ஆட்சிக்கு கீழ் இருந்த மனிதர்கள், ஜின்கள். பறவைகள், விலங்குகளுடான ஒரு கூட்டத்தை ஒன்று கூட்டினார் அந்த இடத்தில் ஹுத் ஹுத் பறவை இருக்கவில்லை

وَتَفَقَّدَ الطَّيْرَ فَقَالَ مَا لِىَ لَاۤ اَرَى الْهُدْهُدَ اَمْ كَانَ مِنَ الْغَآٮِٕبِيْنَ

அவர் பறவைகளைப் பரிசீலனை செய்தபொழுது "என்ன காரணம்? "ஹுத்ஹுத்" என்னும் பறவையை நான் காணவில்லையே! (அது பறவைகளின் நெருக்கடியில்) மறைந்திருக்கின்றதா? (அல்லது என் அனுமதியின்றி எங்கேனும் சென்றுவிட்டதா?)
(அல்குர்ஆன் : 27:20)

فَمَكَثَ غَيْرَ بَعِيْدٍ فَقَالَ اَحَطْتُّ بِمَا لَمْ تُحِطْ بِهٖ وَ جِئْتُكَ مِنْ سَبَاٍ بِنَبَاٍ يَّقِيْنٍ

(இவ்வாறு கூறி) அதிக நேரமாகவில்லை. (அதற்குள் ஹுத்ஹுத் என்னும் பறவை அவர் முன் தோன்றி) "நீங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்துகொண்டு "ஸபா"வைப் பற்றி நிச்சயமான (உண்மைச்) செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்.
(அல்குர்ஆன் : 27:22)

اِنِّىْ وَجَدْتُّ امْرَاَةً تَمْلِكُهُمْ وَاُوْتِيَتْ مِنْ كُلِّ شَىْءٍ وَّلَهَا عَرْشٌ عَظِيْمٌ

“நிச்சயமாக அ(த் தேசத்த)வர்களை ஒரு பெண் ஆட்சி புரிவதை நான் கண்டேன்; இன்னும், அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது; மகத்தான ஓர் அரியாசனமும் அவளுக்கு இருக்கிறது. (அல்குர்ஆன் : 27:23)

وَجَدْتُّهَا وَقَوْمَهَا يَسْجُدُوْنَ لِلشَّمْسِ مِنْ دُوْنِ اللّٰهِ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ فَصَدَّهُمْ عَنِ السَّبِيْلِ فَهُمْ لَا يَهْتَدُوْنَۙ

“அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை நான் கண்டேன்; அவர்களுடைய (இத்தவறான) செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான்; ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை.
(அல்குர்ஆன் : 27:24)

மேற்கூறிய சம்பவத்திலிருந்து முக்கியமான சில விஷயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த அத்தியாயத்தில் வரும் எறும்பும் ஹுத்ஹுத் பறவையும் ஏனைய விலங்குகளில் இருந்து வித்தியாசமான அற்புதங்கள் எதனையும் பெற்றவை அல்ல . அவை பொதுவான உயிரினங்கள்தான்.
அப்படி என்றால் அனைத்து உயிரினங்களும் இவைபோன்ற புத்திக்கூர்மை உண்டு என்பதை இதிலிருந்து விளங்கலாம் இது ஹுத் ஹுத் பறவையின் அபார அறிவை பாருங்கள்.

1) தான் ஸபா நாட்டிலிருந்து வருவதாகக் கூறியது அப்படி என்றால் இடங்களையும் அவற்றின் பெயர்களையும் அறியும் ஆற்றல் உயிரினங்களுக்கு உண்டு
2) உலகத்தையே ஆட்சி செய்த சுலைமான் நபியிடம் நீங்கள் அதிகார ஒரு செய்தியை கொண்டு வந்துள்ளேன் என்று கூறியது அப்படியானால் ஆறறிவுள்ள மனிதனுக்கு தெரியாத விஷயங்களும் இந்த உயிரினங்களுக்கு தெரியும்
3) ஒரு பெண்ணை கண்டேன் என்று கூறியது அப்படி ஆனால் மனிதர்களில் உள்ள ஆண்-பெண் வேறுபாடுகளைப் பற்றியும் அரசன் யார் அடிமை யார் என்பது பற்றியும் தன் எஜமான் யார் என்பது பற்றியும் சைத்தானைப் பற்றியும் கூட அவற்றுக்குத் தெரியும் .
அந்த எறும்பு கூட சுலைமான் நபியும் அவரது படையும் அடையாளம் கண்டுகொண்டு உள்ளது இதற்கு சான்று
4)அவற்றுக்கு என்றும் தொடர்பு மேற்கொள்வதற்கான மொழிகளும் காணப்படுகின்றன.
5) எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். அவனுக்கு இணை வைக்கக் கூடாது. இணை
வைப்பது பாவம் , வழிகேடு என்பது பற்றியெல்லாம் இந்த உயிரினங்களுக்கு நன்கு தெரிகிறது.
ஆக சுலைமான் நபியுடன் பேசிய எறும்பைப் போன்றும், நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுடன் உரையாடிய விலங்கினை போன்றும் நம்மைச் சூழ இருக்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் உணர்வும், அறிவும், பேச்சாற்றலும் இருக்கின்றது. நபிமார்களால் அவற்றை அறிய முடிகிறது. ஆனால் நம்மால் அவற்றை முழுமையாக அறிய முடியவில்லை

எனவே உயிரினங்கள் மீது அன்பு காட்ட வேண்டும் மதித்து நடக்க வேண்டும் அதையும் நம்மைப் போன்ற ஒரு சமூகம்தான்.
"பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இரு இறக்கைகளால் பறந்து செல்லும் பறவைகளும் உங்களைப் போன்ற இனங்களேயாகும் (குர்ஆன் 6:38)

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 18

(பென்குயின் : திருமணமும் உண்டு , மணமுறிவும் உண்டு)



ஒரு அரிசி மூட்டையைத் தூக்கி நிறுத்தி வைத்தது போல இருக்கும் வெயிட்டான பறவை. பறவையினத்தை சார்ந்த இந்த பென்குயின் பறவைகளால் பறக்கமுடியாது. ஆனால் நீந்த முடியும் . தண்ணீருக்குள் பறக்கும் பறவைகள். நீங்கள் பார்த்தால் புரியும் அவைகள் ஆகாயப் பறவைகள் போல ஆழ்கடல் பறவைகள் . மிகவும் கடுமையான குளிர் பிரதேசங்களில் வசிக்கும் இவை மிகவும் சாதுவானவை. பனிப்பாறைகள் நிறைந்த, துருவ பகுதியில் மட்டுமே இவைகள் வாழும். பெரிய பனிப்பாறைகள் மிதக்கும் கடலில், இவைகள் குதித்து விளையாடும்.

தண்ணீரில் மூழ்கி மீன்களை பிடித்து சாப்பிடும்.
இவை நல்ல தண்ணீரைக் குடிக்காது. கடல் நீரை மட்டுமே குடிக்கும். இதன் உடலில் உள்ள ஒரு சுரப்பியின் மூலம் தண்ணீரில் உள்ள உப்பை பிரித்து தனியே வெளியேற்றிவிடும்.
பென்குயின் கடற்கரையில் உட்கார்ந்திருக்கும் போது முகமூடி போட்ட மனிதன் போல இருக்கும். இதற்கு குட்டை கழுத்து, கனத்த உடம்பு. வால் கொஞ்சம் மட்டும் உண்டு. இதன் உடல் முழுவதும் தண்ணீர் புகாத வாட்டர் புரூப் (Water Proof) சிறகுகள் உள்ளன. கடும் குளிரையும், மழையையும் சமாளிக்க மூன்று அடுக்குச் சிறகுகள் இதன் உடம்பில் இருக்கும்.

பென்குயின் உடம்பில் தினசரி 150 கிராம் சிறகுகள் வரை உதிர்ந்து விடும். ஆனால், 12 நாட்களில் புதுச்சிறகுகள் முளைத்து விடும். தன் உடலில் மொத்தம் 2 கிலோ சிறகுகளை போர்த்திக்கொண்டு, கடும் குளிரை இதமாக சமாளித்துவிடும் பென்குயின்.
இதற்கு பிடித்த உணவு கடல்மீன்கள்தான். பற்கள் கிடையாது. முதுகெலும்பு மற்றும் சதையின் உதவியுடனே மீன்களை உண்கின்றன. கடலில் டைவ் அடித்து வெகு ஆழத்துக்குச் சென்று வெரைட்டியான மீன்களை ஆசை தீர துரத்திப் பிடித்து லபக், லபக்கென்று சாப்பிடும். கடலில் 200 மீட்டருக்குக் கீழ் சர்வசாதாரணமாக பென்குயின்கள் நீச்சல் அடிக்கும்.

ஐஸ் பாறைகளைக் கண்டு விட்டால், காலால் இவை நடக்காது. வயிற்றால் வழுக்கியபடி படுவேகத்தில் ஸ்கேட்டிங் செய்யும். பென்குயின்கள் நிலத்தில் எதையும் சாப்பிடாது. பிரேக்பாஸ்ட், லன்ச், டின்னர் எல்லாம் கடலில்தான்.
சில நேரங்களில் இரை தேடிக் கடலில் குதிக்கும். பென்குயின்கள் பல நாட்களாக கரைக்குத் திரும்பாமல் நீந்தும். அதிகம் நேரம் நீரிலேயே இருப்பதால் பென்குயின்கள் உடலில் சிறு அழுக்குகூட இருக்காது.

கூட்டத்தில் தங்களுக்கென்று ஜோடி ஆண்-பெண் இரு பென்குவின்களும் தேடுகின்றன. தேர்வு செய்கின்றன. இவைகளுக்குள் வலுவான இல்லற பிணைப்பு உள்ளது
எப்பொழுதும் மேக்கப் போட்ட நடிகை போல கிளாமராக இருக்கும். இந்த பிரெஷ் தோற்றத்தாலேயே அடிக்கடி காதலால் கவரப்பட்டு, நினைத்த போதெல்லாம் ஜோடி சேர்ந்து இனச் சேர்க்கை செய்து கொள்ளும். தனது காதல் மனைவியைத் தவிர பிற பென்குயின்களை ஒரு போதும் ஆண் பென்குயின் நாடுவதில்லை.

ஆண் பென்குயின்கள் பெண் பென்குவின்களுக்கு பரிசுகள் தருகிறது. அதாவது இனச் சேர்க்கைக்கு முன் அழகான கற்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து பரிசாக திருமண கொடையாக கொடுக்கும். இந்த கற்கள் முட்டைகளை அடைகாக்க பயன்படுத்தப்படும்

மாலை நேரம் வந்துவிட்டால் பென்குயின்களுக்கு குஷி பிறந்துவிடும். கடற்கரையில் காலார நடக்கும்போதே காதல் பிறந்துவிடும். காதலனும், காதலியும் எதிரெதிரே பார்த்தபடி நின்று கொள்ளும். நீண்ட நேர முத்த மழை நடக்கும். முத்தத்துக்குப் பின், இறக்கைகளை படபடவென்று அடித்துக் கொள்ளும். பிறகு, காதலியின் தலையை தன் சிறகுக்குள் மறைத்து இரண்டறக் கலக்கும் ஆண் பென்குயின். இணைவு முடியும்வரை டிரம்பெட் வாசிப்பது பேன்ற இசையை இரண்டு பென்குயின்களும் எழுப்பிக் கொண்டேயிருக்கும். அதை கேட்டு இணைவு நிகழ்வு நடக்கிறது என்று உணர்ந்து, மற்ற பென்குயின்கள் வேறு பக்கம் முகத்தைத் திரும்பிக்கொள்ளும். டிரம்பெட் இசை, இறக்கைகள் படபடவென அடிக்கும் சத்தம் இரண்டும் நின்றுவிட்டால் இணைவு முடிந்துவிட்டது என அர்த்தம்.
இப்படியே இனச்சேர்க்கை சுமார் 3 வாரங்கள் நீடிக்கும் இனச் சேர்க்கைகளின் போது ஆண் பெண் இருவரும் ஓரிடத்தில் அமர்ந்து அரவணைக்கின்றன அத்துடன் அவை நிஜமாலும் பாட்டும் பாடுகின்றன.

" காதலா காதலா காதலின் சாரலா...
தீயிலே தென்றலாய் வாழ்கிறேன் காதலா...
கண்களா தூண்டிலா கண்களா தூண்டிலா
மாறினேன் மீன்களா....'' (அது இந்த பாட்டு தானான்னு தெரியவில்லை)
வயிற்றில் முட்டை உருவாகி, டெலிவரி டைம் வந்ததும், கடற்கரையில் புதர்களும் மரங்களும் மண்டிய ஏரியாவில் பெண்குயின்கள் முட்டையிடுவதற்கு கூடும். இளம் பச்சை அல்லது வெள்ளை நிற முட்டைகள் இடும்.30 முதல் 60 நாட்கள் வரை அடைகாப்பு நடக்கும். கணவனுக்கும் இதில் பங்குண்டு. இரண்டும் பாதி பாதி நாட்கள் ஷிப்ட் முறையில் அடைகாக்கும்.
அந்த நாட்கள் முழுவதும் அன்ன ஆகாரம் சாப்பிடாது. பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டியிருந்தால், பென்குயின் தனது பாதச் சவ்வுகளுக்கு இடையில் முட்டையை வைத்தபடி அன்ன நடை நடந்து இடம் பெயரும். பென்குயின்களை பார்க்க ஆஸ்திரேலியாவின் சிட்னி கடற்கரையில் நிறைய டூரிஸ்ட்கள் குவிகிறார்கள்.

ஒரு வேளை தன் துணையை விட்டுவிட்டு மற்றொரு துணையை கண்டுபிடித்தால் , அவைகள் ஜோடியைப் பிரிந்து, அதுவும் காலம் தாழ்த்தி, பின் அவைகளுக்குள் முறையான மணமுறிவு செய்து கொள்கின்றன.
لِّلَّذِيْنَ يُؤْلُوْنَ مِنْ نِّسَآٮِٕهِمْ تَرَبُّصُ اَرْبَعَةِ اَشْهُرٍ‌ فَاِنْ فَآءُوْ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ
தங்கள் மனைவியருடன் கூடுவதில்லையென்று சத்தியம் செய்து கொண்டு (விலகி) இருப்பவர்களுக்கு நான்கு மாதத் தவணையுள்ளது; எனவே, (அதற்குள்) அவர்கள் மீண்டு(ம் சேர்ந்துக்) கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனாகவும், மிக்க கருணையுடையோனுமாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் : 2:226)
وَاِنْ عَزَمُوا الطَّلَاقَ فَاِنَّ اللّٰهَ سَمِيْعٌ عَلِيْمٌ
ஆனால், அவர்கள் (தவணைக்குள் சேராமல்) திருமண முறிவை உறுதிப்படுத்திக் கொண்டால், (அத்தவணைக்குப் பின் "தலாக்" விவாகரத்து ஏற்பட்டுவிடும்.) நிச்சயமாக அல்லாஹ் (அவர்களுடைய சத்தியத்தை) செவியுறுபவனாகவும், (அவர்கள் கருதிய "தலாக்"கை) நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் : 2:227)

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 18

மனிதர்களை இறாஞ்சிச் செல்லும் இராட்சதப் (யானைப்) பறவைகள்!



حُنَفَآءَ لِلّٰهِ غَيْرَ مُشْرِكِيْنَ بِهٖ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَكَاَنَّمَا خَرَّ مِنَ السَّمَآءِ فَتَخْطَفُهُ الطَّيْرُ اَوْ تَهْوِىْ بِهِ الرِّيْحُ فِىْ مَكَانٍ سَحِيْقٍ

அல்லாஹ்வுக்கு ஒருமுகப்பட்ட அடிமைகளாக திகழுங்கள்.அவனோடு எதனையும் இணை வைக்காதீர்கள். யாரேனும் அல்லாஹ்வுக்கு இணை வைப்பாராயின் அவர் வானத்திலிருந்து விழுந்து விட்டவரைப் போன்று ஆகிவிடுகின்றார். இனி பறவைகள் அவரை இராஞ்சிக் கொண்டு செல்லும் அல்லது காற்று அவரைத் தூக்கிச் சென்று ஏதேனும் அதலபாதாளத்தில் எறிந்து விடும். அங்கு அவர் சின்னாபின்னமாகிவிடுவார். குர்ஆன் (22::31)

இணைவைக்கும் செயலை செய்யும் ஒரு மனிதனின் நிலையை, ஒரு உதாரணம் மூலம் அல்லாஹ் விளக்குகின்றான். பிற படைப்பினங்களை கடவுளா வணங்குபவன் எந்த பிடிமானமும் இல்லாமல் வானத்திலிருந்து கீழே விழுந்து பறவைகளால் இழுத்துத் செல்லப்படும் பிணம் போன்றவன் என்று கூறுகிறான்.

அல்லாஹ் உதாரணமாக எதைச் சொன்னாலும் உண்மையல்லாததை ஒரு போதும் சொல்ல மாட்டான். இது அவனது சுன்னத் வழிமுறை. ஆனால் இன்று நாம் வாழும் உலகில், ஒரு மனிதனை இறாஞ்சிச் செல்லும் அளவிற்கு எந்தப் பறவையும் இல்லை.

மனித இனம் தோன்றுவதற்கு சுமார் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்பு இப்பூவுலகை ஆட்சி செய்தவைகள் இராட்சத டைனசராஸ் மிருகங்களும்,பறவைகளுமே. ஆனால் மனித இனம் தோன்றியதற்கு பிறகு பெரும் இராட்சதப் பறவைகள் இருந்ததாக புராணக் கதைகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.

இந்துக் கடவுளான விஷ்ணுவின் வாகனம் கருடன். மகாபாரதக் கதையில் வரும் கருடன் யானையையே தூக்கிச் செல்லும் வலிமை கொண்டது.

அரபு மொழியில் இதை “ரூக்’ பறவை என்று அழைக்கின்றனர். பறவைகளின் அரசன் என்ற பொருளில் பார்ஸி மொழியில் “ஷாரூக்”. “ஷா” என்றால் அரசன், ரூக் என்றால் பறவை, பட்சி, “பட்சிராஜா”. சிந்துபாத்தின் கடற்பயண கதைகளின் போது இராட்சத ரூக் பறவைகள் இரு முறை கப்பல்களை தாக்கி சேதப்படுத்தியதாகவும், ஒரு முறை பறவையின் கால்களில் தன்னை கட்டிக் கொண்டு தனித் தீவிலிருந்து சிந்துபாத் தப்பித்ததாக குறிப்பிடுகிறார்.

தற்போது நம்மிடையே வாழும் பறவைகளில் மிகப் பெரியது..பறக்க இயலா நெருப்புக் கோழி சுமார் ஒன்பது அடி உயரமும், 150 கிலோ எடையும் கொண்டது.தன்னை விட எடை குறைந்த மனிதர்களை சுமக்கக் கூடியதே.ஆனால் மனிதர்களை இழுத்துச் செல்லும் ஆற்றல் இல்லை.

பறக்கும் பறவைககளில் கோரி பஸ்டார்ட் (kori bustard) என்னும் தென் ஆப்பிரிக்கா பறவையானது 19 கிலோ எடையும் 2.5 அடி விரிந்த இறக்கையும் உடையது.

அடுத்தது “ஆண்டியன் கழுகு” இது பதினைந்து கிலோ எடையும், பத்தரை அடிவிரிந்த இறக்கையும்கொண்டது. இவையெல்லாம் சிறு பிராணிகளை மட்டுமே தூக்கிச் செல்லும் வலிமை உள்ளவை..

ஆனால் அல்லாஹ் உதாரணம் காட்டும், மனிதர்களை இறாஞ்சிச் செல்லும் பறவைகள் இவ்வுலகில் இருந்ததாக தொல்லியல் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. அதற்கான தொல்லியல் எச்சங்கள் இன்றும் அருங்காட்சி ஆய்வுக்கூடங்களில் (Museum) இருக்கின்றன.

நியூசிலாந்து பூர்வீக குடிகளான மாவோரிகளின் கதைகளில் வரும் ராட்சதப் பறவைகள் (Hasst Eagles) உண்மையில் வாழ்ந்த பறவைதான் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

Thunder bird என்று சொல்லக்கூடிய இடியோசை இராட்சத பறவைகளும் இவ்வுலகத்தில் வாழ்ந்துள்ளதாக தொல்லியல் எச்சங்கள் கூறுகின்றன. சமீபத்தில் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் இது போன்ற இராட்சத பறவைகளை பார்த்ததாக ஏராளமான மக்களின் சாட்சியம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

https://www.juneauempire.com/.../impossibly-large-bird.../

கடந்த 24,- மார்ச்,2018 அன்று இலங்கை முல்லைத்தீவு கடற்பரப்பில் ஒரு இராட்சதப் பறவை ஆழ்கடலை நோக்கி பறந்து சென்றதாக மீனவர்கள் தெரிவித்தனர். கடற்கரையில் இருந்து 500 மீற்றர் தொலைவில் தென்பட்ட இந்த இராட்சத பறவை வட-கிழக்கு கடல் நேராக ஆழ்கடல் நோக்கி பறந்து சென்று மறைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதல்லாமல் கடந்த வாரம் (12- Sep.2018.) வெளியான ஒரு ஆய்வுக் கட்டுரையில் தென் ஆப்பிரிக்காவிற்கு கிழக்கே உள்ள மடகாஸ்கர் தீவில் நடந்த தொல்லியல் ஆய்வில், சுமார் 750 வருடங்களுக்கு முன்பு இருந்ததாக சொல்லப்படும் இராட்சதப் யானைப் பறவை (Elephant bird) களின் எலும்புக் கூட்டை கண்டெடுத்தனர். அந்த எலும்புகளில் காணப்பட்ட வெட்டுக் காய அடையாளம் மூலம் அங்கிருந்த பூர்வ குடிகள் இப்பறவைகளை வேட்டையாடி அழித்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

யானைப் பறவையானது (ஏப்யோர்னிஸ்) சுமார் பத்தடி உயரமும், சுமார் 650-860 கிலோ எடையும் கொண்டது. ஆனாலும் இது நெருப்புக் கோழியைப் போல் பறக்கவியலாத ஒன்று ஆயினும் மணிக்கு எழுபது கி.மீ வேகத்தில் குதிரையை விட வேகமாக ஓடக் கூடியது. கடினமான அலகும்,,, உறுதியான கழுத்தும் கொண்டவை. சுமார் எழுபது கிலோ எடை கொண்ட மனிதனை இழுத்துச் செல்லும் வலிமை உடையது.

இது இடும் முட்டை, அழிந்து போன டைனாசராஸ் முட்டைகளை விட மிகப் பெரியவை. பதினேழாம் நுற்றாண்டு வரை உயிர் வாழ்ந்த இந்தப் பறவைதான் உலகிலேயே மிகப்பெரியது.

அதே வசனத்தில் அல்லாஹ் வேறொரு உதாரணம் மூலம் இணை வைப்பவர்களின் நிலையை சுட்டிக் காட்டுகின்றான்..."... பறவைகள் அவரை இராஞ்சிக் கொண்டு செல்லும் அல்லது காற்று அவரைத் தூக்கிச் சென்று ஏதேனும் அதலபாதாளத்தில் எறிந்து விடும். அங்கு அவர் சின்னாபின்னமாகி விடுவார். குர்ஆன் (22::31)

புயல், சூறாவளி காற்று கடும்வேகத்தில் அடிக்கும் போது அதில் மாட்டிய மனிதனை அது தூக்கிச் சென்று வேறிடத்தில் எறிந்து விடுவதை நாம் பார்க்கிறோம்.

பொதுவாக புயலானது சுமார் மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் வீசும்போது... நம்மால் நேரடியாக நடக்க முடியாது. அதே சமயம் அப்புயல் மணிக்கு நூறு மைல் வேகத்தை எட்டும் போது .நமது கால்கள் தரையை தொட முடியாமல் அலக்காக நம்மை தூக்கி சென்றுவிடும்.புயல் வேகம் குறைந்து நமது எடையை தூக்க இயலாநிலையில் கீழே எறிந்து விடும்.

இதே கதியையே, பிற படைப்புகளை கடவுளாக வணங்குகிறவர்களின் நிலையும் இருக்கும். என்பதை அல்லாஹ் உதாரணமாக விளக்குகிறான்.

ஆகவே கொடிய இணை வைக்கும் பாவத்திலிருந்து நாம் விலகிக் கொள்வோம். (Read islam பதிவிலிருந்து..)

(மீள்பதிவு)

ரஹ்மத் ராஜகுமாரன்

பறவைகளின் உலகம் 19
(உயிர்ப் பறவைகள்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
சொர்க்கத்தில் மக்கள் சிலர் நுழைவார்கள். அவர்களுடைய உள்ளங்கள் பறவைகளின் உள்ளத்தைப் போன்றிருக்கும்.
இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 5462.
மஸ்ரூக் பின் அல்அஜ்தஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:
நாங்கள் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களிடம்,
"(நபியே!) அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டோரை இறந்தோர் என நீர் எண்ண வேண்டாம். மாறாக, (அவர்கள்) உயிருடன் உள்ளனர்; தம் இறைவனிடம் (நெருக்கமாக) உள்ளனர்; உணவளிக்கப் பெறுகின்றனர்" (3:169) எனும் இந்த இறைவசனத்தைப் பற்றிக் கேட்டோம்.
அதற்கு அவர்கள் கூறினார்கள்: தெரிந்து கொள்க. இந்த வசனம் குறித்து முன்பே நாங்கள் (நபியவர்களிடம்) கேட்டுவிட்டோம்.அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"அவர்களின் உயிர்கள் பச்சை நிறப் பறவைகளின் வயிறுகளில் (செலுத்தப்பட்டு) இருக்கும். அவற்றுக்கென இறை அரியணையின் (அர்ஷின்) கீழ் மாட்டப்பட்டுள்ள கண்ணாடிக் கூண்டுகள் இருக்கும். அவை சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு களித்துவிட்டுப் பின்பு அந்தக் கூண்டுக்குள் வந்து அடையும்.
அப்போது அவர்களின் இறைவன் அவர்களிடம் ஒரு முறை தோன்றி, "நீங்கள் எதையேனும் ஆசைப்படுகிறீர்களா?" என்று கேட்பான்.
அதற்கு அவர்கள், "நாங்கள் ஆசைப்படுவதற்கு என்ன உள்ளது? நாங்கள்தாம் சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு களித்துக் கொண்டிருக்கிறோமே!" என்று கூறுவர்.
இவ்வாறே மூன்று முறை (கேள்வியும் பதிலும்) நடைபெறுகிறது. எதையேனும் கேட்காமல் நாம் விடப்படமாட்டோம் என்பதை அவர்கள் காணும்போது,
"இறைவா! எங்கள் உயிர்களை எங்கள் உடல்களுக்குள் திரும்பவும் செலுத்துவாயாக! நாங்கள் உனது பாதையில் மீண்டும் ஒருமுறை கொல்லப்படவேண்டும்" என்று கூறுவர். அவர்களுக்கு (இதைத் தவிர) வேறெந்தத் தேவையும் இல்லையென்பதை இறைவன் காணும்போது, அவர்கள் (அதே நிலையில்) விடப்படுவார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 3834.

சூஃபிகளின் உலகம் 1



அது ஓர் உலகம். இன்னும் சொல்லப்போனால் அது தனி உலகம்; ஆனால் அது பொது உலகம் அல்ல . அது தத்துவம் கடந்த நிலை , கடந்து போவதற்கான தத்துவமல்ல ! அது கருத்தியல் பிரச்சாரங்கள் செய்வதில்லை , வெறுமனே நடைமுறைக் குறிப்புகளே தருகின்றது.

உதாரணமாக...ஒரு நபி தன்னை நபி என்று பிரகடனப்படுத்தியே ஆகவேண்டும். ஆனால் எந்த ஒரு சூஃபியும் தன்னை வலி என்று சொன்னதே இல்லை !

சூஃபிசம் ஊக ஆய்வு செய்வதல்ல, அது முற்றிலும் மெய்மைக்குட்பட்டது, நடைமுறைக்குரியது, பயன் நாட்டமுடையது. ஆதலினால் அதற்கு உலகளாவிய பொதுநோக்கு அதற்கில்லை.மேலும் அது ஒரு முறைமையல்ல. அதனால் அறிவையும் அது முறைமைப்படுத்துவதில்லை.

சூஃபிசம் ஒரு அமைப்பு அல்ல. வாழ்க்கையின் மறைபொருட்களுக்குள் செல்லும் ஒரு பாதையாகும்.அது எதையும் விளக்குவதில்லை . வெறுமனே மறைபொருளை நோக்கிச் சுட்டிக் காட்டுகிறது .
அது நிலவைச் சுட்டிக்காட்டும் விரல். விரலை ஆய்வுசெய்து நீங்கள் நிலவை புரிந்து கொள்ளலாகாது. ஆனால் அத்திசையை கருணையோடு பின்பற்றினீர்களானால், அதனோடு தொடர்பு விடாமல் இருந்தீர்களானால், நீங்கள் நிலவை காணலாம். விரல் நிலவல்ல. விரல் நிலவாக முடியாது, ஆயினும் நிலவிற்கான பாதையைக் காட்ட முடியும்.

சூஃபிசக் கதைகள் தத்துவார்த்தமானவையல்ல. அவை மென்மையான ஜாடைக் குறிகள், வெறும் குசுகுசுப்புகள். சூஃபிசத்தில் உரத்த பேச்சில்லை .சன்னமான பேச்சுகளே . இயல்பாகவே ஒத்துணர்வு மட்டுமல்ல, மற்றவருடனும் ஒத்துணர்வு கொண்டு கேட்கத் தயாராக இருப்பவர்கள், நம்பிக்கையோடு மனம் திறந்து சரணாகதி அடைய தயாரானவர்கள் மட்டுமே சூஃபிசத்தைப் புரிந்துகொள்ள முடியும். அதிலும் அன்புகூரத் தகுதியானவர்கள் மட்டுமே சூஃபிசத்தை வெகுவாக புரிந்துகொள்வர் .
அது தரும் செய்தி என்ன ? அது தர்க்க ரீதியான ஆய்வு அல்ல. அதேசமயத்தில் ஜென் தத்துவம் போல் தர்க்க முரணானதும் அல்ல. தர்க்கரீதியாக இருப்பதும் , தர்க்க முரணாக இருப்பதும் இரண்டும் வெவ்வேறு முனைக் கோடிகளில் இருப்பதாகும் என்கிறது சூஃபிசம். இவை இரண்டிற்கும் நடுவே உள்ளது சூஃபிசம்.

"சூஃபி யார்? "

இந்தக் கேள்விக்கு வரையறுப்பது போல் ஒரு பதிலைச் சொல்ல முடியாது. இதனை அறிந்தே பாரசீகத்தில் ஒரு சொலவடை உருவானது: "சூஃபி யார்? சூஃபியே சூஃபி!" - (சூஃபி ச்சீஸ்த் சூஃபி சூஃபீஸ்த்) இதை நீங்கள் புரிந்து கொண்டால் , அந்த உலகில் நீங்கள் பிரவேசிக்கலாம்.
பின் நீங்கள் பிரகாசிப்பீர்கள் ஒரு சூஃபியாக !

சூஃபி மகாகவி மௌலானா ரூமி இவ்வாறு பாடுகிறார்கள்:
"நீ பார்க்கும் செங்கல்லில்
சூஃபி கண்ணாடியைக் காண்கிறார்.
நீ வறண்ட நிலத்தைப் பார்த்து அயர்கிறாய்
சூஃபி அதில் இடுப்பளவு தாவரங்கள்
அசைவதைக் காண்கிறார்"

சூஃபிகள் சராசரியான வாழ்க்கைச் சூழலில்தான் வாழ்கிறார்கள் என்றால் நம் வாழ்வில் சூஃபித்துவம் இருக்கத்தானே செய்யும்? நாமும் சூஃபிகளாக முடியும் அல்லவா? என்று நீங்கள் கேட்கலாம்.
முடியும், நிச்சயம் முடியும். தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவனுக்குத்தான் விழித்தெழ வேண்டும் என்னும் சிந்தனை வந்துவிட்டாலே அவன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டிருக்கிருக்கிறான் என்றுதான் அர்த்தம்!

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 2

(ஜென்னிஸம் ஆண் , சூஃபிஸம் பெண் அதுவும் தாய்)
நண்பர் Mohamed Nowfer என் இன்பாக்ஸில் வந்து,
Mohamed Nowfer : அல்ஹம்துலில்லாஹ் அஸ்ஸலாமு அலைக்கும் சிறப்பாக இருக்கிறது சூஃபி பதிவு. வாழ்த்துக்கள்

ஜென் தத்துவமும் எனும் வரி ஜென் என்பது தவிர்க்க பட்டால் மேலும் சிறப்பாக இருக்கும். பணி தொடர வாழ்த்துக்கள் 🙏
ர. ரா : சூஃபியிஸமும் , ஜென்னிஸமும் இரு தத்துவங்களாக பார்க்கப்படுகிறது. ஜென் தத்துவத்தோடு சரி. ஆனால் சூஃபிஸம் வாழ்க்கை. இதை உவமானத்தோடு சொல்வதற்கு ஜென் தேவைப்படுகிறது .ஒளியை படம் பிடிக்க இருட்டும் தேவை.

இந்த இரு தத்துவத்தையும் உவமானத்தோடு சொல்றேன் .
ஜென்னின் முக்கிய கருத்து 'மைன்ட்ஃபுல்னெஸ்' என்னும் அறிவு நிலை . சூஃபிசத்தில் அது 'ஹார்ட்புல்னெஸ்' - அதாவது நெஞ்சார்ந்த நிலை .இது இதயத்திற்குரியது.
ஜென் மனதிற்கு எதிரானது. ஆனால் மனதினூடே சென்றுதான் மனதை கடக்கின்றது .
சூஃபிசம் மனதிற்கு எதிரானதல்ல; அது மனதைப் பற்றி கருத்தற்றது. சூஃபி இதயத்தின் மீதே கவனம் செலுத்துகிறது. மனதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. அது இதயத்துக்குரியதின் மீது நம்பிக்கை (ஈமான்) கொள்கிறது.
சூஃபியின் பாதை அன்பின் பாதை. ஜென்னின் பாதை போர் வீரனுடையது. சாமுராயின் பாதை. இரண்டு அணுகுமுறைகளுக்கும் உள்ள அடிப்படை வித்தியாசமே இதுவே .
ஜென் கதை அபத்தமானது. அது ஒரு புதிர். விடை காண முடியாத புதிர். நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் தீர்வு காண முடியாது. கதையோடு சேர்ந்தது அதன் விடை காண முடியாத தன்மை. அவை ஜென் கதைகளுக்கே உள்ளியல்பானவை . அது அபத்தமாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அது உங்கள் மனதை அழிப்பதற்கான கருவி. மனதைக் கொன்று எப்படி மானுடம் பேச முடியும் ?
ஜென் அதீத ஆண்மை வாய்ந்தது. ஜென் கதை உங்களைப் பைத்தியமாக்கும் மனதில் ஒரு பித்த நிலையை உருவாக்கி, அதைக் கடந்து போக உதவும்.

சூபிக் கதை ஒரு புதிரல்ல, அது ஒரு உருவகக் கதை. அதிர்ச்சியளிப்பதல்ல, அது விளங்கவைக்க கூடியது. அது கவர்ந்திழுக்கும் ஒன்று. அது காதலர் வழியாகும். அது மென்மையானது. அது பெண்மையுடையது. சூஃபிகள் தங்களின் மூலமாக கராமத் என்னும் இறை அற்புதம் வெளிப்பட்டால் , ஒரு பெண் ருதுவானதற்காக வெட்கப்படுவதைப் போல் வெட்கப்படுகிறார்கள். இது சூஃபிஸம் பெண்மை வாய்ந்தது என்பதற்குரிய எடுத்துக்காட்டு .

சூஃபிஸம் பெண் மாதிரி மேலும் அது தாயானதுதான் உம்முவான தாயானது .
மேலும் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை 'உங்களில் யார் தொழுகையில் இந்த உம்முல் குர்ஆனை (பாத்திஹா) ஓதவில்லையோ அது அவருக்கு மிகப்பெரும் நஷ்டமாக அமையும்' என மூன்று முறை கூறினார்கள். இந்த சூராவை ஓதாவிட்டால் தொழுகை முழுமை பெறாது என்றும் கூறியுள்ளார்கள்.
இந்த வேதத்தை - அபிவிருத்தி நிறைந்ததாகவும், இதற்குமுன் வந்த (வேதங்களை) மெய்ப்படுத்துவதாகவும் நாம் இறக்கி வைத்துள்ளோம்; (இதைக்கொண்டு) நீர் (நகரங்களின் தாயாகிய) மக்காவில் உள்ளவர்களையும், அதனைச் சுற்றியுள்ளவர்களையும் எச்சரிக்கை செய்வதற்காகவும்,நாம் இதனை அருளினோம். (குர்ஆன் 6:92)

சூஃபிஸம் எல்லா கிதாபுகளின் தாயான குர்ஆன் மாதிரி, எல்லா நகரங்களின் தாயான மக்கா மாதிரி .
தாயின் காலடியில் சுவர்க்கத்தை காணச் செய்யும் அற்புதம் வாய்ந்தது சூஃபிஸம்.
ஜென்னிஸம் ஆண் என்றால்,சூஃபிஸம் பெண். அதுவும் தாய்

ரஹ்மத் ராஜகுமாரன்.

சூஃபிகளின் உலகம் 3



சூஃபி என்பவர் இறைவனுக்குள் நுழைந்தவர் .வாழ்க்கையின் மர்மத்தை ஊடுருவியவர். மெய்மையை எதிர்கொண்டவர்.

ஒரு சூஃபி உலக அறிவுடையவராக இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அது ஒரு பொருட்டே அல்ல .ஞானத்திற்கும் அறிவுக்கும் எந்த தொடர்பும் இல்லை.
சூஃபி பிரபஞ்சத்தின் ஒளியாக இருப்பார். நீங்கள் ஒளி என்றதும் வெளிச்சத்தை தேடுவீர்கள்.இந்த ஒளி என்பது அவருக்குள் மிகுந்திருக்கும் சாந்தம் என்னும் அமைதி. பட்ட இடமெல்லாம் பரவி சமாதானத்தை நிலை நிறுத்தக் கூடிய ஒளி .அவரைப் பார்க்கும் பொழுதெல்லாம் திரும்ப திரும்ப அவரைப் பார்க்க தூண்டக்கூடிய ஒளி .

இயேசு அறிவார்ந்த மனிதர் அல்ல. அவர் காலத்தில் வாழ்ந்த எந்த யூத குருவும் இயேசுவை விட அறிவிற் சிறந்தவராய் இருந்திருக்கலாம். புத்தரும் பெரும் அறிவாளி அல்ல. எந்த ஒரு பிராமணப் பண்டிதரும் அவரை விட அதிகம் அறிந்தவராக இருக்கலாம். புத்தர் வேதங்களைப் பற்றி அதிகம் அறிந்தவர் அல்ல. அறிவு என்பது நினைவாற்றலின் மூலமாக வருவது; ஞானம் தியானத்தின் மூலமாக கிடைப்பது. இயந்திரத்துக்கு கூட அறிவு சாத்தியப்படும். அதனால்தான் கம்ப்யூட்டர்கள் அறிவுடன் இருக்கின்றன ! ஆனால் எந்த கம்ப்யூட்டரும் ஞானம் பெற்றதாக இருக்க முடியாது. ஞானியான கம்ப்யூட்டர் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?

அறிவுடைய கம்ப்யூட்டர் சாத்தியம்தான். மனிதனை விட அதிக அறிவு உடையது .அதிக திறமை உடையது. குறைவாக தவறுகள் செய்யக்கூடியது. உடனடியாக மற்றும் மிக வேகம் கொண்டது. கேள்வி கேட்டால் பதில் உடனே உடனே தரக்கூடியது. ஆனால் அது ஏற்கனவே அந்த கம்ப்யூட்டருக்கு தரப்பட்ட பதிலாகத்தான் இருக்கும்.
அது புதிதாக தன்னிச்சை எதையும் சொல்லாது. சொந்த படைப்பாக எதுவும் இருக்காது. அதனால் அது ஞானம் கொண்டிருக்க முடியாது. அதை ஒரு மனித ஜீவனாக உங்களுடன் தொடர்புபடுத்தி படுத்திக் கொள்ள முடியாது . அது வெறுமனே உங்கள் கேள்விக்கு ஒரு பதிலாகத்தான் இருக்க முடியும்.
சூஃபியை நீங்கள் பெற்றிருக்கும் அறிவால் எடை போட்டு விடாதீர்கள். அவர் பிரபஞ்சத்தை உணர்ந்திருக்கிறார் என்பதை விட பிரபஞ்சம் அவரை உணர்ந்திருக்கிறது !

இந்த சூஃபி உங்களைப் போன்றே இருப்பார்.இருப்பினும் அவர் உங்களைப் போன்றவர் அல்ல. அவருக்கும் அதே உடல், அதே உடலமைப்புத்தான். ஆயினும் அவரின் உயிர்ருருவை ஏதோ ஒன்று அறியா இடத்திலிருந்து ஊடுருவியிருக்கிறது. அப்பால் உள்ளது அவர்களுக்குள் வந்தது. இந்த 'அப்பால் ' தொட்டுணரத் தக்க வகையில் இருக்கிறது. நீங்கள் கருணையோடும், நேசத்தோடும் அணுகினால் அவர்களின் அகச் சூழலின் சில கண நேரத் தோற்றங்களைக் காணமுடியும்.

சூஃபி என்பவர் இறைவனுக்குள் நுழைந்தவர். வாழ்க்கையின் மர்மத்தை ஊடுருவியவர். மெய்மையை எதிர்கொண்டவர்.

اَ لَّذِيْنَ يَتَّبِعُوْنَ الرَّسُوْلَ النَّبِىَّ الْاُمِّىَّ الَّذِىْ يَجِدُوْنَهٗ مَكْتُوْبًا عِنْدَهُمْ فِى التَّوْرٰىةِ وَالْاِنْجِيْلِ يَاْمُرُهُمْ بِالْمَعْرُوْفِ وَيَنْهٰهُمْ عَنِ الْمُنْكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ الْخَبٰٓٮِٕثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِىْ كَانَتْ عَلَيْهِمْ فَالَّذِيْنَ اٰمَنُوْا بِهٖ وَعَزَّرُوْهُ وَنَصَرُوْهُ وَ اتَّبَعُوا النُّوْرَ الَّذِىْۤ اُنْزِلَ مَعَهٗ ۙ ۚ اُولٰٓٮِٕكَ هُمُ الْمُفْلِحُوْنَ

(ஆகவே, அவர்களில்) எவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத (நம்) தூதராகிய இந்த நபியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்றாத்திலும், இன்ஜீலிலும் இவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள்.


(இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார். நல்லவைகளையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார்.

அன்றி, அவர்களது சுமையையும் அவர்கள் மீதிருந்த (கடினமான சட்ட) விலங்குகளையும் (இறைவனின் அனுமதி கொண்டு) நீக்கிவிடுவார்.
ஆகவே, எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரை பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான (இவ்வேதத்)தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள். (அல்குர்ஆன் : 7:157)

ரஹ்மத் ராஜகுமாரன் .

சூஃபிகளின் உலகம் 4

(குருவை கண்டடைதல்)



அது கி.பி.பதினோராம் நூற்றாண்டு. இராக் நாட்டின் பக்தாத் நகரில் இருந்த நிஜாமிய்யா பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சமயக் கல்வியை முழுமையாகக் கற்றுத் தேர்ந்து சமய அறிஞர் (ஆலிம்) என்னும் பட்டமும் பெற்று வெளியேறுகிறார்கள் முகைதீன் ஆண்டகை.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது அவர்களுக்குப் புரிகிறது. ஏட்டில் பெற்ற சமயக் கல்வி இறையனுபவத்தை, ஞானத்தைத் தராது என்றும் அதற்கான கலையைத் தக்க குருவிடம் பெற வேண்டும் என்றும் உணர்கிறார்கள். விதியில் தனக்கென்று எழுதப்பட்டுள்ள ஆன்மிக குருவைத் தேடிப் பல நபர்களைச் சந்திக்கிறார். நல்ல அறிஞர்களாக இருந்தவர்கள் கூட குரு என்னும் ஸ்தானத்தில் தன்னைக் கவரவில்லை என்று உணர்கிறார்கள்.

அப்படி பாக்தாத் நகர வீதிகளில் ஒருநாள் நடந்துகொண்டிருந்தபோது எதிரே ஒரு சர்பத் வியாபாரி தன்னுடைய வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவதைப் பார்க்கிறார்கள் . மக்களின் பார்வைக்குப் படாத ஒரு விஷயம் முகைதீன் ஆண்டகையின் கூர்மையான கவனிப்பில் விழுகிறது. அதாவது அந்த சர்பத் வியாபாரியின் இனிப்புப் பதார்த்தங்கள் மீது ஈக்கள் மொய்க்கவில்லை.

இது பற்றி அவரிடம் வினவியபோது அவர் அலட்டிக் கொள்ளாமல் “நெருப்பில் ஈக்கள் மொய்ப்பதில்லை தம்பி” என்று சொல்கிறார். ஹழ்ரத் ஹம்மாத் என்னும் அவர்களே தான் தேடிய குரு என்று அவர்களிடம் முகைதீன் ஆண்டகை தீட்சை பெற்றார்கள்.

மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் வாழ்விலும் இதே போல் ஒரு நிகழ்ச்சி. அவர்களுடைய மூன்றாம் குருவாக விளங்கியவர்கள் சலாஹுத்தீன் ஸர்கூப் (ரஹ்) என்பவர்கள். அவர்கள் ஒரு பொற் கொல்லர். அவரைத் தன் குருவாக மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் எப்படித் தெரிந்துகொண்டார்கள் என்பது சுவாரஸ்யமானது.

ஒருநாள் அவர்கள் தன் மாணவர்களுடன் கடைவீதியில் நடந்து கொண்டிருந்தபோது சலாஹுத்தீனின் பட்டறையைக் கடந்து செல்ல நேர்ந்தது. அப்போது சலாஹுத்தீன் பொற்கொல்லர் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அவர் சுத்தியலால் தட்டும் ஓசை மௌலானா ரூமியை அப்படியே இழுத்துப் பிடித்து நிறுத்திவிட்டது. ஆழ்ந்த தியானத்தில் மட்டுமே கேட்கும் கிரகங்களின் இசை (சவ்த்தெ சர்மத்) அந்தக் கொல்லரின் சுத்தியலிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது!

சமயக் கல்வியில் கரைகண்ட மேதையாக, ஆயிரத்திற்கும் மேலான மாணவர்களைப் பெற்றிருந்த மௌலானா ரூமி மக்களின் பார்வையில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்த சலாஹுத்தின் ஸர்கூப் அவர்களை அக்கணமே தன் ஆன்மிக வழித்துணையாக ஏற்றுக் கொண்டார்கள்.

பிரபஞ்சத்தில் அண்டகோளங்கள் ஒருவித ஒழுங்குமுறையில், தாள கதியில், லயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சலாஹுத்தீன் ஸர்கூப் அந்தப் பிரபஞ்ச இயக்கத்துடன் ஒத்திசைந்து இயங்குபவர்களாக இருந்திருக்க வேண்டும். அது அவர்களின் தொழிலில் பிரதிபலித்தது. அதனையே மௌலானா ரூமியின் அவர்களின் அகப்பார்வை கண்டுகொண்டது. அந்த ஒத்திசைவைத் தன் இயல்பான அசைவுகளில் உருவாக்கியதே அவர்கள் செய்த ஆன்மிக சாதனை. இதை நாமும் நம் அன்றாட வாழ்வில் கொண்டு வரலாம் அல்லவா?

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 5

(மெய்மையை மெய்யாகவே காண்பவர்கள் சூஃபி)


ஒரு சீனப் பேரரசர் தன் படுக்கை அறையில் ஒரு ஓவியம் தீட்டப்பட வேண்டும் என்று விரும்பினார். தன் கனவில் ஒரு வெள்ளை நாரை முழு நிலவை தாண்டி பறப்பதைக் கண்டார் அதை ஓவியமாக்க விரும்பினார். மிகப்பெரிய ஓவியவரை தேடினார் .மிகப் பெரிய ஓவியர் என்று அறியப்பட்ட ஒருவர் கிடைத்தார். அவர் ஒரு பெண்.

"நான் கனவில் கண்டது ஓவியமாக வேண்டும் என்ன சன்மானம் வேண்டுமானாலும் தருகிறேன் " என்றார்.
" நீங்கள் காத்திருக்க வேண்டும் "என்றாள் அந்தப் பெண்.
ஒரு வருடம் ஆயிற்று அரசர் விசாரித்தார்.
"காத்திருங்கள்" என்றாள் .
மீண்டும் மீண்டும் அதே பதில்தான். சில வருடங்கள் கடந்த பிறகு அரசர் கேட்டார், "எவ்வளவு காலமாகும். முழுநிலவைக் கடந்து போகும் ஒரு நாரை, இந்த சின்ன ஓவியம் தீட்ட இன்னும் எவ்வளவு காலமாக ஆகப்போகிறது ? " என்றார் அரசர்.
அந்தப் பெண் சொன்னது: " நான் ஒவ்வொரு முழுநிலவன்றும் கவனித்துக் கொண்டிருக்கிறேன் ,ஒரு நாரைக் கூட இதுவரை நிலவை கடந்து போகவில்லை. அது போகும் வரை என்னால் ஓவியம் வரைய முடியாது. மேலும் நான் ஆண் இல்லை,கற்பனையில் வாழ்வதற்கு . பெண் நான் கனவவியளாளர் அல்ல. மெய் மெய்யாக உணரும் வரை நிஜமில்லா கற்பனையை ஓவியமாக வரைய என்னால் முடியாது.அருவமானவற்றை என்னால் கற்பனை செய்ய முடியாது. அதைப் பார்க்க வேண்டும் நடப்பதைக் கண்டால் தான் என்னால் அதை செய்ய முடியும் " என்றாள்

அரசர் அவள் கருத்தை புரிந்து கொண்டார் " ஓவியம் தேவையில்லை. நீ சொல்வது எனக்கு புரிகிறது. கவலைப்படாதே உனக்குரிய சன்மானம் வழங்கப்படும் " என்றார்
"வரையாத ஓவியத்திற்கு எப்படி சன்மானம் பெற முடியும் ?" என்று கேட்டாள் .
" நீ முழு நிலவை பார்க்கும் போதெல்லாம் நீ தூரிகையுடன் காத்திருந்ததை ,என்னால் எளிதாக கற்பனை செய்ய முடிகிறது. அதற்குரிய சன்மானம்தான் இது " என்றார்.
இது வெறும் கதை அல்ல .மெய்மையை மெய்யாகவே காணத் துடித்தவளின் மெய்யுணர்வு இது.
நபிமார்கள் 'வஹீ 'மூலம் இறைவனிடமிருந்து ஆன்மீக . அறிவை பெற்றனரோ, அதே போன்று சூஃபிகள் இல்ஹாம் மூலம் இறைவனிடமிருந்து ஆன்மிக அறிவைப் பெற்றார்கள்.
இதனையே பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் "நீங்களெல்லாம் இறக்கக்கூடிய மனிதர்களிடருந்து அறிவை பெறுகின்றீர்கள். நாங்களோ பிறப்பில்லா இறைவனிடமிருந்து அறிவை பெறுகின்றோம் " என்று கூறினார்கள்.
சூஃபிகள் கற்பனை கலவாத மெய்யிலிருந்து மெய்மையை மெய்யாகவே கண்டவர்கள்.
இவர்கள் சொல்வது, கற்பனை அல்ல ; நிஜம்.

சூஃபிகளின் உலகம் 6

துறவு தந்த பொக்கிஷங்கள்





இஸ்லாமிய எழுத்துலக மாமன்னர், தத்துவ பேரறிஞர், ஆலிமே ஷரீஅத், இமாமே தரீகத், ஜமாலுல் இஸ்லாம், ஹுஜ்ஜதுல் இஸ்லாம் இமாம் அபூஹாமித் முஹம்மத் அல் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹிஜ்ரி 450 ரபீயுல் ஆகிர் பிறை 27 (கி. பி. 1058) அன்று ஈரான் நாட்டில் “தூஸ்” என்னும் ஊரில் பிறந்தார்கள்.
‘இமாமுல் ஹரமைன்” அபுல் மஆலி அல் ஜுவைனி (ரலியல்லாஹு அன்ஹு) என்ற பெரியாரிடம் மார்க்க கலை, தத்துவ கலை, தர்க்க கலை, மொழி ஆராய்ச்சி, இயற்கை விஞ்ஞானம், ஆத்மஞானக் கல்வி ஆகியவற்றை கற்று சிறந்த மார்க்க மேதையாக விளங்கினார்கள்.

மார்க்க அறிவும், ஆன்மிக அறிவும் மெய்யறிவின் இருவேறு பிரிவுகள் ஆகும். இரண்டும் வெவ்வேறு தன்மை பெற்றதாகும் இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அவர்கள் ஜாமியா மதரஸாவின் முதல்வராக இருந்து பணியாற்றிய பல ஆண்டுகளுக்குப் பின்தான் இந்த உண்மையை கண்டறிந்தார்கள்.
மாபெரும் மார்க்க விற்பன்னர்களாகிய தாம் ஆன்மிக கடலில் கணுக்கால் அளவு தண்ணீரில் தான் இருக்கக் கண்டார்கள். ஆனால் ஆன்மீக அறிஞர்கள் என்னும் ஞானிகள் குறைந்த அளவு கல்வியோ ,

அல்லது கல்வியை கற்காமலோ ஆன்மீகக்கடலில் மூழ்கிக் குளித்து முத்தெடுத்துக் கொண்டிருப்பதை கண்டார்கள் .
இமாமவர்கள் தம் வாழ்வில் வெறுப்புற்று பதவியை துறந்து, நாடு துறந்து ஆன்மிகத் துறையில் ஈடுபட்டனர். ஹிஜ்ரி 488 (கி. பி. 1096) இல் பக்தாத்தை விட்டு சிரியா நாட்டுக்கு சென்று காடுகளிலும், மண்டபங்களிலும், தங்கி தியானத்திலும், தொழுகையிலும், நப்ஸை அடக்குவதிலும் ஈடுபட்டு துறவை மேற்கொண்டார்கள். இந்த நேரத்தில்தான் தனது உலக புகழ் பெற்ற மகத்தான நூலான "இஹ்யாவு உலூமித்தீன்" என்ற மாபெரும் கிரந்தத்தை எழுதினார்கள்.இதுபற்றிய தங்களின் அனுபவங்களை அவர்கள் "பிழையிலிருந்து விடுதலை" என்ற தம் நூலில் கூறியுள்ளார்கள்.

பிறகு மஃரிபா என்னும் ஆத்ம ஞானத்தை யூஸுப் அல் நஸ்ஸாஜ் (ரலியல்லாஹு அன்ஹு) என்ற பெரியாரிடம் கற்றார்கள்.இதன் பின்தான் அவர்கள் மன அமைதி பெற்று, தாம் உண்மையான மெய்யுணர்வை பெற்றதாக உணர்ந்தார்கள்.

இமாம் கஸ்ஸாலி அவர்கள் எழுதிய முதல் கிதாபு "கிதாபுல் மங்கூல்" ஆகும். இந்த கிதாபை தன்னுடைய ஆசிரியரிடம் காட்டியபோது, அதைப்பார்த்த ஆசிரியர், இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கூறினார்கள்: "நான் உயிரோடு இருக்கும் போதே என்னை நீங்கள் நல்லடக்கம் செய்து விட்டீர்கள். நான் மரணிக்கும் வரை காத்திருக்கக்கூடாதா? உங்களுடைய இந்த கிதாபு, நான் இதுவரை எழுதியவற்றை எல்லாம் இடம் தெரியாமல் ஆக்கிவிட்டது" என்று புகழ்ந்தார்கள்.

ரிபாய் தரீக்காவின் ஸ்தாபகர் சுல்தானுல் ஆரிபீன் அஹ்மது கபீர் ரிபாயீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் "புர்ஹானுல் முஅய்யத்" என்ற நூலிலும், ஸுஹ்ரவர்த்தி தரீக்காவின் ஸ்தாபகர் இமாம் ஸுஹ்ரவர்த்தி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் எழுதிய "அவாரிபுல் மஆரிப்" என்ற நூலிலும் இஹ்யாவு உலூமித்தீனிலுள்ள கருத்துக்கள் பல காணப்படுகிறது.

இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் மஃரிபா போதனையை பின்பற்றியே, ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னு அரபி (ரலியல்லாஹு அன்ஹு) தமது நூல்களை எழுதியுள்ளார்கள். கௌஸுல் அஃலம் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் "குன்யதுத் தாலிபீன்" என்ற தனது நூலில் நாதாக்களின் ஆதாரங்களை கூறுவதைவிட அதிகமாக இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் நூல்களில் இருந்தே ஆதாரங்களை கூறியுள்ளார்கள்.

பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவு முழுவதும் நின்று வணங்கு கிறார். அவ்விருவர்களில் சிறந்தவர் யார்? என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் 'வணக்கசாலியைவிட மக்களுக்கு நல்லதை கற்றுக் கொடுக்கும் கல்வியாளரே சிறந்தவர்' என பதில் கூறினார்கள். (தாரமீ, திர்மிதி)

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 7

(உங்கள் வயது என்ன ? இரண்டு)



ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு ஞானகுருவின் அருமைபெருமைகளைப் பற்றி பின்வருமாறு உபதேசித்தார்கள்.

'அலீயே ! நீங்கள் அல்லாஹ்வின் அரிமா! துணிச்சலான வீரர். ஆனால் அதற்காக உங்கள் சிங்க மனத்தை நம்பியிருக்க வேண்டாம். நம்பிக்கை எனும் ஈச்சமர நிழலில் ஒதுங்கிவிடுங்கள். ஞானகுருவின் நிழலெனும் பாதுகாப்புக்குள் வந்துவிடுங்கள். அதன் பின் நேரான பாதையில் செல்வதிலிருந்து உங்களை யாரும் தடுக்க முடியாது.

'ஞானகுருவின் குணாம்சங்களைப் பற்றி நான் பேசவேண்டுமெனில், இறுதித் தீர்ப்பு நாள் வந்தாலும் முடிக்க முடியாது. தெய்வீகச் சூரியன் தன்னை மனிதனிலே மறைத்துக்கொண்டான். இந்த மர்மத்தைப் புரிந்துகொள்ளுங்கள். எது சரி எது தவறு என்பதைப் பொறுத்த மட்டில் இறைவனே போதுமானவன்.
'அலீயே ! பக்தியான செயல்பாடுகள் ஆயிரமாயிரம் உண்டு. ஆனால் அவற்றில் இறைவனின் அடிமைச் சேவகனாகிய ஞானகுருவின் நிழலை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

'ஏதாகிலும் ஒரு பக்தியான செயல்பாட்டில் ஈடுபட்டு மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். நீங்கள் குருவின் நிழலில் அடைக்கலம் தேடுங்கள். அப்போதுதான் உங்களுக்கே தெரியாத உங்களின் ரகசிய எதிரிகளிடமிருந்து நீங்கள் தப்பிக்க முடியும்.
'குருவானவர் உங்களை ஏற்றுக்கொண்டபின், அவரிடம் முழுமையாக உங்களை ஒப்படைத்துவிடுங்கள். கிளறு அவர்களிடம் மூஸா தன்னை ஒப்படைத்ததுபோல.
கிளறு சொல்வதையெல்லாம், செய்வதையெல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் கோபப்பட்டு, "போதும், இதுவே நமது பிரிவு '' என்று சொல்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
'அவர் படகைக் கவிழ்த்தாலும் சரி, குழந்தையைக் கொன்றாலும் சரி, ஒரு வார்த்தையும் பேசவேண்டாம். அவர்களுடைய கைக்கு மேலே இருப்பது தனது கைதான் என்று இறைவன் சொன்னான். ஞானகுருவின் கையானது தனது கைதான் என்றும் அவன் அறிவித்துள்ளான்.

'இறைவனுடைய கை குழந்தையைக் கொன்றால், மறுபடியும் அதற்கு உயிர் கொடுக்கும் அது. உயிர் என்பது என்றைக்குமே அழியாத ஒன்றுதானே ?
'குருவின்றி, யாராவதொருவர், அரிதாக, சரியான பாதையில் பயணம் செய்வாராகில், அதற்கும் பல ஞானகுருக்களின் இதயங்களின் கருணைதான் காரணம். சிஷ்யர்களாக இல்லாதவருக்கே ஞானகுரு இவ்வளவு கண்ணியம் செய்வாராகில், நேரடியான மாணாக்கர்களைப் பற்றி நான் என்ன சொல்ல ? தங்கள் மாணாக்கர் குழுவில் இல்லாதவர்களுக்கும் ஞானகுருவானவர் ஆன்மீக உணவளிக்கையில், இருக்கும் சிஷ்யர்களுக்கு என்னவெல்லாம் கிடைக்கும் என்று சொல்ல வேண்டுமா என்ன ?

'குரு தரும் ஒவ்வொரு வேதனையும் தங்கத்தைப் புடம் போடுவதைப் போன்றதாகும். கண்ணாடியைத் தேய்த்துக் கழுவி சுத்தப்படுத்துவதைப் போல. இல்லையெனில் உங்களிடம் எப்படித் தெளிவு வரும் ? '

இவ்வாறாக ஞானக்கோட்டையின் தலைவாசலாகிய அலீ (ரலி) அவர்களுக்கு, ஞானக்கோட்டையாகிய பெருமானார் (ஸல்) அவர்கள் குருவின் அவசியத்தையும் சிறப்புக்களையும் பற்றி எடுத்துரைத்தார்கள். எனக்கும் இறைவனுக்கும் இடையே இன்னொருவர் எதற்கு ? என்று கேள்வி வருவது மிகப் பெரிய அறியாமை . தான் எல்லாம் அறிந்து விட்டோம் , தன்னால் சகலமும் அறிய முடியும் என்கிற அறியாமை எவ்வளவு பெரிய கைசேதத்தில் விட்டு விடும்.


சில சமயம் சற்குருக்களை சாமானியரகளாக சித்திரிக்கப்படும்போது அவர்கள் தங்களை மறைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

சற்குருவின் தொடர்பு என்பது உலக ரீதியில் பொருளாதாரம் ,செல்வாக்கு , அந்தஸ்து குறித்த விஷயம் அல்ல. அது ஆன்மீக உலகில் நம் ஆத்மாவின் பிரவேசம் குறித்த விஷயம் .
இமாம் அபுஹனீபா (ரஹ்) அவர்களிடம் உங்கள் வயது என்ன? என ஒருவர் கேட்க,
அவர்கள், “இரண்டு வயது” என்றார்களாம்.
“என்ன இந்த முதிய வயதில் இரண்டு வயது என்கின்றீர்களே?” என்ற போது,
” இமாம் ஜாஃபர் சாதிக் (ரஹ்) அவர்களிடம் இரண்டு வருடம் கால் மடங்கி, அமர்ந்து பற்பல கல்விகளையும் கற்றுத் தேர்ந்தேன். அதை மட்டுமே நான் வாழ்ந்த வருடங்களாக கருதுகின்றேன் ” என்று பதில் கூறினார்கள்ளாம் அவர்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 8

("நீ ஞானத்தைத்தான் தேடினாலெழிய, என்னை அல்ல")



எதையும் தர்க்கரீதியாக அணுகுவது ‘முஹம்மது இப்னு அலீ திர்மிதீ’ (ரஹ்) அவர்களின் இயல்பு. ஞானத்தின் பிழம்பாக, அறிவின் ஊற்றாக விளங்கிய அவரது சிந்தனை ஆற்றல் அபரிமிதமானது. இமாம் திர்மிதி, (கி.பி. 824)ல் பாரசீக குடும்பத்தில் (இன்றைய உசுபெக்கிசுத்தான் நாட்டில்) உள்ள திர்மித் நகரில் பிறந்தார்கள் அளவற்ற அறிவை வரமாகப் பெற்றிருந்த அவர், சிறுவயது முதலே, எல்லாவற்றையும் கேள்வி கேட்பவராக இருந்தார்கள். ஞானத்தின் அனைத்து வழிகளையும் ஏனென்ற ஒற்றைக் கேள்வியின் மூலம் தனது அறிவினுள் அடக்க முயன்றார்கள்.
அந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார்கள். இதனால்தான், ஆழமான கோட்பாடுகளையும், சிக்கலான சித்தாந்தங்களையும் சாமானியருக்கும் புரியும் வகையில் எளிய மொழியில் அவரால் எழுத முடிந்தது; விளக்க முடிந்தது.

தனது அறிவையும், தர்க்கத்தையும் எந்த அளவு நம்பினார்களோ, அதைவிட ஒருபடி மேலாக இறைவனை நம்பினார்கள். வாழ்வில் ஒருபோதும் அந்த நிலையை அவர்கள் மாற்றிக்கொள்ளவில்லை.
இளம் வயதில் இறைவணக்கமும்,தர்க்கமும் திர்மிதீ (ரஹ்) அவர்களின் வாழ்வில் ஒருவிதத் தேக்கத்தை ஏற்படுத்தின. வெளியூருக்குப் பயணம் மேற்கொண்டால், அந்தத் தேக்க நிலையிலிருந்து விடுபடலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

தன்னுடைய நண்பர்கள் இருவருடன் இணைந்து ஆன்மிகப் பயணம் செல்வதற்கு ஆயுத்தமானார்கள். நண்பர்களின் பெற்றோர்கள் அவர்களை ஆசிர்வதித்து வழியனுப்பினர்கள். ஆனால், திர்மிதீயின் தாயார் மட்டும் மிகுந்த கவலையுடன் இருந்தார்.

அன்னையின் அருகில் அமர்ந்து, கையைப் பிடித்தபடி, ஏனென்று? திர்மிதீ (ரஹ்) காரணம் கேட்டார். “நானோ மிகுந்த இயலாமையில் இருக்கிறேன். வயதும் முதிர்ந்துவிட்டது. நோயும் என்னை வாட்டி எடுக்கிறது. நீயோ ஓர் உன்னதப் பயணத்தை மேற்கொள்ள இருக்கிறாய். உன்னைத் தடுக்கவும் எனக்கு மனமில்லை. ஆனால், துணைக்கு யாருமின்றித் தனியாக இருக்கும் என்னை நீ யாரிடம் ஒப்படைத்துச் செல்வாய்?” என்று அவருடைய தாயார் கவலையுடன் பதில் கேள்வி கேட்டார்.
தனது மனிதாபிமானமற்ற செயலின் வீரியத்தை திர்மிதீ (ரஹ்) அவர்கள் உணர்ந்தார்கள். பெரும் தவறு இழைக்கவிருந்தோம் என்று எண்ணி, வெட்கித் தலைகுனிந்தபடி, தாயின் கையைப் பிடித்து அழுதார்கள். உவைஸுல் கரனி (ரஹ்) அவர்களுக்கும் வயோதிக தன் தாயாரை பராமரிக்க வேண்டிய காரணத்தால் , அகிலத்திற்கு வந்துதித்த அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் உவைஸுல் கரனி (ரஹ்) அவர்கள் வாழ்ந்தும், சந்திக்க முடியாமல் போனது.
தன் தாயாருக்கு கடமையாற்றியதாலும், நபிகளாரின் மீது கொண்ட நேசத்தாலும் , நபிகளார் அவர்கள் மிஹ்ராஜின் போது, அணிந்திருந்த பரக்கத்தான அங்கியை தம் தோழர்களிடம் கொடுத்து, உவைஸுல் கரனி (ரஹ்) அவர்களுக்கு அனுப்பவில்லையா ? (" Santhu Khaja Faizee , நீங்க சொன்ன தகவலை பதிந்து விட்டேன். சந்தோஷம்தானே ?)
ஆகையால் தேடி கண்டடைய வேண்டிய ஞானம், தம் வீடு தேடி வந்தடையும் என்று திர்மிதீ (ரஹ்) அவர்கள் நம்பினார்கள்

பின் சிறிதும் தாமதிக்காமல், தன்னுடைய நண்பர்களைச் சந்தித்து, “மன்னித்துக்கொள்ளுங்கள். என்னால் இந்தப் பயணத்துக்கு வரமுடியாது. நீங்கள் மட்டும் சென்று, ஞானத்தை எனக்கும் சேர்த்துப் பெற்று வாருங்கள்” என்று சொல்லிவிட்டு, மீண்டும் தாயிடம் வந்தார்கள்.
தாயைக் கவனிப்பது, இறைவணக்கம், சிந்தனையை எழுத்தில் வடிப்பது, தனியே தர்க்கிப்பது ஆகிய செயல்களே அவர்களது வாழ்வாக மாறின. இருந்தாலும், திர்மிதீ (ரஹ்) அவர்களின் ஆழ்மனத்தில் பயணம் செல்ல முடியாதது குறித்து வேதனையும், ஏக்கமும் இருந்து கொண்டேயிருந்தன.
“பயணத்தின்மூலம் ஞானம் பெறும் வாய்ப்பு தனக்குக் கிடைக்காமல் போய்விட்டதே” என ஒரு நாள் தனிமையில் அமர்ந்து, அழுதுகொண்டு இருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஒரு முதியவர், “ஏன் அழுகிறாய்?” எனக் கேட்டார்.

நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவரிடம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் சொல்லத் தொடங்கினார்கள். “என்னுடைய நண்பர்கள் ஞானம் பெற்றுவிடுவார்கள். நான் மட்டும் இங்கேயே தேங்கிவிட்டேன்” என்று கவலையுடன் சொன்னபடி அழத் தொடங்கினார்கள்.
“கடமையே வாழ்வின் உன்னத ஆசான். அதுவும் குறிப்பாகத் தாயைக் கவனிக்கும் கடமை. எனினும், கவலை வேண்டாம். பயணங்களில் கிடைக்கும் ஞானத்தைவிட மேலான ஞானத்தை நான் உனக்குக் கற்றுக்கொடுக்கிறேன். அழுவதை நிறுத்து. கற்றலை நாம் இன்றே தொடங்குவோம்” என்று சொன்னபடி திர்மிதீ (ரஹ்) அவர்களுக்கு அவர் ஞானத்தைப் போதிக்கத் தொடங்கினார்கள் .
அந்தப் பெரியாரைப் பற்றி திர்மிதீ (ரஹ்) அவர்கள் விசாரித்த போதெல்லாம் , " நீ ஞானத்தைத்தான் தேடினாலெழிய என்னை அல்ல" என்றே பதிலளித்தார்கள்.
திர்மிதீ (ரஹ்) அவர்களின் தர்க்கங்கள் பயனுள்ள ஒன்றாயின. அவருடைய கேள்விகள், முதியவரின் ஞானத்தில் மோதி பதிலாகத் திரும்பி, புது ஒளியை திர்மிதீ (ரஹ்) அவர்களின் ஆன்மிக வாழ்வில் பாய்ச்சின.

திர்மிதீ (ரஹ்) அவர்களின் ஆன்மிக ஞானம் விஸ்வரூபமெடுத்தது. உண்ணுவதற்குக் கூட நேரமின்றித் தனது நேரத்தை திர்மீதி (ரஹ்) அவர்கள் அந்த முதியவருடன் செலவிட்டார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று வருடங்கள் அவ்வாறு கழிந்தன.
அறிவின் வடிவாக ஞானத்தின் பிழம்பாக திர்மிதீ (ரஹ்) அவர்கள் ஒளிரத் தொடங்கியபோது, அந்த முதியவர் மறைந்து போனார். அவரை ஊரெங்கும் திர்மீதி (ரஹ்) தேடினார்கள். ஆனால், அந்தத் தேடல்களால் அந்த முதியவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மீண்டும், திர்மீதி (ரஹ்) அவர்கள் கவலையில் மூழ்கத் தொடங்கினார்கள்.

ஒரு நாள், தூய ஆடை உடுத்தி, இறைவணக்கத்துக்கு திர்மிதீ (ரஹ்) அவர்கள் கிளம்பிச் சென்றார்கள். அப்போது மாடியிலிருந்து குப்பையை அவருடைய பணிப்பெண் தவறுதலாக அவர்மீது எறிந்துவிட்டார். அந்தப் பெண்ணிடம் மிகுந்து கோபத்துடன் திர்மிதீ (ரஹ்) அவர்கள் ஏதோ சொன்னார்கள்.


அந்தச் சொல்லின் வலி தாங்காமல் சினங்கொண்டு, தன்னிடமிருந்த குப்பை முழுவதையும் திர்மிதீ (ரஹ்) அவர்களின் மேல் அந்தப் பெண் கொட்டினார். ஏனோ அதற்கு திர்மிதீ (ரஹ்) அவர்கள் கோபம் கொள்ளவில்லை.

பொறுமையின் உருவமாய், அந்தப் பெண்ணை நோக்கி அன்புடன் புன்னகைத்தார்கள். அதற்கு அடுத்த நொடி, ஆச்சர்யம் ! அந்த முதியவர் மீண்டும் திர்மிதீ (ரஹ்) அவர்களின் முன் வந்து நின்றார்கள் .
அந்த நிகழ்வுக்குப் பின், திர்மிதீ தன் வாழ்வில் ஒருபோதும் கோபம் கொள்ளவில்லை. "கோபம் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டால், அவர்கள் வழக்கத்தைவிட அமைதியாகவும், அன்பாகவும் இருப்பார்கள் " என அவர்களுடைய சீடர்கள் பின்னாளில் தெரிவித்தனர்.
எண்ணற்ற புத்தகங்களை திர்மிதீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள். சூஃபி தத்துவ இயலையும், மனித உளவியல் சித்தாந்தத்தையும் விளக்கும் ஒளியாக அவரது எழுத்துகள் இன்றும் விளங்குகின்றன. அவரது சுயசரிதை மனிதகுலத்தின் பொக்கிஷமாகக் கருதப்படுகிறது; போற்றப்படுகிறது; இன்றும் பாதுகாக்கப்படுகிறது.

இந்தச் சுயசரிதையே 'இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் சூஃபி உலக வாழ்வுக்கும், எழுத்துக்கும் அடித்தளமாக இருந்தது. 'ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் சூஃபி உலகின் மிகப் பெரும் ஞானியாக்கியதிலும் இந்தச் சுயசரிதைக்கு முக்கியப் பங்குண்டு.
சாமானியர்கள் மட்டுமல்லாமல் சூஃபி ஞானிகளுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்த அவர்கள் , கி.பி. 898-ம் ஆண்டில் இந்த உலகை விட்டு மறைந்தார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 9



இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் சிறப்பை, மிகவும் அழகாக எடுத்துக்காட்ட ஷாதுலி தரீக்காவின் ஸ்தாபகர் இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தான் கண்ட ஒரு **அருமையான**
கனவை தெரிவிக்கின்றார்கள்:

"ஒருநாள் பைத்துல் முகத்தஸ் பள்ளியில் நான் தூங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டேன். பள்ளிவாசலின் வெளியே ஹரத்தின் நடுவில் சிம்மாசனம் ஒன்று போடப்பட்டிருந்தது. மக்கள் கூட்டம், கூட்டமாக அங்கு வந்து நின்றுக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் அந்த சிம்மாசனத்தை பார்த்தேன். அங்கே எங்கள் பெருமானார் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள்.
அங்கே இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்), மூஸா (அலைஹிஸ்ஸலாம்), ஈஸா (அலைஹிஸ்ஸலாம்), நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய நபிமார்கள் அனைவரும் தரையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பேசுவதை நான் கவனித்துக் கேட்டேன்.


ஸைய்யதுனா மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களிடம் "உங்கள் உம்மத்திலுள்ள உலமாக்கள் பனீ இஸ்ராயீல்களின் நபிமார்களை போன்றவர்கள் என்று கூறினீர்களே, எவ்வாறு" என்று கேட்டார்கள்.

உடனே எங்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் "இதோ" என்று இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களை சுட்டிக் காட்டினார்கள்.
இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) தனது இடத்திலிருந்து எழுந்து பணிவோடு நின்றார்கள்.
அப்போது நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். அதற்கு இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் 10 பதில்கள் அளித்தார்கள்.

உடனே நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் "நான் கேட்டதோ ஒரே ஒரு கேள்வி. ஆனால் உங்கள் பதிலோ பத்தாக இருக்கிறதே" என்று கூறினார்கள்.
அதற்கு இமாம் அவர்கள் சொன்னார்கள். "நீங்களும் இதைப்போன்று தானே செய்தீர்கள். "மூஸாவே உமது வலது கையில் இருப்பது என்ன?" என்று ஒரே ஒரு கேள்வியைத்தானே அல்லாஹ் அஸ்ஸவஜல் உங்களிடம் கேட்டான். அதற்கு இது என் கைத்தடி என்று ஒரே பதிலில் சொல்லி இருக்கலாமே! ஆனால் நீங்களோ இது என் கைத்தடி, இதன் மீது நான் சாய்ந்துக் கொள்வேன், இதன் மூலம் என்னுடைய ஆடுகளுக்கு இலை, குலைகளை பறிப்பேன், இன்னும் இதன் மூலம் எனக்கு பல பிரயோசனங்கள் இருக்கின்றது என்று பல பதில்கள் அளித்தீர்களே!" என்று இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் பதில் கொடுத்தார்கள்.
(தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் – 1, பக்கம் – 230)

இதிலிருந்து இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் சிறப்பையும் அறிவுக்கூர்மையையும் விளங்கிக்கொள்ளலாம். எனவே இத்தகைய அறிவு மாமேதையின் புத்தகங்கள் தமிழிலும் வெளிவந்துள்ளதால் நாமும் அவற்றை வாசித்து பயன் பெற முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக நாம் இஹ்யாவு உலூமித்தீன் போன்ற நூல்களை வாசிப்பதன் மூலம் அறிவும், சிந்தனையும், நற்குணமும், ஒழுக்கமும் உண்டாகும்.
இத்தகைய சிறப்புக்குரிய இமாம் கஸ்ஸாலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு கொடுத்து அறிவைப் போன்று, ஒரு சிறிதளவாவது ஏழைகளான நமக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அஸ்ஸவஜல் தந்தருள்வானாக!

சூஃபிகளின் உலகம் 10



பலக் நாட்டின் அரசராக இருந்து, அரச பதவியை துறந்து, சூஃபியானவர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் இறைநேசச் செல்வர்களைப் பற்றி கூறும்போது,
"அவர்களின் உள்ளம் எப்போதும் இறை சிந்தனையில் மூழ்கியும் , இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டும் , இறைவனின் பேராற்றலைப் பற்றி நினைவு கூர்ந்து கொண்டும் இருக்கும் "
இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் மஃரிஃபா என்ற இறை அகமிய ஞானத்தை ஒரு கிறிஸ்துவ துறவியிடமிருந்து தனக்கு கிடைக்கப் பெற்றதாக கூறினார்கள் அதுபற்றி அவர்கள் :

" நான் மஃரிஃபாவை ' ஸம்அன் ' என்ற கிறிஸ்தவ துறையிடமிருந்து கற்றுக்கொண்டேன். அவரின் தவமடம் சென்ற நான்,
" இங்கு எவ்வளவு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் ?" கேட்டேன் .
" 70 ஆண்டு காலமாக " என்று அவர் பதில் கூறினார்
" என்ன உணவு உண்கிறீர்கள் ?"
"ஹனீஃபே..! (உருவமற்ற ஓரிறை வணக்கவாளரே !) ஏன் அதுபற்றி வினவுகிறீர் ? " என்று கேட்டார்.
" அது பற்றி அறிய ஆவலாக உள்ளேன்" என்று கூறினேன்.
" ஓர் இரவுக்கு ஒரு பட்டாணிக்கடலை வீதம் உண்டு வருகிறேன்". என்று அவர் பதில் கூறினார்
"அது தங்களுக்கு போதுமா ? " என்று வியப்புடன் வினவினேன்.
அதற்கு அவர் " கீழே காத்திருக்கும் மக்களைப் பார்த்தீரா ? " என்று கேட்டார்.
"பார்த்தேன்" என்று கூறினேன் .
"அவர்கள் என்னை தரிசிப்பதற்காக ஆண்டுக்கு ஒரு தடவை இங்கு வந்து, என்னுடைய இந்த அறையை அலங்கரித்து, இதனை சுற்றி பலமுறை வந்து , என்னைக் கௌரவிக்கிறார்கள். எனக்கு இறை வணக்கத்தில் சிலபொழுது அலுப்பு ஏற்படின், அவர்கள் எனக்கு செய்யும் கௌரவத்தை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியுறுகிறேன். ஆண்டுக்கு ஒரு நாளைக்கு கௌரவம் பெறுவதற்காக ஓராண்டு காலம் முழுவதும் வணக்கத்தில் ஈடுபட்டுள்ளேன். அவ்விதமாயின் , ஹனீஃபே..! நான் என்றென்றும் கௌரவம் பெற விரும்பினால் எத்தனை கடுமையான வணக்கத்தில் ஈடுபடவேண்டும் என்பதை நினைத்துப் பாரும் " என்று கூறினார்கள்.
அவருடைய இந்த பேச்சு எனக்கு மாபெரும் அறிவு விளக்கத்தை வழங்கியது. மேலும் ஏதாவது அறிவுரை பகருமாறு அவரை வேண்டினேன்.
அது கேட்டு, அவர், " கீழே இறங்கும் " என்று கூறினார்.
அவ்வாறே நான் கீழே இறங்கியதும், அவர் ஒரு வாளியை கீழே இறக்கினார் அதில் 20 பட்டாணிக்கடலை இருந்தன.
"நீ அங்கு உள்ள மாதா கோவிலுக்குச் சென்று அங்கு காத்திருக்கும் மக்களுக்கு நான் உமக்கு அளித்ததைக் காட்டும். அதன் பின் மேலே ஏறி என்னிடம் வாரும் " என்று அவர் கூறினார்.
அவர் வாளியை இறக்கியதைக் கண்ட மக்கள் என்னிடம் ஓடோடி வந்து, " ஹனீஃபே..! துறவி உமக்கு வாளியில் என்ன அனுப்பி வைத்தார் ? "என்று வினவினார்.
" அவர் உண்ணும் உணவில் சிறிது எனக்கு அனுப்பி வைத்தார்" என்று நான் பதில் சொன்னேன்.
" அப்படியா ! அதைக் கொண்டு நீர் என்ன செய்யப் போகிறீர் ? அதனைப் பெற நாங்கள் அல்லவா அதிகம் உரிமை உள்ளவர்களாக இருக்கிறோம்.எனவே அதற்கு ஒரு விலையை நீர் கேளும் நாங்கள் தருகிறோம்"என்று கூறினார்கள்.
நான் அதன் விலை 20 தீனார் (பொற்காசு) என்று கூறினேன். அவர்கள் மறு பேச்சு இன்றி அப்பணத்தை என்னிடம் தந்து, அந்த 20 பட்டாணி கடலைகளையும் என்னிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள்.
நான் துறவியிடம் சென்று நடந்ததைக் கூறினேன்.
அது கேட்ட அவர், " நீர் தவறு செய்து விட்டீர். நீர் அவர்களிடம் ஒவ்வொரு பட்டாணிக்கடலைக்கும் ஆயிரம் தீனார் வீதம் 20 பட்டாணிக்கடலைக்கு இருபதினாயிரம் தீனார் கேட்டிருப்பின், அவர்கள் தந்திருப்பார்கள். இவற்றை விரும்பாத, இவற்றை வணங்காத ஒருவனுக்கு அளிக்கப்படும் கௌரவம் இதுவென்றால், இறைவனை வணங்கக் கூடிய ஒருவனுக்கு எத்தனை கௌரவம் கிடைக்கும் என்பதை எண்ணிப் பாரும். ஆதலின் ஹனீஃபே ! இனி நீர் அதனையும் ஏறிட்டுப் பார்க்காது இறைவனையே முன்னோக்கினவனாக இரும்" என்று கூறினார் .

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 11

" யார் பேரழகு ?... நிலவா ? நானா ?"



கலீபா ஹாரூன் ரஷீத் தன் மனைவி ஜுபைதாவுடன் பௌர்ணமி இரவன்று தம் மாளிகையின் நந்தவனத்தில் நிலவின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார்.
ஜுபைதா தம் கணவரை பார்த்து யார் பேரழகு.. ? நிலவா ? நானா ? என்று கேட்டார்.
அதற்கு அரசர், " அன்பே..! சுய உணர்வுடன்தான் பேசுகிறாயா..? மனதை ஈர்க்கும் சந்திரன் அழகு எங்கே ! நீ எங்கே ! நிலவுப் பெண்ணுடன் மனிதப் பெண்ணை ஒப்பிட முடியுமா ?
அரசி, " என் அழகுக்கு முன்னால் நிலவு நிற்கமுடியாது. நானே சந்திரனை விட அதிக அழகுடையவள் ஆவேன் " என்றார்.
இதைக் கேட்டதும் அரசருக்கு கோபம் வந்துவிட்டது . மன்னர்கள் எப்போதும் தங்கள் கருத்துக்கு எதிர்கருத்து வரவேக்கூடாது என்று எண்ணுபவர்கள்தானே !

" உன் வாதத்திற்கு நீ சரியான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் இல்லையேல், உன்னை தலாக்-விவாகரத்து செய்து விடுவேன்" என்றார் .
இதைக் கேட்டு, அந்த எழிலரசி ஒரு நிமிடம் திடுக்கிட்டுத்தான் போனாள். ஆயினும் கணவரைச் சமாதானப்படுத்த மன்னிப்பு கோரவும் அவர் விரும்பவில்லை . கணவரின் சவாலை அவர் ஏற்றுக்கொண்டார். இருவரும் சற்று மனத்தாங்கலுடன் நந்தவனத்தில் இருந்து திரும்பினர்.
அதிகாலை அரசி ஜுபைதா காத்தூன் தன்னுடைய அந்தரங்கத் தோழியிடம் எல்லா விபரங்களையும் கூறி, புஹ்லூல் தானா (ரஹ்) என்ற சூஃபி அவர்களிடம் அனுப்பினார்
"தாங்கள்தான் என் தாவாவுக்கு அத்தாட்சி அளிக்க வேண்டும். என் கணவரை விட்டுப் பிரிய விரும்பவில்லை. அவர் கோபத்தில் என்னை தலாக் சொல்லி விடுவதாக கூறிவிட்டார். இப்போது தாங்கள்தான் இப்பிரச்சனையை தீர்த்து வைக்கவேண்டும் " என்று தோழியிடம் சொல்லி அனுப்பினார்.
தோழிப்பெண் அவர்களைத் தேடிப்பிடித்து, செய்தியை சமர்ப்பித்தார் . புஹ்லூல் சூஃபி அவர்கள் அந்தப் பெண்ணைப் பார்த்து, " இம்மாதிரியான பிரச்சனைகளையெல்லாம் என்னிடம் கொண்டுவரக் கூடாது. கணவன் மனைவிக்கிடையே உள்ள பிணக்குகளைத் தீர்த்து வைப்பது என் வேலையல்ல .இந்த ஒரு முறை மட்டும் ஒரு பிரச்சனையை எடுத்துக் கொள்கிறேன். இனி அவர்கள் இது போன்ற காரியங்களில் ஈடுபடக்கூடாது என்று எச்சரித்தேன் - என்று உன் தலைவியிடம் சொல்லிவிடு" என்றார்.

அதிர்ஷ்டவசமாக அன்று வெள்ளிக் கிழமையாக இருந்தது. சூஃபி அவர்கள் வெகு சீக்கிரமே அரசாங்க பள்ளிக்கு வருகை தந்து, மன்னருக்கு உரிய பிரத்தியேக இடத்தில் அமர்ந்து கொண்டார் .
மஸ்ஜிதில் இமாம் சூஃபி அவர்களின் எளிமையான வெளித் தோற்றத்தைக் கண்டு, "ஹஜரத்..! இது அமீருல் மூமினீன் அமரும் இடமாயிற்றே ! தாங்கள் வேறு ஓர் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள் "என்றார் .

அதற்கு புஹ்லூல் , "மஸ்ஜித் இறை இல்லமாகும். கலீஃபா எப்படி ஓர் இறையடியாரோ அப்படியே நானும் ஓர் இறைடியான்தான்! இறை இல்லத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு எப்படி ஆகுமானதாகும் ?" என்றார்.
இமாம் ஒன்றும் சொல்லவில்லை. இன்று இந்த பரதேசியின் தலை கீழே உருளப்போகிறது என்று தமக்குள் எண்ணினார்.
புஹ்லூல் மஸ்ஜித் இமாமை நோக்கி, " சகோதரரே ! இன்று தொழுகையில் ' வத்தீனி ' அத்தியாயத்தை ஓதுங்கள். அவ்வாறு ஓதும்போது, 'லகத் கலக்னல் இன்ஸான பீ அஹ்ஸனி தக்வீம் ' لَقَدْ خَلَقْنَا الْإِنْسَانَ فِيٓ أَحْسَنِ تَقْوِيمٍ (நிச்சயமாக மனிதனை நான் மிக அழகான வடிவத்தில் படைத்தோம்) என்ற வசனம் வரும் இடத்தில், "லகத் கலக்னல் கமர பீ அஹ்ஸனி தக்வீம் (நிச்சயமாக சந்திரனை நாம் மிக அழகான வடிவத்தில் படைத்தோம்) என ஓதுங்கள் என்றார்.

பேஷ் இமாம் திடுக்கிட்டார். " அது என்ன இது திருக்குர்ஆனின் மாறுதல் செய்யும்படி ஏவுகிறீரா? நீர் கொல்லப்படுவதுடன் , என்னையும் கொலை செய்ய விரும்புகிறீரா ? "
சூஃபி அவர்கள் எந்த பதிலையும் அளிக்காமல், அவருடைய முகத்தை சற்று நேரம் கூர்ந்து பார்த்தார். அந்த பார்வையில் என்ன இருந்ததோ தெரியவில்லை. இமாம் இறங்கி வந்து, அவருடைய வேண்டுகோளுக்கு கட்டுப்பட்டு வத்தீனி அத்தியாயத்தை ஓதச் சம்மதித்தார்.
தொழுகை நேரம் நெருங்கியது. தொழுகையாளிகள் பள்ளியில் நிறைந்தனர். மன்னர் ஹாரூனும் வந்துவிட்டார் . தம்முடைய இடத்தில் ஒரு பக்கீர் வீர ஆவேசமாக அமர்ந்திருக்கக் கண்டு, அமைதியாக அவருக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.
இமாம் குத்பாவுக்குப் பிறகு தொழுகையை ஆரம்பித்தார். 'வத்தீனி' ஓதத் துவங்கி, "லகத் கலக்னல் கமர பீ அஹ்ஸனி தக்வீம்" என ஓதி விட்டார் !
உடனே மன்னர் கலீபா, " இமாம் திருக்குர்ஆனில் மாற்றம் செய்கிறார். அவர் சிரச்சேதம் செய்யப்பட வேண்டும்" என்றார் .

சூஃபி புஹ்லூல் குறுக்கிட்டு, " இல்லை ! திருக்குர்ஆனில் மாற்றம் செய்தது இமாம் அல்ல , மன்னர் கலீஃபாவாகிய நீங்கள்தான் மாற்றம் செய்து விட்டீர்கள். இங்குள்ள எல்லா குர்ஆனும் இரவோடு இரவாக மாற்றப்பட்டு விட்டது . இந்த மசூதி இமாம் அவர்களும் மன்னரின் விருப்பத்திற்கேற்ப மாற்றப்பட்ட வசனத்தை ஓதினார் " என்றார்.
இதைக் கேட்ட மக்கள் வியந்தனர்.
மன்னர், " நான் திருக்குர்ஆனில் மாற்றும் செய்தேனா ? எங்கே? எப்போது ? என்ன ஆதாரம் ?
சூஃபி அவர்கள் அலமாரியிலிருந்து ஒரு குர்ஆன் பிரதியை எடுத்து காண்பித்தார். அதில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதை கண்டு அதிர்ச்சி மன்னர் அடைந்தார் .
" நான் இந்த மாற்றத்தை செய்ய சொல்லவில்லை, அதுக்கு இறைவனே சாட்சி ! பெரியவரே , நீர் ஏனோ என் மீது வீண் பழி சுமத்துகின்றீர்கள்" என்றார்.

சூஃபி அவர்கள் , மன்னரை நோக்கி " நிலவை விட மனிதன் தான் அழகானவன் என்று நேற்று இரவு உன் மனைவி கூறிய போது, நீர் அதை ஏற்க மறுத்தீர் அல்லவா ? மனிதனைவிட நிலவுதான் அழகு என்று வாதிட்டீரே ! உமது துணைவியார் சொன்னதே உண்மை. இறைவனும் தன் திருமறையில் நாம் மனிதனை மிக அழகிய வடிவில் படைத்திருக்கின்றோம்' என்றுதான் கூறியிருக்கின்றான்.ஆனால் அதனை நீர் ஏற்றுக் கொள்ள மறுத்தீர்" என்றார் .
அரசர் உண்மை நிலையை அறிந்து பாவமீட்சி பெற்றார்.


கூடுதல் குறிப்பு :-

சூஃபி புஹ்லூல் தானா (ரஹ்) அவர்களின் மண்ணறை பாக்தாத் ரயில்வே நிலையத்திற்கு அருகில் உள்ளது. அவருடைய மண்ணறைக்கு பக்கத்தில் சீக்கிய மத ஸ்தாபகர் குருநானக் நாற்பதுநாள் தங்கியிருந்து தவம் செய்த இடம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் அங்கே அதனை தரிசிக்க செல்கின்றனர்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

சூஃபிகளின் உலகம் 12

மிஃராஜ் மாலை பாடிய ஆலிப் புலவர்



மண்ணுலகில் வாழ்ந்து கொண்டே பூத உடலோடு விண்ணுலகிற்கு அண்ணல் எம் பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செய்த விண்வெளிப் பயணம் மிஃராஜ். இந்த பயணத்தின் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு விண்ணுலகைக் காட்டச் செய்த ஏற்பாடு என்றாலும், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது அவர்களின் தோழர்களுக்கு இருந்த நம்பிக்கையை உரைத்துப் பார்க்கச் செய்த ஏற்பாடும் ஆகும் அது.
கனவில் செய்யலாம் அதுபோன்ற பயணத்தை. ஆனால் அது நனவில் செய்யப்பட்டது. அது தான் வியப்பான விசித்திரம்

பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது 'பானத் கஆத்' என்னும் புகழ்பாடி அதற்குப் பரிசாக அவர்களின் புனித மேனி மீதிருந்தப் போர்வையால் போர்த்தப் பெறும் பெரும்பேறு பெற்ற அரபிக் கவிஞர் கஃபு இப்னு ஸுஹைரின் வழிவந்தவர் 'மிஃ;ராஜ் மாலை' எனனும் அருங்காப்பியத்தைப் புனைந்த ஆலிப் புலவர் அவர்கள்.
அரபவனியில் இருக்கும்வரை உதிரத்தில் இருந்த கவித்திறன் அரபிக் கவிதைகளாக உருவெடுத்தது. அந்த உதிரத்திலிருந்த கவித்திறன் தமிழகம் வந்து தங்கி விட்டபோது தமிழ் கவியாக வடிவெடுத்தது. கஃபு இப்னு சுஹைரின் உதிரம் தம் உடலில் ஒடப்பெற்ற பாக்கியம் பெற்றவர் ஆலிப்புலவர் அவர்கள்.
அண்ணல் எம் பெருமானார் முஹம்மத் முஸ்தபா ரஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கனவில் காணவே பெரும் பேறு பெறவேண்டும். அவர்களை நனவில் காண எத்தகு பேறு பெற்றிருக்க வேண்டும்? அத்தகு பெரும்பேறு பெற்றவர்தான் ஆலிப்புலவர் அவர்கள்.
இன்று நெல்லை மாவட்டத்திலுள்ள " மேலச் சேவல் "என்று வழங்கப் பெறும் மங்கை நகரில் பிறந்தவர் ஆலிப்புலவர். மடாதிபதி ஒருவரின் இல்லத்தில் தங்கி தமிழ்கல்வி கற்ற இவர் மலையாள மொழியையும் அறிந்திருந்தார்.

முஸ்லிம்களுக்கென தமிழில் காவியங்கள் இல்லையென்றுணர்ந்த ஆலிப்புலவர், தாம் ஒன்று இயற்ற விரும்பி, அண்ணல் நபி ல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வான்பயணமான மிஃராஜை காவியமாக்க முனைந்தார்.

காயல்பட்டினம் சென்று நாஜி செய்யது முஹம்மத் அலாவுத்தீன் அவர்களிடம் அதற்கான உரைபெற்று காப்பியம் படைக்கத் தொடங்கினார்.ஹிஜ்ரி 998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அந்த நூலுக்கு 'மிகறாசு மாலை' என்று பெயரிட்டார்.
அதனை அரங்கேற்றுவதற்கு முஸ்லிம்கள் யாரும் உதவ முன்வரவில்லை. கோட்டாற்றில் வாழ்ந்த தம் மாணவர் சிவலிங்கம் செட்டியாரிடம் செய்தியைக் கூறியபோது, அவர் மனம் வருந்தி தம் நண்பர் பாவாடைச் செட்டியார் என்பவரிடம் அதுபற்றிக் கூறினார்.

கண் பார்வையற்றவரான பாவாடைச் செட்டியார் அப்பணிக்கான செலவை ஏற்று நடத்த முன்வந்தார். அவ்வாண்டு ரஜப் மாதம் முதற்பிறையன்று காவியம் அரங்கேற்றமாயிற்று.

ஆலிப்புலவர் அதன் 110,111 ஆம் பாடல்களைப் பாடியபோது எதிரேயிருந்த வேப்பமரத்தில் (இன்றைய வேம்படிப் பள்ளிவாசலில்) அண்ணல் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் திருத்தோற்றம் வழங்கி 'பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலின் தூணில் துளையிட்டு புராக்கைக் கட்டியது இறைவனுக்கும் ஜிப்ரீலுக்கும் எனக்கும் மட்டும்தானேத் தெரியும். நீர் அதனை எவ்வாறு தெரிந்து பாடினீர் ?' என்று வினவ, 'நானும் அறியேன் அவ்வாறு என் வாயில் வந்துவிட்டது' என்று புலவர் கூற அண்ணல் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் மகிழ்ந்து ஆலிப்புலவரைத் தழுவினார்கள். போர்வை ஒன்றையும் போர்த்தினார்கள். அப்போது அங்கு தோன்றிய ஒளியால் பாவாடை செட்டியாரும் கண்ணொளி பெற்றாராம். பெருமானரைக் கண்ட கண்களால் வேறொன்றையும் காணேன் என்று உறுதிபூண்ட ஆலிப்புலவர் தம் கண்களை மறைத்துக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனாராம்.

ஆயிரத்து நானூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட விண்ணுலகப் பயணம் மிஃராஜ்ஜை பற்றி நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நெய்யப்பட்ட நூல்தான் மிஃராஜ் மாலை என்னும் காவியம். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வயது அதிகம். ஆயினும் இருக்கும் நூல்களில் இது இரண்டாவதாகும். முதல்நூல் ஆயிரம் மசாலா.

ஒருநாள் பாளையங்கோட்டை சென்றபோது மக்ரிப் தொழுகையில் ஸஜ்தா செய்து கொண்டிருக்கும்போது ஆலிப்புலவர் அவர்கள் உயிர்நீத்தார்கள். அது நடந்த நாள் ஹிஜ்ரி 1000 ஆண்டு ரமளான் பிறை 27 வெள்ளிக்கிழமையாகும். அவரின் அடக்கவிடம் பாயையங்கோட்டையில் 'ஆலியபப்பா தர்கா' என்று அழைக்கப்படுகிறது.
அவருக்குப் பின் தோன்றிய உமர் புலவர் சீறாபுராணத்தில் மிஃராஜ் நிகழ்ச்சி பற்றிப் பாடாததற்குக் காரணம் ஏற்கனவே ஆலிப்புலவர் அதுபற்றி பாடிய காப்பியம் மக்களிடையே சிறப்புப் பெற்று வழங்கி வந்ததேயாகும். மேலும் அதுபற்றி அவர்பாட நினைத்தபோது, உமர் புலவரின் கனவில் ஆலியப்பா அவர்கள் தோன்றி அவ்வெண்ணத்தைக் கைவிடும்படி கூறியதுதான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.
ஆலிப்புலவர் ரஹ்மத்துல்லாஹி அவர்களின் உதிரம் அவர் வழி வந்தவர்களின் உடலில் ஓடியது. அவர் உதிரம் ஓடிய அவர்கள் பலரின் நாவில் கவி ஊறியது. ஆலிப்புலவர் அவர்களுக்கு ஓர் ஆண் மகனும் இரண்டு பெண்மக்களும் இருந்தனர். அவர்களின் சந்ததியினர் கோட்டாற்றிலும், மேலப்பாளயத்திலும் இன்னும் வேறுபல ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் பலர் பெரும்புலவர்களாகவும் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளனர். இன்னும் விளங்கிவருகின்றனர்.

(வரலாற்று தகவல்: பன்னுலாசிரியர் மர்ஹூம் எம்.ஆர்.எம் அப்துற் றஹீம்.) பதிவிலிருந்து ..

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 13

ஏர்வாடி செய்யிது இப்றாஹிம் வலியுல்லாஹ்



சுல்தான் சையத் இப்ராஹீம் வலியுல்லாஹ், புனித மதினா மாநகரில் கி.பி. 1145-ஆம் ஆண்டு சைய்யிதா ஃபாத்திமா என்ற அம்மையாருக்கும், மதினாவின் ஆளுநர் சையத் அஹ்மத் என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர்கள்.
இவர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பேரர் ஹுசைன்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் பதினாறாவது தலைமுறையினர் என்பது குறிப்பிடத்

தக்கது. இவர் ஆரம்பத்தில் ஆட்சி நிர்வாகத்தில் தந்தைக்கு உற்றத் துணையாக இருந்தார்கள். தமது 25-ஆம் வயதில் ஸைனப் என்ற பெண்மணியை மணந்து இல்லற வாழ்க்கையை இனிதே மேற்கொண்டார்கள்.

12 ம் நூற்றாண்டில் ஒரு நாள் அந்த ஆன்மீகச் செல்வர் உறங்கும் வேளையில் கண்மணி நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கனவில் திருக்காட்சி நல்கி தமிழ்நாடு சென்று தீனுல் இஸ்லாத்தை பரப்புமாறு பணித்து விட்டு மறைந்தார்கள்.
கனவு கண்டு விழித்த அந்த ஆன்மீக செல்வர் இறைவனுக்கு சிரம் தாழ்த்தி இறைத்தூதர் சொன்ன சொல்லை நெஞ்சில் ஏற்று இறைத்தூதரின் ஏவலின்படி தமது 42-ஆம் வயதில் இஸ்லாமிய சமயப் பிரச்சாரப் பணியை மேற்கொண்டார்கள்.

மார்க்கப் பணி சிறப்புடன் செய்ய தமது நெருங்கிய நண்பர்களுடனும், உறவினர்களுடனும் ஆலோசனை நடத்தினார்கள். அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள் அவரது மைத்துனர் ஜைனுல் ஆபிதீன் மற்றும் மாவீரர்கள் சையத் காதிறும், சையத் முகையிதீனும் ஆவர்கள். அவர்கள் ஆலோசனைக்கு ஏற்ப 'றூம்' நாட்டு அதிபதி மகமது பாதுஷாவின் உதவியை நாடினார்கள்.
'றூம்' நாட்டு மன்னர் மட்டற்ற மகிழ்ச்சியுடன் புனித தீன் பிரச்சாரப் பணியினை மேற்கொள்ளத் தேவையான பொருளுதவி மற்றும் ஆளுதவி செய்ய முன் வந்தார். தமது படைத் தளபதிகளில் மதிநுட்பத்திலும், வீரத்திலும், பொறுமையிலும், கல்வியிலும், சமயப் பற்றிலும், விவேகத்திலும் சிறந்தவரான அப்பாஸ் என்னும் துருக்கிய தளபதியை சுல்தான் சையத் இப்ராஹீம்(வலி)க்கு துணையாக அனுப்பினார்.

முதல் கட்டமாக கி.பி.1165-இல் ஈரான், ஈராக், பலுசிஸ்தானம் ஆகிய பகுதிகளைக் கடந்து சிந்து, முல்தான் பகுதிகளில் மூவாயிரம் தொண்டர்களுடன் வந்தடைந்து அமைதியான முறையில் இஸ்லாமியச் சமயப் பிரச்சாரம் செய்து வெற்றி கண்டார்கள்.
பிறகு அடுத்த கட்டமாக கி.பி. 1186-இல், கண்ணூர் வழியாகத் தமிழகம் வந்தார்கள். நெல்லை, மதுரை, நாகை ஆகிய பகுதிகளில் சமயப் பணி மேற்கொண்டு அமைதியாக இஸ்லாமியச் சமயக் கருத்துக்களை விளக்கி வியாக்கியானம் செய்து வந்தார்கள்.

அப்போது பாண்டி நாட்டை அரசாண்ட ஐந்து மன்னர்களுக்குள்ளும் சுமுக உறவு நிலவவில்லை. அவர்களுக்குள் போட்டியும், பூசலும், பகைமையும் மலிந்து காணப்பட்டன. இதன் விளைவாக மார்க்க விளக்கம் புரிய வந்த சுல்தான் சையது இப்ராஹீம்(வலி) அவர்கள், வாளேந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அந்நாளில் பவுத்திர மாணிக்க நகரை ஆண்டு வந்த விக்கிரம பாண்டியன் தன் தம்பி குலசேகர பாண்டியனுக்கு பங்கு கொடுக்காததால் தன் அண்ணன் மீது வெறுப்புற்று இந்த ஆன்மீக செல்வரின் உதவியை வேண்டி அவரையே தூதனுப்பி பேச செய்கிறான்.

ஆன்மீக செல்வரும் குலசேகர பாண்டியனின் பரிதாப நிலைக்கண்டு விக்கிரம பாண்டியனிடம் சென்று எவ்வளவு முறையிட்ட போதும் அவன் பங்கு கொடுக்க மறுத்து விடுகிறான்.
நியாயத்துக்காக போராடி நீங்கள் தான் எனக்கு வழிகாட்ட வேண்டும் என குலசேகர பாண்டியன் கெஞ்சலானான்.. ஆன்மீக செல்வரும் அதை ஒப்பு கொண்டு பங்காளி துரோகத்தை முறியடிக்க தன்னிடம் இருந்த போர் வீரர்களையும் குலசேகர பாண்டியனிடம் இருந்த படை வீரர்களையும் ஒன்று திரட்டி அநியாயக்காரனான விக்கிர பாண்டியனுடன் போர் புரிகிறார்கள்..
அப்போரில் திருப்பாண்டியன் தோற்கடிக்கப்பட்டான். பிறகு தப்பி ஓடி திருப்பதியில் தஞ்சம் புகுந்தான். இதனால் அச்சமுற்ற குலசேகரப் பாண்டியனும் நெல்லையை விட்டுச் சென்று முகவைப் பகுதியை ஆண்ட தமயன் விக்கரம பாண்டியனிடம் தஞ்சம் புகுந்தான்.
இதன் விளைவாக, நெல்லை, மதுரை ஆகிய பகுதிகள் சுல்தான் சையது இப்ராஹீமின் மேலாண்மையின் கீழ் வந்தன. இப்பகுதிகளை மீட்பதற்காக விக்கிரம பாண்டியன் சுல்தானுக்கு எதிராக போர் தொடுத்தான். இப்போர் 'பத்துநாள் போர்' என்றழைக்கப்படுகிறது. இப்போரில் விக்கிரம பாண்டியனுடைய படைகள் தோற்கடிக்கப்பட்டன. அவனது இரு புதல்வர்களும் பல தளபதிகளும் கொல்லப்பட்டனர்.
வெற்றி வாகை சூடிய சுல்தான் சையது இப்ராஹீம்(வலி) ஏறத்தாழ பன்னிரெண்டாண்டுகள் (கி.பி. 1195 முதல் கி.பி. 1207 வரை) பாண்டிய நாட்டின் கிழக்குப் பகுதியில் வைப்பாற்றிற்கும், வைகை நதிக்கும் இடைப்பட்ட பகுதியை ஆட்சி செய்தார்.

போரில் விக்கிரம பாண்டியன் உயிர் இழக்கிறான்.அதன் பின் அந்த ஆன்மீக செல்வர் குலசேகர பாண்டியனுக்கு சேர வேண்டிய பகுதியை அவனிடம் ஒப்படைக்கிறார்கள்.
மீதமுள்ள பகுதியை குலசேகர பாண்டியன் அந்த ஆன்மீக செல்வரிடம் ஒப்படைத்து அதை நீங்களே அரசாள வேண்டும் என வேண்ட அவன் விருப்படி அவனுக்கு முடி சூட்டி ஆட்சியில் அமர செய்து விட்டு

ஏனைய பகுதிகளுக்கு தாமே அரசராக பொறுப்பேற்று கி.பி.1195 முதல் 1207 வரை பன்னிரண்டு ஆண்டுகள் ஏழு மாதங்கள் செங்கோல் செலுத்தினார்கள்.

இதுவே தமிழ் மண்ணில் தோன்றிய முதல் முஸ்லிம் மன்னராட்சியாகும். இதன் தலைநகரம் பௌத்திர மாணிக்கப் பட்டிணமாகும்.
சுல்தான் சையது இப்ராஹீம்(வலி) தமது ஆட்சிக் காலத்தில் நாணயங்களை வெளியிட்டார்கள்.. அவரது சம காலத்தவர் சோழ நாட்டை ஆண்ட மூன்றாம் குலோத்துங்கன் என்பது குறிப்பிடத்தக்கது.
சுல்தான் சையது இப்ராஹீம்(வலி) எல்லா மக்களிடமும் குறிப்பாக முஸ்லிமல்லாதவர்களிடமும் அன்புடனும், பாசத்துடனும், மனித நேயத்துடனும் ஆட்சி புரிந்தார்கள். இஸ்லாமிய மார்க்க விஷயங்களிலும் தாராள தன்மையையே கடைப்பிடித்து ஒழுகினார்.
தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே 'முதல் முஸ்லிம் அரசர்' என்ற பெருமையுடையவரும் சுல்தான் சையது இப்ராஹீம்(வலி) அவர்களே!
தமிழ் மண்ணில் அமைதியான ஆட்சி ஏற்பட்ட பிறகு அப்பாஸ் தலைமையிலான படைகள் அரேபியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டன. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி விக்கிரம பாண்டியனின் உறவுக்காரனான வீரபாண்டியன் திருப்பதி மன்னனின் துணையுடன் படையெடுத்து வந்து கடுஞ் சமர் புரிந்து சுல்தான் சையது இப்ராஹீமை வெற்றி கொண்டான்.
முகவை மாவட்டத்திலுள்ள ஏர்வாடி என்ற இடத்தில் சுல்தான் சையது இப்ராஹீம் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மதினா மாநகரின் ஒரு பகுதியான **'யர்புத்'** என்ற இடத்திலிருந்து சுல்தான் சையது இப்ராஹீம் அவர்கள் புறப்பட்டு வந்ததால் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடமும் 'யர்புத்' என்றே அழைக்கப்பட்டது.
இச்சொல் நாளடைவில் மருவி 'ஏர்வாடி' எனலாயிற்று. அவருடைய 'தர்கா' இன்றளவும் இந்து – முஸ்லிம் கலாச்சாரப் பண்பாட்டின் இணைப்பாகவும், மத நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டாகவும் விளங்குவது பாராட்டுதற்குரியது.
அவர் 'ஷஹீதான' பிறகு அவரது தம்பி மகன் சையது இஸ்ஹாக், பாண்டிய மன்னரிடம் பெற்ற மானிய கிராமங்களை வைத்து பராமரித்து வந்தார்கள்.
Sufi Manzil பதிவிலிருந்து

ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 14

ஆத்தங்கரை அன்னை செய்யது அலி பாத்திமா ரலி -அன்ஹா

அவர்களின் வரலாறு



நெல்லை மாவட்டத்தில் பெட்டைக்குளத்துக்குத் தென் மேற்கேயுள்ள திசையன்விளை அருகே ஆற்றங்கரை. இது பிரசித்தி பெற்ற தர்காக்களில் ஆத்தங்கரை பள்ளிவாசலும் சிறப்பான தர்கா .இந்த தர்காவில் ஷேக் முஹம்மது (ரலி) செய்யது அலி பாத்திமா (ரலி அன்ஹா) இருவரும் அடங்கப் பெற்றுள்ளனர் .

செய்வினை, பில்லி, சூனியம் மற்றும் கெட்ட தீய ஆவிகளால் பீடிக்கப்பட்டவர்கள் நலம் அடைகின்றனர். நோய்களால் பாதிப்படைந்தவர்கள் இங்கு வருகின்றனர்.

ஆற்றங்கரை நாயகி என மக்ககளால் போற்றப்படும் தாய் செய்யது அலி பாதிமா நாயகி அல்லாஹ்வின் அருளால் நிகழ்த்திய அதிசயங்கள் எண்ணற்றவை என்கின்றனர் திசையன்விளை பகுதியில் உள்ள மக்கள்.

ஆத்தங்கரை செய்யது அலி பாத்திமா நாயகி அவர்கள் தன் கணவர் ஷேக் முகமது (வலி) அவர்கள் மீது அளவுகடந்த பிரியம் வைத்திருந்தார்கள். எல்லா நிலைகளிலும் அல்லாஹ், பெருமானார் முஹம்மது ரசூல் (ஸல்) அவர்கள் சொன்னபடி கணவனுக்கு கட்டுப்பட்டு வாழக் கூடியவர்களாகவும், தன் கணவரையே தனக்கு தாயாகவும், தந்தையாகவும், செய்கு என்னும் குருவாகவும், நண்பராகவும் எல்லா நிலைகளிலும் ஏற்றுக் கொண்டு காதலோடு வாழ்ந்து வந்தார்கள்.

திசையன்விளை அருகில் கடல் ஓரத்தில் இருந்த ஆத்தங்கரை என்ற பகுதியில் இஸ்லாம் மதத்தை பரப்ப வந்தார்கள்.

இவர்கள் அரபு நாட்டிலிருந்து வந்து மலையாள கரையில் இறங்கி, ஆறு பேர்களுடன் பெட்டைகுளம் போக எண்ணி இவ்வழியே வந்தவர்கள். தங்களுக்கு விரைவில் இறை அழைப்பு வருவதை உணர்ந்து இங்கே தங்கினார்கள்.

ஒருநாள் தொழுகையுடைய நேரமானதால், தனது குருவும் கணவருமான சேக் முகமது வலியுல்லாஹ் அவர்களுக்கு ஒளுகு செய்வதற்கு செய்யது அலி பாத்திமா (ரலி) அவர்கள் தண்ணீர் எடுக்க சென்றார்கள் .

தண்ணீர் எடுத்து திரும்பி வந்த பார்த்து போது தனது அருமை கணவர் உயிரிழந்த நிலையில் இருந்தார்கள். அருகில் பாம்பு ஒன்று படம் எடுத்தபடி நின்றுகொண்டிருந்தது.

செய்யது அலி பாத்திமா நாயகியைப் பார்த்ததும் அந்த பாம்பு அவர்களிடம் பேசியது. " அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டு நான் பேசுகிறேன். நான் தான் தங்கள் கணவர் சேகு முஹம்மது வலியுல்லாஹ் அவர்களை தீண்டினேன். நானாக கொத்தவில்லை.அல்லாஹ்வின் உத்தரவுப்படி தான் அது நடந்தது. அதன் காரணமாக தங்கள் கணவர் வபாத்தாகி விட்டார்கள் என அந்தப் பாம்பு சொன்னது.

தனது செய்ஹுவான அருமை கணவரை இழந்த செய்தியால் செய்யது அலி பாத்திமா நாயகி அவர்கள் கண்ணீர் விட்டு அழுதவர்களாக அல்லாஹ் விதித்ததை ஏற்றுக்கொண்டார்கள்.

தன் நிலையை பொருந்திக்கொண்டு, அல்லாஹ்விடம் இறைஞ்சியவர்களாக தன்னுடைய கடைசி நிலையும், தன் கணவரை போல் பாம்பு மூலமாகவே தீண்டப்பட்டு உயிர் வாங்கப்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் கோரினார்கள்.

அதன்படியே செய்யது அலி பாத்திமா நாயகி அவர்களையும் நாகப்பாம்பு கொத்தப்பட்டு, அந்த இடத்திலேயே கணவரின் உடல் அருகிலேயே வபாத்தாகி விடுகிறார்கள்.

அந்த பாம்பே அவர்களுக்கு (பாத்திமா என்ற பெயரோடு) மெய்காப்பாளராகவும் இன்றும் இருந்து வருகிறது.

புலிமாங்குளத்தில் உள்ள கரையாளர்களின் கனவில் தங்கள் வரவையும் , இறப்பையும் உரைத்து தங்களை நல்லடக்கம் செய்யுமாறு பணித்துவிட்டு மறைந்தனர். அவ்வாறு அவர்கள் வந்து தாம் கண்ட கனவைக் கூறி இவர்கள் இருவரையும் நல்லடக்கம் செய்து தர்கா அமைத்தார்கள்.

இச்சூஃபி தம்பதிகள் இறப்பெய்திய நாள் ஹிஜ்ரி1050 ரபியுல் அவ்வல் பிறை 14 வெள்ளிக்கிழமை இரவாகும்.

இவர்களின் நினைவு நாள் விழா ஆண்டு தோறும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வெள்ளி, திங்கள் இரவுகளில் இங்கு அதிகமானோர்கள் வருகின்றனர். அதிலும் கணிசமாக கேரளத்திலிருந்தும் வருகின்றனர் .

நோய்களும் , பேய் பிடித்தவர்களும் இங்கு வந்து தங்கி நலம் பெற்றுச் செல்கின்றனர் அவர்கள் தங்குவதற்கும் இங்கு இட வசதி செய்யப்பட்டு உள்ளது.

செய்யது அலி பாத்திமா அவர்கள் ஏர்வாடி இப்ராஹீம் ஷா நாயகத்தின் காலகட்டத்தில் கேரளாவில் இருந்து திருவனந்தபுரம் வழியாக தமிழகத்திற்கு இஸ்லாத்தை பரப்ப வந்தவர்கள். இவ்விருவரின் பூர்வீகம் அரபு தேசமாகும்.

அன்னை செய்யது அலி பாத்திமாவின் சகோதரிகள் மொத்தம் 5 பேர். ஐவரும் பெண் சூஃபிகளாக இவ்வுலகில் அல்லாஹ் தோன்றச் செய்தான்.

முதலாவது உள்ளவர்கள் திருவனந்தபுரத்தில் உள்ள பீமா பள்ளியிலுள்ள தாய் பீமா (ரலிஅன்ஹா)அவர்கள்.

இரண்டாவது உள்ளவர்தான் ஆத்தங்கரை செய்யது அலி பாத்திமா (ரலி அன்ஹா) அவர்கள் .

மூன்றாவது திசையன்விளையிலிருந்து ஆத்தங்கரை போகிற வழியில் ஆலங்குளம் என்ற ஊரில் உள்ள சின்ன புள்ள நாச்சியார் அம்மாள் (ரலி அன்ஹா) அவர்கள் .

நான்காவது தங்கை குஜராத்திலும், ஐந்தாவது தங்கை மகாராஷ்டிராவிலும் அடங்கப்பட்டுள்ளனர். அவர்களது புகழும் செய்யது அலி பாத்திமா நாயகி போலவே பிரசித்திப்பெற்றது தான் என்கின்றனர் திசையன்விளையில் வாழும் மக்கள்.

இந்த சூஃபி தம்பதியரின் கராமத் என்னும் இறைஅற்புதம் சுற்றியுள்ள எல்லா ஊர்களிலும் வாய்மொழிச் செய்தியாக நிறையவே பேசப்படுகிறது. இதனை கோர்வை செய்தால், அதுவே பெரும் தொடர் பதிவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

https://www.facebook.com/groups/1005069776595329/permalink/1288804588221845/

ரஹ்மத் ராஜகுமாரன் .

சூஃபிகளின் உலகம் 15 only video

சூஃபிகளின் உலகம் 16

நாகூர் ஷாஹுல் ஹமீது வலி ரலியல்லாஹு அன்ஹு



நாகூர் ஷாஹுல் ஹமீது வலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களது காலம் கி.பி 1532-1600 என அறிஞர்கள் கருதுகின்றனர்.
இப்போது உள்ள உத்திரபிரதேசத்தில் அயோத்திக்கு பக்கத்தில் இருக்கும் மாணிக்கப்பூர் என்ற ஊர் அக்காலத்தில் ஆன்மிகத்தில் சிறப்புற்று விளங்கியது. அவ்வூரில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அன்பு பேரர் ஹசன் (ரலி) அவர்களின் வழியில் வந்த ஹசன் குத்தூஸ் அவர்களுக்கும் அண்ணன் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு பேரர் ஹுசைன் (ரலி) அவர்களின் வழியில் தோன்றிய சையிது ஹமீதுத்தீன் அவர்களின் செல்வ மகள் பாத்திமா இவர்களுக்குப் பிறந்தவர்கள் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்கள்

இறைத்தூதர் ஹிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஷாஹுல் ஹமீதின் பிறப்பு குறித்து அன்னை பாத்திமாவுக்கு அறிவித்தார்கள். மூன்று மாத கருவாக இருந்தபோதே தனது அற்புதத்தை நிகழ்த்திவிட்டார்கள். ஷாஹுல் ஹமீது நாயகம். உடல்நலக் குறைவாக இருந்த தனது தந்தை நலம் பெறுவார் என்று தாயின் கருவறையில் குரல் எழுப்ப அவ்வாறே தந்தை குணமடைந்தார்.
ஆறுமாதக் கருவாக இருந்தபொழுது தனது தாயார் தொழுகைக்காக ஒழுச் செய்ய கிணற்றுள் விழுந்த பாத்திரத்தை தண்ணீரோடு தாயின் காலடியில் இருக்க வைத்தார். கருவறையில் இருந்தபடியே இரண்டு அதிசயங்களை நிகழ்த்திய ஹாஹுல் ஹமீது , ஹிஜ்ரி 910ம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் பத்தாம் நாள் வியாழன் மாலை வெள்ளிக்கிழமை இரவில் இப்புவியில் ஜனனம் செய்தார்கள்.

நாயகம் பிறந்ததும் ஹிலுரு அலைஹிஸ்ஸலாம் மற்றும் இல்யாஸ் நபிகள் அந்த அறையில் தோன்றினார். ஹிலுரு அலைஹிஸ்ஸலாம் குழந்தையை கையில் எடுத்து பாங்கு சொன்னார்கள். இல்யாஸ் நபி 'சையது அப்துல் காதிர்' எனப் பெயர் சூட்டிவிட்டு தாய்க்கருகில் கிடத்திவிட்டு மறைந்தார்கள்.
நாளரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த ஷாஹுல் ஹமீது நாயகம் சிறுவயதிலேயே நோன்பு நோற்பது, கேட்பவர் மெய் மறக்கும் நிலையில் திருமறையை இசையுடன் ஓதுவது, மார்க்க கடமைகளை முறையாக கடைப்பிடிப்பது என்று பக்தியில் திளைத்து வந்தார்கள்.
குர்ஆன், தப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹு ஆகிய மார்க்கக் கல்விகளையும் சரித்திரம், பூகோளம், கணிதம், தத்துவம், தர்க்கம், வானசாஸ்திரம் ஆகிய லௌகீகக் கல்விகளையும் பதினெட்டு வயது நிரம்புவதற்குள் கற்று முடித்தார்கள். இடையிடையே ஹிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சிறுவன் முன் தோன்றி வேதத்தை தெளிவாக்கி வைத்தார்கள்.

வாலிப பருவம் அடைந்தது ஷாஹுல் ஹமீது அவர்கள் தங்களுக்கான ஞானகுருவைத் தேடி ஹிஜ்ரி 928ம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் ஒரு திங்கட்கிழமை வழித்துணையின்றி, கைச்செலவுக்குப் பொருள் இன்றி, துறவுக்கோலத்துடன் குவாலியர் பட்டணத்துக்கு விரைந்தார்.
நடை பயணமாக காடுகளை கடந்து வந்து கொண்டிருந்த நாயகத்தை திருடர்கள் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் நெருங்கினார்கள். அவரிடம் பொருள் இல்லாததால் நாயகத்தை கொலை செய்யக் கருதி ஆயுதங்களால் வெட்டியவர்கள் தங்கள் உடல்களே துண்டாகி விழுந்தனர். கொள்ளையர்களின் உறவினர்கள் மன்னிப்பு கோரியதைத் தொடர்ந்து அவர்களின் உடலை ஒட்டி, உயிர் கொடுத்து அற்புதம் நிகழ்த்தினார்.

குவாலியர் நகரை நெருங்குகையில் அங்கிருந்த சிற்றூரில் ஒரு சிறிய மசூதியில் நாயகம் தங்கி தனது ஞானகுருவை இறைவனே காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அப்போது தோன்றிய அசரீரி 'ஷாஹ் அல் ஹமீது' என்ற கருணைப் பெயரை உமக்கு சூட்டியுள்ளோம். உமது ஞானகுரு முஹம்மது கௌது. அவரிடம் செல்' என்றது.
அதன்படி முஹம்மது கௌதுவிடம் சென்று அவரது மெய்ஞ்ஞான பயிற்சிக் கூடத்தில் பயின்று மெய்ஞ்ஞானத் தீட்சை பெற்றுக் கொண்டார். பத்து ஆண்டுகள் மெய்ஞ்ஞானக் கல்வி பயின்றவர் பின்னர் அங்கிருந்து கிளம்பினார்கள். அவருடன் நானூற்று நாற்பது சீடர்கள் உடன் சென்றனர்.
அப்போது மலைவழியாக வரும்போது ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்), ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் நாயகத்துக்கு "ரிக்வத் " எனப்படும் திருவோடு போன்றதொரு பாத்திரத்தை வழங்கினார்கள். தேவைபடும் போது தேவைப்பட்ட உணவை இதனின்று பெற்றுக் கொள்ளலாம்.

ஊர்தோறும் மக்களுக்கு உபதேசித்தும், உண்மையைப் பேணச் செய்து இஸ்லாத்தை நிலை நாட்டிக் கொண்டே நாயகம் அவர்கள் மாணிக்கப்பூர் வந்தடைந்தனர்.
அங்கு கொஞ்ச காலம் இருந்தவர்கள் வீட்டில் திருமண ஏற்பாடுகள் செய்வதை தடை செய்தவர்களாக சீடர்களுடன் லாகூர் சென்றார். அங்கு இறைவனின் ஆணைப்படி காழி நூருத்தீன் முஃப்தி என்பவரின் மனைவி ஜஹாரா பீபிக்கு தான் மென்ற வெற்றிலை தாம்பூலத்தை கொடுத்து அவரை கருவுறச் செய்தார்கள்.
அவர் பெறப்போகும் முதல் குழந்தைக்கு 'முஹம்மது யூசுஃப்' என பெயரிட நூருத்தினிடம் தெரிவித்ததோடு, குழந்தையின் தன்மை குறித்தும் தெரிவித்த நாயகம் தன் சீடர்களுடம் பயணத்தை தொடர்ந்தார்.
மேற்கு, தென்மேற்கு ஆசிய நாடு நகரங்களைச் சுற்றிக்கொண்டு துருக்கி தேசத்தினுள் புகுந்த நாயகம், கர்ஸான என்ற பட்டணத்தை அடுத்துள்ள மலையில் நாற்பது நாட்கள் தனித்து சில்லா இருந்தார்கள்.
அன்று ஹிஜ்ரி 952 ம் ஆண்டு ரஜப் மாதம் 12&ம் நாள் லாகூரில் ஜஹாரா பீபிக்கு மகன் பிறந்தான். மனக்கண்ணால் தன் மகனை கண்டு உரையாடி முத்தமிட்டு மகிழ்ந்தார்கள்.

ஒருநாள் இரவு தொழுகையின் போது தனது தந்தை மரணிப்பதை அறிந்து தன் சீடர்களுடன் ஒரே இரவில் ஆசியா மைனரிலிருந்து இந்தியாவின் மாணிக்கப்பூரை நடந்தே அடைந்து அதிசயம் நிகழ்த்திய நாயகம் தந்தை மறைந்து 40 தினங்களுக்குப் பின் அரேபியாவுக்கு கிளம்பினார்கள்.
அங்கு மக்கா, மதீனாவில் ஹஜ்ஜு செய்தபடி இருந்தார் நாயகம். அப்போது நாயகம் நிகழ்த்திய அதிசயத்துக்கு பரிசாக இபுனு ரவூஃப் தனது கப்பலை நாயகத்துக்கு சொந்தமாக்கி பத்திரம் கொடுக்க, அதை தன்னிடம் வந்து யாசித்தவனுக்கு கொடுத்துவிட்டு கஃபாவை நோக்கி நடந்தார்கள்.
நாயகம் அவர்கள் தங்களின் 37 ம் வயதில் ஜித்தா துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறி கேரளாவின் பொன்னாணி எனும் ஊரில் கரையிறங்கினார்கள். அப்போது நாயகத்துடன் அவரது மகன் யூசுஃப் ஆண்டகையும் இருந்தார்கள்.

பின்னர் அங்கிருந்து லட்சத்தீவுகள், சிலோன் முதலிய வெளிநாடுகளுக்கும், காயல்பட்டணம், நத்தம், மேலப்பாளையம் போன்ற பகுதிகளுக்கும் சென்று இறைப்பிரசங்கம் செய்தார்கள்
தஞ்சாவூரில் அதை ஆட்சி செய்த அச்சுதப்ப நாயக்கன் உடல்நலம் குன்றியிருந்தார். நாயகத்தின் சிறப்புகள் தெரிந்து அவரைக் கண்டு நோய் நீங்கப்பட்ட மன்னன், அதற்கு வெகுமதியாக நிலங்களைக் கொடுத்தான். அந்த இடத்தின் பகுதியில் தான் தர்காவும், அதைச் சேர்ந்த குளம் முதலிய கட்டிடங்களும் அமைந்துள்ளன.
ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் நாஹுரில் இருபத்தெட்டு வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.
அற்புதங்கள் பல நிகழ்த்திய நாகூர் நாதர் ஹிஜ்ரி 978ம் வருஷம் ஜமாதுல் ஆகிர் மாதம் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமை இரவு புகழுடம்பு எய்தினார்கள்.
தர்கா வரலாறு:

ஆற்காட்டை ஆண்ட நவாபுகள் இவர்களது பெயரால் தஞ்சாவூர் நகரை காதர் நகர் என பெயரிட்டனர். நாகூர் பகுதியில் அமைதி வழியில் தனது அன்பு அழைப்பால் எண்ணற்ற மக்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டுவந்த பெருமை நாகூர் ஆண்டகை அவர்களைச் சாரும். இவர்களது அருட்கொடையைத் தொடர்ந்து பெறும் பொருட்டு தமிழகத்தின் பிற பகுதியிலிருந்தும் முஸ்லிம் மக்கள் இங்கு வந்து குடியமர்ந்தனர். இஸ்லாமியர் பெருகினர். இப்பகுதியில் இஸ்லாம் செழித்தோங்கியது.
நாகூர் நாயகம் மறைந்ததும் அவரது புதல்வர் தனது மனைவி, மக்களுடன் அங்கு குடித்தனம் நடத்தி வந்தார். அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இவர்களுக்கு ஆதரவாக இருந்ததோடு நாயகத்தின் கஃப்ரை சுற்றி பலகையால் பள்ளி போல் அடைத்தார்கள். அந்தப்பள்ளியே இன்று அழகிய ஐந்து மினாராக்களை(கோபுரம்) உடையதாய் விளங்குகிறது.

மராட்டிய மன்னர் பிரதாப்சிங் (1739-1763) நாகூர் தர்கா கட்டிடங்களை விரிவு படுத்திக் கட்டினார். இம்மன்னர் நாகூர் தர்கா கட்டிடங்களின் Founder என்று சொல்லப்படுகிறது. மேலும் பிரதாப்சிங் தர்காவின் பராமரிப்பிற்கு பதினைந்து கிராமங்களை மானியமாக அளித்ததாக கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.
தர்காவில் உள்ள மிக உயரமான (131) அடி மனாராவைக் கட்டியதும் இம்மன்னரே ஆவார்.
பிரதாப்சிங்கிற்குப் பிறகு வந்த மராட்டிய மன்னர்களும் தர்காவிற்கு பல கொடைகள் வழங்கியுள்ளனர்.
முதல் மினாராவை இப்ராஹீம் கான் என்பவர் ஹிஜ்ரி ஆயிரத்து ஐம்பத்தைந்தாம் வருடம் கட்டினார். இதற்கு சாகிபு மினாராவென்று பெயர்.
இரண்டாம் மினாராவை செய்யது மரைக்காயர் கட்டிக் கொடுத்தார். இம்மினாரா நாயகத்தின் தலைப் பக்கம் இருப்பதால் தலைமாட்டு மினாரா எனப்படுகிறது. இந்த மினாராவில் இந்து அன்பர் ஒருவர் சின்ன தங்கக் கலசத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.
மூன்றாம் மினாரா(முதுபக்கு மினாரா) மலாக்காவை சேர்ந்த பீர் நெய்னா என்பவராலும், நான்காம் மினாரா (ஓட்டு மினாரா) பரங்கிப்பேட்டை நீதிபதி தாவுக்கான் என்பவராலும், ஐந்தாம் மினாரா(பெரிய மினாரா) தஞ்சையை ஆண்டுவந்த பிரதாபசிங்கு மன்னனாலும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பெரிய மினாரா 131 அடி உயரம் கொண்டதாகும்.

நாகூர் தர்கா ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. சக்கரவர்த்தி சுல்தான் துல்கர்னைன் கட்டிய முதுபக்கு(1). இந்த ஸ்தலத்தில் தான் நாயகம் மரணித்தார்கள். இந்த ஸ்தலத்தில் உள்ள அற்புதக்கேணியின் தண்ணீரை புண்ணிய தீர்த்தம் என்று கருதி பக்தர்கள் எடுத்து செல்லுகின்றனர்.
நாயகத்தின் இறந்த உடலை குளிப்பாட்டி யாஹுசைன் பள்ளி. இது முதுபக்குக்கு வெளியில் தென்புறத்தில் இருக்கின்றது. நாயகத்தின் உடலை குளிப்பாட்டிய தண்ணீர் தேங்கி நின்ற சிறிய குட்டை தான் தர்கா குளம். குட்டை போலிருந்ததை அச்சை சுல்தான் பெருங்குளமாக வெட்டி தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்தான்

தர்காவில் இருக்கும் பீர்மண்டபம். திருவிழாக்காலங்களில் பீர் சாயபு என அழைக்கப்படும் தபோதனர்கள் 3 நாள் உபவாசம் இருந்து நோன்பு திறந்துவிட்டு பீர்மண்டபத்தில் வந்து அமர்வர்.
நாயகம் திருமுடியிறக்கிய கடற்கறை ஓரம் தான் சில்லடி என்ற ஆலயம் இருந்து வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாவும் நடந்து வருகிறது.
நாயகம் அவர்கள் 40 நாள் இறைதியானம் இருந்த புண்ணிய ஸ்தலம் வாஞ்சூர் பள்ளிவாசல். இது நாகூரிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ளது.
ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது பாதுஷா ஆண்டவர்களின் சன்னதி 7 வாயில்கள் கொண்டது. இவை அனைத்தும் வெள்ளித் தகட்டால் வேயப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாசலிலும் நூற்றுக்கணக்கான குத்துவிளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. இந்த சந்நிதிக்குள் எந்த மதத்தினரும் செல்லலாம்.

இஸ்லாமிய சட்டத்திட்டத்தின் படி கடைசி மூன்று வாசல்களை கடக்க மட்டும் பெண்களுக்கு அனுமதியில்லை. நாகூர் ஆண்டவர், அவரது மகன் முகம்மது யூசுஃப், மருமகள் செய்யிதா சுல்தான் பீவி அம்மாள் ஆகியோரின் சமாதிகள் உள்ளே அமைந்துள்ளது.
நாகூர் ஆண்டவர் இடுப்பில் கட்டியிருந்த இரும்புச்சங்கிலி, குமிழ்கள் இல்லாத காலணி, அதிசயம் நிகழ்த்திய கொம்புத் தேங்காய் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அரபி மாதம் ஜமாத்துலாகிறு பிறை 1 ல் தர்காவில் கொடியேற்றத் திருவிழா நடக்கும் பிறை 10ம் நாள் இரவு நாகையிலிருந்து அதி விமரிசையாக சந்தனக்கூடு புறப்பட்டு வந்து ஆண்டவர்கள் சமாதியில் சந்தனம் பூசும் வைபவம் நடைபெறும்.
பிறை 11 ல் பீர் ஏகுதல் நடைபெற்று 14-ம் இரவு இறுதிக்கட்டம் அடையும். இந்த திருவிழாக்களில் அனைத்து மதத்தினரும் கலந்து கொள்கின்றனர். நாகூர் சமாதியில் போர்த்தப்படும் சால்வை, மலர்ப் போர்வை பழனியைச் சேர்ந்த ஒரு இந்துக்குடும்பத்தாரால் இன்றளவும் கொண்டுவரப்படுகிறது. நாகூர் தர்காவை நாயகத்தின் வாரிசுகளான சுமார் 640 குடும்பத்தினரே நிர்வகித்து வருகின்றனர்.
நாகூர் ஆண்டவர் தஞ்சாவூர் நாயக்க மன்னர் அச்சுதப்ப நாயக்கரின் (1560-1614) நோயினைத் தீர்த்து வைத்ததாகவும் அவர்களது அருளினால் மன்னனுக்கு ஒரு ஆண் மகவு பிறந்ததாகவும் 'கஞ்சுல் கராமத்து' கூறுகிறது.
அனைத்து மதத்தினருக்கும் அற்புதங்கள் நிகழ்த்தி வருகிறார் நாகூர் ஆண்டவர்.Sufi Manzil பதிவிலிருந்து

ரஹ்மத் ராஜகுமாரன்.

Sadayan Sabu

//இந்த மினாராவில் இந்து அன்பர் ஒருவர் சின்ன தங்கக் கலசத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.// கூத்தாநல்லூரைச் சேர்ந்த மஹாதேவ அய்யர் என்பவரே அந்த இந்து அன்பர். கூத்தாநல்லூரில் தலைமுறை தலைமுறையாக ஜவுளி வியாபாரம் செய்து கொண்டிருக்கும் தொழிலதிபர். தவிர, நாகூர் ஆண்டவர் எங்க ஊரில் மார்க்கப் பணிக்காக வந்த போது, அந்தக் கால விவசாயிகள் நாகூர் ஆண்டவருக்கு தங்க இடமும் உணவும் கொடுத்து உபசரித்ததால், நாகூர் ஆண்டவர்கள் எங்க ஊர் மக்களை ஆசீர்வதித்து வாழ்த்தி சென்றதால் இன்றும் கூத்தாநல்லூர் செல்வச் செழிப்போடு இருக்கிறது. நாகூர் ஆண்டவர்கள் தங்கியிருந்த இடம் இன்றும் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

சூஃபிகளின் உலகம் 17

சூஃபிகளின் உலகம் - பதிவுகள் வந்ததிலிருந்து அகீதாவுக்கு மாறுபட்டோர் அநேகர் பின்னூட்டத்தில் ஷிர்க் , புருடா என்றெல்லாம் Command செய்கிறார்கள். அவர்களின் பின்னூட்டங்களை Delete செய்தாலும், அவர்கள் மீது கோபம் ஏதும் வராமல் எனக்கு பரிதாபம்தான் வருகிறது. அவர்களுக்காக இந்தப் பதிவு .
சூஃபிகளின் உலகில் ஏக காலத்தில் பல எண்ணிக்கையுள்ள பலவகை படித்தரங்கள் உடைய அவ்லியாக்கள் -குதுபுமார்கள் - அப்தால்கள் - அவுத்தாதுக்கள் - நுகபாக்கள் - நுஜபாக்கள் என்ற பதவி உடையவர்கள் ,உலக முடிவு நாள் வரையில் இருந்தே வருவார்கள் என்றும்..

ஹகீகத்தில் ஈருலகையும் கண்காணிப்பவர்கள் அவர்கள் தானென்றும் ,அவர்களை முன்னிட்டே பலாய் ,முஸீபத்துகள் விலக்கப்படுவதாயும் ஹதீதுகள் பல காணப்படுகின்றன. அன்னார் அனைவருக்கும் குத்பே அதிபராவார் . அன்னாரை கௌது என்றும் சொல்லப்படும் .இது பற்றிய ஆதாரங்கள் பல இருப்பினும் சிலவற்றை மட்டிலும் இங்குக் குறிப்பிடுவது போதுமெனக் கருதுகின்றோம் .
" ஆண்டவா ! என் மீது நபிமார்கள் நடந்து திரிந்தார்கள் . அவர்களுக்குப் பிறகு நபிகள் பெருமான் அவர்களைச் சுமந்திருந்தேன்.தற்போது அவர்களும் சென்று விட்டார்களே ,நான் தனித்துவிட்டேனே ,என் மீது எந்த நபியும் இல்லையே " என்பதாய் பூமி பிரலாபித்து இறைவனிடம் முறையிட்டுக் கொண்டது .
' நான் சில அவ்லியாக்களை அனுப்புவேன் .அவர்களது இருதயங்கள் நபிமார்களது இருதயங்களைப் போலிருக்கும் .அவர்கள் யுகமுடிவு வரை உன் மீது சஞ்சரிப்பார்கள் ' என்று ஆண்டவன் பூமிக்கு அறிவித்தான் '
....என்ற இவ்விஷயத்தை ஸாலிஹான இறையருள் நேசரான பெரியார் ஒருவர் தமது உலக யாத்திரையின் போது , நித்திய ஜீவனுடைய ஹழ்ரத் கிழ்று அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்திந்த சமயம் அன்னாரைக் கேட்டு தெரிந்து கொண்டதாக , 'மவாஹிபுல் மஜீது பி மனாகிபி ஷாஹுல் ஹமீது' என்னும் கிரந்தத்தில் காணப்படுகின்றது .

' அந்த அவ்லியாக்கள் ஏகத்தில் 440 பேர்கள் .அவர்களுள் நுஜபாக்கள் 300,நுகபாக்கள் 70, அப்தால்கள் 40,அகியார்கள் 10,உறபாக்கள் 7, அன்வார்கள் 5,அவுத்தாதுகள் 4,முக்த்தார்கள் 3, குத்பு ஒருவர் . குத்பே அனைவருக்கும் அதிபராவார் . இன்னாரை கௌது என்றும் சொல்லப்படும் .

இவர்களுள் யாரும் மரணமாவார்களாயின் அவர்களுக்கடுத்த படித்தரத்தில் இருப்பவர்கள் அந்த ஸ்தானத்திற்கு மாற்றப்படுவார்கள் . அங்ஙனம் பதவியில் உயர்த்தப்படும் போது ,கீழ்ப் படித்தரத்தில் உள்ள நுஜபாக்கள் காலியாகுமிடத்தில் ஸாலிஹீன்களான முஸ்லீம்களில் ஒருவர் அந்த ஸ்தானத்தில் அமர்த்தப்படுவார்"
..என்று ஹழ்ரத் கிழ்று அலைஹிஸ்ஸலாம் கூறியதாக 'மனாகிபுகுத்பில் மஜீதிஸ்ஸையிது ஷாஹுல் ஹமீதில் மாணிக்கப்பூரயில் மவுலிதிந் நாகூரிய்யில் மர்கதி' என்ற கிதாபில் மாதிஹுர் ரஸூல் அல்லாமதுஷ் ஷைகு சதகதுல்லாஹில் காஹிரிய்யில் ஸித்தீக்கி رضي الله عنها அவர்களது சீடர் அல்லாமா ஆரிபுபில்லாஹ் மஹ்மூது தீபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் , 'மவாஹிபுல் மஜீது பி மனாகிபி ஷாஹுல் ஹமீது' எனும் கிதாபில் காயல்பட்டணத்தில் பிறந்து கீழக்கரையில் அடங்கி இருக்கும் இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்ற அல்லாமதுல் பாளில் ஸையிது முஹம்மது ஆரிபுபில்லாஹி رضي الله عنها அவர்களும் கூறுகின்றார்கள் .

இவை போன்று பல அபூர்வ விளக்கங்களை 'மஜ்மூ அத்துர்து ரஸாயில்' 2வது பாகம் 264வது பக்கத்தில் 'ரத்துல் முஹ்தார்' இயற்றிய அல்லாமா இப்னு ஆபிதீன் رضي الله عنها அவர்கள் விபரமாக வரைந்துள்ளார்கள் .
மேலும் இமாம் ஷஃரானி رضي الله عنها அவர்கள் 'அல்யவாக்கீது வல் ஜவாஹிர் ' என்னும் கிரந்தத்தில் குத்புமார்களின் தரஜா,பதவிகளை விவரமாக எழுதியுள்ளார்கள். இன்னும் இமாம் இப்னு ஹஜர் மக்கீ رضي الله عنهاஅவர்கள் தங்கள் 'பதாவா ஹதீதிய்யாவிலும்' விவரமாக குறிப்பிட்டுள்ளார்கள் .
மேலும் என்னுடைய உம்மத்துகளில் நாற்பது நபர்கள் நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய இருதயத்தை உடையவர்களாய் என்றும் இருந்தே வருவர்.

அல்லாஹுத்தஆலா அந்த நபர்களைக் கொண்டு பூலோகத்தில் வாழுபவர்களை விட்டும் பிணிகளைப் போக்குவிப்பான் . அவர்களுக்காக மழையைப் பொழியச் செய்வான் . அன்னவர்களைக் கொண்டு தான் பூலோகத்தில் உள்ளவர்களுக்கு உதவி புரியப்படும் என்பதாய் எம்பெருமானார் ﷺ அவர்கள் திருவாய் மலர்ந்து அருளிய ஹதீது தபறானீயில் காணக் கிடைக்கின்றது .
குத்புக்கே கௌது என்று பெயர். அவர் ஒருவருக்குப் பின் ஒருவராக வருவார். படைப்புகளை எல்லாக் கருமங்களிலும் அன்னார் இரட்சிக்கக் கூடியவராக இருப்பதனால் கௌது என்று பெயர்.
அன்னவருக்கு வலம் ,இடம் , இருபக்கங்களிலும் அரசர்களுக்கு இருப்பதுபோல் இரு அமைச்சர்கள் உள்ளனர் .கேளாது உடைய உத்தரவு கொண்டு வலது பக்கமிருப்பவர் மறைவுலகங்களான ஆலமுல் கைப்பு,ஆலமுல் மலக்கூத்தை நிர்வகித்து வருகின்றார் .

இடது பக்கமிருதுப்பவர் வெளி உலகமான ஆலமுஷ் ஷஹாதத்தை கண்காணித்து வருகின்றார் என்ற விபரத்தை வேலூர் பாக்கியத்துஸ் ஸாலிகாத் ஸ்தாபகர், ஹஜ்ரத் ,அல்லாமா ஷைகு அப்துல் வஹ்ஹாப் ஸாஹிபு رضي الله عنهاஅவர்களது ஆத்மீக ஆசிரியர் ஹஜ்ரத் ஆரிபுபில்லாஹ் ,அல்லாமா ஷைகு ஷாஹ் முஹ்யித்தீன் ஸாஹிபு வேலூரி رضي الله عنها அவர்கள் 'ஜவாஹிருஸ்ஸுலுக்கு' என்னும் கிரந்தத்தில் 114வது பக்கத்தில் வரைத்துள்ளார்கள் .
மேலும் இது போன்ற விபரங்கள் தப்சீர் ரூஹுல் பயான் பாகம் 2,பக்கம் 363லும் , ஷைகுல் அக்பர் இப்னு அரபி رضي الله عنها அவர்களைக் கொண்டும் விபரமாகச் சொல்வதை அறிவிக்கப்படுகிறது .
"அந்தரங்க,பகிரங்க ஆபத்துக்களில் நின்றும் குத்புமார்களைக் கொண்டே ஆண்டவன் அகிலத்தைப் பாதுகாத்துக் கொள்கிறான் " என்று தப்சீர் ரூஹுல் பயான் பாகம் 9,பக்கம் 102ல் கூறப்பட்டுள்ளது .
மேலும் விபரமாகத் தெரிய முஜ்தஹிது,ஹாபிளு அஹா தீதெ நபவிய்யா ,இமாம் ஷைகு ஜலாலுதீன் ஸுயூத்தி رضي الله عنها அவர்கள் இயற்றிய 'ரிஸாலா அல் கப்ருதால்லு அலாவுஜூதின் நுகபா வல் அக்த்காபி வல் அவ்த்தாதி வல் அப்தால்' என்ற நூலையும்,அல்லாமா பாகீஹ் இப்னு ஆபிதீன் رضي الله عنها அவர்கள் இயற்றிய 'மஜ்முஅத்துர் ரஸாயில்' நூலையும் நோட்டமிடுக .

அவ்லியாக்களுள் இரு வகுப்பார் உண்டு.ஒரு வகுப்பார் ஆண்டவனுடைய பாதையில் கஷ்டப்பட்டு தெண்டித்து அவனளவில் தன்னை அளித்து பனாவாகியவர்கள் . இவர்களுக்கு கஸ்பீ என்று சொல்லப்படும் .மற்ற வகுப்பார் ஆலம் அர்வாஹ் எனும் ஆன்ம லோகத்திலேயே ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் . இவர்களுக்கு அத்தாயீ என்று கூறப்படும் . குத்பு ,கௌது ஆகியோர் அத்தாயீ வகுப்பைச் சேர்ந்தவர்களே . [நூல் - ஜவாஹிருஸ் ஸுலூக் ,பக்கம் 114]

குத்பு என்ற பதத்திற்கு 'முளை' 'துருவம் ' என்றும் ,கௌது என்ற பதத்திற்கு 'இரட்சிப்பவர் - நாயன் நோட்டமிடும் ஸ்தானம்' என்றும் பொருளைப் பயக்கி நிற்பினும் ,அவற்றின் அந்தரங்கம் பல அரும்பெரும் இரகசியப் புதையல்களைத் தன்னுள் அடக்கியதாய் அமைத்து கிடக்கின்றன. இன்னவர்கள் மூலமாகத் தான் முதலவன் தன்னிருக்கையை அறிக்கை செய்ய வேண்டியதிருக்கிறது . அன்றேல் , இருள்படர்ந்து மூடி அகிலம் அந்தகார்த்துள்ளாழ்ந்து பாழ்பட்டு போகும் .

இறைவன் தன்னடியார்களுக்கு அளித்துள்ள கைம்மாறிளக்க வொண்ணாப் பெரும் பேறு அத்தனையையும் ஒரு தட்டிலும் , குத்பை அனுப்பித் தந்த அருட்பெருங்கொடையை மற்றோரு தட்டிலும் வைத்து சீர்தூக்கி பார்ப்போமாயின் ,குத்பால் பெற்ற கிருபையளவே கனத்து முறுகி நிற்கக் காண்போம் .இன்னாரைப் பற்றி இறைவன் குர்ஆன் ஷரீபில்


اَلَاۤ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ۚۖ

" நிச்சயமாக அல்லாஹ் உடைய அவ்லியாக்களுக்கு பயமென்பதுமில்லை கவலையென்பதுமில்லை " என்பதாய் (10:62) அருளியுள்ளான் .

மேற்கூறப்பட்ட அத்தனை விஷயங்களும் உண்மை என்று நாங்கள் ஈமான் கொண்டு சுன்னத்துல் ஜமாத் கொள்கையில் இருக்கிறோம் .மாற்றுக் கருத்துடையவர்கள் தயவு செய்து என் பதிவுகளை தவிர்க்கவும்.
ரஹ்மத் ராஜகுமாரன்

சூஃபிகளின் உலகம் 18

ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிர் அல்-ஜிலானி
கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்



மெய்நிலை கண்ட ஞானி, மாபெரும் தவசீலர் காதிரியா தரீக்காவின் நாயகர், முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், (1078–1165) இவர் ஈராக்கில் உள்ள ஜீலான் என்ற ஊரில் ஹிஜ்ரி 470 ஆம் ஆண்டு (கி.பி. 1078 மார்ச் 19) ரமலான் மாதம் பிறை 1-ல் திங்கட்கிழமை இரவு ஸஹர் நேரத்தில் ஈராக் நாட்டின் ஜீலான் என்னும் நகரை ஒட்டிய நீப் என்னும் கிராமத்தில் பிறந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் தலைமுறையில் பிறந்த பேரப் பிள்ளையாவார்கள். இவர்களின் தந்தையாரின் பெயர் ஸைய்யது அபூ ஸாலிஹ் இப்னு மூஸா ரழியல்லாஹு அன்ஹு, தாயாரின் பெயர் உம்முல் கைர் என்னும் அமத்துல் ஜப்பார் ரழியல்லாஹு அன்ஹா என்பதாகும். இவர்கள் தந்தைவழியில் ஹஸனியாகவும் தாய்வழியில் ஹுஸைனியாகவும் விளங்குகிறார்கள்.

இவர்கள் காதிரிய்யா என்ற இஸ்லாமிய சூஃபி சிந்தனைப் பிரிவைத் தோற்றுவித்த இஸ்லாமிய சூஃபி அறிஞர் ஆவார்கள்.
அப்துல் காதிர் ஜிலானி (ரலி) அவர்கள் ஆரம்பக்கல்வியை தனது 6 வது வயதில் சொந்த ஊரிலேயே பெற்றார்கள். கி.பி.1095 இல் தனது பதினெட்டாம் வயதில் உயர்கல்வியைக் கற்பதற்காக ஈராக்கின் பக்தாத் நகருக்கு சென்றார்கள். 30 வருடங்கள் கல்வி கற்பதில் செலவிட்ட அவர்கள் பின்னர் அதே கல்விநிலையத்தில் ஆசிரியப்பணியிலும் , மார்க்கதீர்ப்பு வழங்கும் பணியிலும் ஈடுபட்டார்கள்.
எல்லா விதமான கல்வியையும் கற்ற பின் தனக்கு ஒரு ஆத்மீக வழிக்காட்டி தேவை என்பதையும் அதுவே தன்னை அல்லாஹ்விடம் நெருங்கச் செய்யும் வழி என்றும் உணர்ந்தார்கள். எனவே தனக்கு ஆத்மீக வழிக்காட்ட ஒரு ஞானகுருவை தந்தருளுமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சினார்கள்.

அப்பொழுது இறைவன் அவர்களுக்கு ஷைகு ஹம்மாத் என்னும் மார்க்க பெரியாரை தேர்ந்தெடுத்து கொடுத்தான். அந்த ஷைக் அவர்கள் கௌஸுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பலவகையான ஆத்மீக ஞானங்களை கற்றுக்கொடுத்தார்கள்.

பல கடுமையான சோதனைகளை செய்தார்கள். எனினும் கௌஸுல் அஃலம் அவர்கள் சகிப்புதன்மையுடனும், திட நம்பிக்கையில் மலையாகவும் விளங்கினார்கள். பின் மூன்று ஆண்டுகளில் 'தஸவ்வுஃப்' என்னும் ஆத்ம ஞானத்தில் தேர்ச்சி பெற்றார்கள்.
அப்போது ஷைகு ஹம்மாத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், " இந்த அஜமி அப்துல் காதிர் வரும் காலத்தில் மாபெரும் ஞானியாக விளங்குவார். தம் பாதம் சகல வலிமார்களின் தோள் மீது இருப்பதாக சொல்லும்படி அல்லாஹ்வால் உத்தரவிடப்படுவார்கள். இவர் காலத்திலுள்ள எல்லா வலிமார்களும் இவருக்கு தலைப்பணிவார்கள்" என்று கூறினார்கள்.

அந்த நிகழ்வு கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் 89ம் வயதில் ஒரு மகத்துவமிக்க அந்த சம்பவம் நடந்தது. அல்லாஹ்வின் உத்தரவு ஒன்று அவர்களுக்கு வந்து அதை அவர்கள் மக்களுக்கு கூறினார்கள் :

" எனது பாதம் எல்லா வலிமார்களின் தோளின் மேல் இருக்கிறது" என்று கூறியபோது உலகம் முழுவதிலும் இருந்த வலிமார்கள் அனைவர்களும் தமது ஆத்ம காதுகளால் கேட்டார்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பாதத்தை தங்கள் தோள் மீது ஏற்பதாக கூறினார்கள்.
மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது ஆத்மீக கல்வியை நிறைவு செய்த பின் இபாதத்துகளிலும், தியானத்திலும் ஈடுபடுவதற்காக பக்தாதை விட்டு வெளியேறி ஈராக் காடுகளை நோக்கி சென்றார்கள்.

கர்க் என்னும் காட்டில் பாழடைந்த கட்டிடத்திலிருந்து கடும் தவம் செய்தார்கள். அது எப்படிப்பட்ட தவம் என்றால் வருடத்தில் ஒரு தடவை அவர்களுக்கு ஒரு மனிதர் கம்பளி உடுப்பு ஒன்றை கொடுப்பார். அதை அணிந்துக்கொண்டே நாட்களை போக்குவார்கள்.
அவர்கள் கல்லும், முள்ளும் நிறைந்த காடுகளில் நடந்து போவார்கள். ஒரு வருஷம் முழுவதும் அவர்கள் வெறும் காய்கறிகளை உண்டு தண்ணீர் குடிக்காமல் தவம் செய்தார்கள். மறு ஆண்டில் தண்ணீர் மட்டும் குடித்துக்கொண்டு வேறு எதுவும் சாப்பிடாமல் தவம் செய்தார்கள். மூன்றாம் ஆண்டில் தண்ணீரும் அருந்தாமல், எதுவும் சாப்பிடாமல், தூங்காமல் தவத்தில் ஈடுபட்டார்கள்.

ஹிஜ்ரி 521 ஷவ்வால் 11ம் இரவன்று கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கனவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தோன்றி,
"அப்துல் காதிரே! வழிதவறி செல்லும் மக்களை ஏன் நேர்வழிக்கு அழைக்காமல் இருக்கிறீர்கள் ? " எனக் கேட்டார்கள்.
அதைக் கேட்டு திடுக்கிட்ட கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், "யா ரசூலல்லாஹ்! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நான் அரபி இல்லையே! அஜமிதானே. எனவேதான் அரபிகளின் நகரத்தில் அரபு மொழியில் பேச தயங்குகிறேன்" என்று கூறினார்கள்.
இந்த பதிலைக்கேட்ட அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சிரித்த முகத்துடன் கௌஸு நாயகத்தின் வாயை திறக்கச்சொல்லி 7 தடவை தங்களின் முபாரக்கான எச்சிலை உமிழ்ந்தார்கள். அதற்கு பிறகு கௌஸுல் அஃலம் அவர்களின் திருவாயிலிருந்து ஞானப்போதனைகளும், மார்க்க பயான்களும் வெளிவரத்தொடங்கியது.


ஸைய்யிதுனா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு முறை ஒரு தெரு வழியாக வரும்போது, வழியில் பலஹீனமான வயோதிகர் ஒருவர் அமர்ந்திருந்தார். கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை கண்ட அவர், அவர்களுக்கு ஸலாம் சொன்னார், அதற்கு அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள்.
பிறகு அவர், தம்மை தூக்கி நிறுத்தும்படி கேட்டுகொண்டார். கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவரை தூக்கி நிறுத்தினார்கள். உடனே அவர் தம் முதுமை நீங்கி வாலிபராக மாறினார்.
இதைக்கண்டு திடுக்கிட்ட கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அவர் சொன்னார்: " நான் தான் தீன் என்னும் சன்மார்க்கமாகும், நீங்கள் இந்த தீனை ஹயாத்தாக்கிய முஹ்யித்தீன் ஆவீர்கள்." என்று கூறி மறைந்தார். இவ்வாறு கூறி மறைந்தவர் ஒரு மலக்கு ஆவார்
மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது வாலிப வயதில் ஆத்மீக கல்வி கற்பதிலும், தவத்திலும் ஈடுபட்டு விட்டதால் அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஆனால் ஹிஜ்ரி 521ல் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கனவில் தோன்றி திருமணம் செய்து கொள்ளுமாறும், அதுவே உங்களுடைய ஆத்ம ஞானம் சம்பூரணமடைய அவசியமும் ஆகும் என்றார்கள்.
அதையொட்டி அவர்கள் திருமணம் செய்தார்கள். தமது 51ம் வயதில் நான்கு மனைவிமார்களை மணந்து 27 ஆண் குழந்தைகளையும், 22 பெண் குழந்தைகளையும் மொத்தம் 49 குழந்தைகளை பெற்றார்கள்.
40 ஆண்டுகள் சன்மார்க்க பிரச்சாரம் புரிந்த மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் பூத உடலைவிட்டு மறையும் நேரம் வந்தது. அதை லௌஹுல் மஹ்பூல் என்னும் ஏட்டில் அவர்களால் பார்க்க முடிந்தது.

கௌஸுல் அஃலம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது இறுதி நேரத்தை அடைந்தபொழுது மலக்குமார்களும், அவ்லியாக்களின் ரூஹுகளும் அவர்களை பார்க்க வந்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஸலாம் கூறிக்கொண்டே இருந்தார்கள். பிறகு அவர்கள் குளித்துவிட்டு இஷா தொழுகையை தொழுதார்கள். நீண்டநேரம் ஸுஜூதில் இருந்து தன் குடும்பத்தார்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் தன் முரீதுகளுக்கும், முஸ்லிம்களுக்கும் துஆ கேட்டார்கள்.

ஸுஜூதிலிருந்து அவர்கள் தலையை உயர்தியதும் "சாந்தியடைந்த ஆத்மாவே! உன் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி வருவாயாக. என் சுவர்க்கத்தில் புகுந்து கொள்வாயாக" என்ற திருக்குர்ஆன் வசனம் அசரீரியாக கேட்டது. கடைசி நேரம் வந்துவிட்டதை உணர்ந்த அவர்கள் தன் வாயால் திருக்கலிமாவை கூறி மூன்று தடவை அல்லாஹ் என்று அழைத்தார்கள்.
அதோடு தன் 91வது வயதில் ஹிஜ்ரி 561 ரபியுல் ஆகிர் பிறை 11அன்று இந்த உலகை விட்டு மறைந்தார்கள். அல்லாஹ்வின்பால் அண்மித்துவிட்ட அவர்களுக்கு மரணமேது!

சூஃபிகளின் உலகம் 19



வலிகட்கரசர் குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் ஆண்டகை (றழி) அவர்களின் முத்தான உபதேசங்கள்.
உபதேசம் ஒன்று :-
மெய் விஸ்வாசம் கொண்டவனுக்கு வாழ்கையில் சகல நிலைமைகளிலும் மூன்று விசயங்கள் இன்றியமையாதவை, அவை அல்லாஹிவின் கட்டளைகளுக்கு கீழ் படிந்து நடப்பதும், விலக்கப்பட்டவற்றை விலக்கலும், இறைவன் திருச்சித்தத்தை மனமுவந்து ஏற்பதுமாகும்.
குறைந்த பட்சம் மெய் விசுவாசி இம்மூன்று அனுஷ்டானங்களிலுமாவது ஒழுங்காய் இருந்து வரவேண்டும் ஆகையால், அவன் இவற்றுக்காகவே மனத்தைத் தயாராக்கி, இவையற்றியே தன்னுல் பேசி, தன் அங்கங்களை இவற்றிலேயே ஈடுபடுத்தியவனாய் இருப்பதே பொருத்தமாகும்.
உபதேசம் இரண்டு :-

உண்மை விசுவாசத்துடன் (நபிபெருமான் (ஸல்) அவர்களின் பாதச்சுவட்டை பின்பற்றி நடவுங்கள்! மார்க்கத்தில் புதுமை பித்அத்) ஆனவைகளை உண்டாக்க வேண்டாம்.
(இறைவனுக்கும் அவன் தூதரக்கும்) கீழ்படியுங்கள் வழி தவறிவிடவேண்டாம் ஏகத்துவத்தைப் பாதுகாத்து இறைவன் எத்தீமையையும் உண்டாக்கி விட்டான் என்று கூறாதபடி உங்களைப் பேணிக் கொள்ளுங்கள் அவன் சத்தியத்தை நிலை நாட்டி, ஐயத்திற்கு இடம் தராதிருங்கள்! பொருமையுடன் நிதானம் தவறாதிருங்கள் உறுதியுள்ளவர்களாய், ஓடிப்போகாதிருங்கள், உங்கள் தேவைகளுக்கு அவனிடமே முறையிடுங்கள்

அம்முறையீடு கேட்கப்படுவதற்கு பொறுமையுடன் காத்திருங்கள்!

அவனுக்கு அடிபணிவதில் ஐக்கியப்படுங்கள், ஒற்றுமைக்குலைவுக்கு இடந்தரவேண்டாம் பரஸ்பரம் அன்பு காட்டுங்கள் ஒருவரை ஒருவர் துவேசிக்க வேண்டாம்.
தீய பழக்கங்களிலிருந்து விலகுங்கள் அவற்றால் மாசடைந்து விடாதீர்கள் உங்கள் ரக்ஷகனுக்கு அடிபணிவதன் மூலம் உங்களை அழகுபடுத்துங்கள் அவனிடம் கவனம்காட்டத்தவற வேண்டாம் நீங்கள் (செய்த தவறுகள் குறித்து) பச்சாதாப்படத் தாமதம் வேண்டாம் அல்லும் பகலும் உங்களை சிருஷ்டித்தவனை நினைவு கூறாது சாக்குப்போக்குச் சொல்லவேண்டாம்.
இவ்விதம் சதா அவன் தியானத்திலேயே இருந்தால் உங்களிடம் கருணை காட்டப்படலாம்.
உங்களுக்கு நல்லதிஷ்டம் உண்டாகலாம் நரகாக்கினியிலிருந்து விமோசனமும் சுவர்க்க வாழ்வு பெற்றுச் சாந்தியின் உறைவிடத்திலே ஹூரிகளின் குழாத்திடையில் இறைவனின் ஆசியோடு தரிபட்டிருக்கலாம் அதே நிலையில் என்றும் இருக்கலாம்.

நல்ல குதிரைகள் மீது சவாரி செய்யலாம். கண்ணழகிகளின் நேசத்தில் மகிழலாம். பலவித வாசணைகளும் பெண்களின் இன்னிசையும் மற்றும் பல பாக்கியங்களும் அங்கே கிட்டும் உயரிய வாணுலகில் நபிமார்கள்,சத்திய நேயர்கள், வீரத்தியாகிகள், நேர் வழியாளர்களின் கூட்டத்திற்கு உயர்த்தப்பட்டவர்கள் ஆகுங்கள்

உபதேசம் மூன்று :-
அல்லாஹ்வின் அடியான் ஒரு சோதனைக்கு ஆளாகும்போது முதலில் தன் முயற்சிகளால் அதிலிருந்து தப்பிக்க முயல்கிறான் அவன் தோல்வியுற்றால் மானிடரிடையே உள்ள அரசர், அதிகாரிகள், போன்றவர்களின் உதவியை நாடுகிறான்.
நோய்,நொடியாக இருப்பின் வைத்தியனுடைய உதவியை நாடுகிறான் இதன் மூலம் சோதனையிலிருந்து விடுபட இயலாது போய்விடின் அதன் பின் அவன் சர்வலோக இரட்சகனான அல்லாவின் பக்கம் திரும்புகிறான் தொழுகையாலும், பிரார்தனையாலும் பணிவோடு அவனிடம் விண்ணப்பம் செய்கிறான்.
தன்னாலேயே நிவர்த்திகாண முடியும்வரை அவன் பிறர் உதவியையோ தன் சிருஷ்டியாளன் உதவியையோ நாடமாட்டான்.
அல்லாஹ்விடமிருந்து அவனுக்கு உதவி கிடைக்காவிட்டால் அவன் சந்நிதானத்தில் விழ்ந்து, இரந்தும், மண்றாடியும், பணிவோடு வேண்டியும், பயபக்தியோடும், நம்பிக்கையோடும் தன் தேவையைச் சமர்ப்பித்தும் முறையிட்டவாறே கிடப்பான்.
சர்வ வல்லமையாளனான அல்லாஹ் அவனை அதிகம் சோதிப்பான்.
உலகிலுள்ள சகல வழி வகைகளும் அவனுக்கு இல்லாதுபோய்விட்டன என்றாகும்வரை அவனுடைய பிரார்தனையை ஏற்க்கமாட்டான். அதன் பின் அல்லஹ்வின் கட்டளையும் செயலும் அவனிடம் வெளியாகும் அல்லாஹ்வின் இந்த அடியான் சகல உலகப்பாதைகளையும், உலகின் நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் விட்டு அப்பாலாகிவிடுவான் தன் ஆத்மாவை மட்டும் தன்னகத்தே கொண்டவனாய் இருப்பான்

இவ்வித நிலையில் அவன் சர்வ வல்லமையாளனான இறைவனின் வேலையையன்றி வேறு எதையும் காணான். அவசியமாக நிச்சயபூர்வமான அளவுக்கு ஏகத்துவத்தில் அவன் நம்பிக்கை கொண்டவனாகிறான் எதையும் செய்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை.
எதையும் அசைப்பவனும், நிறுத்துபவனும் அவனன்றிவேறு யாருமில்லை எந்த நன்மை தீமையும் எந்த இலாப நஸ்டமும், எந்த இன்ப துன்பமும், எந்த எடுத்தலும் கொடுத்தலும், எந்த திறப்பும் அடைப்பும் எந்த ஜீவ மரணமும், எந்த கௌரவ அகௌரவமும், எந்தச் செல்வமும் வறுமையும் அவனாலன்றி வருவதில்லை என்பதை இன்னிலையில் அவன் உணர்வான்.

இதன் பின் தன்னை பாலுட்டி வளர்க்கும் தாதியின் கையிலுள்ள குழந்தையைப்போல, தன்னை குளிப்பாட்டுபவர்கள் கையில் கிடக்கும் மையித்தைப்போல, பூமியில் வைக்கப்பட்டு தன்னை மட்டையாள் அடிக்கப்போகிறவர் முன்கிடக்கும் பந்தைப்போல அவன் அல்லாஹ்வின் திருச்சமூகத்தில் சரணடைந்து சுழன்றுகொண்டு, உருண்டு கொண்டும் இருப்பான்.
தன்னிடமோ தன்னருகில் உள்ளோர்களிடமோ அசைவதற்குக் கூடப் பலம் இல்லாதிருப்பதைக் காண்பான்.
இவ்விதமாக அவன் தன் எஜமானனின் வேலையுள் மூழ்கித் தன்னகத்தில் இருந்தே மறைந்தவனாகி விடுவான்.

எனவே அவன் தன் எஜமானனையும் அவன் திறனையும் அன்றி வேறு எதையும் காணான். அவனையன்றி வேறு யார் பேசுவதையும் கேளான். புரிந்து கொள்ளான், அவன் எதையாவது கண்டால் அது அல்லாவுடைய வேலையேயாகும் அவன் எதையாவது கேட்டறிந்தால் அது அல்லாஹ்வின் வார்தையேயாகும், அவன் எதையாவது புரிந்து கொண்டால் அது அல்லாஹ்வுடைய ஞானத்தினுடையவனாகிறான்.

அவனை அண்டியிருப்பதனாலேயே அதிஷ்டவனாய் இருக்கிறான். அவனை அண்டியிருப்பதன் மூலமே அவன் மதிப்பும் மரியாதையும் பெறுகிறான். திருத்தியும் ஆறுதலும் அடைகிறான். அல்லாஹ்வின் வாக்குறுதியால் தன் மனம் நிறைந்து அவன் வார்த்தையின் பக்கல் இழுக்கப்படுகிறான்.
அவனுக்கு புறம்பானவர்களை அவன் வெறுத்து ஒதுங்கிக் கொள்கின்றான் அவன் நினைவு கூர்தலை விரும்பி அதில் நம்பிக்கை கொள்கிறான்.

அந்த மஹா வலுப்பகமானவனிடம் ஸ்தாபிதம் பெற்றவனாகி விருகிறான். அவனிடமிருந்து ஒளி பெற்று உடுத்துக்கொள்கிறான். அவன் ஞானத்தின், அவன் சக்தியின், இரகசியத்தின் அபூர்வமான விசயங்களை விளங்கிக்கொள்கிறான். அந்த மகா சக்தியினிடமிருந்து கேட்டு நினைவால் அவனைப் புகழ்ந்து, துதித்து தொழுகையில் ஈடுபடுகிறான்.

சூஃபிகளின் உலகம் 20

ஹழ்ரத் காஜா முயீனுத்தீன் ஜிஸ்தி அஜ்மீரி ரழியல்லாஹு அன்ஹு



அப்பாஸியக் கலீபாக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழித்தோன்றல்கள் மீது தாங்க இயலாத கொடுமைகளை செய்து வந்தனர். பக்தாத்தில் வாழ்ந்து வந்த அவர்களின் வழித்தோன்றல்களில் சிலர் இஸ்ஃபஹானில் வந்து குடியேறி வாழ்ந்து வரலாயினர்.
அந்நகரில் வாழ்ந்து வந்த அந்த குடும்பத்தைச் சார்ந்த காஜா செய்யிது அப்துல் அஜீஸ் அவர்களின் மகனார் செய்யிது கியாஸுத்தீன் அவர்கள் ஹழ்ரத் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வம்சாவழியில் தோன்றிய செய்யிது தாவூது என்ற பெரியாரின் அருமைத் திருமகள் உம்முல் வரா என்ற செய்யிதா மாஹினூரை மணமுடித்திருந்தனர்.
அவர்களுக்கு ஹிஜ்ரி 530 ஆம் ஆண்டு ரஜப் பிறை 14 (கி.பி.1116 ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள்) வெள்ளிக்கிழமை ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு முயீனுத்தீன் (இஸ்லாத்தை வலுப் பெறச் செய்தவர்) என்று பெயரிட்டு அருமைபெருமையாக வளர்த்து வந்தனர்.

ஹாஜா முயீனுத்தீன் ஜிஷ்தி அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்களின் வழித் தோன்றல்களில் ஒருவராவார்கள்.
இச்சமயத்தில் தார்த்தாரியர் இஸ்ஃபஹான் மீது கடுமையான தாக்குதல் நடத்தி, அதனை நாசப்படுத்தி வந்தனர். எனவே செய்யிது கியாஸுத்தீன் ஹஸன் தம் குடும்பத்தினர்களுடன் அந்நகர் விட்டு நீங்கி குராஸானில் குடியேறினார்.

அவரின் அருமை மைந்தர் காஜா முயீனுத்தீன் ஜிஸ்தி அவர்கள் இளமையிலேயே மற்றச் சிறுவர்களை விட்டும் மாறுபட்டவர்களாக விளங்கினர். சின்னஞ்சிறு வயதிலேயே அவர்கள் அன்பு, இரக்கம், தயவு ஆகிய அரும்பெரும் குணங்கள் வாய்க்கப் பெற்றவர்களாக திகழ்ந்தனர்.
இளமையில் மற்றச் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடச் செல்வதில்லை. மாறாக பள்ளி சென்று கல்வி பயின்றனர். ஒன்பது வயதிற்குள் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து விட்ட அவர்கள், பின்னர் ஃபிக்ஹ் நூல்களையும், ஹதீது நூல்களையும் பயின்று தேர்ச்சியுற்றனர்.

அன்னனாரின் சிறுவயதிலேயே அவர்களின் அன்னை மறைந்து விட்டார்கள். அவர்கள் 15 வயதை எய்தியபோது அன்னாரின் தந்தையும் மறைந்து விட்டார்கள். அவர்களுக்கு தந்தை வழியாகத் தண்ணீர் இறைக்கும் காற்றாடியுடன் கூடிய பழத்தோட்டம் ஒன்று வாரிசு பாத்தியமாக கிடைத்தது. அதிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு; எளிய முறையில் இனிதே வாழ்க்கை நடத்தி கொண்டிருந்தார்கள்.

தமக்கு சொந்தமான தோட்டத்தை விற்றுவிட்டு கல்வி தேடி சமர்கந்த், புகாரா நோக்கி பயணமாகி அங்கு மௌலானா ஹிஸ்ஸாமுத்தீனிடமும், ஷைகுல் இஸ்லாம் மௌலானா ஷர்ஃபுத்தீனிடமும் மார்க்கக் கல்விகளை கற்றனர்.

பின்னர் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சந்திப்பதற்காக பகுதாது சென்றார்கள். கௌதுல் அஃலம் அவர்கள் முயீனுத்தீன் சிஷ்தி நாயகத்திற்கு தாய்வழியில் ஒன்றுவிட்ட மாமாவாக இருந்தார்கள்.

தம்மைக் காணவந்த அவர்களை தம் சீடர்களிடம் புகழ்ந்துரைத்தார்கள். பிற்காலத்தில் இவர்கள் மாபெரும் மகானாக வருவார்கள் என்று வாழ்த்துரைத்தார்கள். அதன்பின் ஹாரூன் என்ற ஊரை அடைந்து அங்கிருந்த ஷைகு உதுமான் ஹாரூனி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சந்தித்து தமக்கு தீட்சை தருமாறு வேண்டினர். அவர்களும் அவர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து சிஷ்தியா தரீகாவில் தீட்சை வழங்கினர். தம் குருவுடன் இரண்டரை ஆண்டுகள் தங்கியிருந்தபின், தம் குரு ஆணையின்படி பகுதாது வந்து கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை இரண்டாவது முறையும்,ஷைகு அபூநஜீப் சுஹ்ரவர்தீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் சந்தித்து அவர்களின் ஆசியைப் பெற்றனர்.

இதன்பின் இந்தியாவிற்கு ஹிஜ்ரி 561 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் (கி.பி. 11-11-1165) அவர்கள் இந்தியாவிலுள்ள மூல்த்தானுக்கு முதன்முதலாக வந்து சேர்ந்தார்கள். அதன்பின் லாகூர் சென்று பின் தம் குருநாதர் உதுமான் ஹாரூனி அவர்களை ரேயில் வைத்து சந்தித்து சிலமாதங்கள் கழிந்தபின் ஹிஜ்ரி 562 ஆம் ஆண்டில் ஹஜ்ஜு செய்வதற்காக மக்கா புறப்பட்டனர்.

அங்கிருந்து மதீனா சென்று அண்ணலாரின் திருக்கபுர் சரீபை தரிசித்தனர். பின்னர் அவர்கள் இருபது ஆண்டுகள் பற்பல நாடு நகரங்களிலும் சுற்றித் திரிந்து பகுதாது மீண்டனர். அங்கு வைத்து, காஜா அவர்களுக்கு கிலாஃபத் வழங்கிய உதுமான் ஹாரூனி அவர்கள் ‘முயீனுத்தீனே! நான் உம்மை இறைவனளவில் ஒப்படைத்து விட்டேன்’ என்று கூறி அவர்களின் நெற்றியிலும் கண்களிலும் முத்தமிட்டனர். தமது 52 ஆம் வயதில் சிஷ்திய்யா தரீகாவில் கிலாஃபத் பதவியைப் பெற்ற காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்கள் சில நாட்கள் பகுதாதில் தங்கியிருந்து பின்பு ஊஷ் என்ற ஊருக்கு சென்று குத்புத்தீன் பக்தியார் என்பவர்களுக்கு தீட்சை நல்கினர்.

இருவரும் மக்கா சென்று ஹஜ்ஜு செய்து விட்டு மதீனா நகர் சென்று பெருமானாரின் தரிசனத்தை பெற்றுக் கொண்டனர். பல்வேறு காடு, மலைகளை சுற்றித் திரிந்து பல்வேறு இறைநேசர்களை பல்வேறு நிலைகளில் கண்டு அவர்களின் துஆப் பேற்றினைப் பெற்றுக் கொண்டார்கள்.

பின்னர் டில்லி வந்து, அங்கிருந்த மக்களுக்கு இஸ்லாமிய அருள் நெறியைப் போதித்துவிட்டு 700 பேர்களை இஸ்லாத்தில் இணைத்து விட்டு கர்னூல் மாவட்டத்திலுள்ள சூனிபத் என்ற ஊருக்கு வந்து அங்கு அடங்கப்பட்டிருக்கும் ஷைகு நாஸிருத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அடக்கவிடத்தில் சில நாட்கள் தங்கி கல்வத்தில் இருந்தார்கள். அவர்கள் கல்வத் இருந்த இடம் இப்போதும் சில்லயே முபாரக் ஹழ்ரத் ஹாஜா கரீப் நவாஸ் என்ற பெயருடன், மரியாதையுடன் அழைக்கப்படுகிறது.
அடுத்து அவர்கள் பாட்டியாலாவிலுள்ள நாரனோஸ் என்ற ஊருக்குச் சென்று அங்கு சில நாட்கள் தங்கி இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தனர். பின்பு அவர்கள் ஸமானா வழியாக அஜ்மீரை நோக்கிப் பயணமாயினர். ஹிஸ்ரி 588 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் 10 ஆம் நாள் (கி.பி.1192) அவர்களின் புனிதப் பாதங்கள் அஜ்மீர் மண்ணிலே மிதித்தன. அப்பொழுது காஜா நாயகம் அவர்களுக்கு வயது 57.
இந்நகரமும், அதன் சூழலுமத் பிருதிவிராஜ் என்ற ராஜபுத்திர அரசனின் ஆட்சியில் இருந்தது. அவனுடைய அரண்மனை அதன் அருகிலுள்ள தாராகட் என்ற குன்றின் மீது இருந்தது. அதன் அடிவாரத்திலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். அங்கேயே அவனுடைய குதிரை ஒட்டகை ஆகியவற்றின் தொழுவங்கள் இருந்தன.

அங்கு வந்த காஜா நாயகம் தம் சீடர்களுடன் வெட்ட வெளியில் இளைப்பாற அமர்ந்தனர். அரசரின் ஆட்கள் வந்து நீங்கள் இங்கு தங்க கூடாது. இது அரசரின் ஒட்டகை அடைக்கும் இடம் என்று சொன்னார்கள். அதுகேட்ட காஜா நாயகம் அவர்கள் அரசரின் ஒட்டகை இங்கேயே அடைபட்டுக் கிடக்கட்டும் என்று சொல்லி விட்டு தம் சீடர்களுடன் அருகிலுள்ள அன்னாசாகர் என்ற ஏரிக் கரையில் போய் தங்கினர். காலையில் ஒட்டகம் மேய்ப்பவர்கள் வந்து ஒட்டகையை எழுப்ப முற்பட்ட போது அவைகளால் எழும்ப முடியவில்லை. உடனே அவர்களுக்கு நேற்று நடந்த சம்பவம் நினைவுக்கு வரவே காஜா நாயகத்திடம் வந்து மன்னிப்புக் கேட்டனர்.

அவர்களும் மன்னித்து, இது எந்த எசமானுடைய ஆணைக்காக அமர்ந்திருந்ததோ அந்த எசமானுடைய ஆணை மீது அவை எழுந்து நடக்கும் என்று கூறினர். அவ்விதமே ஆயிற்று. அதுகண்டு ஒட்டகம் மேய்ப்பவர்கள் வியந்து அரசனிடம் இச்சம்பவம் பற்றி சொன்னார்கள்.
இதைக் கேட்ட அரசன் அதிர்ந்தான். ஏனெனில் மன்னனின் அன்னை வாசவதத்தா சோதிடத்தில் மிகவும் புலமை பெற்று விளங்கினாள். அவள் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பே இன்ன இன்ன அடையாளமுள்ள ஒருவர் இங்கு வருவார். அவரின் வரவால் உன் ஆட்சி வீழும் என்று தன் மகனிடம் முன்னறிவிப்பு செய்திருந்தாள்.

அதைக் கேட்ட மன்னன் அப்போது அவர்களின் படத்தை தம்அன்னையிடமே வரைந்து கேட்டு அதன்படிப் பல பிரதிகள் எடுத்து இத்தகு உருவமுடையவர் எவரேனும் தம் நாட்டு எல்லைக்குள் நுழைந்தால் அவரைப் பிடித்து என் முன் கொண்டு வர வேண்டும் என்று ஆணையிட்டிருந்தான்.
எனவே இச்செய்தியைக் கேட்டவுடன் அந்த நபர் இவர்களாகத்தான் இருக்குமோ என்று எண்ணி அவர்களை அங்கிருந்து விரட்ட ஆட்களை அனுப்பினான். அரசரின் ஆணையை சிரமேற்றோங்கிச் செயலாற்ற அவனின் பணியாளர்கள் முயன்ற போது....

நாயகம் அவர்கள் ஒருபிடி மண்ணை அள்ளி, அதில் ஆயத்துல் குர்ஸீயை ஓதி ஊதி, அவர்கள் மீது வீசி எறிந்தார்கள். அவர்கள் அதனைத் தாங்க இயலாது, பெரும் கூச்சலிட்டுக் கொண்டு வெருண்டோடினர்.
இதனை அறிந்த அரசன் காஜா அவர்களைப் பெரிய மந்திரவாதி என்று எண்ணிக் கொண்டு, மந்திரத்தை மந்திரத்தால் தான் வெற்றி கொள்ள வேண்டுமென்று எண்ணி, சாதுராம் என்ற மாபெரும் மந்திரவாதியைக் காஜா அவர்களிடம் அனுப்பி வைத்தான்.
அவர் காஜா நாயகத்தைப் பார்த்ததும் திடுக்கம் ஏற்பட்டு அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அன்னாரின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவி அவர்களின் ஊழியத்தில் இருந்து கொண்டார். அவருக்கு ஷாதிதேவ் (மகிழ்ச்சியாளர்) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.
இதன்பின் காஜா அவர்களை எதிர்த்து, மந்திர ஆற்றலினால் போராடி, அவர்களை அங்கிருந்து விரட்டிவிட ஜெய்ப்பால் என்ற மற்றொரு மந்திரவாதியை அனுப்பி வைத்தான் அரசன். அவர் தம்முடைய 1500 சீடர்களுடன் தம்மை எதிர்க்க வருகிறார் என்பதை அறிந்த காஜா நாயகம் அவர்கள் தம்முடைய கைக்கோலை கொடுத்து, நம்முடைய ஜமாஅத்தினரைச் சுற்றி பூமியில் ஒரு கோடு கிழியும். அதற்குள் நாம் இருக்கும் வரையில், அவர்களால் நமக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாது என்று கூறினார்கள்.
அவ்விதமே அவரும் செய்தார்.

சற்று நேரத்தில் ஜெய்ப்பாலும்,அவரின் சீடர்களும் அங்கு வந்து, அக்கோட்டிற்குள் தம் கால்களை வைத்ததும், அவர்கள் மயங்கிக் கீழே விழுந்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த அவர்கள், தள்ளாடித் தள்ளாடி அன்னாசாகர் ஏரிக்கரையின் ஒரு புறத்தில் சென்றமர்ந்து, அன்னாசாகரின் தண்ணீரைக் காஜா அவர்கள் இருக்கும் பக்கம் செல்லவிடாது தடுக்கும் முயற்சியில் ஈடுபடலாயினர்.
இதனைக் கண்ட காஜா நாயகம் அவர்கள் ஷாதிதேவை அழைத்து, அவரின் கரத்தில் ஒரு பாத்திரத்தை கொடுத்து 'நீர் அன்னாசாகரின் நீரை இந்தப் பாத்திரத்தில் எடுத்து வாரும்' என்று கூறினர். அவர் சென்று அவ்வாறே நீர் எடுத்து வந்ததும், அந்த ஏரியிலுள்ள அனைத்துத் தண்ணீரும் அப்பாத்திரத்துக்குள் வந்து அந்த ஏரி மட்டுமில்லாது, அதனைச் சூழ இருந்த எல்லாக் கிணறுகளும் வற்றி வரண்டு விட்டன. மக்களும், மாக்களும் நீரின்றி செத்து மடிய வேண்டிய அவலநிலை ஏற்பட்டு விட்டது.

ஜெய்ப்பால் திடுக்கிற்று காஜா நாயகம் அவர்களிடம் இரங்கி வேண்ட, பாத்திரத்தில் எடுத்த நீரை ஏரியிலேயே கொட்டும்படி பணித்தனர். அவ்வாறே செய்ய ஏரி தண்ணீரால் நிரம்பி தளும்பியது.
இதன்பின்னரும் அறிவு பெறாது, ஜெய்ப்பாலும், அவருடைய சீடர்களும் மந்திங்களை ஜெபிக்கலாயினர்.
உடனே ஆயிரக்கணக்கான பாம்புகள் காடுகளிலிருந்து படையெடுத்து வந்து நாயகம் இருக்கும் கோட்டு வளையத்திற்குள் தலையை விட்டதும் வெருண்டு பின்வாங்கி ஓடத் துவங்கின. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவேயில்லை.

ஜெய்ப்பால் முன் வந்து, வானத்தை அண்ணாந்து பார்த்து ஒரு மந்திரத்தை உச்சரிக்க, உடனே வானிலிருந்து நெருப்பு மழை பெய்து, சுற்றிலும் இருந்த மரங்களையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கியது.
எனினும், ஒரு நெருப்புப் பொறிகூட நாயகம் அவர்களும், அவர்களின் சீடர்களும் இருந்து கோட்டு வளையத்திற்குள் வந்து விழவில்லை.
இதுகண்டு பெரிதும் விரக்தியுற்ற ஜெய்ப்பால் மான் தோல் ஒன்றை எடுத்து, அதனை விண்ணை நோக்கி எறிந்து, அதில் பாய்ந்தேறி விண்ணிலே பறந்து, மக்களின் கண்களுக்கு தெரியாமல் மறைந்து விட்டான்.

அப்பொழுது காஜா நாயகம் அவர்களின் சீடர்கள் தியானத்திலிருந்த காஜா நாயகம் அவர்களை அணுகி, ஜெய்ப்பாலின் இந்த நடவடிக்கைகளைப் பற்றி கூறவும், நாயகம் அவர்கள் தங்கள் காலணியை எடுத்து விண்ணை நோக்கி எறிந்தனர்.

அது விண்ணிலே பறந்து சென்று ஜெய்ப்பாலைக் கண்டுபிடித்து அவரின் தலையில் ஓங்கி, ஓங்கி அடித்தவண்ணம், அவரை பூமிக்கு இறக்கி வந்து, காஜா நாயகம் அவர்களின் திருமுன் கொண்டு வந்து விட்டது. அவர் அழுது சலித்து நாயகம் அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டு இஸ்லாத்தை தழுவினார். அவருக்கு அப்துல்லாஹ் என்று பெயர் சூட்டி அரவணைத்தார்கள் காஜா நாயகம் அவர்கள். இதனால் யாது செய்வதென்று அறியாது திகைத்துக் கொண்டிருந்தான். இனியும் பொது இடத்தில் தங்க வேண்டாம் என்று காஜா நாயகம் அவர்களை ஷாதிதேவும், அப்துல்லாஹ்வும் கூறி ஷாதி தேவ்விற்கு சொந்தமான இந்திரகோட்டின் அருகில் உள்ள நிலத்தில் போய் தங்கினர். அவ்விடத்திலேயே அவர்களின் தர்கா இப்பொழுது உள்ளது.

அங்கு காஜா நாயகம் சென்று அமர்ந்ததும், அங்கு தாங்களும், தங்களின் சீடர்களும் தங்குவதற்கான வீட்டு வசதிகளைச் செய்து கொண்டனர். அங்கு ஒரு சமையல் விடுதியும் நிர்மாணிக்கப்பட்டது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தவமடத்தில் அமர்ந்து காஜா நாயகம் அவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தை தொடங்கினர்.

அவர்களின் மாண்பினைக் கேள்வியுற்ற மக்கள், நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து, அவர்களின் கரம்பிடித்து இஸ்லாத்தைத் தழுவினர். நாயகம் அவர்களும் பல்வேறு பகுதிகளில் வாழும் பிரமுகர்களுக்கும், அரசனுக்கும் இஸ்லாத்தில் இணைய அழைப்பு விடுத்தனர்.
பிருதிவிராஜன் பல்வேறு முயற்சிகள் செய்தும் காஜா நாயகம் அவர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. அஜ்மீரை விட்டு 3 நாளில் விலகுமாறு அரசன் பிருதிவிராஜன் காஜா நாயகத்திற்கு கடிதம் ஒன்று கொடுத்திருந்தான்.

அச்சமயத்தில் ஷிஹாபுத்தீன் கோரியின் கனவில் காஜா நாயகம் அவர்கள் இந்தியாவுக்கு படைஎடுக்குமாறு சொன்னார்கள். அவரும் இரண்டாவது தடவையாக தாரவாடியில் பாளையம் இறங்கி பிருத்விராஜனுக்கு கடிதம் எழுதி எச்சரிக்கை விடுத்தார்.
ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் யுத்தத்திற்கு தயார் என்று அரசன் பிருத்விராஜன் சொன்னதால் தாரவாடியில் போர் மூண்டது. பிருத்விராஜனுக்கு துணையாக வந்த சிற்றரசர்கள், மன்னர்களும் போரில் உயிர் நீத்தனர். பிருத்விராஜன் ஓடிப்போனார். அவனை ஸர்ஸுரி என்ற இடத்தில் கைது செய்தார் ஷிஹாபுத்தீன் கோரி.

வெற்றி பெற்ற பின் கோரி அஜ்மீர் சென்று நாயகத்தை சென்று சந்தித்து காணிக்கைகள் வழங்கினார். தம்மைக் காண வந்த பிருத்விராஜனின் தாய், மனைவி மற்றும் மகன்களை அன்போடு வரவேற்ற கோரி அன்னையாரின் வேண்டுகோளுக்கிணங்க ஆட்சிப் பொறுப்பை பிருத்விராஜனின் மகன் கோலாவிடம் கொடுத்து விட்டு டில்லியில் குத்புதீன் ஐபக் என்பவரிடம் ஆட்சியை ஒப்படைத்து அஜ்மீர் நகரை நிர்வாகிக்க ஸையித் ஹஸன் மஷ்ஹரீ என்பவரை நியமித்து விட்டு கஜ்னி நகர் நோக்கி வெற்றி வீரராக சென்றார்.
அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒரு சிற்றரசரின் மகளை இஸ்லாத்திலாக்கி அவருக்கு பீபி அமதுல்லாஹ் என்று பெயரும் சூட்டி திருமணம் முடித்துக் கொண்ட நாயகம் அவர்கள் அதன்மூலம் பக்ருத்தீன், ஹிஸாமுத்தீன் என்ற இரண்டு ஆண்மக்களையும், பீபி ஹாபிஸ் ஜமால் என்ற பெண்மகளையும் பெற்றெடுத்தனர்.
டில்லியில் வசித்து வந்த ஆன்மீக சீடர் குத்புத்தீன் பக்தியாரி அவர்களை சந்திப்பதற்காக டில்லி அய்னுத்தீன் பள்ளிவாசலுக்கு வருகை தந்தபோது அதைக் கேள்விபட்ட மக்கள் அப்பள்ளிவாசலுக்கு அலைஅலையாய் ஓடிவந்து அவர்களை சந்தித்தனர்.

இதன்பின் மற்றொரு நிகழ்ச்சி டில்லியில் ஏற்பட்டது. ஹிஜ்ரி 611 ஆம் ஆண்டு துல்ஹஜ் பிறை (கி.பி.1215 ஏப்ரல் 2 அன்று) காஜா நாயகம் அவர்களின் ஆன்மீக ஆசான் உதுமான் ஹாரூனி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் மாணவரைக் காண்பதற்காக அங்கு வருகை தந்தனர். ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் தம் ஆசானின் ஆசானின் ஆசானையும் காண்பதற்கு தங்களுக்கு இறைவன் தந்த இரு கண்கள் பற்றாது மூன்றாவது கண்ணும் வேண்டுமென்று டில்லி மாநகர மக்கள் பேசிக் கொண்டார்கள்.
சுல்தான் அல்தமிஷும், தம் அமைச்சர் பெருமக்களுடன் உதுமான் ஹாரூனி அவர்களிடம் பைஅத் பெற்றுக் கொண்டனர். பின்னர் அவர்கள் நாயகம் அவர்களை நோக்கி ஆன்மீகப் பாதையில் வழிகாட்டும் ஒரு நூலை ஆக்கிக் கொடுக்குமாறு ஆணையிட்டனர்.

அவ்விதமே அவர்கள் 'கன்ஸுல் அஸ்ரார்' என்ற பெயருடன் 25 பகுதிகளடங்கிய ஒரு நூலை எழுதி, சுல்தானுக்கு அன்பளிப்புச் செய்தனர்.
ஹிஜ்ரி 615 ல் உதுமான் ஹாரூனி அவர்கள் டில்லியை விட்டு மக்கா நகர் நோக்கி சென்றனர். அதன்பின் சிலகாலம் நாயகம் அவர்கள் டில்லியில் தங்கியிருந்து மன்னருக்கும், மற்றவர்களுக்கும் ஆன்மீக பயிற்சி அளித்துவிட்டு அஜ்மீர் திரும்பி அதையே தங்கள் இருப்பிடமாக்கிக் கொண்டனர்.
சிறிது காலத்தில் நாயகம் அவர்களின் அன்பு மனைவி பீபி அமதுல்லாஹ் மறுமை வாழ்வை எய்தப் பெற்றனர்.

தமது 90ஆவது வயதில் ஷியாப் பிரிவைச் சார்ந்த பீபி இஸ்மத்துல்லாஹ்வை இரண்டாவதாக மணமுடித்துக் கொண்டனர். இதன் காரணமாக ஏராளமான ஷீயாக்கள் சுன்னத் வல் ஜமாஅத்திற்கு வந்தனர். இந்த திருமணத்தின் மூலம் காஜா நாயகம் அவர்களுக்கு ஜியாவுத்தீன் அபூஸயீத் என்ற மகன் பிறந்தார்.
இரவெல்லாம் கடும் வணக்கம் புரிந்து வந்தனர். சுமார் 70 ஆண்டுகள் தலையணையில் தலைவைத்து படுத்ததில்லை. ஒவ்வோர் இரவும் அவர்கள் மக்கா சென்று வணக்கம் நிகழ்த்தி விட்டு, வைகறைத் தொழுகையில் கலந்து கொள்வதற்காக அஜ்மீர் திரும்பி விடுவர் என்றும், இந்தியாவிலிருந்து சென்ற யாத்ரிகர்கள் அவர்களைப் பலதடவை கஃபாவை இடம் சுற்றி வரக்கண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.
திருக்குர்ஆனை ஓதிவருவதில் மிகவும் இன்புற்றிருப்பார்கள். நான் அவர்களின் ஊழியத்தில் இருபதாண்டுகள் இருந்துள்ளேன். அதில் அவர்கள் ஒருநாள் கூட தமக்கு உடல் நலத்தை வழங்குமாறு கேட்கவில்லை என்று குத்புத்தீன் பக்தியாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தெரிவிக்கிறார்கள்.
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அளவற்ற அன்பு வைத்திருந்தனர். அன்னாரின் அருளுரைகளைக் கூறும் போதெல்லாம் உளம் உருகிக் கண்ணீர் சொரிவார்கள். ஒரு தடவை அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருளுரைகளைக் கூறிய அவர்கள் 'நியாயத் தீர்ப்பு நாளின்போது, அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்; அவர்களின் திருவதனத்தைப் பார்க்க நாணமுறுபவனைப் போன்ற கொடிய பாவி எவனுமில்லை. அப்பொழுது நாணமுறுபவன், வேறு எங்கு போய்த்தான் ஒளிந்து கொள்வான்? அவனுக்குப் புகலிடம் தான் ஏது?' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

இறையச்சம் அவர்கள் உள்ளத்தை எப்பொழுதும் ஆட்கொண்டிருந்தது. சிலபொழுது இறையச்சத்தால் நடுங்கவும், தேம்பித் தேம்பி அழவும் செய்வர்.
தம்மைக் கொல்ல வந்தவனை தன் உள்ளுணர்வால் தெரிந்து கொண்ட அவர்கள் அதை அவனிடம் சொல்லியதும் அதிர்ந்த அவர் நாயகம் அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டு இஸ்லாத்தை தழுவினார். 14 தடவை மக்காவிற்கு நடந்து சென்று ஹஜ்ஜு செய்து அங்கேயே இறப்பெய்தி ஜன்னத்துல் முஅல்லாவில் அடங்கப் பெற்றார்.

தாழ்மையின் உருவாக விளங்கிய அவர்கள் எவருக்கும் அவர்களே முதலில் ஸலாம் கூறுவர். வயோதிகர் எவரும் தம்மைக் காணவரின் அவரைக் கண்டதும் எழுந்து நின்று அவருக்கு முதலில் ஸலாம் உரைத்து வரவேற்று அமரச் செய்வார்கள். தேவையுடையோரின் தேவைகளை ஒவ்வொரு நாளும் காலையில் சென்று விசாரித்து அவற்றை நிறைவேற்றி வைப்பார்கள்.

அவர்களின் உணவும், உடையும் மிக எளிமையாக இருந்தன.நோன்பு நோற்க விலக்கப்பட்ட நாட்களைத் தவிர்த்து மீதி நாட்களில் நோன்பு நோற்றார்கள். எப்பொழுதும் பகீர்களின் உடையை அணிந்து வந்த அவர்கள், அது கிழிந்துவிடின் அதில் ஒட்டுப் போட்டு தைத்து அணிந்து கொள்வார்கள்.
நாயகம் அவர்கள் பேரின்ப இசை நிகழ்ச்சிகளிலும் அதிக ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அதில் கலந்து கொண்டு அவர்கள் சொக்கி மகிழ்ந்து தம்மையே மறந்த நிலையிலாகிவிடுவார்கள். அவர்களுடன் ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ, ஷைகு முஹம்மது கிர்மானீ ஷைகு முஹம்மது இஸ்பஹானீ போன்ற இறைநேசச் செல்வர்களெல்லாம் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என்று அவர்களின் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி காக்கி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

ஆன்மீக செங்கோல் செலுத்தி சுமார் 90 இலட்சம் பேர்களை இஸ்லாத்தில் இணைத்த நாயகம் அவர்கள் 97 வயதானபோது தமக்கு இறப்பு அண்மி விட்டதை அறிந்து தம் மாணவர் குத்புத்தீன் பக்தியாரி அவர்களை அஜ்மீர் வருமாறு அழைத்து 'இன்னும் சின்னாட்களில் நான் மறைவேன்' என்று சொல்லி தமது பிரதிநியை நியமிக்கும் கிலாஃபத் நாமாவை ஷைகு அலீ சஞ்சரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை எழுதச் செய்து அவர்களிடம் ஒப்படைத்து, அவர்களை டில்லிக்கு அனுப்பி வைத்து விட்டுத் தாங்கள் உலகிற்கு வந்த பணி நிறைவுற்றதென மனநிறைவுற்றார்கள்.

இதன்பின் சில நாட்கள் உருண்டோடின. ஹிஜ்ரி 627 ஆம் ஆண்டு ரஜப் மாதம், ஆறாம் நாள் (கி.பி. 1226 மே 21) திங்கட்கிழமை இரவு இஷா தொழுதபின் தம் அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தனர். வைகறையில் கதவு தட்டப்பட்டபோது அது திறக்கப்படவில்லை. பிறகு ஒருவாறு கதவை திறந்து சென்று பார்த்தபோது, அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்திருந்தார்கள்.
அவர்களின் நெற்றியில் 'ஹாதா ஹபீபுல்லாஹ் – மாத்த பி ஹுப்பில்லாஹ் (இவர் அல்லாஹ்வின் நேசர், அல்லாஹ்வின் நட்பிலேயே உயிர் நீத்தார்) என்று பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும், அவர்களின் வியப்புப் பன்மடங்கு அதிகமாகியது.

விடிந்ததும் அவர்களின் மூத்த மகன் காஜா பக்ருத்தீன் தந்தையின் ஜனாஸா தொழுகையை முன்னின்று நடத்த பின்னர் அவர்களின் பொன்னுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.
நாயகம் அவர்கள் மறைந்த செய்தி டில்லியிலிருந்த அவர்களின் கலீபா குத்புத்தீன் பக்தியாரி காக்கி அவர்களுக்குப் பல நாட்களுக்குப் பின்னர்தான் தெரிய வந்தது.
நாயகம் அவர்களின் அடக்கவிடத்தை ஷைகு ஹமீதுத்தீன் நாகூரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வழியில் தோன்றிய ஷெய்கு ஹுஸைன் நாகூரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பராமரித்து வந்தார்கள். அப்பொழுது காஜா நாயகம் அவர்களின் அடக்கவிடத்தின் மீது யாதொரு கட்டிடமும் எழுப்பப்படவில்லை. அரசர் மஹ்மூது கில்ஜி அன்னாரின் மகிமையை உணர்ந்து அவர்களை பல்முறை டில்லிக்கு வருமாறு அழைத்தும் அவர்கள் செல்லவில்லை. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருமுடியைக் காண வருமாறு அழைத்ததுமே அதைக் காண அங்கு சென்றார்கள்.

சுல்தான் ஷெய்கு ஹுஸைன் நாகூரிக்கு பணமுடிப்பு அளித்தும் அதை அவர்கள் ஏற்கவில்லை. தம் மகனாரின் வேண்டுகோளை ஏற்று காஜா நாயகத்தின் அடக்கவிடத்தின் மீது கட்டிடம் கட்டும் எண்ணத்தோடு அப்பணத்தைப் பெற்று அதைக் கொண்டு அவர்களின் கட்டிடம் நிர்ணமானிக்கப்பட்டது. பின்னர் சுல்தான் மஹ்மூது கில்ஜி தர்காவின் அண்மையில் இறைவனைத் தொழுவதற்காக ஒரு பள்ளிவாயிலை நிர்மாணித்தார். அதுவே இப்பொழுது 'ஸந்தல் மஸ்ஜித்' என்ற பெயருடன் திகழ்கிறது. அவரே 'புலந்து தர்வாஸா' (உயரமான வாசல்) என்ற பெயருடன் விளங்கம் வாயிலையும் நிர்மாணித்தார். மால்டாவின் மன்னர், மால்தேவை வென்றபின் டில்லி மன்னர் ஷெர்ஷா சூரியும் அஜ்மீர் வந்து காஜா நாயகத்தை தரிசித்து அங்கு நிலவிய தண்ணீர்ப் பஞ்சத்தை அறிந்து அங்கு தம் பெயரால் ஓர் ஏரியை வெட்ட ஏற்பாடு செய்தார்.

பின்னர் டில்லியை ஆண்ட பேரரசர் அக்பரும் பலதடவை நாயகத்தின் தர்பாருக்கு வருகை தந்துள்ளார். சித்தூரில் வெற்றி கிடைத்தால் கால்நடையாகவே அஜ்மீர் வருவதாக நிய்யத்து செய்து வெற்றி கிடைத்ததும் அதன்படியே செய்து தமது நேர்ச்சையை நிறைவேற்றிக் கொண்டார். அவருக்கு மகன்கள் பிறந்த பின்னரும் பலமுறை அஜ்மீர் வருகை தந்துள்ளார்.

சிவப்பு நிறக்கற்களால் ஒரு பள்ளிவாயிலும், காஜா அவர்கள் வாழ்ந்து மறைந்த குளிப்பாட்டப்பட்ட இடத்தில் தர்வேஷ்கள் தங்குவதற்கு ஒரு தங்குமிடமும் 'ஸஹன் சிராஹ்' என்ற விளக்கு மண்டபமும் நிர்மாணித்ததோடு, 125 மணங்கு (தபர்ருக்) சோறு சமைக்கக் கூடிய பெரிய செம்பு சட்டி ஒன்றையும் செய்து கொடுத்தார். மேலும் அஜ்மீரைச் சுற்றி பாதுகாப்புச் சுவரும் எழுப்பினார்.
அக்பரின் மகன் சலீம் என்ற ஜஹாங்கீர் பலமுறை அஜ்மீர் தர்காவிற்கு வருகை தந்துள்ளார். அங்குள்ள சிறிய செம்பு சட்டி அவர் காணிக்கையாக நல்கியதேயாகும். அதில் ஒரு வேளைக்கு 60 மணங்கு சோறு சமைக்கலாம். இதை காணிக்கையாக வழங்கிய அன்று இதில் சோறு சமைத்து 5000 ஏழைகளுக்கு வழங்கினார் அவர்.

அவரின் மகன் ஷாஜஹானும் இங்கு 5 தடவை வந்து அடக்கவிடத்தை தரிசித்தார். இங்கு வெள்ளை சலவைக் கற்களாலான ஒரு பள்ளிவாயிலையும், நகார்கானாவையும் நிர்மாணித்தார்.
ஷாஜஹான் மகள் ஜஹானரா ஹிஜ்ரி 1503 ஷஃபான் மாதம் 18 ஆம் தேதி காஜா நாயகத்தை தரிசிக்க சென்று ரமலான் மாதம் 7 ஆம் நாள் அஜ்மீர் சென்று அன்னாரின் அடக்கவிடத்தை தரிசித்ததை மிகவும் பாக்கியமாக கருதி தம்முடைய 'முனிஸூல் அர்வாஹ்' என்ற நூலில் வரைந்துள்ளார். மேலும் தமக்கு ஊழியம் செய்ய வந்த ஊழியர்கள் அனைவரையும் அங்கேயே விட்டு விட்டு டில்லி மீண்டார். அந்த ஊழியர்களின் வழித்தோன்றல்களே இன்றும் அங்கு ஊழியம் செய்து வருகிறார்கள்.
ஷாஜஹானுக்குப் பின் அரியணை ஏறிய அவ்ரங்கசீபும் காஜா நாயகம் அவர்களின் தர்பாருக்கு பலமுறை வந்துள்ளார். அஜ்மீருக்கு வரும் ஒவ்வொரு தடவையும் தம் தங்குமிடத்திலேயே ஆயுதங்களை வைத்துவிட்டு கால்நடையாகவே காஜா அவர்களின் அடக்கவிடத்திற்கு வந்து தரிசித்து வந்தார். அப்பொழுது ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் காணிக்கை செலுத்தி வந்தார்.

பிற்காலத்தில் காஜா அவர்களின் அடக்கவிடத்திற்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மனைவி மேரி ராணி அம்மையார் ஆப்கான் அமீர் ஹபீபுல்லாஹ் கான், ராம்பூர் நவாப் ஹாமித் அலீகான், ஹைதராபாத் நிஜாம் மீர் உஸ்மான் அலீகான்,தீதா சமஸ்தான மன்னர் மகாராஜா கோபதிசிங்,தோல்பூர் மகாராஜா ராஜா உதயபான் சிங்,மகாத்மா காந்தி,ஜவஹர்லால் நேரு, மௌலானா முஹம்மது அலீ ஜவ்ஹர் ஆகியோரும் வந்து தரிசித்து சென்றுள்ளனர்.
மலேசிய தேர்தலில் வெற்றி பெற்ற துங்கு அப்துர் ரஹ்மான் அமைச்சராக பொறுப்பேற்றதும் அஜ்மீர் வந்து காணிக்கை செலுத்தி சென்றார்.

முன்னாள் பாரத பிரதமர் வாஜ்பாய், தற்போதைய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மற்றும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆகியோரும் இந்த இடத்தை வந்து தரிசித்து சென்றுள்ளனர். பராக் ஒபாமா நாயகம் அவர்களின் அடக்கவிடத்திற்கு அழகிய போர்வையை அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்.
ஜாதி,மத பேதமின்றி அனைவரையும் மாட்சிமையுடன் ஆட்சி செய்யும் அஜ்மீர் நாயகம் அவர்களின் மாண்பினைக் கண்டேன் என்று கி.பி. 1902 ஆம் ஆண்டில் அங்கு வருகை தந்த இந்திய வைஸ்ராய் கர்ஸன் பிரபு தர்காவின் நிகழ்ச்சிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

" சூபிகளின் உலகம்" - தொடர்பதிவு இத்துடன் நிறைவு பெறுகிறது.
இன்னும் சொல்ல வேண்டிய சூஃபிமார்கள் நிறைய இருந்தாலும் , அடுத்தடுத்த தலைப்புகளை ஆய்வு செய்வது என்பது காலத்தின் கட்டாய தேவை.இதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.
எனவே விடுபட்ட சூஃபிமார்களைப் பற்றி இன்ஷா அல்லாஹ் மற்றொரு தொடர் பதிவில் உங்களிடம் சொல்ல வருகிறேன்.
இதுவரை எழுதப்பட்ட சூஃபி பதிவுகள் குறித்து உங்களுக்குள்ளே நிச்சயமாக ஒரு மாற்றத்தை அது ஏற்படுத்திருக்கும். அந்த ஓர் சூஃபி தனத்தைப் பற்றி சிந்திந்தித்து, என்னிடம் தங்களின் கருத்துக்களை தெரிவித்தால் மிக்க சந்தோஷமாக இருக்கும்.
உங்கள் ர.ரா

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 1



மனித குலம் உயிர் வாழ்க்கைக்கு அடிப்படை தேவை மூன்று.

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் இன்றியமையாதவை.
இத்தனைப் பெரிய பூமியைப் படைக்க இறைவன் இரண்டு நாளை எடுத்துக் கொண்டதாக குர்ஆனில் (41:09) கூறும் இறைவன் ,அதில் வசிப்பவர்களுக்கு வேண்டிய உணவையும் நான்கு நாட்களில் நிர்ணயம் செய்தான் என்று கூறி, அதுவும் நல்லவர்கள், தீயவர்கள் என்ற வித்தியாசமின்றி கேட்பவர்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்குமாறும் செய்தான் என்று குர்ஆனில் (41:10) விவரிக்கிறான் .

இவ்விரு வசனங்களிலிருந்து இறைவன் உணவிற்கு எத்தனை முக்கியத்துவம் கொடுத்திருக்கிறான் என்பது விளங்குகிறது .
மனிதன் உள்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது உணவு. நம் உடலை நோய்களின்றி பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உணவுகளை உட்கொள்வது அவசியம். உணவு இல்லையேல் நம் உடல் சோர்வடைந்து விடும். எந்த வேலையையும் செய்ய இயலாது.

وَكَاَيِّنْ مِّنْ دَآبَّةٍ لَّا تَحْمِلُ رِزْقَهَا اللّٰهُ يَرْزُقُهَا وَاِيَّاكُمْ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ
உயிர்வாழும் பிராணிகளில் எத்தனையோ இருக்கின்றன. அவை தங்கள் உணவைச் சுமந்து திரிவதில்லை. அவற்றிற்கும் உங்களுக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கிறான். (இவ்வாறிருக்க அதற்காக நீங்கள் ஏன் அதிகக் கவலைப்பட வேண்டும்.) அவனோ (அனைத்தையும்) செவியுறுபவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.
(அல்குர்ஆன் : 29:60)

மேலை நாடுகளில் ஒருநாள் உணவை 5 நேரங்களாக எடுத்துக் கொள்கிறார்கள். இந்தியாவில் காலை, மதியம், இரவு என்று 3 நேரங்களாக எடுத்துக் கொள்கிறோம்.
'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற திருமூலர் வாக்கில் தொடங்கி 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்ற பழமொழி வரை அனைத்தும் உணவின் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் பெறப்படும் உடல்நலத்தையும் எடுத்துரைப்பதாகவே உள்ளன.
இரண்டடி திருக்குறள், 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' என்கிறது.

முன்பு உண்ட உணவு செரிமானம் ஆகிவிட்டது என்பதை அறிந்து பசி எடுத்த பின், அடுத்த வேளை உணவு உட்கொள்ள வேண்டும்; அவ்வாறு உண்டால், ஒரு மனிதனின் உடலுக்குத் தனியாக மருந்து என எந்தவொரு தேவையும் இருக்காது, அந்த உணவே மருந்தாகும் என்று சொல்கிறது திருக்குறள்.
முறையான உணவை, சரியான நேரத்தில், சரியான அளவில் எடுத்துக்கொள்வது அவசியம்.
உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம் என்ற கண்டோம். ஆனால் இறைவனோ ஒரு படி மேலே போய் இறைவழியில் மரணித்தவர்களுக்கும் தாம் உணவு ஊட்டுவதாக குர்ஆனில் அல்லாஹ் ...

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ؕ بَلْ اَحْيَآءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَۙ
(நம்பிக்கையாளர்களே!) அல்லாஹ்வின் பாதையில் (போர் செய்து) வெட்டப்பட்டோரை இறந்துவிட்டவர்களென நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். அவர்கள் தம் இறைவனிடத்தில் நிச்சயமாக உயிரோடு இருக்கின்றார்கள். (அன்றி) அவர்களுக்கு உணவும் அளிக்கப்படுகிறது.
(அல்குர்ஆன் : 3:169)

உயிரோடு இருக்கும் காலத்தில் உண்ட உணவு மரணித்த பின் மீண்டும் உயிர்தெழுப்பப்படும் போதும் (அவருக்காக படைக்கப்பட்ட உணவில் அவருடைய பெயரை எழுதி வைத்து) மேலும் அந்த உணவு கெடாமல் வைத்திருப்பதாக இறைவன்
(நபியே!) அல்லது ஒரு கிராமத்தின் மீது சென்றவரைப் போல் (நீங்கள் பார்த்திருக்கின்றீரா? அவர்) அ(க்கிராமத்)திலுள்ள (வீடுகளின்) முகடுகளெல்லாம் இடிந்து (பாழாய்க்) கிடக்க(க் கண்டு) "இவ்வூர் (மக்கள் இவ்வாறு அழிந்து) இறந்தபின் அல்லாஹ் இதனை எவ்வாறு உயிர்ப்பிப்பான்?" என்று கூறினார்.
ஆகவே, (அவருடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக) அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள் வரையில் மரணித்திருக்கச் செய்து, பின்னர் அவரை உயிர்ப்பித்து (அவரை நோக்கி "இந்நிலையில்) நீங்கள் எவ்வளவு காலம் இருந்தீர்கள்" எனக் கேட்க...
"ஒருநாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் இருந்தேன்" எனக் கூறினார்.
(அதற்கு அவன்) "அல்ல! நீங்கள் நூறு ஆண்டுகள் (இந்நிலையில்) இருந்தீர்கள். (இதோ!) உங்களுடைய உணவையும், உங்களுடைய பானத்தையும் பாருங்கள். (அவை இதுவரை) கெட்டுப்போகவில்லை...(அல்குர்ஆன் : 2:259)
பூமியில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் உணவு தேவை என்பதில்லை
وَفِى السَّمَآءِ رِزْقُكُمْ وَمَا تُوْعَدُوْنَ
உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட உங்களுடைய உணவு போன்றவை வானத்தில் இருக்கின்றன.(குர்ஆன் : 51:22) எனவே வானத்திலிருக்கும் உணவை நபி ஈஸா (அலை) கேட்டுப் பெற்றிருப்பதாக குர் ஆனில்...

அதற்கு மர்யமுடைய மகன் ஈஸா "எங்கள் இறைவனே! வானத்தில் இருந்து ஓர் உணவுத் தட்டை எங்களுக்கு நீ இறக்கி வைப்பாயாக! எங்களுக்கும், எங்கள் முன் இருப்பவர்களுக்கும், எங்களுக்குப் பின் வருபவர்களுக்கும் அது ஒரு பெருநாளாகவும், உன்னுடைய (வல்லமைக்கு) ஓர் அத்தாட்சியாகவும் இருக்கும். ஆகவே, (அவ்வாறே) எங்களுக்கும் உணவை அளிப்பாயாக! நீயோ உணவளிப்பதில் மிகச் சிறந்தவன்" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்.

(அல்குர்ஆன் : 5:114)

நபி மூஸா (அலை) வேண்டியதற்கிணங்க உணவை தீஹ் பாலைவனத்தில் கூட வானத்திலிருந்து இறக்கிக் கொடுத்தான்.

அவர்களுக்காக "மன்னு ஸல்வா"வையும் இறக்கி வைத்து "உங்களுக்குக் கொடுக்கும் இந்த நல்ல உணவுகளை (அன்றாடம்) புசித்து வாருங்கள். (அதில் எதையும் நாளைக்கென்று சேகரித்து வைக்காதீர்கள்" என்றும் கூறினோம். அவ்வாறிருந்தும் அவர்கள் நமக்கு மாறுசெய்தனர். இதனால்) அவர்கள் நமக்கொன்றும் தீங்கிழைத்து விடவில்லை. எனினும், அவர்கள் தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டனர்.

(அல்குர்ஆன் : 7:160)

இப்பூலகில் மட்டும் அல்லாமல் நாளை நாம் இருக்கப் போகும் சுவனத்திலும் நமக்கான உணவை தயார்ப்படுத்தி வைத்திருப்பதாக குர்ஆனில் ..

لَا يَسْمَعُوْنَ فِيْهَا لَـغْوًا اِلَّا سَلٰمًا وَلَهُمْ رِزْقُهُمْ فِيْهَا بُكْرَةً وَّعَشِيًّا

(அவற்றில்) ஸலாம் என்பதைத் தவிர (ஸலாம் என்ற முகமனைத் தவிர) வீணான வார்த்தைகளைச் செவியுறார். அங்கு அவர்களுக்குக் காலையிலும் மாலையிலும் (மிக்க மேலான) உணவு அளிக்கப்படும்.

(அல்குர்ஆன் : 19:62)

நரகவாசிகளுக்கும் கூட உணவு தேவைப்படுகிறது

அவர்களுக்கு விஷச் செடிகளைத் தவிர, வேறு உணவில்லை. அது அவர்களைக் கொழு(த்துச் செழி)க்கவும் வைக்காது அன்றியும் பசியையும் தணிக்காது. (88:6,7)

நரகவாசிகளின் பானம்

அவனுக்கு முன்னால் நரகம் தான் இருக்கிறது, இன்னும் அவனுக்கு (துர் நாற்றமுள்ள) சீழ் நீரே குடிக்கக் கொடுக்கப்படும். அதை அவன் (சிரமத்தோடு) சிறிது சிறிதாக விழுங்குவான். எனினும் அது அவன் தொண்டையில் எளிதில் இறங்காது ஒவ்வொரு திசையிலிருந்தும் அவனுக்கு மரணம் வந்து கொண்டிருக்கும். எனினும் அவன் இறந்து விடுபவனும் அல்லன். அன்றியும் அவன் முன்னே (மிகக்) கொடிய வேதனையும் உண்டு. (14:16,17)

நரகவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு வகைகள்

1. கொதிக்கும் நீர் : (6:70, 10:4, 37:67, 38:57)

2. சீழ் (சலம்) (14:16,17, 38:57, 69:36, 78:25)

3. ஸக்கூம் மரம் (37:62, 44:43 to 46, 56:52,53)

4. முள்மரம் (88:6)

ஆக உணவு என்பது இம்மைக்கும் , மறுமைக்கும் அத்தியாசமாக தேவைப்படுகிறது என்பதை அறிகிறோம்
.

ரஹ்மத் ராஜகுமாரன்.

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 2

பிரியாணி



முஸ்லிம்களின் விழா, விசேஷம் என்றால் கண்டிப்பாக அது பிரியாணியை மையப்படுத்திய விருந்து உணவாகத்தான் இருக்கும் என்று நம் சகோதர சமுதாயத்தினர் நன்கு விளங்கியிருக்கின்றனர் .
தமிழர்களின் பாரம்பரிய உணவுகள் எத்தனையோ இருக்க நம் உணர்வோடு கலந்து ஒன்றாகிவிட்டது பிரியாணி. கிராமங்களில்கூட ஏதாவது விசேஷம் என்றால் பிரியாணி உண்டாப்பா ? என்று கேட்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பிரியாணியின் பெயரால் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகாவில் உள்ள வடக்கம்பட்டி 'பிரியாணி கிராமம்' என்று அழைக்கப்படுகிறது. தமிழகத்தில் முனியாண்டி விலாஸ் என்ற பெயரில் உணவகங்கள் நடத்தி நளபாக சக்கரவர்த்திகளாக திகழ்ந்திடும் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து வடக்கம்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு முனியாண்டி சுவாமிகளுக்கு ஆண்டுதோறும் பொங்கலிட்டு வழிபடுவது வழக்கம்.
அப்போது சுவாமிக்கு நூற்றுக் கணக்கான ஆடுகள் மற்றும் கோழிகளை பலியிட்டு ராட்சத அண்டாக்களில் பிரியாணி தயாரிக்கப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதனால் திருமங்கலம் தாலுகா கள்ளிக்குடி அருகேயுள்ள வடக்கம்பட்டி, "பிரியாணி கிராமம் " என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப் படுகிறது.

பிரியாணியின் அளவுகள் 'ஒன் பிளேட், ஹாஃப் பிளேட்,குவார்டர் பிளேட் என்பவை மெல்ல மெல்ல வழக்கொழிந்து கொண்டிருக்க, ஒரு கிலோ பிரியாணி, "பக்கெட் பிரியாணி" என்றெல்லாம் அளவுகளிலும் மாற்றங்கள் தொடங்கிவிட்டன.

இந்தியர்களுக்கு மிகவும் பிடித்தமான பிரியாணியின் தாயகம் இந்தியா அல்ல .அதே நேரத்தில் இந்த நாட்டில் இருந்து வந்ததுதான் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை.
பிரியாணி என்பது பெர்சியன் மொழியில் இருந்து வந்த ஒரு உருதுச் சொல். "சமைப்பதற்கு முன் வதக்கு " என்பது இதன் பொருள்.' பிரிஞ்சி ' என்பது பெர்சியன் மொழியில் ' அரிசி ' அல்லது 'சாதம் ' என்று அர்த்தம் இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு பிரியாணியின் தாயகம் மேற்கு ஆசியாவாக இருக்கலாம் என்கிறார்கள் உணவு ஆய்வாளர்கள்

துருக்கிய மங்கோலிய பேரரசு தைமூர் 1398 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தபோது கையோடு கொண்டு வந்ததுதான் இந்த பிரியாணி என்ற ஒரு வரலாறும் உண்டு.
அவருடைய படைகள் முகாமிட்டிருந்த இடத்தில் வீரர்களுக்கு சாப்பாடு தயார் ஆகும் . போருக்கு வந்த இடத்தில் சாதம், இறைச்சி சால்னா, ரசம் என்றெல்லாம் தனித்தனியாக செய்ய முடியாது அல்லவா .
எனவே பெரிய பாத்திரத்தில் அரிசி, காய்கறிகள், இறைச்சி , வாசனைப் பொருட்கள் அத்தனையும் ஒன்றாக சேர்த்து ஒரு சாதம் செய்து அதை அப்படியே வீரர்களுக்கு சூடாக பரிமாறினார்கள். அதுதான் இந்தியாவுக்கு முதன்முதலில் பிரியாணி வந்த கதை என்றும் சொல்கிறார்கள்.
அதேபோல் தெற்கு மலபார் கடற்கரைப் பகுதிக்கு அடிக்கடி வந்து சென்ற அரேபிய வியாபாரிகள் அறிமுகப்படுத்தியது தான் இந்த பிரியாணி என்ற ஒரு வரலாறும் உண்டு.

தமிழ் இலக்கியத்தில் கிமு 2 ஆம் நூற்றாண்டுக்கும் முன்னதாகவே ' ஊன் சோறு ' என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது .இதை எப்படித் தயாரித்தார்கள் என்பதற்கான குறிப்பும் உண்டு. அரிசி, நெய். இறைச்சி மஞ்சள் தூள், கொத்தமல்லி . மிளகு பிரிஞ்சி இலை எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து இந்த ஊன் சோற்றை தயாரித்து , போர் வீரர்களுக்கு பரிமாறினார்கள். இதுதான் பிரியாணி என்றும் சொல்கிறார்கள். ஒருமுறை ஷாஜகானின் மனைவி மும்தாஜ் படைகள் முகாமிட்ட இடத்திற்கு சென்றிருக்கிறார் அங்கு இருந்த வீரர்கள் பலவீனமானதாகும் போதுமான ஊட்டச்சத்து இல்லாமல் சோர்ந்து போய் இருப்பதை பார்த்து இருக்கிறார் . உடனே தலைமை சமையற்காரரை அழைத்து அரிசியும் இறைச்சியும் கலந்த ஊட்டச்சத்துள்ள உணவை தயாரித்து வழங்க சொல்லியிருக்கிறார் அதுதான் பிரியாணி என்று ஒரு வரலாறும் உண்டு.

ஹைதராபாத் நிஜாம்களுக்கு, லக்னோ நவாபுகளுக்கும் பிரியமான உணவாக பிரியாணி இருந்தது. அவர்கள் அதை பிரபலப்படுத்தவும் செய்தார்கள். ஒரு காலகட்டத்தில் அவர்கள் மிக முக்கியமான அடையாளமாகவே அது மாறிப் போனது.
அவர்களிடம் பணியாற்றிய சமையல்காரர்கள் உலக அளவில் பிரியாணிக்காவே புகழ் பெற்றார்கள். அதன் சுவையை போல சொல்லச்சொல்ல அலுக்காதது பிரியாணியின் வரலாறு.

வரலாறு இருக்கட்டும்... பிரியாணி உடல் நலத்துக்கு உகந்ததா இல்லையா ?
' ஆரம்பத்தில் முஸ்லிம்களால் மட்டும் தயாரிக்கப்பட்டு வந்த பிரியாணி இன்றைக்கு பலரால் பல வழிமுறைகளில் தயாரிக்கப்படுகிறது .அதை தொடர்ந்து சாப்பிடுவது ஆரோக்கியத்துக்குக் கேடு. இதில் கொழுப்பைக் கூட்டும் பல பொருட்கள் சேர்க்கப்படுவதால் உடல் பருமனுக்கு வழிவகுக்கும் .அது இதய கோளாறுகள் வரை கொண்டுபோய் சேர்த்துவிடும்.

நம் வயிற்றுக்கு கொஞ்சம் ஓய்வு இருப்பதுதான் எப்போதும் நல்லது. ஆனால் பிரியாணி கொஞ்சம் கடினமான உணவு என்பதால்,செரிமானமாவது தாமதப்படும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது இது உண்மையா ?' என்று மருத்துவர்களிடம் கேட்டபோது,

அளவோடு சாப்பிட்டால் எந்த பாதிப்பும் இல்லை அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது பிரியாணிக்கும் பொருந்தும் .
பிரியாணிக்கு தொட்டுக்கொள்ள வெங்காயம் வைப்பார்கள் இது செரிமானத்திற்கு உதவும். கத்திரிக்காய் தொக்கு கூட்டு மாதிரி ஒன்று வைப்பார்கள். கத்திரிக்காய்க்கு மருத்துவ குணம் உண்டு.இதை சொலேனம் (Solanum) ஃபேமிலி சேர்ந்தது.தாவரங்களில் அதிகமான மருத்துவ குணத்தை கொண்டது இந்த குடும்பம்தான்.

சுத்தமான முறையில் வீட்டில் தயாரிக்கப்படும் பிரியாணியை சாப்பிடுவதால் நல்ல ஊட்டச்சத்து அளிக்கக்கூடியதாக இருக்கும். வியாபார நோக்கில் செய்யப்படுவதில் இந்த பலனை எதிர்பார்க்க முடியாது .ஆகவே சொந்தமாக வீடுகளில் சமையல் செய்து சாப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் தரீத் என்னும் வாற்கோதுமை மாவில் இறைச்சியை சேர்த்து செய்யப்படும் சுவை மிகுந்த உணவு. இதை பிரியாணி நோக்கில் சொன்னால் கோதுமை மாவு பிரியாணி எனப்படும் .
எல்லா பெண்களை விடவும் ஆயிஷா(ரலி) அவர்கள் சிறந்தவர்கள் - "தரீத் என்னும் உணவு மற்ற உணவுகளை விட சிறப்பாக இருப்பது போன்று மற்ற பெண்களை விட ஆயிஷா(ரலி) அவர்கள் சிறப்பானவர்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் " (திர்மிதி)

ரஹ்மத் ராஜகுமாரன் .

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 3

மந்தி பிரியாணி



சௌதி அரேபியாவில் பிரசித்திப் பெற்ற மந்தி பிரியாணி திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரிலும் பிரபலமடைந்துள்ளது.

கூத்தாநல்லூரிலிருந்து,சௌதி அரேபியாவில் உள்ள பிரபல ரெஸ்டாரெண்டில் 25 ஆண்டுகள் மேலாளராகப் பணியாற்றிய கே. ஹாஜா மைதீன், தனது சொந்த ஊரான கூத்தாநல்லூரில் "கல்ப் ரெஸ்டாரெண்ட் " என்ற பெயரில் உணவகம் தொடங்கினார். இங்கு மந்தி பிரியாணி பிரசித்தம்.

மந்தி பிரியாணி குறித்து ஹாஜா மைதீன் கூறியது:

அரபு நாடுகளின் பிரதானமான உணவு மந்தி பிரியாணி. இதை தயாரிக்க முதலில் கோழியை உறித்து, தேவையான அளவுக்கு லெமன், உப்பு, கொஞ்சம் மஞ்சள் தூள் உள்ளிட்டவைகளைப் போட்டு, புரட்டி எடுத்தப் பிறகு, 15 மணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படும். அப்போதுதான் கோழிக்கறி சுவையாக இருக்கும்.

இங்கு கோழிக்கறியை வேகவைத்து சமையல் செய்து சாப்பிடுவோம். ஆனால், மந்தி பிரியாணிக்கு கோழிக்கறி அடுப்புக்கரியில் போட்டு சுடப்படும். புகைச்சல் அடிக்காது. அடுப்புக்கரியில் போட்டு வாட்டி எடுப்பதுதான் மந்தி பிரியாணியின் ஸ்பெஷாலிட்டியே.

மந்தி பிரியாணிக்குத் தேவையான மசாலாவை, அரபு நாட்டிலிருந்தே வரவழைக்கிறோம். ஏற்கெனவே செய்யப்பட்ட சாதத்தின் மேல், அடுப்புக்கறியில் வாட்டிய கோழிக்கறி சேர்க்கப்படும். ஒரு பிளேட்டில் 4 பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய சஹன் என்ற சாப்பாட்டுத்தட்டில், ஒரு கிலோ 600 கிராம் எடையுள்ள கோழிக்கறியுடன், வறுத்த முந்திரி பருப்பு, பாதம் பருப்புகளை தூவிவிடப்படும்.

மந்தி பிரியாணியில் தேவைக்கேற்ப கொஞ்சமான அளவுக்கு நெய் மற்றும் ஆலிவ் ஆயில் மட்டும்தான் ஊற்றப்படும்.வேறு எந்தவிதமான எண்ணெய்களும் சேர்ப்பதில்லை.சௌதி அரேபியாவில் உள்ளது போலவே மந்தி பிரியாணியின் சுவை மாறாமல் இங்கு தயாரித்து வழங்கி வருகிறோம். மந்தி பிரியாணி வேறு எங்கும் கிடைக்காது.

காரைக்கால், எரவாஞ்சேரி ஆகிய இரண்டு இடங்களில் மட்டும்தான் விற்கப்படுகிறது.

மந்தி பிரியாணியில் விரல் படாமல் இருந்தால், 7 மணி நேரம் வரை கெட்டுப் போகாமல் அதே சுவையுடன் இருக்கும் என பெருமையுடன் தெரிவிக்கிறார் மைதீன்.

وَلَحْمِ طَيْرٍ مِّمَّا يَشْتَهُوْنَ

(சுவனத்தில்) விரும்பிய பட்சிகளின் மாமிசத்தையும் (கைகளில் ஏந்தி சுற்றி அவ்விளைஞர்கள் வருவார்கள்). (அல்குர்ஆன் : 56:21)

"சுவனத்தில் பறவைகளும் இருக்கின்றன. அவற்றின் கழுத்துகள் ஒட்டகத்தின் கழுத்துகளைப் போல் இருக்கும்" என்று கூறினார்கள்.

அப்போது உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள், "இந்தப் பறவைகள் மிகவும் உல்லாசமாக இருக்கும்" என்று கூறினார்கள்.

அதற்கு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அவற்றை உண்பவர்கள் அவற்றை விட உல்லாசமாக இருப்பார்கள்" என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, நூல்: திர்மிதீ)

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 4

மைதா பரோட்டா



அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் துணைவியார்) ஸைனப் (ரலி) அவர்களின் மணவிருந்திலும் (வலீமா) நான் கலந்துகொண்டேன். அவ்விருந்தில் ரொட்டியையும் இறைச்சியையும் வயிறு நிரம்ப உண்ணக் கொடுத்தார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 2796.

வட இந்தியா பராத்தா முதல் முதலில் பாகிஸ்தானின் பெஷாவரில்தான் உருவானது என்கிறார்கள். அங்கிருந்து மெல்ல மெல்ல வட இந்தியா முழுமைக்கும் பரவியது. ஆரம்பத்தில் குட்டி டிபனாக காலை உணவுக்கு மட்டும் இதை சாப்பிட்டு இருக்கிறார்கள் பஞ்சாபிகள்.

மைதா வந்த புதிதில் பேப்பர் ஒட்டும் பசை காய்ச்சுவதற்குத்தான் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவில் இதற்குப் பெயரே பேஸ்டரி பவுடர் (pastry powder) என்பது தான்.
இரண்டாம் உலகப் போர்... அதன் விளைவாக எழுந்த பஞ்சம் காரணமாக மைதாவை சமையலுக்குள் கொண்டு வந்தார்கள். சமையலுக்கு பயன்படும் விதத்தில் மைதாவை அறிமுகப்படுத்திய பெருமை அமெரிக்காவைச் சாரும்

தென் தமிழகத்தில் பரோட்டாவுக்கு புகழ்பெற்ற சைடுடிஷ் சால்னா குருமாவும், கூடவே சிக்கன் குருமா, அல்லது மட்டன் குருமா என்று இருந்தால் கேட்கவே வேண்டாம்.
இவற்றை துணைக்கு வைத்துக்கொண்டு நடிகர் சூரி, "நான் முதல்ல இருந்து சாப்பிடுகிறேன்.நீ போர்டை அழி" என்று சவால்விட செய்யும் சக்தி புரோட்டாவுக்கு உள்ளது. அம்புட்டு ருசி .பேப்பர் ஒட்ட வந்த பசை இப்போ மனசோட ஒட்டிகிடுச்சி !

கோதுமையில் உள்ள நன்மை பயக்கும் விஷயங்கள் எல்லாம் தனித்தனியாக பிரிக்கப்பட்டு கோதுமை மாவு, ரவை போன்றவை தயாரிக்கப்படும், அதையடுத்து வெறும் சக்கைதான் இந்த மைதா மாவு. இந்த சக்கையையும் எப்படியாவது விற்றுவிட வேண்டும் என்பதற்காக பல ரசாயனங்கள் கலக்கப்பட்டு அதுவும் ஒரு உணவுப்பொருள் போல உலா வந்து கொண்டிருப்பது வேதனையிலும் வேதனை....
மைதா தயாரிப்பு முறை: முதலில் கோதுமையை நன்றாக தீட்டுகிறார்கள். கோதுமையில் இருந்து தவிடும் நுண்ணுயிரிகளும் தீட்டுதலின் மூலம் நீக்கப்படுகின்றன. பின்னர் அதை மாவாக அரைக்கிறார்கள். அந்த மாவு நல்ல மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

பின்னர் அந்த மாவில் பென்சாயில் பெராக்சைடு **(BENZOYL PER OXIDE)** எனும் வேதிப்பொருளை கலக்குகிறார்கள். இந்த வேதிப்பொருள் கோதுமை மாவில் உள்ள மஞ்சள் வண்ணத்தை நீக்கி தூய வெண்மையாக மாற்றுகிறது. இந்த வேதிப்பொருள் ஒரு நச்சாகும். தலைமுடியை கறுப்பாக மாற்றும் சாயத்தில் சேர்க்கப்படும் வேதிப்பொருள் இது.

இது மைதாவில் உள்ள மாவுப்பொருளுடன் இணைந்து உருவாக்கும் நச்சுப்பொருள் சர்க்கரை வியாதிக்கு காரணியாகிறது. மைதாவை மிருதுவாக மாற்றுவதற்கு "அல்லோக்சான் " எனும் வேதிப்பொருள் கலக்கப்படுகிறது. இது கலக்கப்பட்டவுடன் மைதா வெகுமிருதுவாக மாறுகிறது.

சர்க்கரை வியாதிக்கு மருந்து தயாரிக்கும் ஆலைகளில் உள்ள சோதனைச்சாலைகளில் தயாரிக்கப்படும் மருந்துகள் முதலில் வெள்ளெலி, சிறுபன்றி, குரங்கு ஆகிய விலங்கினங்களிடம் சோதித்துப் பார்க்கப்படுகின்றன. இந்த மிருகங்களுக்கு சர்க்கரை வியாதியை உண்டாக்க இந்த அல்லோக்சான் ஊசி மூலம் செலுத்தப்படுகிறது.

இந்த அல்லோக்சான் சேர்க்கப்படும் மைதாவை உண்பவர்களுக்கு சர்க்கரை நோய் உருவாகத்தானே செய்யும். இவை தவிர மைதாவில் செயற்கை வண்ணங்கள், தாது எண்ணெய்கள், சுவையூட்டிகள், பதனப்பொருட்கள், வெள்ளை சீனி, சாக்கரின், அஜினோமோட்டோ ஆகிய பொருட்களும் சேர்க்கப்படுகின்றன. இவை மைதாவை மேலும் அபாயகரமானதாக மாற்றுகின்றன.
இவை தவிர குளோரின் டை-ஆக்சைடு, பொட்டாசியம் புரோமைட், அம்மோனியம் கார்பனேட், சுண்ணாம்பு, சார்பிடன் மோனோ சாச்சுரேட் போன்றவைகளும் கலக்கப்படுகின்றன.

கோதுமை தீட்டப்படும் போதே 76 விழுக்காடு வைட்டமின்களும், தாது பொருட்களும் அகற்றப்படுகின்றன. அத்துடன் 97விழுக்காடு நார்ச்சத்தும் களையப்படுகிறது. களையப்பட்ட சத்துகளை மீண்டும் சேர்க்க செயற்கையாக உருவாக்கப்படும் வைட்டமின்களும், தாதுப்பொருட்களும் கூட்டப்படுகின்றன. ஆனால் இவை இயற்கையாக கிடைப்பவற்றுக்கு இணையானவை அல்ல.
அபூ ஹாஸிம்(ரஹ்) கூறினார்கள்
நான் ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அவர்களிடம், 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (நன்கு சலித்து சுத்தம் செய்யப்பட்ட மாவில் தயாரிக்கப்பட்ட மைதா) வெள்ளை ரொட்டியைச் சாப்பிட்டதுண்டா?' என்று கேட்டேன்.
.
அதற்கு ஸஹ்ல்(ரலி), 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தம்மை (இறைத்தூதராக) அல்லாஹ் தேர்ந்தெடுத்ததிலிருந்து தமக்கு அவன் இறப்பை அளிக்கும் வரை (சலித்து சுத்தமாக்கப்பட்ட மாவினாலான) வெள்ளை ரொட்டியைப் பார்த்ததேயில்லை' என்று பதிலளித்தார்கள்.
நான், 'இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் உங்களிடம் சல்லடைகள் இருந்ததுண்டா?' என்று கேட்டேன். அவர்கள், 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தம்மை (இறைத்தூதராக) அல்லாஹ் தேர்ந்தெடுத்ததிலிருந்து தம்மை அவன் இறக்கச் செய்யும் வரை சல்லடையைக் கண்டதேயில்லை' என்றார்கள்.

நான், 'கோதுமையை நீங்கள் எப்படிச் சாப்பிட்டுவந்தீர்கள்? சலிக்காமலேயா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'நாங்கள் கோதுமையை அரைத்து, (உமியை நீக்க) அதில் (வாயால்) ஊதுவோம். அதிலிருந்து (தவிடு, உமி போன்ற) பறப்பன பறந்து விடும். எஞ்சியதைத் தண்ணீர் கலந்து (ரொட்டி தயாரித்து) உண்போம்' என்றார்கள். ஸஹீஹ் புகாரி : 5413.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 5

கொஞ்சமாவது பசிக்கட்டும்



மனித ஆசைகளில் முக்கியமான ஒன்று, உணவின் மீதான ஆசை.

நவீன வாழ்க்கை போங்கில் கணக்கற்ற உணவுகளை கட்டுப்பாடில்லாமல் சாப்பிடுவது உல்லாசத்தின் ஒரு அம்சமாகிவிட்டது. தேவையே இல்லாமல் கிடைப்பதை எல்லாம் சாப்பிடுகிறோம். நியாயமே இல்லாமல் வீண்டிக்கவும் செய்கிறோம். பார்ட்டி ஃலைப் என்பது பார்ட் ஆப் லைஃபாகி விட்டது.
இதில் வீண் விரயம் என்ற ஒரு பெரும் பாவம் பரவலாகி வருகிறது என்பதைப் போலவே உடல்நலக் குறைவு என்பதும் அதன் தொடர்ச்சியால வருகிறது.

நம்முடையவும் நமது சிறுவர்களுடையவும் இன்றைய உணவுப் பழக்க வழக்கங்கள் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டியது இன்றைய தேவையாக உருவெடுத்துள்ளது.
சாப்பாட்டின் மீதான ஆசைய கட்டுப்பாடாக வைத்திருக்க இஸ்லாம் அறிவுறுத்துகிறது.
[وكُلُواْ وَاشْرَبُواْ وَلاَ تُسْرِفُواْ إِنَّهُ لاَ يُحِبُّ الْمُسْرِفِينَ] سورة الأعراف
தேவைக்கு அதிகமாக சாப்பிடக் கூடாது என்பதும் வீண்விரயம் செய்யாதே என்பதன் பொருளாகும்.
வயிறு புடைக்க உண்பதை வழக்கமாக்கிக் கொள்ளக் கூடாது.
سيدنا عمر بن الخطاب رضي الله عنه إياكم والبطنة في الطعام والشراب فإنها مفسدة للجسم مورثة للسقم ،مكسلة عن الصلاة وعليكم بالقصد فيهما فإنه أصلح للجسد وأبعد عن "فقال السرف وإن الله تعالى ليبغض الحبر السمين وإن الرجل لن يهلك حتى يؤثر شهوته على دينه " ورد في الدرر المنثورة للسيوطي .
கெட்ட பை
عن المقداد بن معد يكرب أن النبي صلى الله عليه وسلم قال : " ما ملأ ابن آدم وعاء شراً من بطنه ، بحسب ابن آدم لقيمات يقمن صلبه ، فإن كان لابد فاعلاً فثلث لطعامه وثلث لشرابه وثلث لنفسه" .

இளைஞர்கள் உணவு பழக்கத்தில் சாப்பாட்டின்
விருப்பத்திலும் கவனமாக இருக்க வேண்டும்.
ஒரு காலம் வரை கணக்கின்றி நாம் சாப்பிடும் உணவு ஒரு காலத்தில் நம்மை சாப்பிட்டு விடுகிறது.
இன்றைய மருத்துவ உலகம் பசியால் இறப்பவர்களை விட அதிகம் சாப்பிடுவதால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்கிறது.

கொலஸ்ட்ரால் – பி பி – சுகர் – ஹார் அட்டாக் போன்ற பல பிரச்சனைகளும் இன்று மக்களை பெருமளவில் பாதிக்கின்றன. அவை பெருமளவில் அதிகப்படியான உணவினாலேயே ஏற்படுகின்றன.
அதிகமாக சாப்பிடுவது அறிவை மழுங்கடிக்கிறது.
அதிகம் சாப்பிடுகிறவர்கள் அதிகம் உறங்குகிறார்கள். சிந்திக்கிற வாய்ப்பை இழக்கிறார்கள்.
அதிகமாக சாப்பிட்டு உடலை பெருக்க வைத்திருப்பவர்கள் அறிவாளிகளாக இருக்க மாட்டார்கள் என்பது பொதுவான அனுபவமாகும்.
மிகச் சிலர் தான் இதற்கு விதிவிலக்காக இருப்பார்கள்.

இமாம் ஷாபி ரஹ் கூறுகிறார்கள்
எனது ஆசிரியர் இமாம் முஹம்மது ரஹ் அவர்களை தவிர வேறு யாரையும் உடல் பருத்து அறிவுடையவராக நான் கணடதில்லை.
அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீனின் உடலை பாடம் செய்து வைத்திருக்கிறார்கள். அவ்வளவு பெரிய விஞ்ஞானி ஒரு 18 வயதுடைய இளையவரைப் போல உடல் வாகு கொண்டிருந்தார். யாரும் அவரை தூக்கி விட முடியும்.
இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் குறைவாக சாப்பிடுகிறவர்களாக இருந்தார்கள்.
இமாம் புகாரி ரஹ் அவர்கள் பெரும் பாலும் தனது தினசரி உணவாக 7 பாதம் பருப்புக்களை மட்டுமே சாப்பிடுவாகள்.
ஒருமுறை இமாம் புகாரியை பரிசோதித்த மருத்துவர் இந்த மனிதர் வாழ்நாளில் சால்னாவே சாப்பிட்டது இல்லை போல தெரிகிறது என்றார். இமாம் புகாரி ரஹ் கூறினார். நான் கடந்த 15 ஆண்டுகளாக சால்னா சாப்பிட்டது இல்லை.
வகை வகையான உணவே வாழ்கை என்று நினைப்பவர்கள் சாப்பிட்ட்தை மட்டுமே சாதனையாக சொல்ல முடியும். சாதனையாளர்களோ சாப்பாட்டை பெரிது பாடுத்தியதில்லை.
நபித்தோழர்கள் ஒரே ஒரு பேரீத்தம் பழம் மட்டுமே சாப்பிட்டு ஒரு நாளை கழித்து விடுவார்கள்.
ஒரு பேரீத்தம் பழம் மூன்று நாள் வரை ஒரு மனிதனுக்கு பசியினால் மரணம் ஏற்படாமல் பாதுகாக்கும் என்பது அறிவியல் கண்டுபிடிப்பு.
தற்போதைக்கு நாம் சாப்பிடுகிற உணவில் 25 சதவீதம் மட்டுமே நமக்கு போதுமானது என்றும் மீதி 75 சதவீதம் தேவையற்ற சிரமத்தை உடலுக்கு தருகின்றன. அவை உடலுக்கு எந்த பயனையும் தராமல் வெளியேறிவிடுகின்றன.

சிங்கம் வளர்ப்பவர்கள் 7 நாட்களுக்கு ஒரு முறை அதற்கு தேவையான உனவை கொடுக்கிறார்கள். 7 நாட்களுக்கு ஒரு முறை சாப்பிடுகிற சிங்கம் மிகவும் வலிமையாக இருக்கிறது. ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுகிற நாம் நோஞ்சான்களாக இருக்கிறோம்.

மன்னர் மகூகஸ் பெருமானாருக்கு அனுப்பி வைத்த அன்பளிப்புளில் ஒரு மருத்துவரும் இருந்தார். அவர் மதீனாவில் மருத்துவம் பார்க்கட்டுமா என்று அனுமதி கேட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் சம்மதித்தார்கள்.
ஒரு மாதமாகியும் அவரிடம் ஒரு நோயாளியும் வரவில்லை. பெருமானாரிடம் வந்து அவர் நான் திரும்பட்டுமா என்றார்.
தாரளமாக திரும்பிச் செல்லலாம். இங்குள்ளவர்கள் பசித்தால் மட்டுமே சாப்பிடுகிறார்கள். பசி கொஞ்சம் மிச்சம் இருக்கிற போதே உணவை நிறுத்திக் கொள்வார்கள் என்றார்கள்.
மாபெரும் அறிஞர்களாவும் சீர்திருத்த வாதிகளாகவும் போராளிகளாகவும் வாழ்ந்த நமது முன்னோர்கள் உணவு விசயத்தில் மிகவும் கட்டுப்பாடனவர்களாக இருந்தார்கள்.

இப்னு உமர் ரலியிடம் ஒருவர் ஜீரணத்திற்கு ஒரு பானத்தை தயார் செய்து தரட்டுமா என்று கேட்டார். இப்னு உமர் ரலி கூறினார்."நான் நான்கு மாதமாக வயிறு நிறைய சாப்பிடவில்லை. சாப்பிடுவதற்கு எதுவும் இல்லாமல் இல்லை. நான் பழகி வந்த மனிதர்கள் சில நேரம் சாப்பிடுவார்கள். சில நேரம சாப்பிடாமலே இருந்து விடுவார்கள்

فعن ابن سيرين -رحمه الله- قال: إن رجلًا قال لابن عمر: أعْمل لك جوارش؟ قال وما هو؟ قال: شيء إذا كظَّك الطعام فأصبتَ منه سهَّل، يعني: كما نقول نحن اليوم: مهضم، فقال ابن عمر -y- ا: ما شبعت منذ أربعة أشهر، وما ذلك ألا أكون له واجدًا، يقول: ليس لأنني لا أجد ما آكل، ولكنني عهدت قومًا يشبعون مرة ويجوعون مرة- سير أعلام النبلاء
மூன்று வருடமாக வயிறு நிறய உண்டதில்லை
عن أبي حمزة السكري -رحمه الله- أنه قال: ما شبعت منذ ثلاثين سنة إلا أن يكون لضيف-- سير أعلام النبلاء
இபுறாஹீம் பின் அத்ஹம் ஒரு சாப்பிட உட்கார்தால் மற்ற உணவுகளை அடுத்தவர்களுக்கு கொடுத்து விட்டு ரொட்டியையும் ஜைதூனையும் மட்டும் எடுத்துக் கொள்வார்கள்
وعن إبراهيم بن أدهم كان إذا جلس على طعام طيب قَدّم إلى أصحابه وقنع بالخبز والزيتون
يعني: يقدم الطعام لأصحابه وهو يأكل الخبز والزيتون. - سير أعلام النبلاء
பத்து வருட்த்தில் ஒரு முறை மட்டுமே வயிறாற சாப்பிட்டேன் இமாம் ஷாபி
ويقول الربيع تلميذ الشافعي: سمعت الشافعي يقول: ما شبعت منذ ست عشرة سنة إلا مرة، فأدخلت يدي فتقيأتها،
உலகப் புகழ் பெற்ற மாமேதை பெரு மதிப்பு மிக்க வாழ்ந்த பெருந்தகை அஹ்மது பின் ஹன்பல் ரஹி அவர்களின் உணவை மகன் விவரிக்கிறார்
காய்ந்து போய் சருகாய் விழும் ரொட்டித் துண்டை பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி மென்மைப் படுத்தி உப்போடு சேர்த்து உண்பார். மாதுளம் பழம் பேரிக்காய் காசு கொடுத்து வாங்கியதில்லை. தர்பூசனி. திராட்சை பேரீத்தம் பழம் மட்டுமே உண்டுள்ளார்.
وجاء عن صالح بن أحمد بن حنبل قال: ربما رأيت أبي يأخذ الكِسَر -يعني من الخبز- ينفض الغبار عنها ويصيرها في قصعة ويصب عليها ماء ثم يأكلها بالملح، وما رأيته اشترى رمانًا ولا سفرجلًا ولا شيئًا من الفاكهة إلا أن تكون بطيخة -فيأكلها بخبز- وعنبًا وتمرًا
அதிகம் சாப்பிடுவோர் அதிகம் ஆசை கொள்வர்
அளவாக சாப்பிடும் பழக்க உருவாகிற போது பலரை ஆதரிக்கிற மனமும் தானாக வரும்.
وعن جابر رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال : " طعام الواحد يكفي الاثنين وطعام الاثنين يكفي الأربعة وطعام الأربعة يكفي الثمانية "صحيح مسلم.
நிறையச் சாப்பிட்டால் தான் திருப்தியாகும் என்று நினைப்பவர்கள் வீண் விரயமும் செய்வார்கள். பிறருக்கு கிடைப்பதை தடுக்கவும் செய்வார்கள்
அதிகம் சாப்பிட்டு தனது முன்னிலையில் ஏப்பம் விட்ட தோழரைப் பார்த்து இந்தப் பழக்கத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று பெருமானார் அறிவுறுத்தினார்கள்
وعن عبد الله بن عمر رضي الله عنه قال : تجشأ أبو جحيفة عند رسول الله صلى الله عليه وسلم فقال له : " أقصر عنا من جشائك، إن أطول الناس جوعاً يوم القيامة أكثرهم شبعاً في الدنيا "مجمع الزوائد للهيثمي .
வெள்ளப் பெருக்கு போன்ற ஆபத்து காலத்தில் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகிற போது மனது நிறையாதவர்கள் மேலும் மேலும் வாங்கி வைத்து வீணடிக்கிறார்கள். அளவாக சாப்பிட்டால் போதும் என்று நினைப்பவர்கள் அடுத்தவர்களுக்கு கொடுங்கள் என்று திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள்.
அதிகமாக சாப்பிடுகிறவர்களுக்கு மறதி அதிகமாக ஏற்படும்.
அதே போல அதிகமாக சாப்பிடுகிறவர்களின் சொற்கள் பயனளிக்காது.

இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் தங்களது அனுபவத்தின் வாயிலாக அதிகமா சாப்பிடுகிற பழக்கம் உள்ளவர்களால் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் சொற்பொழிவுகளை நிகழ்த்த முடிந்ததில்லை என்று கூறுகிறார்கள்.
அதிகம சாப்பிடுகிறவர்கள் கோழைகளாகி விடுறார்கள். காமம் அதிகரிக்கவும் அது காரணமாகிறது. அதிகப்படியான உணவு இந்த சமூகத்தை வீர உணர்வையும் ஒழுக்கத்தையும் சிதைத்து என்கிறார்கள் ஆயிஷா அம்மையார்
وعن عائشة رضي الله عنها قالت: "أول بلاء حدث في هذه الأمة بعد نبيها الشبع فإن القوم لما شبعت بطونهم سمنت أبدانهم فضعفت قلوبهم وجمحت شهواتهم" .
மிக ஆழமாக சிந்திக்க வேண்டிய செய்தி இது.
முந்தைய சமூகத்தின் வீரத்திற்கும் துணிச்சலுக்கும். இன்றைய மக்களின் கோழைத்தனத்திற்கும் சுயநலப் போக்கிற்கும் இதுவே பிரதானகாரணம் என்பதை சிந்தித்தால் உணரலாம்.
எப்போதும் வயிறு புடைக்க சாப்பிடுவதன் தீமைகள்
يقول الشافعي : لأن الشبع يثقل البدن ويقسي القلب ويزيل الفطنة ويجلب النوم ويضعف العبادة - تاريخ دمشق لابن عساكر
உலகமே பிரதானமாகி விடும்.
ويقول أبو سليمان الداراني: أصل كل خير الخوف من الدنيا، مفتاح الدنيا الشبع ومفتاح الآخرة الجوع
இன்று ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்கள் வயிறு புடைக்க சாப்பிடுகிற காரணத்தால் தான் இதயம் இருகியவர்களாக இருக்கிறார்கள்.
தில்லியில் விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக உலகின் பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் . நமது பிரதமர் வரணாசியில் இசையை , அலங்கார விளக்குகளை , படகுப் பயணத்தை இரசித்துக் கொண்டிருக்கிறார். தாய்லாந்திலிருந்து வரவழைக்க பட்ட காளானை சாப்பிடுகிறார்.
يوسف عليه السلام பஞ்ச காலத்தில் உணவு கேட்டு வந்த மக்க அனைவருக்கும் உணவு வழங்கினார். ஆனால் அவர் நோன்பு வைதிருந்தார் என்கிறது வரலாறு
பசித்திருப்பதன் நன்மைகள்
ويقول أبو بكر المروزي: سمعت بشر بن الحارث يقول: الجوع يصفي الفؤاد ويميت الهوى ويورث العلم الدقيق- سير أعلام النبلاء
பசியின் அருமையை உணர்ந்து வாழ்கிறவர்கள் தான் சிறந்த மனிதர்களாக திகழ முடியும். அதனால் தான் கொஞ்சம் பசியும் இருக்கட்டும் என்று இஸ்லாம் கூறுகிறது.
ஹஜரத் கோவை Abdul Azeez பாகவி (2018 -ல் எங்களோடு ஹஜ்ஜில் ஜியாரத் பயண வழிகாட்டி)
பதிவிலிருந்து
ர.ரா

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 6

சாம்பாரும், ஆணமும்



வேகவைத்த பருப்பு, புளி, முருங்கைக்காய், தக்காளி, கேரட், பூசணி மற்றும் பச்சை கொத்தமல்லி - இவை அனைத்தையும் சேர்த்து இதில் மசாலா பொருட்களும் சேர்க்கப்பட்டு சாம்பார் தயாரிக்கப்படுகிறது. தென்னிந்திய சாம்பார் இந்தியா முழுவதிலும் பரவியுள்ளது. அது ஏற்கனவே இந்திய எல்லைகளையும் தாண்டிவிட்டது. சாம்பார், இட்லியின் தவிர்க்க முடியாத தோழன். சிலர் சாம்பாருடன் சாதம் சாப்பிடுவதை விரும்புகிறார்கள்.
சாம்பார் எவ்வாறு உருவானது? சாம்பார் என்ற வார்த்தை எங்கிருந்து வந்தது? இது போன்ற பல கேள்விகளை நாம் ஆராய வேண்டும்.

சில நேரங்களில் சில உணவுகள் நம் அன்றாட வாழ்க்கையில் மிகவும் ஒருங்கிணைந்ததாக மாறும். அதன் மூலத்தை நாம் ஆராயத் தொடங்கினால், சில ஆச்சரியமான வரலாறு இருப்பதை அறியலாம். இது நம்மை வியக்கவைக்கும்.

சாம்பார் என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருப்பதைக் காண்கிறோம். இன்று நமக்குத் தெரிந்த சாம்பார் திரவ வடிவில் உள்ளது. ஆனால் அதன் உண்மையான பொருள் 'சுவை கூட்டி'.. இன்று பரிமாறப்படும் சாம்பாருக்கும் பண்டைய காலங்களில் நடைமுறையில் இருந்த பல்வேறு உணவுகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதை நாம் காண்கிறோம்.
முதன்முறையாக சாம்பார் எங்கே சமைக்கப்பட்டது என்று ஒருவர் கேட்டால், தஞ்சாவூரின் மராட்டிய ஆட்சியாளர்களின் சமையலறையில் ஒரு தற்செயலான சம்பவம் பற்றிய ஒரு பொதுவான கதை நமக்குக் கூறப்படுகிறது. இந்த கதையை நாம் முதலில் ஆராய வேண்டும்.
சத்ரபதி சிவாஜி மகாராஜின் ஒன்றுவிட்ட சகோதரர் வியன்கோஜி, தஞ்சாவூர் ராஜ்ஜியத்தை ஆண்டார். அவர் 1683இல் காலமானார். வியன்கோஜியின் மகன் ஷாஹுஜி ,1684இல் தனது 12 வது வயதில் அரியணை ஏறினார்.

தஞ்சாவூரின் மற்ற ஆட்சியாளர்களைப் போலவே அவர் கவிதை மற்றும் கலைகளில் ஆர்வம் காட்டினார். அவர் சமையற்கலையில் தேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது.
சாம்பாருடன் தொடர்புடைய புகழ்பெற்ற கதையின்படி, சத்ரபதி சம்பாஜி மகாராஜ் ஒரு முறை தஞ்சாவூர் சென்றார். ஆனால், ஷாஹுஜி மகாராஜின் சமையலறையில் கோக்கும் (புளிப்பு சுவை சேர்க்கப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள்) இல்லை. அதற்கு பதிலாக புளியைப் பயன்படுத்துமாறு யாரோ ஒருவர் பரிந்துரைத்தார். எனவே புளி சேர்த்து ஷாஹுஜி கறியை தயாரித்தார்.

சம்பாஜி மகாராஜை கௌரவிக்கும் விதத்தில், இந்த உணவை சம்பாஜி + ஆஹார் (சம்பாஜியின் உணவு) என்று அழைத்தனர். இது சாம்பாராக மாறியது. செய்முறையில் பல மாற்றங்களைக் கொண்ட அதே உணவு தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பின்னர் இந்தியா முழுவதிலும் பரவியது. இது சாம்பாருடன் தொடர்புடைய பொதுவான கதை.
பிரபல உணவு வரலாற்றாசிரியரும் உணவு நிபுணருமான
கே. டி. ஆச்சார்யா இந்த கதையை உறுதிப்படுத்தியுள்ளார். எனவே, சாம்பார், தஞ்சாவூரில் தோன்றியதாக பொதுவாக கருதப்படுகிறது.

ஆனால், இந்த சம்பவத்தில் அதிக உண்மை இல்லை என்று புனேவைச் சேர்ந்த உணவு கலாச்சார ஆராய்ச்சியாளர் முனைவர் சின்மய் டாம்லே கூறுகிறார்.
"1684இல் ஷாஹுஜி ஆட்சிக்கு வந்தபோது அவருக்கு 12 வயது. சத்ரபதி சாம்பாஜி மகாராஜின் ஆட்சிக்காலம் 1680 - 1689 வரை இருந்தது. இந்த சம்பவம் 1684 மற்றும் 1689 க்கு இடையில் நடந்திருக்க வாய்ப்பில்லை," என அவர் பிபிசியிடம் தெரிவித்தார்.
மேலும், சம்பாஜி மகாராஜின் தஞ்சாவூர் சுற்றுப்பயணத்தின் இந்த கதையை உறுதிசெய்ய எந்த ஆதாரமும் இல்லை. 17ஆம் நூற்றாண்டிலிருந்து மராட்டிய உணவு வகைகள் குறித்து ஆவணப்படுத்தப்பட்ட குறிப்புகள் மிகக் குறைவு. எனவே, இந்தக்கதைக்கு அதிக அடிப்படை இருப்பதாகத் தெரியவில்லை என்று அவர் கூறுகிறார்.
ஆனால், சம்பாஜி மகாராஜ் தஞ்சாவூருக்குச் சென்றபோது, பருப்பு, காய்கறிகள் மற்றும் புளி அடங்கிய சிறப்பு கறி அவருக்கு வழங்கப்பட்டதாகவும், அந்த உணவுக்கு அவருடைய பெயரால் சாம்பார் என்று பெயரிடப்பட்டதாகவும், இந்த வம்சத்தில் வந்தவரான சிவாஜி மகாராஜ் போன்ஸ்லே பிபிசியிடம் தெரிவித்தார்.

சாம்பார் என்ற சொல்லின் பொருள் என்னவாக இருக்கும்?
நாம் உண்ணும் சாம்பார் என்ற வார்த்தை எங்கிருந்து வந்தது என்பது குறித்து ஆராய்ந்தோம். முந்தைய நாட்களில் பல உணவுப் பொருட்கள் 'சுவை கூட்டிகள்' என்ற வகையில் பரிமாறப்பட்டன. அவை சாம்பார் என்று அழைக்கப்பட்டன. வெள்ளரி, தக்காளி உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கக்கூடிய 'சாலட்' போல 'சாம்பார்' என்பது ஒரு பொதுச்சொல்.
சில அறிஞர்கள் சாம்பார் என்பதன் சொற்பிறப்பியல், 'சம்பார்' (Sambhar) என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு அருகாமையில் இருப்பதாகக் கூறுகின்றனர். சமஸ்கிருத அறிஞரும், மகாராஷ்டிரா என்சைக்ளோபீடியா கவுன்சில் உறுப்பினருமான ஹேமந்த் ராஜோபாத்யே இது குறித்து விளக்குகிறார்.
"சமஸ்கிருதத்தில் உள்ள, எஸ்.எம் (Sm) மற்றும் ப்ரு (Bhru) என்ற அடிப்படை சொற்கள், பலவற்றின் கலப்பு அல்லது பலவற்றை கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் ஒரு பொருளைக் குறிக்கின்றன. ஆனால், இதற்கு சாம்பார் என்ற வார்த்தையுடன் தொடர்பு உள்ளது என கூறமுடியாது," என்கிறார் அவர்.

சாம்பார் என்றால் சுவை அதிகரிக்கும் உணவுப் பொருட்கள் என்று டாக்டர் சின்மய் டாம்லே கூறுகிறார். "சாம்பார் என்ற சொல் சுவை அதிகரிக்கும் பொருட்களுக்கு பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். மசாலா மற்றும் சாம்பார் போன்றவையும் இதே போன்ற அர்த்தத்தைக் கொண்டுள்ளன," என்று அவர் கூறினார்.

"லீலாசரித்ராவில் மசாலாப் பொருட்களுக்கு சம்பாரு என்ற வார்த்தையைக் காணலாம். குஜராத்தி (சாம்பார்), பெங்காலி (சாம்பாரா), தெலுங்கு (சாம்பராமு), தமிழ் (சாம்பார்), கன்னடம் (சாம்பார்) போன்றவை, சமஸ்கிருத சம்பாருக்கு ஒத்ததாக உள்ளன. மலையாளத்தில் மசாலாப் பொருட்களுடன் கூடிய மோர் 'சம்பாரம்' என்று அழைக்கப்படுகிறது,"என்றும் டாக்டர் சின்மய் டாம்லே விளக்கம் அளித்தார். சாம்பார் மற்றும் சாம்பாரு என்ற சொற்கள் மகாராஷ்டிராவில் பண்டை நாட்களிலிருந்து பயன்பாட்டில் இருப்பதாகத் தெரிகிறது. "சக்ரதார் சுவாமியின் லீலாசரித்ராவின் முதல் பாதியில், வசனம் எண் 260 , சம்பாரு என்ற வார்த்தையை, சுவை கூட்டி என்ற பொருளில் குறிப்பிடுகிறது," என்று டாக்டர் சின்மய் டாம்லே கூறுகிறார்.
வசனம் எண் 358, சாம்பாரிவ் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. இந்த வசனத்தின் தலைப்பு 'ததா சனா அரோகன்'.

பைதேவ் ஒரு கிராமத்திற்கு வருகை தருகிறார், அவர் சில பருப்பு சேமிப்பு கிடங்குகளை பார்க்கிறார். அவர் சக்ரதார் சுவாமிக்கு மிகச் சிறந்த தரமான பருப்புகளை சேகரித்த பின், மீதியை சாப்பிடுகிறார். அவர் ஒரு கையளவு பருப்பை முனிவருக்கு எடுத்துச்செல்கிறார். நான் உங்களுக்காக பருப்பு கொண்டு வந்துள்ளேன். அவை இனிப்பாக உள்ளன என்று முனிவரிடம் கூறுகிறார்.
உடனே முனிவரும் ஒரு பெண்மணியை அழைத்து, பருப்பை எடுத்துச்சென்று சமைக்குமாறு கூறுகிறார். அந்தப் பெண்மணி தன்கனே மற்றும் சாம்பரிவ் என்ற உணவுகளைத் தயாரிக்கிறார். சாம்பரிவ் என்றால் சுவை கூட்டி.

சாம்பாரு (ஒரு கறியில் சேர்க்க வேண்டிய மசாலா) ,சாம்பரிவ் (சுவை கூட்டி) ஆகிய இரண்டு சொற்களும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் மகாராஷ்டிராவில் பயன்பாட்டில் இருந்தன என்பதை லீலாசரித்ராவில் உள்ள குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.
மேலும், ஏக்நாத் மகாராஜின் பேரன் முக்தேஸ்வரா தனது ராஜ்சூயா தியாகத்தைப் பற்றிய விவரிப்பில், சாம்பர் எனப்படும் ஒரு உணவைக் குறிப்பிட்டுள்ளார் என முனைவர் சின்மய் டாம்லே கூறுகிறார்.
பேஷ்வா ஆவணங்களிலும் சாம்பார் எனப்படும் உணவுப் பொருள் காணப்படுகிறது. சவாய் மாதவ்ராவ் பேஷ்வா, 1782 இல் புனேயில் திருமணம் செய்து கொண்டார். நானா பட்னவிஸ் திருமணத்திற்கு பெரிய விருந்து தயாரித்திருந்தார். அவர் நுணுக்கமான அறிவுறுத்தல்களைக் கொடுத்ததாகத் தெரிகிறது. இரண்டு வகையான சாதங்கள் - இனிப்பு சாதம் மற்றும் கத்திரிக்காய் சாதம், இரண்டு வகையான கறிகள் - துவரம் பருப்பு கறி மற்றும் சம்பாரி, இரண்டு வகையான சூப்கள், சாம்பார், பாயசம் போன்றவற்றை பரிமாறுவது குறித்து அவர் அறிவுறுத்தியிருந்தார். தரையில் அல்லது தேவையற்ற இடங்களில் சிந்தாமல் உணவை எப்படி பறிமாறவேண்டும் என்றும் அவர் விளக்கியிருந்தார்.
எனவே, மகாராஷ்டிராவில் ஒரு சுவை கூட்டும் உணவுப்பொருள் 'சாம்பார்' பயன்பாட்டில் இருந்தது என்று டாம்லே கூறுகிறார். சித்ததேக் கோவிலில் ஒரு சடங்கில், பிராமணர்களுக்கு வழங்க வேண்டிய பொருட்கள் குறித்தும் ஒரு கடிதத்தில் நானா பட்னவிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

மராட்டியர்களுக்கு முன்பு, நாயக்கர்கள் வம்சம் தஞ்சாவூரை ஆண்டது. மன்னர் ரகுநாத் நாயக்கின் வாழ்க்கையில் ஒரு நாளை விவரிக்கும் 'ரகுநாத ப்யுதயம்' என்ற கவிதை உள்ளது. ராஜாவின் உணவில் பரிமாறப்பட்ட உணவுப் பொருட்களின் நீண்ட பட்டியலை இந்த கவிதை குறிப்பிடுகிறது.
சாம்பாரொட்டி மற்றும் சாம்பார் சாதம் போன்ற சில உணவுகள் உள்ளன (சேர்க்கப்பட்ட மசாலாப் பொருட்களுடன்). ஆனால், இன்று சாப்பிடப்படும் சாம்பாருக்கு ஒத்ததாக எந்த உணவுப் பொருளும் இருந்ததாகத் தெரியவில்லை.

"தஞ்சாவூரின் ஷாஹாஜி மகாராஜ் சாம்பாரை கண்டுபிடித்தார் என்று கூறப்பட்டாலும், அவர் எழுதிய எந்த புத்தகத்திலும் இந்த உணவு வகை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஒரு புத்தகத்தில் ' 'பொரிச்சகுழம்பு' என்ற ஒரு உணவு பற்றிக்கூறப்படுகிறது. இதில் துவரம் பருப்பு, காய்கறிகள், புளி, கறிவேப்பிலை, பெருங்காயம் மற்றும் மிளகாய்பொடி ஆகியவை அதில் சேர்க்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது.
எனவே, சாம்பார் மற்றும் ஷாஹாஜி என்ற வார்த்தைகளுக்கு எந்த தொடர்பும் இல்லை. மேலும் தஞ்சாவூரிலிருந்து வெளியிடப்பட்ட ஷர்பேந்திர பக்ஷாஸ்திரத்தில், துவரம் பருப்பு சாம்பார் குறிப்பிடப்படவில்லை,"என்று டாம்லே கூறுகிறார்.

எனவே, பல்வேறு வரலாற்று குறிப்புகள் மற்றும் கிடைக்கக்கூடிய இலக்கியங்களைத் தேடிய பிறகு, இன்று நடைமுறையில் இருக்கும் சாம்பாருக்கும், அதன் தோற்றத்தின் கதைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றே தோன்றுகிறது.

"20 ஆம் நூற்றாண்டில் மெட்ராஸில், சிறிய உணவகங்கள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டன. அங்கு குழம்பு என்ற உணவுப் பொருள் வழங்கப்பட்டது. அது சாம்பார் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இட்லி, வடை, தோசை ஆகியவற்றுடன் பரிமாறப்படும் ஒரு சுவை அதிகரிக்கும் கறி, 'சாம்பார்' என்று அழைக்கப்படுகிறது. " என கூறுகிறார் முனைவர் சின்மய் டாம்லே.

"நாளடைவில், பொரிச்ச குழம்பு மற்றும் குழம்பு ஆகியவை வழக்கத்திலிருந்து மறைந்தன. பிறகு சாம்பார் அவற்றின் இடத்தைப் பிடித்தது. சுவாரசியமான விஷயம் என்னவென்றால், தென்னிந்தியாவில் முன்பு சாம்பார் என்ற சொல் , சுவை அதிகரிக்கும் உணவு என்ற பொருள்படவே பயன்படுத்தப்பட்டது. "என்கிறார் அவர்.

மசாலா தோசையில் உள்ள உருளைக்கிழங்கு கறி, மசாலா என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின்போது, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கின் பற்றாக்குறை இருந்தது. எனவே கர்நாடகாவில் உள்ள உணவகங்கள் தோசைக்குள் திடவடிவில் காய்கறிகளை வைத்து உருட்டி, பரிமாறத் தொடங்கின. அது மசாலா என்று அழைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உணவகங்கள் பூரிமசாலா என்ற உணவை பறிமாறுகின்றன. இதில் உருளைக்கிழங்கு கறி மற்றும் பூரி கொடுக்கப்படுகிறது. உருளைக்கிழங்கு கறி, ஒரு சுவை கூட்டி என்பதால் இது மசாலா என்று அழைக்கப்படுகிறது. எனவே, ஒரு தோசையில் உருளைக்கிழங்கு கறி மற்றும் சாம்பார் ஆகிய இரண்டின் பொருளும் ஒத்திருக்கிறது.

எது எப்படியிருந்தாலும், சாம்பார் நம் வாழ்வில் ஒரு தனித்துவமான இடத்தை பிடித்துள்ளது. பல வெளிநாடுகளில் நிறுவப்பட்ட தென்னிந்திய உணவகங்களும் உலகெங்கிலும் சாம்பாரை பிரபலப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன.
சாம்பாரை விட்டு சாதம், இட்லி, தோசை போன்றவற்றுடன் சேர்த்து சாப்பிடலாம். காய்கறிகளைப் போட்டு சமைக்கும் போது சாம்பார் சைவமாகிவிடுகிறது. இறைச்சியோ, மீனோ போட்டு சமைத்தால் அதை சால்னா (ஆணம்) என்றாகி அசைவமாக மாதிரி விடுகிறது.
ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
நபி (ஸல்) அவர்கள் தங்களது மனைவியிடம் ஆணத்தைக் கொண்டு வரக் கூறினார்கள்.
குடும்பத்தினர் ”எங்களிடம் காடி (வினிகர்) மட்டும்தான் இருக்கிறது” என்றனர். நபி (ஸல்) அவர்கள் அதைக் கொண்டு வரச் சொல்லி ”காடி மிகச் சிறந்த ஆணம் காடி மிகச் சிறந்த ஆணம்” என்று கூறிக்கொண்டே சாப்பிட்டார்கள். (ஆணம் – குழம்பு) ஸஹீஹ் முஸ்லிம் : 4169.

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது கையைப் பிடித்துத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.
அப்போது நபி (ஸல்) அவர்களிடம், (அங்குள்ள ஒருவர்) ரொட்டித் துண்டைக் கொடுத்தார்.
நபி (ஸல்) அவர்கள், "குழம்பேதும் இல்லையா?" என்று கேட்டார்கள்.
வீட்டார், "இல்லை, சிறிது காடியைத் தவிர வேறெதுவுமில்லை" என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள், "காடிதான் குழம்புகளில் அருமையானது" என்று கூறினார்கள்.
ஜாபிர் (ரலி) அவர்கள், "இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியதைக் கேட்டதிலிருந்து நான் காடியை விரும்பி(ச் சாப்பிட்டு)க்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 4170.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 7
உடலுக்கு வலுவூட்டும் களி வகைகள்...



நபி (ஸல்) அவர்கள் சிரித்தவர்களாக தமது கரத்தால் கொஞ்சம் ஹரீராவை (களியை) எடுத்து ஸவ்தாவிடம் நீட்டி "ஆயிஷாவின் முகத்தில் நீ இதைப் பூசிவிடு" என்றார்கள்.

....

நம் பழந்தமிழரின் உணவில் மிக முக்கியமானது, களி. பல்வேறு வகையான களிகளை நம் மக்கள் உண்டு வந்தனர். நீண்ட நேர பசியை தாங்குவதற்கும், உடலை உரமாக்கவும் சிறந்த உணவு.
குழந்தைகளுக்கு பற்கள் இல்லாததால் அவர்களால் சாப்பிட கூடிய வகையில் உணவுகளை செய்து தர வேண்டும். சத்தும் சுவையும் உள்ள அதே சமயம் குழந்தைகளால் சாப்பிட கூடிய ஓர் உணவு இருக்கிறது. பாரம்பர்யமாக பின்பற்றி வரும் ஒரு உணவு வகைதான், களி. இந்த உணவுகளில் சத்துகள் ஏராளம். குழந்தைக்கு கொடுக்க வேண்டிய உணவும்கூட. இதை எப்படி செய்வது எனப் பார்க்கலாம்.
மூன்று முக்கியமான களி வகைகளை பற்றி இங்கே பார்ப்போம்...

ராகி களி, கேப்பை களி, கேழ்வரகு களி என வெவ்வேறு பெயரில் அழைக்கப்படுகிறது.

1) கேழ்வரகு களி

செய்முறை:
முதலில் கேழ்வரகு மாவை தயார் செய்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் நீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைத்து கேழ்வரகு மாவை போட்டு கிளற வேண்டும். பின்னர், உருண்டை வடிவில் உருட்டி எடுத்து சாப்பிடலாம்.
கேழ்வரகு களிக்கு பொருத்தமான, 'சைடு டிஷ்' கீரை மசியல், மொச்சை கொட்டை கார குழம்பு மற்றும் வெல்லம், கருப்பட்டி போன்றவற்றை சேர்த்து சாப்பிடலாம்.

பலன்கள்: கால்ஷியம் மிக அதிகம் என்பதால், வளரும் குழந்தைகள், விளையாட்டு வீரர்கள், பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு ஏற்ற உணவு இது. வைட்டமின், தாது உப்புகள் நிறைந்தது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். குடல் புண்களை ஆற்றும்.பசியை குறைக்கும் ஆற்றல் கொண்டது, கேழ்வரகு. உடல் வெப்பத்தை தணிக்கும். கோடையில், அனைவருமே காலை அல்லது மதிய உணவாக கொள்ளலாம்.

2) உளுத்தங்களி

தேவையான பொருட்கள்: உளுத்தம் பருப்பு மாவு - ஆறு கைப்பிடி, கருப்பட்டி அல்லது வெல்லம் - தேவையான அளவு, தேங்காய் துருவல், நல்லெண்ணெய் நான்கு தேக்கரண்டி, அரிசி மாவு, ஏலக்காய் தூள் மற்றும் வறுத்த பாசி பருப்பு மாவு - சிறிதளவு.
செய்முறை: ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, அரிசி மாவு, வறுத்த பாசி பருப்பு மாவு ஆகியவற்றை சேர்த்து கலக்கவும். பின்னர் கொதிக்க வைத்து, அதனுடன் கருப்பட்டி அல்லது வெல்லம் சேர்த்து எண்ணெய் ஊற்றி நன்கு கிளறவும். பின்னர், உளுத்த மாவை போட்டு நன்கு கிளறவும். வெந்தவுடன், ஏலக்காய், தேங்காய் துருவல் சேர்த்து கிளறி பரிமாறவும்.

பலன்கள்: உளுத்தங்களியில், கார்ப்போஹைட்ரேட், பொட்டாசியம், கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின் மற்றும் தாது உப்புகள் அடங்கியுள்ளன. இடுப்பு எலும்பு வலுவாகும்.

பூப்பெய்திய பெண்கள், கர்ப்பிணிகள், விளையாட்டு வீரர்கள் போன்றோருக்கு மிகவும் ஏற்றது. உடல் எடையை கூட்ட விரும்புவோர், வாரம் இருமுறை இதை செய்து சாப்பிட்டால் பலனளிக்கும்.

3) வெந்தயக்களி

தேவையான பொருட்கள்: புழுங்கல் அரிசி - 300 கிராம், உளுத்தம் பருப்பு - 50 கிராம், நாட்டு சர்க்கரை - 300 கிராம், நல்லெண்ணெய், வெந்தயம் - ஒரு மேஜை கரண்டி.
செய்முறை: புழுங்கல் அரிசியை இரவே ஊற வைத்து, மாவாக அரைத்துக் கொள்ளவும். உளுத்தம் பருப்புடன் வெந்தயம் சேர்த்து, தனியாக அரைத்துக் கொள்ளவும்.
பின்னர் புழுங்கல் அரிசி மாவுடன், உளுத்தம் மாவை கலக்கவும். தோசை மாவு பதத்திற்கு நன்றாக கலந்த பின், ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி, கரண்டியால் கிளறிக்கொண்டே இருக்க வேண்டும்.களி போல நன்றாக திரண்டு வரும்போது, நாட்டுச் சர்க்கரையை சேர்த்து கலக்க வேண்டும். கட்டி தட்டாத வரை நன்கு கிளறிய பின், உருண்டைகளாக உருட்டி சாப்பிடலாம்.

பலன்கள்: கிராமத்தில் வயதானவர்களுக்கு தரப்படும் முக்கிய உணவு, வெந்தயக்களி. இதில், அத்தனை சத்துகளும் அடங்கியுள்ளன. உடலை வலுவூட்டும், உடல் குளுமை அடையும், செரிமானம் சீராகும், வயிற்றுப்புண், வாய் புண் இருந்தால் குணமாகும். ஆகவே, களி சாப்பிட்டால், உடல் நலம் பெருகும்.
அரபிய உணவு வகைகளில் ஹரீர் என்பது பழந்தமிழரின் உணவான களி உணவைப் போன்றது .
அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் சாப்பிடுவதற்காக 'ஹரீர்' என்ற உணவைச் சமைத்து எடுத்துக் கொண்டு வந்தேன்.
நபி (ஸல்) அவர்கள் எனக்கும் ஸவ்தா (ரழி) அவர்களுக்கும் மத்தியில் அமர்ந்திருந்தார்கள். நான் ஸவ்தாவிடம் "சாப்பிடுங்கள்!" என்று கூறினேன்.
ஸவ்தாவோ (ரழி) மறுத்து விட்டார். "கண்டிப்பாக அதைச் சாப்பிட்டே ஆக வேண்டும். இல்லையெனில், அதை உங்கள் முகத்தில் பூசிவிடுவேன்" என்றேன்.
ஆனாலும் அவர் மறுத்து விட்டார். நான் ஹரீராவை எடுத்து நன்றாக அவரது முகத்தில் பூசிவிட்டேன்.
நபி (ஸல்) அவர்கள் சிரித்தவர்களாக தமது கரத்தால் கொஞ்சம் ஹரீராவை எடுத்து ஸவ்தாவிடம் நீட்டி "ஆயிஷாவின் முகத்தில் நீ இதைப் பூசிவிடு" என்றார்கள். (அல்ஹைஸமி)
ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 8



தினமும் காலையில் பழைய சோறு...இது உணவல்ல; மருந்து!

சோறு மிஞ்சிவிட்டால் இரவு தண்ணீர் ஊற்றி வைத்து, மறுநாள் உண்டால் அது பழையசோறு. பழையசோறு என்பது ஒருகாலத்தில் வறுமையின் அடையாளமாக இருந்தது. பள்ளி, கல்லூரிக்கோ, அலுவலகத்துக்கோ யாரும் பழைய சோறு கொண்டு வந்ததில்லை. வறிய குடும்பங்களில் 'ஐஸ் பிரியாணி' என்று அதை ஜாலியாக அழைப்பதும் உண்டு.

இப்போதுள்ள தலைமுறை பழைய சோற்றையே பார்க்காமல் இருந்திருக்கலாம். ஆனால், இன்னொருபக்கம் ஃபைவ் ஸ்டார் மெனுவில் பழைய சோறு சேர்ந்திருக்கிறது.
எதற்கு இந்தப் 'பழங்கதை' என்கிறீர்களா? 'பழையது' என்று நாம் சொல்கிற பழைய சோறு, குடல் தொடர்பான நோய்களுக்கு மருந்தாகவே இருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள் நம் மருத்துவர்கள்.

சோறு மிஞ்சிவிட்டால் இரவு தண்ணீர் ஊற்றி வைத்து, மறுநாள் உண்டால் அது பழையசோறு. நார்த்தங்காய் ஊறுகாய், சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் காம்பினேஷனில் கொஞ்சமாக மோர் ஊற்றிக் கரைக்கப்பட்ட பழையதை சாப்பிட்டால், நாக்கு 'வேணும்' 'வேணும்' என்று கேட்கும்.
அது கொடுத்த எனர்ஜியில்தான் கொடும் வெயிலையும் தாங்கி நம் மூதாதைகள் காடு மேடுகளில் உழைத்தார்கள். முக்கியமாக காலையில் எழுந்து நீராகாரம் குடித்தால் மலச்சிக்கலுக்கு வாய்ப்பேயில்லை. ஆனால், அவசர வாழ்க்கை அந்த அரிய உணவை அழித்துவிட்டது. கிராமங்களில்கூட குக்கர் வைத்து சமைப்பதால் சாதம் மிஞ்சினாலும் அதைப் பழையதாக்கி சாப்பிடமுடியாது. வீதிக்கு வீதி வறுத்துத் தருகிற ப்ரைடு ரைஸும் இன்ஸ்டண்ட் உணவுகளும் நம்மை ஆக்கிரமித்துவிட்டன.
காலச்சக்கரம் மீண்டும் நம் மரபுகளை நோக்கிச் சுழன்று வருகிறது. இப்போது பழையதன் மகத்துவம் உலகத்துக்குப் புரிந்திருக்கிறது.

2017-ம் ஆண்டில் அமெரிக்கன் நியூட்ரிஷன் அசோசியேஷன் **(American Nutirition Association)** பழைய சோற்றின் பலன்களைப் பட்டியலிட்டிருந்தது. அதன்பிறகு உலகம் பழையதைத் தேடத் தொடங்கியது. அந்த ஆண்டு அமெரிக்கர்களால் அதிகம் தேடப்பட்ட உணவு செய்முறையில், பழைய சோறும் முக்கிய இடம் பெற்றது. அமெரிக்காவில் இருக்கும் பல ஓட்டல்களின் மெனு கார்டில் பழைய சோறு ஓர் உணவாக இடம்பெற்றது. இப்போது இன்னும் ஒருபடி மேலே போய், நோய் தீர்க்கும் ஆற்றலும் பழையதுக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

IBD (Irritable bowel disease) என்ற குடல் தொடர்பான நோய்களுக்குப் பழைய சோறு மருந்தாகச் செயல்படுவது குறித்து புதிய ஆராய்ச்சியை இப்போது தொடங்கியிருக்கிறது
தமிழக சுகாதாரத்துறை. இந்த ஆராய்ச்சிக்காக ரூ.2.7 கோடி நிதியும் மூன்றாண்டுக் கால அவகாசமும் தரப்பட்டுள்ளது. IBD நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கும் 600 நோயாளிகளை இந்த ஆய்விற்குப் பயன்படுத்தவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.
பத்தாண்டுகளுக்கு முன்புவரை குடல் தொடர்பான Chron's diesease , Ulcerative Colitis போன்ற IBD நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.
ஆனால், இன்று சென்னையில் மட்டும் இந்த நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஸ்டீராய்டு மருந்துகள் முதல் அறுவை சிகிச்சை வரை தேவைக்கேற்ப வழங்க வேண்டியிருக்கும். இந்தியாவில் ஒரு லட்சத்தில் 45 பேர் இந்த நோய்களால் அவதிப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

பழைய சோற்றில் லட்சக்கணக்கான பாக்டீரியாக்கள் நிரம்பியுள்ளதால், இதை உட்கொள்வதன் மூலம் செரிமான மண்டலத்தில் உள்ள பிரச்னைகள் நீங்கி ஆரோக்கியம் மேம்படும் என்கிறார்கள் மருத்துவர்கள். 'பழையது' மற்ற எல்லாவற்றையும்விட இந்த நோய்க்கு எதிராக சிறப்பாக வேலை செய்வதை அறிந்து மருத்துவர்கள், நோயாளிகளுக்கு அதைப் பரிந்துரைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அறிவியல் ரீதியாக இதை நிரூபிக்கவே, தற்போது ஆராய்ச்சிக்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை சென்னை ஸ்டான்லி மருத்துவமனை செய்துவருகிறது. அந்த மருத்துவமனையின் குடல் அறுவை சிகிச்சை நிபுணர் ஜஸ்வந்த்
"குடல் சிறப்பாகச் செயல்படவும் நாம் உண்பதைச் செரிமானம் செய்யவும் பாக்டீரியாக்கள் முக்கியம். போதுமான அளவு பாக்டீரியாக்கள் இல்லாதபோது வயிற்று வலி, கேஸ் ட்ரபிள் உள்ளிட்ட பிரச்னைகள் வரக்கூடும். அதன் அடுத்தகட்டமாக குடல் புண்ணாகிவிடும். கிராமத்துவாசிகளுக்கு பொதுவாக இந்தப் பிரச்னைகள் இருப்பதில்லை. அது ஏன் என ஆய்வு செய்யும்போதுதான் 'பழைய சோறு' என்ற உணவின் அருமை தெரியவந்தது.
இதைச் சாப்பிட்டால் நல்லது என்பது தெளிவாகத் தெரிந்தாலும், பழைய சோற்றில் என்னனென்ன பாக்டீரியாக்கள் இருக்கின்றன என்பதை அறிவியல்பூர்வமாக நிரூபித்தால்தான் மருத்துவ உலகில் அதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்காகத்தான் இந்த ஆய்வை இப்போது மேற்கொள்கிறோம்.
'உணவே மருந்து' என்பதைத்தான் இந்தப் பழைய சோறு நமக்குச் சொல்லியிருக்கிறது. நோய் வந்த பின் மருந்தைத் தேடுவதைவிட, நோய் வருவதைக் குறைப்பதே நல்ல ஆரோக்கியம். அந்த வகையில் பழைய சோறு பல நோய்கள் நம்மை அண்டாமல் தவிர்க்க உதவுகிறது.
பழைய சோறு வெளியில் இருந்து பாக்டீரியாவை எடுக்கிறது. எனவே பழைய சோற்றை எந்தச் சூழலில் தயாரித்துப் பயன்படுத்த வேண்டும் என்பதையும், அதனால் சூழல், ஊட்டச்சத்து அளவில் மாறுதலை உருவாக்குமா என்பதையும் இந்த ஆய்வில் கண்டறியப்போகிறோம்" என்றார்.
மேலை நாடுகளில் பழைய சோற்றுடன் எலுமிச்சைச் சாறு, உப்பு சேர்த்து டின்களில் அடைத்து விற்கத் தொடங்கிவிட்டார்கள். நம் ஊரிலும் பல நட்சத்திர விடுதிகளில் காலை உணவாகப் பழைய சோற்றை. மண்பாண்டத்தில் வைத்து வற்றல், வெங்காயத்துடன் தருகிறார்கள்.

‘உணவே மருந்து’ என்பதுதான் நம் பாரம்பர்யம். அது வெறும் வார்த்தைகள் அல்ல, அறிவியல் உண்மை என்பதை நிரூபித்திருக்கிறது காலம்!
இந்தியன் டயபடிக் அசோசியேஷன் தலைவரும் ஊட்டச்சத்து நிபுணருமான டாக்டர் தாரிணி கிருஷ்ணன் பேசினார்.
“பழைய சோறென்பது நம் பாரம்பர்ய உணவு. அந்தக் காலத்தில் சிறுதானிய உணவுகளை உட்கொள்ளும் பழக்கம் அதிகமாக இருந்தது, அதைத்தான் மறுநாள் காலை பழையதாக மக்கள் உட்கொண்டு வந்தனர். ராகி, கம்பு போன்று தானியங்களில் நார்ச்சத்து அதிகம். அதை ஓர் இரவு ஊறவைக்கும்போது அந்த உணவு நொதித்து (fermentation) அதில் B12, B6 போன்ற பல வைட்டமின்கள், பொட்டாசியம், இரும்புச்சத்து ஆகியவை அதிகரித்து உடலுக்குப் பலம் சேர்க்கும். முக்கியமாக ‘probiotics’ எனப்படும் நல்ல பாக்டீரியாக்கள் அதிகரிக்கும்.

நம் உடலில் இருக்கும் செல்களின் எண்ணிக்கையை விட நல்ல பாக்டீரியாக்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதே உடல்நலத்திற்குச் சிறந்தது. அந்த நல்ல பாக்டீரியாக்களை அதிகமாக்கும் வேலையை ‘பழையது’ செய்கிறது.
இப்போது நாம் வெள்ளை அரிசியை அதிகம் உபயோகப்படுத்துகிறோம். அதிலும் மேற்சொன்ன நன்மைகளும் உண்டு; நார்ச்சத்தைத் தவிர. முடிந்த அளவு கைக்குத்தல் அரிசி, சிவப்பு அரிசி போன்றவற்றைப் பயன்படுத்த முடிந்தால் அதன் பலன்கள் கூடும்.
தமிழகத்தில் வெப்பநிலையைப் பொறுத்தவரை வருடத்தில் ஒரு மாதம் மட்டுமே குளிர் அதிகமாக இருக்கும். அந்தச் சமயங்களில் மட்டும் பழைய சோறு நொதிக்காது. மற்றபடி இதனால் சளி பிடிக்கும் என்பதெல்லாம் உண்மையில்லை, மூச்சிரைப்பு, ஆஸ்துமா பாதிப்பு உள்ளவர்கள் மட்டும் குளிர்காலங்களில் இந்த உணவைத் தவிர்ப்பது நல்லது” என்கிறார் தாரிணி.
பாரம்பர்ய உணவுகள் குறித்துத் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் 'நல்ல சோறு' ராஜமுருகன் ‘‘நெல்லின் மேல் தோலையும் அதற்கடுத்துள்ள ஒரு
பாலிலேயரையும் நீக்கிவிட்டுத்தான் அரிசியை சமைக்க வேண்டும். இதை நீக்கத்தான் கைக்குத்தல் முறை பயன்படுகிறது. இந்தப் பாலிலேயரை நீக்காமல் சமைப்பது நமது உணவுப் பாரம்பர்யம் இல்லை. மேலும், சமைப்பதையும் நொதிக்க விடுதலையும் மண்பாண்டத்தில்தான் செய்ய வேண்டும். கைக்குத்தலில் தயாரிக்காத அரிசியை, குக்கரில் சமைத்தால் எந்த அளவிற்குப் பலன் இருக்குமெனத் தெரியவில்லை. என்றாலும், தமிழக மருத்துவர்கள் முன்னெடுத்திருக்கும் இந்த ஆராய்ச்சி மிகுந்த நம்பிக்கையை உருவாக்குகிறது” என்றார் அவர்.

பழைய சோற்றில் என்ன இருக்கிறது?
“அரிசியில் சமைக்கப்படும் புதிய சோற்றைவிட பழைய சோற்றில் அதிக ஊட்டச்சத்துகள் உள்ளன. 100 கிராம் அரிசியில் 3.4 மில்லி கிராம் இரும்புச் சத்து இருக்கும். அதையே 12 மணி நேரம் நொதிக்க வைத்து பழையதாக்கினால் 73 மில்லி கிராம் அதிகமாகும்.
அல்சர் உள்ளிட்ட குடல் சார்ந்த பல நோய்களுக்கு மருந்தாகவும் மாறும். சரும மற்றும் முடி தொடர்பான பிரச்னைகளுக்கும் தீர்வு தரும்’’ என்கிறார்கள் மருத்துவர்கள். ‘‘காலையில் பழைய சோறு சாப்பிட்டால் உடலுக்குச் சக்தி கிடைக்கும். மலச்சிக்கல் போன்ற பிரச்னைகளும் தீரும்” என்கிறது அமெரிக்கன் நியூட்ரிஷன் அசோசியேஷன்.
பழைய சோறு... இப்போ புது மருந்து!
பாலகுமாரனின் ரமணமகரிஷியில் மிகவும் பிடித்த சித்தரின் எழுத்துக்கள்....
மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி கோவில் பக்கம் வந்தான் வேங்கடராமன்.
அங்குள்ள ஆயிரம்கால் மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டான் .பசித்தது .ஆனால் யாரிடமும் சோறு கேட்க ஆசைப்படவில்லை .
மௌனமாக கண் மூடி தனக்குள் தன்னைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.பசியை உணர முடிந்தது .ஆனால் அது தொந்தரவு செய்யவில்லை. இரவு முழுவதும் சாப்பிடாமல் அங்கேயே உட்கார்ந்து இருந்தான். கோவிலின் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்து பராமரிக்கிர மௌன சாமி என்கிற அன்பர் ,அந்தச் சிறுவன் அசையாது உட்கார்ந்து இருப்பதை பார்த்தார்.
பசியில் முகம் வாடி இருப்பது அந்த சாதுவுக்கு தெரிந்தது .பழனிசுவாமி என்கிற இன்னொரு சாதுவை நோக்கி அந்தப் பிள்ளை வெகு நேரம் அசையாமல் உட்கார்ந்து இருக்கிறான்.பசியால் வாடி இருக்கிறான.
"அவனுக்கு உணவு கொடு" என்று மௌன பாஷையில் உத்தரவிட்டார்.
கோவில் நந்தவனத்தை பராமரிக்கிரவர் பழனிச்சாமி .ஒரு தகர டப்பாவில் பழைய சோறும் அதன்மீது உப்பும் தூவி மேலே ஊறுகாய் வைத்துக் கொடுத்தார்.
எதிரே உணவு வைக்கப்பட்டதும் வெங்கட்ராமன் அதை எடுத்து உண்டான் .பசி அடங்கியது
அருணாச்சலேஸ்வரர் தன் குழந்தைக்கு கொடுத்த முதல் உணவு பழைய சோறு .
ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 9

இட்லி என்ற தமிழர் உணவு



(நண்பர் ஹாரிஸ் ஜமாலி பையாஜி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இட்லியைப் பற்றிய பதிவு)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(உலகின் மற்ற) பெண்களைக் காட்டிலும் ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு (மற்ற) உணவுகளைக் காட்டிலும் 'ஸரீத்' என்றும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும். என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 3770.

உணவுக்குரிய பிரத்யேக சிறப்புப் பற்றி நபி (ஸல்) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் சிறப்புக்கு உதாரணமாக ஸரீத் உணவை உவமானப்படுத்தியுள்ளார்கள் .

இப்போது நம்முடைய இட்லியின் சிறப்புப் பற்றி ....

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தை வாளோடு முன் தோன்றிய மூத்த குடிமக்கள் வாழ்ந்த தமிழ்நாட்டில் இருந்துதான் நாகரீகமாக இருந்தாலும் சரி, உணவுக் கலாச்சாரமாக இருந்தாலும் சரி உலகம் முழுக்க எடுத்துச் சென்றதற்கான மிகப்பெரிய ஆதாரங்கள் உள்ளது.

ஆக இந்த உணவு சார்ந்த கலாச்சாரம் உணவையே மருந்தாக பயன்படுத்திய தன்மை, அதன் பாங்கு எல்லாமே தமிழர்களுடைய வாழ்வியல் முறையில்தான் இருக்கிறது. அதற்கான ஆதாரம், எட்டுத்தொகை படித்தாலும் சரி, பத்துப்பாட்டு, கலித்தொகை படித்தாலும் சரி, ...உள்ளது எல்லாவற்றிலும் பார்க்கும் பொழுது உணவு சார்ந்த மிகப்பெரிய ஆய்வு தமிழர்களுடைய சங்ககால இலக்கியங்களில் இருக்கிறதை நாம் கண் கூடாகப் பார்க்கலாம்.

தமிழர்கள், உணவே மருந்து, மருந்தே உணவு என்ற கொள்கையில் முழுமையாக இருந்து வாழ்ந்தார்கள். தமிழகத்தில் தோன்றிய சித்த மருத்துவத்தில், சித்தர்களால் வழங்கப்பட்ட சித்த மருத்துவத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், எது உனக்கு உணவாக இருக்கிறதோ அதுவே மருந்தாக இருக்க வேண்டும், எது உனக்கு மருந்தாக இருக்கிறதோ அதுவே உணவாக இருக்க வேண்டும் என்ற கொள்கை.

சித்தர்கள் “பதார்த்தகுண சிந்தாமணி” என்ற நூலை எழுதி அந்த நூலிலே நாம் சாப்பிடக்கூடிய தண்ணீருக்கு என்ன குணம்? பாலுக்கு என்ன குணம் ? பருப்புக்கு என்ன குணம் ? அதே போல அரிசிக்கு என்ன குணம் ? அரிசியில் எத்தனை வகை இருக்கிறது ? பாலில் எத்தனை வகை இருக்கிறது ? வெள்ளாட்டுப் பாலுக்கு என்ன குணம் ? பசும்பாலுக்கு என்ன குணம் ? காராம்பசு பாலுக்கு என்ன குணம் ?. எருமைப்பாலுக்கு என்ன குணம் ? என்று ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி முழுமையாக எழுதியிருக்கிறார்கள்.

அந்த உணவுப் பொருள்களுக்கான குணத்தை வகுத்து, ஒரு மனிதன் தன்னுடைய உடல் கூறுக்குத் தகுந்த எந்த உணவை எந்தப் பருவகாலத்தில் சாப்பிடவேண்டும் ? எப்படி சாப்பிட வேண்டும் ? என்ற முறைகள் எல்லாம் தமிழர்களுடைய பழங்கால வாழ்வியல் முறைகளில் எல்லாமே எழுதப்பட்டுள்ளது.

அப்படி வகுத்த உணவான இட்லியில் அரிசியும் , உளுந்தும் கலந்த மாவை நீராவியில் அவித்து உண்ணப்படுகிறது. நீராவியில் அவிக்கப்படும் எந்த உணவுப் பதார்த்தங்களும் அதில் கலந்துள்ள பொருட்களின் ஊட்டச் சக்தி அவிக்கப்படுவதால் வீணாக்கப்படுவதில்லை அதன் இயற்கை குணமும் மாறாது.

இட்லி தமிழர்களையும் தாண்டி அனைத்து இந்தியர்களாலும் விரும்பப்பட்ட உணவு என்று உங்களுக்குத் தெரியுமா ?

இட்லியின் வரலாறு சுமார் 700 ஆண்டுகளாக இந்தியாவில் அறியப்பட்டு வந்த ஒரு உணவு பதார்த்தம் ஆகும். பண்டைய இந்திய இலக்கியங்களில், இட்லி பற்றிய முதல் குறிப்பு, கன்னட மொழியில், சிவகோட்டி ஆச்சாரியர் 'வடராதனே' என்னும் காவியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டைய நூல்களில் குறிப்பிட்டுள்ள இட்லியின் செய்முறை வேறு, இப்போது தயாரிக்கும் இட்லியின் செய்முறை வேறு. நவீன முறை இட்லி குறித்து, 1250ம் ஆண்டு பின் எழுதப்பட்ட நூல்களில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தோனேசியாவை ஆண்ட இந்து சமய அரசர்களின் நூல்களில் குறிப்பிட்டுள்ள செய்முறை தான் இப்போது பின்பற்றப்படுவதாக, உணவு நிபுணர் அட்சயா தனது பதிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இட்லி. தமிழகத்தை பொறுத்த வரை இது வெறும் உணவு அல்ல. 'எமோஷன்' என்றே சொல்லலாம். ஒரு காலத்தில் இட்லி என்றால் விசேஷ நாட்களில் மட்டுமே கிடைக்கும் அரிய உணவு என்று நினைவுகளை இச்சுக்கொட்டும் பெரியவர்கள் இன்று இருக்கிறார்கள். ஆனால் இன்று அப்படி அல்ல. வாரத்தில் பெரும்பான்மையான நாட்களில் இட்லி இடம்பிடித்துவிடுகிறது.

இட்லி என்றால் அவ்வளவு சாதாரணம் இல்லை. கைக்குழந்தை தொடங்கி முதியவர்கள் வரை அனைவருக்கும் பொருந்தி போகும் உணவு.

காய்ச்சல் வந்து படுத்திருக்கும் நோயாளிக்கும் கைகொடுக்கும் இட்லி. அவ்வளவு ஏன்? சாப்பிட முடியாத நிலையிலும் கரைத்து குடிக்கும் திரவ உணவாக இட்லி மாறிவிடும். இப்படி நம் வாழ்வோடு ஒன்றி போன இட்லியை இன்று சமூக வலைதளங்களில் #WorldIdliDay என்ற ஹேஸ்டேக்கில் இணையவாசிகள் கொண்டாடி வருகின்றனர்.

நம்முடனே ஒன்றி போனாலும் இட்லி தமிழகத்தின் உணவு இல்லை என்று கூறுகிறார்கள். இந்தோனேஷியாவில் 'கெட்லி' என்ற உணவு இருந்தது. அது தான் இங்கு இட்லியாக வந்தது என்கிறது ஒரு குரூப். கன்னட மக்களின் 'இல்லாலிகே' தான் இட்லி ஆனது என்கிறது ஒரு குரூப். வரலாற விடுங்க 'இட்லினா இப்ப இந்தியா தான்' என்று முடிவு சொல்கிறது ஒரு குரூப்.

புளிக்கவைத்து வேகவைத்தால் தமிழ்நாட்டு இட்லி, புளிக்காத மாவை வேக வைத்தால் குஜராத் டோக்ளா, புளித்த மாவில் கள் சேர்த்து இனிப்பு சேர்த்தால் கேரளா வட்டப்பம், மங்களூர் பக்கம் சன்னாஸ் என்று பல பெயர்களில் இட்லி இந்தியாவை சுற்றி வருகிறது.

இதை சாப்பிட்டால் செரிக்குமோ செரிக்காதோ என்ற சந்தேக பார்வை வீசப்படும் உணவுகள் மத்தியில் இட்லி என்றால் அனைவரும் தலையசைத்துவிடுவது இட்லியின் சிறப்பு. பூண்டு இட்லி, காய்கறி இட்லி, கீரை இட்லி, பொடி இட்லி என இட்லியில் பல வகைகளை கொண்டு வந்த பெருமை நம் வீட்டு தாய்மார்களுக்கே உரித்தானது.

துரித மாவுகள், வாரக்கணக்கில் கெடாத மாவுகள் என்று இட்லியின் தரம் இன்று குறைவது போல இருந்தாலும் பல வீடுகளில் இன்னமும் மல்லிகைப்பூ இட்லிக்கள் பூத்துக்கொண்டு தான் இருக்கின்றன.

சொர்க்கத்தின் காலை உணவு எப்படி இருக்கும் என்று கேட்டால் ''4 இட்லி, ஒரு மெது வடை, ஒரு ஃபில்டர் காஃபி அவ்வளவுதான்'' என்று நகைச்சுவையாக சிரிக்கிறார்கள் இட்லி பிரியர்கள்!

ரஹ்மத் ராஜகுமாரன் .

(மீள்பதிவு)

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 10

ரவை உப்புமா



தேவையில்லாம முந்திரியெல்லாம் தூவி விடாதீங்கப்பா..! - இப்படிக்கு உப்புமா காதலர் #MyVikatan விகடன் வாசகர் -சசி

உப்புமாவை டேஸ்ட்டா செய்யுறேன் பேர்வழி என்று அதில் இந்த அஞ்சு விஷயம் தவிர வேறு எதை சேர்த்தாலும் அது உப்புமா கிடையாது...

"ஏங்க, கால டிபன் என்ன பண்ண? ஏதாவது ஒரு ஐடியா சொல்லுங்க"

"இட்லி, இல்ல தோசை"

"இது ஒரு ஐடியாவா.. அப்புறம் கிரைண்டர்ல வேற நேத்து மாவு போடல."

"பூரி சப்பாத்தி?"

"வேண்டாங்க, சைடு டிஷ் செய்ய மெனக்கெடனும்."

"பொங்கல்?"

"குக்கர் ஏத்தனும், ஆபீசுக்கு டைம் ஆயிடுமே"

"அப்ப இடியாப்பம் குருமா?"

"இந்த கிண்டல் தானே வேண்டாம்கிறது"

"எதுக்கு தேவையில்லாம பில்டப் போடற!. எப்பவும் நீ பண்ற அந்த மொக்கையே செஞ்சி தொலை."

(இது நம்மில் பாதி பேர் வீட்டில் காலையில் ஆபிஸ் அவசரத்தில் கேட்கும் பொதுவான டயலாக்ஸ்.)

இங்கு மொக்கை என்ற அடைமொழி பெற்றது நம்ம சாட்சாத் உப்புமான்னு உங்க எல்லாருக்கும் முதலிலேயே புரிந்திருக்கும்.

பலர் பொது வெளியில் உப்புமாவை தொடர்ந்து கரித்துக் கொட்டியும் கிண்டலடித்தும் ஜோக் போட்டபடியும் இருக்கிறார்கள். ஆனால் நான் சத்தியமாக ஒன்று சொல்லுவேன். இவர்கள் அத்தனை பேரும் வாரத்துக்கு மூன்று நாள் அரக்கப் பரக்க உப்புமாவை சாப்பிட்டு விட்டு ஆபிசுக்கு ஓடுபவர்கள் தான்.

உப்புமா இவர்களுக்கு எல்லாம் அதிர்ச்சி தர விஷயம் ஒன்றைக் கூகுள் காட்டுகிறது. ப்ளாய்ட் கார்டோஸ் இந்தியாவில் பிறந்த அமெரிக்கர். இவர் 'டாப் செஃப்' போட்டியில் 2011ல் கலந்துகொண்டு பைனல்ஸ் சென்று அப்போதைய மதிப்பில் ஐம்பது லட்சம் ரூபாய் ஜெயித்தார். இறுதிப் போட்டியில் அவர் செய்த டிஷ்,.. நம்புங்க, நமது உப்புமா தான்.

உப்புமாவுக்கு ஏன் உப்புமா என்று பேர் வந்தது, உப்பு போட்ட மாவா? இல்ல வெந்து உப்பி வருவதாலா? என்ற ஆராய்ச்சி எல்லாம் நான் செய்யப் போவதுக் கிடையாது. ஆனால் உப்புமாவைப் பற்றிய சில தகவல்களை மட்டும் கிண்டலாம் வாங்க.

புள்ளி விவரம் தெளிவாக சொல்லுகிறது. இன்றைய தேதிக்கு நமது ஒட்டு மொத்த உலக வாழ் தமிழர்கள் அதிகமாக சாப்பிடும் காலை உணவு இட்லியோ தோசையோ கிடையாது, உப்புமா தான். எப்படி இந்த உப்புமா தென் இந்தியா முழுக்க, குறிப்பாக தமிழர்களின் வாழ்வில் ஒரு அங்'கம்' போல பச்சக் என்று ஒட்டிக் கொண்டது?. மேலும் உப்புமா உடம்புக்கு நல்லதா?.. கெட்டதா?.. போன்ற கேள்விக்கெல்லாம்.. பதில் நிஜமா தெரியலப்பா.. .

உப்புமாவுக்கென்று நிறைய தனித்தன்மை உண்டு. இட்லியை எடுத்துக் கொண்டால் அதில் பல வகைகள் உண்டு, ரவா இட்லி, மினி இட்லி, சாம்பார் இட்லி காஞ்சிபுரம் இட்லி அப்புறம் குஷ்பு இட்லி.. அப்படி இப்படி என்று. அதே போல தோசையில்.. மசாலா தோசை, ரவா தோசை,.. இப்படி எதை வேண்டுமானால் தோசைக்கு அடைமொழியாக சேர்த்துக் கொள்ளலாம். அத்தனை வகை உண்டு.

ஆனால் உப்பு என்றால் ரவா உப்புமா மட்டும்தாங்க. அரிசி உப்புமா, கோதுமை உப்புமா, ப்ரெட் உப்புமா இதெல்லாம் என்னவென்று நீங்கள் கேள்வியெழுப்பலாம். அவையெல்லாம் உப்புமா வகையேக் கிடையாது. வீணாக கோவத்தை கிண்டாதீங்க. அந்த உணவுகளின் பெயரில் அனாவசியமாக உப்புமா சேர்ந்திருக்கு, அவ்வளவு தான். தவிர அவற்றை செய்யவதற்கு ரொம்ப மெனக்கெட வேண்டும்.

ரவா உப்புமா செய்ய தண்ணி கொதிக்கும் ஐந்து நிமிஷம் போதும். மொத்தமே அஞ்சு மூலப்பொருள்கள் தான். ரவை (இத வறுக்கனுமா, வேணாமா? இந்த பஞ்சாயத்தை இன்னொரு நாள் வெச்சிக்கலாம்) நறுக்கின வெங்காயம், பச்சை மிளகாய்,(பொடியா அரிந்த இஞ்சி உங்க விருப்பம்) கடுகு, (க.பருப்பு, உ.பருப்பு கையில் கிடைத்தால் கொஞ்சம் தெறிக்க விடுங்க) கருவேப்பிலை, எண்ணெய் அவ்வளவுதான்.

சிலர் பச்சை மிளகாய்க்கு பதில் வரமிளகாய் கிள்ளி போடுவார்கள். சாலமன் பாப்பையா சொல்வதைப்போல அதுவும் நல்லாத்தான்யா இருக்கும். அடுப்புல ஒரு வாணலிய, அதான்பா, கடாய், அல்லது ஒரு பாத்திரத்தை ஏற்றி, ரவையைத் தவிர மற்ற ஐட்டங்களை தாளித்துவிட்டு, தண்ணியை ஊற்றி அது கொதித்ததும் ரவையைக் கொட்டி கை வலிக்காமல் கிண்டினால் சுடச் சுட உப்புமா ரெடி. இது தாங்க உலகத்திலேயே ரொம்ப சின்ன ரெசிப்பி. அப்புறம் முக்கியமாக உப்பு போட மறந்துடாதீங்க. பேருக்கே பங்கமாயிடும்.

உப்பில்லா உப்புமா குப்பையிலே. உப்புமாவை டேஸ்ட்டா செய்யுறேன் பேர்வழி என்று அதில் இந்த அஞ்சு விஷயம் தவிர வேறு எதை சேர்த்தாலும் அது உப்புமா கிடையாது, உருமாறிய உப்புமாவாக கூட இருக்காது. வேறு ஒரு சிற்றுண்டியாக மாறிவிடும்.

தக்காளியைப் போட்டு மஞ்சத்தூளை தட்டி விட்டால் அது கிச்சடி ஆகிவிடும். காய்கறி சேர்த்து செய்தால், பாத்துப்பா.. அது விஜிடபுள் பாத் ஆகிவிடும். முக்கியமாக தேவையில்லாமல் இந்த முந்திரியை தூவி விடுவது, திராட்சையை போடுவதென்று பந்தா காட்டுறது எல்லாம் உப்புமாவுக்கு செட் ஆகாது. பச்சக் குழந்தைக்கு பட்டு வேட்டி கட்டிவிட்டாப் போல இருக்கும்.

அப்புறம் ஒரு முக்கியமான விஷயம். ஐந்து நிமிஷத்தில செய்யும் உப்புமாவை ஐந்தே நிமிசத்துக்குள் சுடச் சுட சாப்பிட வேண்டும். நேரம் கடந்து ஆறிப் போன உப்புமாவை சாப்பிடக் கூடாது. (வேற வழியில்லாம நாம சாப்பிடுவோம், அது நமக்குள்ள பெர்சனல் விஷயம். விவாதம் வேண்டாம்.)

இன்னொன்று, சொல்கிறேன்.. இதைச் சொல்ல கொஞ்சம் சங்கடமாகத்தான் இருக்கு. ஆனாலும் சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. துக்கவீட்டில் சோகத்தில இருக்கும் அனைவரும் சாப்பிட இட்லி தோசையோ பொங்கலோ ஆக்கி போட முடியாது. வீட்டுக்குள் உலை ஏத்தவும் கூடாது, அதனால் வாசலில், அல்லது அக்கம் பக்கத்து வீட்டில் சட்டு புட்டென்று வேலையை முடிப்பதற்கு உப்புமா தான் அவசர கால 101 போல.

ஏதாவது ஹோட்டலுக்கு போனால் இங்கே தோசை சூப்பர், அங்கு வடகறி அட்டகாசம். சில இடங்களில் பூரி கிழங்கு செம டேஸ்ட் இப்படி பலர் அடையாளம் காட்டுவார்கள்.

ஆனால் ஏதாவது ஒரு ஹோட்டலில் யாராவது உப்புமா சூப்பர் என்று சொன்னால் அந்த ஹோட்டல் சமையற்காரர் கண்டிப்பாக நளமகராஜாவின் மறுபிறவியாகத்தான் இருக்க வேண்டும். அவரை கண்டிப்பாக தரிசனம் பண்ணிடுங்கோ. அப்படியே அவரின் உப்புமா செய்விதமும் தெரிஞ்சுக்கிட்டா ஜென்மத்துக்கும் உபயோகப்படும்.

இன்னொரு விஷயம், உப்புமா ஒன்று தான் சட்னி சாம்பார் என்று எந்த வித சைட் டிஷ்சும் இல்லாமல் ஸ்ட்ரெயிட்டாக பரிமாறக் கூடிய ஒரே டிபன் ஐட்டம். அதே சமயம் எதை வேண்டுமானாலும் சேர்த்தும்

சாப்பிடலாம். சட்னி, சாம்பார், ஏன், சர்க்கரை, வாழைப்பழம், அவசரத்துக்கு ஊறுகாய் கூட உப்புமாவோடு சேரும். உப்புமாவுக்கு தோழனாக முறுகலான மசால் வடையை சேர்த்துக்கொண்டால் செம காம்போ. மெது வடை சரி வராது.

தனியாக வசிக்கும் பேச்சுலர் முதலில் கற்றுக் கொள்ள வேண்டியது டீ போடுவதற்குதான். அடுத்தது கண்டிப்பாக ஆம்லெட் போடக் கற்றுக் கொள்ள வேண்டும். மூணாவதாக முக்கியமாக உப்புமா கிண்ட கற்றுக்கொண்டால் மிச்சக் காலத்தை ஈசியாக ஓட்டி விடலாம்.

நான் கேள்விப்பட்ட வரை சென்னை உட்லாண்ட்ஸ் டிரைவ்-இன் இல் உப்புமா ரொம்ப பிரசித்தம். முன்பெல்லாம் எங்கள் வீட்டில் அப்பா செய்யும் உப்புமாவுக்கு அவருடைய பேரப்பிள்ளைகளிடம் கிராக்கி அதிகம். உப்புமா கொதித்து கிண்டி விடும் போது கொஞ்சம் பால் சேர்த்து அவர் செய்யும் குழைவான வெள்ளை வெளேர் உப்புமா ஒரு டைப்.

உப்புமாவை கிண்டி கிண்டி கொஞ்சம் தூக்கலாக எண்ணெய் சேர்த்து முட்டை பொடிமாஸ் போல ட்ரை உப்புமா ஒரு வகை என்று அசத்துவார். சின்ன வயதில் உப்புமா விரோதிகள் சங்கத்துக்கு தலைவராக வலம் வந்த எனக்கே இந்த ட்ரை உப்புமா பிடித்திருந்தது எல்லோருக்கும் ஆச்சரியம் தான்.

ஹைதராபாத்துக்கு வேலையில் டிரான்ஸ்பர் ஆனப் பிறகு சென்னையிலிருந்து காச்சிகுடா ரயிலில் போகும் போதெல்லாம் ரேணிகுண்டா ஸ்டேஷனில் ராத்திரி எட்டு மணி வாக்கில் ஒரு இருபது நிமிடம் ரயில் நிற்கும். ரயிலில் இருப்பவர்கள் முக்கால் வாசி பேர் ஏதோ கலவரம் வந்த மாதிரி வெளியே ஓடுவார்கள்.

வரும்போது ஒரு திறந்த காகித பொட்டலத்தை இரு கைகளால் ஏந்தியபடி சூசூ என்று உச்சு கொட்டி கொண்டு வருவார்கள். அப்புறம் ஒரு நாள் நானும் வாங்கி சாப்பிட்டேன். ஒரு நியூஸ் பேப்பர் காயிதத்துக்கு மேல் இலையை வைத்து, அதில் குழைவான உப்புமா ரெண்டு கரண்டி, ஒரு மசால் வடை; அப்புறம் கொஞ்சம் சிகப்பு கார சட்னி. இலையை மடித்து தரக் கூட கடைக்காரனுக்கு நேரம் இருக்காது.

அவ்வளவு கூட்டம் அலைமோதும். அப்படியே இரண்டு கையில் ஏந்திக்கிட்டு ட்ரெயினுக்கு திரும்பவேண்டும். அந்த ரவா உப்புமாவுல தாளித்தல் கூட சன்னமா தான் இருக்கும். ஆனால் உப்புமா கொதிக்கும் சூடுல இருக்கும். ஸ்பூன் எல்லாம் இல்லை. அந்த பொட்டலத்திலிருந்து நேராக கை விரல்களால் உஸ்..உஸ் என்று 'சால பாக உந்தி' என்று நமக்கு தெரிந்த மூன்று வார்த்தையில் பாராட்டிக்கொண்டே ஆவி பறக்க சாப்பிடவேண்டும்.. சூடு....அது தான் அந்த உப்புமாவின் சுவையின் ரகசியம். அதற்கப்புறம் ஒவ்வொருமுறையும் ரேணிகுண்டா வந்தால் நானும் கூட்டத்தோடு தலை தெறிக்க வெளியே ஓடுவேன்.

நாளைக்கு உங்கள் வீட்டில் என்ன டிபன்? உங்களில் பலருடைய பதில் ப்ராபபிலிட்டி தியரிபடி உப்புமா என்பதாகத் தான் இருக்கும். என்ஜாயி எஞ்சாமி...!

சசி பதிவிலிருந்து ர.ரா

Rahmath Rajakumaran

காலை உணவில் அடிக்கடி உப்புமா சாப்பிட வேண்டும்... ஏன்னு காரணம் தெரியுமா?...
பொதுவாக ரவை உப்புமாவில் நிறைய ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அதிலும் கோதுமையில் இருந்து தயாரிக்கப்படும் உப்புமாவில் பல ஊட்டச்சத்துக்கள் நிரம்பி உள்ளதால், இதை காலை உணவாக எடுத்து கொள்வது மிகவும் சிறந்தது. இந்த கோதுமை ரவையைக் கொண்டு நாம் பலவகையான உணவுகளை தயார் செய்யலாம்.
மகிழ்ச்சியின் ரகசியம் என்ன?சில வகையான ரவைகள் நன்றாக பொடி செய்யப்பட்டிருக்கும் மற்றும் சில வகையான ரவைகள் குருனைப் போன்று இருக்கும். பொதுவாக நாம் அனைவரும் இந்த கோதுமையை சப்பாத்தி செய்வதற்காக பயன்படுத்துவோம். தென்னிந்தியாவில் இந்த ரவையைக் கொண்டு உப்புமா தயாரிக்கிறார்கள்.
ஊட்டச்சத்துக்கள் :-ஒவ்வொரு 100 கிராம் கோதுமை மாவிலும் 71 கிராம் கார்போஹைட்ரேட், 3 கிராம் நார்ச்சத்து, 1 கிராம் கொழுப்பு, 12 கிராம் புரதச் சத்து மற்றும் கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், சோடியம், இரும்பு சத்து மற்றும் துத்தநாகம் போன்ற தாதுக்கள் நிரம்பியுள்ளன. அதுமட்டுமின்றி இதில் வைட்டமின் பி நிறைந்துள்ளது.
இந்த கோதுமையை கொண்டு தயாரிக்கப்படும் உப்புமாவில் நிறைந்துள்ள நன்மைகள் பற்றி தெரிந்து கொள்வோம்.
செரிமானம்:-நமது உடலானது இந்த கோதுமை கொண்டு தயாரிக்கப்படும் ரவை உப்புமாவை மெதுவாக செரிமானம் செய்கிறது. இதனால் நமக்கு வெகு எளிதாக பசி எடுப்பதில்லை. இதன் காரணமாக அந்த நேரங்களில் நொறுக்குத் தீனி போன்ற ஆரோக்கியமற்ற உணவுகளை தேடிச் செல்ல வேண்டியதில்லை.
எதிர்ப்பு சக்தி:-இந்த ரவையில் நிறைந்துள்ள வைட்டமின்கள் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்திக்கு உதவுகிறது. குறிப்பாக இதில் நிறைந்துள்ள வைட்டமின் பி மற்றும் வைட்டமின் ஈ நமது உடலில் நோயெதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவுகிறது.
இந்த உப்புமாவை நாம் எடுத்துக்கொள்ளும் போது நாம் மிக சுறுசுறுப்பாக உணரமுடியும் என்று சுகாதார நிபுணர்கள் கூட கூறுகின்றனர். மேலும் இந்த உப்புமா உடன் சில காய்கறிகளையும் சேர்த்து சமைக்கும் பொழுது, இதில் நிரம்பியுள்ள புரதச் சத்துக்களும் நமக்கு கிடைக்கிறது.

சிறுநீரகம், இதயம்:-இந்த ரவையில் நிரம்பியுள்ள பொட்டாசியம், நமது சிறுநீரகத்திற்கு நன்மை பயக்கிறது. இது நமது சிறுநீரகத்தில் உள்ள செயல்பாட்டை விரிவாக்குகிறது.
இந்த ரவை உப்புமாவில் நிறைந்துள்ள ஊட்டச்சத்துக்கள் இதயத்திற்கு மிகவும் ஆரோக்கியமானவை. மேலும் இதில் உள்ள மெக்னீசியம் தாது நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்திக்கு சிறந்தது.
எலும்புகளுக்கு:-இந்த உப்புமாவில் இருக்கும் மெக்னீசியம், பாஸ்பரஸ் மற்றும் துத்தநாகம் போன்ற தாதுக்கள், நமது உடலின் நரம்பு மண்டலம் மற்றும் எலும்புகளுக்கு மிகவும் நல்லது.
இரும்புச்சத்து:-உப்புமா வில் இரும்புச் சத்து நிறைந்திருப்பதால், ரத்த சோகை போன்ற பிரச்சனையில் இருந்து நம்மை பாதுகாக்கிறது. மேலும் இது நமது உடலில் ரத்த ஓட்டத்தை துரிதப்படுத்துகிறது.
நட்ஸ்:-இந்த உணவுடன் நீங்கள் பல்வேறு வகையான பருப்புகள் ஆன, முந்திரி, நிலக்கடலை போன்றவற்றை சேர்த்து சமைக்கலாம். இது நமது உணவை சுவையுள்ளதாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல், அதிக அளவில் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களையும் தருகிறது.
இத்தனை நன்மைகள் உள்ள இந்த உப்புமாவை காலை உணவாக எடுத்துக் கொள்ளும்போது நாம் மேற்கூறிய அனைத்து பயன்களையும் பெறலாம்.

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 11



' இடியப்பம் '- அனேகமாக இந்த குரல் ஒலிக்காத தமிழகத்தின் பெருநகரங்களே இன்றைக்கு இல்லை. குரலை கேட்ட உடனேயே சைக்கிள் கேரியரில் வைத்து கட்டப்பட்ட பெரிய பாத்திரம் நம் கண்ணுக்குத் தெரியும்.

சென்னை, திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி,சேலம் போன்ற நகரங்களில் காலை மற்றும் மாலை வேளைகளில் இப்படி வீடு வீடாகப் போய் இடியப்பம் விற்பவர்கள் அதிகம். உணவுத் துறையில் வளர்ந்து வரும் முக்கியமான தொழிலாக உருவெடுத்து விட்டது இடியப்ப விற்பனை.
இது ஒரு வகையில் நல்லதும் கூட பீட்சா, பர்கர், நூடுல்ஸ் மோகத்தின் பிடியில் இருந்து கொஞ்சம் தமிழர்களாவது தப்பித்திருக்கிறார்கள் என்பதற்கான சாட்சியம்! உண்மையில் சிக்கல் நிறைந்த இடியாப்பம்... உடலுக்கு எந்த சிக்கலையும் ஏற்படுத்தாது.

சங்க காலத்திலேயே இடியாப்பம் இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன." சூடாமணி நிகண்" டில் இது பற்றிய குறிப்பு இருக்கிறது. இடி என்றால் நெல்லில் இருந்து தயாராகும் மாவு. அதில் செய்யப்படும் அப்பம் என்பது இதன் பொருள்.
இந்திய உணவு வரலாற்றாசிரியர் கே.டி . அச்சயா
(K.T. Achaya) முதலாம் நூற்றாண்டிலேயே இடியப்பம் இந்தியாவில் இருந்தது என்று "தி ஸ்டோரி ஆப் அவர் ஃபுட் " என்ற நூலில் தானே குறிப்பிட்டிருக்கிறார்.
தமிழில் "நூல் புட்டு " கன்னடதில் "நூபுட்" ,மலேசியாவில் " புட்டு மாயம் " என அழைக்கப்படும் இடியாப்பம், இலங்கை வரை பிரபலமான ஓர் உணவு. கடற்கரைப் பகுதிகளிலும், நகரத் தெருக்களிலும் கூவிக் கூவி விற்ற அரிய உணவு.
"பெரும்பாணாற்றுப்படை " ''சிலப்பதிகாரம்" " மதுரைக் காஞ்சி " போன்ற தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இதுபற்றிய குறிப்புகள் பல உள்ளன.

சுத்தமான அரிசி மாவில் உப்பு சிறிது எண்ணெய் சேர்த்து வேகவைத்து இடியாப்ப அச்சில் பிழிந்து,எடுத்து வைத்தால் இடியாப்பம்.
தேங்காய்ப்பால் , பால், மீன் , நாட்டு கோழி குழம்பு , மட்டன் குழம்பு, ஆட்டுக்கால் பாயா இவற்றுடன் சாப்பிட அபார சுவை . . எதனுடனும் இடியாப்பம் ஜோடி சேர்ந்தாலும் "இடியாப்பம் - வட்டலாப்பத்"துடன் சேர்த்து சாப்பிடுவதுதான் சாலப் பொருத்தமான உணவு காம்பினேஷன். இந்த ஜோடி உணவுக்கு நிகர் இதே ஜோடி உணவு மட்டும்தான்.

வட்டலாப்பத்தைப் பற்றி சொல்வதற்கு நாவில் எச்சியூர அடுத்த ஒரு பதிவுக்கு முட்டை இன்னும் வெந்து கொண்டிருக்கிறது.
கேரளாவில் கொண்டைக்கடலை கிரேவியாக்கி, அதனுடன் சேர்த்து சாப்பிடும் பழக்கம் உண்டு.
இது எளிய ஆரோக்கியமான காலை உணவு இடியாப்பத்தை உதிர்த்து உப்புமாவாக்கலாம். சில ஊர்களில் "சேவை" என்று சொல்வார்கள். இதைக்கொண்டு எலுமிச்சை, தக்காளி, புளி என விதம் விதமாக ' சேவை ' செய்து ருசிக்கலாம்.
இடியாப்பத்தில் பிரியாணி செய்பவர்கள் கூட உண்டு. தினை, வரகரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு என சிறு தானியங்களிலும் செய்து ருசி பார்க்கும் அளவுக்கு இடியாப்பத்தின் மகத்துவம் இன்றைக்கு அனைவரும் உணர்ந்த ஒன்றாகிவிட்டது.
ஆயுர்வேத மருத்துவ முறையில் இடியாப்பம் வாதத்தையும், பித்தத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் என்கிறார்கள்.
இதை இளஞ்சூடாக சாப்பிடுவதில் அல்லது இதில் நமக்கு தேவையான கார்போஹைட்ரேட், புரோட்டீன், இரும்புச்சத்து, மற்றும் கொழுப்புச்சத்து அனைத்தும் உள்ளன. எனவே உடலை கட்டுக்கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க இடியாப்பம் உதவுகிறது.
எண்ணெய் சேர்க்காமல் நீராவியில் வேக வைக்கப்படுவதால் வயிற்றுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படுத்தாது. இடியாப்பம் நார்த் தட்டில் வைத்து கொப்பரையில் அவிக்கப்படுவது என்பது ரொம்பவும் முக்கியம்.
நோய்வாய்ப் பட்டவர்களுக்கும், நோயின் தன்மைக்கேற்ப இடியாப்பம் செய்து மற்ற சைடிஷ்களுடன் கலந்து கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுக்க ஏற்ற உணவு இடியாப்பம்.
ஜுரம் - இடியாப்பத்தை இளஞ் சூடான நீருடன் கொடுக்கலாம்
வயிற்றுப்போக்கு - மோர் மற்றும் கல் உப்புடன் சேர்த்து கொடுக்கலாம்.
பசியின்மை - எலுமிச்சை சேவை, தக்காளி சேவை என செய்து கொடுக்கலாம்.
வயிற்றுக்கோளாறுகள் _ எலுமிச்சை சேவையாக கல் உப்பு போட்ட மோருடன் தரலாம் .
கர்ப்பிணிகள் - வட்டலாப்பம், தேங்காய் பால், பால், நெய் ,நாட்டுச்சர்க்கரை ட்ரை ஃப்ரூட்ஸ் மற்றும் நட்ஸ் சேர்த்து கொடுக்கலாம்.
புது மாப்பிள்ளைக்கு _ கண்டிப்பாக வட்டலாப்பத்துடன் சேர்த்துதான் கொடுக்கப்படவேண்டும் என்பது எழுதாத நியதி.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 12



வட்டலாப்பம் செய்வது எப்படி?
முட்டை - 10
சீனி - ஒரு முட்டைக்கு 40 கிராம் - 10முட்டைக்கு 400 கிராம்
தேங்காய் - 10 முட்டைக்கு ஒரு தேங்காய் (மீடியம் சைஸ்)
முந்திரி முழு பருப்பு - 50 கிராம்
உப்பு - 1 சிட்டிகை

முதலில் முட்டையை நுரை பொங்க நன்கு அடித்து வைக்க வேண்டும்.
சீனியை தனியாக மிக்ஸியில் தூள் செய்து, முட்டையுடன் சேர்த்து கொள்ள வேண்டும்.
பிறகு தேங்காயை கெட்டி பால் எடுக்க வேண்டும் 200 மிலி அளவுக்குள் இருக்க வேண்டும். அதிகம் கூடாது .(10 முட்டைக்கு இந்த அளவு போதுமானது). எடுத்த பாலில் ஒரு சிட்டிகை உப்பு சேர்க்கவும்.
முந்திரிப் பருப்பை மிக நன்றாக கூழ் மாதிரி அரைத்து, தேங்காய் பாலில் கரைக்கவும்
தேங்காயின் இரண்டாம், மூன்றாம் பாலை குருமா (அல்லது) தேங்காய் பால் சாதத்திற்கு உபயோகிக்கவும். கண்டிப்பாக வட்டலாப்பத்திற்கு உபயோகிக்க கூடாது.

தேங்காய் பாலை முட்டை சீனி கலவையில் கலந்து,
வேறு ஒரு சட்டியில் அடியில் தண்ணீர் ஊற்றி தட்டை போட்டு, தனியாக ஒரு பாத்திரத்தில் வைத்து (அல்லது) மூடி போட்ட டபராவிலும் வைக்கலாம்.
குக்கரைப் பயன்படுத்தினால் வட்டலாப்பம் மென்மையாக இருக்காது .எனவே சட்டியை பயன்படுத்தினால் மட்டுமே மென்மையாக ருசியாக இருக்கும் .
சட்டியை அடுப்பில் ஏற்றவும் . வட்டலாப்பம் 50 நிமிடத்தில் ரெடியாகி விடும்.
முந்திரிப்பருப்பு , முட்டை ,தேங்காய் பால் நன்றாக கலந்தாலும், அவைகள் வேக வைக்கும் போது தனித்தனியாக சிமிண்ட் கலர் , டார்க் சிமிண்ட் கலர் ஆகிய நிறங்களில் பிரிந்திருக்கும் . இப்படி இருக்கும் வட்டலாப்பம்தான் ஆக மிகச்சிறந்த ருசியுடன் இருக்கும்.
(படத்தில் இருப்பது எங்க வீட்டில் செய்த வட்டலாப்பம் இல்லை. படம் வலை தளத்தில் எடுத்தது. மேலப்பாளைய நண்பர்கள் அந்த ஒரிஜினல் வட்டலாப்ப கலர் காம்பினேஷனைப் படம் எடுத்துப் போடுவார்கள்)
முழு முந்திரி பருப்பை நெய்யில் வறுத்து அந்த
வட்டலாப்பத்தின் மீது போடலாம்.
ஆறியதும் குளிரவைத்து கட் செய்து பரிமாறவும்.
இடியாப்பத்திற்கு மிகவும் பொருத்தமான டிஷ் வட்டலாப்பம்.
ஒரு தகவலுக்காக : -
வட்டலாப்பத்தை மையப்படுத்தி ஒரு விழா....
பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் ''வட்டலாப்பம் ஹமுவ'' சகவாழ்வுக்கான சிறப்பு ஒன்றுகூடல்.
2019.08.18அன்று “Wattalapam Hamuwa” என்ற தலைப்பின் கீழ் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களை மையமாக வைத்து சகவாழ்வுக்கான சிறப்பு ஒன்றுகூடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டு இனிதே நிறைவடைந்தது.
இங்கு வட்டிலாப்பம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் மருதானியிடும் நிகழ்வும் மிகவும் சிறப்பாக இடம்பெறறது.
குறித்த நிகழ்வானது பிலால் மரிக்கார் மற்றும் முஸ்லிம் சகோதரர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகததின் பிரதான மார்ஷல் பங்கேற்றியதுடன் பெருந்திரளான மாணவர்கள் மறறும் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.
அனைத்து சமூகங்களுக்கிடையேயும் ஒற்றுமை, சகவாழ்வு என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வானது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 13



புட்டு எங்கட உசுரு ! அது எங்கட தேசிய உணவு !
வாழை இலை... அதில் சுடச்சுட வைக்கப்பட்டிருக்கும் புட்டு. மேலே தூவப்பட்டு வெள்ளை நிறத்தில் மினுங்கும் தேங்காய் துருவலும், நாட்டுச்சர்க்கரையும், அப்பப்பா...
கேரளாவில் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரபல காலை டிபன். மலையாளிகள், " புட்டு எங்கட உசுரு ! அது எங்கட தேசிய உணவு " என்கிறார்கள்.
இது எப்போது யாரால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இதன் பெயர் காரணத்தைப் பற்றி பல வரலாறுகள் உள்ளன. தமிழில் 'புட்டு' என்றால் பிரித்தல் இதைப் பிட்டு (உடைத்து) , உதிர்த்துச் சாப்பிடுவதால் இதற்கு புட்டு பெயர் வந்தது என்கிறார்கள். இதுதான் சரியான காரணமாக தெரிகிறது .
இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் வந்திருந்த நேரம் அது... கேரளாவில் புட்டு செய்முறையை ஆங்கிலேயர் ஒருவர் பார்த்திருக்கிறார்.
அரிசி மாவையும், தேங்காய் துருவலையும் கலந்து மண் பாத்திரங்களில் ஒன்றில் வைத்து (Put) வேக வைத்துப் பார்த்ததும், இதை 'புட்' என்று சொன்னாராம். அது மருவி, 'புட்டு' ஆனது என்கிறார்கள்.
ஆங்கிலேயர்கள் தங்கள் உணவுப் பட்டியலில் புட்டையும் சேர்த்துக் கொண்டார்கள். அதன் காரணமாக இது பிரபலம் அடையவும் செய்தது.

புட்டை அதிக அளவில் தயாரித்து ருசிப் பார்க்கிறவர்கள் கேரளாக்கார்கள்தான். நம்மூர் இட்லி கடை மாதிரி ரோட்டோரம் புட்டு கடைகள் அங்கே ஏராளம் .

ஐந்து நட்சத்திர உணவகங்கள் தொடங்கி,சாதாரண ஹோட்டல் வரை மெனுவில் இருக்கும் முக்கியமான உணவு இதுதான். சாதாரண அரிசி, ராகி புட்டுகள் தவிர நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கின்றன. சிக்கன், இறால், மட்டன், மீன், முட்டை, தக்காளி ,கேரட், மிக்ஸ்டு வெஜிடபிள், பைனாப்பிள்... என புட்டியில் பல பல ரகங்கள்.
'பிரியாணி புட்டு' கூட கேரளாவில் கிடைக்கும். அடிக்கடி 'புட்டு திருவிழா' நடத்தி ரசிகர்கள் விதவிதமாக ருசிபார்ப்பதும் நடக்கிறது .கேரளாவில் சிரட்டையில் செய்கிற வகைக்கு 'சிரட்டை புட்டு' என்று பெயர். புட்டில் கின்னஸ் உலக சாதனை படைத்த நிகழ்வும் நடந்திருக்கிறது. 2015 ஆம் ஆண்டு கேரள வயநாட்டில் இருக்கும் ஓரியண்டல் ஸ்கூல் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் மாணவர்கள் இந்த சாதனையைப் படைத்தார்கள்.
பிரம்மாண்டமான புட்டை செய்வதற்காக 20 கிலோ அரிசி மாவு, 20 தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டன. ஒன்றரை மணி நேரத்தில் இவர்கள் தயாரித்த புட்டின் நீளம் 18.2 அடி இதை தயாரித்தவர்கள் 12 மாணவர்கள். இன்று வரை தயாரிக்கப்பட்டதிலேயே மிக நீளமான புட்டு இதுதான்.
புட்டின் புகழ் இந்தியாவையும் தாண்டி பல நாடுகளிலும் பரவிருக்கிறது .குறிப்பாக தெற்காசியாவில் ! அதிலும் மூங்கிலில் அரிசி மாவை வைத்து வேகவைத்து சாப்பிடும் முறையை அதிகம்.

இந்தோனேசியாவில் இதற்கு 'கியூ - புட்டு' (Kue puttu) என்று பெயர். மலேசியாவில் ' புட்டு - பாம்பூ' (Puttu Bambu) .
இந்தோனேஷியாவில் தள்ளுவண்டியில் வைத்து தெருத்தெருவாக கொண்டு போய் விற்கிறார்கள். அதுவும் மந்தார இலையில் புட்டு வைக்கப்பட்டிருக்கும் அழகே தனி. மொரீஷியாவிலும் புட்டு பரவலாக காணப்படும் உணவு இது.
தொட்டுக்கொள்ள பாயா ,கொண்டைக் கடலை கறி, மட்டன் கிரேவி, வாழைப்பழம் என பொருத்தமான பல சைடு டிஷ்களும் உண்டு.
எடை குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது. புட்டு பூப்பெய்தும் இளம்பெண்களுக்கு புட்டு சுற்றி போடும் பழக்கம் தமிழர் பாரம்பரியத்தில் உண்டு. மாதவிடாய் காலத்தில் வலியை தாங்கும் சக்தி இது அளிக்கிறது. இடுப்பு எலும்புகள் பலம் பெறும் என்பதை நம் முன்னோர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.
கோதுமை, கேழ்வரகில் செய்த புட்டை (சர்க்கரை சேர்க்காத) சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடலாம். தேங்காயைத் தவிர்த்து விடவும்.
சிறுதானியங்களில் செய்து சாப்பிடுவது அதிக பலன்களைத் தரும். உதாரணமாக சாமை அரிசியில் இதைச் செய்து சாப்பிட்டால் ரத்த சோகை சரியாகும். வயிறு தொடர்பான பிரச்சினைகள், மலச்சிக்கல் நீங்கும், உயிரணுக்களின் எண்ணிக்கை உயரும்.
பக்கவிளைவுகளை ஏற்படுத்தாத பலம் தரும் உணவு புட்டு. உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளவர்கள் அரிசி மாவில் செய்த பூட்டை தவிர்த்துவிட்டு, சிறுதானியங்கள் செய்ததைச் சாப்பிடுவது நலம்.
ஒரு தகவலுக்காக...
புட்டுக்காக மண் சுமந்தார் சிவபெருமான் என்கிற குறிப்பை திருவிளையாடல் புராணம் நூலில் குறிப்பிடுகிறார் பரஞ்சோதி முனிவர்.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 14

கஞ்சி



" வயசான காலத்திலே ஒரு வாய் கஞ்சி ஊத்த வக்கில்லை "
"ஒரு வாய் கஞ்சிக்கு வழி இருக்கா சொல்லு " _
என கஞ்சி தொடர்பாக விரிகிற சொற்றொடர்கள் எல்லாமே ஆழ்ந்த பொருள் கொண்டவை. அதுதான் மனித வாழ்வின் ஆதாரம் என்பதை அப்பட்டமாக உணர்த்துபவை.
கஞ்சி உயிர்காக்கும் ஆகாரம் மட்டுமல்ல; ஆரோக்கியத்தின் ஆதாரம் என்பதே மருத்துவம் உணர்த்தும் உண்மை.
இன்றைக்கு சர்க்கரை நோயாளிகளுக்கு பதிந்துரைக்கப்படும் ஓட்ஸ் கஞ்சி ஆகட்டும், அரிசி, நொய், பார்லி, கோதுமை, கேழ்வரகு, கம்பு , கொள்ளு ஆகியவற்றிலிருந்து தயாரிப்படுவதாகட்டும்... அனைத்துமே ஒவ்வொரு விதத்தில் நமக்கு நன்மை தரக்கூடியது என்கிறார்கள் மருத்துவர்கள்.
பண்டைய கிரேக்க நாட்டிலும் இதுதான் எளியோர்களின் முக்கிய உணவு. வறுத்த இறைச்சி என்பதெல்லாம் விருந்தில் பெருந்தீனிகாரர்களுக்கும் ,அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் , அரசு அதிகாரிகளுக்கும் பரிமாறப்படும் ஒன்று. ரொட்டி என்பது கூட பெருநகரங்களில் மட்டுமே சாப்பிடப்படும் ஆடம்பர உணவாகத்தான் கருதப்படுகிறது .

மாயன் , ஆஸ்டெக் நாகரிங்களில் கூட கஞ்சி பிரதான உணவாக இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன, சீனாவிலும் பாரம்பரிய உணவாக கஞ்சி பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. சீனர்களின் வரலாற்று ஆவணமான " புக் ஆஃப் சோவ் (The Book of Zhou) என்ற நூலில் முதல் முதலில் சிறுதானியத்தில் கஞ்சி தயாரித்து அரசர் ஹுவாங் டி (Huang Di) உண்டதாக குறிப்பு இருக்கிறது.
பிரபல எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ் ,தன்னுடைய ''ஆலிவர் ட்விஸ்ட் " நாவலில் வறுமையின் அடையாளமாக கஞ்சியை சித்தரித்திருப்பார்.

வறுமை நீங்குவதற்கு அஜ்மீர் ஹாஜா நாயகத்தின் பேரில் ஃபாத்திஹா ஓதி எல்லோரும் கஞ்சி குடிக்கவும் , மற்றவர்களுக்கும் குடிக்க கொடுப்பதும் இதன் மூலம் வறுமையிலிருந்து நிவாரணம் கிடைத்திருக்கிறது. வறுமை பாதித்த பகுதிகளில் அரசும், அதிகாரிகளும் கடைசி கடைசியாக இறங்கிவந்து, செய்கிற வேலை "கஞ்சித்தொட்டி திறப்பது " . இது பல இடங்களில் மக்களின் வயிற்றை நிறைத்து விடுகிறது.

வங்காளத்தில் "ஜாவு" (Jaou), ஒடிஷாவில் பகல் பாத் (Pakhal Bhat),பர்மியர்களுக்கு ஹ்சான் பயோக் (Hsan pyok) , போர்ச்சுகீசியர்கள் கேன்ஜா (Canja), தாய்லாந்து காரர்களுக்கு "காவோ டோம்". ஜப்பானியர்களுக்கு "காயு"..இப்படி நீளுகிறது கஞ்சியின் பெயர்களுக்கு முடிவே இல்லை .

இந்தோனேஷியா, கொரியா, பிலிப்பைன்ஸ், லாவோஸ், போர்ச்சுக்கல், இலங்கை ,சிங்கப்பூர், துருக்கி... என கஞ்சி இல்லாத தேசமே இல்லை ஏனென்றால், இது மனிதனின் ஆதி உணவு.. ஆதார உணவு.
இஸ்லாத்தில் கஞ்சி ஒரு பாக்கியம் பெற்ற ஓர் உணவாக பார்க்கப்படுகிறது !
`நோன்பு உங்களுக்குக் கேடயமாக இருக்கிறது’ என்கிறது இஸ்லாம். ரமலான் மாதம் முழுவதும் நோன்பிருப்பது இஸ்லாமியர்களின் கடமைகளுள் ஒன்று. அதிகாலை தொடங்கி மாலை வரை உண்ணாமல், நீர் அருந்தாமல், புகைக்காமல் இருப்பதுடன் வேறு தீய பழக்கங்களில் ஈடுபடாமல் இருப்பதே இந்த நோன்பின் சிறப்பு.
காலை முதல் மாலை வரை எந்த உணவையும் உண்ணாமல் இருந்துவிட்டு, மாலையில் சூரியன் மறைந்த பிறகு, நோன்பு துறந்து உணவு உண்பதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

அப்படி காலையில் இருந்து மாலை வரை எந்த உணவும் உண்ணாமல் இருந்து, நோன்பு திறந்த பிறகு திட உணவுகளை உண்பதால், அது உடலுக்குச் சில தொந்தரவுகளைத் தர வாய்ப்பு உள்ளது. அதைத் தவிர்ப்பதற்காகவும், நோன்பிருப்பவர்கள் உடனடியாகப் புத்துணர்ச்சிப் பெறவும் உதவும் ஓர் அற்புதமான உணவே 'நோன்புக் கஞ்சி'.
இதனால் உடலுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. இந்த நோன்புக்கஞ்சியை நோன்பு இருப்பவர்கள் மட்டுமின்றி, மற்றவர்களும் குடித்தால், அது உடலுக்கு பல்வேறு நன்மைகளைத் தரும்.
"நோன்பு இருப்பதால், நம் உடலில் உள்ள தேவையற்ற ரசாயனப் பொருள்கள் சுத்தப்படுத்தப்படும். நோன்பு ஆரம்பித்து முதல் இரண்டு நாள்கள் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும். மேலும், உடலில் நீர்வறட்சி ஏற்படும். இதைத் தவிர்க்க நோன்பு காலங்களில் நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முக்கியமான உணவு நோன்புக்கஞ்சி.

இது ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு பெயர்களில் அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் 'கஞ்சி' என்று அழைக்கப்படுகிறது.

நோன்புக்கஞ்சியை சாப்பிட்டதும், நம் உடலில் நீர்வறட்சி சரியாகி உடல் சராசரி நிலைக்கு வந்துவிடும். மேலும், நாள் முழுவதும் நோன்பு இருப்பதால், உடல் சூடாகி விடும். நோன்புக் கஞ்சியில் இருக்கும் மசூர் பருப்பானது உடல் சூட்டைத் தணித்து குளிர்ச்சியைத் தருகிறது.
நாள் முழுவதும் உணவு உண்ணாமல் இருப்பதால், நம் வயிற்றுக்கு அரைக்கும் வேலை இருக்காது. அதனால் நாம் நோன்பு திறந்த பிறகு உடனடியாக முழுமையான திடப் பொருள்களை உண்ணும்போது, வயிற்றுத் தொந்தரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, நோன்புக் கஞ்சி போன்ற திரவ உணவை உட்கொண்டால், அது நன்றாக செரிமானமாகும்.

நோன்புக் கஞ்சி செய்வதற்கு பெரும்பாலும் பச்சரிசி பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் உடலுக்குத் தேவையான கார்போஹைட்ரேட் கிடைக்கும். அதேபோல் பருப்பு, நெய் மற்றும் இறைச்சி வகைகளைச் சேர்ப்பதால், உடலுக்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கும்.
நோன்புக்கஞ்சி வயிற்றில் உள்ள கழிவுகளைச் சுத்தப்படுத்தும்; அல்சர் தொந்தரவுகளையும் சரி செய்யும். கஞ்சியில் சேர்க்கப்படும் கொத்தமல்லி, புதினா, மஞ்சள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, தக்காளி ஆகியவை நம் வயிற்றை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகின்றன. எளிதில் செரிமானம் ஆக்கக்கூடிய எளிய வகை உணவு.

இதில் நிறைந்துள்ள நார்ச்சத்து சிறந்த மலமிளக்கியாகச் செயல்படுகிறது. மலச்சிக்கலைத் தீர்க்கும். நோன்புக் கஞ்சியானது வயிறு நிறைந்த ஓர் உணர்வைத் தரக்கூடியது.
அதற்கும் மேலாக உடலுக்குத் தேவையான அத்தனைச் சத்துகளையும் தரக்கூடியது. நோன்பு இருப்பவர்கள் மட்டுமின்றி, அனைவரும் இதை உட்கொள்ளலாம். இது உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 15
பாயாசம்



எந்த விருந்தாக இருந்தாலும் பாயசத்துடன் தொடங்குவதுதான் தமிழர் பாரம்பரியம். அந்தத் துளியூண்டு பாயாசம் விரல்களால் வழிக்கப்பட்டு, நம் நாவில் ஏறி உட்காரும் கணத்தில் "இது விருந்து சாப்பாடு " என்கிற உணர்வு நம்மை தொற்றிக் கொள்ள தொடங்கிவிடும்.

திருமண வீடுகளில் சாப்பாட்டுடன் பாயாசம் பரிமாறப்பட வில்லை என்றால் அந்த திருமணம் முழுமை அடையாது
இந்தியாவில் விருந்துகள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் அத்தனையிலும் பாயசத்துக்கு பிரதானமான இடம் இன்றுவரை இருக்கிறது. இலையில் போட்டதை வழித்து ருசித்தாலும், அப்பளத்தை நொறுக்கிப் போட்டு கலந்தடித்தாலும், டம்ளரில் அல்லது கிண்ணத்தில் ஊற்றி சாப்பிட்டாலும் பாயாசம் சுவையை ஒன்றே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் அமர்க்களம் !
பாசத்துக்காக புகழ்பெற்ற கோயில் கேரளா அம்பலப்புழாவில் உள்ள கிருஷ்ணர் கோயில். இந்த கோயிலில் பாயாசம் நுழைந்ததற்கு ஆதாரமாக, சுவராசியமான கதை ஒன்றையும் சொல்கிறார்கள்.
அந்தப் பகுதியை ஓர் அரசன் ஆண்டு வந்தான். ஒரு நாள் வயதான துறவி வேடம் தரித்து அவனைப் பார்க்க வந்தார் கிருஷ்ண பகவான் வந்திருந்தவர் யார் என்பது அரசனுக்கு தெரியவில்லை .இருந்தாலும் முதிய துறவி ஆயிற்றே ! வரவேற்றான் . உபசரித்தான். அமரச் சொன்னான். அவர் வந்த காரியத்தை விசாரித்தான் .
" மன்னா...! நீ சதுரங்க விளையாடுவதில் திறமையானவன் எனக் கேள்விப்பட்டேன். உன்னோடு விளையாட வந்தேன் " என்றார் கிருஷ்ணர்.
அரசனுக்கு ஆச்சரியம், "இந்த துறவிக்கு ஏன் இந்த ஆசை ?" என்ற எண்ணம் எழுந்தாலும் ,அவருடன் சதுரங்கம் விளையாட சம்மதித்தான்.
"சரி ஆட்டத்தில் நீங்கள் வெற்றி பெற்றால் நான் என்ன தரவேண்டும் ? " என்று அரசன் கேட்டான்.
" அதிகம் வேண்டாம் சதுரங்கத்தில் அறுபத்தி நான்கு கட்டங்கள் இருக்கின்றன அல்லவா ? ஒவ்வொரு கட்டத்திற்கும் இவ்வளவு என்கிற அளவில் நீ எனக்கு நெல் தந்தால் போதும்... அவசரப்படாதே.. முதல் கட்டத்திற்கு ஒரு நெல்.. இரண்டாவது இரண்டு.. மூன்றாவது நான்கு ..நான்காவது கட்டத்தில் மேலே உள்ள அத்தனையும் கூட்டி 8 , ஐந்தாவதில் 16... இப்படி நெல்மணிகளை இரட்டிப்பாக்கிக்கொண்டே போய் முழுவதையும் தரவேண்டும் சம்மதமா ? "
அரசன் சற்றும் யோசிக்கவில்லை .சதுரங்கம் விளையாட சம்மதித்தான்." இது என்ன பிரமாதம் ..மிஞ்சிப்போனால் 10 அல்லது 20 மூட்டை நெல் வருமா ? "என்பது அவன் கணக்கு.
அல்ல... அவன் செய்த பிழை . அந்த விளையாட்டில் கிருஷ்ணரை வெற்றி பெற்றார். அவர் கேட்டபடி சதுரங்கத்தின் அத்தனை கட்டங்களிலும் நெல்மணிகளை வைக்க தொடங்கியபோதுதான் எழுந்தது பிரச்சினை .

இருபதாவது கட்டத்தில் 10 லட்சம் நெல் மணிகளை வைக்க வேண்டியதாயிற்று . 40 ஆவது கட்டத்தில் அரசு கிடங்களில் இருந்து மொத்த தானியங்களையும் வைத்தாகிவிட்டது 64-வது கட்டத்தில், பல லட்சம் டன் நெல்லை அரசன் துறவிக்கு கொடுக்க வேண்டும் என்கிற நிலை ! ஒருபோதும் அவனால் அடைக்கவே முடியாத கடன் அது .

மலைத்துப் போன அரசன் துறவியின் காலில் விழுந்தான். மனமிரங்கிய கிருஷ்ணர் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தினார். " உன் கடனை உடனே அடைக்க தேவையில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அடைத்தால் போதும் அம்பலப்புழாவில் உள்ள சிவன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு, வறியவர்களுக்கு என எல்லோருக்கும் தினமும் இலவச பாயாசம் கொடு அது போதும் " என்றார்.

இந்துக்கள் மத்தியில் பாயாசம் பிரபலமானதற்கு இந்த நிகழ்வும் ஒரு காரணம் என்றும் சொல்லப்படுகிறது. இன்றைக்கும் அம்பலப்புழா கிருஷ்ணன் கோவிலில் வருகிறவர்களுக்கெல்லாம் பாயாசம் வழங்கப்படுகிறது.

அண்டை மாநிலமான கேரளாவில் கூட நோன்புக் கஞ்சி கிடையாது, மாறாக ‘தறி’ எனப்படும் இனிப்புக் கஞ்சியை (பாயாசம்) கொண்டு நோன்பு துறக்கிறார்கள்.

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :
" நாங்கள் கைபரைப் பலவந்தமாகக் கைப்பற்றினோம். போர்க் கைதிகளெல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டபோது, அந்த கைதிகளில் நபி(ஸல்) அவர்கள் ஸஃபிய்யா என்ற பெண்ணை விடுதலை செய்து, பின்னர் அவரைத் திருமணம் செய்தார்கள்.
அதற்குப் பின் ஸஃபிய்யாவுக்கு இஸ்லாமைப் பற்றி எடுத்துக் கூற, அவரும் இஸ்லாமை ஏற்றுக் கொண்டார். நபியவர்கள் ஸஃபிய்யா (ரழி) அவர்களை உரிமைவிட்டு திருமணம் செய்து கொண்டார்கள். அவரை உரிமை விட்டதையே அவருக்குரிய மஹராக” ஆக்கினார்கள்.
மறுநாள் பேரீத்தம் பழம், நெய், மற்றும் சத்துமாவினால் செய்யப்பட்ட ஒருவகை பாயாசத்தைக் கொண்டு நபி (ஸல்) வலிமா” விருந்து அளித்தார்கள். ஸஹீஹுல் புகாரி (371) , ஜாதுல் மஆது)
அபுபக்கர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருக்கும்போது, ஒரு நாள் வீட்டிற்கு உணவருந்தச் செல்கிறார். வீட்டில் வழக்கத்திற்கு மாறாக பாயாசம் வழங்கப்படுகிறது. என்ன காரணம் ? என மனைவியிடம் கேட்டார் அபுபக்கர் (ரலி) அவர்கள்.
"உங்களின் மாத வருமானத்தில் இருந்து சிறிது சிறிதாக சேமித்து வைத்ததால், இந்த நல்ல உணவைக் கொடுக்க முடிந்தது'' என்று அவர் மனைவி கூறினாராம்.
உடனே நிதி பொறுப்பாளரை அழைத்த அபுபக்கர் (ரலி) , "என்னுடைய ஊதியத்தைக் குறைத்து விடுங்கள்'' என்று ஆணையிட்டார்கள் என்ற செய்தியைப் படிக்கும்போது, நேர்மைக்கு எடுத்துக்காட்டாக அபுபக்கர் (ரலி) அவர்கள் திகழ்ந்தை அறிய முடிகிறது.

ரஹ்மத் ராஜகுமாரன் .

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 16

மருந்து சோறு

மேலப்பாளைய உஸ்மானிய மதரஸாவின் முன்னாள் முதல்வர் ஹஜரத் பட்னன் ஆலிம்ஷா என்ற ஷாகுல் ஹமீது ஹஜரத் அவர்கள் மருந்து சோறு விருந்தைப் பற்றி சொல்லும் போது ,
"மருந்து சோறு சூட்டோடு உண்டாலும் நன்றாக ருசிக்கும் , சூடு ஆறிய பின் உண்டாலும் நன்றாக ருசிக்கும். மறுநாள் சூடு பண்ணி உண்டாலும் நன்றாகவே ருசிக்கும் "
உண்மையில் மருந்து சோறு ஒவ்வொரு வெப்பநிலையிலும் வெவ்வேறு சுவையில் ருசிக்கும் என்பதுதான் உண்மை.
மருந்து பொடி தாயர் செய்ய
சாலியன் – 100 கிராம்
சதகுப்பை – 50கிராம்
மருந்து சாதம்பட்டைகருவா – 50gm
சீரகம் – 25கிராம்
(இவை அனைத்தையும் பொடியாக அரைத்து தேவைக்கு பயன்படுத்திக்கொள்ளவும்)
மருந்து சோறு தயார் செய்ய தேவையான பொருட்கள்
பரிமாறும்: 4
புழுங்கல் அரிசி - 1/2 கிலோ
மருந்து பொடி - 2 டீஸ்பூன்
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 3 - 4 டீஸ்பூன்
பட்டை, கிராம்பு ,ஏலக்காய் தூள் - 1/2 டீஸ்பூன்
மல்லி,புதினா,கருவேப்பிலை- சிறிதளவு
நல்லெண்ணய் - 100 மில்லி
நெய்- 2 டேபிள்ஸ்பூன்
வெங்காயம்- 100 கிராம்
பச்சை மிளகாய் -3
தேங்காய்பால் - பாதி பெரிய தேங்காயில் எடுத்தது

உளுந்து - ஒரு கைபிடியளவு
கருப்பட்டி - 50கிராம் அல்லது 2 டேபிள்ஸ்பூன் சீனி
முட்டை-1
உப்பு - தேவையான அளவு
வழிமுறைகள் :-
வெங்காயம்,மல்லி,புதினா நறுக்கி வைத்து கொள்ளவும்.
புழுங்கல் அரிசியில் தான் பாரம்பரியமாக மருந்து சோறு செய்வது வழக்கம்.... நன்கு அலசி அரை மணி நேரம் ஊற வைக்கவும்.
ஒரு கைபிடியளவு உளுந்தை ஊறவைத்து வேக வைத்து தனியாகவும் வைத்து கொள்ளவும்.
ஒரு முட்டையை அடித்து வைக்கவும்.
கருப்பட்டியை பாகு எடுத்து கொள்ளவும்.
மருந்து பொடியை ஒரு கப் தண்ணீரில் கரைத்து வைக்கவும்.
தேங்காய்ப்பால் எடுத்து வைக்கவும். தேங்காய்பால் நல்ல திக்காக வேண்டுமானால் தேங்காய் அளவை கூட்டி கொள்ளவும்.
அடிகனமான பாத்திரத்தில் நல்லெண்ணெய் நெய் இரண்டும் விட்டு காய விடவும்.
நறுக்கிய வெங்காயம் வதக்கி,இஞ்சி பூண்டு, கரம் மசாலா வதக்கவும்
அத்துடன் உரித்த பூண்டு பல்லை சேர்க்கவும். மல்லி,கருவேப்பிலை, புதினா சேர்த்து வதக்கவும்.
பின்பு கரைத்து வைத்த மருந்து பொடியை சேர்த்து அடுப்பை சிம்மில் வைத்து மூடி 10நிமிடம் வேக வைக்கவும்.
தேங்காய்பாலை அரிசியின் அளவிற்கு இரண்டு அளவு எடுத்து விடவும். அரிசியின் தரம்,அளவு பொருத்து தண்ணீரின் அளவு மாறுபடும்.
உளுந்தை தனியாக வேக வைத்தும் எடுத்து வைக்கலாம்.அல்லது அரிசியுடனும் வேக வைக்கலாம்.
தேங்காய்ப்பால் நுரை கூடி வரும் பொழுது அரிசியை தட்டவும்,உப்பு போடவும்.மீடியம் தீயில் வைத்து மூடவும்.பின்பு அடுப்பை குறைத்து விடவும்.
சோறு பாதி வெந்ததும் வேக வைத்த உளுந்தை சேர்க்கவும்.
கருப்பட்டி பாகு எடுத்து வைக்கவும். சோறு வெந்து மேல் வரும் பொழுது அடித்த முட்டை, வடிகட்டிய கருப்பட்டி பாகு தேவைக்கு விட்டு ஒரு போல் சோறு குழையாதவாறு பிரட்டவும்.
மூடி போட்டு 10 நிமிடம் சிம்மில் 'தம்' போடவும்,அடி பிடிக்காதபடி பார்த்து கொள்ளவும்.திறந்து பிரட்டி விட்டு பரிமாறவும்.
வித்தியாசமான சுவையில் மருந்து சோறு தயார். மீன் குழம்புடன் பரிமாறவும்.
இதன் பலன்கள் :-
இந்த சாதத்தினை குழந்தை பெற்றவர்கள் சாப்பிடுவதால் கருப்பபை புண்கள் சீக்கரம் ஆறும், கருப்பபை ஆரோக்கியமாக இருக்கும்.
அதிகமாக உதிர போக்கு ஏற்படும் பொழுது சாப்பிடலாம்..
இந்த உணவுடன் முட்டை ,மீன் குழம்பு, அல்லது கருவாடு குழம்புடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 17
அல்வா



எந்த உணவின் பெயரைச் சொன்னாலும் ஏற்படாத ஒரு கிளுகிளுப்பு உணர்ச்சி அல்வாவுக்கு மட்டும் உண்டு. திரைப்படத் துறையினரும்,ஊடகங்களும் இத்துடன் மல்லிகை பூவையும் சேர்த்து பல வருடங்களாக ரொமான்ஸ் மூடை ஏற்படுத்தும் ஒன்றாக அல்வாவை மாற்றிவிட்டார்கள்.
கேரட். கோதுமை ,பாதாம், ஃப்ரூட் ,பூசணி ,பேரிச்சம்பழம், பப்பாளி, ராகி , மாம்பழம்.... என விரிந்து கொண்டே போகிற அல்வா வகைகள்.

மதுரைப் பக்கம் திருவிழாக்களில் கிடைக்கும் " தாதுபுஷ்டி அல்வா" எந்த ஸ்வீட் கடைக்குப் போனாலும் நிச்சயம் இது இல்லாமல் இருக்காது.மொத்தத்தில் அல்வாவின் சுவை மேல் உள்ள ரசனையின் அடையாளங்கள்.
தமிழகத்தில் எத்தனையோ ஊர்களில் பல உணவு வகைகள் பிரபலம். எனினும் ஊரு பெயரை சொன்னதுமே வேறு எதைக்காட்டிலும் அந்த ஊரின் ஸ்பெஷல் உணவு நினைவுக்கு வருவதென்னவோ திருநெல்வேலிக்குத்தான்.
பாய்ந்தோடும் தாமிரபரணி, நெல்லையப்பர் கோயில் என்று பல சிறப்புகள் திருநெல்வேலிக்கு இருந்தாலும், உங்கள் நினைவுக்கு வருவதென்னவோ அல்வாதான் .அதுவும் திருநெல்வேலி டவுண் இருட்டுக்கடை அல்வாவும், திருநெல்வேலி ஜங்ஷன் சாந்தி சுவீட்ஸ் அல்வாவும் உலக தரம் வாய்ந்ததாக பல நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது .

அல்பேனியாவில் தொடங்கி அமெரிக்கா வரை புகழ்பெற்ற இனிப்பு வகை அல்வா தான். " அரபியர்கள் தான் கண்டுபிடித்தார்கள் துருக்கியர்களை விட்டு விட முடியுமா.. அவர்களே இதன் சொந்தக்காரர்கள் " என்று பல்வேறு கருத்துக்கள் வரலாற்று பக்கங்களில் நிலவுகின்றன.
ஆனாலும் அல்வா நம் நாட்டுக்குள் வந்தது என்னவோ பல அரிய உணவுகளை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்திய முகலாயர்கள் மூலமாகத்தான்.வெவ்வேறு வடிவங்கள், பொருள்கள், முறைகளால் செய்யப்பட்டாலும் அல்வா அல்வாதான்.

மாயன் நாகரிக மக்கள்தான் சாக்லேட்டை கண்டுபிடித்தார்கள் என்று சொல்லப்படுவது உண்டு. ஆனால் உண்மையில் அது சாக்லேட் அல்ல, அது அல்வாதான் என்று வரலாற்று ஆசிரியர்கள் நிரூபிக்கிறார்கள். ஆக அல்வா கிமு 3000 முற்பட்டதாக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கணக்கிடுகிறார்கள்.
250 ஆண்டுகளுக்கு முன்பு லோகம் (Lokum) என ஒரு வகை அல்வா உண்டு. இது உருவானதற்கு ஒரு வரலாறு சொல்லப்படுகிறது.
துருக்கியில் இருந்த சுல்தான் ஒருவர் தன் மனைவியை கவர நினைக்கிறார். அவளோ உணவுப் பிரியை. அதிலும் இனிப்பு என்றால் அவளுக்கு உயிர். சுல்தான் யோசித்தார். தன் சமையல்காரரை அழைத்தார் ." என்ன செய்வியோ ஏது செய்வியோ எனக்குத் தெரியாது ,சாப்பிட்ட உடனே கிறங்கி போற அளவுக்கு ஒரு ஸ்விட் செஞ்சு கொண்டு வா" என்று கட்டளையிட்டார்.
கேட்டது எஜமானர் ஆயிற்றே கலங்கி போனார் சமையல்காரர். அந்த காலத்திலெல்லாம் எஜமானர்கள் இதற்கு என்ன தண்டனை தருவார்கள் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. சவுக்கடியா ? சிறை தண்டனையா ? எனக் குழம்பவர் எப்படியோ யோசித்து, பல பொருட்களை சேர்த்து லோகம் என்ற ஒரு அபூர்வ பண்டத்தை உருவாக்கினார்.
அதன் சுவையில் சுல்தானின் மனைவி மட்டுமல்ல ,சுல்தானே மயங்கிபோயினார். பிறகு என்ன சமையல்காரருக்கு பரிசு மழைதான் .

அல்வா செய்முறை ஒன்றல்ல இரண்டல்ல பல நூற்றுக்கணக்கான செய்முறைகள் உண்டு. இருந்தாலும் திருநெல்வேலி இருட்டு கடை அல்வா செய்வதற்கு அவர்கள் தொழில் தர்மத்தை பின்பற்றுகிறார்கள்.
இருட்டு கடை அல்வா வரலாறு எப்போது துவங்கியது?
1940களில் ராஜஸ்தானை சேர்ந்த பிஜிலி சிங் என்பவரால் துவங்கப்பட்டு இப்போது அவருடைய மூன்றாம் தலைமுறை வாரிசுகளால் நடத்தப்படுகிறது.
அல்வாவின் தனித்துவம்:
இருட்டுக்கடை அல்வாவிற்கென்று பிரத்யேக சுவை வரக் காரணம் அல்வா செய்ய பயன்படுத்தும் கோதுமையை இயந்திரத்தில் அரைக்காமல் கைகளால் தான் அரைக்கிறார்கள்.
அதுமட்டுமில்லாமல் தாமிரபரணி ஆற்றின் தண்ணீரும் இந்த அல்வாவிற்கான பிரத்தேக சுவையை தருவதாக சொல்லப்படுகிறது. கைகளால் தான் அல்வா கிண்டுகிறார்கள் என்பதால் ஒரு நாளைக்கு குறிப்பிட்ட அளவு அல்வா மட்டுமே தயார் செய்கிறார்கள்.
கடை எப்போது திறக்கப்படுகிறது?:
மாலை ஐந்தரை மணி அளவில் இருட்டுக்கடை திறக்கப்படுகிறது.திறப்பதற்கு ஒரு மணிநேரம் முன்பிருந்தே கூட்டம் கூட ஆரம்பித்துவிடுகிறது. ஏழரை மணியளவில் அன்றைக்கென தயார்செய்யப்பட்ட மொத்த அல்வாவும் விற்றுவிடுகிறது.
கடை பெயர் காரணம்:
கடை ஆரம்பிக்கப்பட்ட புதிதில் ஒரே ஒரு காண்டா விளக்கு மட்டுமே இருந்திருக்கிறது. அந்தி சாயும் நேரத்தில் தான் இது திறக்கப்படுவது வழக்கம் என்பதால் இருட்டாய் இருக்கும் கடை என்பதே காலப்போக்கில் மாறி 'இருட்டுக்கடை' என்றாகிவிட்டது.
இன்றுவரை இதற்கென தனி பெயர்பலகை கூட கிடையாது. இப்போது கண்டா விளக்குக்கு பதில் 200 வாட்ஸ் மின்விளக்கு ஒன்றுள்ளது மட்டுமே இருட்டுக்கடை எதிர்கொண்ட ஒரே மாற்றமாகும்.

நெல்லை நகரின் மையமான திரு நெல்லையப்பர் கோயிலை ஒட்டியே இருட்டுக்கடை உள்ளது. இந்த கடையில் அல்வா கால் கிலோ, அரைக்கிலோ மற்றும் ஒரு கிலோ பாக்கெட்டுகள் எப்போதும் தயாராக இருக்கின்றன என்பதால் சீக்கிரம் வாங்கி வந்துவிடலாம். அல்வாவின் விலை ஒரு கிலோ ரூ.220 ஆகும். இதுவரை திருநெல்வேலி சென்றதில்லை என்றால் நிச்சயம் இந்த அல்வாவிற்க்காகவே ஒருமுறை சென்று வரலாம். எத்தனையோ இடங்களில் 'இருட்டுக்கடை அல்வா' என்ற பெயரில் அல்வா விற்கப்பட்டாலும் இதன் தனித்துவமான சுவைக்கு நிகரே கிடையாது.

ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்களின் திருச்சமூகத்திற்கு ஒருவர் தனது சிறு வயது மகனைக் கூட்டிக்கொண்டு வந்து ,
"அல்லாஹ்வின் தூதரே! இவன் அதிகமாக இனிப்புச் சாப்பிடுகிறான். இனிப்பு அளவுக்கதிகமாகச் சாப்பிடுவது உடம்புக்கு ஆகாதென இவனுக்கு புத்திமதி கூறுங்கள்" என வேண்டி நின்றார்.
பெருமானார் (ஸல்) அவர்களோ , " இன்று போய் நாளை வாருங்கள் " என அந்த நபரை அனுப்பிவைத்தார்கள்.
இரண்டாம் நாளும் அவ்வாறே அவர்களை திருப்பி அனுப்பிவிட்டு ,
மூன்றாம் நாள் அவர்கள் வந்ததும், " மகனே! இனிப்பு அதிகமாகச் சாப்பிடுவது உடம்புக்கு கேடுவிளைவிக்கும் எனவே இனிப்பு சாப்பிடுவதை குறைத்துக் கொள்" என அந்த சிறுவனுக்கு புத்திமதி கூறினார்கள்.
அப்போது அச்சிறுவனின் தந்தை, " நாயகமே! இதை நீங்கள் முதல் நாளே சொல்லியிருக்கலாமே, இதற்காக நாம் மூன்று நாள் வந்து விட்டோம் எனக் கூறினார்.
பெருமானார் (ஸல்) அவர்கள் புன்முறுவலுடன், "ஆம் உண்மைதான். நானும் இனிப்பை விரும்பி சாப்பிடுகிறேன். முதலில் நான் அதை கட்டுப்படுத்திய பின்னரல்லவா பிறருக்கு உபதேசம் செய்யவேண்டும் அதனால் தான் இத்தனைச் தாமதம், மன்னியுங்கள்" என்றார்கள்
இது நபி (ஸல்)அவர்களின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவமாகும்.இந்தியாவின் தேசந்தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தியடிகள். சுதந்திர போராட்டத்திற்காக சிறை சென்றபோது, மாநபியின் வரலாற்றை படித்து மற்றும் கேட்டுத்தெரிந்து கொண்டார்கள்.இதே போன்ற ஒரு சம்பவத்தினை காந்தி அடிகள் தனது வாழ்நாளில் நடத்திக் காட்டினார்கள். காந்தியடிகளின் இந்த சம்பவம் மிகவும் பிரசித்தி பெற்றது.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 18

மன்னு , ஸல்வா

சமையல் கலையின் பல்வேறு கூறுகள் அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச்செல்லப் படாததால் காலப்போக்கில் மறைந்து தனது சுவையான சுவடுகளை இழந்து வருகிறது.

எனது தந்தை ஒரு சிறிய விவசாய கிராமத்தில் வாழ்ந்தவர், அவர் சாப்பிட்ட கிராமத்தின் சுவையான உணவுப் பண்டங்கள் பலவற்றை பற்றிக் கூறியுள்ளார். ஆனால் தற்போது அவைகள் கிடைப்பது மிகவும் அறிதாகிவிட்டது.

எனது தந்தை கூறியதில் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்திய ஒரு பண்டம். சம்புப்பூவின் மகரந்தத்தில் செய்யப்படும் மாவு உருண்டை.

சம்புப் பூ முதிரும் முன்பு பூவின் மகரந்தம் இருக்கும் பகுதிகளை சேகரித்து, அவற்றை நிழலில் உலர்த்தி பின்னர் தண்ணீரில் கலந்து, நன்றாக பிசைந்து, மகரந்தம் கலந்த தண்ணீரை பிரித்தெடுத்து, அந்த மகரந்த நீரை கொதிக்கவைத்து, அது மாவாக மாறும் நேரத்தில் வெல்லம் மற்றும் தேன், ஏலக்காய் சேர்த்து சிறு உருண்டை பந்தாக உருண்டை பிடித்து உண்ணக் கொடுப்பார்களாம்.

அந்த சம்புப் பூவின் மகரந்த மாவு உருண்டையை நாவில் வைத்தால் #மேகம்போல் கரைந்து விடுமாம். இந்தப் பண்டம்பற்றி எனது தந்தை கூறும்வரை நான் கேள்விப்பட்டதில்லை.

இப்படிப்பட்ட பண்டங்கள் பற்றிய தரவுகளை காலம் அழிக்கவில்லை, தகவல்கள் வெளிப்படுத்தப்படாமலும் பதிவு செய்யப்பட்டு, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லாததாலும், தமிழகத்தின் ஏராளமான உணவுபண்டங்கள் பழக்கத்தில் இருந்து மறைந்து விட்டன

என்பதாக - " World Food Travel Associtation " என்ற தளத்தில் இந்த சேதியைப் பார்த்தேன். எழுதிய நண்பரின் பெயர் தெரியவில்லை .

இந்த உணவு மகரந்த மாவு உருண்டையை நாவில் வைத்தால் மேகம்போல் கரைந்து விடுமாம் என்ற தகவலும், சமையல் கலையின் பல்வேறு கூறுகள் அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச்செல்லப் படாததால் காலப்போக்கில் மறைந்து தனது சுவையான சுவடுகளை இழந்து வருகிறது என்ற தகவலும் எனக்கு மன்னு - ஸல்வா என்ற வானுலக உணவும் அது பற்றிய தகவலும் என் நினைவுக்கு வந்தது .

நபி மூஸா (அலை) அவர்களுடன் பனீ இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறி தீஹ் என்ற பாலைவன பிரதேசத்தில் குடியேறினர்.அந்த ஒன்றும் விளையாத பாலைவனத்தில் அவர்களுக்கான உணவை வானத்திலிருந்து இறக்கியருளியதாக இறைவன் ..

"அன்றி நாம் உங்களுக்கு மேகம் நிழலிடும்படிச் செய்து, உங்களுக்காக (வானிலிருந்து “மன்னு, ஸல்வா”வை இறக்கிவைத்து நாம் உங்களுக்கு அளித்து வரும் பரிசுத்தமானவற்றை (நாளைக்கென்று பதுக்கி வைக்காமல் தினமும்) உண்ணுங்கள் என்று கட்டளையிட்டோம்., எனினும் நமக்கொன்றும் தீங்கிழைக்கவில்லை, எனினும் தமக்குத்தாமே அவர்கள் தீங்கிழைத்துக் கொண்டார்கள்”

(அல்குர்ஆன் - 2 : 57)

ஆனால் (அவர்கள் மூஸாவை நோக்கி) "மூஸாவே! ஒரே (விதமான) உணவை உட்கொண்டிருக்க எங்களால் முடியாது. பூமியில் முளைக்கக்கூடிய கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் ஆகியவைகளை வெளிப்படுத்தித் தரும்படி உங்களுடைய இறைவனை எங்களுக்காக நீங்கள் கேளுங்கள்" என அவரிடம் கேட்டார்கள்.

அதற்கு (மூஸா) "மேலானதற்குப் பதிலாகத் தாழ்ந்ததை மாற்றிக்கொள்(ள விரும்பு)கின்றீர்களா? (அவ்வாறாயின்) நீங்கள் ஏதேனும் ஒரு பட்டணத்தில் இறங்கிவிடுங்கள். நீங்கள் கேட்பது நிச்சயமாக (அங்குதான்) உங்களுக்குக் கிடைக்கும்" என்று கூறிவிட்டார். (அல்குர்ஆன் 2: 61)

“மன்னு” என்பது வெள்ளை நிறத்தினாலான தேனையொத்த திரவம்போன்ற ஒருவகை இனிப்புப்பண்டமாகும். பார்வைக்கு காளான் போன்று இருக்கும் . இது தினமும் மழைபோன்று பொழியும்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"சமையல் காளான் 'மன்னு' வகையைச் சேர்ந்தது ஆகும். அதன் சாறு கண்ணுக்கு நிவாரணமாகும். என ஸயீத் இப்னு ஸைத்(ரலி) அறிவித்தார்.ஸஹீஹ் புகாரி : 5708.

இந்த ஹதீஸிருந்து காளான் மாதிரி மன்னு இருக்கலாம் என்று காளானை படத்தில் காட்டியுள்ளேன் .

“ஸல்வா” என்பது குருவி போன்ற சமைத்த ஒருவகை அசைவ உணவாகும். சூரிய வெப்பத்தால் சூடப்பட்டு தெற்கத்தி காற்றால் இவர்களின் பிரதேசத்திற்கு கொண்டு வரப்பட்டதாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

நாளைக்கென்று பதுக்காமல், தினமும் புசித்து முடிக்க வேணடும் என்ற கட்டளையின் பிரகாரம் மன்னு,ஸல்வா தினமும் இறக்கியருளப்பட்டிருந்தது.

அல்லாஹ்வின் வாக்கில் நம்பிக்கையிழந்த சிலர் பதுக்கத் தொடங்கினர். இதன்பின் விண்ணிலிருந்து மன்னு, ஸல்வா உணவு இறங்குவது தடைப்பட்டது. பதுக்கிய உணவும் மாமிசமும் கெட்டுவிட்டது.

இதுபற்றி பின்வருமாறு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் குறிப்பிட்டார்கள்.

“இஸ்ரவேலர்கள் இல்லாதிருப்பின் உணவு, கெட்டுப்போகும் நிலை தோன்றியிருக்காது. மன்னு,ஸல்வாவை இவர்கள் பதுக்கிய நாளிலிருந்துதான் இவை கெட்டுப்போக ஆரம்பித்தன. இதற்கு முன் இப்படி ஒரு நிலை இருந்ததில்லை.

ஆதாரம் : தப்ஸீர் றூஹுல்பயான், பாகம் - 01, பக்கம் - 142

மன்னு , ஸல்வா வானிலிருந்து கேட்காமலே நாள்தோறும் இறங்கிக் கொண்டிருந்தது . இது பிற உயிரினங்களுக்கு இறைவன் உணவு அளிப்பதை விடவும் மனிதர்களுக்கு இந்த உணவுகள் மிக எளிதாக கிடைத்து வந்தது . எத்தனை சிரமங்கள் இல்லாமல் இருந்திருக்கும் .

இப்படியே உணவு வானில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தால், உலக வரலாறோ வேறு வகையில் அமைந்திருக்கும்.

நாகரிகத்தில் சிறந்த நகரங்களும் , நாடாளும் அரசுகளும் , விண்ணை முட்டும் கட்டிடங்களும் , கண்ணை கவரும் ஆடைகளும் ,வகை வகையான உணவும் , விரிந்த சாலைகளும் , பரந்த ஆலைகளும் , விண்ணிலும் , மண்ணிலும் விரைந்து செல்லும் ஊர்திகளும் , விஞ்ஞானம் விளைத்துள்ள எண்ணத் தொலையாக் கருவிகளும் இவ்வுலகத்திற்கு கிடைக்காமல் போயிருக்கும் .

இதனால் எத்தகைய வளர்ச்சியுமின்றி உலகம் வெறிச்சோடிப் போயிருக்கும் என்றொரு கருத்துக்கோள் பேசப்படுகிறது .

ஆனால் நபி (ஸல்) அவர்கள் கூற்றுப்படி பனீ இஸ்ரவேலர்கள் மன்னு - ஸல்வாவை பதுக்காமல் , மண்ணைத் தோண்டி விளையும் உணவையும் கேட்காமல் இருந்திருந்திருந்தால் , விண்ணிலிருந்து அவ்விரு உணவுகள் பூமிக்கு இறங்கிக் கொண்டே இருக்கும் .

விண்ணிலிருந்து உணவு இறங்கும் போது நம் சிந்தனையும் விண்ணை நோக்கி பறந்திருக்கும் . விவசாய நம்மாழ்வர்களின் சிந்தனையும் விண்ணுலக விவசாயத்தையும் அதன் உணவைப் பற்றியும் அல்லவா

சிந்தித்திருப்பார்கள் .

' வானில் புற்கள் முளைத்தால் நம் குதிரைகளுக்கு பறக்கும் இறக்கையும் முளைத்திருக்கும் ' என்பது பரிணாம வளர்ச்சியின் சித்தாந்தம் .

" நாம் உங்களுக்கு மேகம் நிழலிடும்படிச் செய்து " என்று (2 : 57) மேற்கண்ட குர்ஆன் வசனமும் வான் மேகத்தை குறிப்பிடுவதாலும், வானில் இருந்து மன்னு - ஸல்வா வந்து கொண்டிருப்பதாலும் , மனிதர்கள் வானத்தையும் வசப்படுத்தி இருப்பார்கள் .

வேற்று கிரகங்களும் , அதன் வாசிகளும் வந்து போவது நிதர்சனமாகும் . அடுத்த நாட்டோடு தொழிற் வளர்ச்சிக்கு ஒப்பந்தம் போடுவது போல் வேற்றுகிரக வாசிகளுடன் ஒப்பந்தம் போட்டு விஞ்ஞான வளர்ச்சியை விண்ணளவில் உயர்த்தியிருப்போம் .

பால் வீதிகளில் நட்சத்திரங்களுடன் நாமும் பயணித்திருப்போம் . விஞ்ஞானக் கனவுகள் விண்ணையும் தாண்டி பறந்திருக்கும்

எதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும் .

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 19
(காய்கள், கனிகளின் வண்ண வண்ண உணவுகள்)



இன்று நாம் என்ன உண்ணப்போகிறோம் என்ற கேள்வி பலரின் முன்னும் வந்துபோகும் ஒன்று. அதை அந்த நேரத்தில் கிடைக்கும் காய்கறி, கனிகளைக் கொண்டோ, நமக்கு இருக்கும் நேரத்தைக் கொண்டோ நாம் முடிவு செய்து கொள்வோம். ஆனால் நான் உண்ணும் உணவு சத்தானதா என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?

நமது உணவு பலதரப்பட்டதாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். அதற்கு ஒரு வழி, அதிக வண்ணங்கள் நிறைந்த உணவை உண்பது. ஆனால் அவ்வாறு பல வண்ணங்களால் ஆன உணவை உண்டால் மட்டும் நாம் ஊட்டச்சத்து மிக்க உணவை உண்கிறோம் என்று அர்த்தமா ?
ஆரோக்கியமான மெடிட்டரேனியன் டயட்
அதற்கு ஓர் ஆதாரம் மெடிட்டரேனியன் டயட் (மத்திய தரைக்கடல் உணவுமுறை). இந்த உணவுமுறையில் பலவகையான பழங்கள், காய்கறிகள் மற்றும் உடல்நலத்துக்கு உகந்த கொழுப்புகள் இருக்கும்.
மெடிட்டரேனியன் உணவுமுறை பற்றி உங்களுக்குத் தெரியுமா? சொல்றேன்
மன நலத்துடன் மகிழ்ந்திருக்க என்ன உணவுகளை உண்ண வேண்டும்? இந்த உணவுமுறையை அறிவியலாளர்கள் உடல்நலத்துக்கு உகந்த உணவுமுறை என்று கருதுகிறார்கள்.
இந்த உணவுமுறையில் பலவகையான பழங்கள், காய்கறிகள் இருப்பதாலேயே அது பல வண்ணங்கள் கொண்ட்தாகவும் உள்ளது.
பாரம்பரியமான மத்திய தரைக்கடல் உணவுமுறையை உண்பது நீங்கள் நிறைய ஊட்டச்சத்துக்கள் மற்றும் பைடோநியூட்ரியன்ட்ஸை (pytonutrients) எடுத்து கொள்கிறீர்கள் என்று அர்த்தம். இந்த பைடோநியூட்ரியன்ட்ஸ் உடலில் உள்ள தேவையற்ற கழிவை நீக்க உதவும்.
அதேபோன்று இந்த உணவுமுறையை ஆரோக்கியமானது என்று சொல்வதற்கு மற்றொரு காரணம், இந்த உணவுமுறையில் காய்கறிகளை எண்ணையில் வதக்காமல், வேக வைப்பார்கள் அது காய்கறியில் உள்ள ஊட்டச்சத்தை பாதுகாக்கிறது.
ஏன் அதிக வண்ணங்கள் கொண்ட உணவை உண்ண வேண்டும்?
அதிக வண்ணங்கள் கொண்ட உணவை உண்பது மூலம் உங்களுக்கு பலவிதமான ஊட்டச்சத்துகள் கிடைக்கலாம்.
அதிக பழம் மற்றும் காய்கறிகள் கொண்ட உணவை உண்பதால் நமது மூளை மற்றும் இதயத்திற்கு ஏற்படும் நன்மைகள் குறித்து பல்வேறு கண்டுபிடிப்புகள் உள்ளன என்கிறார் அமெரிக்க மாகாணமான ஓரிகனில் உள்ள யூனிவர்சிட்டி ஆஃப் வெஸ்டன் ஸ்டேட்ஸின் ஊட்டச்சத்து நிபுணர் டென்னா மினிச்.
ஒவ்வொரு நிறத்தினால் ஆன தாவரங்களில் ஒவ்வொரு நன்மைகள் உள்ளன.

"சில தாவரங்களின் நிறமிகள் உடலில் சில பகுதிகளுக்கு சென்று அங்கேயே தங்கிவிடும் என்கிறார் முனிச். எடுத்துக்காட்டாக மஞ்சள் மற்றும் பச்சை நிற உணவுகளில் காணப்படும் லுடீன் கண்ணின் பின்புறத்தில் இருக்கும் மாக்குலா என்ற பகுதியில் தங்கிவிடும். அது பார்வை இழப்பை தடுக்கும்."
பீட்ரூட் இரத்த நிறுத்தில் இருப்பதால் இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்க்கு வரப்பிரசாதமாக இருக்கிறது
பீட்ரூட் ஜூஸ் குறைந்த இரத்த அழுத்தத்திற்கு உதவுகிறது. தினமும் 8 அவுன்ஸ் வரை பீட்ரூட் ஜூஸ் குடிப்பவர்கள் சிஸ்டாலிக், டயஸ்டோலிக் போன்ற இரத்த அழுத்தத்தை குறைக்கிறது.
பீட்ரூட் ஜூஸில் உள்ள நைட்ரேட்ஸ் பொருள் இரத்தத்தில் கலக்கும் போது நைட்ரிக் அமிலமாக மாறுகிறது. இது இரத்த நாளங்களை ரிலாக்ஸ் செய்கிறது.

அதனால் உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூட சொல்லலாம். தினமும் அல்லது இரண்டு நாளைக்கு ஒரு முறை இந்த பீட்ரூட் ஜூஸை குடித்து வரலாம். உயர் ரத்த அழுத்தம் வேகமாக கட்டுக்குள் வருவதை உங்களால் உணர முடியும்.
அதேபோன்று ஃபளாவோனாய்ட் என்ற பைடோநியூட்ரியண்ட் மூளை நலமுடன் இருக்க உதவுகிறது.
50 ஆயிரம் பேரின் உணவு பழக்கத்தை 20 வருடத்திற்கும் மேல் ஆராய்ந்தார் ஹாவார்ட் டிஎச் சான் பொது சுகாதார பள்ளியின் தொற்றுநோயியல் ஆராய்ச்சியாளர் டியான் ஷின் யே.
அவரின் ஆராய்ச்சியின் மூலம் அதிக ஃபளாவோனாய்ட் உணவை எடுத்து கொள்பவர்களுக்கு டிமென்சியா ஆபத்தும், அறிவாற்றல் குறையும் ஆபத்தும் குறைவு என்கிறார். இந்த ஃபளாவோனாய்ட் ஆரஞ்சு, மிளகு, திராட்சை ஆகியவற்றில் அதிகம் உள்ளது.
ஆனால் தொடர்ந்து 20 வருடங்கள் இம்மாதிரியான உணவை எடுத்து கொள்பவர்களுக்குதான் அதிக பயன் என்றும் தெரியவந்துள்ளது.
அதேபோன்று அதிக நிறங்கள் கொண்ட உணவை உண்பது ஒரே உணவை உண்ணும் ஆபத்தையும் குறைக்கும்.

"அதே சமயம் உணவு என்பது புரிந்து கொள்ள சற்று கடினமானதாக இருக்கும். ஆரஞ்சு பழச்சாறு அறிவாற்றல் குறையும் ஆபத்தை குறைக்கும் ஆனால் அதே சமயம் அதிகமாக எடுத்தால், அது டைப் 2 நீரிழிவுக்கு வழிவகுக்கும்," என்கிறார் டியான் ஷின் யே. இது அதிகப்படியான சர்க்கரை உடலில் சேர்வதால் நேர்கிறது.
வெறும் பழம் மற்றும் காய்கறிகள் அல்ல, அதிக நிறங்கள் கொண்ட உணவை உண்பது என்றால் பழங்கள் மற்றும் காய்கறிகளை மட்டும் உண்பதில்லை. விதைகள், கொட்டை வகை, மூலிகை தாவரம், சிறுதானியங்கள் ஆகியவையும் அடங்கும். அதேபோன்று வெள்ளை நிற உணவும் அதில் அடங்கும் என்கிறார் முனிச்.
அதற்கு எடுத்துக்காட்டாக டோஃபுவை சொல்கிறார். அதில் ஏகப்பட்ட ஐசோஃப்ளாவோன்ஸ் (isoflavones) உள்ளது. இது இதய நோய், சில வகையான புற்றுநோய் மற்றும் அறிவாற்றல் குறைவு ஆகிய பாதிப்பை குறைக்கிறது.

இம்மாதிரியான அதிக நிறங்கள் கொண்ட உணவை உண்ண மக்களை வலியுறுத்தினால் அவர்கள் அதிக சத்தான உணவை உண்பதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
ஏற்படும் பாதிப்புகள் என்னென்ன?
ஆனால் அதிக செயற்கை நிறங்கள் கொண்ட உணவை உண்பது ஆரோக்கியமற்ற உணவை உண்ணும் ஆபத்தையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கின்றனர் நிபுணர்கள்.
பிசாவில் அதிக நிறங்கள் காணப்பட்டால் அதை நாம் அதிகம் உண்போம். அதேபோன்று அதிக நிறங்கள் என்று சொல்லும்போது செயற்கையான நிறங்கள் ஏற்றப்பட்ட உணவுகளை நாம் தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று எச்சரிக்கின்றனர் நிபுணர்கள்.
நிறத்தில் கவனம் செலுத்துவதை போல நாம் சுவையில் கவனம் செலுத்தலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

கசப்பு உணவுகளை 12 வாரங்களுக்கு எடுத்து கொண்டவர்களை ஆராய்ந்ததில் ரத்த அழுத்தம் மற்றும் சக்கரை அளவு குறைந்தது தெரியவந்தது. இதற்கு அதில் உள்ள சார்ச்சத்து மற்றும் பைடோநியூட்ரியண்ட்ஸ் காரணம்.
அதேபோன்று வேர் காய்கறிகள், முட்டைகோஸ் போன்ற ஆன்டி ஆக்சிடண்ட் அதிகம் உள்ள உணவை எடுத்து கொள்வதும் பயனளிக்கும் என்கிறது ஆய்வு. இந்த ஆன்டி ஆக்சிடெண்ட்கள் உடலில் உள்ள செல்கள் சேதமடைவதை தடுக்கிறது.
அதேபோன்று ஒரு தாவரத்தின் எந்த பகுதியை நாம் உண்கிறோம் என்பதும் முக்கியம் என்கிறார் டியான் ஷின் யே.
فَلَمَّا سَمِعَتْ بِمَكْرِهِنَّ اَرْسَلَتْ اِلَيْهِنَّ وَاَعْتَدَتْ لَهُنَّ مُتَّكَـاً وَّاٰتَتْ كُلَّ وَاحِدَةٍ مِّنْهُنَّ سِكِّيْنًا وَّقَالَتِ اخْرُجْ عَلَيْهِنَّ‌ ۚ فَلَمَّا رَاَيْنَهٗۤ اَكْبَرْنَهٗ وَقَطَّعْنَ اَيْدِيَهُنَّ وَقُلْنَ حَاشَ لِلّٰهِ مَا هٰذَا بَشَرًا ؕ اِنْ هٰذَاۤ اِلَّا مَلَكٌ كَرِيْمٌ
அப் பெண்களின் பேச்சுக்களை (அஜீஸின் மனைவி) கேட்டபோது (விருந்திற்காகச்) சாய்மானங்கள் சித்தம் செய்து அப் பெண்களுக்கு அழைப்பனுப்பினாள்; (விருந்திற்கு வந்த) அப் பெண்களில் ஒவ்வொருத்திக்கும் (பழங்களை நறுக்கித் தின்பதற்காக) ஒரு கத்தியும் கொடுத்தாள். “இப் பெண்கள் எதிரே செல்லும்” என்று (யூஸுஃபிடம்) கூறினாள்; அப் பெண்கள் அவரைப் பார்த்ததும் (அவரழகில் மயங்கி) அவரை மிக மேன்மையாகக் கண்டார்கள். (அவர் அழகில் மெய் மறந்து) தம் கைகளையும் வெட்டிக்கொண்டனர்: “அல்லாஹ்வே பெரியவன்; இவர் மனிதரே அல்லர்! இவர் மேன்மைக்குரிய ஒரு மலக்கேயன்றி வேறில்லை” என்று கூறினார்கள்.
(அல்குர்ஆன் : 12:31)

தோழிகளுக்கு நறுக்கி தின்பதற்காக கொடுக்கப்பட்ட பழம் துரியன் பழம் என்று குர்ஆன் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். காரணம் இந்தப் பழத்தை நேரடியாக கடித்து தின்ன முடியாது கத்தியால் வெட்டிதான் சாப்பிட முடியும்.

துரியன் பழத்தில் கால்சியம், மாங்கனீசு, கரோட்டின், கொழுப்பு, இரும்புச்சத்து, ரிபோஃப்ளேவின், கார்போஹைட்ரேட், தாமிரம், போலிக் ஆசிட், வைட்டமின் சி, நார்ச்சத்து, துத்தநாகம், நியாசின், புரதம், பாஸ்பரஸ், பொட்டாசியம், மக்னீசியம் உள்பட பல சத்துக்கள் நிறைந்துள்ளது.
மேலும் வாழைப்பழத்தை விட 10 மடங்கு அதிகமாக இரும்புச்சத்து, பாஸ்பரஸ் நிறைந்துள்ளது.
துரியன் பழத்தின் சதைப் பகுதியை சாப்பிட்டால், மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்தலாம்.
துரியன் பழத்தில் மாங்கனீசு அதிகம் இருப்பதால், அதனைச் சாப்பிட்டால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை சீராக வைக்கலாம்.

துரியன் மரத்தின் வேர் மற்றம் இலைகளை தண்ணீருடன் சேர்த்து பருகுவதால், காய்ச்சலில் இருந்து குணம் பெறலாம்.
ஆரோக்கியமான மூட்டுகள் துரியன் பழத்தில் உள்ள வைட்டமின் பி, பொட்டாசியம் மற்றும் கால்சியம், மூட்டுகள் மற்றும் எலும்புகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவியாக இருக்கும்.
கொசுக்கடி துரியன் பழத்தின் தோல், கொசுக்கடியைத் தடுக்க உதவும்.
துரியன் பழத்தில் இரும்பு மற்றும் ஃபோலிக் ஆசிட் அதிகளவு இருப்பதால், இதனைச் சாப்பிட இரத்த சோகையை குணமாகும்.

முதுமை தோற்றம் இளமையிலேயே முதுமை தோற்றத்தில் காணப்படுபவர்கள், துரியன் பழத்தை சாப்பிட்டு வந்தால், அதில் உள்ள வைட்டமின் சி சத்தால், முதுமைத் தோற்றத்தை தடுக்கலாம்
மன இறுக்கம் மன அழுத்தம் மற்றும மன இறுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுன் துரியன் பழம் மிகவும் சிறந்தது. ஏனெனில் இதில் ஃபைரிடாக்ஸின் என்னும் பொருள் அதிகம் நிறைந்துள்ளது.
தைராய்டு பிரச்சனை உள்ளவர்கள், இந்த பழத்தை சாப்பிட்டு வந்தால், தைராய்டு சுரப்பியானது சீராக இயங்கும்.
ஒற்றை தலைவலி ஒற்றைத் தலைவலியால் அவஸ்தைப்படுபவர்களுக்கு, துரியன் பழம் ஒரு நல்ல நிவாரணத்தைக் கொடுக்கும். ஏனெனில் இதில் ஒற்றைத் தலைவலியைப் போக்கும் ரிபோஃப்ளேவின் அதிகம் நிறைந்துள்ளது.

பல் பிரச்சனைகள் துரியன் பழத்தில் பாஸ்பரஸ் அதிகம் நிறைந்திருப்பதால், அதனைச் சாப்பிட பற்கள் ஆரோக்கியமாக இருக்கும்.
பசியின்மை பசியின்மை பிரச்சனை உள்ளவர்கள், இந்த பழத்தை சாப்பிட்டால், அதில் நிறைந்துள்ள தயமின் மற்றும் நியாசின் பசியைத் தூண்டும்.
மலச்சிக்கல் துரியன் பழத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், இதனை சாப்பிட மலச்சிக்கல் பிரச்சனையை குணப்படுத்தலாம்.

சொறி சிரங்கு பிரச்சனை இருந்தால், துரியன் பழத்தின்
தோலை அரைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ குணம் ஆகும்
மிகவும் முக்கியமான பெண்கள் கவனிக்க வேண்டிய குறிப்பு !
பலவீனமான கருப்பை பொதுவாக கருப்பை பலவீனமாக இருந்தால் கருத்தரிக்க முடியாது. ஒருவேளை கருத்தரித்தாலும், சில நாட்களில் கலைந்துவிடும். எனவே இத்தகைய பிரச்சனை உள்ள பெண்கள், துரியன் பழத்தை சாப்பிட்டு வந்தால், கருப்பை பலமாகி, ஆரோக்கியமாக ஒரு அழகான குழந்தையைப் பெற்றெடுக்கலாம்.
இந்தப் பழத்தைப் சற்று கவனித்துப் பாருங்கள். கர்ப்பப்பையில் குழந்தை இருப்பது போன்று பழம் இருக்கும்.

முக்கியமான குறிப்பு ஆண்கள் கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு ! விந்தணுக்கள் குறைபாடு ஆண்கள் துரியன் பழத்தை சாப்பிட்டால், விந்தணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 20

பிராய்லர் கோழி



🔶பிராய்லர் கோழி வளர்க்க 12 விதமான கெமிக்கல்கள் பயன்படுத்துகின்றனர். இவை அவற்றின் உணவின் மூலம் சேர்க்கப்பட்டு அளிக்கப்படுவதால் அதை உண்ணும் மனிதர்களுக்கும் ஆரோக்கிய கேடு விளையும் என கூறுகின்றனர்.

🔶பிராய்லர் கோழியை விரும்பி சாப்பிடும் நமக்கு எலும்புகளில் இருக்கும் சத்து முற்றிலும் அழிகிறது, மஞ்சள் காமாலை, இரைப்பை, கல்லீரல் செயலிழப்பு என்று வியாதிகளின் எண்ணிக்கையை அடுக்கலாம்.

🔶ஊசிகளின் மூலமாக பிராய்லர் கோழிகள் தசை வளர்ச்சி ஏற்றப்படுவதால்.

இது ஆண்களின் விந்தில் உள்ள உயிரணுக்கள் அழிக்கும் கருவியாக மாறுகிறது.

🔶பிராய்லர் கோழி முட்டையில் வெள்ளை கரு அதிகமாகவும் மஞ்சள் கரு குறைவாகவும் இருக்கும். இதனால், பிராய்லர் கோழி முட்டை உங்களுக்கு எந்தவிதமான ஊடச்சத்தையும் அளிக்காது.

🔶மாதவிடாய் சுழற்சி கோளாறுகள், நாட்கள் தள்ளி போவது, சரியான நேரத்தில் மாதவிடாய் ஏற்படாமல் போவது. பெண்கள் மத்தியில் இளம் வயதிலேயே கர்ப்பப்பை வலுவிழப்பதற்கும், ஆரோக்கியம் ரீதியான பிரச்சனைகள் உண்டாக பிராய்லர் கோழி காரணமாக இருக்கிறது.

🔶மிக குறைந்த வயதிலேயே பெண்கள் பருவம் அடைவது. பெண்கள் முற்றிலுமாக சிறுவயது முதலே பிராய்லர் கோழியை தவிர்க்க வேண்டியது அவசியம். மேலும், பிராய்லர் கோழி ஆண், பெண்கள் உடலில் பல்வேறு ஹார்மோன் ரீதியான பிரச்சனைகள் உண்டாகவும், உடல் எடை அதிகரிக்கவும் முக்கிய காரணியாக இருக்கிறது.

🔶உடல் பருமன்

பிராய்லர் கோழியில் அதிக அளவு கெட்ட கொழுப்புகள் அடங்கியுள்ளது.இதனை நீங்கள் அடிக்கடி உண்டு வந்தால் உங்களுக்கு உடல் பருமன், இரத்த அழுத்தம், இருதய கோளாறு போன்ற பிரச்சினைகள் ஏற்படுத்தும். எனவே பிராய்லர் கோழியை அறவே தவிர்த்திடுங்கள்.

🔶புற்று நோய் ஏற்பட வழி வகுக்கும்

பிராய்லர் சிக்கனை அடிக்கடி உண்டு வருபவர்களுக்கு புற்று நோய் ஏற்படுவதாக பலவித ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்க்கு முக்கிய கரணம் தந்தூரி சிக்கன் மற்றும் கிரில் சிக்கன் போன்றவற்றை அதிக வெப்பத்தில் சமைத்து உண்பது.

எனவே தந்தூரி மற்றும் கிரில் சிக்கனை அடிக்கடி உண்பதை தவிர்த்திடுங்கள்.

🔶ஆண்களின் மலட்டு தன்மை

தற்பொழுது மிகவும் பொதுவாக உள்ள பிரச்சினை ஆண்களின் மலட்டு தன்மை ஆகும். இதற்க்கு முக்கிய காரணம் அடிக்கடி பிராய்லர் கோழியினை உண்பது ஆகும். இதை வளர்ப்பதற்காக உபயோகிக்கப்படும் வேதிப்பொருட்கள் மற்றும் ஹர்மோன்கள் ஆண்களின் இனப்பெருக்க சக்தியினை பாதிக்கின்றது.

🔶பறவை காய்ச்சல்

தற்பொழுது பரவலாக ஏற்படும் பறவை காய்ச்சல் முக்கியமாக பிராய்லர் கோழியின் மூலமாக தான் பரவுகின்றது. எனவே இதனை உண்ணும்பொழுது பார்த்து உன்ன வேண்டும் நண்பர்களே.

🔶தேவையற்ற ஆண்டிபயாடிக் உடலில் சேரும்

பிராய்லர் சிக்கனை தினமும் உண்டு வந்தால் உங்கள் உடலில் அதிக அளவில் ஆண்டிபயாடிக் சேரும். இதற்க்கு கரணம் அவை வளரும் பொழுது அவற்றின் வளர்ச்சிக்காக சேர்க்கப்படுகின்ற ஆண்டிபயாடிக் ஒரு முக்கிய கரணம் ஆகும்.

🔶விரைவில் பூப்படைய செய்யும்

பிராய்லர் சிக்கனின் வளர்ச்சிக்காக சேர்க்கப்படும் கெமிக்கல் பெண்களை விரைவில் வயதடைய செய்யும். முக்கியமாக இதில் சேர்க்கப்படும் வளர்ச்சி ஹார்மோன் பெண்களை 12 வயதிற்குள் பூப்படைய செய்கின்றது.

🔶பாக்டீரியாக்கள்

பிராய்லர் கோழியில் அதிக அளவு பாக்டீரியாக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது.இதனை சரியாக சமைக்காமல் உண்டால் நமது உடலில் பாக்டீரியாக்கள் சேரும். எனவே இதனை அறவே தவிர்த்திடுங்கள்.

🔶கோழிகளுக்கு அதிக அளவு ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகளை கொடுப்பதால் அதை சாப் பிடும் மனிதர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவதோடு பல்வேறு வகையான உடல் உபாதைகளை தோற் றுவிக்கிறது. இன்றைக்கு நாம் அதிக அளவு லெக் பீஸைத்தான் விரும்பி சாப்பிடுகிறோம்.

அமெரிக்க கம்பெனிகளும் லெக் பீஸைதான் நம்மிடம் முன்னிறுத்துகிறது. அதிலிருக்கும் அரசியல் மிக முக்கியமானது. கோழிகளின் கால்பகுதியில் அதிக அளவு கொலஸ்ட்ரால் கன்ட்டன்ட் இருக்கிறது. வயிற்று பகுதியில் குறைவாகத்தான் இருக்கிறது. அதனால்தான் அமெரிக்கர்கள் கோழிக்கால்களை சாப்பி டமாட்டார்கள். உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கோழிக்கால்களை அவர்கள் வெறும் கழிவு பொருளாகத் தான் கருதுகிறார்கள்.

பெரிய பெரிய நிறுவனங்கள் விளம்பரங்களின் மூலம் நம்மை நம்மை கோழி கால்களுக்கு அடிமைப்படுத் திவிட்டார்கள். கோழிக்கறி என்றாலே லெக் பீஸ்தான் நம் நினைவுக்கு வருகிறது. அந்த லெக்பீஸ் நமக்கு மிக விரைவில் ரத்த அழுத்ததை ஏற்படுத்திவிடும். பிராய்லர் கோழிகளால் ஏற்படும் தீமைகளை #supersize என்கிற ஆவணப்படத்தில் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிராய்லர் சிக்கனுக்கு பதிலாக நீங்கள் நாட்டுக்கோழி, மற்றும் மீனினை உட்கொண்டு வாருங்கள். இப்படி உண்டு வந்தால் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.

فَلْيَنْظُرِ الْاِنْسَانُ اِلٰى طَعَامِهٖۤ

மனிதன் தன்னுடைய உணவை (அது எங்கிருந்து எவ்வாறு வருகின்றது என்பதைச்) சிறிது கவனித்துப் பார்க்கவும்.

(அல்குர்ஆன் : 80:24)

நோய்த் தீர்வு பதிவு தளத்திலிருந்து ர.ரா

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 21
காடி நீர் - Vinegar வினிகர்..



ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது கையைப் பிடித்துத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.
அப்போது நபி (ஸல்) அவர்களிடம், (அங்குள்ள ஒருவர்) ரொட்டித் துண்டைக் கொடுத்தார்.
நபி (ஸல்) அவர்கள், "குழம்பேதும் இல்லையா?" என்று கேட்டார்கள்.
வீட்டார், "இல்லை, சிறிது காடியைத் தவிர வேறெதுவுமில்லை" என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள், "காடிதான் குழம்புகளில் அருமையானது" என்று கூறினார்கள்.
ஜாபிர் (ரலி) அவர்கள், "இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியதைக் கேட்டதிலிருந்து நான் காடியை விரும்பி(ச் சாப்பிட்டு)க்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்கள். ஸஹீஹ் முஸ்லிம் : 4170.
காடி செய்யும் விதம்:
ஒரு பெரிய பாத்திரத்தில் கால் படி கருங்குருவை அரிசியை சமைத்து கஞ்சியும் சாதமும் இரண்டையும் கொட்டி 6 படி சுத்தநீர் விட்டு துணியால் வாய்கட்டி சூரிய புடத்தில் வைத்துவர வேண்டும்.
வாரத்திற்கு ஒரு முறை வேறு பாத்திரத்தில் மாற்றி விட வேண்டும் இப்படி ஒரு மாதம் கழிந்தபின் பார்க்க முதலில் போட்ட அன்னமானது காணப்படாது அந்த சமயம் மறுபடியும் கால் படி அன்னம் சமைத்து அதில் கலந்துவிட வேண்டும்.
கலந்தபின் நாள் தவறாமல் சூரிய புடத்தில் வைப்பதுவும் வாரத்திற்கு ஒரு முறை பானை மாற்றுவதுவும் முக்கியமாய் கவனித்தல் வேண்டும்.
இதன்படி மாதம் ஒருமுறை அன்னம் சமைத்து கலந்து கொண்டு வரவேண்டும் இப்படி செய்துகொண்டு வருங்காலத்தில் மூன்று மாதத்திற்கு மேல் அந்த காடியை உபயோகித்து வரலாம்.
எவ்வளவு காடி எடுத்து கொள்ளுகின்றோமோ அவ்வளவு நீரை அதில் கலந்துவிட வேண்டும் இப்படி கலந்து வருவதால் எத்தனை ஆயிரம் பேருக்கு நாம் கொடுத்தாலும் காடி குறைந்துவிடாது ஆறு மாதத்திற்கு பின் காடியில் அதிக புளிப்பு ஏறிவிடும். ஆகையால் 4 நாளைக்கு ஒரு முறை பானை மாற்றுதல் வேண்டும்.
மழைக்காலங்களில் சூரிய புடத்தில் வைக்க இயலாத காரணத்தால் காடியில் பூசணம் பிடிக்காதபடி தடுக்க சமையல் செய்த பிறகு அடுப்பில் உள்ள நெருப்பை எடுத்து விட்டு அடுப்பின் மேல் காடியை வைத்து விட வேண்டும் இப்படி செய்ய காடி கெடாமல் இருக்கும்.
காடிக்கு அதிக நாள் ஏற ஏற புளிப்பு அதிகரிக்கும்.புளிப்பு அதிகரிக்க அதிகரிக்க கொடுக்க வேண்டிய அளவை குறைத்தல் வேண்டும் ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காடியானது பௌர்ணமி தினத்தில் இரவில் ஒருவித சப்தத்தை உண்டு பண்ணும் .

காடியால் தீரும் வியாதி:
வயிற்று வலி, நீர் கடுப்பு ,மார்வலி, உஷ்ண பேதி ,அஜீரண பேதி ,விஷ பேதி முதலிய வியாதிகள் நீங்கும் சரீரத்திலுள்ள வெக்கையை போக்கும் .
காடி நீர் என்பது நம் நாட்டில் பழமையான ஒரு பெரிய மருந்து .
கடையில் விற்கும் காடியானது சர்க்கரையை வாணலில் போட்டு வறுக்க வறுக்க ஒருவித கருநிறமாக மாறிவிடும். அப்பொழுது அசிட்டிக் ஆசிட் வேண்டிய அளவிற்கு சேர்த்து நீரைக் கொட்டி வடிகட்டி புட்டியில் பதனம் பண்ணி விற்கப்படுவதே காடி ஆகும்.
இந்த காடியும் புளிப்புள்ளதாக காணப்படும்.இந்த காடியை வாங்கி ஊர்காய்களுக்கும் மற்றும் மருந்தின் பிரயோகங்களுக்கும் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். எனவே கடையில் விற்கும் காடியானது முன்னோர்கள் சொல்லி வைத்த காடி அன்று ஆனால் இது உடலுக்கு பெரும் தீங்கை விளைவிக்கும் என்று கூறப்படுகிறது.
ரஹ்மத் ராஜகுமாரன் .

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 22

சமோசா



எல்லா டீக்கடைகளிலும் தவறாமல் காணப்படும் ஒரு நொறுக்குத்தீனி சமோசா. 'மூணு பத்து ரூபாய் ' என குட்டியூண்டு சைஸில் பேப்பர் கவரில் விற்கப்படுவது தொடங்கி ,உள்ளங்கைகொள்ளாத சைஸ் வரை விதவிதமான சமோசாக்கள் உள்ளன.
சினிமா தியேட்டர்களில் இடைவேளையில் சமோசா கடித்து டீ குடிக்காத தமிழ் ரசிகர்கள் வெகு குறைவு
மதுரை பக்கம் வெதுவெதுப்பான சூட்டில் வெங்காய மசாலா வைத்து பரிமாறப்படும் 'சம்சா' அலாதிச் சுவை கொண்டது.
சென்னை சவுகார்பேட்டை பகுதியில் மொறுமொறு சுவையுடன் பச்சைச் சட்னி, சாஸுடன் கிடைக்கும் வட இந்திய வகைக்கு பிரத்யேக ரசிகர்கள் இருக்கிறார்கள்.
சென்னையில் பல இடங்களில் சமோசா - சுண்டல் காம்பினேஷனில் மயங்கிக் கிடக்கிறார்கள் இருக்கிறார்கள்.

திருநெல்வேலி ஜங்ஷன் பழைய பஸ் ஸ்டாண்ட் எதிர்புறம் அமைந்துள்ள நியாஸ் ஹோட்டலில் கறிசம்சா ரொம்பவும் பிரமாதமாக இருக்கும்.மாலை 3 மணி to 5 மணிக்குள் விற்று தீர்ந்துவிடும். கறி சம்சாவுடன் ஒரு பாயா ஆர்டர் செய்து, ஒரு கடி ஒரு குடி.. இரவு 10 மணிக்கும் மேலாக தாக்குப் பிடிக்கும்.(பின்னூட்டத்தில் கடை)
'சமோசாவும் நம் ஆரோக்கியமும்' என்கிற பக்கத்துக்குப் போவதற்கு முன்னால், இதன் வரலாற்றை மேம்போக்காக ஒரு புரட்டுப் புரட்டிவிடலாம். `சமோசா', மட்டுமல்ல... ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு பகுதியிலும் அழைக்கப்படும் இதன் பெயர், மலைப்பைத் தருகிறது.
சமஸ்கிருதத்தில், `கட்டக்கா', பெங்காலியில் `ஷிங்காரா', உஸ்பெஸ்கிஸ்தானில் `சொம்சா', அரபியில் `சம்புசாக்', பர்மிய மொழியில் `சமோஷா'!
சப்பாத்திக்கு இடுவது மாதிரி, கோதுமை மாவை (மைதாவும் இப்போது சேர்க்கப்படுகிறது) இட்டு, அதில் மசாலா வைத்து முக்கோணமாக மடித்துப் பொரித்து எடுத்தால், அது சமோசா.
சைவம் எனில் மசாலாவில் வேகவைத்த உருளைக்கிழங்கு, பட்டாணி, பச்சைமிளகாய், வெங்காயம், இன்னும் சில வாசனைப் பொருள்கள் கலந்தும் மசாலா தயாரிக்கிறார்கள்.
அசைவம் எனில், இறைச்சியில் செய்யப்பட்ட மசாலா! இந்தியாவில் பெரும்பாலும் சைவ சமோசாதான் புழக்கத்தில் இருக்கிறது.

கடந்த எட்டு நூற்றாண்டுகளாக தெற்காசிய சமையலில் சமோசா வெகு பிரபலம். என்றாலும், `இதன் பூர்வீகம் எது?' என்றால், மத்தியக் கிழக்கு நாடுகளைத்தான் காட்டுகிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். ஈரானிய வரலாற்றியலாளர் அபுல்ஃபாஸல் பேஹாக் (Abulfazl Beyhaqi), `தாரிக்-ஏ பேஹாக்' (Tariq-e Beyhaqi) என்ற வரலாற்று நூலில், 10-ம் நூற்றாண்டுக்கு முன்னரே சமோசா இருந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்.
13, 14-ம் நூற்றாண்டில்தான் வியாபாரிகள் மூலமாக இந்தியாவுக்குள் மூக்கை நுழைத்திருக்கிறது சமோசா. ?அப்படி அல்ல... டெல்லி சுல்தான்களுக்காக சமைக்க வந்த மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளைச் சேர்ந்த சமையல்காரர்கள்தான் இதை அறிமுகப்படுத்தினார்கள் என்றும் சொல்கிறார்கள்.
டெல்லி சுல்தான்கள் சபையில் இருந்த அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ரோ (Amir Khusro), உலகைச் சுற்றிவந்த யாத்ரீகர் இபின் பதூதா (Ibn Battuta)... எனப் பலரும் சமோசா பற்றிய குறிப்பை எழுதிவைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். முகமது பின் துக்ளக்கின் அரண்மனைச் சமையலில் சமோசாவுக்கும் இடம் இருந்ததாகச் சொல்கிறார் இபின் பதூதா.

ஆரம்பத்தில் படைவீரர்கள், வியாபாரிகள், ஊர் ஊராகப் பயணம் செய்கிறவர்கள் இரவில் தங்க நேரிடும்போது, சமோசாக்களை செய்து வைத்துக்கொள்வார்களாம். அடுத்த நாளில் பகல் உணவுக்கு உபயோகப்படும் என்பதற்காக இந்த ஏற்பாடு.

அரசர்கள், சுல்தான்களுக்கு மட்டுமல்ல... சாமான்யர்களுக்கும் பிடித்த நொறுக்குத்தீனி சமோசா. இந்தியாவில் இது அறிமுகமானபோது, உத்தரப்பிரதேச மாநில மக்கள், அதை சைவ வடிவத்துக்கு மாற்றி ஏற்றுக்கொண்டார்கள்.

சில நூற்றாண்டுகளிலேயே சமோசா இந்தியாவில் பிரபலமாகிவிட்டது. வட இந்தியாவில் சமோசா மாவுக்குப் பெரும்பாலும் மைதாவைத்தான் பயன்படுத்துகிறார்கள்.
வட இந்தியாவில் சில நகரங்களிலும் பாகிஸ்தானிலும் அசைவ சமோசா வெகு பிரபலம். ஆடு, மாடு, கோழி இறைச்சிகளை ஸ்டஃபிங்கில் சேர்க்கிறார்கள்.

பஞ்சாப்பில் சமோசாவுடன் சென்னா பரிமாறப்படுகிறது.
மும்பையில், `சமோசா பாவ்’ பிரசித்திபெற்ற ஒன்று. பன்னில் வைத்துத் தரப்படும் இதை `இந்தியன் பர்கர்’ என்றுகூடச் சொல்லலாம்.
தீபாவளிப் பண்டிகையின்போது வட இந்தியாவில் சில இடங்களில் இனிப்பு சமோசா தயாரித்து, பரிமாறும் வழக்கம் இன்றைக்கும் இருக்கிறது.
ஆப்பிரிக்கா, எத்தியோப்பியா, சோமாலியா உள்ளிட்ட நாடுகளில் சமோசா, பண்டிகைகால ஸ்பெஷல் ரெசிப்பி. பொரித்துச் சாப்பிட்டால் உடலுக்குத் தீங்கு என்பதற்காக சில மேற்கத்திய நாடுகளில் சமோசாவை மைக்ரோவேவ் அவனில் பேக் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.
ஸ்டஃபிங்குக்கு ஆரோக்கியமான காய்கறிகள்! உலகமெங்கும் பிரபலான உணவுப்பொருளாகிவிட்டது சமோசா... ஒவ்வோர் இடத்திலும் ஒரு சுவை. சுவைத்து மகிழலாம்தான்.
ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள பல்வேறு நாட்டினரும், இதனை சிற்றுண்டியாக உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.
எடுத்துக்காட்டாக, அராபியத் தீபகற்பம், தென்கிழக்காசியா, தென்மேற்கு ஆசியா, நடுநிலக் கடல், இந்தியத் துணைக்கண்டம், ஆப்பிரிக்காவின் கொம்பு, கிழக்கு ஆபிரிக்கா, வடக்கு ஆப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளின் உணவுப் பட்டியலில், இப்பண்டம் அடங்கி உள்ளது.
பல நாடுகளின் கலாச்சார வேறுபாடுகளாலும், அம்மக்களின் குடிபெயர்வாலும், இத்தீனி பல நாடுகளிலும் பரவி வருகிறது.

இது சம்பூசா, சம்போசா, சமூசா, சோமாசி, சிங்கதா, சிங்கரா என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இந்த பெயர் 'சம்பூசாஹ்' என்கிற ஃபார்ஸி (ஈரான்) (பாரசீகம்: سنبوساگ) சொல்லிலிருந்து வந்ததாகும்.
அரபி மொழியில் 'பிறைபோன்ற வடிவம்' என்பதை சன்புசாக் அல்லது சன்புசாஜ் என்பர். சம்போசா எனவும் ஆப்கானித்தானிலும்,சோமாசா என வங்கமொழியிலும் সমোসা) அழைப்பர்.
சமோசா என்று உருது மொழியில்: سموسہ பாக்கிஸ்தானிலும், இந்தியிலும்:समोसा) நெருங்கிய தொடர்பு உடையதாக உள்ளது.
சிந்தி: سمبوسو சம்போசா/sambosa என்று தஜிகிஸ்தான் சொல்லோடும், சம்சா என்று துருக்கிய மொழிகளிலும், ஆப்பிரிக்க மொழிகளில்,' ஆப்பிரிக்காவின் கொம்பு வடிவம்' என்ற பொருளிலும், chamuça என கோவாவிலும், மொசாம்பிக் மொழியிலும், சில போர்த்துகல் சொற்களும், சமோசா என்ற சொல்லின் ஒலிப்போடு, (sambusaj) நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகின்றன.
உலக நாடுகளில் அனைத்திலுமே சமோசாவை முக்கோண வடிவத்தில்தான் சமைக்கிறார்கள். அதென்ன முக்கோண வடிவம்..? இந்த முக்கோணம் எதை அடையாளப்படுத்துகிறது? என்று நண்பர்கள் கேட்டு சொன்னால் நல்லதாக இருக்கும் .
அதற்கு முன்னர், `சமோசா ஆரோக்கியமானதுதானா?’ என்ற கேள்விக்கு டயட்டீஷியன் சௌமியா சொல்லும் விளக்கத்தையும் பார்த்துவிடுவோம்...
``மாலை 4 மணி. டீ குடிக்கப் போகிற இடத்தில் தட்டில் சுடச்சுட கொட்டிவைக்கப்பட்டிருக்கிறது சமோசா. ஒன்றை எடுத்துக் கடித்துச் சுவைக்க வேட்கை எழும்தான். ஆனால், அதனால் ஏற்படும் சில பக்கவிளைவுகளைத் தெரிந்துகொண்டால், அதன் பக்கம் போக மாட்டீர்கள்.
ஒரு சின்ன சமோசாவில் 240 கலோரிகள் இருக்கின்றன. நம் உள்ளூர் கடைகளில் விற்கப்படும் சமோசாக்களில் ஊட்டச்சத்தைத் தரக்கூடிய பொருட்கள் கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம். சர்க்கரைநோயாளிகளுக்குச் சேர்க்கக்கூடாத உருளைக்கிழங்கு அதில் இருக்கிறது; அதற்கான மாவில் நம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மைதா கலக்கப்படுகிறது.

மைதாவில் இருக்கும் அதிக அளவிலான கிளைசெமிக் இண்டெக்ஸ் ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கூட்டும். கொழுப்பை அதிகரிக்கச் செய்யும். இதுகூடப் பரவாயில்லை. சமோசாவைப் பொரிக்கப் பயன்படுத்தப்படும் எண்ணெய்... அதுதான் ஆபத்தானது.

தெருவோரக் கடைகளில் சமோசா பொரிக்க எந்த வகை எண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. அதேபோல ஒரே எண்ணெயில் திரும்பத் திரும்ப பொரிப்பார்கள். அது ட்ரான்ஸ் ஃபேட்டுக்கு (Trans fat) வழிவகுக்கும். இதை `ஹைட்ரோஜனேஷன்' (Hydrogenation) என்பார்கள்.
அதாவது ஒரு உணவைத் திரும்பத் திரும்ப சூடு படுத்தும்போதோ, ஒரே எண்ணெயை மேலும் மேலும் பயன்படுத்தும்போதோ ஹைட்ரஜன் உணவோடு சேரும். இது ட்ரான்ஸ்ஃபேட்டுக்கு வழிவகுக்கும். சர்க்கரைநோயாளிகளும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களும் இதைச் சாப்பிட்டால், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவர்களின் பிரச்னை தீவிரமாகும்.
மற்ற ஸ்நாக்ஸைவிட சமோசா கொஞ்சம் டேஞ்சர்தான். அதீத கொலஸ்ட்ரால், செரிமானக் கோளாறுகள், ட்ரான்ஸ் ஃபேட் (கெட்ட கொழுப்பு), சுகாதாரமற்ற மைதா மற்றும் எண்ணெய்... இவை போதுமானவை சமோசாவை வேண்டாம் என்று சொல்ல!

எத்தனை வகை வகையாக உணவுகள் இருந்தாலும், நோன்பு திறப்பதற்காக பேரித்தம்பழமும், சாப்பிடுவதற்கு நோன்புக்கஞ்சியும் தான் சிறப்பான உணவு.
அது தமிழகம் முழுவதும் அனைத்து பள்ளிவாசல்களிலும், அனைத்து மக்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. மற்றபடி சிறப்பான உணவுகள் என்பது அவரவர் தகுதிக்கேற்ப பலகாரங்கள் செய்தும், வெளியில் இருந்து வாங்கியும் நோன்பாளிக்கு சாப்பிடக் கொடுக்கின்றனர். உறவுகளுக்கும் கொடுக்கின்றனர்.
நோன்பு திறப்பதற்கு கஞ்சியுடன் சமோசவும், வடையும் பரிமாறப்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும் தொடர்ந்து சமோசா சாப்பிடுவது, வயிற்றில் தொப்பையை உருவாக்கும். அதோடு சர்க்கரைநோய், உயர் ரத்த அழுத்தம் வருவதற்கெல்லாம் பாதை வகுக்கும்.
சமோசா சாப்பிட வேண்டும் என்று தோன்றினால் வீட்டிலேயே செய்யலாம். நல்ல எண்ணெயில், ஆரோக்கியமான ஸ்டஃபிங்கோடு மைதா மாவுக்கு பதிலாக கோதுமை மாவு, அரிசி மாவு சேர்த்து சாப்பிட்டால் தவறில்லை. மற்றபடி, சமோசாவுக்கு `நோ' சொல்வதே புத்திசாலித்தனம்.''
ஆக, வீட்டு சமோசாவுக்கு வெல்கம் (எப்போதாவது) சொல்வோம்! கடை சமோசா..? வேண்டவே வேண்டாம்!

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 23

(இறைச்சி அதுவும் மாட்டிறைச்சி)



மாடு குறித்தும் மாட்டின் பயன்பாடு குறித்தும் குர்ஆனில்

20 க்கும் நெருக்கமான வசனங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

மூஸா (அலை) அவர்கள் காலத்தில் நடந்த கொலைக்கான குற்றவாளியை கண்டு பிடித்துத் தர வேண்டும் என்று அந்த மக்கள் கோரிக்கை வைத்த போது, அல்லாஹ் மாட்டை அறுக்கும்படிதான் உத்தர விட்டான் என்று குர்ஆன் பேசுகிறது.

ஜிப்ரயீல் (அலை) அவர்கள் உட்பட நிறைய மலக்குமார்கள் மனித கோலத்தில் ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை சந்திக்க வந்த போது விருந்தாளிகளை உபசரிப்பதில் தன்னிகரில்லாதவர்களாக விளங்கிய இப்ராஹீம் (அலை) அவர்கள் கொழுத்த மாடொன்றை அறுத்து சமைத்து அவர்களுக்கு விருந்தளித்தார்கள் என்று (குர்ஆன் : 51:24- 27) கூறுகிறது.

சுவனத்தில் சுவனவாதிகளுக்கு கிடைக்கும் இன்பங்கள் குறித்து பேசும் போது

و أمددناهم بفاكهة ولحم مما يشتهون

அவர்கள் விரும்பும் கனிகளையும் இறைச்சியையும் நாம் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருப்போம்.

(அல்குர்ஆன் : 52 : 22)

அந்த இறைச்சி மாட்டிறைச்சியாகக் கூட இருக்கலாம் !

أنه قال «سيد طعام أهل الدنيا وأهل الآخرة اللحم ابن ماجة

உலகம் மற்றும் மறுமையிலுள்ளவர்களின் உணவில் முதன்மையானது இறைச்சியாகும்.

(இஹ்யாவு : 2/456, இப்னுமாஜா ;3305)

قال الزهري: أكل اللحم يزيد سبعين قوة. و قال محمد بن واسع: اللحم يزيد في البصر، و يروى عن علي بن أبي طالب رضي الله عنه: «كلوا اللّحم» فإنّه يصفّي اللّون و يخمص البطن، و يحسن الخلق» و قال نافع: كان ابن عمر إذا كان رمضان لم يفته اللحم، و إذا سافر لم يفته اللحم. و يذكر عن علي من تركه أربعين ليلة ساء خلقه

ஜுஹ்ரீ (ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள் ; இறைச்சியைச் சாப்பிடுவது 70 வகையான ஆற்றலை அதிகப்படுத்துகிறது.

முஹம்மது பின் வாஸிவு (ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள் ; இறைச்சி பார்வையை அதிகப்படுத்தும்.

ஹள்ரத் (அலி) அவர்கள் கூறுகிறார்கள் ; இறைச்சியை சாப்பிடுங்கள். அது நிறத்தை தெளிவாக்கும்.வயிற்றைக் குறைக்கும். குணத்தை அழகாக்கும்.

நாஃபிவு (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் ; ரமலான் வந்து விட்டால் ஹழ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கட்டாயமாக இறைச்சியை எடுத்துக் கொள்வார்கள். பயணத்திற்கு புறப்பட்டால், இறைச்சியை எடுத்துக் கொள்வார்கள்.

ஹழ்ரத் (அலி) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகிறது ;

40 நாட்கள் எவர் இறைச்சியை விட்டுவிட்டாரோ அவரது குணம் கெட்டு விடும்.

உலகத்திலும் சரி நாளை மறுமையில் சுவனத்திலும் சரி நாம் உண்ணுகிற உணவில் மிகச்சிறந்த உணவு இறைச்சி என்பதைத்தான் இதுபோன்ற ஆயத்துகளும் ஹதீஸ்களும், நம் முன்னோர்களும் கூற்றுக்களும் நமக்கு குறிப்பிடுகின்றன.

நபி (ஸல்) அவர்களின் நடைமுறையும் நமக்கு இதைத்தான் உணர்த்துகிறது.குர்ஆனும் ஹதீஸும் ஒன்றை செய்ய வேண்டும் என்று சொல்கிறதென்றால் அது நமக்கு நலவாகத்தான் இருக்கும்.

குர்ஆனும் ஹதீஸும் ஒன்றை தடுக்கிறதென்றால் அது நிச்சயம் நமக்கு கெடுதியாகத்தான் இருக்கும். இந்த அடிப்படையை வைத்து நாம் சிந்தித்தால் இறைச்சியின் நன்மைகளை நாம் நன்றாக புரிந்து கொள்ள முடியும்.

இன்று சமயத்தைக் கடந்து நடுநிலையோடு சிந்திக்கின்ற மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் மாட்டிறைச்சி நல்ல உணவு என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

மாட்டிறைச்சியில் அனைத்து விதமான சத்துக்களும் நிறைந்துள்ளது. குறிப்பாக இதயக்கோளாறுகள் நீங்கி இதயம் வலுப்பெறும்.உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் கட்டாயம் மாட்டிறைச்சியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும்.

மனித இனம் மாட்டிறைச்சியை சாப்பிடாமல் இருந்திருந்தால், இன்றைக்குள்ள மனித மூளையில் கால் பகுதி தான் இருந்திருக்கும் என்று கூறுகிறார்கள்.

உலகில் நீண்ட ஆயுள் வாழும் மக்களை ஆய்வு செய்தால் அவர்கள் அதிகம் மாட்டிறைச்சியை உண்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அதில் இருக்கிற புரதச் சத்து நம் சதைகள் வலுப் பெறுவதற்கும் ஹார்மோன்கள் அதிகம் சுரப்பதற்கும் காரணமாக இருக்கிறது.

நரம்புகளை பலப்படுத்துவதற்கும் இரத்த சுத்திகரிப்புக்கும் மாட்டிறைச்சி அவசியம் என்று கூறுகிறார்கள். 85 கிராம் மாட்டுக் கறியில் உடலுக்கு தேவையான பத்து சதவிகிதத்திற்கு மேலான உயிர்சத்துகள் நிரம்பியுள்ளன.

உலகில் நோபல் பரிசு பெற்றவர்களில் 99.9 சதவீதம் பேர் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள் தான் என்று பிரபல மருத்துவர் சிவராமன் கூறுகிறார்.

மாட்டிறைச்சியின் நன்மைகள்

1. மாட்டிறைச்சியின் கொழுப்பில் உள்ள #லினொலிக் , #பாலமிலோடிக் என்ற ஆசிட்கள் உள்ளன .. இது நோய் எதிர்ப்பு சக்தியையும் , புற்று நோய் செல்களையும் அளிக்க கூடியது .. .

2. கொழுப்பற்ற மாட்டு கறியை சாப்பிடுவதால் இருதய நோய்கள் குணமடைகிறது .இதயம் வலிமை பெறும்.. இதனை ஆங்கிலத்தில் lean beaf என்பார்கள்.இதனை 2012 அமெரிக்காவில் உள்ள அமெரிக்கா ஜெர்னல் சத்துணவு ஆய்வு மையத்தின் (american journal clinical nutrition) ஆய்வறிக்கையில் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார்கள்.

3. மாட்டுக்கறியில் கிடைக்கும் புரத சத்தினால் உடலின் சதைகள் வலுவடைவதுடன் , உடலுக்கு தேவையான கணிசமான #ஹார்மோன்கள் கிடைக்கிறது .. ..

4. தானிங்களில் கிடைக்கும் ஜிங்க் , மெக்னீசியம் , இரும்பு சத்துக்களை விட மாட்டிறைச்சியின் சத்துக்களை நம் உடல் முழுமையாக ஏற்றுக்கொள்கிறது .

5. ஆரோக்கியமான நரம்பு மண்டலத்திற்கு #விட்டமின் பி12 மிக அவசியம். இது இறைச்சியில் தான் அதிகமாக உள்ளது. அதிலும் விட்டமின் பி12 மாட்டிறைச்சியில் 37% உள்ளது.

6. அமெரிக்கா விவசாய துறையின் ஆய்வறிக்கையின் படி 1.1 கிலோ #டியினோ மீனின் கிடைக்கும் #ஜிங்க் சக்தி 100 கிராம் மாட்டுக்கறியில் கிடைக்கிறது .

7. 750 கிராம் கோழி இறைச்சியில் நெஞ்சு கறியில் கிடைக்கும் சக்தி 100 கிராம் மாட்டு இறைச்சியில் கிடைக்கும் .

8. 300 கிராம் நாட்டு கோழி இறைச்சியில் உள்ள பி விட்டமினான #ரைபோப்லெவின் சக்தி 100 கிராம் மாட்டு இறைச்சியில் உள்ளது.

9. ஆறு கட்டு பாலக் (தரை பசலை) கீரையின் கிடைக்கும் #இரும்பு சத்து 100 கிராம் மாட்டு இறைச்சியில் கிடைக்கிறது.

10. நவீன உழைப்பு சுரண்டலில் , அழுத்தம் நிறைந்த பணி சூழலில் வேலை செய்யும் கார்ப்பரேட் தொழிலாளிகளுக்கு அவசியமான உணவு மாட்டிறைச்சி.

பொதுவாக சுகர், பிஷர் நோயாளிகள் கொழுப்பு மிகுந்த உணவை தாங்கள்தான் குறைத்துக் கொள்ள வேண்டுமே தவிர , வீட்டிலுள்ள சிறுவர், சிறுமியர், இளைஞர்களுக்கும் இந்தக் கட்டுப்பாட்டை விதியாக்கி அவர்களின் ஆரோக்கியத்தை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள்

அதே மாதிரி நம்மை தேடி வரும் விருந்தாளிக்கும் நம்முடைய உணவுக் கட்டுப்பாட்டையும் திணிக்காதீர்

#குறிப்பு: அமிர்தமே ஆனாலும் குறைவாக சாப்பிட்டால்தான் அது உணவு, இல்லையேல் அது விஷம்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 24

தக்கடி



தென் மாவட்ட முஸ்லிம்களின் மிக விருப்பமான உணவுகளில் ஒன்று தக்கடி என்றாலும் எங்களூர் மேலப்பாளையத்தில் அபூர்வ தக்கடிகளெல்லாம் செய்து பேர் பெற்ற ஊர்.
பச்சரிசியை நனைத்து, ஊற வைத்து, இடித்து, தேங்காய் துருவல் சேர்த்து, பொன்முறுவலாக வறுத்து பக்குவப்படுத்திய (அந்த காலத்தில் பிச்சம்மாள் மாவு வறுவல் சூப்பர்) மாவில் செய்யப்படும் தக்கடியின் சுவைக்கு ஈடு இணையே இல்லை எனலாம்.
தக்கடி செய்ய :-
பச்சரிசி மாவு - 1 கிலோ (7 அல்லது 8 நபருக்கு)
நாட்டு (உள்ளி) வெங்காயம் - 400 கிராம்
தேங்காய் - 1 (துருவல்)
நறுக்கிய கொத்தமல்லி - தேவையான அளவு
மிளகாய் - தேவையான அளவு
கூட்டு மாவு - 50 கிராம் (கொலு கட்டை உடையாமல் இருக்க)
ஆட்டு இறைச்சி - 1கிலோ
கறி மசலா - 150 கிராம்
இஞ்சி- 50 கிராம்
பூடு - 50 கிராம்
வெங்காயம் - தேவையான அளவு
தக்காளி - தேவையான அளவு
இறைச்சி கால் வேக்காடு வெந்ததும்,சால்னா ஆணத்தை தேவையான அளவு எடுத்து, மேற்படி தயார் செய்து வைத்த பச்சரிசி மாவு சேர்மானத்தில் கலந்து, கால் மணி நேரம் ஊற வைத்து பின் கொலு கட்டையாக பிடிக்க வேண்டும்.
கொலு கட்டை பிடித்துப் போக மீதம் மாவை தனியாக எடுத்து வைத்திருக்க வேண்டும் .
கொலு கட்டைகளை மின் விசிறியில் சிறிது நேரம் உலர்த்தி, பின் மீதம் உள்ள கொதிக்கும் சால்னா ஆணம் கொலு கட்டை வேகும் அளவிற்கு குறைவாக இருந்தால் சிறிது அளவு வெந்நீர் சேர்த்து 25 கிராம் கறி மசலா மீண்டும் அத்துடன் சால்னாவில் சேர்த்து , இறைச்சியை மீண்டும் கால் வேக்காடியிலிருந்து அரை வேக்காடிற்கு இறைச்சியை வேக வைக்கவும் .
சால்னா ஆணம் நன்றாக கொதிக்கும் போது, கொலு கட்டையை ஆப்பையில் எடுத்து ஒவ்வொன்றாக உடையாமல் போடவும். கொலு கட்டை பிடித்துப் போக மீதம் எடுத்து வைத்த மாவை தக்கடி கூட்டிற்காக கொதிக்கும் சால்னாவில் சேர்க்க வேண்டும் .

கால் மணி நேரம் வெந்த பிறகு அடுப்பை சிம்மில் கால் மணி நேரம் வேக விட்டு இறைச்சியை முழுமையாக வேக வைக்கவும்.
இறைச்சியும் , கொலு கட்டையும் நன்றாக வெந்தப் பிறகு, சட்டியை அடுப்பிலிருந்து இறக்கி, அரை மணி நேரமாவது தக்கடி கூட்டு கெட்டியாகும் வரை பொறுத்துக் கொள்ள வேண்டும் .
ஆக்கப் பொறுத்தாலும், ஆறப் பொறுக்க வேண்டும். நன்றாக ஆறிய பின் எடுத்து சாப்பிடவும் .
கொழுக்கட்டை நல்ல வெந்து, ஆவி பறக்கும் போது ஒரு மணம் வருமே ... அப்பப்பா அதை எழுத்தில் சொல்ல முடியாது தட்டுல போட்டுதான் சொல்லணும். அதுவும் இந்த மாதிரியான மழைக் காலங்களில் கேக்கவே வேண்டாம், காலைலேயே வீட்டுல தக்கடி மணக்க ஆரம்பிச்சுட்டா அம்புட்டுதான். அதை ஒரு கை பார்க்காமல் வேலைக்குப் போறதுக்கு மனசே வராது.
அஞ்சு கொலு கட்டையை தட்டுல எடுத்துப் போட்டு, அத கரண்டியால உடைச்சு, அதுக்குமேல தக்கடி கூட்டை ஊத்தி சாப்பிடும்போது, மழைகால குளிருக்கு ரொம்ப இதமா இருக்கும்.

தக்கடிக்கு எலும்புக் கறிதான் நல்ல ருசி, அதுவும் நெஞ்சு பட்டை எலும்பு கறியுடன் கிடைத்தால் ,அந்த எலும்பை சவைக்க சவைக்க அதிலிருந்து மட்டன் சாறு வருமே ... அந்த ருசிக்கு உலகமே மறந்து போகும். காலையில் அஞ்சு கொழுக்கட்டையும் அதன் கூட்டோடு சாப்பிட்டால் மதியம் 2 மணி வரைக்கும் தாக்குப்பிடிக்கும்

சில நேரங்களில் இரவு விருந்துகளிலும் இது பரிமாறப்படும்.
கல்யாணம் போன்ற விசேஷ தினங்கள் போக வீட்டில் ஃபாத்திஹா ஓதும்போதும் தக்கடி அதிகம் செய்யப்படுகிறது.
ஹஜ்ஜுப் பெருநாள் முடிந்த கையோடு அடுத்த ஒரு வாரத்திற்கு இந்த தக்கடிதான் எல்லார் வீட்டிலேயும் செய்வார்கள் . பெருநாளைக்கு வந்த ஆட்டுக் கறி, மாட்டுக் கறியெல்லாம் இந்த தக்கடி உருவாக தயார் நிலையில் எப்போதும் இருக்கும் .
மூன்று நண்பர்களோடு சஹனில் வைத்து சாப்பிடும் போது, தக்கடி கூட்டில் எது கொழுக் கட்டை , எது மட்டன் என்று தெரியாது. இருந்தாலும் நம்ம நண்பர்கள் பாரபட்சம் பார்க்காமல் "இந்தா கறின்னு" எடுத்து தந்து விடுவாங்க ! இந்த மாதிரி நண்பர்களை சஹனில் கூட வைத்து சாப்பிடலாம்.
நபி (ஸல்) அவர்கள் காலத்தில் தரீத் என்னும் வாற்கோதுமை மாவில் இறைச்சியை சேர்த்து செய்யப்படும் சுவை மிகுந்த உணவு. இதை பிரியாணி நோக்கில் சொன்னால் கோதுமை மாவு பிரியாணி எனப்படும் .
எல்லா பெண்களை விடவும் ஆயிஷா(ரலி) அவர்கள் சிறந்தவர்கள் - ”தரீத் என்னும் உணவு மற்ற உணவுகளை விட சிறப்பாக இருப்பது போன்று மற்ற பெண்களை விட ஆயிஷா(ரலி) அவர்கள் சிறப்பானவர்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ” (திர்மிதி)

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 25
சூப்பை கண்டுபிடித்தது யார் ?



மனிதன் நெருப்பை கண்டு பிடித்த காலத்தில் இறைச்சி சுட்டு தின்னிருப்பான் .அதை வேக வைத்து சாப்பிட மண்சட்டி கண்டு பிடித்த காலத்தில் இந்த சூப்பை கண்டு பிடித்திருப்பான்.
ஒரு கைப்பிடி தானியம் உங்களிடம் இருக்கிறதா நீங்கள் மட்டும் அதை சமைத்து சாப்பிடலாம் ஆனால் அதிலிருந்து சில பொருட்களை சேர்த்து தண்ணீர் ஊற்றி காய்கறிகளை போட்டு வேக வைத்து ரசம் போல ஆக்கினால் இன்னும் அதிகமான பேர் இதைச் சாப்பிட்டு பசியாறலாமே ! இதுதான் சூப்புக் அடிப்படை .
நம் முன்னோர்கள் இப்படி எல்லாம் கூட்டாக பசியாறியிருக்கிறார்கள் . இந்தக் 'கஞ்சி' பாரம்பர்யம்தான் இன்றைக்கு 'சூப் டயட்' வரை உருவாகி முன்னேற வழிகாட்டி இருக்கிறது.

நட்சத்திர ஹோட்டல்களில் பலமான விருந்துக்கான முன் தயாரிப்புகளில் ஒன்றாகப் பரிமாறப்பட்டவை சூப் வகைகள்.
இன்று தெருவோரக் கடைகளின் பிரதான உணவாக மாறியிருக்கிறது. காபி, டீயைத் தவிர்க்க நினைக்கிற பலரின் சாய்ஸும் மலிவான விலையில் கிடைக்கும் இந்த சூப் வகைகளே.
தவிர சில நிமிடங்களில் தயாரித்து அருந்தும் வகையில் இன்ஸ்டன்ட் சூப் மிக்ஸ் விற்பனைக்கு வந்த பிறகு சூப் அருந்தும் கலாசாரம் இன்னும் அதிகரித்திருக்கிறது.
வெதுவெதுப்பான அல்லது இளம் சூட்டிலேயே பரிமாறப்படுகிறது இந்த வகை உணவு. இறைச்சி, காய்கறிகள் என சைவம் அசைவம் இரண்டு வகையிலும் தயாரிக்கலாம்.

இன்றைக்குப் புழக்கத்தில் இருப்பது " Soup "என்கிற ஆங்கில வார்த்தை. இது ஃப்ரெஞ்சின் ' soupe ' என்ற வார்த்தையில் இருந்து வந்திருக்கலாம்.' Soupen ' என்ற ஆங்கில வார்த்தைக்கு "சப்பிச் சாப்பிடுதல்" To Sip என்று பொருள். எனவே இதிலிருந்து வந்திருக்கலாம் .

அல்லது லத்தீன் வார்த்தையான "Suppa " (பிரெட் ஊற வைத்த சாறு) ..இதில் இருந்து வந்திருக்கலாம். அதுபோல ஜெர்மன் மொழியில் " Sop "என்றால் குழம்பு எனப் பொருள் . இதன் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள்.
மெக்ஸிகன் , வியட்நாமீஸ் ,பிரேசிலியன், கொரியன், இங்கிலாந்து , சிசிலியன் ,சிங்கப்பூர் ,ஜப்பானீஸ் ...என சூப்புகள் பலவகை உள்ளன.
இன்னும் ரஷ்யா , இத்தாலி , ஸ்பானிஷ் ..என உலகின் பெரிய அறியப்பட்ட நாடுகள் தொடங்கி மூலை முடுக்குகள் எல்லாம் மூக்கை நுழைத்து தக்கவைத்துக் கொண்டிருக்கிறது இந்த அதி ருசி திரவ உணவு.
சூப் தினமும் ஒரு முறையேனும் குடித்துவிட வேண்டும்' என்ற உணவுமுறை மாற்றத்துக்கு பெரும்பாலானோர் பழகியிருக்கிறார்கள். சாப்பாட்டுக்கு முன் பசியை அதிகரிக்க சூப் குடிப்பது, மாலை வேளையில் ஆரோக்கிய பானமாக சூப் அருந்துவது என இந்தப் பழக்கம் பலவிதமாகப் பின்பற்றப்படுகிறது.

Appetizer Soup - இது, அடர்த்தி குறைவாக இருக்கும் சூப் வகை. பசியைத் தூண்டுவதற்கான சூப்.
Creamy Soup - கான்ஃபிளவர், மைதா போன்றவை கொண்டு அடர்த்தியாகத் தயாரிக்கப்படும் சூப் வகை இது.
Chowder soup - காய்கறிகள், பழங்களைப் பயன்படுத்தி, உணவுக்கு ஈடானளவு ஊட்டச்சத்து கொண்டு தயாரிக்கப்படும் சூப் வகை இது. இதை அருந்தினாலே பசி அடங்கிவிடும் என்பதால், உணவுக்கு மாற்றாக இதை எடுத்துக்கொள்ளலாம்.
உடலுக்கு வைட்டமின்கள், தாது உப்புகள், தேவையான அளவு கலோரிகள், புரதம் போன்றவை அதிகம் கிடைக்கும். சமைத்து சாப்பிடும் காய்கறிகளைவிடவும், சற்றே கூடுதலான பலன்களை சூப் குடிப்பதன் மூலம் பெறலாம்.

உடல் நலன் சார்ந்த பிரச்னையிலிருந்து மீண்டு வந்து கொண்டிருப்பவர்களுக்கு, உணவை மென்று சாப்பிடுவதில் சிக்கல்கள் இருக்கும். அப்படியானவர்களுக்கு, சூப் எளிமையான மற்றும் சத்தான மாற்று உணவாக இருக்கும்.
சரியான முறையில் சூப் தயாரிக்க, சில குறிப்புகள் :-
* அதிகம் கொதிக்க வைத்தால் காய்கறிகளில் ஊட்டச்சத்து இழப்பு ஏற்படலாம் என்பதால், காய்கறி சூப்பை அதிகம் கொதிக்க வைக்கக் கூடாது.
* அசைவ சூப் தயாரிக்கும்போது, அதை அதிக நேரம் கொதிக்க வைத்தல் அவசியம். காரணம், அப்போதுதான் கறியில் இருக்கும் சத்துகள் யாவும் சூப்பில் இறங்கும். செரிமான சிக்கல்களைத் தவிர்க்கலாம்.
காய்கறி சூப், மிளகுக் குழம்பு, தூதுவளை ரசம்... மழைக்கால நோய்களைத் தவிர்க்க எளிய உணவுகள்!
* சூப்பில் நறுமண இலைகள் சேர்க்கும்போது, அவற்றை அரைத்து உபயோகப்படுத்த வேண்டாம். அப்படியே இலைகளாக உபயோகப்படுத்தவும். முடிந்தால் அவற்றின் சாற்றை மட்டும் பயன்படுத்தவும். அரைத்துப் பயன்படுத்தும்போது, குறிப்பிட்ட அந்தப் பொருளின் மணமும் சுவையும் சூப்பில் அதிகரித்துவிடும். அது, சூப்பின் சுவையை மாற்றிவிடும்.
சமையலின்போது, மீதமாகும் கொதிக்க வைத்த காய்கறி தண்ணீரையெல்லாம் வீணாக்காமல், சூப்பில் கலந்து கொள்ளலாம்.
* காய்கறி சூப் தயாரிக்கும்போது, காய்கறி தேர்வில் கவனமாக இருக்கவும். எதிரெதிர் வண்ணங்களிலிருக்கும் காய்கறிகளை ஒரே சூப்பில் சேர்த்துவிடாதீர்கள். அது சுவை, மணம் என அனைத்தையும் கெடுத்துவிடும்!
* சூப்பைத் திடமாக்க, வொயிட் சாஸ் உபயோகிப்பதுண்டு. சிலர் வெண்ணெய் பயன்படுத்துவார்கள். அவையெல்லாம் வேண்டாமென நினைப்பவர்கள், கான்ஃப்ளார் உபயோகிக்கலாம்.
சூப் தினமும் வெளியில் தயாரிக்கும் ரெடிமேட் சூப், நல்லதா கெட்டதா?
நிச்சயம் நல்லதல்ல. வீட்டில் தயாரிக்கும் சூப் அளவுக்கு அவை ஆரோக்கியமானவையல்ல. ரெடிமேட் சூப் பவுடர்களில், நறுமணத்துக்காகவும் நிறத்துக்காகவும் நிறைய பொருள்களும் நிறமிகளும் சேர்க்கப்பட்டிருக்கும். கூடவே உப்புச்சத்து, கலோரி போன்றவையும் அளவுக்கு அதிகமாகவோ மிகக்குறைவாகவோ இருக்கும்.
ஊட்டச்சத்து, நார்ச்சத்தைப் போன்றவற்றைத் தாண்டி கெட்ட கொழுப்புச் சத்துக்கான சேர்க்கைகளும் அதில் இருக்கலாம். என்றாவது ஒரு நாள், ஒரே ஒரு வேளை, குளிருக்கு இதமாக ஏதேனும் குடிக்க வேண்டும் போலுள்ளது என்பவர்கள் மட்டும், ரெடிமேட் சூப் குடிக்கலாம்.

குறிப்பு - வீதிகளில் விற்கப்படும் சூப் வகைகளுக்கும் இந்த அறிவுரைகள் யாவும் பொருந்தும்! ஸோ, கவனம் தேவை.

தினமும் சூப் குடிக்க வேண்டுமென முடித்துவெடுத்து விட்டீர்கள் எனில், தாமதிக்காமல் தினமும் வீட்டில் தயாரித்து குடித்துப் பழகவும். அதுமட்டுமே ஆரோக்கியமானது.
தினமும் சூப் குடிப்பதால் ஏதேனும் உடல்நல பிரச்னைகள் வருமா?
எந்த வேளையில், என்ன வகை சூப்பை அருந்துகிறோம் என்ற தெளிவுடன் குடிப்பவர்களுக்கு நிச்சயம் எந்தப் பிரச்னையும் இல்லை. அந்தத் தெளிவு இல்லாமல் க்ரீமி சூப்பை உணவுக்கு முன் அருந்துவது, சௌடர் சூப் குடித்தபின் பலமான உணவு உட்கொள்வதெல்லாம் ஆரோக்கியக் கேட்டுக்கே வழிவகுக்கும். உடல் எடை குறைக்க வேண்டியோ அல்லது வேறு ஏதேனும் உடல் நல மாற்றங்களுக்காகவோ சூப் குடிப்பவர்கள் நிபுணர் ஆலோசனையின்றி சூப் உட்கொள்ளக் கூடாது .

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: சமையல் காளான்
'மன்னு' வகையைச் சேர்ந்தது ஆகும். அதன் சாறு கண்ணுக்கு
நிவாரணமாகும். என ஸயீத் இப்னு ஸைத்(ரலி) அறிவித்தார்
ஆதாரங்கள் ..ஸஹீஹ் புகாரி 4478, 4639, 5708
தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் .கொழுப்பு அடைப்பைத் தடுக்கிறது.

காளானில் உள்ள லென்ட்டைசின், எரிட்டிடைனின் என்ற வேதிப் பொருட்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசஸ்ரைடு பாஸ்போலிட் போன்றவற்றை வெகுவாகக் குறைக்கிறது.
இதில் எரிட்டினைன் கொழுப்புப் பொருட்களை எந்தவித பாதிப்பும் இல்லாமல் இரத்தத்திலிருந்து வெளியேற்றி பிற திசுக்களுக்கு அனுப்பி உடலை சமன் செய்கிறது. இவ்வாறு உடலில் அதிகம் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது.

இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராக செயல்படுகிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம். மேலும் காளானில் உள்ள இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர்செய்யும். காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும்.
மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் பிரச்சனைக்கு ஒரு தீர்வாகும்.
நபி வழி மருத்துவத்தில் : பார்லி சூப் காய்ச்சலைக் குறைக்கும். சிறுநீரைப் பெருக்கி சுத்தப்படுத்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரஹ்மத் ராஜகுமாரன்.

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 26

சாண்ட்விட்ச், சவர்மா , பர்கர்



முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு துண்டு பார்லி ரொட்டியில் பேரீச்சம் பழத்தை வைத்து இது தாவர ரொட்டி என்று மொழிந்ததை அறிவிக்கிறார் யூசுப் இப்னு அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) நூல்- அபூதாவூத்.
சுலபமாக வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்தே 15 நிமிடத்தில் வெஜிடபிள் சாண்ட்விச் செய்வது எப்படி?

பெரிய அளவு உருளைக்கிழங்கை வெட்டி குக்கரில் போட்டு, கொஞ்சம் உப்பு போட்டு நன்றாக வேகவைத்து எடுத்து தோல் உரித்து தண்ணீர் இல்லாமல் மசித்து வைத்துக் கொள்ள வேண்டும். இது அப்படியே இருக்கட்டும்.
கேரட், பீன்ஸ், பட்டாணி, முட்டைக்கோஸ், காலிபிளவர் இப்படி உங்களுடைய வீட்டில் என்ன காய்கறி இருக்கின்றதோ அதை பொடியாக வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். காய்கறிகள் சேர்ப்பது உங்களுடைய இஷ்டம்தான்.

அடுத்தபடியாக ஒரு கடாயை அடுப்பில் வைத்து கொள்ளுங்கள். எண்ணெய் 1 டேபிள்ஸ்பூன் அளவு ஊற்றிக் கொள்ளவும். ஒரு பெரிய வெங்காயத்தை பொடியாக நறுக்கி எண்ணெயில் சேர்த்து வதக்கி விட்டு அதன் பின்பு, நறுக்கி வைத்திருக்கும் காய்கறிகளை உங்களுடைய தேவைக்கு ஏற்ப வெங்காயத்துடன் சேர்த்து கொள்ளுங்கள்.
இப்போது மசாலாவிற்கு தேவையான உப்பைத் தூவி விடவேண்டும். அடுத்தபடியாக காரத்திற்கு ஏற்ப பச்சை மிளகாய் பொடியாக நறுக்கியது, மிளகாய்தூள் இந்த இரண்டு பொருட்களையும் சேர்க்க வேண்டும். தண்ணீர் ஊற்றாமல் தேவைப்பட்டால் தண்ணீர் தெளித்து இந்த காய்கறிகளை வேக வைத்துக் கொள்ளுங்கள்.
காய்கறிகள் நன்றாக வெந்ததும் வேக வைத்து மசித்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கை கடாயில் சேர்த்து நன்றாக கலந்து விட்டு, ஒரு ஸ்மேஷர் வைத்து எல்லா காய்கறிகளையும் நன்றாக நசுக்கி விட வேண்டும்.

ஸ்மாஷர் உங்களுடைய வீட்டில் இல்லை என்றாலும் பரவாயில்லை. மத்து அல்லது டம்ளரின் பின்பக்கத்தை வைத்து எல்லா காய்கறிகளையும் நன்றாக மசித்துக் கொள்ளுங்கள். இப்போது மசாலா தயார். இறுதியாக கொத்தமல்லி தழைகளைத் தூவி இறக்கி விடுங்கள்.
ஒரு பிரெட் ஸ்லைஸ் எடுத்துக்கொள்ளுங்கள். அதன்மேல் தயாராக இருக்கும் மசாலாவை தேவைக்கு ஏற்ப எடுத்து போட்டு நன்றாக பரப்பி கொள்ளுங்கள். உங்களுடைய வீட்டிலேயே சீஸ் இருந்தால் அதை மசாலாவின் மேலே வைத்து அதற்கு மேலே மற்றொரு பிரெட் ஸ்லைஸை வைக்க வேண்டும். சீஸ் கட்டாயம் வைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

கடாயை அடுப்பில் வைத்து வெண்ணெய் அல்லது நெய் ஊற்றி, பிரட் துண்டுகளை இரண்டு பக்கமும் பொன்னிறமாக சிவக்க வைக்க வேண்டும். ஒரு கரண்டியை வைத்து மேலே அழுத்தி பிரெட் துண்டுகளை சிவக்க வைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் இரண்டு துண்டுகளும் பிரியாமல் பக்குவமாக வரும். அவ்வளவு தான். சூப்பரான வெஜிடபிள் சாண்ட்விச் தயார். ஒரு கத்தியைக் கொண்டு உங்களுக்குப் பிடித்தது போல் இந்த வெஜிடபிள் சாண்ட்வெஜ்சை கட் செய்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொடுத்துப் பாருங்கள். ஈவினிங் ஸ்நாக்ஸ் ஆக விருப்பமாக சாப்பிடுவார்கள்.

ரொட்டித் துண்டுக்குள் சுட்ட சிக்கனோ , அல்லது மாட்டிறைச்சி வருவலோ இவற்றுடன் வெண்ணெய் முட்டை கோஸ் மற்றும் காய்கறிகளை வைத்து "சவர்மா " தயாரிக்கப்படுகிறது .
பர்கர்
ஹாம்பர்கர் (hamburger) அல்லது பர்கர் இருரொட்டிகளுக்கிடையே அல்லது வெட்டப்பட்ட ரொட்டித்துண்டின் இடையே நன்றாக அரைத்த இறைச்சி (பொதுவாக மாட்டிறைச்சி) வைக்கப்பட்ட இடையூட்டு ரொட்டியாகும்.

இவை வழமையாக கீரை, மாட்டிறைச்சி, தக்காளி, வெங்காயம், வெள்ளரி, பாலாடைக்கட்டி இவற்றுடன் எள் போன்றவையுடன் அலங்காரப்படுத்தப்பட்டு வழங்கப்படும். இதனை விரைவு தொடர் உணவகங்கள் உலகளவில் மிகவும் பரப்பி உள்ளன.

ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் நடுவே வைக்கப்படும் இறைச்சி பேட்டி(patty) மட்டுமே ஹாம்பர்கர் அல்லது பர்கர் என்று வழங்கப்படுகிறது. இதனைக் குறிக்கும் பேட்டி என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுவதில்லை. பொதுவாக பொதுநலவாய நாடுகளில் அமெரிக்க உணவகங்களைத் தவிர்த்து ஹாம்பெர்கர் என்ற சொல் பயன்படுத்தப்படுவதில்லை.
ஹாம்பெர்கர் என்ற சொல் ஜெர்மனியின் இரண்டாவது மிகப்பெரும் நகரான ஹாம்பெர்க்கிலிருந்து பெறப்பட்டது. இங்கிருந்து அமெரிக்காவிற்கு பலர் புலம் பெயர்ந்திருந்தனர். பெர்க் என்ற ஜெர்மானியச் சொல் பாதுகாக்கப்பட்ட அடைக்கலத்தைக் குறிப்பதாகும் .ஹாம்பர்கர் என்ற சொல் டாய்ச்சு மொழியில் ஹாம்பெர்கிலிருந்து வந்தவர் என்பதைக் குறிக்கும்.
பர்கர் என்ற சொல் ஹாம்பெர்கரைத் தவிர இதனைப் போன்ற பிற இடையூட்டு ரொட்டிகளுக்கும், சால்மன் பர்கர், காய்கறி பர்கர், பயன்படுத்தப்படுகிறது

உருளைக்கிழங்கு மற்றும் மசாலா சேர்த்த வடா பாவ் அல்லது இந்திய பர்கர்.
இந்தியாவில் பர்கர்களில், மாட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சி அல்லது காய்கறிகள் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் இயங்கத் தொடங்கிய அமெரிக்க விரைவுணவு உணவகத் தொடர் மெக்டொனால்டு அதன் மிகுந்த விற்பனைக்குரிய பிக் மாக்கிற்கு மாற்றாக கோழிக்கறி அடங்கிய மகாராஜா மாக் அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்திய உள்நாட்டுத் தயாரிப்பான மகாராட்டிர வடா பாவ் (வடை ரொட்டி) உருளைக்கிழங்கு போண்டாவை ரொட்டித்துண்டுகளுக்கிடையே வைத்து வழங்குவதும் பிரபலமாக உள்ளது. இவை சட்னி மற்றும் முட்டைகளுடன் வழங்கப்படுகின்றன.
பர்கர் உங்களுக்கு மிகவும் பிடிக்குமானால், அதனை கடைகளில் வாங்கி சாப்பிடாமல் வீட்டிலேயே செய்து சாப்பிடலாம். இன்று வெஜ் பர்கர் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.
தேவையான பொருட்கள் :
பன் - 2
நறுக்கிய முட்டைக்கோஸ் - 3 டீஸ்பூன்
தக்காளி - 2
வெங்காயம் - 3
தக்காளி சாஸ் - 2 டேபிள் ஸ்பூன்
சீஸ் - 2 துண்டுகள்
உள்ளே வைப்பதற்கு...
காய்கறிகள் - 1 1/2 கப் (2 கேரட், 6 பீன்ஸ் மற்றும் 2 உருளைக்கிழங்கு)
சோம்பு பொடி - 2 டீஸ்பூன்
வெங்காயம் - 1/2 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 3 டீஸ்பூன்
மிளகாய் தூள் - 3 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
செய்முறை :-
தக்காளி, வெங்காயத்தை வட்டமாக நறுக்கி கொள்ளவும்.
மற்றொரு வெங்காயத்தை பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்து கொள்ளவும்.

முதலில் காய்கறிகளை நன்கு மென்மையாக வேக வைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, சோம்பு பொடி சேர்த்து கிளறி, பின் வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்க வேண்டும்.
பின்பு அதில் கேரட் மற்றும் பீன்ஸ் சேர்த்து 3 நிமிடம் நன்கு வதக்கி, பின் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து கிளறி, மிளகாய் தூள் மற்றும் உப்பு சேர்த்து நன்கு பிரட்டி விட வேண்டும்.
பிறகு அதில் உப்பு, மசித்த உருளைக்கிழங்கை சேர்த்து கிளறி இறக்கி, இரு பாதியாக பிரித்து, கட்லெட் போன்று வட்டமாக தட்டி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
அடுத்து பன்னை எடுத்து, பக்கவாட்டில் இரண்டாக வெட்டி, அடிப்பாகத்தின் மேல் கட்லெட்டை வைத்து அதன் மேல் சீஸ் துண்டுகளை வைத்து, மேலே சிறிது முட்டைக்கோஸைத் தூவி, பின் வெங்காயம் மற்றும் தக்காளி துண்டுகளை வைத்து, அதன் மேல் தக்காளி சாஸ் சேர்த்து பன்னின் மறுபாதியை வைத்து பரிமாற வேண்டும். அதேப் போன்று மற்றொரு பன்னையும் செய்தால், சிம்பிளான வெஜ் பர்கர் ரெடி!

ரஹ்மத் ராஜகுமாரன்

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 27

ஊறுகாய் உடலுக்கு உகந்ததா?



சிந்து சமவெளி நாகரிக காலத்தில் வெள்ளரிக்காய் ஊறுகாய் பயன்படுத்தப்பட்டதற்கான அகழ்வராய்ச்சி சான்றாதாரம் நியூயார்க்கில் உள்ள நியூயார்க் ஃபுட் மியூசியத்தில் உள்ளது என்ற தகவலையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

கீழடியில் 2600 வருடங்கள் முன்னதாக வாழ்ந்த மக்களின் உணவில் ஊறுகாய் இடம்பெற்றிருக்கலாம். தொட்டு கொள்ள தகவல் இல்லை.
கிறிஸ்டோபர் கொலம்பஸ் 15- ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஊறுகாயை அறிமுகப்படுத்தியது; வடக்கு ஐரோப்பிய பகுதிகளில் 19 -ஆம் நூற்றாண்டில் வெந்தய ஊறுகாய் பயன்படுத்தப்பட்டது பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள முடிகிறது.
நினைத்தாலே உமிழ்நீரைச் சுரக்கச் செய்யும் சுவை ஓர் உணவுப் பண்டத்துக்கு உண்டா? நிச்சயம் உண்டு... அது ஊறுகாய். இதன் துணை இருந்தால் போதும், வெறும் சாதத்தில் தண்ணீர்விட்டுச் சாப்பிட்டால் கூட கவளம் கவளமாக உள்ளே இறங்கும்.

மாங்காய், நார்த்தங்காய், எலுமிச்சை, ஆவக்காய், நெல்லி... என ஊறுகாயில்தான் எத்தனை வகைகள்! இதன் மேல் உள்ள கட்டுக்கடங்காத ஆசை, சிக்கன், மீன், இறால்... என அசைவத்திலும் செய்து பார்க்க இதன் ரசிகர்களைத் தூண்டியிருக்கிறது.
பழைய சாதம், தயிர் சாதத்துக்குத் தொட்டுக்கொள்ள உதவும் ஒன்றுதானே என இதைச் சாதாரணமாகக் கருத முடியாது; ஒதுக்க முடியாது. எத்தனையோ பதார்த்தங்கள் நிறைந்த அறுசுவை விருந்தாக இருந்தாலும், ஊறுகாய் இல்லாமல் விருந்து முழுமைப் பெறுவதில்லை. மற்ற பதார்த்தங்களின் சுவை குறையும்போது, சாப்பாட்டை உள்ளே தள்ள கைகொடுப்பது இதுதான்.
மாங்காயின் மேல் தமிழர்களுக்கு அதிக ஆர்வம் உண்டு. முக்கனிகளில் ஒன்றல்லவா? ! அது காயாகவோ, கனியும் வரையோகூட சிலரால் பொறுக்க முடியாது. பிஞ்சாக இருக்கும்போதே பறித்துவிடுவார்கள். புளிப்பும் இனிப்பும் இல்லாத துவர்ப்புச் சுவை உள்ள மாம்பிஞ்சை என்ன செய்ய? அதற்குத்தான் `மாவடு'வைக் கண்டுபிடித்தார்கள் நம்மவர்கள். தயிர்சாதம்-மாவடு காம்பினேஷன்போல அற்புதமான சேர்மானம் வேறு எந்த உணவுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.
பாடகர் திலகம் SP பாலசுப்ரமணியம் அவர்களின் பிரசித்தப் பெற்ற உணவு தயிர் சாதமும் , மாங்காய் ஊறுகாயும்தான்.
சரி... ஊறுகாயை ஏன் கண்டுபிடித்தார்கள் மனிதர்கள்?

குளிர்சாதனப் பெட்டியெல்லாம் வராத காலத்தில் உணவை எதிர்காலத் தேவைக்குப் பதப்படுத்தி வைக்க கண்டுபிடிக்கப்பட்ட வழிமுறை, உப்புபோட்டு ஊறவைத்தல் அல்லது பதனப்படுத்தி வைத்தல் அல்லது உப்புக்கண்டம் எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். ஆங்கிலத்தில் இதை `Pickling' என்கிறார்கள். 4,000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தியாவில் இந்த வழக்கம் இருந்திருக்கிறது' என்கிறார்கள் உணவு வரலாற்று ஆசிரியர்கள்.

இந்தியாவில் கோடையில் கடும் வெப்பம் நிலவும். அந்தக் காலங்களில் உணவு உற்பத்தி மிகவும் குறைவாகவே இருக்கும். குளிர்காலத்தில் அளவுக்கு அதிகமாக இருக்கும் உணவைப் பதப்படுத்தி வைத்தால், அது கோடையில் உதவும்தானே ! அதற்காகத்தான் பதப்படுத்தும் வழிமுறையைக் கண்டுபிடித்தார்கள்.
எலுமிச்சை, நெல்லி, மாங்காய்... என ஏதோ ஒரு காய். அதை நன்றாக நறுக்கி, நிறைய உப்புச் சேர்த்து, தாளிதப் பொருள்களைக் கலந்து, எண்ணெய் ஊற்றி சில நாள்கள் வைத்திருந்தால் ஊறுகாய் ரெடி.

இதைத் தனியே ஒரு ஜாடியில் வைத்திருந்தால் போதுமானது. எந்த தட்பவெப்பநிலையிலும் இருக்கும். கைபடாமல் வைத்திருந்தால் வெகு நாள்களுக்குக் கெட்டுப் போகாது. தொலைதூரப் பயணங்களில் கை கொடுக்கும்.

கன்னடத்தில் `உப்பினக்காயி', தெலுங்கில் `பச்சடி', மலையாளத்தில் `உப்பில்லித்துட்டு', மராத்தியில் `லோன்ச்சா', குஜராத்தியில் `அதானு', இந்தியில் `ஆச்சார்' என ஊறுகாய்க்குப் பல பெயர்கள். ஆனால், இதன் பூர்வீகம் இந்தியா என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.
நியூயார்க் ஃபுட் மியூஸியத்தின் `பிக்கில் ஹிஸ்டரி டைம்லைன்' (Pickle History Timeline), `கி.மு.2030 காலகட்டத்திலேயே இந்தியாவில் வெள்ளரியை ஊறவைத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள்' என்று குறிப்பிடுகிறது.

`தனிப்பாடல் திரட்டு' நூலில் கவி காளமேகம், `திங்கணுதலார் திருமனம்போ லேகீறி...' என ஊறுகாயை உட்பொருளாக்கி ஒரு பாடலே பாடிவைத்திருக்கிறார்.
வட இந்தியாவில் பலருக்குச் சப்பாத்திக்குக்கூட சைடுடிஷ் இதுதான். அங்கே பல காய்களைக் கொண்டு மிக்ஸடு ஊறுகாய் எல்லாம் செய்து நாக்கைச் சப்புக்கொட்ட வைக்கிறார்கள்.
ஆங்கிலத்தில் புழக்கத்தில் இருக்கும் `பிக்கிள்' (Pickle) என்ற வார்த்தை, டச்சு மொழியில் உள்ள `பெக்கெள்' (Pekel)-ல் இருந்து வந்தது என்கிறார்கள். இதற்கு அர்த்தம் `உப்பு நீர்'. ஹாப்சன் -ஜாப்சன் எழுதிய `The definitive glossory of british India' என்ற புத்தகத்தில், 1563-ம் ஆண்டிலேயே இந்தியில் ஊறுகாய்க்குச் சொல்லப்படும் `ஆச்சார்' என்ற வார்த்தை புழக்கத்தில் இருந்தது குறிப்பிடப்பட்டிருக்கிறது.
போர்ச்சுக்கீசிய மருத்துவரான கார்ஸியா டே ஆர்ட்டா (Garcia da Orta) முந்திரியில் உப்பு சேர்த்து பதப்படுத்தப்படுவதை `ஆச்சார்' என்று இவர்கள் குறிப்பிடுகிறார்கள் என எழுதிவைத்திருக்கிறார் .
கேரளாவில் ஊறுகாயை 'அச்சார் ' என்றே அழைக்கின்றனர் .
உணவியலாளர் கே.டி.அச்சயா தன் `எ ஹிஸ்டரிக்கல் டிக்ஷனரி ஆஃப் இந்தியன் ஃபுட்' நூலில் `நெருப்பில்லாமல் சமைக்கப்படும் உணவு' என்ற பிரிவில் ஊறுகாயை வகைப்படுத்தியிருக்கிறார்.
அவசரத்துக்கு, விருந்துகளுக்காக இது வேகவைத்து தயாரிக்கப்பட்டாலும், பச்சையாக உப்பும் எண்ணெயும் மிளகாய் தூளும் கலந்து தயாரிப்பதுதான் நம் மரபு. இன்னும் பல வரலாற்று நூல்களில் ஊறுகாயைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.
ஊறுகாயைக் குறித்த வரலாற்றுக் குறிப்புகள் போல வதந்திகளும் ஏராளம். ஜூலியஸ் சீஸர் தன் படை வீரர்கள் அனைவரும் கண்டிப்பாக ஊறுகாய் சாப்பிட வேண்டும் என்று கட்டளை இட்டிருந்தாராம். இதன் மூலம், வீரர்களுக்கு உடல் மற்றும் மனம் இரண்டும் வலுவாக இருக்கும் என்பது அவர் நம்பிக்கை.
இந்துக்களின் ஐதீகம்

ஊறுகாய் எப்போதும் வீட்டில் குறையாமல் இருக்கும் படி வைத்துக்கொள்ளவேண்டும். ஊறுகாய் உள்ள வீடுகளில் தான் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. எனவே ஊறுகாய் வீடுகளில் வைத்திருப்பது அவசியம். அந்த ஊறுகாய் பாட்டில்களை நாம் எப்போதும் உப்பு டப்பாக்களுக்கு அருகில் தான் வைக்க வேண்டும்.

வீட்டில் பல வித ஊறுகாய் வைத்திருக்கவும், ஏனெனில் குபேரன் ஊறுகாய் பிரியர். எனவே பல வித ஊறுகாய் வைத்திருக்க குபேர சம்பத்து வரும் என்று இந்து ஆன்மிகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது .
மாங்காய் ஊறுகாய் நைவேத்யம்
சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம், ஆகியவற்றை இறைவனுக்கு நைவேத்யமாக படைப்பதுண்டு. திருவனந்தபுரம் பத்மநாப சுவாமிக்கு வித்தியாசமான ஒரு நைவேத்யம் படைக்கப்படுகிறது. அது தான் மாங்காய் ஊறுகாய்.
வில்வமங்கலம் சுவாமி என்பவர் ஒருமுறை அனந்த பத்மநாபனை வணங்க வந்தார். கையில் ஏதுமில்லை. மாங்காய் தான் இருந்தது. அதை வெட்டிகாரம் சேர்த்து படைத்து வணங்கினார்.
அன்றுமுதல் ஊறுகாய் படைக்கும் வழக்கம் ஏற்பட்டது. மாங்காய் ஊறுகாயை தேங்காய் மூடியில் ஆரம்பத்தில் வைத்தனர். இப்போது கிண்ணத்தில் வைக்கின்றனர்.

அமெரிக்காவில் `சர்வதேச ஊறுகாய் தினம்' எல்லாம் கொண்டாடுகிறார்கள். இதில் நூற்றுக்கணக்கான ரெசிப்பிகளைச் செய்து அசத்துபவர்கள் எல்லாம் இங்கே உண்டு.
இது நம் உடலுக்கு உகந்ததுதானா? விளக்குகிறார் டயட்டீஷியன் அனிதா பாலமுரளி... ``ஊறுகாயால் சில சிறந்த பலன்களையும் பெற முடியும். இதில் சில முக்கியமான வைட்டமின்கள், தாதுக்கள், ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உள்ளன. கல்லீரலைப் பாதுகாக்கும்; செரிமானத்தைச் சீராக்கும். எலுமிச்சை, நார்த்தை, மாங்காய், நெல்லிக்காய்... என ஊறுகாயில் சேர்க்கப்படும் காய்களுக்கு ஏற்ப பலன்களும் மாறுபடும்.

இதற்கு வயிற்றுப்புண்ணை ஆற்றும் குணமும் உண்டு. அசைவத்திலும் இது தயாரிக்கப்படுகிறது. மீன், இறால் ஆகியவற்றில் எல்லாம் தயாரிக்கிறார்கள். 15 கிராம் மாங்காய் ஊறுகாயில் 38 கலோரிகள், கார்போஹைட்ரேட் 10 மி.கிராம், சோடியம் 1 மி.கிராம், சர்க்கரை 9 கிராம் உள்ளன. இவை தவிர வைட்டமின் சி, வைட்டமின் ஏ ஆகியவையும் உள்ளன.
சமைக்காமல் பதப்படுத்தி வைத்திருப்பதால், இயல்பாகவே இதில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் அதிகம். இவை, நம் உடலைப் பாதிக்கும் மோசமான ஃப்ரீ ராடிக்கல்ஸிடம் (Free radicals) இருந்து பாதுகாப்பவை.
நம் செரிமான மண்டலத்தில் இருக்கும் புரோபயாடிக் பாக்டீரியாக்கள்தான் உணவு செரிமானம் ஆவதற்கு உதவுபவை. சில நேரங்களில் ஆன்டிபயாடிக்ஸ் பயன்பாடு காரணமாக, இந்த பாக்டீரியாக்கள் அழிந்துபோகும் நிலை ஏற்படும்.
இதனால் செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம். அந்த நேரங்களில் ஊறுகாய் சாப்பிடுவது, செரிமானத்தை எளிதாக்கும். அதிலும் நெல்லிக்காயில் தயாரான ஊறுகாயைச் சாப்பிடுவது மிகச் சிறந்த தீர்வாக இருக்கும்.

`வினிகர் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஊறுகாயாக இருந்தால், அது சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைக்க உதவும்' என்கின்றன சில ஆய்வுகள். இந்த வகை ஊறுகாய் மேலை நாடுகளில்தான் அதிகம்.
அதே நேரத்தில் தொடர்ந்து அல்லது அதிக அளவில் இதை உட்கொள்வதும் உடலுக்கு நல்லதல்ல. அளவுக்கு அதிகமாக இதைச் சாப்பிடுவது செரிமானத்தைப் பாதிக்கும். வயிற்றுக்கோளாறுகள், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு உள்ளவர்கள் ஊறுகாயைச் சாப்பிடக் கூடாது.
இதில் சோடியத்தின் அளவு அதிகம் என்பதால், அதிக அளவில் சாப்பிடும்போது சிறுநீர் வெளியேறாமல் தேங்கிவிடும் அபாயமும் உண்டு.

வயிற்று உப்புசம் சிலருக்கு உண்டாகலாம். இதில் உப்பு அதிகம் சேர்ப்பார்கள். எனவே, உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஊறுகாயைச் சாப்பிடக் கூடாது.
அதேபோல் இது சிறுநீரகங்களுக்கு அதிகம் வேலை வைக்கும் ஓர் உணவு. அதாவது அதிகப்படியான உப்பை சிறுநீரகம் வெளியேற்றவேண்டிய நிலை ஏற்படும். எனவே, ஊறுகாய் என்பது தொட்டுக்கொள்ள மட்டும்தான் என்கிற எண்ணத்தோடு அளவாகச் சாப்பிடுவது நல்லது.
அதிலும், கடைகளில் விற்பதை வாங்கிப் பயன்படுத்துவதைத் தவிர்த்துவிடுவதே நல்லது. அவை கெடாமல் இருக்கக் கலக்கப்படும் சேர்மானங்கள் நமக்கு ஆரோக்கியமானதல்ல. வீட்டில் தயாரித்த சுத்தமான ஊறுகாயை, அளவாக சேர்த்துக்கொண்டால் என்றுமே ஆபத்தில்லை.''
முத்துப்பேட்டை ஒரு திருமண விருந்தில் கலந்து கொண்ட பொழுது மிக அதிக அளவு சஹனில் ஊறுகாய் மட்டும் வைத்து சாப்பிட்ட பின்பு மட்டன் வரிகைகள் பரிமாறப்பட்டன. எனக்கு ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. வீட்டுக்கு கொண்டு செல்ல பெரிய பாட்டிலில் ஊறுகாயும் தந்தார்கள். மறக்க முடியாத சுவையான ஊறுகாய்.
முத்துப்பேட்டை வட்டார நண்பர்கள் இதுபற்றி பின்னூட்டம் இடுவார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? 28
ஐஸ்க்ரீம்.



கனடா நாட்டில் உள்ள டிஸ்டேல் நகர் சுமார் 3000 பேரை மக்கள் தொகையாக கொண்ட ஊர். இந்த நகரின் மையப்பகுதியில் கடந்த மாதம் 2021 ஜூலை 31ஆம் தேதி சிவப்பு வண்ணம் பூசப்பட்ட ஹெலிகாப்டர் ஒன்று தரையிறக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.
அந்த மாகாணத்தின் மருத்துவ விமான ஆம்புலன்சின் அதே வண்ணம் அந்த ஹெலிகாப்டருக்கும் பூசப்பட்டிருந்ததால், அப்பகுதி மக்கள் காவல்துறையினருக்கு இதுகுறித்து தகவல் அளித்துள்ளனர். மேலும், அவசர மருத்துவ உதவிக்காக ஒருவேளை ஹெலிகாப்டர் தரையிறக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் நினைத்துள்ளனர்.

இது தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில், ஹெலிகாப்டரை இயக்கிய பெயர் குறிப்பிடாத 34 வயதான பைலட், ஐஸ்கிரீம் சாப்பிட விரும்பியதால், அதனை எந்த ஒரு முன் அறிவிப்பும் இல்லாமல் தரையிறக்கியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.
இதனைத் தொடர்ந்து பைலட் மீது வழக்குப் பதிவு செய்த போலீசார் செப்டம்பர் 7ஆம் தேதிக்குள் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டுள்ளனர்.
அவரிடம் ஹெலிகாப்டரை இயக்குவதற்கான லைசன்ஸ் இருந்தாலும், பார்க்கிங் இல்லாத இடத்தில் அவர் அதனை இறக்கியதும், ஐஸ்கிரீம் சாப்பிடுவது ஒன்றும் அவசரத்தேவை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானத்தில் பறக்கிறதையும் தன் ஈர்ப்பாற்றலால் பூமியில் ஈர்க்க வைக்கும் சக்தி ஐஸ்கிரீமுக்கு உண்டென்பதை உலகம் உணர்ந்து கொண்டது .
“ஒரு போட்டியில் ஜெயித்ததும், அந்த வெற்றியை ஒரு ஐஸ் க்ரீம் சாப்பிட்டுக் கொண்டாடுவது என் வழக்கம்’’ - இப்படிச் சொல்பவர் பாட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால். இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுக்க ஐஸ் க்ரீம் பிரியர்கள் அதிகம்.
ஒரு பஃபே விருந்தில் விதவிதமான உணவுகள் இருந்தாலும், ஆரம்பத்திலேயே ஐஸ் க்ரீம் கவுன்ட்டர் அருகே களைகட்டும் கூட்டம் எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. குழந்தைகள், பெரியவர்கள் என விதிவிலக்கில்லாமல் அனைவரையும் ஈர்க்கும் அபார சுவை இதற்கு உண்டு.
வெனிலா, சாக்லேட், ஸ்ட்ராபெர்ரி… என நீள்கிற ஐஸ்க்ரீம் வகைகள் தரும் பரவசம் ஒருபுறம் இருக்கட்டும். ஆரோக்கியத்தைப் பொறுத்த வரை இதன் உண்மை நிலவரம் என்ன… பார்க்கலாமா?
முப்பது வருடங்களுக்கு முன்னால் ‘குச்சி ஐஸ்’ என்று ஒன்று இருந்தது. ஒரு சிறிய மர வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவார் ஐஸ்காரர். உள்ளங்கை அளவுக்கே இருக்கும் சதுரமான மூடியைத் திறந்து, கையை உள்ளேவிட்டு அதை எடுத்துத் தருவார்.
பார்த்தவுடனேயே பிள்ளைகளுக்கு ஜொள்ளு வடியும். ஆரஞ்சு, மஞ்சள், ரோஸ், சிவப்பு, வெள்ளை, கறுப்பு என விரிகிற நிறங்கள் சொக்கவைக்கும். `அந்த கலர் ஐஸை எடுத்திருக்கலாமோ!’ என தன் கையில் இருப்பதோடு, மற்ற பிள்ளைகளின் கையில் இருப்பதை ஒப்பிட்டுப் பார்த்து ஏங்கவைக்கும். சில நேரங்களில் ஐஸோடு ஜவ்வரிசி, சேமியா எல்லாம் கலந்து ஜில்லென்ற சுவை மிரட்டும்.
குச்சி ஐஸ், பால் ஐஸ், கப் ஐஸ், கோன் ஐஸ், ஃபலூடா எனப் பல வடிவங்கள்… வெனிலா, சாக்லேட், மேங்கோ, பட்டர்ஸ்காட்ச் என விதவிதமான ஃப்ளேவர்கள்… அத்தனையிலும் ருசித்து ரசிக்க ஐஸ் க்ரீம் போன்ற அட்டகாச உணவு வேறு இல்லை.

இன்றைக்கும் தமிழ்நாட்டின் சில நகரங்களில் `குல்ஃபி ஐஸ்’ என்று ஒன்று உண்டு. பெரிய மண் பானையை வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வருவார் ஐஸ்காரர்.
உள்ளே மெட்டல் கிண்ணங்களில், உருண்டை வடிவில் இருக்கும் குல்ஃபியை கத்தியால் லாகவமாகப் பிரித்தெடுத்து, ஒரு குச்சியைச் செருகி நீட்டுவார். லேசாக உப்புச் சுவை கூடிய குல்ஃபி, ஆயிரக்கணக்கான மக்களின் ஃபேவரைட்! இரவு பத்து மணி தாண்டிய பிறகும், காத்திருந்து அதை வாங்கி, சுவைத்து மகிழ்பவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.
ஆங்கிலத்தில் இதை `டெசர்ட்’ (Dessert) என்கிறார்கள். அதாவது, உணவுக்குப் பிறகு வழங்கப்படும் இனிப்பு. `ஐஸ் க்ரீமைக் கண்டுபிடித்தது நான்தான் என்று யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால், அது கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம்’ என்கிறார்கள் வரலாற்று அறிஞர்கள். ஆனாலும், எங்கே, எப்போது, யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்பது புரியாத மர்மமே! மாவீரன் அலெக்ஸாண்டர் ஐஸ் கட்டிகளுடன் பழச்சாறு, தேன் கலந்து பருகியிருக்கிறான்.
பைபிளில் சாலமன் அரசன், அறுவடைக் காலங்களில் ஐஸ் கட்டி கலந்த பானத்தைப் பருகியதாகக் குறிப்பு இருக்கிறது.

ரோம் நகரை ஆண்ட நீரோ மன்னன் (Nero Claudius Caesar) தன் வீரர்களை பனி மலைகளுக்கு அனுப்பி, அங்கிருந்து பனித்துகள்களைக் கொண்டு வந்து, பழங்களிலும் பழச்சாறிலும் கலந்து பருகியிருக்கிறான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாத்ரீகர் மார்கோ போலோ இத்தாலிக்கு வந்தபோது, கையோடு கொண்டு வந்த ஒரு ரெசிப்பிதான் இன்றைய சர்பத் என்றும் சொல்கிறார்கள். ஐஸ் க்ரீம் என்கிற டெசர்ட் விரிவாக்கம் பெற்றது 16-ம் நூற்றாண்டில் இருக்கலாம் என்கிறார்கள் வரலாற்றாளர்கள்.

இங்கிலாந்தில் அது ஆரம்பத்தில் `க்ரீம் ஐஸ்' என்று அழைக்கப்பட்டதாம். இன்னும் ஃபிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா என்று இது உருவான வரலாறு சுற்றிச் சுழன்றடித்து விரிந்துகொண்டே போகிறது.
பாரீஸில் உள்ள `கேஃப் புரோகோப்' (Cafe Procope) என்ற ரெஸ்டாரன்ட்தான் முதன்முதலில் பால், க்ரீம், வெண்ணெய், முட்டை எல்லாவற்றையும் கலந்து ஐஸ்க்ரீமை உருவாக்கி, ஐஸ் க்ரீம் விற்பனையை ஆரம்பித்து வைத்தது என்ற குறிப்பும் இருக்கிறது.

இந்தியாவுக்குள் இது நுழைந்ததென்னவோ இந்து குஷ் மலையில் இருந்து டெல்லிக்கு வந்த முகலாயர்களால்தான். ஐஸை அவர்கள் சர்பத்துக்குப் பயன்படுத்தினார்கள்.
ஐஸ் க்ரீமைப் போலவே அதன் வரலாறும் திகட்டாத சுவை உடையது. `நான் மகான் அல்ல' படத்தில் ஒரு காட்சி வரும். நடிகர் கார்த்தி, கல்யாண மண்டபத்தில் ஒரு குழந்தைக்கு ஐஸ் க்ரீம் கொடுப்பதற்காக பெட்டியைத் திறப்பார். உடனே மண்டபத்தில் குழுமியிருக்கும் மொத்த குழந்தைகளும் அங்கே படையெடுப்பார்கள். இது வெறும் திரைப்படக் காட்சி அல்ல. உண்மை நிலையும் இதுதான்.
குழந்தைகள் என்ன... சாப்பாட்டைக் குறைத்துக்கொண்டு ஐஸ் க்ரீமை வெட்டும் பெருசுகளும் இருக்கிறார்கள். அந்தப் பரவசம் ஒருபுறம் இருக்கட்டும்... ஐஸ் க்ரீம் நம் உடலுக்கு ஆரோக்கியம்தானா? டயட்டீஷியன் சௌமியாவிடம் கேட்டோம்...

``ஐஸ் க்ரீம் நம் உடலுக்கு நன்மையும் தீமையும் கலந்து தரக்கூடியது... ஆனால், தீமைகளின் அளவு கொஞ்சம் அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். அதிகக் கொழுப்புள்ள பால், க்ரீம் கலவையைக் கடைந்து, குளிரூட்டி தயாரிக்கப்படுவது ஐஸ்க்ரீம். `கார்ன் சிரப்' என்ற வடிவில் ஃப்ரக்டோஸ் (Fructose) அல்லது குளுக்கோஸ் இனிப்புகள் இதில் V
விதவிதமான வகைகள், இதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின அடிப்படையில் இதில் உள்ள ஊட்டச்சத்தின் அளவு வேறுபட்டாலும், பொதுவாக ஐஸ் க்ரீம், நம் உடலுக்கு சக்தி தரும் ஒன்று. இதில் கார்போஹைட்ரேட் அதிகம் உள்ளது.

அதாவது, ஒன்றரை கப் (சிறிய அளவு) ஐஸ் க்ரீமில், 15 கிராம் கார்போஹைட்ரேட் உள்ளது. அதோடு இதில் உள்ள 7 கிராம் கொழுப்பு, 2 கிராம் புரோட்டீன் ஆகியவையும் சேர்ந்து நம் உடலுக்கு சக்தி அளிக்கக்கூடியவை. 137 கலோரி இதில் இருக்கிறது. சுருக்கமாக, ஒன்றரை கப் பாலில் இருக்கும் கலோரியைப்போல இரு மடங்கு! ஆக, உடலில் சக்தி அதிகரிக்க, உடல் எடையைக் கூட்ட நினைப்பவர்களுக்கு இது சிறந்தது.

இதில் பாஸ்பரஸும் கால்சியமும் நிறைந்துள்ளன. வைட்டமின்கள் ஏ, சி, இ, டி ஆகியவை உள்ளன. தையமின், ரிபோஃப்ளோவின், நியாசின், ஃபோலேட், வைட்டமின் பி-6, வைட்டமின் பி-12, மிகக் குறைந்த அளவில் வைட்டமின் கே ஆகியவையும் உள்ளன.
அதிகக் கொழுப்புள்ள உணவு ஐஸ் க்ரீம். இதில் பால் கொழுப்பு (Milk Fat) அதிக அளவில் உள்ளது. இது ஒரு நிறைவுற்ற (Saturated) கொழுப்பு. ஒருவருக்கு ரத்தத்தில் கொலஸ்ட்ரால் அதிகம் உள்ள பட்சத்தில், ரத்த நாளங்களில் (Arteries) படியும் கொழுப்பு, ரத்த ஓட்டத்தைப் பாதிக்கும்; இதயக் கோளாறுகள், பக்கவாதம் ஆகியவை வருவதற்கும் வழிவகுக்கும்.

அதோடு சர்க்கரை, கார்போஹைட்ரேட் ஆகியவற்றின் அளவும் இதில் அதிகம். அடிக்கடி அல்லது அதிக அளவில் ஐஸ்க்ரீம் சாப்பிடுவது உடல் எடையைக் கூட்டும்; பல உடல்நலக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும்; பற்சிதைவை உண்டாக்கும். சர்க்கரைநோயாளிகளும், கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்களும் ஐஸ்க்ரீமைத் தவிர்ப்பதே நல்லது.

ஐஸ் க்ரீமில் லேக்டோஸ் (Lactose) என்ற சர்க்கரைப் பொருள் இருக்கிறது. இது செரிமானம் ஆவதற்கு நம் உடலில் உள்ள லேக்டேஸ் (Lactase) என்ற என்ஸைம்தான் உதவும். உடலில் லேக்டேஸ் குறைவாக இருப்பவர்களுக்கு, `லேக்டோஸ் ஒவ்வாமை' (Lactose Intolerance) எனும் பிரச்னை ஏற்பட்டு செரிமானத்தைப் பாதிக்கும். இந்தக் குறைபாடு உள்ளவர்கள் ஐஸ் க்ரீம் பக்கம் போகாமல் இருப்பதே சிறந்தது'' என்கிறார் சௌமியா.

குழந்தைகளுக்கு பற்சிதைவு, ஐஸ் இருப்பதால் இருமல், சளித் தொந்தரவு ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அதிக ஐஸ், தொண்டையை பாதிக்கும். எனவே, ஐஸ் க்ரீமை அளவாக, எப்போதாவது சாப்பிடுவது என வைத்துக்கொள்வதே ஆரோக்கியம்!
குறிப்பு :- " உண்ணும் உணவைக் கவனித்தீர்களா ? " தொடர் பதிவு இத்துடன் நிறைவு பெறுகிறது .

விலங்குகளின் உலகம் 1

"ஒட்டகம் – பாலைவனத்திற்காகவே படைக்கப்பட்ட ஜீவன்"



இறைவனின் படைப்புகளிலேயே மிகவும் அற்புதமான ஓர் படைப்பே ஒட்டகமாகும். இது பற்றி அல் குர்ஆனில் இறைவன்
اَفَلَا يَنْظُرُوْنَ اِلَى الْاِ بِلِ كَيْفَ خُلِقَتْ
(நபியே! இந்நிராகரிப்பவர்கள் தங்களிடமுள்ள) ஒட்டகத்தையேனும் அவர்கள் கவனிக்கவேண்டாமா? அது எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது? (அல்குர்ஆன் : 88:17)

இரண்டடுக்கு கண் இமையில் உள்ள நீண்ட சீப்பு போன்ற தடித்த நெருக்கமான முடிகள் ஒன்றன் உள் ஒன்றாக கோர்த்துக்கொண்டு மணற்புயலிலிருந்து கண்ணிற்கு முழுப்பாதுகாப்பு அளிக்கிறது.
கண்களுக்கு கீழே உள்ள இமை போன்ற திரை அமைப்பு வாகனத்தின் வைப்பர் போல செயல்பட்டு கண் பரப்பை சுத்தப்படுத்தி கூடுதலாய் கண்களுக்கு பாதுக்காப்பை அளிக்கிறது. இதனால் மணற் புயல் வீசும் போது உள் இமை மூடிக் கொள்ளும் உள் இமை ஒளி ஊடுருவி செல்லக் கூடியதாக இருக்கிறது . இதனால் கண்ணை மூடிக் கொண்டு பயணிக்க முடிகிறது .
கண்ணிலும் அதன் கண்ணிற்கு மேலே அமைந்துள்ள முகடு போன்ற எலும்பமைப்பும், புருவமும் பாலைவனத்து சூரியனின் பிரகாசமான வெளிச்சம் கண்களைத் தாக்கி விடாமல் வெளிச்சத்தை பாதியாக தடுத்து விடுகிறது.
அதன் தலையின் ஓரத்தில் கண்கள் அமைந்து இருப்பதால் தலையை திருப்பாமல் எல்லா இடத்தையும் ஒரே நேரத்தில் பார்க்கும் வசதியுள்ளது ஒட்டகம்.

பாலைவனத்தின் சூட்டில் கண்கள் காய்ந்து விடாமல் இருப்பதாற்காக அதிகமான நீரை சுரந்து கண்களை ஈரம் குறையாமல் வைத்துக் கொள்கிறது சுரப்பிகள்.
பாலைவனத்து அரபிகளால் 160க்கும் அதிகமான செல்லப் பெயர்களால் அழைக்கப்படும், முக்கியமான பெயராக "இறைவனின் பரிசு " என்று அழைக்கப்படும் இந்த அதிசயப் பிராணி உணவும், நீரும் கிடைக்கும் பொழுது அதை திமிலாக்குள் சேமித்துக்கொள்கிறது.
ஒட்டக திமில் சுமார் 45கிலோ எடை இருக்கும் அதில் அதிகமாக கொழுப்பு இருக்கும்.எதற்காக என்றால் உணவோ, நீரோ கிடைக்காத காலத்தில் அதன் திமிலின் கொழுப்பில் உள்ள ஹைட்ரஜனோடு அது சுவாசிக்கும் காற்றில் உள்ள ஆக்ஸிஜனை கலந்து நீராகவும், உணவாகவும் மாற்றிக் கொள்கிறது.
ஒட்டகம் ஓர் அனைத்துண்ணி. சைவம் அசைவம் அனைத்தையும் சாப்பிடும். முற்கள் அடர்ந்த கற்றாழை, மாமிசம், எலும்பு ,உப்பு ,இனிப்பு , எதையும் பாரபட்சமில்லாமல் சாப்பிடும் .நல்ல தண்ணீர் உப்பு தண்ணீர் எதையும் குடிக்கும்

உணவு மட்டும் கிடைத்தால் போதும் நீரின் தேவையில்லாமல் ஒரு மாதம் காலம் பயணம் செய்யும். உணவோ, நீரோ கிடைக்காவிட்டால் கூட இரண்டின் தேவையில்லாமல் ஒரு வார காலம் பயணம் செய்யும். குளிர் காலங்களில் ஆறு மாத காலம் வரை கூட நீர் அருந்தாமல் வாழும். நீர் கிடைத்தால் 100 லிட்டர் தண்ணீரை 3 நிமிடங்களுக்குள் குடித்து விடும்.
فَشٰرِبُوْنَ شُرْبَ الْهِيْمِ
(அதுவும் அவசர அவசரமாக) தாகித்த ஒட்டகம் குடிப்பதைப் போல் நீங்கள் குடிப்பீர்கள். (அல்குர்ஆன் : 56:55)
குடிக்கும் நீரை இரத்தத்தின் சிகப்பு அணுக்களில் ஏற்றிக் கொள்கிறது அதற்காக அணுக்கள் அதன் உண்மையான அளவை விட 200 மடங்கு விரிந்து இடமளிக்கிறது.
மற்ற மிருகங்கள், மனிதர்களுக்கு ஒரு மடங்கு விரிந்தால் போதும் வெடித்து விடும். மேலும் இரப்பையில் உள்ள நீர் அறைகளிலும் (WATER CELLS) நீரை ஏற்றிக் கொள்கிறது. மனிதனாகட்டும், மிருகமாகட்டும்

எல்லாவற்றிற்கும் இர்த்தத்தின் சிகப்பு அணுக்கள் வட்ட வடிவமாக (Round) இருக்கும். ஆனால் ஒட்டகத்திற்து மட்டும் முட்டை (ஓவல்) வடிவத்தில் இருக்கும்

நீரிழப்பினால் வறட்சி ஏற்படும் சமயத்தில் மற்ற பிராணிகளின் மற்றும் மனிதன் இரத்தம் பாகு நிலைக்கு வந்து விடும். அதனால் இரத்த ஓட்டத்தின் வேகம் வெகுவாக குறைந்து விடும். அதன் காரணத்தால் வாழ தேவையான இதமான சூட்டை தோலுக்கு அளிக்க முடியாமல் எகிறும். பிறகு சூட்டினால் வெடிப்பு மரணம் (EXPLOSIVE HEAT DEATH) நிகழ்ந்து விடும். ஆனால் ஒட்டகத்திற்கு மட்டும் அப்படி நேராது. ஏனென்றால் உடல் திசுக்களில் உள்ள நீர் மட்டும் குறையாது. நீரில்லாமல் இதன் இரத்தத்தில் நீர் அளவு குறையாது.
நீரில்லாமல் நீண்ட நாள் வறட்சி ஏற்பட்டு, நீண்ட இடைவெளிக்குப்பிறகு நீர் அருந்தினால், அது குறைந்த அளவாக இருந்தால் கூட மற்ற பிராணிகளுக்கு (மனிதன்) நீர் போதை (Water Intoxication) ஏற்பட்டு இறப்பு நிகழந்துவிடும். ஆனால் ஒட்டகம் வறட்சிக்குப் பிறகு நூற்றுக்கணக்கான லிட்டர் தண்ணீரும் குடிக்கும். சாகவும் செய்யாது.

வெயிலின் சூடு 104 டிகிரியை அடைய வேண்டும்.அப்போது தான் ஒட்டகத்துக்கு வியர்வையே வரும். அதுவரை வியர்க்காது. அதன் உடல் அளவிற்கு அதிகமான வியர்வை சுரப்பிகள் இருக்கவேண்டும். ஆனால் மிகவும் குறைவாக இருப்பது ஒரு தனித்தன்மையே ஆகும். மற்ற பிராணிகள் (மனிதன்) உடல் சூட்டை வியர்த்து குளிர்வித்துக் கொள்ளும்.
ஆனால் ஒட்டகம் மட்டும் பகல் காலங்களில் வெப்பத்தை 12 டிகிரி வரை சேர்த்து வைத்துக் கொள்ளும். அதனால் அதன் சூட்டை வியர்க்க வைத்து வெளியேற்றாமல் (வியர்ப்பது நீருக்கு நஷ்டம்) இரவின் குளிரான காற்றை பயன்படுத்தி வெளியாக்கி விடுகிறது.

ஒட்டகத்திற்கு இருப்பது போல் சக்தி வாய்ந்த சிறுநீரகம் வேறு எதற்கும் கிடையாது. நம்முடைய சிறுநீரில் அதிகபட்சமாக தாது கழிவுகள் 8 சதமும் 92 சதம் நீரும் இருக்கும். ஆனால் ஒட்டகத்தின் சிறு நீரில் 40 சதத்திற்கும் அதிகமான கழிவுகளும், குறைவான நீரும் இருக்கும் அந்த அளவிற்கு குறைவான நீரைக் கொண்டு கழிவை வெளியேற்றும் சக்தி வாய்ந்தது அதன் சிறுநீரகம். நம்முடையதாக இருந்தால் வேலையை நிறுத்தி இருக்கும் மிகவும் குறைந்த அளவு சிறுநீர் கழிக்கும் பழக்கம் உள்ளது ஒட்டகம். அதன் உடம்பில் புரோட்டின் என்ற சத்து குறைய ஆரம்பித்தால் சிறுநீரில் வெளியாகும் யூரியா என்ற கழிவின் அளவை குறைத்துக் கொண்டு அதை (Microbial Synthesis) புரோட்டீனோடு கலந்து சக்தியாக மாற்றி விடுகிறது அதன் உள் உறுப்புகள்.

ஒட்டகத்தின் சிறுநீர் மிகவும் அடர்த்தியானதாகும். இதன் அடர்த்தி கடல்நீரை விட அதிகமானது. அதன் சிறுநீர் மருந்துத் திரவம் அல்லது பழச்சாறு போன்று அமைந்திருக்கின்றது. ஒட்டகத்தின் சிறுநீரில் மருத்துவ குணம் இருக்கின்றது என்று இன்றைய அறிவியல் உலகம் கூறுகின்றது.
"உக்ல்' அல்லது "உரைனா' குலத்தாரில் சிலர் (மதீனாவிற்கு) வந்தனர். அவர்களுக்கு மதீனாவின் தட்ப வெப்பநிலை ஒத்துக் கொள்ளவில்லை. எனவே (அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க) பால் ஒட்டகங்களைச் சென்றடைந்து, அவற்றின் சிறு நீரையும் பாலையும் பருகிக்கொள்ளுமாறு அவர்களை நபியவர்கள் பணித்தார்கள். அவ்வாறே அவர்களும் (ஒட்டகங்களை நோக்கி) நடந்தனர். (அவற்றின் சிறுநீரையும் பாலையும் பருகி) அவர்கள் உடல் நலம் தேறினார்கள். நூல்: புகாரி 233
நபி (ஸல்) அவர்கள் உரைனா கூட்டத்தினரை ஒட்டகத்தின் சிறுநீர் குடிக்கச் சொன்னதன் அறிவியல் உண்மையும் நமக்குப் புலனாகின்றது.

மற்ற பிராணிகளின் (மனிதன்) மலம் காய்வதற்கு குறைந்தபட்சமாக இரண்டு நாட்கள் வேவைப்படும். ஆனால் ஒட்டகத்தின் மலத்தை போட்ட ஒரு சில மணி நேரத்தில் பற்றவைத்து விடலாம், என்ற அளவிற்கு நீரே கலக்காமல் சக்கையை மட்டும் வெளியேற்றும் சக்தி வாய்ந்தது ஒட்டகம்.
பசு மலம், சிறுநீர் வழியாக 20 லிட்டர் நீரை ஒரு நாளைக்கு வெளியேற்றுகிறது. ஆனால் ஒட்டகம் 1 லிட்டர் நீரை கூட இழப்பதில்லை.

நம்முடைய மூச்சை ஒரு கண்ணாடியில் மேல் விட்டு நோக்கினால் அங்கே ஈரம் படர்வதை காணலாம். நாம் 1-லிட்டர் காற்றை சுவாசித்து வெளியேற்றினோம் என்றால் 16 மில்லி கிராம் நீரை இழந்திருப்போம். ஆனால் ஒட்டகத்தின் மூச்சில் ஈரம் மிகவும் குறைவாக இருக்கும்.
ஏனென்றால் மற்ற எதற்குமில்லாத விசேஷ மூக்கமைப்பு தான் இதன் காரணம். அதன் மூக்கிற்குள் அமைந்திருக்கும் இடுக்கான திசு அமைப்புகள். அது சுவாசித்து வெளியேற்றும் காற்றில் உள்ள ஈரத்தில், மூன்றில் இரண்டு பகுதியை வெளியேறி விடாமல் தடுத்து விடுகிறது.
பாலைவன மணல் பகுதியில் சுற்றித் திரியும் விலங்கினம் என்பதால், இயற்கையாகவே ஒட்டகங்களுக்கு வித்தியாசமான சுவாச உறுப்புகள் அமைந்துள்ளன. மூக்கு, வாய்ப் பகுதிகள் மிகவும் தடிமனாக

இருப்பதால், இதன் மூக்குக்குள் எளிதாக மணல் புகாது. முன்னங்கால்களையும் பின்னங்கால்களையும் வித்தியாசமாக மடக்கிவைத்து இது படுத்திருப்பது வித்தியாசமான காட்சி
மேலும் அதன் மூக்கிலிருந்து வழியும் சளியைக் கூட அதன் மூக்கின் அமைப்பு உதட்டின் மேல் வெடிப்பு வழியா மீண்டும் வாய்க்குள் அனுப்பிவிடுகிறது. பல மைல்களுக்கு அப்பால் உள்ள நீரை கூட மோப்ப சத்தியால் அறிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தது அதன் மூக்கு.
ஒட்டகம் பாலைவனத்தின் தரையில் படுக்கின்ற போது, தரைச் சூடு அதன் உடலில் தாவி, வாட்டி வதைத்துவிடக் கூடாது என்பதற்காக அதன் உடல் அமைப்பில் சில குறிப்பிட்ட தோல் பகுதிகள் பல அடுக்குகளால் ஆகியிருக்கின்றது.
இதுபோன்றே ஒட்டகமும் பிறக்கும் போதே அதன் தோல் பகுதி வெப்பம், குளிர் போன்றவற்றைத் தாக்குப்பிடிக்கும் அளவுக்குத் தடிமனாக அமைந்துள்ளது.

ஒட்டகத்தின் பாத அமைப்பு வித்தியாசமானது..! வெடித்த இரு குளம்புகளையும் சேர்த்து மிக அகன்றவட்ட வடிவினாலான தட்டையான பாதத்தை கொண்டது.
முன்புறம் அதன் இரு குளம்புகளும் விரிந்து கொள்ளும் காரணத்தால் 500 கிலோ வரை எடையுள்ள ஒட்டகம் 450 கிலோ வரை சுமையை சுமந்து கொண்டு மணலில் கால்கள் புதைந்து விடாமல் நிலைதடுமாறி கீழே விழுந்துவிடாமல் கொதிக்கும் மணலிலும் ஓட முடிகிறது..! அப்போது, அதன் பாத குளம்புத்தோல் மிகத்தடிமனானதால் கடும் வெப்பத்தினாலும் பாதிக்கப்படாது..!

மனிதர்கள் விலங்குகள் ஆகிய அனைத்திற்கும் கால்களில் இரண்டுமடக்கும் மூட்டு இணைப்புகளை மட்டுமே பார்த்திருப்பீர்கள். ஆனால் ஒட்டகத்திற்கு மட்டும் மூன்றுமடக்கும் இணைப்புகள் இருக்கும்..! அதனால் தான் ஒட்டகத்தால் எளிதாக பாலைவன மணலின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்க முடிகிறது..! மனிதர்கள் அதன்மீதுஏறி இறங்க விரும்பினால், உடன் எவ்வளவு சூடாக கொதிக்கும் மணலிலும் உடனே முட்டிபோட்டு மண்டி இடும்..! அப்படி மண்டி இடும்போது அதன் முட்டுக்காலிலும், கால் குளம்புத்தொளைப்போன்றே தடிமனான வெப்பத்தினால் பாதிக்கபடாத தோல் அங்கும் அமைந்துள்ளது..! ஒட்டகத்தின் கால்கள் நல்ல உயரமானதாக இருப்பது ஏனென்றால், கடும் கோடையில் பாலைவனத்தில் ஒட்டகம் நடக்கும்போது கொதிக்கும் மணலின் அனல் உக்கிரம் அதன் வயிற்றுப்பகுதி உடம்பில் தாக்காமல் இருக்கத்தான்..! மேலும் உயரமான கால்கள் அதிக எடை சுமக்கவும் அவசியமாகிறது..!

பாலைவனத்தில் ஆளே முழ்கச் செய்யும் புதைமணல் கிணறுகள் கண்ணுக்குத் தெரியாது .ஒட்டகம் தன் பாதத்தால் மணலின் நெகிழும் தன்மையைக் கண்டு தன் பயணத்தின் திசையை மாற்றியமைத்து அதனக் கடந்த பின் சரியான திசையில் பயணிக்கும்.
மனிதன் பயணிக்கின்ற இந்த பாலைவனக் கப்பலில் தான் அல்லாஹ்வின் எத்தனை தொழில்நுட்பங்கள் அமைந்துள்ளன.
அல்லாஹு அக்பர்! இது மிகப் பெரிய இறை ஏற்பாடாகும்.

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 2
சிங்கம்



எதை வைத்து சிங்கத்தைக் ' காட்டுக்கு ராஜா ' என்று கூறுகிறார்கள் ?
ஆண் சிங்கத்தின் கம்பீர தோற்றம்தான் அதனை ராஜா என்றழைக்க வைக்கிறது. புலி, பார்க்க பூனை மாதிரி இருக்கிறது சிறுத்தை தான் வேட்டையாடிதை மரத்தின் உச்சியில் வைத்துக் கொள்ளும் சரியான சுயநலம் கருமி
ஆனால் சிங்கம் வேட்டையாடிய விலங்குகளை முழுவதுமாக உண்ணாமல், எலும்பு அதனையொட்டிய சதைப்பகுதிகளை அப்படியே விட்டுவிடும். இதுதான் ஓர் அரசனுக்குரிய மனப்பான்மை. அதனால் மற்ற விலங்குகள் ஓநாய், கழுதைப் புலி முதலானவை எஞ்சியவற்றை உண்டு வாழ்கின்றன.
நரி, ஓநாய், ஒட்டகைச் சிவிங்கி, பன்றி எல்லாமே கம்பீரமே இல்லாமல் வாலை காலுக்கிடையில் நுழைத்து பம்முகின்றன

யானை பெரிசுதான் ரொம்பவும் slow . மேலும் சுத்த வெஜிடேரியன் கூட்டமாக இருக்கும் போதுதான் அதற்கு பலம். தனி யானைக்கு அத்தனை வீரம் கிடையாது. அது ராஜாவுக்கெல்லாம் ஆசைப்படக் கூடாது
சிங்கம் ஒன்றுதான் பிடரி,பார்வை, சைஸ், நடை ,கூடவே அலட்சியம் எல்லாவற்றிலும் சூப்பர் !
தமிழ் சினிமா கதாநாயகர்கள் அவ்வப்போது சிலிர்த்து எழுந்து வில்லனைத் தாக்க Morphing க்கு உகந்தது சிங்கம்தான்.
"ஓங்கி அடித்தால் ஒன்னரை டன் வெயிட் பார்க்கிறீயா பார்க்கிறீயா... அப்புறம் சிங்கம்தான் சிங்கிளா வரும் " போன்ற நவீன சொற்றொடர்கள் சிங்கத்திற்குதான் ராஜா அந்தஸ்து

சிங்கம் காட்டினில் தன் ஆளுமைக்கு உட்பட்ட ஏரியாவை கைப்பற்றி அதைச் சுற்றி தான் மூத்திரம் பெய்ந்து. கையகப்படுத்திக் கொள்ளும். இந்த ஏரியாவிற்குள் வேறு எந்த ஆண் சிங்கம் கூட வரக்கூடாது என்ற மானசீகமாக கட்டளை இடும். இது காட்டுக்கு ராஜாவான சிங்கத்தின் நியதி. இதை எல்லா காட்டு விலங்குகளும் மீறாது.
சிங்கம் என்பது பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்கு ஆகும். தமிழில் ஆண் சிங்கத்திற்கு " அரிமா " என்று பெயருண்டு. குற்றாலக் குறவஞ்சியில் "ஆளி" என்ற சொல்லையும் அரிமாக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

கழுத்து பிடரியைச் சுற்றி சிகை இருப்பது ஆண் சிங்கத்திற்கு வெகு சிறப்பாகும். பெண் சிங்கத்திற்கு இந்த சிகை அலங்கரமெல்லாம் இல்லாமல் , ஆண் சிங்கத்தை பிடித்து வைத்து தாடி ,தலைமுடியெல்லாம் சிரைத்த மாதிரி பெண் சிங்கம் இருக்கும் .
சிங்கமானது பூனைப் பேரினத்தைச் சேர்ந்தது. பூனைப் பேரினத்திலேயே, புலிக்கு அடுத்தாற்போல இருக்கும் பெரிய விலங்கு சிங்கம்தான்.
ஆண் சிங்கம் 150-250 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். பெண் சிங்கம் 120-150 கிலோ கிராம் எடை கொண்டதாக இருக்கும். அதே சமயம் மிகவும் சிறிய இருதயம் கொண்ட மிருகம் எதுவென்றால் அது சிங்கம்தான். இவ்விலங்கு இன்று ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள காடுகளில் மட்டுமே காணப்படுகின்றது.

பெண் சிங்கங்கள் பசியாற நாளொன்றுக்கு 5 கிலோ இறைச்சியும், ஆண் சிங்கங்களுக்கு நாளொன்றுக்கு 7 கிலோ இறைச்சியும் தேவைப்படும்.

ஒரு முறை வேட்டையாடி உண்ட சிங்கம் 16 மணி நேரம் வரை சோம்பேறி போல தூங்குகிறது. அந்த நேரத்தில் வேட்டைப் பிராணிகள் அருகில் வந்தாலும், அதனை சிங்கம் ஒன்றும் செய்யாது.
ஆண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 12 வருடங்களும் பெண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 16 வருடங்களும் ஆகும்.

உடற்கூற்றின்படி இரு பாலிங்களும் ஆயுட்காலத்தில் சர்வ வல்லமை படைத்திருந்தாலும், ஒரு கூட்டத்தில் ஒரு வயது முதிர்ந்த ஆண் சிங்கமே இருக்க வேண்டும் என்பதால் தலைவனான ஆண் சிங்கம் 10 வயது வருவதற்குள்ளாகவே அக்குழுவில் உள்ள மற்ற இளைய சிங்கத்தோடு சண்டையிட்டு இறக்கவோ, அதிக காயத்திற்குள்ளதாகவோ ஆக்கப்படுகிறது.
சிங்கக் கூட்டத்தின் தலைவனோ தலைவியோ கூட்டத்தின் ஒரு அங்கத்தினராகவே இருக்க வேண்டும். ஒரு கூட்டத்தில் பொதுவாக ஐந்து ஆறு வயது வந்த பெண் சிங்கங்களும்,சில குட்டிகளுடன் ஓர் ஆண் சிங்கமும் இருக்கும்.
மேலும் கூட்டத்தில் இருந்து விரட்டப்படும் போது, தன்
துணையெல்லாத்தையும் ஜெயித்த இளஞ்சிங்கமே பெண்டாளும். இந்த நியதியைத்தான் மனித அரசாட்சியிலும் நிகழும்.

தன் வயது முதிர்ச்சியாலும், நகங்களும் பற்களும் கூர்மை இழப்பதாலும் வேட்டையாடுவதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. இதனால் அதிக ஊட்டம் அளிக்கக் கூடிய கொம்புடைய மான் போன்ற உயிரிகளையோ மற்ற பெரிய விலங்குகளையோ வேட்டையாட முடியாமல் போகிறது.
இத்தனை வலிமை இழந்த சிங்கம் மிகவும் ஒல்லியாகவும் பலவீனமாகவும் இருப்பதால், வேட்டையாடப்படும் எளிய விலங்குகளாலேயே சில சமயங்கள் கொல்லப்படுகின்றன.
ஆனால் பெண் சிங்கம் வயது முதிர்ச்சி அடைந்தாலும், கூட்டத்தில் ஒன்றாகவே இருக்கும். இதன் காரணத்தாலேயே ஆண் சிங்கம் பெண் சிங்கத்தை விட சராசரி ஆயுட்காலத்தை குறைவாகக் கொண்டுள்ளது.

கூட்டத்தின் அமைப்பில் பெண் சிங்கங்களே அதிக முக்கியத்துவத்தை பெறுகின்றன. ஒரு கூட்டத்தில் இருக்கும் பெண் சிங்கங்கள் எல்லாம் நெருங்கிய உறவினர்களாகவே இருக்கும். இந்த அமைப்பில் விதிவிலக்குகள் குறைவாகவே காணப்படுகின்றன .
சிங்கம் அடர்ந்த காடுகளை விரும்பாமல் அடர்த்தி குறைந்த இலையுதிர்க்காடுகளில் வாழ்வதையே விரும்பும். சிங்கங்கள் நல்ல கேட்கும் திறன் கொண்டவை மேலும் பூனை இனத்தில் உள்ள விலங்குகளில் சிங்கம் கூட்டமாக வாழும் இயல்புடையது. மான், காட்டெருமை, வரிக்குதிரை, பன்றி முதலான விலங்குகளை வேட்டையாடி உண்ணும்.

ஆண் சிங்கங்களின் கர்ஜனை 8 கி.மீ. (5 மைல்கள்) தூரம் வரைகூட கேட்கும். மற்ற விலங்கினங்கள் சிங்கத்தைப் பார்க்காமலே அதன் உறுமல் சப்தத்தைக் கேட்டவுடன் தலைதெறிக்க தன் கூட்டத்தை விட்டு ஓடுமே இது ஒன்று போதாதா... அந்த காட்டிற்கு சிங்கம் மட்டுமே மஹாராஜா என்று !
குர்ஆனில் அல்லாஹ் சிங்கத்தை உவமானக்கும் போது அந்த வசனமே ரொம்ப " கெத்"தாக குறிப்பிடுகிறான்
"நல்லுபதேசத்தை விட்டும் முகம் திருப்புகிறார்களே -
இவர்களுக்கு என்ன நேர்ந்தது?
அவர்கள் வெருண்டு ஓடும் காட்டுக் கழுதைகளைப் போல் அதுவும் சிங்கத்தைக் கண்டு வெருண்டு ஓடும் காட்டுக் கழுதை போல் இருக்கின்றனர் .
குர்ஆன் 74 : 49,50,51

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 3

(மாடு)



' கோ ' என்றால் அரசன், பசு என்று இரண்டு பொருள் தரும். ஆடு மேய்த்தவன் அரசன் ஆனான். மாடு மேய்த்தவன் மன்னன் ஆனான் என்று இந்திய வரலாறு கூறுகிறது.
நபிமார்கள் அனைவரும் கால்நடை மேய்த்தவர்களே ! அதிலும் நபி ஈஸா (அலை) அவர்கள் நானே நல்ல மேய்ப்பாளர் ஆவேன்.

ஆயனின் கோலே அரசனின் செங்கோல் ஆனது. மாடு என்றால் 'செல்வம்' என்று பொருள். ஆவுடையர்கள் பெரிய செல்வந்தர்களாக இருந்தனர். தற்பொழுது இந்தியாவில் மாடு தரும் பொருட்கள் வர்த்தகத்தில் 3 ஆவது இடத்தில் உள்ளது.
மாடு என்று எல்லோராலும் பொதுவாக அழைக்கப்படும் இந்த விலங்கு இந்தியா மட்டுமல்லாது உலகின் எல்லா நாட்டினருக்கும் முக்கியமான வாழ்வாதாரமாக விளங்கக்கூடிய விலங்கு ஆகும்.
இவ்விலங்கின் பால் மனிதனுக்கு மிக உபயோகமான மற்றும் அடிப்படையான திரவ உணவாகும். பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை எல்லோருக்கும் ஏற்ற ஒரு ஊட்டச்சத்து மிகுந்த திரவ உணவாகும்.
இதன் பால் மட்டுமின்றி இதன் பயன் கணக்கிலடங்காதது. ஆண் விலங்கு 'எருது' என அழைக்கப்படுகிறது. நிலத்தில் பயிர் செய்ய ஏதுவாக அதனை உழுவதற்கு பயன்படுத்தி உழுகிறார்கள்.
பாரவண்டி இழுக்கவும், இவ்வெருதுகள் பயன்படுகின்றன. மேற்கத்திய நாடுகள் மட்டுமின்றி தற்போது இந்தியாவிலும் இதன் இறைச்சி உண்ணப்படுகிறது.

பசு மாட்டின் பாலை பயன்படுத்திக் கொள்வதை கடைபிடியுங்கள். ஏனென்றால், அது நிவாரணம் ஆகும்.அதன் நெய் மருந்தாகும்.அதன் இறைச்சி நோயாகும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள் .அறிவிப்பாளர் :- ஸுஹைப் ரலியல்லாஹு அன்ஹு ஆதார நூல் ஹாக்கிம் 4/404
وَاِنَّ لَـكُمْ فِىْ الْاَنْعَامِ لَعِبْرَةً نُّسْقِيْكُمْ مِّمَّا فِىْ بُطُوْنِهٖ مِنْ بَيْنِ فَرْثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآٮِٕغًا لِّلشّٰرِبِيْنَ
நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கின்றது; அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்.
(அல்குர்ஆன் : 16:66)
இந்த இறைவசனத்தின் முதல் பகுதியில் கால்நடைகளிடம் தக்க படிப்பினை உள்ளதாக அல்லாஹ் கூறுகிறான். இங்கு படிப்பினை என்பதை ஆராச்சி என்ற கோணத்தில் பார்க்க வேண்டும். இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள அல்லாஹ் ஐந்து விஷயங்களை முன்வைக்கிறான் அவைகளாவன.
1)கால்நடைகளின் வயிற்றுப்பகுதி
2)வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்ததிற்கும் இடையில்
3)கலப்பற்ற பால்
4)அருந்துபவர்களுக்கு இனிமை
5)தாராளமாக புகட்டுகிறோம்
மேற்கண்ட ஐந்து ஆய்வில் முதல் இரண்டை பார்ப்போம்
1. கால்நடைகளின் வயிற்றுப்பகுதி
2. வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்ததிற்கும் இடையில்
பொதுவாக உயிரினங்களுக்கு வயிற்றுப்பகுதி என்ற அமைப்பு இருக்கும் இங்குதான் சாப்பிட்ட உணவு செரிமானம் ஆகி அந்த செரிமானமாகிய உணவு புரதச்சத்தாக மாறி இரத்தத்தில் கலநது நமக்கு உடல் வலிமையைத் தருகிறது.

ஆனால் இந்த வயிற்றுப்பகுதி ஒருசில கால்நடைகளுக்கு அதாவது பசுமாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள் மற்றும் மான்கள் ஆகியவற்றிற்கு மட்டும் தனியாக அமைந்து அவை மனிதனுக்கு பயன்படும் வகையில் அமைந்துள்ளது. உதாரணமாக பசுமாட்டை இங்கு ஆராய்வோம்.
- பசு மாட்டின் ஆண் இனம் காளை என்றும் அதன்
குட்டி கன்று என்றும் அழைக்கப்படுகிறது.
_ பசு மாட்டால் மாடிப்படியை ஏறமுடியும். ஆனால் இறங்க முடியாது. ஏனென்றால் அதன் முழங்கால் சரியாக வளைந்து கொடுக்காது.
_ பசு மாடு முதன் முறை குட்டி ஈன்ற பிறகு தான் பால் கொடுக்கும்.
_பசு மாடு தனது வாழ்நாளில் கிட்டத்தட்ட 2 லட்சம் முதல் 4 லட்சம் லிட்டர் வரை பால் கொடுக்க வல்லது.
- ஒரு நாளில் 10 லிருந்து15 முறை கீழே உட்கார்ந்து எழுந்திருக்கும்.
- சாதாரணமாக 500 கிலோ எடை உள்ள பசு மாடு ஆண்டுக்கு சுமார் 10 டன் சாணியை கொடுக்கும்.
- ஒரு நாளில் 6 – 7 மணி நேரம் இரை உண்ணவும் 7 – 8
மணி நேரம் அதனை அசைபோடவும் பசுவுக்குத் தேவை.
- அசை போடும் போது நிமிடத் திற்கு சுமார் 40 – 50
முறை தாடையை அசைக்க வேண்டி வருகிறது. இப்படி ஒரு நாளைக்கு 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் முறை தாடையை அசைக்கிறது.
_ ஒரு பசு மாடு நாள் ஒன்றுக்கு 10 – 12 லிட்டர் சிறு நீரும் 15 – 20 கிலோ சாணியும் வெளியேற்றுகிறது. இன்னும் பெரிய
மாடாக இருந்தால் இது அதிகமாகும்.
_ பசு மாடு ஒரு நாளில் சுமார் 100 லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வல்லது.
- மாடு பற்களால் புல்லைக் கடிப்பதில்லை. நாக்கு மற்றும் ஈற்றால் பிடுங்கிச் சாப்பிடுகின்றது.
- பசு மாட்டுக்கு ஒரு வயிறுதான் உண்டு. ஆனால்
அதில் உணவை ஜீரணிப்பதற்காக 4 பகுதிகள் உள்ளன.
- மாட்டின் கண்கள் முகத்தின் இருபுறமும் அமைந்துள்ளதால் கிட்டத்தட்ட 4 பக்கமும் (360 டிகிரி முழு வட்டம்) ஒரே சமயத்தில் பார்க்க வல்லது.
- பசு மாட்டின் நுகருணர்வு மிகவும் கூர்மையானது. சுமார் 6 – 8 கி.மீ. தூரத்திலுள்ள பசுமையை நுகர்ந்து கண்டு கொள்ளும்.
_ கறக்கும் பசுமாடு நாளுக்கு சுமார் 40 – 50 லிட்டர் உமிழ் நீரை சுரந்து ஜீரணத்துக்கு பயன்படுகிறது..
- பசு மாட்டின் உடல் வெப்ப நிலை 101.5 டிகிரி ஃபாரன்ஹீட்.
உலகத்தில் உற்பத்தியாகும் மொத்த பாலில் 90 சதவீதம்
பசும்பால்.
_ உலகத்திலேயே அதிகமாக பால் சுரந்த பெருமை ஹோல்ஸ்டைன் இனத்தைச் சேர்ந்த மாட்டைச் சேரும். அது ஒரு ஆண்டில் சுமார் 26,897 கிலோ லிட்டர் பாலைச் சுரந்தது.
_ ஒரே நாளில் 97 கிலோ பாலைச் சுரந்து உலகசாதனை செய்த மாட்டின்பெயர் உர்பே ஆகும்.
இது வரை அதிக நாட்கள் வாழ்ந்த மாட்டின் வயது 48ஆண்டுகள், 9 மாதங்கள் ஆகும் !
பசுமாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள் மற்றும் மான்கள் ஆகிய கால்நடைகளுக்கு அதன் வயிறுப்பகுதி நான்கு தனித்தனி அறைகளாக அமைந்துள்ளன அவைகளாவன
RETICULUM (ரெடிகுழம்), RUMEN (ரூமென்), OMASUM (ஓமசம்) ABOMASUM (அபோமசம்)
இங்கு குறிபிடத்தக்க அம்சம் என்னவெனில் மேற்கண்ட கால்நடைகளுக்கு மட்டுமே அமைந்துள்ள இந்த 4 அடுக்கு பகுதிகள் பன்றி முதலான மற்ற மிருகங்களுக்கு கிடையாது என்பதே!.
பசுமாடு புல்வகைகளை உணவாக வேகமாக விழுங்குகிறது அந்த விழுங்கிய உணவு நேரடியாக ரூமென் மற்றும் ரெடிகுழம் பகுதிக்கு சென்று சேமிக்கப்படுகிறது பிறகு பசுமாட்டிற்கு உண்ட களைப்பு ஏற்பட்டு அமைதியாக அமர்ந்து விடுகிறது.

சேமிக்கப்பட்ட உணவை ரெடிகுழம் என்ற பகுதி அதன் மற்ற இரு பாகங்களான RUMEN, (ரூமென்) OMASUM, (ஓமசம்) என்ற பகுதிகளுக்குள் தள்ளிவிடுகிறது.
தீனி தின்னும், புல் கண்ட இடத்தில் மேய்ந்து, நீர் கண்ட இடத்திலே குடித்து, நிழல் கண்ட இடத்திலே படுத்து மாடுகள் அசை போடும் .
ஆடு மாடுகள் 'அசைபோடுதல்' உடையவை. தீனி கிடைத்த இடத்தில் அவற்றை வேக வேக தின்று வயிற்றில் சேமித்துக் கொள்ளும் .பின் தின்றதை இரப்பையிலிருந்து மீண்டும் எடுத்து அதன்

வாய்ப்பகுதிக்கு கொண்டு வந்து, அவற்றை செரிப்பதற்கு தக்கவாறு நன்றாக பற்களால் மென்று, உமிழ் நீரோடு சேர்த்து அரைத்து ,மீண்டும் இரப்பைக்குள் அனுப்புகிறது. இதனை அசை போட்டுதல் எனப்படுகிறது .

இந்த இயக்கத்திற்கு ரெடிகுழம் பயன்படுகிறது. இதன் மூலம் முதல் முறையாக உட்கொண்ட உணவு மீண்டும் பசுமாட்டின் வாய் பகுதிக்கு செலுத்தப்பட்டு நன்றாக மீண்டும் ஒருமுறை அசை போட முடிகிறது. பசுமாடு உட்கொண்ட உணவை சுத்திகரிக்கும் முறை..
பசுமாடு மறுசுழற்சி முறையில் அசைபோட்ட உணவை அதன் வயிற்றுப்பகுதியான ரூமென் என்ற அறைக்குள் தள்ளப்படுகிறது. இங்கு பல மில்லியன் மைக்ரோப்ஸ்-கள் அடங்கியுள்ளன. இந்த மைக்ரோப்ஸ்கள் அசைபோட்டு நான்றாக அரைத்த உணவில் செரிமானம் செய்ய முடியாத கடினமான பகுதியை கூட மிக எளிதாக செரிமானம் செய்ய பயன்படுகிறது.
பிறகு செரிமானம் ஆன உணவு ஓமசம் என்ற அறைக்கு சென்றடைகிறது. இந்த ஓமசம் பகுதியைப் பற்றி அறிவியல் உலகம் முழுவதுமாக இன்னும் ஆராய்ந்து முடிக்கவில்லை எனினும் தோராயமாக ஆராய்ந்து பார்த்ததில் உட்கொண்ட உணவை சிறு சிறு துகள்களாக ஒரே சீராக மாற்ற இந்த பகுதி பயன்படுகிறது என்று நம்பப்படுகிறது.

பசுமாட்டின் வயிற்றிலுள்ள இறுதிப் பகுதியான அபோமசம் என்பது மற்ற பிராணிகளின் வயிறுகளை ஒத்து அமைந்துள்ளது. இந்த பகுதியில் அமைந்துள்ள ஹைட்ரோ குளோரிக் திரவம் ரூமென் பகுதில் செரிமானத்திற்கு பயன்படுகின்ற மைக்ரோப்ஸ்களை அபோமசம் அறைக்குள் நுழையாமல் தடுப்பதற்கும் அவ்வாறு நுழையும்பட்சத்தில் அவைகளை அழிக்கவும் பயன்படுகிறது.
மேலும் இந்த அபோமசம் பகுதியில் சேகரிக்கப்பட்ட அசைபோட்ட உணவுகள் சிறுகுடல் பகுதிக்கு அனுப்பப்பட்டு, அங்குள்ள மைக்ரோபியல் எனப்படும் செல் கட்டமைப்புகளால் முழுவதுமாக ஜீரணமான செய்யப்படுகிறது. புரதச் சத்துக்களான அமினோ ஆசிட் மற்றும் விட்டமின்கள் உருவாக இந்த பகுதியே பயன்படுகிறது. பிறகு முழுவதும் ஜீரணமான உணவு நேரடியாக இரத்தில் கலந்துவிடுகிறது!

பசுமாடுகளின் உடலில் உள்ள செல்கள் இரத்தத்திலிருந்து நீரையும் ஊட்டச் சத்துக்களையும் அகற்றி அகற்றப்பட்ட அந்த நீரையும் ஊட்டச்சத்தையும் பாலாக மாற்றுகிறது. இந்த பால் பசுமாடுகளின் மடிகளின் வாயிலாக வெளியேறுகிறது. அதைத்தான் நாம்
இனிமையாக
பருகுகிறோம்.
மேற்கண்ட ஐந்து ஆராய்ச்சிகளில் இறுதியான மூன்றை பகுதியை பார்ப்போமா?
3.கலப்பற்ற பால்
4. அருந்துபவர்களுக்கு இனிமை
5.தாராளமாக புகட்டுகிறோம்
ஒரு மனிதனுக்கு ஊட்டச்சத்துக்களில் புரோட்டீன், கால்சியம் ஆகியவை இன்றியமையாமையாதவையாக உள்ளன. இவைகள் பசும் பாலில் அதிகமாக காணப்படுகின்றது. கால்சியம் எலும்பு நோய்கள் வராமல் பாதுகாக்கிறது.
பசும்பாலில் விட்டமின் ஏ, பி12, தையாமின் போன்ற சத்துக்களும் அடங்கியுள்ளது.பசும்பாலில் தயாரிக்கப்படும் வெண்ணெய், நெய் போன்றவைகளில் கால்சியம் உள்ளதால் இது மனிதனின் தற்காப்பு சிஸ்டம் அதாவது IMMUNE SYSTEM-ஐ மேம்படுத்துகிறது.உறங்குவதற்கு முன் 1 கிளாஸ் பால் அருந்திவிட்டால், அழகிய தூக்கம் கூட வருகிறதாம்.
அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் கலப்பற்ற பால் என்று கூறுவதன் மூலம் அந்த பாலில் எப்படிப்பட்ட ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன என்பதை சிந்திக்க வலியுறுத்துகிறான். ஆனால் மனிதன் அந்த பாலில் தண்ணீரை ஊற்றி கலப்படம் செய்து விற்கிறான். இஸ்லாம் கலப்படத்தை வன்மையாக கண்டிக்கிறது!
பால் பற்றி கூறும்போது அல்லாஹ் அதை அருந்துபவருக்கு இனிமை என்று வர்ணிக்கிறான் மேற்படி ஆய்வுகளை பார்த்தால் பால் எவருக்குத்தான் கசக்கும்.
இங்கு அல்லாஹ் பால் பற்றி குறிப்பிடும் போது இறுதியாக தாராளமாக புகட்டுகிறோம் என்று கூறுகிறான் காரணம் அவன் படைத்த ரப்புல் ஆலமீன் அவன் கூறுவது எப்போதும் பொய் ஆகாது என்று இந்த கருத்தின் மூலம் நாம் அறிய வேண்டும்.
இந்தியாவின் பால் உற்பத்தியானது, கடந்த 1991-1992ம் ஆண்டில் 55.6 மில்லியன் டன்னாக இருந்தது. இந்நிலையில், சமீபத்தில் இந்தியாவின் பால் உற்பத்தி குறித்து, தேசிய பால் மேம்பாட்டு வாரியம் ஆய்வு ஒன்றை நடத்தியது.
அதில், 1992ம் ஆண்டில் 55.6 மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தியானது 2016-2017ம் ஆண்டில் 165 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.

மேலும், 2015ம் ஆண்டில் மட்டும் அமெரிக்கா- 95 மில்லியன் டன், சீனா - 43 டன், பாகிஸ்தான் - 42 டன் மற்றும் பிரேசில் - 32 டன் பால் உற்பத்தி செய்துள்ளன. இந்த நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில்தான் அதிக அளவில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.
அதிலும், இந்தியாவில் பால் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் பட்டியலில் முதல் இடத்தில் பஞ்சாப், அடுத்தடுத்த இடங்களில் ஹரியானா, ராஜஸ்தான், குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் இடம்பிடித்துள்ளன.

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 4

(கழுதை)



கழுதை (Donkey) என்பது பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்காகும். இது ஒரு தாவர உண்ணி. இது குதிரை இனத்தைச் சேர்ந்தது. கழுதை, பாலூட்டிகளில் குதிரை, வரிக்குதிரையைப் போல ஒற்றைப்படைக் குளம்பிகள் வரிசையைச் சேர்ந்த ஒரு விலங்கினம். முகத்தில் மூக்கின் அருகே வெண்மையாக இருப்பது இதன் அடையாளங்களில் ஒன்று.

கழுதை அதனுடைய அமைதி, கடின உழைப்பு. கழுதைகளின் தாக்குப்பிடிக்கும் திறன் அதிகம். சகிப்புத்தன்மைக்குப் பெயர் பெற்றது.
கழுதை செய்கிற வேலையை மனிதனால் செய்வதற்கு நினைத்து கூட பார்க்க முடியாது. மிக உயரமான பாறைகளிலும் மலைபாதைகளிலும் பொருள்களை சுமந்து கொண்டு கழுதைகள் நடப்பதை பார்த்தவர்கள் நிச்சயம் அதை குறை சொல்ல மாட்டார்கள். ஆனால் ..
مَثَلُ الَّذِيْنَ حُمِّلُوا التَّوْرٰىةَ ثُمَّ لَمْ يَحْمِلُوْهَا كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ اَسْفَارًا ؕ بِئْسَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِ اللّٰهِ ؕ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ
தவ்ராத் சுமத்தப்பட்டு, பின்னர் அதைச் சுமக்காமல் (அதன் படி நடக்காமல்) இருந்தார்களே அவர்களது உதாரணம் ஏடுகளைச் சுமக்கும் கழுதையைப் போன்றது. அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யெனக் கருதுவோருக்குரிய உதாரணம் மிகவும் கெட்டது. அநீதி இழைக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்டமாட்டான். (அல்குர்ஆன் 62:5)

தவ்ராத் என்ற வேதத்தைப் பெற்று அவ்வேதக் கருத்துக்களை நடைமுறையில் முறையாகப் பின்பற்றாத யூத சமுதாயத்தை அல்லாஹ், பொதி சுமக்கின்ற கழுதைக்கு உதாரணமாகக் கூறுகின்றான்.
கழுதையின் முதுகில் அழுக்கு மூட்டைகளை ஏற்றி வைத்தாலும் அது அழுக்கு மூட்டை என்பதைச் சிந்திக்காமல் அது சுமந்து செல்லும். அது போல் அறிவு நிறைந்த புத்தகங்களை ஏற்றினாலும் அதையும் அழுக்கு மூட்டையைப் போல் சுமந்து தான் செல்லுமே தவிர அதிலுள்ள கருத்துக்கள் ஆழமிக்கவை என்பதை கழுதை அறியாது.

கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை ? என்றொரு பழமொழி கூடக் கூறுவார்கள். தான் முதுகில் சுமக்கும் பொருளின் மதிப்பை அறியாத மிருகம் தான் கழுதை. அது போன்று தான் தவ்ராத் வேதத்தைப் பெற்று அதனை வாயளவில் மட்டும் படித்து விட்டு செயலளவில் பின்பற்றாமல் அதிலுள்ள கருத்துக்களை மாற்றியும் மறைத்தும் வந்த யூத சமுதாயத்தை அல்லாஹ், ஏடுகளின் மதிப்பை உணராமல் வெறும் பொதி மூட்டையாகச் சுமக்கும் கழுதைக்கு ஒப்பாகக் கூறுகிறான்.

இதை கருத்தை தேவாரப் பாடல் ஒன்றில் கழுதைப்பற்றி ...
கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நானுழன் றுள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேயென மாட்டா
இழுதை யேனுக்கொர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே..
தேவாரம் - கழுதை சுமந்த குங்குமம்

கழுதை அழுக்கு மூட்டையை சுமந்தாலும் குங்கும பூ மூட்டையை சுமந்தாலும் அதற்கு ஒரு வித்தியாசமும்ப் தெரியாது.ஏதோ பொதி சுமந்து போகிறோம் என்று தான் அதற்குத் தோன்றும். அல்லது குங்கும பொதியை சுமந்ததால் அந்த கழுதைக்கு பெரிய பேரும் புகழும் கிடைக்கவா போகிறது.அது போல காரண காரியம் தெரியாமல் மக்கள் பல பேர் பல இறை காரியங்களை செய்து கொண்டிருகிறார்கள்.
கற்பூரம் காட்டுவது,மணி அடிப்பது, மத சின்னங்களை அணிந்து கொள்வது, தூக்கம் முழிப்பது, சாப்பிடாமல் இருப்பது என்று எண்ணற்ற காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன் செய்கிறாய் என்று கேட்டால் தெரியாது....எல்லோரும் செய்கிறார்கள் நானும் செய்கிறேன் என்று பதில் வரும். அர்த்தம் தெரியாமல் பாடல்களையும் மந்திரங்களையும் சொல்லிக் கொண்டிருப்பவர்களை பார்க்கலாம்....
உள்ளன்போடு உருகி அவனை நினையாமல் , இந்த சடங்குளினால் என்ன பயன் என்கிறார் சுந்தரர் ....
நல்லுபதேசத்தை விட்டும் முகம் திருப்புகிறார்களே -
இவர்களுக்கு என்ன நேர்ந்தது?
அவர்கள் வெருண்டு ஓடும் காட்டுக் கழுதைகளைப் போல் அதுவும் சிங்கத்தைக் கண்டு வெருண்டு ஓடும் காட்டுக் கழுதை போல் இருக்கின்றனர் .குர்ஆன் 74 : 49,50,51
இருந்தாலும்...கழுதையிடம் விஷேசமான குணங்கள் பல உண்டு. கழுதை ஒரு நாளில் முப்பது நிமிடங்கள் தான் உறங்கும். ஓய்வெடுத்து கொள்ளும்.
சாப்பிடுவதற்கு அதை கொடு இதை கொடு என்று அடம்பிடிக்காது. எதை கொடுத்தாலும் சந்தோசமாக சாப்பிடும் கழுதையின் இரத்தத்திலும், பாலிலும் கூட மருத்துவ குணம் இருப்பதாக கூறுகிறார்கள் மனிதனுக்கு அந்தபெருமைஇருக்கிறதா?

இன்னொரு பண்பையும் கழுதையிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் அது வேலை இல்லாத நேரத்தில் தாறுமாறாக சுற்றி திரியாது எங்காவது ஒரு மூலையில் அழகாக ஓய்வெடுக்கும் வேலை என்று வந்து விட்டால் நிமிட நேரம் கூட ஓய்வை எதிர்பார்க்காமல் வேலை செய்ய துவங்கி விடும்.

கழுதைகளுக்கு சீனாவில் அதிகளவில் மவுசு உள்ளது. ஆண்மையை அதிகரிக்கும் கொழுப்பு சத்துகள் கழுதையின் பாலில் உள்ளன. நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது. மேலும் கழுதை இறைச்சியில் இருந்து பல்வேறு நோய்களுக்கு பாரம்பரிய மருந்துகள் கிடைக்கின்றன.
அதனால், பாகிஸ்தானிடம் இருந்து ஆண்டுதோறும் 80 ஆயிரம் கழுதைகளை சீன நிறுவனங்கள் வாங்கி, அவற்றைக் கொண்டு மருந்துகளை தயாரிக்கின்றன. இதன் மூலமாக பல கோடி ரூபாயை பாகிஸ்தான் வருமானமாக ஈட்டி வருகிறது.

சீனாவிடம் இருந்து வாங்கியுள்ள பல ஆயிரம் கோடி கடனை, கழுதைகள் விற்பனை மூலமாகவும் பாகிஸ்தான் அரசு அடைத்து வருகிறது.. இதன் காரணமாகவே, கழுதைகள் இனப்பெருக்கத்தை பெருக்குவதில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் ஆர்வமாக உள்ளார்.. கழுதைக்காகவே பாகிஸ்தானில் தனி மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

இதனால், எதிர்கட்சிகள் பிரதமர் இம்ரான்கானை 'கழுதைகளின் அரசன்' என பட்டப்பெயர் சூட்டி கிண்டல் செய்து வருகின்றன.
பதப்படுத்தப்பட்ட கழுதை தோலும் இறைச்சியும் சீனாவில் இஜியாவோ என்னும் பாரம்பரிய மருந்து தயாரிக்க பயன்படுகிறது. உலக அழகி கிளியோபாட்ரா தன்னுடைய அழகை பாதுகாப்பதற்காக கழுதை பாலில் தான் குளித்திருக்கிறாள். கழுதையின் பாலின் அவ்வளவு மருத்துவ குணங்கள் உள்ளன
அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார்.
(கைபர் போரின் போது) ஒருவர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, '(இறைத்தூதர் அவர்களே!) கழுதைகள் சாப்பிடப்பட்டுவிட்டன' என்று கூறினார்.

அதற்கு (பதிலளிக்காமல்) நபி(ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தார்கள். பிறகு இரண்டாம் முறையும் அவர் வந்து, 'கழுதைகள் சாப்பிடப்பட்டுவிட்டன' என்று கூறினார். அப்போதும் அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள். பிறகு மூன்றாம் முறையாக அவர் வந்து, 'கழுதைகள் தீர்ந்து போய்விட்டன' என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'பொது அறிவிப்புச் செய்பவர் ஒருவருக்கு உத்தரவிட அவர், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நாட்டுக் கழுதைகளை உண்ண வேண்டாமென உங்களுக்குத் தடை விதிக்கின்றனர்' என்று மக்களிடையே அறிவித்தார். உடனே, இறைச்சி கொதித்துக் கொண்டிருந்த அந்தப் பாத்திரங்கள் கவிழ்க்கப்பட்டன. ஸஹீஹ் புகாரி : 4199.

ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்த கலப்பினப் பிராணியே கோவேறு கழுதை.
கழுதைகள் இனப் பெருக்கத்தில் ஈடுபட்டு குட்டி போடும். கோவேறு கழுதைகள் இனப்பெருக்கம் செய்ய முடியாது.
கோவேறு கழுதைகள் வேலைக்குச் சிறந்தவை. கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் அதிக எடையைத் தாங்குபவை. அதிக எடையை ஏற்றினால் கழுதை மிகவும் கஷ்டப்படும்.
கோவேறு கழுதைகளால் சில அடி உயரத்துக்குக் குதிக்க முடியும். கழுதையால் குதிக்க முடியாது. கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் புத்திசாலிகள்.
கோவேறு கழுதைகளின் காதுகள், கழுதைகளின் காதுகளைவிடச் சிறியதாக இருக்கும். ஆனால் உருவமோ குதிரை போல இருக்கும். தலை, ஒல்லியான கால்கள், பிடரி மயிர் ஆகியவை கழுதைகளுக்கு இருப்பது போலக் கோவேறு கழுதைகளுக்கு இருக்கும்.
கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் உயரமாக இருக்கும். கழுத்து, பற்களும்கூட கொஞ்சம் பெரியதாக இருக்கும்.
குதிரையின் வாலைப் போலவே கோவேறு கழுதையின் வால் அடர்த்தியானது. ஆனால், கழுதையின் வாலோ பசுவின் வாலைப் போல இருக்கும்.
கழுதையின் கத்தலையும் கோவேறு கழுதை வெளிப்படுத்தும் சத்தத்தையும் கேட்கும் ஒருவர் எளிதாக அதை அடையாளம் காண முடியும். கோவேறு கழுதை குதிரையைப் போலக் கனைக்கும்.
மனிதர்களை போலவே மழையில் நனைந்தால், உடல் உபாதை வரும் என்ற உள்ளுணர்வும் கழுதைக்கு உண்டு. கழுதை, குதிரை இனக்கலப்பில் உருவாகும், கோவேறு கழுதை அதிக பாரம் சுமக்க கூடியது. இந்திய இராணுவமே, அதனை தன்னுடைய தேவைகளுக்கு பயன்படுத்துகிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.
நபிமார்கள் கோவேறு கழுதையை வாகனமாக பயன்படுத்தியுள்ளதாக ...நபி உஜைர் (அலை) குர்ஆன் (2 : 259)

அய்லா என்ற ஊரின் மன்னன் நபி(ஸல்) அவர்களுக்கு ஒரு வெள்ளை நிறக் கோவேறுக் கழுதையை அன்பளிப்புச் செய்து ஒரு சால்வையும் போர்த்தினார். புகாரி 1481
கோவேறு கழுதையை விடச் சிறியதும் கழுதையை விடப் பெரியதுமான வெள்ளை நிறத்திலமைந்த மின்னல் வேகத்தில் புராக் வாகனத்தில் நபி (ஸல்) அவர்கள் மிஹ்ராஜ் என்னும் விண்ணுலக பயணத்திற்கு வாகனமாகியது
புகாரி 3887

சப்தங்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் (உரத்த) சப்தமே!" .(அல்குர்ஆன் : 31:19)
இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நீங்கள் சேவல்கள் கூவுகிற சத்தத்தைக் கேட்டால் அல்லாஹ்விடம் அவனுடைய அருளைக் கேளுங்கள்: ஏனெனில், அவை வானவரைப் பார்த்திருக்கின்றன , எனவேதான் கூவுகின்றன.
கழுதை கத்தும் சத்தத்தை நீங்கள் கேட்டால் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். ஏனெனில்,அது ஷைத்தானைப் பார்த்திருக்கிறது

எனவேதான் கத்துகிறது என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். ஸஹீஹ் புகாரி : 3303.
கழுதைன்னு சாதாரணமாக எண்ணி விடாதீர்கள் ,
கழுதைகளை வளர்க்கும் அரியானாவின் சோனேபேட் நகரைச் சேர்ந்த ராஜ் சிங் கூறியதாவது-
"என்னுடைய கழுதைகள் சாதாரண கழுதை போல் அல்ல. மற்ற கழுதைகளைவிட 7 இஞ்ச் உயரமானது என்பதால், சிறப்பு வாய்ந்தது. வழக்கமாக கழுதைகள் விலைக்கு விற்றால், ஒரு லட்சம் வரை மட்டுமே போகும், ஆனால், என் கழுதையை வாங்குவதற்கு ரூ.10 லட்சம் வரை விலை கேட்கிறார்கள் "

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 5
குதிரை



கி.மு. 4000 நூற்றண்டளவில் மனிதர்கள் Feral Horses என்னும் கட்டுப்பாடின்றிச் சுற்றித் திரிந்த காட்டுக் குதிரைகளைப் பழக்கத் (Domesticating of Horses) தொடங்கினர். கி.மு. 3000 ஆம் நூற்றாண்டளவில் இந்தக் குதிரைகளின் வளர்ப்பு (Domestication) பரவலானது.

வெள்ளை, கறுப்பு, சாம்பல், செஸ்ட்நட் (Chestnut) என்னும் பழுப்பு கலந்த செந்நிறம், மற்றும் இரு நிறங்களின் கலப்பு ஆகிய நிறங்களில் குதிரைகள் காணப்படுகின்றன.
குதிரை ஒரு தாவர உண்ணி ஆகும். மணிக்கு 55 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடியது. நின்ற நிலையில் தூங்கும் பண்பு கொண்டது.

குதிரைகளின் கருக்காலம் 335 முதல் 340 நாட்கள் ஆகும். குதிரை கருவுற்ற பதினோராவது மாதத்தில் குதிரைக் குட்டியை (Foal) ஈனும். ஒரு குதிரை அதிகபட்சமாக ஐந்து குதிரைக் குட்டிகளை ஈனக்கூடும். ஈன்ற சில நாட்களிலேயே குதிரைக் குட்டிகள் 400 கி.கிராம் எடையை எட்டிவிடும்.
இனவிருத்தி மூலம் பிறந்த உயர் ரகக் குதிரைக் குட்டிகள் பிறந்தவுடனே, இவற்றின் தாய், தந்தை உள்ளிட்ட தகவலுடன் பிறப்பைப் பதிவு செய்வது வழக்கம். குறிப்பிட்ட குதிரையின் வயதை அதன் பற்களைக் கொண்டே கணக்கிட்டு மதிப்பீடு செய்கிறார்கள். (காண்க அஸ்வசாஸ்திரம்)
எல்லோரும் நாயை தான் நன்றியுள்ள விலங்கு என்பர். ஆனால் அதைவிட நன்றியுள்ள விலங்குதான் குதிரை.இறைவன் சாதாரணமாக ஒரு பொருளின் மீது சத்தியமிட மாட்டான்.
அப்படி சத்தியமிட்டு ஒரு விஷயத்தை கூறவேண்டுமெனில் அதில் பல அர்த்தங்கள் பொதிந்திருக்கும் மிக முக்கித்துவம் வாய்ந்த விஷயமாக இருக்கும்.

இறைவன் 100 -வது அத்தியாயமான சூரத்துல் ஆதியாத்தி (வேகமாக செல்பவை) இறைவன் குதிரையின் மீது ஐந்து சத்தியமிட்டு ஒரு விஷயத்தை கூறுவான்.
குதிரையின் டக்.. டக்.. டக் ..ஓட்டத்தை வைத்து குர்ஆன் மேற்கண்ட வசனத்தின் சந்த அழகை பார்ப்பதற்கு மூல மொழியான அரபியில் இந்த வசனங்களை பார்போம்.
'வல்லாதியாத்தி லப்ஹன்:
வல் மூரியாத்தி கத்ஹன்:
ஃபல் முகீராத்தி சுப்ஹன்:
பஃதர் நபிஹி நக்அன்:
பவசத் நபிஹி ஜம்அன்:
இன்னல் இன்சான லிரப்பிஹி லகனூத்:
வஇன்னஹூ அலா தாலிக லஸஹீத்:
வஇன்னஹூ லிஹூப்பில் ஹைரி லஸதீத்'
குர்ஆன் (100 : 1 - 8)
என்ன அழகிய வார்த்தை சீரமைப்பு. சந்தம் எந்த அளவு நெருங்கி வருவதைப் பாருங்கள். பலர் எழுதும் கவிதைகளில் சந்தங்கள் சரியாக அமைந்தால் பொருள் ஏனோ தானோ வென்று இருக்கும்.
கவிதையின் பொருள்
அருமையாக
இருந்தால் ஏதோ உரை நடையை படிப்பது போல் இருக்கும். இங்கு இரண்டுமே மிக அழகாக பொருந்தி வருவதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறோம்.

இந்த ஒரு இடம் மட்டும் தான் என்று இல்லை. குர்ஆன் முழுக்க இந்த வசன நடை தொடர்ந்து வருவதை பார்த்திருக்கலாம். அரபி மொழி தெரிந்தவர்களுக்கு இந்த வார்த்தை கட்டுக்கள் இன்னும் சிறந்த ஈர்ப்பை ஏற்படுத்தும்.

அதனால் தான் அரபி மொழி நன்கு தெரிந்த அன்றைய அரபு புலவர்கள் குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்டால், கைகளால் காதை பொத்திக் கொள்வார்களாம். அதன் வசன நடையும் அதற்குள் பொதிந்திருக்கும் சிறந்த கருத்துக்களும் தங்களின் சிந்தையை கலைத்து இஸ்லாத்துக்குள் இழுத்துக் கொண்டு சென்று விடுமோ என்று அஞ்சுவார்களாம். அந்த அளவு குர்ஆனின் கருத்துக்களில் அன்றைய அரபு புலவர்கள் கலக்கம் அடைந்திருந்தனர்
1. மூச்சிரைக்க வேகமாக ஓடிவருபவற்றின் மீது சத்தியமாக
2. தீப்பொறியைப் பறக்க செய்பவற்றின் மீது சத்தியமாக.
3. அதிகாலையில் தாக்குதல் நடத்துபவை மீது சத்தியமாக .
4. அதனால் புழுதி பரப்பி வருபவை மீது சத்தியமாக
5. படைகளின் மத்தியில் ஊடுருவி செல்பவை மீது சத்தியமாக
“நிச்சயமாக மனிதன் இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்.
நன்றியை குதிரையின் மீது சத்தியமிட்டு சொல்ல காரணம் என்ன ?
இருக்கிறது . குதிரை வெயிலோ ,மழையோ, பாலைவனமோ, கட்டாந்தரையோ, தன் எஜமானை தன் முதுகில் சுமந்து எவ்வளவு பெரிய படையானாலும் அதன் மத்தியில் தீ குளம்பு தெறிக்க அப்படையை ஊடுருவி செல்லும்.
தான் எஜமானன் திருப்பும் திசையெல்லாம் யாருக்கும் அஞ்சாமல் தன் எஜமானன் கட்டளைக்கு மட்டும் அடிபணிந்து செயல்படும்.
அதனால் தான் இறைவன் குதிரையை இவ்விடத்தில் சத்தியமிட்டு கூறியுள்ளான்.
மேலும் திப்பு சுல்தான் வரலாற்றில் ஒரு நெகிழ்வான சம்பவம்.
ஆங்கிலேயருக்கு எதிரான போர்க்களத்தில் எதிரிகள் திப்பு சுல்தானை நோக்கி அம்புவிடுவதை கண்ட திப்பு சுல்தானின் குதிரை தன் இரு முன்னங்கால்களையும் தூக்கி எகிறி தான் உடலில் அந்த அம்பை வாங்கிகொண்டது.

இப்போது சொல்லுங்கள் நன்றியுள்ள விலங்கு குதிரை தானே. உலகில் நம் உயிரை காக்க முன்வரும் மனிதர்களே அரிது அப்படி இருக்கையில் குதிரையின் நன்றியுணர்வு எவ்வளவு சிறந்தது.
நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு பயிற்சி பெற்ற உயர்ந்த ரக குதிரைகள் வழங்கியதாக வல்ல ரஹ்மான் வர்ணிக்கிறான்!
பெண்கள், ஆண் மக்கள்; பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள்; அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள்; (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது; இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும்; அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடம் உண்டு.
(அல்குர்ஆன் : 3:14)

மேலும் அல்லாஹ் ஒரு அழகிய மாலை நேரத்தில் நபி ஸுலைமான் (அலை) அவர்களின் கண்பார்வைகளில் படும்படியாக அந்த அழகான குதிரைகளை நிறுத்தியுள்ளான்.
அந்த கவர்ச்சிகரமான அழகிய குதிரைகள் நபி ஸுலைமான் (அலை) அவர்களின் கவனத்தை ஈர்த்துவிடுகின்றன.
அந்த குதிரைகளின் பேரழகில் மெய்மறந்த நிலைக்கு சென்றுவிட்ட நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு அந்த குதிரைகைளை படைத்த இறைவனாகிய அல்லாஹ்வின் நினைவு மறந்து விடும்படியாக செய்துள்ளது!

அழகிய குதிரைகளின் ரசனை உலகில் மயங்கிவிட்ட நபி ஸுலைமான் (அலை) அவர்களை சுயநினைவுக்கு கொண்டுவர அல்லாஹ் நாடுகிறான் அந்த குதிரைகளை அவரது கண்களிலிலிருந்து விலக்கி திரைக்கு அப்பால் மறைத்து விடுகிறான்!

உடனே நபி ஸுலைமான் (அலை) அவர்கள் தம்மை சுதாரித்துக் கொள்கிறார்கள் மேலும் எனது இறைவனை நினைக்காமல் இந்த நல்ல பொருளை விரும்பி விட்டேன் என்று வருத்தத்துடன் கூறுகிறார்கள்! அவற்றை என்னிடம் மீண்டும் கொண்டு வாருங்கள்! (எனக் கூறி) அவற்றின் கால்களையும், கழுத்துக்களையும் தடவிக் கொடுத்தார். (குர்ஆன் 38:33)
நபி ஸுலைமான் (அலை) அந்த அழகிய குதிரைகளை காணாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் உடனே அந்த திரைக்கு அப்பால் மறைந்த குதிரைகளை அழைத்துவர உத்தரவிடுகிறார்கள். அந்த குதிரைகளும்

நபி ஸுலைமான் (அலை) முன்னர் நிறுத்தப்படுகின்றன. உடனே அந்த குதிரைகளின் கால்களையும் கழுத்துக்களையும் அவர் தடவிக் கொடுக்கிறார்.

நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் குதிரைகளை கொடுத்து ஏன் சோதித்தான் என்பது பற்றி நீங்கள் கருதலாம் ஆம் அந்த குதிரைகள் சாதாரணமான குதிரைகள் அல்ல மாறாக அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கப்பட்ட கண்ணியமிக்க குதிரைகளாக இருக்கலாம் என்று சிந்திக்க தோன்றுகிறது. காரணம் அந்த குதிரைகளிடம் நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு இருந்த ஈர்ப்புத் தன்மை அந்த குதிரைகளிடம் காணப்பட்ட ஏதோ ஒருவகை சுவனத்தின் வாடை வீசுகிறது.

மேலும் இந்த குதிரைகளைக் கொண்டு நபி ஸுலைமான் (அலை) அவர்களை இறைவன் சோதிப்பதற்கு பின்னால் அல்லாஹ் மாபெறும் அற்புதங்களை அவருக்கு பரிசளிப்பதை காட்டுகிறான்.
பின்னர் நபி ஸுலைமான் (அலை) அவர்கள் தன் நிலையைக் கண்டு மனம் வருந்தி திருந்திவிடுகிறார் வல்ல ரஹ்மானிடம் மன்னிப்பு கேட்டு கதறிவிடுகிறார்கள் இறைவன் அவரை பெருந்தன்மையாக மன்னித்தும் விடுகிறான் அதற்குரிய ஆதாரங்கள் இதோ உங்கள் பார்வைக்கு!
“என் இறைவா! என்னை மன்னித்து விடு! எனக்குப் பின் யாருக்கும் கிடைக்காத ஆட்சியை எனக்கு வழங்கு! நீயே வள்ளல்” எனக் கூறினார். (குர்ஆன் 38:35)

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 6

ஓநாய்



உலகில் உள்ள பல வகையான ஓநாய்களில் உருவில் சிறியது இந்திய ஓநாய்தான். என்றாலும் அது புகழ்பெற்றது.

இந்திய ஓநாய் வகையிலிருந்துதான் வீட்டு நாய் உருவானது என்று நோபல் பரிசு பெற்ற உயிரியலாளர் கான்ராட் லாரன்ஸ் கூறுகிறார். பரிணாமவியல் நோக்கில் ஓநாய்க்கு மிக அருகில் நம் நாய் இருக்கிறது என்கிறார்.

அவரது கூற்றுப்படி உலகில் மனிதரால் நாய் முதலில் பழக்கப்படுத்தப்பட்டது நம் இந்திய சமவெளிகளில்தான் என்ற ஆச்சர்யமான தகவலை கூறியிருக்கிறார் .

என்ன காரணமோ தெரியவில்லை ஓநாய்களுக்கு வரலாற்றில், உலகம் முழுவதும் ஒரு கெட்ட பெயர் இருந்திருக்கிறது. பாவம். சிறார் பாடல்களிலும், நாட்டார் கதைகளிலும் ஓநாய் ஒரு கொடிய உயிரினமாகவே சித்தரிக்கப்பட்டது. அது குழந்தைகளை தூக்கிக்கொண்டு ஓடிவிடும் என்ற அச்சம் பரவலாக அக்காலத்திலேயே இருந்து வருகிறது .

குர்ஆனில் கூட நபி யாகூப் (அலை) அவர்கள் மிகுந்த பாசத்தோடும், பாதுகாப்போடு தன் மகன் சிறுவர் நபி யூசுப் (அலை) அவர்களை வளர்த்து வர , இதனால் அவருடைய மற்ற ஆண் மக்களுக்கு பொறாமை வர, சிறுவர் நபி யூசுப் (அலை) அவர்களை கொன்றொழிக்க திட்டம் தீட்டினார்கள்.

தாங்கள் காட்டில் வேட்டையாட செல்லும் போது, சிறுவர் யூசுப்பை அழைத்து செல்ல திட்டம் தீட்டி , காட்டிற்கு அழைத்து செல்ல தகப்பனாரிடம் அனுமதி கேட்க , நபி யாகூப் (அலை) அவர்கள்

قَالَ اِنِّىْ لَيَحْزُنُنِىْۤ اَنْ تَذْهَبُوْا بِهٖ وَاَخَافُ اَنْ يَّاْكُلَهُ الذِّئْبُ وَاَنْـتُمْ عَنْهُ غٰفِلُوْنَ

"நீங்கள் அவரை அழைத்துச் செல்வது எனக்குத் துக்கத்தை உண்டு பண்ணிவிடும். அன்றி, நீங்கள் (விளையாடிக் கொண்டு) அவரை மறந்து பராமுகமாய் இருக்கும் சமயத்தில் ஓநாய் அவரை (அடித்துத்) தின்றுவிடும் என்றும் நான் பயப்படுகின்றேன்" என்று கூறினார். (அல்குர்ஆன் : 12:13)

قَالُوْا لَـئِنْ اَكَلَهُ الذِّئْبُ وَنَحْنُ عُصْبَةٌ اِنَّاۤ اِذًا لَّخٰسِرُوْنَ

அதற்கவர்கள், "பலசாலிகளான நாங்கள் இருந்தும் அவரை ஒரு ஓநாய் தின்பதென்றால் நிச்சயமாக நாங்கள் நஷ்டவாளிகள் ஆகிவிடுவோம்" என்று கூறி (சம்மதிக்கச் செய்து), (அல்குர்ஆன் : 12:14)

இதிலிருந்து அக்காலத்திலேயே ஓநாயைப் பற்றி இந்த மாதிரி தவறுதலான தகவல்கள் இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

சிறுவர் யூசுப் (அலை) அவர்களை காட்டில் ஒரு பாழுங் கிணற்றில் தள்ளி விட்டு, வீட்டிற்கு வந்து , தங்கள் தந்தையிடம்

قَالُوْا يٰۤاَبَانَاۤ اِنَّا ذَهَبْنَا نَسْتَبِقُ وَتَرَكْنَا يُوْسُفَ عِنْدَ مَتَاعِنَا فَاَكَلَهُ الذِّئْبُ‌ وَمَاۤ اَنْتَ بِمُؤْمِنٍ لَّنَا وَلَوْ كُنَّا صٰدِقِيْنَ

"எங்கள் தந்தையே! நிச்சயமாக யூஸுஃபை எங்கள் சாமான்களிடம் விட்டுவிட்டு ஓடி (விளையாடிக் கொண்டே வெகுதூரம் சென்று) விட்டோம். அச்சமயம் அவரை ஓநாய் (அடித்துத்) தின்றுவிட்டது. நாங்கள் (எவ்வளவு) உண்மை சொன்ன போதிலும் (அதனை) நீங்கள் நம்பவே மாட்டீர்கள்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் : 12:17)

وَجَآءُوْ عَلٰى قَمِيْصِهٖ بِدَمٍ كَذِبٍ‌ قَالَ بَلْ سَوَّلَتْ لَـكُمْ اَنْفُسُكُمْ اَمْرًا‌ فَصَبْرٌ جَمِيْلٌ‌ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ

அன்றி, (தங்கள் தந்தைக்குக் காண்பிப்பதற்காக) அவருடைய சட்டையில் (ஆட்டின்) பொய்யான இரத்தத்தைத் தோய்த்துக் கொண்டு வந்(து காண்பித்)தார்கள்.

(இரத்தம் தோய்ந்த அச்சட்டைக் கிழியாதிருப்பதைக் கண்டு "ஓநாய் அடித்துத் தின்ன) இல்லை" உங்கள் மனம் ஒரு (தீய) காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டது. (அவ்வாறு செய்து விட்டீர்கள்.) ஆகவே, (அத்துக்கத்தைச்) சகித்துக் கொள்வதுதான் நன்று.

நீங்கள் கூறியவற்றில் (இருந்து யூஸுஃபை பாதுகாக்குமாறு) அல்லாஹ் விடம் உதவி தேடுகிறேன்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் : 12:18)

உண்மை நிலவரத்தை நபி யாகூப் (அலை) அவர்கள் ஓநாய் மீது வீணான கொலைப் பழியை சுமர்த்துகிறார்கள் தம் மக்கள் என்பதை உணர்ந்து கொண்டார்கள் .

ஓநாய்களை விரட்டித் தாக்க ஐரிஷ் வுல்ஃப் ஹவுண்ட் (Irish wolf hound) போன்ற உருவில் பெரிய நாய்களைப் பழக்கி வைத்திருந்தார்கள்.

துப்பாக்கி புழக்கத்துக்கு வந்தபின் பதினோரு ஐரோப்பிய நாடுகளில் ஓநாய் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.

ஜப்பானிலும் இந்த உயிரினம் அற்றுப்போய்விட்டது. (ஒநாய் பற்றி ஜப்பானிய சிறுகதை ஒன்றை இப்பின்னூட்டத்தில் சொல்லியுள்ளேன்)

இரண்டாம் உலகப்போர் முடிந்து இருபது ஆண்டுகளில் யூகோஸ்லாவிய நாட்டில் மட்டும் 80,000 ஓநாய்கள் கொல்லப்பட்டன என்பது அதிர்ச்சியூட்டும் தகவல்.

கனடாவில் இவை பெருமளவில் கொல்லப்பட்டன. ஆடுகளை பாதுகாக்கவென்று, ஹெலிகாப்டரில் பறந்து பறந்து இவற்றைச் சுட்டுக்கொன்றொழித்தார்கள்.

காட்டுயிர் பாதுகாப்பு ஒரு இயக்கமாக உருவெடுத்தபின் ஓநாய்க்கு பரிந்து பேச பல குழுக்கள் தோன்றின. அதில் முன்னணியில் கனடா நாட்டு இயற்கையாளர் ஃபார்லி மோவட் இருந்தார். 'Never Cry Wolf' (1963) என்ற நூலை எழுதி, ஒநாயின் மேலிருக்கும் வெறுப்பு எவ்வளவு ஆதாரமற்றது என்பதை அவர் மிக அழகாக சுட்டிக்காட்டினார்.

1973-ம் ஆண்டு ஸ்டோக்ஹோம் நகரில் ஓநாய்கள் பாதுகாப்பு பற்றி ஒரு பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது. 'புராஜெக்ட் வுல்ஃப்' என்ற செயல்திட்டத்தை கிரீன் பீஸ் இயக்கம் அறிமுகப்படுத்தியது.

இந்தியாவிலும் இந்த உயிரினத்துக்குக் கெட்டகாலம்தான். கர்நாடகத்தில் "பாவகடா" என்ற ஊரிலும் பிஹாரில் "ஹசாரிபாக் என்ற " இடத்திலும் ஓநாய்கள் குழந்தைகளைத் தாக்குகின்றன என்ற செய்தி பரவியது.

1986-ல் பிஹார் மாநில வனத்துறை ஒரு ஓநாய்க்கு ரூபாய் 5000 என்று பரிசை அறிவித்தது. இந்தியாவில் எண்ணிக்கையில் அவை குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

ஓநாய் மனிதர்கள் என்பது பெரும்பாலும் நாம் படங்கள், கதைகளில் தான் கேள்விப்பட்டிருபோம். அமேசான் காடுகளின் அடர்த்தியான பகுதிகளில் வசிக்கும் காட்டு வாசிகள் மிருகங்களுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால், நாம் கண்கூடாக பார்த்து ஓநாய்களுடன் வாழ்ந்த மனிதன் தி ஜங்கிள் புக்கில் வரும் மோக்லி தான்.

நிஜமாகவே உலகில் ஒரு ஓநாய் மனிதன் வாழ்ந்து வருகிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா ? அறிமுகப்படுத்துகிறேன்.

அவர் "வுல்ப் பேக்" எனப்படும் ஓநாய் குடும்பத்தில் தன்னை ஒருவராக இணைத்துக் கொண்டுள்ளார் என்பது ஆச்சரியம் அளிக்கிறது. அவர் பெயர் ஷான் எல்லிஸ்!

இங்கிலாந்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்திருக்கும் டேவன் எனும் பகுதியை சேர்ந்தவர் ஷான் எல்லிஸ். இவர் தான் ஓநாய்களுடன் வாழ்ந்து வரும் உலகின் உண்மையான ஓநாய் மனிதன். தன்னைத் தானே ஓநாய் குடும்பத்துடன் ஒருங்கிணைத்து கொண்டுள்ளார் ஷான் எல்லிஸ்.

47 வயது மிக்க ஷான் எல்லிஸ் ஒரு வேட்டை விலங்கு போல வாழ்ந்து வருகிறார். ஓநாய்கள் போலவே இவரும் வெறும் இறைச்சி மட்டும் உண்டு வாழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

ஓநாய் குடும்பத்தில் தன்னை ஒருவனாக கருதும் ஷான் எல்லிஸ், தனது ஜலா எனும் தனது மனைவி செய்யும் அசாதாரண ஆராய்ச்சிக்கு உதவி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷான் எல்லிஸ் மற்றும் ஜலா முதல் பார்வையிலேயே காதலில் விழுந்த ஜோடி. ஷான் எல்லிஸ்-ன் இயல்பை, இயற்கையான குணாதிசயங்களை தான் மிகவும் விரும்புவதாக கூறுகிறார் ஜலா.

தன் கனவுகளை நிஜமாக்கும் ஒரு மனிதரை கண்டதிலும், அவருடன் உறவில் இணைவதிலும் தான் மிகவும் அதிர்ஷ்டசாலியாக உணர்வதாக ஜலா மேலும் கூறுகிறார்.

வாரத்திற்கு ஒரு முறை தான் இணைத்துள்ள ஓநாய் குடும்பத்திற்கு குதிரை கால்களை உணவாக எடுத்து சென்று அளிக்கிறார் ஷான் எல்லிஸ்!

தனது ஓநாய் குடும்பத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் பெண் ஓநாயும், ஆதிக்கம் செலுத்தும் ஆண் தலைவன் ஓநாயும் இருப்பதாய் கூறுகிறார் ஷான் எல்லிஸ்!

ஓநாய்கள் வேட்டையில் தந்திரங்களை பயன்படுத்துகின்றன. கூட்டாக U வடிவில் பிராணி விலங்கை சூழ்ந்து கொண்டு, வேட்டையாடுகின்றன . U வடிவின் வளைவில் உள்ள ஓநாய் இடம் விட்டதும் ,பிராணி விலங்கு தப்பிக்க இடம் கிடைத்ததாக எண்ணி அதன் ஊடே செல்லும் போது, ஓநாய்கள் சுற்றி வளைத்து பிராணி விலங்கை எளிதாகக் கௌவ்விக் கொள்கிறது.

பௌர்ணமி நாட்களில் ஓநாய்கள் வேட்டையாடும், அவை இரக்கமற்ற விலங்குகள் என்பதெல்லாம் பொய். அவை குடும்பத்தின் மீது மிகவும் அன்பு செலுத்தும் வகையிலான விலங்குகள் என்கிறார் ஷான் எல்லிஸ்! இவற்றுடன் பழகுவது மிகவும் இன்றியமையாக உணர்வை தருகிறது என்கிறார்.

ஓநாய்களின் நடவடிக்கைகள் மூலம் தன்னிடம் தொடர்பு கொள்வதை தன்னால் உணர முடியுவதையும் , தானும் அவைகளுக்கு அது மாதிரி தகவல்களை பரிமாறிக் கொள்வதையும் அவைகள் உணர்ந்து கொள்வதாக கூறியுள்ளார்.

https://www.vikatan.com/.../104843-this-wolfman-lives...

ஓநாயுடன் மனிதன் வாழ முடியுமா ? அவைகளோடு பேசி விருந்துண்ணி குலாவ முடியுமா ? என்றெல்லாம் நீங்கள் சிந்திப்பீர்கள். அதற்காக ஒரு நபிமொழி சொல்றேன்.

“ஒருவர் தன் ஆடுகளுக்கிடையே அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த போது ஒரு ஓநாய், ஆட்டு மந்தைக்குள் புகுந்து ஒரு ஆட்டை கவ்விக்கொண்டு சென்றது.அவர் அந்த ஆட்டை ஓநாயிடமிருந்து காப்பாற்றி விட்டார்.

அந்த ஓநாய் அவரைப் பார்த்து,”இவனே! இன்று நீ காப்பாற்றி விட்டாய்.ஆனால், கொடிய விலங்குகள் ஆதிக்கம் செலுத்தும் (உலக முடிவு) நாளில் இதற்கு (பாதுகாவலர்) யார் இருக்கிறார்கள்…? அந்நாளில் என்னைத் தவிர பாதுகாவலர் யாரும் இல்லையே” என்று கூறியது எனக் கூறினார்கள்.

இதைகேட்ட மக்கள், ‘சுப்ஹானல்லாஹ்! ஓநாய் பேசுமா ?’ என்று கேட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள்,”நானும்,அபூபக்கரும், உமரும் இதை நம்புகின்றோம்” என்று கூறினார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்களும்,உமர் (ரலி) அவர்களும் அங்கே அப்போது இருக்கவில்லை. அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி),

நூல்: புஹாரி.3471.

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 7

(நாய்)



நம்முடைய வீடுகளில் மிகவும் செல்லமாக வளர்க்கப்படும் வளர்ப்பு பிராணி நாய். பலருக்கும் மிகவும் பிடித்த மட்டுமல்லாமல் வீட்டை காவல் காப்பதிலும் நாய்க்கு முக்கிய பங்குண்டு.
உலகில் சுமார் 400 மில்லியன் நாய்கள் உள்ளனவாம் தெரியுமா? இன்றுள்ள வளர்ப்பு நாய்கள் ஏறத்தாழ 17,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன் ஓநாய்களைப் பழக்கி நாயினமாக வளர்த்தெடுக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

150,000 ஆண்டுகளுக்கு முன்னமேயே கூட நாய்கள் பழக்கப்பட்டிருக்கலாம் என மறைந்த உயிரினப் படிவத்தில் இருந்து பெற்ற டி.என்.ஏ ஆய்வுகள் கூறுகிறது.
நாய்களுக்குத் தமிழில் பல பெயர்கள் உள்ளன. நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டே திரிவதால் ‘நாய்’ என்னும் பெயர் தமிழில் தோன்றியது.

நாய்களில் நூற்றுக்கணக்கான வெவ்வேறு இனங்கள் உள்ளன தெரியுமா. புல்டாக், ஜெர்மன் ஷெப்பர்ட், கோலி, கோல்டன் ரெட்ரீவர், செயின்ட் பெர்னார்ட், கிரேஹவுண்ட், பிளட்ஹவுண்ட், சிவாவா, லாப்ரடோர், கிரேட் டேன், ரோட்வீலர், பாக்ஸர் மற்றும் காக்கர் ஸ்பானியல் என பல வகைகள் உள்ளன.
நாய்க்கு மனிதர்களை விட அதிக சக்தி கொண்ட செவிப்புலன் உள்ளது, மனிதர்களை விட நான்கு மடங்கு தூரத்தில் உள்ள ஒலிகளைக் கேட்கும் திறன் கொண்டது நாய்கள்.
நாய்கள் மனிதர்களை விட கிட்டத்தட்ட 100 மில்லியன் மடங்கு குறைவான அளவுகளில் வாசனைகளை வேறுபடுத்தும் திறன் கொண்டவையாம். ஒரு நாயின் வாசனை உணர்வு மனிதனை விட 10,000 மடங்கு வலிமையானதாம்.

ஒரு நாயின் சராசரி ஆயுட்காலம் சுமார் 10 முதல் 14 ஆண்டுகள் . பொதுவாக சிறிய இன நாய்கள் பெரிய இனங்களை விட நீண்ட காலம் வாழ்கின்றனவாம்.
நாய்க்குட்டிகள் நம்மை போல மறைந்து விளையாடும் விளையாட்டுகளை அதிகம் விரும்புமாம். நீங்கள் மறைந்திருந்து உங்கள் நாய்க்குட்டியின் பெயரை அழைத்தால் உங்களை தேடி வந்து கொஞ்சுவது நாய்க்கு ரொம்ப பிடிக்குமாம்.

நாய்கள் நாம் சொல்லி கொடுக்கும்1000 க்கும் மேற்பட்ட சொற்களைக் கற்றுக்கொள்ளுமாம். உங்க நாய் குட்டிக்கும் சொல்லி கொடுத்து பாருங்க. எளிய கணித சிக்கல்களை எண்ணவும் தீர்க்கவும் நாய்களுக்கு கற்பிக்க முடியுமாம்.
நாய்க்குட்டிகள் முதல் நான்கு முதல் ஐந்து மாதங்களில் உடல் எடையில் பாதி வரை வளருமாம். இந்த விரைவான உடல் வளர்ச்சி கால கட்டத்தில் நாய்க்குட்டிகள் ஒரு நாளைக்கு 18 முதல் 20 மணி நேரம் வரை தூங்குமாம்.

கிரேஹவுண்ட் இன நாய்கள் மணிக்கு 70 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியவையாம்.
.நாய்களில் மிகப் பெரிய இனமான மாஸ்டிஃப் சுமார் 90 கிலோ வரை எடையை கொண்டிருக்குமாம்.
அமெரிக்க ஜனாதிபதிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நாய்களை வளர்க்கிறார்கள். ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் குறைந்தது ஒரு டஜன் நாய்களை வைத்திருந்தாராம்.
மனிதர்களுக்கு கைரேகைகளில் வித்தியாசம் இருப்பது போலவே நாய்களின் மூக்கு ரேகைகளும் ஒரே மாதிரியாக இல்லை.

15 சென்டி மீட்டர் உயரம் இருக்கும் சிஹுவாகுவா இன நாய்கள் மிகவும் குறுகிய இன நாய்களாகும். ஐரிஷ் வொல்ஃப்ஹவுண்ட்ஸ், மிக உயரமான இனம், 76 முதல் 88 சென்டி மீட்டர் உயரம் வரை இருக்கும்.
லைக்கா என்ற ரஷ்ய நாய் விண்வெளிக்கு சென்ற முதல் விலங்கு, 1957 இல் இது பூமியைச் சுற்றி வந்தது.
அதிகம் குரைக்கும் நாய்கள்: மினியேச்சர் ஸ்க்னாசர்ஸ், கெய்ர்ன் டெரியர்ஸ் , யார்க்ஷயர் டெரியர்ஸ் , ஃபாக்ஸ் டெரியர்ஸ் மற்றும் வெஸ்ட் ஹைலேண்ட் ஒயிட் டெரியர்ஸ்.
நாய்களுக்கு மனிதர்களை விட பற்கள் அதிகம். நாய்க்குட்டிகளுக்கு 28 பற்களும், வயது வந்த நாய்களுக்கு 42 பற்களும் உள்ளன.

அலாஸ்கன் மலாமுட் இன நாய்கள் 70 டிகிரி முதல் பூஜ்யம் டிகிரி வரை வெப்பநிலையைத் தாங்கும் திறன் கொண்டது.
நாயை செல்ல பிராணிகளாக வீட்டில் வளர்ப்பவர்களுக்கு
இரத்த அழுத்தம் குறையுமாம்.
ஐஸ்லாந்தின் தலைநகரில் நாய்களை செல்லப் பிராணிகளாக வைத்திருப்பது ஒரு காலத்தில் சட்டவிரோதமாக இருந்துள்ளது என்றாலும் தற்பொழுது சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளவாம்.
ஒரு பெண் நாய் அதன் துணை மற்றும் அவற்றின் நாய்க்குட்டிகளும் சேர்ந்து ஆறு ஆண்டுகளில் 67,000 நாய்க்குட்டிகளை பெற்றெடுக்க முடியுமாம்.
நாய்க்குட்டிகளுக்கு பிறக்கும் போது கண் காணாது, காது கேட்காது, பல் இருக்காது தெரியுமா.
நாய்கள் ஏன் சுருண்டு படுகிறது தெரியுமா. நாய்கள் தங்களை சூடாக வைத்திருக்கவும், தன்னுடைய முக்கிய உறுப்புகளைப் பாதுகாக்கவும் சுருண்டு படுக்கிறதாம்.
உலக புகழ்பெற்ற டைட்டானிக் கப்பலில் இருந்த 12 நாய்களில் மூன்று நாய்கள் உயிர் தப்பினவாம் தெரியுமா.

ஒரு நாயின் சராசரி உடல் வெப்பநிலை எவ்வளவு தெரியுமா. நாயின் சராசரி வெப்பநிலை 101.2 டிகிரி.
மேக்ஸ், ஜேக், மேகி மற்றும் மோலி ஆகியவை மிகவும் பிரபலமான நாய் பெயர்களாம்.
நாய் எவ்வளவு அழுத்தமாக கடிக்கும் தெரியுமா. நேஷனல் ஜியோகிராஃபிக் டாக்டர் பிராடி பார் ஒரு நாயின் சராசரி கடி சக்தியை ஒரு சதுர அங்குலத்திற்கு 320 பவுண்டுகள் அழுத்தமாக அளந்தார்.
நாய்களுக்கு ஏற்படும் முதல் ஆரோக்கிய பிரச்னை எது தெரியுமா ? உடல் பருமன் தான் நாய்களிடையே ஏற்படும் முதன்மையான சுகாதாரப் பிரச்சினை.

பேரி என்ற நாய் 1800 களின் முற்பகுதியில் மலை மீட்பு பணிகளில் 40 உயிர்களைக் காப்பாற்றியதாம்.
உலக நாய்கள் தினம் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 26ம் தேதி கொண்டாடப்படுகிறது.
நாய்கள் பொதுவாக மழையை விரும்புவதில்லையாம் காரணம் மழையால் ஏற்படும் அதிக ஒலி நாய்களின் காதுகளில் உள்ள உணர்திறனை காயப்படுத்துகிறதாம்.
நாயினும் கீழேன்…' என்று, திருவாசகத்தில் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார், மாணிக்கவாசகர்.

விலங்குகளிலேயே கேவலமானது, நாய். காரணம், தான் கக்கியதையே திரும்பவும் உணவாகக் கொள்ளும் தன்மை கொண்டது, அது. மற்ற விலங்குகள் இவ்வாறு செய்வதில்லை.
அதே நேரம், 'நன்றியுள்ள உயிர்களெல்லாம் பிள்ளை தானடா, நன்றி கெட்ட மகனை விட, நாய்கள் மேலடா...' என்று, கவிஞர்களால் போற்றப்படுவதும், நாய் தான்.
ஆக, ஒரு வெறுக்க வைக்கும் குணம், ஒரு அற்புதமான குணம்... இவற்றின் கலவையே, நாய்.
இந்து புராணங்களில் சிவபெருமான், பைரவராக அவதாரம் செய்தது, தீயவர்களை அழிக்க; அதே நேரம், நல்லவர்களுக்கு, பாதுகாப்பு வாகனமான நாயும், மனிதனுக்கு பாதுகாப்பு தரும்.
இதனால், நாயை, 'வேதஞாளி' என்பர். சாரமேயன்' என்றும் இதற்கு பெயருண்டு. இதற்கு, 'போர்க்குரல் கொடுப்பது...' என்று பொருள்.

குகைத் தோழர்கள் நாட்டையாளும் அரசன் தான் சிலையை வணங்கியதோடு, நாட்டு மக்களையும் சிலையை வணங்க வற்புறுத்தினான்.
எனவே ஓரிறை கொள்கையைக் கொண்ட நண்பர்கள் நாட்டை விட்டு வெளியேறி, காட்டில் ஒரு குகையில் தங்கி இறைவனை வழுத்திக் கொண்டிருந்தனர்.அவர்களில் ஒருவர் ஆட்டிடையர் தன் ஆடுகளை பாதுகாக்க வளர்த்து வரும் நாயையும் தன்னுடன் குகையில் வைத்துக் கொண்டதைப் பற்றி குர்ஆன் ...
(குகையிலிருந்த அவர்கள்) மூன்று பேர்தாம்; நான்காவது அவர்களுடைய நாய் என்று (சிலரு)ம்; (அவர்கள்) ஐந்து பேர், அவர்களுடைய நாய் ஆறாவதாகும் என்று (வேறு சிலரு)ம்; மறைவான விஷயங்களைத் தாங்கள் கண்டுபிடித்து விட்டவர்களைப் போல் (மிக்க உறுதியாகக்) கூறுகின்றனர். மற்றும் சிலரோ அவர்கள் ஏழு பேர், எட்டாவது அவர்களுடைய நாய் என்றும் கூறுகின்றனர். (அல்குர்ஆன் : 18:22)

وَ تَحْسَبُهُمْ اَيْقَاظًا وَّهُمْ رُقُوْدٌ وَنُقَلِّبُهُمْ ذَاتَ الْيَمِيْنِ وَ ذَاتَ الشِّمَالِ وَكَلْبُهُمْ بَاسِطٌ ذِرَاعَيْهِ بِالْوَصِيْدِ لَوِ اطَّلَعْتَ عَلَيْهِمْ لَوَلَّيْتَ مِنْهُمْ فِرَارًا وَّلَمُلِئْتَ مِنْهُمْ رُعْبًا
(நபியே! அக்குகையிலுள்ள) அவர்கள் (முந்நூறு வருடங்கள்) நித்திரை செய்து கொண்டிருந்தபோதிலும், அவர்கள் விழித்துக் கொண்டிருப்பதாகவே நீங்கள் எண்ணுவீர்கள். அவர்களை வலப்பக்கமாகவும், இடப் பக்கமாகவும் (மாற்றி மாற்றி) நாம் திருப்பிக் கொண்டிருக்கிறோம்.
அவர்களுடைய நாயோ தன் இரு முன்னங்கால்களையும் விரித்துக்கொண்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது (என்பதை நீங்கள் காண்பீர்கள்). அவர்களை நீங்கள் எட்டிப் பார்த்தால் அவர்களை விட்டு வெருண்டோடுவீர்கள்; திடுக்கமும் (நடுக்கமும்) உங்களைச் சூழ்ந்து கொள்ளும்.
(அல்குர்ஆன் : 18:18)

'நாற்பது வயதில் நாய் குணம்...' என்று சொல்வர். இது, ஒருவரை குறைத்து மதிப்பிட சொல்லப்படவில்லை. 40 வயதில், நா - நாக்கு குணம் என்பதே இப்படி மருவி விட்டது.
இளவயதில் என்ன பேசினாலும், வயசுக்கோளாறில் இப்படி பேசுகிறான் என்று விட்டு விடுவர். 40 என்பது, பக்குவத்தின் ஆரம்பம். அப்போது, நாக்கு நல்ல குணமான, சாந்தமான வார்த்தைகளையே பேச வேண்டும்.

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 8
(குரங்கு)



குரங்கு (Monkey) ஒரு பாலூட்டி விலங்கு. வால் நீளம் தவிர்த்து 14 முதல் 16 சென்டிமீட்டர் அளவேயான சிறு குரங்குகள் முதல் ஒரு மீட்டர் உயரமான பெரிய குரங்குகள் வரை குரங்குகளில் பல வகைகள் உள்ளன. பழங்கள், இலைகள், தானியங்கள், கொட்டைகள், பூக்கள், பூச்சிகள், சிலந்திகள், முட்டைகள், பிற சிறு உயிரினங்களைக் குரங்குகள் உண்கின்றன. ஆகவே இது அனைத்துண்ணி .
குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்ற பரிணாம வளர்ச்சிக் கொள்கையை டார்வின் முன்மொழிந்தார்.

குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உண்டு. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் செயற்பட வைக்கிறது.
மேற்கண்ட இரண்டு விஷயங்களை சீன கையில் எடுத்து அறிவியல் ஆய்வு செய்கிறது.

சீன விஞ்ஞானிகள், மனித மூளையின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கக்கூடிய மரபணுக்களைக் குரங்குகளில் செலுத்தி சோதனை செய்திருக்கிறார்கள். இதன்மூலம் மனித மூளையில் ஏற்படும் வளர்ச்சிகளைப் போலவே குரங்குகளின் மூளையும் வளர்ச்சியடையும் எனத் தெரிவிக்கிறார்கள். அந்நாட்டின் தேசிய அறிவியல் மதிப்பாய்வு நிறுவனத்திடம், குரங்குகளில் மனித மரபணு குறித்த ஆய்வுகளைச் சீன விஞ்ஞானிகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் எவ்வாறு குரங்குகளில் மனித மரபணுக்களைச் செலுத்தினார்கள், அப்படி மனித மரபணுக்கள் செலுத்தப்பட்ட பிறகு, அந்தக் குரங்குகள் இப்போது இருக்கும் நிலை என அனைத்தையும் தெரிவித்துள்ளனர்.

மனித மூளையிலிருக்கும் மரபணுவான மைக்ரோசிபாலின் (microcephalin) MCPH1-ஐ சீன விஞ்ஞானிகள் 11 ரீசஸ் குரங்களுக்குச் செலுத்தியுள்ளனர். ரீசஸ் குரங்குகள் கிட்டத்தட்ட மனிதர்களைப் போன்று செயல்படக்கூடியவை என்பதால் அந்தக் குரங்குகளுக்குச் செலுத்தியுள்ளனர்.
இதன்மூலம் 'மனிதன் எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்தான்' என்பதைக் கண்டறியலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குரங்குகள் கருப்பையில் கருவாக இருக்கும்போதே மரபணுவில் மாற்றம் செய்யப்பட்டு, குட்டிகள் உருவாக்கும் வேலைகள் தொடங்கப்பட்டன. அவ்வளவு ஏன், குரங்குகள் கருத்தரிப்பதிலிருந்தே அவர்களின் ஆய்வு தொடங்கிவிடுகிறது.
பெண் குரங்குகளின் கருமுட்டைகளுக்குள் இந்த MCPH1 என்ற ஜீனை ஒரு வைரஸ் மூலம் உள்ளே செலுத்துகிறார்கள். இது அந்த ஜீனை குரங்குகளில் மூளைக்குக் கொண்டு செல்கிறது. அதன் பிறகு தாய்க் குரங்குகளிடமிருந்து அறுவைசிகிச்சை மூலம் பிறக்க வைக்கும் குரங்குக் குட்டிகள் இன்குபேட்டரில் வைத்து வளர்க்கப்பட்டன.
வளர்ந்த சில நாள்களுக்குப் பிறகு ஒரு சில விஷயங்களில் மனிதர்களைப் போன்றே குரங்குகள் செயல்படத் தொடங்கியுள்ளன. மூளை வளர்ச்சி, நினைவாற்றல், முடிவு எடுக்கும் திறன் போன்றவை மற்ற குரங்குகளைக் காட்டிலும் அதிகமாக இருந்தன.

ஜீன் செலுத்தப்பட்டவுடன் 11 குரங்குகளில் ஆறு குரங்குகள் இறந்திருக்கின்றன. மீதமுள்ள ஐந்து குரங்குகளை வைத்து ஆராய்ச்சி நடத்தியுள்ளனர்.
இந்த மரபணுவைக் குரங்குகளுக்குச் செலுத்திய பின்னர், குரங்குகளின் மூளை வளர்ச்சி அடைவது அவற்றின் இயல்பான வேகத்தில் இல்லாமல், மனிதனின் மூளை வளர்ச்சிபோல நேரம் எடுத்துக்கொள்கின்றன என்பதும் சோதனை மூலம் தெரியவந்துள்ளது.
மூளை வளர்ச்சியைக் கண்டறிய குரங்குகளுக்கு MRI ஸ்கேனும் செய்யப்பட்டுள்ளது. குரங்குகளின் மரபணுக்களில் மனித மரபணுக்களைச் செலுத்தி அவற்றின் தன்மையையே மாற்றியமைத்துள்ளார்கள் சீன ஆராய்ச்சியாளர்கள்.

இந்த ஆய்வு குறித்த விவரங்கள் வெளியாகியுள்ள நிலையில், குரங்குகளுக்கு மனித மூளையின் மரபணுவைச் செலுத்தியது தொடர்பாகப் பல ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கண்டனங்களையும் பதிவு செய்து வருகிறார்கள்.
குரங்கின் மூளையில் மனிதனின் மரபணுவை செலுத்தி மனிதனாக்க விஞ்ஞானம் முயற்சிக்கிறது .

மனிதன் வரம்பு மீறி தவறு செய்தமையால், ஒரு சாராரை மனிதனிலிருந்து குரங்காக மாற்றிய வரலாற்றை குர்ஆன் கூறுகிறது .
நபி தாவூத் (அலை) - கி.மு1024 - கி.மு 963
அய்லா சமூகத்தினர்களுக்கு இறைவன் சனிக்கிழமை ஜூம்மாவுடைய நாள். அன்றைக்கு ஒய்வுக்குரிய நாளாக அறிவிக்கப்பட்டு .மீன் பிடித் தொழில் செய்பவர்கள் ஜும்மாவுக்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர ,கடலில் "ஐலேசா " வேண்டாம் என்று கட்டளை இடப்பட்டது .
"சனிக்கிழமையன்று (மீன் வேட்டையாடி)க் கொண்டிருந்தார்கள் .ஏனென்றால் , சனிக்கிழமையன்று (அக்கடலில் உள்ள) மீன்கள் அவர்கள் முன் வந்து (நீர் மட்டத்திற்குத்) தலைகளை நீட்டிக் கொன்டிருந்தன . சனிக்கிழமை அல்லாத மற்ற நாட்களில் அவர்களிடம் வருவதில்லை .அவர்கள் இந்த பாவம் செய்து கொண்டிருந்தன் காரணமாக அவர்களை இவ்வாறு மிகக் கடினமான சோதனைக்கு உள்ளாக்கினோம்."
குர்ஆன் (7 : 163)

சனிக்கிழமை மீன்கள் பெருமளவுத் துள்ளி குதிப்பதால், கடற்கரை ஒட்டி சிறு சிறு குட்டைகள் வெட்டி அதில் கடல் நீரைத் தேக்கினால் சனிக்கிழமை அதிகமான மீன்கள் இக்குட்டைகளில் வந்து விழும். அதை மறுநாள் ஞாயிற்றுகிழமை வந்து எடுத்தால், இறை சாபமும் தம் மீது ஏற்படாது, மீன்களும் தமக்கு பெருமளவு கிடைக்கும் என்று அய்லா மீனவர்கள் எண்ணினர் .

அய்லாவில் மொத்தம் 70 ஆயிரம் பேர்கள் இருந்தனர். இதில் 12 ஆயிரம் பேர்கள் மீன் பிடித் தொழில் செய்து வந்தனர். இறைக்கட்டளை இறங்கி 40 வருஷம் ஆகிவிட்டது . சனிக்கிழமை குட்டைகளில் தேக்கி, ஞாயிறு மீன்களை எடுத்து வந்து விற்று பெரும் பணக்காரர்களாக வலம் வந்தனர் அய்லா செம்படவர்கள் .
எந்த இறை வேதனையும் வராததால் "தங்களுக்கு சனிக்கிழமையிலும் மீன் பிடிக்க அல்லாஹ் ஆகுமானதாக்கிவிட்டான்" என்று எண்ணினர்.

திடீரென்று ஓர் இரவுப் பொழுது இவர்களை குரங்குகளாக மாற்றி விட்டான்.
மனிதர்களின் பெருவிரல்களைக் காட்டிலும் குரங்குகளின் பெருவிரல்கள் வலு குறைந்தது . கொஞ்சம் பின்னந்தள்ளி இருக்கும்
மரக்கிளையைப் பிடிக்க ,பொட்டுக்கடலையைப் பொறுக்கி எடுக்க, பக்கத்து குரங்குகளுக்கு பேன் பார்க்க... இது மாதிரியான வேலைக்கு குரங்குகள் பெருவிரலைப் பயன்படுத்துகின்றன .
இதனால் குரங்குகளாக மாறிய அய்லா வாசிகளால் பின்னந் தள்ளி இருக்கும் பெரு விரலைக் கொண்டு தங்கள் வீட்டின் கதவு தாழ்ப்பாளை திறக்க முடியாமல் வீட்டிற்குள்ளேயிருந்து கூச்சலிட்டனர்.
மற்றவர்கள் சுவர் ஏறி குதித்து அவர்களைப் பார்த்த போது . அத்தனை பேர்களும் பாதி மனிதர்களாகவும் மீதி குரங்குகளாகவும் உருமாறி, பின் கொஞ்ச நேரத்தில் முழு குரங்குகளாகவே உருமாறி விட்டனர். இப்படி 3 நாட்கள் உணவு உண்ணாமலும் தண்ணீர் குடிக்காமலும் , .இனச் சேர்க்கை எதுவும் செய்யாமலும் இறந்து போயினர்

இவர்கள் இறக்கும் வரை உருவத்தில் தான் குரங்குகளாக மாறி இருந்தனரைத் தவிர ,அறிவிலும் , விளக்கத்திலும் அதாவது நாம் குரங்குகளாக மாற்றப் பட்டிப்பதை நன்கு அறிந்தே இருந்தனர் .
குரங்குக்குகளுக்கு பறித்து தின்னக் கூடிய புத்தி உண்டு. பனீ இஸ்ரவேலர்களுக்கு சனிக்கிழமை அன்று கடலிலுள்ள மீன் செல்வங்களை பறித்தால்தான் குரங்குகளாக மாற்றப்பட்டார்களா ? அவர்களில் வயோதிகர்கள் பன்றிகளாக மாற்றப்பட்டதற்கு அசுத்தங்களை உணவாக கூடியது பன்றி எனவே ஹாரமான உணவை தங்கள் வயோதிகர்களுக்கு கொடுத்தமையால் பன்றிகளாக மாற்றப்பட்டிருக்கலாமா ?
தெரியவில்லை.
சிம்பன்ஸி குரங்கு அமெரிக்காவில் சைகை பாஷைக் கற்றுக் கொடுத்து சுமார் 200 வார்த்தைகள் அதனுடன் ஜோக் அடித்துக் கொண்டு பேசிக் காட்டி இருக்கிறார்கள் .மனிதர்களைப்போல் புத்திக் கூர்மையானது. பாப் சங்கீதத்தை விட ஜாஸ் ரொம்ப பிடிக்குமாம் . குரங்குகளைப் பற்றிய வீடியோ அதிகம் பார்த்து ரசிக்குமாம்.
கொரில்லா வகை குரங்கு சற்றே உள்ளடங்கிய " நுங்கு "மாதிரி மூக்கு .மனிதர்களைப்போல் கைகளைக் கொண்டது .ஆறு அடி உயரம் கறுப்பு உருவம் .275 கிலோ. வீச்சு வீச்சென்று குரல் எழுப்பும் .தனல் தாழ்த்தி நட்புணர்வுடன் ஒரு பார்வை . உற்சாகம், மற்றும் சோக சமயங்களில் படபடவென்று தன் மார்பை இரண்டு கைகளாலும் தட்டிக் கொள்ளும்.

மனிதர்களுக்கு 23 + 23 =46 குரோமோஸோம்கள் . குரங்களுக்கு
24 +24 =48 குரோமோஸோம்கள்.
குரோமோஸோம்களில் 2-வது குரோமோஸோம் பெரியது இந்த குரோமோஸோமுடன் இன்னொரு இணைந்து "ஏப்" என்னும் பெரிய மனித குரங்கு .
குரங்குகளின் மூளையில் 'ஹிப்போகாம்பல் " என்ற ஒரு சின்ன பாகம் இல்லை . குரங்களில் உராங்குட்டானின் மூளையின் அமைப்பு மனித முளைப் போல் இருந்தாலும், ஹிப்போகாம்பல் இல்லை . ஆனால் ஹிப்போகாம்பல் நம் மூளையில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது எனவே சார்லஸ் டார்வினின் குரங்கிலிருந்து மனிதன் படைக்கப்பட்டான் என்ற தத்துவம் மறுக்கப்பட்டடுள்ளது.
"அய்லா" வாசிகளுக்கு இவை அத்தனையும் ஒரே ஓர் இரவில் மாற்றம் செய்யப்பட்டு , குரங்குகளாகவே மாற்றப்பட்டனர் .

சீன குரங்கு ஆய்வு குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் .

ரஹ்மத் ராஜகுமாரன்.

விலங்குகளின் உலகம் 9

(மனித பரிணாம வளர்ச்சியின் வேர்களைத் தேடி ...)



சீன விஞ்ஞானிகள், மனித மூளையின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கக்கூடிய மரபணுக்களைக் குரங்குகளில் செலுத்தி சோதனை செய்திருக்கிறார்கள். இதன்மூலம் மனித மூளையில் ஏற்படும்

வளர்ச்சிகளைப் போலவே குரங்குகளின் மூளையும் வளர்ச்சியடையும் எனத் தெரிவிக்கிறார்கள். அந்நாட்டின் தேசிய அறிவியல் மதிப்பாய்வு நிறுவனத்திடம், குரங்குகளில் மனித மரபணு குறித்த ஆய்வுகளைச் சீன விஞ்ஞானிகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் எவ்வாறு குரங்குகளில் மனித மரபணுக்களைச் செலுத்தினார்கள், அப்படி மனித மரபணுக்கள் செலுத்தப்பட்ட பிறகு, அந்தக் குரங்குகள் இப்போது இருக்கும் நிலை என அனைத்தையும் தெரிவித்துள்ளனர்.

மனித மூளையிலிருக்கும் மரபணுவான மைக்ரோசிபாலின் (microcephalin) MCPH1-ஐ சீன விஞ்ஞானிகள் 11 ரீசஸ் குரங்களுக்குச் செலுத்தியுள்ளனர். ரீசஸ் குரங்குகள் கிட்டத்தட்ட மனிதர்களைப் போன்று செயல்படக்கூடியவை என்பதால் அந்தக் குரங்குகளுக்குச் செலுத்தியுள்ளனர். இதன்மூலம் 'மனிதன் எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்தான்' என்பதைக் கண்டறியலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
ஹாலிவுட்டில் 'தி பிளானட் ஆப் தி ஏப்ஸ்' என்றொரு திரைப்படம் உண்டு. அதில் இதே போன்றதொரு ஆராய்ச்சியால் குரங்குகள் தனி நாகரிக சமுதாயமாக மாறி மனிதர்களுக்கும் குரங்குகளுக்கும் வாழ்விடச் சண்டைகள் நிகழத் தொடங்கி அதுவே போர் வரைக்கும் இட்டுச்செல்லும்.
ஒருவேளை அறிவு வளர்ச்சியடைந்த குரங்குகள் மனிதர்களைத் தாக்கினால் என்ன ஆகும்? "உடனே இந்த ஆராய்ச்சியை நிறுத்த வேண்டும். சீன ஆராய்ச்சியாளர்கள் உயிரினங்களையும் அவற்றின் தன்மையையும் இன்னமும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே அவர்களின் இதுபோன்ற ஆய்வுகள் நமக்குக் காட்டுகின்றன" என்று சமூக ஆர்வலர்களும் ஆராய்ச்சியாளர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

சீன குரங்கு ஆராய்ச்சி தெரிந்தோ அல்லது தெரியாமலே அது சம்பந்தமாக எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் 2009-ல் அறிவியல் புனைக்கதை எழுதியுள்ளார்
கதை : இயல்பு
கதை ஆசிரியர்: எஸ்.ராமகிருஷ்ணன்
அழைப்பு மணியின் சப்தம் கேட்டு கதவைத் திறந்தேன். வாசலில் ஒரு மனிதக்குரங்கு நின்றிருந்தது. நீல நிறத்தில் கோடு போட்ட சட்டை, தோளில் ஒரு லெதர் பேக், மெல்லிய பிரேம் உள்ள கண்ணாடி. ஒட்ட வெட்டப்பட்ட தலை. அகலமான கைகள். காலில் நைக் ஷூ. உள்ளடங்கிய புன்னகை. சற்றே குழப்பமான நிலையில் என்ன வேண்டும் என்று கேட்டேன்.

அந்தக் குரங்கு இனிமையான குரலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது. தான் ஒரு விற்பனை பிரதிநிதி என்றும், கொரியத் தயாரிப்பான அதிநவீன செல்போன் விற்பதற்காகத் தான் வந்துள்ளதாக சொல்லி தயாராக கையில் வைத்திருந்த விளம்பர அறிக்கை ஒன்றை என் முன்நீட்டியது.நான் வியப்புடன் மனிதக்குரங்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அமெரிக்க உச்சரிப்புடன் கூடிய ஆங்கிலத்தில் மிக நளினமாக அது தன் விற்பனை பொருளின் மேன்மைகளைப் பற்றி எடுத்து சொல்லிக் கொண்டிருந்தது. என் மனதிலே அது மனிதக் குரங்கு, மனிதக் குரங்கு என்ற ஒரு ஒற்றைக்குரல் ஓயாமல் எதிரொலித்தபடியே இருந்தது. என் குழப்பத்தைப் புரிந்து கொண்டது போல மெல்லிய வெட்கத்துடன் இதன் முன்பு என்னைப் போன்ற பிரதிநிதிகளை நீங்கள் கண்டதில்லையா என்று ஆங்கிலத்தில் கேட்டது.

இல்லை என்று தடுமாறியபடியே சொன்னேன். விஞ்ஞான வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு நாம் நகர்ந்துவிட்டோம் என்ற உண்மையை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். செயற்கை அறிவு கொண்ட ரோபேக்களை விடவும் எங்களைப் பார்த்துதான் அதிகம் பேர் வியப்படைகிறார்கள். அது ஏன் என்றே புரியவில்லை என்றது.

அப்படியெல்லாம் இல்லை. இது என்னுடைய தவறு தான் என்று தயங்கியபடியே சொன்னேன்.
தான் ஹோமேசெபியன் வகை குரங்கு என்றும் தனது மூதாதையர்களான நியான்டர்தால், குரோமகனான் பற்றி நிச்சயம் நான் அறிந்திருப்பேன் என்றபடியே தனது குடும்பம் முப்பது வருசங்களுக்கு முன்பாகவே அடர்ந்த வனத்திலிருந்து இடம்பெயர்ந்து, நகரம் நோக்கி வந்துவிட்டதாகவும் தான் முறையாக பள்ளி கல்வி கற்று, நான்கு மொழிகளில் பயிற்சி பெற்றுள்ளதோடு, டெல்லி பல்கலைகழகத்திலிருந்த விற்பனையுத்திகள் குறித்த சான்றிதழ் பட்டயமும் பெற்றிருப்பதாக சொல்லியது.
நான் தயக்கத்துடன் இப்படி ஒருவரை நான் முன்பு சந்தித்ததேயில்லை என்று சொன்னேன். அது தலையசைத்தபடியே இந்த நகரில் என்னைப் போன்றவர்கள் அதிகமில்லை. ஆனால் என் நண்பர்களில் பலர் வெளிநாடுகளில் முக்கியப் பொறுப்புகளை வகிக்கிறார்கள். பேராசிரியர்களாக, விமானியாக, ஏன் ஊடக விற்பன்னர்களாக கூட பணியாற்றுகிறார்கள். அங்கே அவர்களை எவரும் பேதமாக நடத்துவதில்லை, கேலி செய்வதில்லை என்றது.

அது சரி தான் என்றபடியே அதன் கைகளை பார்த்து கொண்டிருந்தேன். அகலமான கைகள். விரல்நகங்கள் கவனமாக வெட்டப்பட்டிருந்தன. மனிதக் குரங்கு என் வீட்டில் அலங்காரத்திற்கு வைக்கப்பட்ட பொருள்களை பார்வையிட்டபடியே உங்கள் ப்ரிட்ஜில் முட்டையொன்று உடைந்து போயிருக்கிறது என்றது. அவசரமாக குளிர்சாதன பெட்டியின் கதவைத் திறந்து பார்த்தேன். நிஜம் ஒரு முட்டை உடைந்து வழிந்து போயிருந்தது,

அதை எடுத்து வெளியே வைத்தபடியே எப்படி அதற்கு தெரிந்தது என்று கேட்டேன.
மனிதக் குரங்கு சிரித்தபடியே தலைமுறை தலைமுறையாக காட்டில் தான் வாழ்ந்தோம். வாசனையை எங்கிருந்து கசிந்தாலும் அறிந்துவிட முடியும் என்றது.
என்னால் சமையலறையில் இருந்து வரும் வாசனையை கூட எது என்னவென்று பிரித்து அறிய முடியவில்லை என்றேன்.

குரங்கு சிரித்தபடியே வாசனை, சிறு சப்தம், பயம் யாவும் அடிமனதில் அப்படியே தானிருக்கிறது. இன்னும் மறையவில்லை என்றபடியே உங்கள் வீடு இருக்குமிடம் ஒரு காலத்தில் பெரிய ஏரியாக இருந்தது என்றும் அதில் எண்ணிக்கையற்ற வாத்துகள் நீந்திக் கொண்டிருந்தது என்று வாசித்திருக்கிறேன். நீங்கள் எப்போதாவது ஒரு ஏரியின் மீது உறங்குவதை போல உணர்ந்திருக்கிறீர்களா என்று கேட்டது
அந்த மனிதக் குரங்கு சொல்வது உண்மை. இந்த இடத்தில் நாற்பது வருசங்களுக்கு முன்பு வரை பெரிய ஏரியிருந்தது. அதை மூடி அந்த இடத்தில் தான் புதிய கட்டிடங்கள் கட்டினார்கள். இன்றைக்கும் இதன் நிலப்பதிவுகளில் அந்த ஏரியின் பெயர் குறிப்பிடப்படுகிறது என்று சுட்டிகாட்டினேன்.
மனிதக்குரங்கு சிரித்தபடியே மனிதர்களால் ஆகாசத்தையும் மேகங்களையும் மட்டும் தான் விலைக்கு வாங்க முடியவில்லை. நகரங்கள் அலுப்பூட்டுகின்றன. இங்கே இலைகள் உதிரும் ஒசை கேட்பதில்லை. வண்டின் சிறகொலியோ, பறவைகளின் ரெக்கையடிப்போ, தவளைகளின் புலம்பல்களோ கேட்பதேயில்லை. ஒரே வாகன இரைச்சல். உலகிலே தண்ணீரை விலைக்கு வாங்கும் ஒரே உயிரினம் மனிதர்கள் தான் என்றபடியே தனது பையில் இருந்த மாதிரி செல்போன் ஒன்றை எடுத்து பிரித்தது.
அதற்கு திருமணமாகி விட்டதா என்று கேட்டேன்.

குரங்கு சிரித்தபடியே தன்னைக் காதலிக்க இளம் பெண்கள் எவருக்கும் விருப்பமில்லை என்பதால் உறவினர்களிலே ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டுவிட்டதாக சொல்லி தனது பர்ஸ திறந்து அதிலிருந்த பெண்குரங்கு ஒன்றின் புகைப்படத்தைக் காட்டியது. எனக்கு அந்த புகைப்படத்தை விடவும் பர்ஸில் வைத்திருந்த இரண்டு கிரிடிட் கார்டுகள் மற்றும் பிரபலமான கிளப் ஒன்றின் உறுப்பினர் கார்டு , வானகம் ஒட்டும் சைலன்ஸ் யாவும் கண்ணில் பட்டது.

நான் அந்த திகைப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமலே ஏன் அது விற்பனை பிரதி வேலையைத் தேர்வு செய்தது என்று கேட்டேன். இது தான் சவாலாக இருக்கிறது, ஒவ்வொரு நாளும் வாழ்க்கை எதிர்பாரமல் இருக்க வேண்டும். புதிய மனிதர்கள். புதிய சவால்கள் இல்லாத வாழ்க்கையை நினைத்து கூட என்னால் பார்க்க முடியவில்லை. மனிதர்கள் அலுப்பூட்டும் வேலைகளில் தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்பணித்து கொள்கிறார்கள். அது என்னால் ஒரு போதும் இயலாது. அந்தந்த நிமிசத்தில் வாழ வேண்டும்

அப்படி நம்மால் இயலாமல் போவதற்கு காரணம் நம் நினைவுகள் தான் என்கிறார் ஜே. கிருஷ்ணமூர்த்தி. அது சரியென்றே தோன்றுகிறது என்றது.

நான் திகைப்போடு ஜே.கிருஷ்ணமூர்த்தி படித்திருக்கிறதா என்று கேட்டேன். தனக்கு கிருஷ்ணமூர்த்தியை பிடிக்கும் என்றதோடு டேவிட் போம் என்ற இயற்பியல் அறிஞருடன் ஜேகே காலத்தின் முடிவின்மை பற்றி நிகழ்த்திய உரையாடல் அற்புதமானது என்று சொல்லி வியந்தபடியே தனக்கு குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா என்று மிக அன்புடன் கேட்டது.
நான் பிரிட்ஜில் இருந்த குளிர்ந்த தண்ணீரை எடுத்து வந்து தந்த போது உதட்டிலிருந்து ஒரு சொட்டு தண்ணீர் வெளியே சிந்திவிடாமல் அது கவனமாக குடித்துவிட்டு தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்து வெண்ணிற கைக்குட்டையை எடுத்து உதட்டை துடைத்து கொண்டது. பிறகு தன்னியல்பாக புதியரக செல்போன்களின் சாத்தியபாடுகளை விளக்கி சொல்ல துவங்கியது.

அரை மணிநேர பேச்சிற்கு பிறகு நான் அதனிடமிருந்து ஒரு புதிய போனை வாங்கிக் கொள்வது என்று முடிவானது. தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த லெதர் பையை எடுத்து அதிலிருந்த பில் புத்தகத்தில் என் பெயர் விலாசம் மற்றும் சுயவிபரக்குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தது.
நான் அந்த தோள்பையினுள் பார்த்து கொண்டிருந்தேன். ஒரு புத்தகம், இசைகேட்பதற்கான சிறிய ஐபேடு. ஒரு பிஸ்கட் பாக்கெட் மற்றும் சிறிய வாசனை திரவியப்புட்டி காணப்பட்டது.
அழகான கையெழுத்துடன் சுயவிபரங்களை பூர்த்தி செய்து கொண்டிருந்த குரங்கு பையிலிருந்த புத்தகத்தை நான் கவனிப்பதை அறிந்து அதை எடுத்து என்னிடம் நீட்டியபடியே இது நீட்சே.. மிக முக்கியமான சிந்தனாவாதி. சோர்வுறும் போது அடிக்கடி இதை வாசிப்பேன் என்று சொல்லி சிரித்தபடியே படிவத்தில் என்னிடம் கையெழுத்து கேட்டது.

நான் கையொப்பமிட்டபடியே காசோலை ஒன்றினை தந்தேன். மிகுந்த அன்புடன் நன்றி தெரிவித்துவிட்டு, தங்கள் கம்பெனி எனக்குரிய புதிய செல்போனை தபாலில் அனுப்பி வைக்கும் என்றபடியே என்னிடமிருந்து விடைபெற்று போனது.
மனிதர்களிடம் கூட காணமுடியாத ஒழுங்கும், அன்பும், மிருதுவான பேச்சும் கொண்டிருந்த அந்த குரங்கை வியந்தபடியே இருந்தேன்.
மின்சாரம் தடைபட்டு இருந்ததால் லிப்ட் வேலை செய்யவில்லை போலும் எரிச்சலும் அலுப்புமாக மனிதகுரங்கு லிப்டின் பொத்தான்களை அமுக்கியபடியே நின்றிருப்பது தெரிந்தது. நான் ஜன்னல் வழியாக பார்த்து கொண்டிருந்தேன். மனித குரங்கு லிப்டை வெறித்து பார்த்தபடியே ஆத்திரத்துடன் முணுமுணுத்தது.
மசிரானுங்க. இவங்க ஒவ்வொருத்தரையும் உருவி உருவி செல்போன் விற்கிறதுக்குல்லே நாக்கு தள்ளி போயிருது. இதுல கரண்ட் மசிரு வேற வேலை செய்யலை என்று ஆத்திரத்துடன் சொல்லியபடியே லிப்டிலிருந்து விலகி நடந்து அங்குமிங்கும் பார்த்தது,

எவரும் தன்னை கவனிக்கவில்லை என்று உணர்ந்த மறுநிமிசம் எனது வீடிருந்த பனிரெண்டாவது தளத்திலிருந்து ஒரே தாவாக வெளியில் தாவி பூமியை நோக்கி குதித்து எதுவும் நடக்காதது போல தன் பைக்கை எடுத்துக் கொண்டு சாலையை நோக்கி போய்க் கொண்டிருந்தது.
" அவனுடைய கட்டளைகளைப் பின்னும் நீங்கள் புறக்கணித்தால், உங்களை அல்லாத மக்களை (உங்கள் இடத்தில்) மாற்றி (அமைத்து) விடுவான். பின்னர், அவர்கள் உங்களைப் போல் இருக்க மாட்டார்கள்"
(அல்குர்ஆன் : 47:38)
இந்த வசனம் அறிவு பெறப்போகும் குரங்கினம் குறித்துதான் இறைவன் குர்ஆனில் பேசுகிறானோ என்ற அச்சம் ஏற்படுகிறது

ரஹ்மத் ராஜகுமாரன்

விலங்குகளின் உலகம் 10

(செம்மறி ஆடு)



செம்மறி ஆட்டினங்களில் அதன் பற்களுக்கும் வாழ்நாளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இளம் செம்மறி ஆட்டில் அனைத்து உதிர்பற்களும் முளைத்திருக்கும் நிலையில் 20 பற்களைக் கொண்டிருக்கும். முதிர்ச்சியடைந்த செம்மறியில் 32 பற்கள் காணப்படும்.மற்ற அசைபோடும் விலங்குகளைப் போலவே, கீழ்த்தாடையில் மட்டுமே பற்கள் காணப்படுகிறது. மேல் தாடை ஒரு கடினமான பற்களற்ற மெத்துத் திண்டு போல காணப்படுகிறது. இப்பற்கள் இலை தளைகளை நன்றாகப் பற்றிக்கொள்ள உதவுகிறது. முன்வாய்ப் பற்களுக்கும் (incisors) பின் கடைவாய்ப் பற்களுக்கும் (molars) நீண்ட பல் இடைவெளி (diastema) காணப்படுகிறது. செம்மறிஆட்டின் ஆரம்ப வாழ்நாளில் முன்வாய்ப்பற்களைக் கொண்டு அதன் வயதை

ஒருவரரல் எளிதாகக் கணித்துக் கூறிவிட முடியும்.
ஒவ்வொரு ஆண்டும் பால் பற்கள் ஒரு ஜோடி பெரிய நிரந்தரப் பற்களால் மாற்றப்பட்டுக் கொண்டே வரும். இவ்வாறு எட்டு நிரந்தரப் பற்கள் முழு தொகுப்பும் மாற்றப்பட்டிருக்கும் போது செம்மறியின் வயது சுமார் நான்கு ஆண்டுகளாக இருக்கும்.
பின்னர் வயது அதிகரிக்க அதிகரிக்க முன் பற்களை இழந்து கொண்டே வரும். இது ஆட்டின் உணவு உட்கொள்ளுவதும் உணவை அசை போட்டு அரைப்பதும் அவைகளுக்கு கடினமாவதுடன் உடல்நிலையிலும் உற்பத்தியிலும் இடையூறுகளை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக வளர்க்கப்படும் செம்மறி நான்கு வயதுக்குப் பின் முதுமையை நோக்கி நகரத்தொடங்குகின்றன.
செம்மறி ஆட்டின் சராசரி ஆயுட்காலம் 10 முதல் 12 ஆண்டுகள் என்றாலும் சில செம்மறி ஆடுகள் 20 ஆண்டுகள் வரை வாழக்கூடும்
கிழட்டு செம்மறி ஆட்டு கறி மோசமானதாகும். அவ்வாறே பெட்டை செம்மறி ஆட்டுக் கறியும் மோசமானதாகும் .

இறைச்சியில் தரமானது ஆண் கருப்பு செம்மறி ஆடாகும். ஏனென்றால் அது மிகவும் மென்மையானது ,மிகச் சுவையானது ,மிகப் பயனுள்ளதுமாகும் .
காயடிக்கப்பட்ட செம்மறி ஆட்டின் கறி மிகவும் பயனுள்ளதும் தரமானதாகும் ..கொழுத்த ஆட்டை விட சிகப்பான செம்மறி ஆடு உணவுக்கு மிக எளிதாகவும் தரமாகவும் உள்ளது.
கழுத்து கறி தரமானதும்,சுவையானதுமாகும். மிகத் துரிதமாக செரிமானம் அடையக் கூடியது .
முதுகுக் கறியில் மிகுந்த உணவு சத்து உள்ளது. அது நல்ல ரத்தத்தை உண்டுபண்ணுகிறது.
முன் சப்பை கறி மிகவும் மென்மையானதும் ,மிகச் சுவையானதும்,மிக மிருதுவானதும் அசுத்தத்திற்கு அப்பாற்பட்டதும் ,எளிதில் செரிமானம் ஆகக்கூடியதுமாகும்.
இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார்
இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (ஆட்டின்) சப்பை எலும்பு ஒன்றை (அது வெந்து கொண்டிருந்த பாத்திரத்தில் இருந்து) எடுத்து அதிலிருந்த இறைச்சியைக் கடித்துச் சாப்பிட்டார்கள். பிறகு எழுந்து தொழுதார்கள். ஆனால் (புதிதாக) அங்கசுத்தி (உளு) செய்யவில்லை. புகாரி 5404.
ஒட்டகம் கட்டுமிடத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “ஒட்டகம் கட்டுமிடத்தில் தொழாதீர்கள். ஏனென்றால் அது ஷைத்தான்களிலிருந்து உள்ளதாகும்” என்று கூறினார்கள். அதேபோன்று ஆட்டைக் கட்டுமிடத்தில் தொழுவதைப் பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “அதில் தொழுது கொள்ளுங்கள். ஏனென்றால் அதில் தான் பரக்கத் உள்ளது”என்று கூறினார்கள்.நூல்: அபூதாவூத் 416
உம்மு ஹானி (ரலி) அவர்களிடம், “நீ ஒரு ஆட்டை வளர்த்துக் கொள். அதில் தான் பரக்கத் உள்ளது” என்று கூறினார்கள்.
நூல்: இப்னுமாஜா 2295

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒட்டகை வைத்திருப்போருக்கு பெருமையிருக்கிறது. ஆனால் ஆட்டில் தான் பரக்கத்"என்றார்கள். நூல்: இப்னுமாஜா 2295
இந்த ஹதீஸ் அடிப்படையில் பார்த்தால் ஆடு தான் மிகக் குறைந்த அளவில் குட்டி போடுகிறது. செம்மறி ஆடு ஒரு தடவைக்கு ஒரு குட்டி தான் போடும். வெள்ளாடு வேண்டுமானால் இரண்டு குட்டி போடும். மனிதனைப் போல பத்து மாதம் கருவைச் சுமக்கும்.
அதே போல் அதிகம் உலகில் அழித்து உண்ணப்படும் பிராணியும் ஆடு தான். அதன் இனவிருத்தியும் அழிவையும் பார்த்தால் அந்த இனம் அழிந்து போயிருக்க வேண்டும். டைனோசரைப் போல அரிதாகப் பேசப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஆடுகள் தான் அதிகம் உள்ளதைப் பார்க்கிறோம்.
பன்றியெல்லாம் ஒரே பிரசவத்தில் பத்து குட்டி போடும். ஆனால் அதையெல்லாம் விட ஆடு தான் அதிகம் இருப்பதைப் பார்க்கிறோம். பண்ணையாக இருக்கும் பிராணிகளை கணக்கெடுத்தால் ஆடு தான் அதிகம் இருப்பதைப் பார்க்கிறோம். இது தான் அதிசயம், பரக்கத்.
அல்லாஹ் ஹாபிலுடைய ஆட்டை ஏற்றுக் கொண்டான் அதை சொர்க்கத்தில் 40 வருடங்கள் பாதுகாத்தான். அந்த ஆட்டைத்தான் இப்ராஹிம் நபி (அலை) அவர்கள் இஸ்மாயில் (அலை) அவர்களுக்கு பகரமாக பலியிட்டார்கள்.
நூல் : (தப்ஸீர் - இப்னு கஸீர்).

குர்பானி கொடுக்கும் நடைமுறை ஆதி மனிதர் ஆதம் நபி (அலை) அவர்களின் காலம் தொட்டே பாரம்பரியமாக இருந்து வருகிறது ..
அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ். இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் இருவரும் அறிவிக்கிறார்கள் ..
"ஆதம் (அலை) அவர்களுக்கு ஒவ்வொரு சூலிலும் ஒரு ஆண் குழந்தையும். ஒரு பெண் குழந்தையும். பிறக்கும் முதல் பிரசவத்தில் பிறக்கும் ஆணுக்கு மறு பிரசவத்தில் பிறக்கும் பெண்ணையும்,மறு பிரசவத்தில் பிறக்கும் ஆணுக்கு முதல் பிரசவத்தில் பிறந்த பெண்ணையும் ஆதம் நபி (அலை) அவர்கள் திருமணம் செய்து வைப்பார்கள்.
மூத்தவரான காபிலுடன் இக்லீமா என்ற பெண்ணும் ஹாபிளுடன் லுபூதா என்ற பெண்ணும் பிறந்தனர். இக்லீமா மிக அழகாகவும் லுபூதா அழகு குறைந்தவலாகவும் இருந்தார்கள் மரபின் அடிப்படையில் ஹாபில் காபிலிடம் இக்லீமாவை தனக்கு நிக்காஹ் செய்து வைக்குடிபம் கேட்டார்.
காபில் மறுத்தான் தந்தை ஆதம் நபி (அலை) அவர்கள் சொல்லியும் அவன் கேட்கவில்லை எனவே இருவரிடமும் இறைவனுக்கு குர்பானி கொடுக்கும் படியும். குர்பானி ஏற்கப்படுபவருக்கு இக்லீமாவை நிக்காஹ் செய்து வைக்கும்படியும் ஆதம் நபி (அலை) அவர்கள் சொன்னார்கள்
அதன் அடிப்படையில் ஆடுமேப்பாளரான ஹாபில் அழகான கொளுத்த தரமான செம்மறி ஆட்டை மன நிறைவோடும் இறையச்சத்தோடும் காணிக்கை செலுத்தினார்.
விவசாயியான காபில் தொலியும் உம்மியும் கலந்த மட்டமான தானியங்களை வெறுப்புடன் காணிக்கை செலுத்தினார் இறையச்சம் நிறைந்த ஹாபிளின் குர்பானியை ஏற்று. காபிலின் குர்பானியை இறைவன் மறுத்தான். எனவே அதன் காரணமாக ஹாபிலை காபில் கொன்றான் "
(தப்ஸீர் - இப்னு கஸீர்)

கைபர் யுத்தத்தின் போது, நபி (ஸல்) அவர்கள் "ஸத்துஸ்ஸஹ்பா" என்ற அதே இடத்தில் மூன்று நாட்கள் தங்கி இருந்தார்கள்.
ஸல்லாம் இப்னு மிஷ்கம் என்பவனின் மனைவி, இவர் கைதியாக பிடிபட்டவர்களில் ஒருவர், பின்னர் அடிமை தனத்தில் இருந்து விடுதலை செய்யபட்டாள். தாங்களுக்கு நடைபெற்ற திருமணத்திற்காகவும் தங்கள் சார்பாக ஒரு விருந்து வைப்பதாக கூறி நபி(ஸல்) அவர்களுக்கு ஒரு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து இருந்தாள்.


ஒரு ஆட்டை விஷம் கலந்து சமைத்தாள். நபி(ஸல்) அவர்கள் விரும்பி உண்ணுவது முன் சப்பை என்பதை அறிந்து கொண்டு, அந்த முன் சப்பை பகுதியில் அதிகமாக விஷத்தை தனியாவும் ஏற்றினாள்.
நபி(ஸல்) அவர்கள் முன்பாக அந்த விஷமேற்றிய கறி வைக்கபட்டது. நபியவர்கள் அதில் இருந்து ஒரு துண்டை எடுத்து கடித்தார்கள், ஆனால், விழுங்காமல், அப்படியே துப்பிவிட்டார்கள்.
"இந்த எலும்பு, தன்னில் விஷம் ஏற்றப்பட்டுள்ளது என்று என்னிடம் கூறுகிறது" என்று கூறினார்கள்.
பின்பு, அந்த பெண்ணை பிடித்து விசாரித்தார்கள் நபித்தோழர்கள். அவள் உண்மையை ஒப்பு கொண்டாள். இவர் ஒரு சாதாரண அரசரா அல்லது இறைதூதரா என்று அறிந்து கொள்ளவே அவ்வாறு செய்தேன், நீங்கள் இறைதூதராக இருந்தால் இதை அறிந்து கொள்ளுவீர்கள் என்று நம்பினேன் என்று கூறினாள். நபி(ஸல்) அவர்கள் அவளை மன்னித்து அனுப்பினார்கள்.

ஆனால், அந்த விஷமேற்றப்பட்ட கறியை முழுமையாக சாப்பிட்ட, பிஷ்ர் இப்னு பரா(ரலி) என்ற நபி தோழரின் உடம்பில் விஷம் முழுவதும் பரவி அவர்கள் அங்கேயே மரணம் அடைந்தார்கள்.

ஒருவர் இறக்காரணமாக அவள் அமைந்துவிட்டதால், அவள் மீது ஆத்திரம் கொண்ட நபி தோழர்களால் கொல்லபட்டதாகவும் செய்திகள் உண்டு (புகாரி)
ரஹ்மத் ராஜகுமாரன் .
(இத்துடன் விலங்குகளின் உலகம் என்கிற தொடர் பதிவுகள் நிறைவு பெறுகிறது)

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 1

(கணிதத்தின் அறிமுகம்)



கணிதம் அறிவியல் மொழியாக அழைக்கப்படுகிறது. இத்தாலிய வானியலாளரும் இயற்பியலாளருமான கலிலியோ கலீலி மேற்கோள் காட்டி, " கணிதம் என்பது கடவுள் பிரபஞ்சத்தை எழுதியுள்ள மொழியாகும் " என்கிறார்.
(ஆகவே இச்சொற்றொடரை இத்தொடர் பதிவுக்கு தலைப்பாக்கினேன்)

அது உண்மைதான் என்பதற்கு இறைவனால் மனித குலத்திற்கு அருளப்பட்ட குர்ஆனிலும் , அவன் செய்ய சொல்லும் வழிபாடு மற்றும் செயல்முறைகளிலும் கணிதமே மிகைத்திருப்பதைச் சுட்டிக் காட்டவே இத்தொடர் பதிவில் உங்களுக்கு சொல்லிக் காட்ட இருக்கிறேன் .

தலை சிறந்த தத்துவ ஞானியும், கணிதப் பேராசிரியராகவும் சமூகப் போராளியாகவும் திகழ்ந்த பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறுவார்: " கணிதம் உண்மையைக் கூறுவது மட்டுமல்ல, அளவிலா அழகு படைத்தது, ஓர் ஒப்புயர்வற்ற சிற்பம் போல கணிதம் அழகுமிக்கது"
ராமானுஜனின் இங்கிலாந்து சக கணித அறிஞர் ஹார்டி சொன்னார்: "கணிதம் அழகின் உருவம். அழகிலா கணிதம் என்று ஒன்றில்லை "
" கடவுள் வடிவியலின் (Geometry) நிரந்தர நிபுணர் " என்கிறார் பிளாட்டோ.
"எண்களே கடவுள்" என்கிறார்கள் பிதாகரஸ்வாதிகள் கணிதத்தை மதமாக்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கணிதமேதை கார்ல் கஸ்டவ் என்பவர் இன்னும் ஒரு படி மேலே போய் "கடவுள் பயன்படுத்தும் ஒரே மொழி கணிதம் " என அறிவித்தார். அது சரிதானோ என்கிறது இவ்வாய்வு .
ஆங்கிலேயே இயற்பியலாளர் சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் இறுதியாக "இந்த பிரபஞ்சத்தை வடிவமைத்தது ஒரு கச்சிதமான தூய கணிதவியலாளர் தான் என்பது நிச்சயம் ஆகிவிட்டது "
மேற்கூறப்பட்ட அறிஞர்களான பிளாட்டோ,பிதாகரஸ்வாதிகள், கார்ல் கஸ்டவ் , சர் .ஜேம்ஸ் ஜீன்ஸ் ஆகியோர்களின் சொற்றொடர்களை ஒருங்கே இணைத்தால், குர்ஆன் கூறுவது

اَللّٰهُ الَّذِىْ رَفَعَ السَّمٰوٰتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ كُلٌّ يَّجْرِىْ لِاَجَلٍ مُّسَمًّى يُدَبِّرُ الْاَمْرَ يُفَصِّلُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ بِلِقَآءِ رَبِّكُمْ تُوْقِنُوْنَ
வானங்களை தூணின்றியே உயர்த்தியவன் அல்லாஹ்வே! அதனை நீங்கள் (உங்கள் கண்களால்) காண்கிறீர்கள். அன்றி, அர்ஷின் மீது அவன் (தன் மகிமைக்கு தக்கவாறு) உயர்ந்து விட்டான்.
அவனே சூரியனையும் சந்திரனையும் தன் அதிகாரத் திற்குள் வைத்திருக்கின்றான். (இவை) ஒவ்வொன்றும் (அவற்றிற்குக்) குறிப்பிட்ட கால திட்டப்படி நடந்து வருகிறது. (அவற்றில் நடைபெறும்) சலக காரியங்களையும் அவனே திட்டமிடுகின்றான்.
நீங்கள் (இறந்த பின்னர் உயிர்பெற்று) உங்கள் இறைவனைச் சந்திப்பதை உறுதி கொள்வதற்காக (தன்னுடைய) வசனங்களை (இவ்வாறு உங்களுக்கு) விவரித்து அறிவிக்கிறான். (அல்குர்ஆன் : 13:2)
அறிவியலின் மகாராணி என்றால் அது கணிதத்தை மட்டுமே குறிக்கும். கணிதம் இன்றி ஒரு செயல்பாடும் செய்ய முடியாது. எதைச் செய்தாலும், அதன் பின்னணியில் கணிதம் இருக்கும். மனிதன் முதலில் அறிந்துகொள்ள முயன்றது கணிதவியல் முறைதான்.

சூரியன் எப்போது உதிக்கிறது, இரவு எப்போது வரும் என்பதை அடிப்படையாக இஸ்லாமிய தொழுகை நேரங்கள் வகுக்கப்படுகின்றன .
சந்திரனின் நடவடிக்கையைக் கொண்டு மாதக் கணக்கையும் இஸ்லாம் கணக்கிடுவது கணித அடிப்படையில்தானே ..

فَالِقُ الْإِصْبَاحِ وَ جَعَلَ اللَّيْلَ سَكَنًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ حُسْبَانًا ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِ
அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான். (நீங்கள் காலத்தின்) கணக்கை அறிவதற்காக சந்திரனையும் சூரியனையும் ஆக்கினான். இவை அனைத்தும் மிகைத்தவனும், மிக்க அறிந்தவனும் ஆகிய அல்லாஹ்வுடைய ஏற்பாடாகும்.(அல்குர்ஆன் : 6:96)

எவ்வளவு வேகத்தில் கல் வீசி, எந்த விலங்கை எப்படி கொல்லலாம் என்று ஆதிவாசிகள் உணவைத் தேடும் கணக்கை தொடர்ந்து, குடும்பத்தில் எத்தனை பேருக்கு இவ்வளவு உணவுப் பொருள் தேவை என்பதையெல்லாம் கணிப்பது கணிதம் தொடர்பான தகவல்கள்தானே..!
மனிதகுல நாகரிகத்துக்கு முன்பே, உயிர் உருவாக்கத்திற்கான காலம் கணிக்க, மாதவிடாய் நாட்கள் கணிக்க, மகப்பேறு காலம் அறிய கணிதம் தேவை ஏற்பட்டது. பிறந்த குழந்தைக்கு பாலூட்டும் காலம் 2 வருடம் என்று வரையறுத்ததும், இவை யாவும் கணிதம்தானே ..
இத்தா எண்ணிக்கை ,கணிப்பு ,(இடைக்கால காத்திருப்பு காலம்) என்பது சொல்லருத்தம் விவாகரத்துப் பெற்ற இஸ்லாமிய பெண் அல்லது கணவனை இழந்த இஸ்லாமிய பெண் குறிப்பிட்ட காலம் திருமணஞ் செய்யாமல் காத்திருக்கும் இடைக்காலத்தைக் குறிக்கின்றது.
கணவன் இறந்துவிட்டாலோ, கணவனால் விவாகரத்துச் செய்யப்பட்டாலோ மனைவி கர்ப்பமாக இருக்கிறாளா, இல்லையா என்பதை அறிய இத்தகைய இடைக்கால காத்திருப்பு காலம் கணிக்க பயன்படுகிறது.

கணவன் மரணித்த பெண்கள் கர்ப்பிணிகள் அல்ல என்றால் 4 மாதங்களும், 10 நாட்களும் இத்தா இருக்க வேண்டும். இந்தக் காலம் பிறைக் கணக்கின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.
கர்ப்பிணியாக இருந்தால்,"கர்ப்பிணிகளின் (இத்தாக்)காலம் அவர்கள் தமது குழந்தைகளைப் பெற்றுப் பிரசவிக்கும் வரையிலாகும்.." (65:3),(65:4) என்கிறது திருக்குர்ஆன் வசனம். இதெல்லாம் கணித அடிப்படையிலான வேத வசனங்கள்தானே ..


திருவள்ளுவர் தந்த குரலில் ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப'' என்று கணிதத்தின் முக்கியத்துவத்தை ஒன்று முதல் கோடி எண்கள் வரை வகைப்படுத்தியுள்ளார்.
சிறுவர்கள் விளையாடும் பிசினஸ், ஸ்டாம்ப், பல்லாங்குழி, பரமபதம் இவையெல்லாம் கூட்டல், கழித்தல், பெருக்கல்களை கற்றுக் கொடுக்கும் கணித புதிர் விளையாட்டுகள் விடை தெரியாதவற்றை விடை காண வழிவகுக்கின்றன. இது வாழ்க்கையின் புரியாத புதிர்களை கண்டடைய வைக்கிறது.
பரமபதம் என்பது கடல் சோவிகளைப் பயன்படுத்தி தாய விளையாட்டு ஆடுவது.தற்காலத்தில் அது ஏணியும், பாம்பும் கொண்ட ஒரு பாரம்பரிய பலகை விளையாட்டு. இரண்டுக்கு மேற்பட்டோர் விளையாடும் இவ்விளையாட்டில் பலகை சதுரக் கட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.
இவ்விளையாட்டு பண்டைய இந்தியாவில் கி.மு இரண்டாம் நூற்றாண்டளவில் விளையாடப்பட்டது. 1892 அளவில் இங்கிலாந்தில் அறிமுகமானது.

இவ்விளையாட்டு கூறும் வாழ்வியல் தத்துவம் நல்வினைகளதும், தீவினைகளதும் விதிப்பேறுகளைக் கொண்டது என்பதை குழந்தைகளுக்கு விளக்குவதாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை யார் அறிவர் ?
தாயக்கட்டை விளையாட்டை உம்மு பாத்திமா (ரலி) அவர்கள் விளையாடியதாக வரலாற்றில் காண முடிகிறது .
சரியான முறையில் புரிந்து கொண்டு, தெரிந்ததை கொண்டு தெரியாததை அறிவுப்பூர்வமாக யோசித்தாலே விடைகளை கண்டறிந்து விடலாம். மூளைக்கு வேலை கொடுக்கவும், மனதை மகிழ்ச்சி படுத்தவும் புதிர் கணக்குகள் விளையாட்டாக மட்டுமல்ல;வினையாகவும் பயன்படுத்தப்படுகின்றன.
கணிதம் இன்றி ஒரு செயல்பாடும் செய்ய முடியாது. எதைச் செய்தாலும், அதன் பின்னணியில் கணிதம் இருக்கும். மனிதன் முதலில் அறிந்துகொள்ள முயன்றது கணிதவியல் முறைதான்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 2

(தொழுகையின் நேரங்கள் கணக்கிடுதல்)



இஸ்லாத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்றான ஐவேளைத் தொழுகையை அதற்கென குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவது கடமையாகும்.
"நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது" அல்குர்ஆன் (4:103)
தொழுகை நேரங்கள் இக்காலத்தில் இருப்பது போல கடிகாரங்கள் கண்டுப்பிடிக்காத காலம் .
அக்காலத்தில் ஒவ்வொரு பொழுது தொழுகை நேரங்களை கீழ்க்கண்ட வழிகளில்தான் நிறைவேற்றினார்கள்
தொழுகை நேரங்கள் தொடர்பான ஹதீஸ்கள் பின்வருமாறு
ஃபஜ்ர் :-
அடிவானம் வெளுக்கும் பொது; நஸாயி 529
அடிவானம் வெளுத்து நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்போது; நஸாயி 514
லுஹ்ர் :-
சூரியன் சாய்ந்தபின் ; திர்மிதி 151
நிழல் செருப்பின் வார் அளவுக்கு வரும்போது ; திர்மிதி 149
அஸ்ர் :-
நிழல் ஒரு மடங்கு வரும்போது ; திர்மிதி 149
நிழல் ஒரு மடங்கு + செருப்பின் வார் அளவுக்கு வரும்போது ; நஸாயி 529
நிழலின் நீளம் கோடையில் மூன்று முதல் ஐந்தடி வரை. குளிர் காலத்தில் ஐந்து முதல் ஏழடி வரை ; நஸாயி 507
சூரியன் பொன்னிறமாகும் வரை அசர் தொழுகையின் நேரமுள்ளது.; அபு தாவூத் 396
நிழல் இருமடங்கு வரும் வரை அஸ்ர் தொழுகையின் நேரமுள்ளது. ; திர்மிதி 149
மக்ரிப் :-
சூரியன் மறைந்த பின் ; திர்மிதி 149
அடிவானத்தின் செம்மை மறையும் வரை மக்ரிபின் நேரம் உள்ளது ; நஸாயி 529
நட்சத்திரங்கள் பிரகாசிக்கும் வரை ; அபு தாவூத் 418
இஷா :-
அடிவானத்தின் செம்மை மறைந்த பின் ; நஸாயி 529
இரவின் மூன்றில் முதல் பகுதியில் ; நஸாயி 529
மூன்றாம் பிறை மறைந்தபின் ; அபு தாவூத் 419
மேற்கண்ட ஹதீஸ்களில் ஒரு தொழுகை நேரத்திற்கே வெவ்வேறு கால வரையரையரைகளை நபி ஸல் காட்டிதந்துள்ளர்கள். ஒன்று ஆரம்ப நேரம் மற்றொன்று இறுதி நேரம் என்று வைத்துகொண்டாலும் ஆரம்ப நேரத்திற்கே பல வரையறைகளை கற்று தந்துள்ளதை காணலாம்.
குறிப்பாக இவர்கள் குச்சியை நட்டு நிழலை பார்த்துதான் ரசூலுல்லாஹ் தொழுதார்கள் என்று சொல்லும் அஸ்ர் தொழுகை நேரத்தை பாருங்கள். ஒரு முறை சூரியனின் நிழல் உயராத போதே அஸ்ர் தொழுதிருக்கிறார்கள். ஒரு முறை ஒரு மடங்கு நிழல் வரும்போது அஸ்ர் தொழுதிருக்கிறார்கள்.
மற்றொரு முறை ஒருமடங்கு நிழலுக்கு அதிகமாக செருப்பின் வார் அளவுக்கு நிழல் வந்தபின் அஸ்ர் தொழுதிருக்கிறார்கள்.

பல ஹதீஸ்களில் அஸ்ர் தொழுகைக்கான நேரத்தை பற்றி சொல்லப்படும்போது நிழல் பற்றிய பேச்சே இல்லை.

இஷா தொழுகை நேரத்தை பற்றிய ஹதீஸ்களை கவனிக்கவும். இவற்றையெல்லாம் அலசும்போது காலத்தை அறிந்து கொள்ள சில அழகிய யுக்திகளை நபி ஸல் காட்டிதந்தார்கள் என்பது மட்டுமே தெளிவாகிறது. அவற்றை கண்ணால் பார்த்து ஊர்ஜிதப்படுதிய பின்தான் தொழ வேண்டும் என்ற எந்த கட்டளையும் இல்லை.
நாம் இன்று அவற்றை கணிதமாக மாற்றி பயன்படுத்துகிறோம். அவ்வளவுதான். மாறாக சூரியன் இப்படி இருப்பதை பார்த்து உறுதி செய்தபின்தான் தொழவேண்டும் அல்லது இரண்டு நீதமான் சாட்சிகள் இருந்தால் மட்டுமே மற்றவர் தொழுகை நேரத்தை பார்த்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது போல் எந்த கட்டளையும் இல்லை.
மேலும் நிழலை வைத்து நேரத்தை அறிந்துகொள்வதென்பது ஒரு விஞ்ஞான யுக்தியாகும். அதற்கு பெயர் நிழல் கடிகாரம். நிழல் கடிகாரத்தில் தொழுகை நேரங்கள் மாறாது.
அதாவது நிழல் கடிகாரத்தில் லுஹ்ர் தொழுகை வருடத்தின் எல்லா நாட்களிலும் 12மணிக்கு வரும். சூரிய உதயம் காலை 6 மணிக்கும் சூரிய மறைவு மாலை 6 மணிக்கும் நிகழும். இது வருடத்தின் எந்த நாளிலும் மாறாது.

நிழல் கடிகாரம் காட்டும் நேரத்திற்கு பெயர் true solar time “உண்மையான சூரிய நேரம்”. இன்று நாம் பயன்படுத்தும் கடிகாரங்கள் காட்டும் நேரம் mean solar time சராசரி சூரிய நேரம்.
நமது தொழுகை நேரக் கணக்கீடுகள் உண்மை சூரிய நேரத்திலேயே உள்ளன. ஆனால் அந்த கணக்கீட்டின் வெளிப்பாடுகளை நம் கடிகாரத்தை பார்த்து பயன்படுத்த இயலாது.
எனவே உண்மை சூரிய நேரத்தில் இருக்கும் தொழுகை நேரங்களை நாம் பயன்படுத்தும் கடிகாரங்கள் காட்டும் சராசரி சூரிய நேரத்திற்கு மாற்றினால் மட்டுமே கடிகாரத்தை பார்த்து நம்மால் தொழுகை நேரங்களை செயல்படுத்த இயலும். எனவே எல்லா தொழுகை நேரக்கணக்குகளும் அதை வெளியீடை கடிகார நேரத்திற்கு மாற்றியே தருகின்றன.

குச்சியை நட்டு நிழலைப் பார்த்து தொழவேண்டியதுதானே?
நிழலை பார்த்து நேரத்தை அறிவதென்பது மிகப்பெரிய வானியல் கலை. அந்த வானியலை நபிகளார் அறிந்திருந்தார்கள். அவர்கள் நிழலைக்கொண்டு நேரத்தை கணக்கிட்டார்கள்.
தொழுகை நேரங்களை நாசாதான் உருவாக்கித் தந்ததா?
வரலாறுகளைப்படித்தால் நவீன விஞ்ஞானத்திற்கு வித்திட்டது கவாரிஸ்மி & பிரூணி போன்ற முஸ்லிம் விஞ்ஞானிகள் என்பது தெரியும்.
டாலமி, இந்திய மற்றும் கிரேக்க விஞ்ஞான குறிப்புகளை மேம்படுத்தியும் புதிய விண்ணியல் கோட்பாடுகளையும், வழிமுறைகளையும் சூத்திரங்களையும் கண்டுபிடித்தவர்கள் முஸ்லிம் விஞ்ஞானிகள்தாம்.
ஃபஜ்ர் கோணம் 18டிகிரி என்பதை உலகில் முதன் முதலில் கூறியது பிரூணிதான். அவர்தான் உலகில் முதன் முதலில் பெரும்பான்மையான நகரங்களின் (Geo-coordinates) புவியியல் அளக்கூறுகளை அறிந்து வைத்திருந்தார்.

கிப்லா கணக்கிடுவதை அல் பிரூணிக்கு முன்பிருந்தவர்களே கண்டு பிடித்துவிட்டனர். அதை முக்கோணவியலின் உதவியுடன் இன்று நாம் பயன்படுத்தும் பார்முலாவாக மாற்றியது பிரூணிதான்.
நூற்றாண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் ரசூலு (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த தொழுகை நேரங்களை அறிந்து கொள்ளும் முறைகளை கணிதமாக மாற்றிவிட்டனர். மிக அழகிய நிழல் கடிகாரங்களையும் வடிவமைத்தனர்.
முஸ்லிம் விஞ்ஞானிகள் ஒவ்வொரு கால கட்டத்திலும் தொழுகை நேரங்களை இஸ்லாத்திற்கு உட்பட்டு கணக்கிடும் முறைகளை மேம்படுத்தியே வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இன்று நமது கையில் இருக்கும் தொழுகை நேரக்கணக்கை கண்டு பிடித்தவர்கள் கிறித்தவர்கள் அல்லது யூதர்கள் என்று யாராலும் உரிமை கொண்டாட முடியாது.
தொழுகை நேரக்கணக்காயினும் அல்லது வேறு எந்த கணக்காக இருந்தாலும் அதில் முஸ்லிம்களின் பங்களிப்பும் பெரிய அளவில் இருக்கிறது. அப்படியே அது முஸ்லிம் அல்லாதவர்களின் கண்டு பிடிப்புகளாக இருந்தாலும் அதை குர்ஆன் ஹதீஸ்க்கு மாற்றமில்லாத வகையில் பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை.
படங்களை பார்வையிடவும்

இது துனிசியாவின் அல் உக்பா பள்ளியில் இருக்கும் தொழுகை நேரங்களை காட்டும் அழகிய நிழல் கடிகாரம்.
இது இஸ்தான்புல் நகரில் உள்ள மிஹ்ரிமா மஸ்ஜிதில் உள்ள ஒரு நிழல் கடிகாரம். இது நேரத்தை மட்டுமல்லாமல் ஆண்டுகளின் எண்ணிக்கையையும் நேரடியாக காட்டவல்லது.
பிரபஞ்சம் தொழுகையின் நேரங்களை நிழல்களைக் கொண்டு கணக்கிடும் கணிதத்தின் மூலம் எப்படியெல்லாம் பேசுகிறது என்பதை கவனித்தீர்களா ?

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 3

(இஸ்லாமிய சொத்து பங்கீடு)



" நான் அறிவு என்னும் பட்டினம். அலீ அதன் தலைவாயில்'' என்று போற்றி புகழ்ந்து உரைத்த புண்ணிய நபி (ஸல்) அவர்களின் கண்ணியம் காக்கும் வண்ணம் மென்மையான நாவினால் பொன்னான மொழிகளைப் பொழியும் நாவுடைய ஆய்வாளராக விளங்கினார் அலீ (ரலி) அவர்கள் .
முதற்கலிபா அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சியில் மாட்சிமையுடைய குர்ஆனின் அத்தியாயங்களை அறிவிக்கப்பட்ட காலமுறையில் வரிசைப்படுத்தியவர்கள் அலீ (ரலி) அவர்கள் .
மேலும் அலீ (ரலி) அவர்கள் அரபி மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்கள். அதனால் அலீ (ரலி) "அரபி இலக்கணத்தின் தந்தை " என்று அழைக்கப்பட்டார்கள்.

அலீ (ரலி) அவர்களிடம் அரபி இலக்கணம் கற்ற அபுல் அஸ்வத்து அலீ வேண்டியபடி இலக்கண விதிகளை எழுதி கொடுத்தார்கள் . அதுவே அரபி இலக்கணத்தின் ஆரம்பம்.
திருக்குர்ஆனின் ஞானத்திலும் , கணிதத்திலும் மிகச் சிறப்பாக தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக ஒரு நிகழ்வை வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கேள்வி: என் உடன் பிறந்தவன் இறந்து விட்டான். அறுநூறு திர்ஹங்கள் அவனின் சொத்து. அவனின் தங்கையாகிய எனக்குரிய பங்கு ஒரு திர்ஹம் தானா?
அக்குடும்ப உறுப்பினர்களை அலீ (ரலி) அறிந்திருந்தார்கள் அதாவது இறந்தவருக்கு இரண்டு பெண் மக்களும் , தாயும், ஒரு மனைவியும் , பன்னிரண்டு சகோதரர்களும் , ஒரு தங்கையும் உண்டு. அந்த தங்கைதான் அலீ (ரலி) அவர்களிடம் அண்ணனின் சொத்து விபரத்தில் தனக்குறிய பங்கைப் பற்றி கேட்டறிந்தாள்.
பதில்: உன் உடன் பிறந்தவன் அறுநூறு திர்ஹம்களையும் இரு பெண் மக்களையும் , தன் தாயையும் , மனைவியையும் , பன்னிரண்டு சகோதரர்களையும் , உன்னையும் விட்டுச் சென்றான் .
அந்த அறுநூறு திர்ஹம்களில் இரண்டு பெண் மக்களுக்கும் அல்லாஹ் சொல்லியபடி நானூறும் , தாய்க்கு நூறும் , மனைவிக்கு எழுபத்தைந்தும் , சகோதரர்கள் பன்னிரண்டு பேர்களுக்கும் இருபத்து நான்கும் , உனக்கு ஒரு திர்ஹம் வருகின்றன " என்றார்கள்.

அலீ (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் படி பங்கீடு செய்ததற்கு கீழ்க்கண்ட வசனத்தை ஆதாரமாக கையாண்டார்கள்.
يَسْتَفْتُوْنَكَ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِى الْكَلٰلَةِ اِنِ امْرُؤٌا هَلَكَ لَيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ وَهُوَ يَرِثُهَاۤ اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ فَاِنْ كَانَـتَا اثْنَتَيْنِ فَلَهُمَا الثُّلُثٰنِ مِمَّا تَرَكَ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا
وَّنِسَآءً فَلِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمْ اَنْ تَضِلُّوْا وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ
(நபியே!) கலாலா (தகப்பன், தாய், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகள் இல்லாத சொத்து) பற்றிய மார்க்கக் கட்டளையை அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்:

அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) கட்டளையிடுகிறான்; ஒரு மனிதன் இறந்துவிட்டால், அவனுக்கு மக்கள் இல்லாமலிருந்து ஒரு சகோதரி மட்டும் இருந்தால், அவளுக்கு அவன் விட்டுச் சென்றதிலிருந்து சரி பாதி பங்கு உண்டு.

இதற்கு மாறாக ஒரு பெண் இறந்து விட்டால், அவளுக்கு மக்கள் யாரும் இல்லாதிருந்தால், (அவளுடைய சகோதரனாகிய) அவன் அவள் சொத்து முழுமைக்கும் வாரிசு ஆவான்;
இரு சகோதரிகள் இருந்தால், அவன் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடைவார்கள்; அவளுக்கு உடன் பிறந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக இருந்தால், இரண்டு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்கு உண்டு - நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காகவே அல்லாஹ் உங்களுக்கு (இவ்விதிகளை) விளக்கி வைக்கிறான்; அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் : 4:176)
பொருளாதாரத்தைப் பற்றி பிரபஞ்சம் மொழிந்தது என்னவோ நீதமான கணிதமாகவே இருக்கிறது என்பதை நீங்கள் இப்போது அறிந்திருப்பீர்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 4
(சந்திரனின் மாறுபட்ட வடிவங்கள் சொல்லித் தரும் பாடங்கள்)



وَالْقَمَرَ قَدَّرْنٰهُ مَنَازِلَ حَتّٰى عَادَ كَالْعُرْجُوْنِ الْقَدِيْمِ
(உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்ச மடலைப் போல் (பிறையாக) ஆகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல நிலைகளை ஏற்படுத்தி இருக்கின்றோம். (அல்குர்ஆன் : 36:39)
வானம் மண்டத்திலுள்ள 12 ராசிகளும் 28 பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 28 பாகங்களுக்கும் 28 நட்சத்திரங்கள் இருக்கின்றன .

சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒரு பாகத்தில் இருக்கும் இவ்வாறு ஒவ்வொரு பாகங்களையும் அது கடந்து கடைசி பாகத்துக்கு வரும்போது சந்திரன் மிக நுட்பமாக வளைந்து மெலிந்து காணப்படுகிறது .இதை பார்ப்பதற்கு பழைய பேரீத்தம் மட்டைபோல் வளைந்து இருப்பது போல் ஆகி விடுகிறது.
அந்த மாதம் 30ம் தேதியுள்ளதாக இருந்தால், இரண்டு நாள் சந்திரன் கண்ணுக்குத் தெரியாது. இருபத்தி ஒன்பது தேதி உள்ளதாக இருந்தால், சந்திரன் ஒருநாள் கண்ணுக்கு தெரியாமல் இருக்கும் .
வருடத்தில் ஒரு மாதம் 30ம் தேதி உள்ளதாகவும்,இன்னொரு வருடத்தில் அதே மாதம் 29 தேதி உள்ளதாகவும் வரும்.

ஒவ்வொரு நாளும் சந்திரனின் நிலை குறித்து கிராபிக்கல் படமாக வரைந்தால், அதன் மொத்த நிலை பரபோலா (பரவளையம்) என்ற வடிவியல் கணிதத்தின் வரைபடத்தை தருகிறது (வரைபடத்தை பார்க்கவும்)
சந்திரன் தரக்கூடிய இந்த பரபோலா கணிதம் நமக்கு என்ன சேதியை தரப்போகிறது என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு முன் பரபோலா கணித வரலாற்றை முதலில் ஆய்வோம்.

அப்போலினஸ் என்பவர்தான் Parabolo (பரவளையம்) பற்றி நுட்பத்தை உலகறியச் செய்தவர். யார் இந்த அப்போலினஸ் ?
யூக்ளிட் கிமு 300 -ல் பிறந்தவர். யூக்ளிட் எழுதிய "எலிமெண்ட்ஸ்" என்ற தூய கணித நூலை எழுதினார். இந்த எலிமெண்ட்ஸ் நூலைப் பின்பற்றி, அப்போலினஸ் கூம்புகளைப் பற்றிய வடிவ ஆராய்ச்சி மூலம் "கோனிக்ஸ்" (conics) என்ற நூலை எழுதினார்.
அவரது கோனிக்ஸ் புத்தகத்தில் கூம்புகளை கோன் (கோன் ஐஸ் என்கிறோம் அல்லவா ? அந்த கோன்) கோன் என்று அவர் அழைத்ததற்கு ,அவர் அவற்றை ஒரு சம பரப்பில் இரண்டு நேர்கோடுகள் வெட்டிக்கொள்வதான வடிவமாக பார்த்ததே காரணம்.
உடனே அவர் கூம்பு வடிவத்தை ஒவ்வொரு விதமாக வெட்டிய அவைகள் வட்டம் (Circle), நீள் வட்டம் (Ellipse), பரவளையம் (parabola) , அதி பரவளையம் (Hyberbola) என்று வரைபட இயல் தனது புதிய பல வடிவங்களை பெற்றது . இந்த கூம்பு களிடமிருந்து கிடைத்த பல வடிவங்கள் தூய கணிதத்தின் எல்லையை விரிவு படுத்தின.

மேற்கண்ட வடிவங்கள் இல்லாமல், பிற்காலத்தில் பல புதிய கணித துறைகள் தோன்றியிருக்க முடியாது. கூம்புகளின் மூலம் அப்போலினஸ் காட்டிய வடிவங்களே வான் வெளிச் சுற்றுப்பாதைகளாகவும் , கோள்களுக்கு இடையிலான ஈர்ப்பு விசைக்கு மூலமாகவும் அமைந்தன. இன்றைய ராக்கெட் செலுத்தும் பாதைகளை கணிக்கக் கூடியதாகவும் மேற்கண்ட வரைபட இயல் பயன்படக் கூடிய வடிவ கணித கோட்பாடுகள் நிறுவியவர் அப்போலினஸ்.

பரபோலாவின் பயன்கள்
ஒரு பரவளையம் என்பது நீட்டிக்கப்பட்ட U- வடிவ வடிவியல் வடிவமாகும். ஒரு கூம்பு குறுக்கு வெட்டு மூலம் இதை செய்ய முடியும். ஒரு பரபோலாவின் கணித சமன்பாடு ஒரு xy அச்சில்
y = x 2 என குறிப்பிடப்படுவதை மெனெக்மஸ் தீர்மானித்தார்.
பரபோலாஸ், உண்மையில், எல்லா இடங்களிலும், இயற்கையிலும், மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களிலும் காணப்படலாம். ஒரு நீரூற்றைக் கவனியுங்கள். நீரூற்று மூலம் காற்றில் பறந்து நீர் மீண்டும் ஒரு பரவளைய பாதையில் விழுகிறது.
காற்றில் வீசப்பட்ட ஒரு பேஸ் பாலோ,கிரிக்கெட் பந்தோ ஒரு பரவளைய பாதையில் செல்கிறது என்பதை கலிலியோ நிரூபித்திருந்தார்.
மேலும், ரோலர் கோஸ்டரில் சவாரி செய்யும் எவரும் பாதையின் பரவளையங்களால் உருவாக்கப்பட்ட உயர்வு மற்றும் வீழ்ச்சியை நன்கு அறிந்திருப்பார்கள். அது சந்திரன் நிலை குறித்த வரை படத்தை கவனியுங்கள் .
அதி நவீன கட்டிடக்கலை மற்றும் பொறியியல் திட்டங்கள் கூட பரவளையங்களின் பயன்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன.
பரவளைய வடிவங்களை 1962 ஆம் ஆண்டில் லண்டனில் கட்டப்பட்ட தி பரபோலா என்ற கட்டமைப்பில் காணலாம், இது ஒரு செப்பு கூரையை பரவளைய மற்றும் ஹைபர்போலிக் கோடுகளுடன் கொண்டுள்ளது. கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள புகழ்பெற்ற கோல்டன் கேட் பாலம் அதன் பக்க இடைவெளிகள் அல்லது கோபுரங்களின் ஒவ்வொரு பக்கத்திலும் பரவளையங்களைக் கொண்டுள்ளது. இன்னும் அநேக நாடுகளில் அதிநவீன கட்டிடங்கள் பரபோலா யுக்தியை பயன்படுத்துகின்றன.
ஒளியை மையப்படுத்த பரவளைய யுக்திகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. நவீன கண்ணாடி கட்டிடங்களில்
பரபோலாவின் யுக்திகள் பயன்படுத்தப்படுகின்றன.
பல நூற்றாண்டுகளாக, கலங்கரை விளக்கங்கள் பல மாறுபாடுகளையும், அவை உமிழக்கூடிய ஒளியின் மேம்பாடுகளையும் சந்தித்தன. தட்டையான மேற்பரப்புகள் கடற்படையினருக்கு ஒளியை சிதறடித்தன. ஆனால் கோள பிரதிபலிப்புகள் பிரகாசத்தை அதிகரித்தன, ஆனால் ஒரு சக்திவாய்ந்த ஒளிக்கற்றை கொடுக்க முடியவில்லை.
இதற்கு ஒரே தீர்வாக பரபோலா வடிவ பிரதிபலிப்புகளை பயன்படுத்தும் போது நீண்ட தூரத்திற்கு காணக்கூடிய ஒரு கற்றைக்கு ஒளியை மையப்படுத்த உதவியது.

1738 ஆம் ஆண்டில் ஸ்வீடனில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம், பரவளையத்தின் யுக்தியை பயன்படுத்தி ஒளியை நீண்ட தூரத்திற்கு பாய்ச்ச முடிந்தது .
இதே யுக்தியை ஹெட்லைட்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. 1940 கள் முதல் 1980 கள் வரை சீல் செய்யப்பட்ட பீம் கண்ணாடி ஆட்டோமொபைல் ஹெட்லைட்கள் பரவளைய பிரதிபலிப்பு கண்ணாடி லென்ஸ்களையும், பல்புகளிலிருந்து வெளிவரும் ஒளியின் ஒளிகளைக் குவிப்பதற்குப் பயன்படுத்தின, ஒளியைக் குவிப்பதற்கு பரவளைய பிரதிபலிப்புகளை

இப்போது சூரிய மின்சக்தி தொழிலுக்கு உதவுகிறது. தட்டையான ஒளிமின்னழுத்த அமைப்புகள் சூரியனின் ஒளி மற்றும் இலவச எலக்ட்ரான்களை உறிஞ்சுகின்றன, ஆனால் அதை குவிப்பதில்லை. ஒரு வளைந்த ஒளிமின்னழுத்த கண்ணாடி, சூரிய சக்தியை மிகவும் திறமையாக குவிக்கும்.
சூரிய ஒளி பரவளைய கண்ணாடியின் வடிவத்தால் இது மிக அதிக வெப்பத்தை உருவாக்குகிறது. இது ஒவ்வொரு கண்ணாடியின் தொட்டியிலும் செயற்கை எண்ணெயின் குழாய்களை வெப்பப்படுத்துகிறது, பின்னர் அவை சக்திக்கு நீராவியை உருவாக்க முடிகிறது ,

ராக்கெட் ஏவுதலின் போது அது ஒரு பரவளைய பாதையை பின்பற்றுகிறது. இந்த பரவளையப் பாதை விண்வெளிப் பயணத்தில் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், விமானங்கள் பரவளையங்களில் பறப்பதன் மூலம் பூஜ்ஜிய மற்றும் உயர் ஈர்ப்பு சூழலை உருவாக்க முடியும்.
செயற்கைக்கோள் டிஷ் மற்றும் ரேடியோ அலைகளின் பிரதிபலிப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது ஒளியை வளைக்கக்கூடிய வகைக்கு எலக்ட்ரான்கள் பயன்படுத்தப்படுகின்றன. எலக்ட்ரான்களின் விட்டங்களை ஹாலோகிராபிக் படம் மூலம் அனுப்ப மற்றும் ஒரு பரவளைய பாணியில் தடைகளை சுற்றி வளைக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விட்டங்கள் இமேஜிங்கில் பயனுள்ளதாக இருக்கிறது. இது மிகப் பெரிய அதிநவீன விஞ்ஞான யுக்திகள் .

விண்வெளிப் பயணம் மற்றும் கார் ஹெட்லைட்கள் முதல் பாலங்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் வரை எல்லா இடங்களிலும் பரவளையங்களைக் காணலாம். ஒரு பரபோலா ஒரு நேர்த்தியான வடிவியல் வடிவம் மட்டுமல்ல, அதன் செயல்பாட்டு திறன் மனிதகுலத்திற்கு பல வழிகளில் உதவுகிறது.

هُوَ الَّذِىْ جَعَلَ الشَّمْسَ ضِيَآءً وَّالْقَمَرَ نُوْرًا وَّقَدَّرَهٗ مَنَازِلَ لِتَعْلَمُوْا عَدَدَ السِّنِيْنَ وَالْحِسَابَ مَا خَلَقَ اللّٰهُ ذٰلِكَ اِلَّا بِالْحَـقِّ يُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ
அவன்தான் சூரியனைச் (சுடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு(ச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான்; அல்லாஹ் உண்மை(யாக தக்க காரணம்) கொண்டேயல்லாது இவற்றைப் படைக்கவில்லை - அவன் (இவ்வாறு) அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கின்றான்.(அல்குர்ஆன் : 10:5)

சந்திரனின் மாறுபட்ட வடிவத்தில் உண்டாகும் பரபோலா வடிவியல் கணிதம் பிரபஞ்சத்தின் மொழியாக அது விஞ்ஞானத்துடன் எப்போதுமே பேசிக் கொண்டே இருக்கிறது.

ரஹ்மத் ராஜகுமாரன்.

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 6

(மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டத்தை இஸ்லாம் ரத்து செய்தது. ஏன்)



சொத்துப் பங்கீடு பற்றி பலரும் இஸ்லாத்தின்மீது விமர்சனங்களை வைக்கின்றார்கள். எனவே இது பற்றிய விபரத்தை நாம் தெளிவாக புரிந்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்.

நபி (ஸல்)அவர்கள் வாழ்ந்த அன்றைய சமூக சூழலில் ஆண்கள் சகல விதங்களிலும் பெண்களை அடக்கியாண்டு உரிமைகளைப் பறித்துக் கொண்டிருந்தார்கள். “பலமுள்ளவன் தான் சரியானவன்” என்ற தத்துவத்தின் அடிப்படையில் தகப்பனோ,சகோதரனோ விட்டுச் செல்லும் சொத்துக்களில் பெண்களுக்குரிய பங்கினை வழங்காது பலாத்காரமாகச் சூறையாடிக் கொண்டுமிருந்தார்கள். தந்தையைப் பறிகொடுத்து விட்டு தவிக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும், கணவனை இழந்துவிட்டு கண்ணீரோடு வாழும் விதவைப் பெண்களுக்கும் அச்சொத்திலிருந்து எதுவும் கிடைக்க மாட்டாது.

இவர்கள் அடுத்தவர்களிடத்தில் கையேந்தி மற்றவர்களின் தயவில் வாழக்கூடிய பரிதாபகரமான நிலை காணப்பட்டது. இந்நிலையில் இக்கொடுமைக்கு ஆரம்ப கட்டத் தீர்வாக அல்லாஹ் பின்வரும் வசனத்தை அருளினான்.
“உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும் போது அவர் ஏதேனும் செல்வத்தை விட்டுச் செல்வாராயின் அவர் பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் நல்ல முறையில் (மரண சாசனம்) வஸீய்யத் செய்வது உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது. பயபக்தியாளர்களுக்கு இது கடமையாகும்.
எவர் அ(ம்மரணசாசனத்)தை செவியேற்ற பின்பும் அதை மாற்றி விடுகின்றாரோ அதன் குற்றம் அதை மாற்றியவர்களையே சாரும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் செவியுறுபவன் நன்கறிந்தவன்.
ஆனால் வஸீய்யத் செயபவரிடம் அநீதத்தையோ பாவத்தையோ எவரேனும் அஞ்சி (சம்பந்தப்பட்ட) அவர்களுக்கிடையே (வஸீய்யத்தை சீர்செய்து) சமாதானம் செய்தால், அவர் மீது குற்றமில்லை. நிச்சமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையவன்.
(அல்குர்ஆன் 2:180-182)

இதனடிப்படையில் சொத்துக்களை விட்டுச் செல்பவர் தன்னுடைய பெற்றோர் மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு அச்சொத்திலிருந்து பங்கு கிடைக்கக்கூடியதாக மரண சாசனம் செய்யவேண்டும். அதன் பத்திரமும் எழுதப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மரண சாசனத்தில் அநீதி காணப்படுமானால், அதனை சீர்படுத்துவதற்கும் உரிமை வழங்கப்பட்டது.
மரணசாசனம் தெரிவிக்க ஏதேனும் பொருளைப் பெற்றுள்ள எந்த முஸ்லிமுக்கும் அவர் தமது மரண சாசனத்தை எழுதி வைக்காமல், இரண்டு இரவுகளைக் கழிப்பதற்குக் கூட அனுமதியில்லை என நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரழி) (நூல்:புகாரி)

இதன் மூலம் பெண்களுக்கும் நியாயமாக பங்கீடு கிடைக்க வழி காட்டப்பட்டது.
இச்சட்டம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் ஸஅத் இப்னு ரபீஃஆ(ரழி) என்பவரின் மனைவி தனது இரு பெண் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! இதோ இவ்விருவரும் ஸஃத் இப்னு ரபீஆவின் புதல்வியர்கள். இவர்களுடைய தந்தை உங்களுடன் உஹது யுத்தத்திலே பங்குகொண்டு கொல்லப்பட்டு விட்டார்.

இவர்களுடைய தந்தையின் சகோதரர் இவர்களுடைய முழுச் சொத்தையும் எடுத்துக் கொண்டார். இவர்களுக்காக எதையும் விட்டுச் செல்லவில்லை. இவர்களுக்கென சொத்து எதுவும் இல்லையென்றால், அவர்களைத் மணம் முடித்துக் கொடுக்கவும் முடியாது" என்று முறையிட்டார்.
இந்த முறைப்பாட்டை செவியேற்ற நபி(ஸல்) அவர்கள், நிச்சயமாக அல்லாஹ் இதற்கோர் தீர்வை வழங்குவான் எனக் கூறினார்கள். இச்சந்தர்ப்பத்தில் இப்பெண்மணியின் முறையீட்டிற்குப் பதில் கூறுமுகமாக பின்வரும் சட்டம் அருளப்பட்டது.

1) இரு பெண்களுக்குரிய பங்கு போன்றது ஒரு ஆணுக்குண்டு என உங்கள் பிள்ளைகள் விஷயத்தில் அல்லாஹ் உங்களுக்கு (சொத்துப் பங்கிடும் முறைப்பற்றி) கட்டளையிடுகின்றான்.
– (இறந்தவர் விட்டுச்செல்லும் சொத்துக்கு ஆண்பிள்ளை இல்லாமல்) இரண்டு பெண்கள் அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால், அவர் விட்டுச்சென்றதில் மூன்றில் இருபங்கு (2/3) அப் பெண்களுக்குண்டு.
– ஒரே ஒருபெண் மட்டும் இருந்தால், அவளுக்கு அதில் அரைவாசிப் (1/2 பங்கு) உரியது.
2) இறந்தவருக்குப் பிள்ளை இருப்பின், அவர் விட்டுச் சென்றதில் (அவருடைய) தாய், தந்தைக்கு ஆறில் ஒரு (1/6) பங்குண்டு.
– அவருக்கு பிள்ளை இல்லாமல், அவரது பெற்றோரே அவருக்கு வாரிசாக இருப்பின் அவரது தாய்க்கு மூன்றில் ஒரு (1/3)பங்குண்டு. (மீதி தந்தைக்குரியது)
– இறந்தவருக்கு (பிள்ளைகள் இல்லாமல்) சகோதரர்கள் இருப்பின் அவரது தாய்க்கு ஆறில் ஒரு (1/6)பங்குண்டு.
– (இவ்வாறு பங்கீடு செய்வது) அவர் செய்த மரணசாசனம் அல்லது அவரது கடன் ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.
– (சொத்துப் பங்கீடு பெறுவதில்) உங்கள் பெற்றோர், மற்றும் பிள்ளைகளில் உங்களுக்கு அதிகமாக பயனளிப்பதில் மிக நெருக்கமானவர்கள் யார் ? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.
“இவை அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டவையாகும். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4:11)

3). (இறந்துபோன) உங்கள் மனைவியருக்கு பிள்ளை இல்லையெனில் அம்மனைவியர் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு அரைவாசி (1/2) உண்டு.
– அவர்களுக்கு பிள்ளை இருப்பின், அவர்கள் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு நாலில் ஒரு (1/4) பங்குண்டு. (இது) அவர்கள் செய்த மரணசாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகுமே.
– உங்களுக்கு (கணவனாகிய நீங்கள் இறந்த பின்) பிள்ளை இல்லையெனில், நீங்கள் விட்டுச்சென்றதில் (மனைவியர்களான) அவர்களுக்கு நாலில் ஒரு(1/4)பங்குண்டு.
– உங்களுக்கு பிள்ளை இருப்பின், நீங்கள் விட்டுச் சென்றதில் (மனைவியர்களான) அவர்களுக்கு எட்டில் ஒரு (1/8) பங்குண்டு. (இது) நீங்கள் செய்த மரண சாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.
4. (பெற்றோர் பிள்ளைகள் ஆகிய) வாரிசுகள் இல்லாத ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ மரணித்து அவருக்கு ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி இருந்தால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு (1/6) பங்குண்டு. அவர்கள் இதை விட அதிகமாக இருந்தால், மூன்றில் ஒரு (1/3) பங்கில் அவர்கள் பங்குதாரர்களாவார்கள்.
(இது) பாதிப்பு அற்றவிதத்தில் செய்யப்பட்ட மரணசாசனத்தையும், அல்லது கடனையும் நிறைவேற்றிய பின்னரேயாகும். இது அல்லாஹ்விடமிருந்துள்ள கட்டளையாகும். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனும் சகிப்புத்தன்மையுடையவனு மாவான். (அல்குர்ஆன் 4:12)
இவ்வசனம் அருளப்பட்டதும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஸஃத் இப்னு ரபீஃஆவின் சகோதரரை வரவழைத்து அவர் எடுத்துச் சென்ற சொத்தை பின்வருமாறு பங்கீடு செய்தார்கள்.
இரு பெண் பிள்ளைகளுக்கும் (தலா ஒருவருக்கு 1/3 என்ற பங்கு வீதத்தில்) 2/3 பங்குகளும், இவர்களின் தாய்க்கு எட்டில் ஒருபங்கும் (1/8) பங்கும் மீதியை ஸஃத் (ரழி) அவர்களின் சகோதரர்களுக்கும் கொடுத்தார்கள்.
(நூல்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)

தனக்கும் தனது பெண் பிள்ளைகளுக்கும் சொத்துரிமை விவகாரத்தில் உரிய பங்கு கிடைக்கவில்லையென்று ஒரு பெண்மணி நீதி கேட்டு வந்தபோது, அப்பெண்மணிக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவே வாரிசுரிமைச் சட்டம் அருளப்பட்டது.
மகன், மகள், சகோதர சகோதரி, மனைவி, தாய் தந்தை ஆகியோருக்கு இச்சட்டத்தின் மூலம் சொத்துக்களில் பங்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
இதைவிட பெண்ணுக்குரிய அந்தஸ்த்தும் உரிமையும் வேறு எங்கும் எந்த மதத்திலும் கோட்பாட்டிலும் காண முடியாது.

இவ்வாரிசுரிமைச் சட்டம் அருளப்பட்டபின் மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டம் ரத்துச் செய்யப்பட்டதோடு வாரிசுகளுக்கு சொத்துக்கள் சம்பந்தமாக மரணசாசனம் செய்யவோ எழுதவோ அல்லது சிபாரிசு செய்யவோ தடுக்கப்பட்டது.
வாரிசுகளுக்கு எத்தனை வீதம் பங்கு கொடுக்க வேண்டும்; என்று அல்லாஹ் விபரித்துக் கூறியுள்ளானோ அதே அடிப்படையிலும் இத்திருமறைக் குர்ஆனுக்கு விளக்கவுரையாக நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எப்படிச் செயல்படுத்தி, பங்குவைத்துக் காட்டினார்களோ அதே அடிப்படையிலும்தான் உலகம் அழியும் வரை பங்கீடு செய்யப்பட வேண்டும். இதில் எவரும் மாற்றம் செய்ய முடியாது.
இதனால் மரண சாசனத்தின் மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டத்தை குர்ஆன் ரத்து செய்தது.
ஆமாம். சொத்துப் பங்கீடு பெறுவதில் உங்கள் பெற்றோர், மற்றும் பிள்ளைகளில் உங்களுக்கு அதிகமாக பயனளிப்பதில் மிக நெருக்கமானவர்கள் யார் ? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆனால் அல்லாஹ் நன்கறிவான்.
உங்களின் பொருளாதாரத்தில் உங்கள் உறவுகளுக்கு பாத்தியப்பட்டதைப் பற்றி பிரபஞ்சம் கணக்கீடாக கணித்து கூறியது எத்துணை நீதமான பங்கீடாக இருக்கிறது என்பதை நீங்கள் இப்போது அறிந்திருப்பீர்கள்.


ரஹ்மத் ராஜகுமாரன்

Rahmath Rajakumaran
உங்கள் சந்ததியில் (ஆணும், பெண்ணும் இருந்தால்) ஒரு ஆணுக்கு இரு பெண்களுக்குரியது போன்ற பாகம் உண்டென்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான்.
அதாவது ஆணுக்கு இரு பாகம் , பெண்ணுக்கு ஒரு பாகம் ஏன் ?

இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை அமைப்பில் பெண்ணை விட ஆணுக்கே பொருளாதாரச் சுமை அதிகம். ஒரு பெண் பிறந்த வீட்டில் இருக்கும் வரை , அவளுடைய பெற்றோரின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கிறாள். தந்தை அல்லது சகோதரர்களின் பராமரிப்பில் அவள் வளர்கிறாள். எனவே பொருளாதாரத்தைத் தேடும் சுமை அப்போது பெண்ணுக்கு இல்லை. திருமணமாகிப் புகுந்த வீட்டிற்கு ஒரு பெண் சென்றால், அங்கே கணவனின் முழுப்பொறுப்பிலும் , பராமரிப்பிலும் வந்து விடுகிறாள். அங்கும் அவளுக்குப் பொருளாதாரத்தைத் தேடும் சுமை இருக்காது. இது ஓர் ஆணின் பாதி சுமையாகத்தான் இருக்கும்.
அதே நேரத்தில் ,ஓர் ஆண் தந்தையாக, சகோதரனாக , கணவனாக இருந்து தனது பொறுப்பில் உள்ள அனைவரையும் கவனித்தாக வேண்டும் அனைவரின் பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும் .ஆகவே ஆண்தான் பொருளாதாரத் தேவை அதிகமுள்ளவனாக இருக்கிறான் . அவனுக்கு இரு பாகங்கள் அளிப்பது மிகப் பொருத்தமானதும் அவசியமானதும் கூட .
இறைவன் வகுத்த பங்கு விகிதாச்சாரத்தை கணக்கிட்டால் , அது அந்த சொத்தின் பங்குதாரர் அந்த குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய கடமையையும் , அவர் எடுத்துக் கொள்ளும் உரிமையையும் பொருளாதார ரீதியில் அது சமமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு வல்ல ரஹ்மான் அந்த பங்கீட்டு முறையை வேதமாக ஆக்கியுள்ளான் .

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 7

(பூமியின் சுற்றளவை சொன்ன நிழல்)



இன்றைய தேதிக்கு பூமியின் சுற்றளவு சராசரியாக 40,075 கி.மீ. என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் காலத் தொழில் நுட்பங்களைக் கொண்டு இதை அளந்து சொல்வது பெரிய காரியம் இல்லை. ஆனால், சுமார் 2,250 வருடங்களுக்கு முன்னர், ஓர் அறிஞர் பூமியின் சுற்றளவை ஏறத்தாழ சரியாகக் கணித்துச் சொன்னார்! 40,000 கி.மீ என்று.
அவர் பெயர் எரொடொஸ்தேனஸ் (Eratosthenes).

கிரேக்க மாமன்னர் அலெக்சாண்டர் உருவாக்கிய, அலெக்ஸாண்ட்ரியா நகரில் வாழ்ந்த அறிஞர் இவர். இவரால் எப்படி பூமியின் சுற்றளவைக் கணிக்க முடிந்தது ? சொல்றேன்.
ஒரு வருடத்தில் ஒரு நாளில் மட்டும் பகல் மிகவும் நீண்டதாக இருக்கும். ஆங்கிலத்தில் அந்த நாளை, சம்மர் சோல்ஸ்டைஸ் (Summer Solstice) என்பர். தமிழில் 'கோடை சந்தி' என்று சொல்லப்படுகிறது. ஜூன் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களில், ஏதாவது ஒரு நாளில் இது நிகழும்.
சியேன் (Syene) என்ற எகிப்திய நகரம், அலெக்சாண்ட்ரியாவில் இருந்து சுமார் 800 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அந்த நகரில் கோடை சந்தி அன்று நிகழ்ந்த அதிசயத்தைப் பற்றி, சியேனில் இருந்து அலெக்சாண்ட்ரியா வந்த வணிகர்கள் பேசிக்கொண்டார்கள்.
அன்றைய தினத்தில் உச்சி வெயில் நேரத்தில், நிழல் தரையில் விழவில்லையாம்; மேலும் நகரத்தின் ஆழமான கிணற்றின் அடி ஆழத்தில் இருந்த நீர், சூரிய ஒளியால் ஜொலித்ததாம். இதுதான் அந்த அதிசயம். சூரிய ஒளி செங்குத்தாக விழும் போது அடி அழமான கிணற்றின் நீர் ஜொலிக்கத்தானே செய்யும்.
எரொடொஸ்தேனஸ், சியேனில் அன்று சூரியக் கதிர்கள் நேர் செங்குத்தாக விழுந்ததால், இது நிகழ்ந்தது என்பதைப் புரிந்துகொண்டார்.
அதே நாளில், அலெக்ஸாண்ட்ரியாவின் உயரமான தூண் ஒன்று, மிகவும் குட்டையான நிழலை ஏற்படுத்தியதைக் கண்டார். ஆக அலெக்ஸாண்ட்ரியாவில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக விழவில்லை. தூணின் உயரத்தையும், அதன் நிழலின் உயரத்தையும் கணக்கிட்டு, அலெக்ஸாண்ட்ரியாவில் அன்று சூரியக் கதிர்கள் 7 டிகிரி சாய்வாக விழுந்ததைக் கணக்கிட்டார். அடேயப்பா.. எவ்வளவு அழகான உண்மை ! இதில் இருந்து அலெக்ஸாண்ட்ரியாவும், சியேனும் பூமியின் மையப்புள்ளியில் இருந்து 7 டிகிரி கோணத்தில் விலகி இருக்கிறது என்பதைக் கண்டறிந்தார்.

ஒரு வட்டத்தின் மொத்த கோணமான 360 டிகிரியில்,7 டிகிரி என்பது 50ல் ஒரு பங்கு சரியா ? பூமியின் வட்டவடிமான உருண்டை தானே ...இரண்டு நகரங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 800 கி.மீ எனில், பூமியின்

மொத்த சுற்றளவு 800 கி.மீ x 50 = 40,000 கி.மீ. ஏறத்தாழ துல்லியமான மதிப்பீடு இது! உலகின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பாக இது இன்றளவிலும் குறிப்பிடப்படுகிறது.

اَوَلَمْ يَرَوْا اِلٰى مَا خَلَقَ اللّٰهُ مِنْ شَىْءٍ يَّتَفَيَّؤُا ظِلٰلُهٗ عَنِ الْيَمِيْنِ وَالشَّمَآٮِٕلِ سُجَّدًا لِّلّٰهِ وَهُمْ دٰخِرُوْنَ
அல்லாஹ் படைத்திருப்பவற்றில் ஒன்றையுமே இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும், இடமுமாக சாய்வதெல்லாம் அல்லாஹ்வை மிக்க தாழ்மையாகச் சிரம் பணிந்து வணங்குவதுதான்.
(அல்குர்ஆன் : 16:48)

அட , நம்மைச் சுற்றியும் தினமும் நிழல்கள் வலமும் , இடமுமாக சாய்ந்து வரத்தானே செய்கிறது...
எரொடொஸ்தேனஸ் க்கு மட்டும் ஜூன் 21 நீண்ட பகல் என்பதை உணரமுடிகிறது


அன்றைய தினத்தில் சூரியன் நடுவானில் உச்சியில் இருக்கும்போது நிழல் தரையில் விழாது என்பதை இறைவன் அவருக்கு அந்த ஞானத்தைக் கொடுத்து,சியேன் என்ற நகரம் அலெக்சாண்டர் இருந்து 800 கிலோ மீட்டர் தூரம்.
உடனே அலெக்சாண்டரியாவின் உயரமான தூணின் நிழல் குட்டையாக விழ , இரண்டையும் அளந்து கணித்து, அந்த சின்ன நிழல் பூமியின் சுற்றளவை சொல்கிறது, 40 ஆயிரம் கிலோ மீட்டர் என்று !
நாம் நினைத்துக் கொண்டோம் ' நிழல்கள் வலமும், இடமும் சாய்வது இறைவனை மிக்க தாழ்மையாக வணங்குகிறது' என்று. அது சரிதான். இருந்தாலும் அந்த நிழல் தான் வணங்கும் வணக்கத்தின் மூலம் நமக்கு ஒரு சேதியையும் அது சேர்த்துக் சொல்லிக் கொண்டேயிருக்கிறது '' உங்களுடைய பூமியின் சுற்றளவு 40 ஆயிரம் கிலோ மீட்டர் "

நிழல்கள் பல சேதிகளை இன்னும் நம்மிடம் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறது ! நாம்தான் அதை கேட்கிற மூடில் இல்லை.

ரஹ்மத் ராஜகுமாரன் .

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 8

(ஒளியின் வேகத்தை துல்லியமாக எவ்வாறு கண்டறிந்தார்கள்?)



ஒளி ஒரு குறிப்பிட்ட விரைவில்தான் (finite speed) பயணிக்கிறதா அல்லது அது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வளவு தொலைவு என்றாலும் உடனடியாக நகர்ந்துவிடுகிறதா (instantaneous / infinite speed) என்ற வினா பண்டைய கிரேக்கத்தில் சுமார். கி.மு. 500 வாக்கிலேயே தொடங்கிவிட்டது!
கலிலியோ கலீலி தொலைவில் ஒரு விளக்கை வைத்து, அதனை சட்டெனச் திறந்து மூடி, அதைக் காண்பவரின் கால இடைவெளியை அளப்பதன் மூலம் ஒளியின் விரைவை அளக்க முயன்றார். அவரால் முடியவில்லை!

இத்தாலி ஆய்வு கல்விக்கழகம் என்ற அமைப்பு கலிலியோவின் ஆய்வைச் செய்து பார்க்க முயன்று சுமார் ஒரு மைல் தொலைவில் (~1.6 கிலோமீட்டர்) விளக்கை வைத்துச் சோதனை செய்தனர். அவர்களாலும் ஒளியின் வேகத்தை அளக்க இயலவில்லை!
அந்தத் தொலைவைக் கடக்க ஒளிக்கு வெறும் 11 மைக்ரோ நொடிகளே ஆகும்! இவ்வளவு குறுகிய கால இடைவெளியை நம்மால் உணர இயலாது!
1676-இல் டென்மார்க் வானியலாளர் ரோமர் (Ole Christensen Rømer) என்பவர் வியாழக் கோளின் துணைக்கோளான

"ஐயோ"வின் (Io) கிரகணங்களைக் கொண்டு ஒளியின் விரைவை அளந்து, ஒளியானது புவியின் விட்டத்தைக் கடக்க 22 நிமிடங்கள் ஆகும் என்று அவர் கணித்தார்.
இதன் மூலம் ஒளியின் விரைவு 2,20,000 கி.மீ/நொடி என்று வரும். இம்மதிப்பு தற்போது நமக்குத் தெரியும் துல்லியமான மதிப்பைவிட 26% குறைவு!
1729-இல் ஜேம்ஸ் பிராட்லி (James Bradley) என்ற ஆங்கில வானியலாளர் 'ஒளிப் பிறழ்ச்சி' (aberration of light) என்ற விளைவைக் கண்டறிந்தார். அதாவது, விண்ணில் நாம் காணும் விண்மீன்களின் இருப்பிடம் புவியின் நகர்வினால் இடம்பெயர்ந்து தெரிகின்றன என்பதே இவ்விளைவு. இதன் மூலம் இவர் ஒளியானது புவியைவிட 10,201 மடங்கு விரைந்து செல்கிறது என்று கணித்தார்.
இதன் மூலம் நாம் அறியும் ஒளியின் விரைவு ஓரளவு துல்லியமானது! பிராட்லியின் கணக்குப்படி ஒளியின் விரைவு 3,01,000 கி.மீ/நொடி; இம்மதிப்பு துல்லியமான மதிப்பைவிட வெறும் 0.40% -தான் கூடுதல்!
1849-இல் கிப்போலைட் பியாசோ (Hippolyte Fizeau) என்ற பிரெஞ்சு இயற்பியலாளர் 'பியாசோ சோதனை' என்ற முறையை வடிவமைத்தார்.

இதில் ஒரு ஒளிக்கற்றையை ஒரு பல்சக்கரத்தின் (பல் இடுக்கு) வழியாக அனுப்பி, தொலைவில் இருக்கும் ஒரு கண்ணாடியில் பிரதிபலித்து, மீண்டும் பல்சக்கரத்தின் (இன்னொரு இடுக்கு) வழியாக வரவைக்க வேண்டும். பல்சக்கரம் சுழன்றுகொண்டிருக்கும்.
பல்சக்கரத்தின் ஒரு இடுக்கு வழியாகச் செல்லும் ஒளி சென்று, கண்ணாடியில் பிரதிபலித்து, மீண்டும் வருவதற்குள் பல்சக்கரத்தின் மற்றொரு இடுக்கு ஒளியின் பாதையில் வந்திருந்தால் மட்டுமே ஒளி சக்கரத்தைத் தாண்டி நம் கண்ணுக்குத் தெரியும். இல்லையேல் அது சக்கரத்தின் பல்லில் பட்டுச் சிதறிவிடும்.

இச்சோதனையில் சக்கரத்திற்கும் கண்ணாடிக்கும் உள்ள தொலைவையும், ஒளி கண்ணுக்குத் தெரியும் வகையில் சுழல வேண்டிய சக்கரத்தின் சுழல்வேகத்தையும் கொண்டு ஒளியின் வேகத்தைக் கணிக்கலாம். இம்முறையில் பியாசோ ஒளியின் விரைவை 3,15,000 கி.மீ/நொடி என்று கணித்தார். இது துல்லிய மதிப்பைவிட 5.1% கூடுதல்!
1862-இல், பியாசோவின் நண்பரான மற்றொரு பிரெஞ்சு இயற்பியலாளர் இலியான் போக்கா (Léon Foucault) என்பவர் பியாசோவின் அமைப்பைச் சற்று மாற்றி வடிவமைத்தர்.
போக்காவின் அமைப்பில் ஒரு சுழலும் கண்ணாடி இருக்கும்.

S என்ற இடுக்கிலிருந்து வெளிப்படும் ஒளிக்கீற்று R என்ற கண்ணாடியில் பட்டு பிரதிபலித்து M என்ற பரவளைய கண்ணாடியில் (parabolic mirror) பட்டு மீண்டும் R கண்ணாடியில் பட்டு பிரதிபலித்து S இடத்திற்கே வரும். அதாவது, S-இன் பிம்பம் மீண்டும் அதனிடத்திலேயே உருவாகும்.
போக்கா ஒளியின் விரைவை 2,98,000 என்று கணித்தார். இது துல்லிய மதிப்பைவிட 0.6 % குறைவு!
1856-இல் வில்கெம் எடுவர்டு வெபர் (Wilhelm Eduard Weber) மற்றும் அரடால்பு கோராச் (Rudolf Kohlrausch) ஆகிய ஜெர்மானிய இயற்பியலாளர்கள் பியாசோ கண்டறிந்திருந்த ஒளியின் விரைவும் மதிப்பில் ஒத்துப்போவதையும் அவர்கள் கவனித்தனர்.

1860-இல் ஜேம்ஸ் கிளர்க்கு மேக்ஸ்வெல் (James Clerk Maxwell) என்ற ஸ்காட்லாந்து (Scotland) அறிவியலாளர் மின்-காந்த அலைகள் வெற்றிடத்தில் செல்லும் விரைவைக் கணக்கிட்டு அது வெபர்-கோராச் விகிதம்தான் என்று நிறுவினார். இதன் மூலம் ஒளி என்பதும் மின்காந்த அலைதான் என்று முன்மொழிந்தார்.
1869-இல் ஆல்பர்டு மைக்கல்சன் (Albert A. Michelson) என்ற அமெரிக்க இயற்பியலாளர் போக்காவின் சுழலும் கண்ணாடி முறையை மேம்படுத்தி ஒளியின் விரைவைத் துல்லியமாகக் கணிக்க முனைந்தார்.
1906-இல் எட்வர்டு ரோசா (Edward B. Rosa) என்ற அமெரிக்க இயற்பியலாளர் நிலைமின் மற்றும் நிலைகாந்த மாறிலிகளின் மதிப்புகள் மூலம் மேலும் துல்லியமாக ஒளியின் விரைவை அளந்தார் (2,99,710±30 கி.மீ/நொடி).

1920-இல் மைக்கல்சன் ஒரு மேம்பட்ட சோதனை முறையைக் கையாண்டார். அவர் கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள மவுண்ட் வில்சன் வானாய்வு கூடத்திலிருந்து சுமார் 22 மைல் (~35.4 கி.மீ.) தொலைவில் உள்ள சான் ஆண்டானியோ என்ற குன்றில் பரவளைய கண்ணாடியைப் பொருத்திச் சோதனை செய்தார்.
ஆனால் 1924-இல் குன்றுகளுக்கு (அதாவது, கண்ணாடிகளுக்கு !) இடையிலான தொலைவைத் துல்லியமாக அளந்ததன் மூலம் 1926-இல் ஒளியின் விரைவை மேலும் துல்லியமாகக் கணக்கிட்டார் (2,99,796±4 கி.மீ./நொடி).

1950-ல் லூயி எசுசன் (Louis Essen) என்ற ஆங்கில இயற்பியலாளர் ஒளியின் விரைவை 2,99,792.5±1 கி.மீ/நொடி என்று கணித்தார். (இது நூறாயிரத்தில் 0.14 பங்கு கூடுதல்!)
பின்னர் குறுக்கீட்டுமுறை (interferometry) என்ற முறை கையாளப்பட்டது.
ஒத்திணக்கம் (coherence) உள்ள இரண்டு அலைகள் குறுக்கிடும்போது அவற்றின் பயணத் தொலைவிற்கு ஏற்ப சேர்ந்தும் (constructive interference) அழிந்தும் (destructive interference) இணையும்.
குறிக்கீட்டுமுறையில் ஒரே அலைக்கீற்றை இரண்டாகப் பிரித்து அந்த இரு கீற்றுகளையும் செங்குத்தான திசைகளில் செலுத்திப் பின் மீண்டும் ஒரே புள்ளியில் இணையச் செய்வர். அவ்வாறு வந்து இணையும் கீற்றுகளுக்கிடையில் குறுக்கீட்டுவிளைவு நடக்கும்.
இவற்றில் ஏதேனும் ஒரு கீற்றின் பயணத் தொலைவு மாறினால் அதனால குறிக்கீட்டுவிளைவின் உருப்படிவம் பெயரும் (shift). பயணத் தொலைவு மாற்றத்தையும் (path difference) உருப்படிவ பெயர்வையும் (shift) அளப்பதன் மூலம் நாம் அலையின் அலைநீளத்தை கணக்கிடலாம். இதைக் கொண்டும் அவ்வலையின் அதிர்வெண்ணைக் கொண்டும் அலையின் விரைவை அளக்கலாம்.
இம்முறையில் முதலில் ரேடியோ அலைகள் பயன்படுத்தப்பட்டன. தற்போது சீரொளிகள் (Lasers) பயன்படுத்தப்பட்டு ஒளியின் விரைவு துல்லியமாகக் கணக்கிடப்படுகிறது.

1972-இல் இம்முறையைப் பயன்படுத்தி அமெரிக்காவின் தேசிய தரநிலைகள் செயலகத்தின் (US National Bureau of Standards) குழு ஒன்று ஒளியின் விரைவை 2,99,792,456.2±1.1 மீ/நொடி என்று கணக்கிட்டனர். இது இதற்கு முந்தைய ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பைவிட 100 மடங்கு உறுதியானதாகும்.
இன்றைய நிலையில், உலகளாவிய அளவில், ஒளியின் விரைவு 2,99,792,458 மீ/நொடி என்ற துல்லியமான மதிப்பாகக் கொள்ளப்படுகிறது.

ஒளி ஒரு நொடிக்கு ~ 3 லட்சம் கி.மீ வேகத்தில் பயணிக்கிறது .
சூரியனின் கதிர் நமது கிரகமான பூமியை வந்தடைய சுமார் 8 நிமிடங்கள் 20 வினாடிகள் ஆகும். ஏனென்றால் ஒளியின் வேகம் வினாடிக்கு 3,00,000 கிலோமீட்டர்.
ஒளியின் வேகத்தை வைத்து பூமி சுற்றுப்பாதை நீள்வட்டம் என்பதால் ஜனவரி 2 க்கு, பூமி சூரியனிடமிருந்து சுமார் 147 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். எனினும், ஜூலை மாதம் 152,6 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும்.

வெப்பநிலை மற்றும் கிரகத்தை அடையும் கதிர்வீச்சின் அளவு ஆகியவற்றில் இது நம்மை பாதிக்காது என்றாலும் இந்த தூரம் மிகவும் கவனிக்கத்தக்கது.
" (இறைவன் ஒளியினால்) படைக்கப்பட்ட மலக்குகளைத் தன்னுடைய தூதைக் கொண்டு போகிறவர்களாகவும் ஆக்கினான். அவர்கள் இரண்டிரண்டு, மும்மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உடையவர்களாக இருக்கின்றனர். அவன் விரும்பியதைத் தன் படைப்பில் பின்னும் அதிகரிப்பான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன். (அல்குர்ஆன் : 35:1) மலக்கு ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு 600 இறக்கைகள் உண்டு .
ஒளியினால் படைக்கப்பட்ட மலக்குமார்களின் இறக்கைகளின் எண்ணிக்கைக்கும், மலக்குமார்கள் பறக்கும் வேகத்திற்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்குமா ? அல்லாஹ்வே அறிவான்.
...இப்படியாக பிரபஞ்சம் ஒளியை மொழியாகக் கொண்டு கணித ரீதியில் அதன் வேகம் ஒரு நொடிக்கு 3 லட்சம் கி.மீ என்று பேசியதைக் கண்டோம். அது இன்னும் நம்மிடையே எதை எதையோ பேசிக் கொண்டேதான் இருக்கிறது .

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 9

(" பூமியே உன் வயது என்ன ? ")



இந்த பூமி தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது?
"சுமார் இருநூறு கோடி ஆண்டுகள் முன்பு இந்த பூமி தோன்றியிருக்க வேண்டும்" என்று அறிவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள்.
"எந்த அடிப்படையில் அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்?"
இயற்கையில் நடைபெறும் ரசவாதம் இருக்கிறதே! அதன் அடிப்படையில்தான் அவர்கள் இவ்வாறு சொல்கிறார்கள். எப்படி ? ரசவாதத்தைச் சொல்றேன்.
யூரேனியம் என்பது ஓர் உலோகம். தோரியம் என்பது மற்றோர் உலோகம். இவை இரண்டும் ஈயமாக மாறுகின்றன. இப்படி மாறியுள்ள ஈயத்தின் அளவைக் கொண்டு பூமியின் வயதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் அறிவியல் அறிஞர்கள்.

உலகத்திலே மொத்தம் எவ்வளவு ஈயம் இருக்கிறது ? இவ்வளவு ஈயமும் ஏற்பட எவ்வளவு காலம் ஆகும் ? எல்லாத்திற்கும் இந்த பிரபஞ்சம் கணக்கு வழக்கு வச்சுதான் விஞ்ஞானிகளிடம் பேசுகிறது . இதோ..புவி இயல் அறிஞர்கள் போட்ட கணக்கு.
ஓர் ஆண்டுக் காலத்திலே ஒரு கிராம் யூரேனியத்திலிருந்து 1/7, 600,000,000 கிராம் ஈயம் கிடைக்கிறது.
ஒரு கிராம் தோரியத்திலிருந்து ஒரு வருஷ காலத்தில் 1/28, 000,000,000 கிராம் ஈயம் கிடைக்கிறது.
இதைக் கொண்டு கணக்குப் பார்த்ததில் என்ன தெரிந்தது? உலகத்திலே மிகப் பழமையான ஈயப் பாறை எதுவோ அதன் வயது தெரிந்தது. அதாவது அந்த ஈயப் பாறையின் வயது நூற்று எண்பத்து ஐந்து கோடி வருஷங்கள் என்று தெரிந்தது.

இந்த அளவில் நின்றார்களா புவி இயல் அறிஞர்கள்? இல்லை. மேலும் சோதிக்கத் தொடங்கினார்கள். கடல்களின் வயது என்ன என்று கண்டுபிடிக்க முற்பட்டார்கள்.
இந்த பூமி இருக்கிறதே! இதன் முக்கால் பகுதி கடல். கால் பகுதி தான் நிலம். முதல்ல கடல் , அப்புறமா நிலம் கடலின் வயதைக் கண்டுபிடிப்பது எப்படி? கடலிலே உள்ள உப்புதான் அதன் வயதைக் காட்டியது. கடலிலே உப்பு ஏது? எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது?
ஆறுகள் கொண்டு வந்தன.
வானத்திலிருந்து பொழிகிறது மழை. அம்மழை நீரை ஏந்திக் கீழே இறக்கி விடுகின்றன மலைகள்.
மழை நீர் என்ன செய்கிறது? வானத்திலிருந்து பூமிக்கும் பூமிக்குள்ளும் இறங்கியது
மழை, மலைபாறைகளை உருட்டிக் கொண்டு ஓடுகிறது. குதிக்கிறது. 'இடி இடி' என்று சிரிக்கிறது. கீழே இறங்குகிறது. பூமியைத் தோண்டுகிறது. மண்ணை வாரிக் கொண்டு ஓடுகிறது. மண்ணைக் கரைத்துக் எடுத்துக் கொண்டு போய் கடலில் கொட்டுகிறது. மண்ணிலே உப்பும் இருக்கிறது. அந்த உப்பு, நீரிலே கரைந்து விடுகிறது மண் மட்டும் கரையாதிருக்கிறது.
இவ்விதம் ஆறுகளினாலே கொண்டு கொட்டப்பட்ட மண் கடலுக்கடியில் போய் விழுகிறது. உப்பு, நீரில் கரைந்து விடுகிறது.

சூரிய வெப்பத்தினாலே, கடல் நீர் ஆவியாக மாறுகிறது. ஆவி, மழையாகப் பொழிகிறது. மழை நீர் ஆறாக உருக் கொள்கிறது; ஆறுகள் மூலம் மீண்டும் கடலை அடைகிறது. இந்த நிகழ்ச்சி ஓய்வில்லாமல் நடந்து கொண்டே இருக்கிறது. இருக்கட்டும்.
இதனால் ஆறுகள் கடலில் கொண்டு போய் கொட்டும் உப்பு அதிகரிக்கிறது. அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. உலகம் தோன்றிய நாள் முதல் கடல் நீர் அப்படியே இருக்கிறது. உப்பு மட்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனால் தான் கடல் நீர் உப்பாயிருக்கிறது.


உலகத்தில் உள்ள ஆறுகள் எல்லாமாகச் சேர்ந்து மொத்தம் நாற்பது கோடி டன் உப்பை ஆண்டு தோறும் கடலில் கொட்டி வருகிறது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் என்ன தெரிகிறது? கடலின் வயது தெரிகிறது. அதாவது கடல்கள் தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது என்று தெரிகிறது. சுமார் இரு நூறு கோடி
.... இப்படி விஞ்ஞானிகள் கூட்டம் கூட்டமான ஈசல்களைப் போல கணக்குகளைப் பறக்க விட்டு, பின் விடிந்ததும் அத்தனையும் வாரி எடுத்து ஒற்றை வரியில் சொன்னார்கள்
" பூமியின் வயது இரு நூறு கோடி ஆண்டுகள்"
இது இருக்கட்டும் .பூமியைப் படைத்த படைப்பாளனான அல்லாஹ் தன் திருமுறையில் கூறுவதையும் சொல்றேன் .
" தேவன் 6 நாட்களில் பிரபஞ்சத்தைப் படைத்து ஏழாவது நாளில் ஓய்வெடுத்தான் " என்கிறது பைபிள் ஆதியாகாமம்
"நிச்சயமாக நாம்தாம் வானங்களையும் பூமியையும் அதற்கு மத்தியிலுள்ளவைகளையும் 6 நாட்களில் படைத்தோம் அதனால் நமக்கு யாதொரு களைப்பும் ஏற்படவில்லை" என்கிறது குர்ஆன் (50 : 33)
"வானத்தில் இருந்து பூமி வரையிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் அவனே ஒழுங்குபடுத்துகின்றான் நீங்கள் எண்ணுகிற கணக்கின்படி 1000 ஆண்டுகளுக்குச் சமமான ஒரு நாளொன்று அவனிடம் சென்று விடும் "குர்ஆன் (32: 05)
ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்குச் சமமான அந்நாளில் மலக்கு ஜிப்ரீல் ஆகிய பரிசுத்த ஆவியும் சென்று ஏறுவார்கள்"
குர்ஆன் (70 : 04)
மேலே மேற்கொள் காட்டப்பட்ட குர்ஆன் வசனங்களில் இருந்து "யௌம்" என்ற வார்த்தை 1000 ஆண்டுகளையும் குறிக்கும், அதே நேரத்தில் 50ஆயிரம் ஆண்டுகளையும் குறிக்கும், அதே நேரத்தில் ஒரு நாளையும் குறிக்கும் எனவே இப் பதத்திற்கு தகுந்தாற் போல் கால அளவை நிர்ணயிக்க வேண்டும் திருக்குர்ஆன் விரிவுரையாளர் யூசுஃப் அலி " யௌம் "என்ற வார்த்தை மிக நீண்ட கால அளவு அதை யுகங்கள், யுகாந்திரங்கள் Aeons என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார் .
குர்ஆன் கூறும் நாட்களுக்குப் பதில் ஆறு யுகங்கள் என்றே பொருள் வேண்டும் என்கிறார் மாரிஸ் புகைல்
"நீர் கூறும் இவ்வளவு பெரிய பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்து விட்டு மற்றவைகளை அவனுக்கு இணையாக்கின்றீர்களா ? இதில் வசிப்போருக்கு வேண்டிய ஆகாரத்தையும் நான்கு நாட்களுக்குள் திட்டமிட்டான் பின்னர் இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு ஒவ்வொரு வானத்திற்கும் அதனதன் கடமையை அறிவித்தான் " குர்ஆன் (41 : 09 10 11 12)

இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வசனங்களிலுள்ள "நாள்" என்ற சொல்லுக்குப் பதிலாக யுகங்கள் என்ற சொல்லைப் போட்டு வாசித்து பாருங்கள் மிக துல்லியமாக விஞ்ஞான உண்மை இதனை தெரிவிக்கிறது . இவ்வுண்மையை 1400 ஆண்டுகளுக்கு குர்ஆன் சொல்லிற்று. இதுதானே இந்த பிரபஞ்சம் பேசிய கணிதமாக இருக்கும் என்பதை நினைக்கும் போது மெய் சிலிர்க்கிறது.

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 10
(மழை சொல்லும் கணக்கு)



மழையின்மைக்கு மனிதன் கூறும் காரணங்களாவன: ஓசோனில் ஓட்டை... புவி வெப்பம் அதிகரித்தல்.. பனி மலைகள் உருகுதல். மழை பொழியாமல் இருப்பதற்கு இன்றைய விஞ்ஞானமும் இவ்வாறு பல காரணங்களைக் கூறலாம். உண்மைதான்.
ஆயினும், இஸ்லாம் இன்னொரு கோணத்தில் இதனைப் பார்க்கிறது. ஆம், மனிதன் செய்யும் பாவங்களும் பிழைகளும்கூட மழை பெய்யாமல் இருப்பதற்கான முக்கியக் காரணம் என்று இஸ்லாம் கூறுகின்றது.
நல்லவன் ஒருவன் இந்தப் பூமியில் வாழ்கின்றான் என்றால் அவனால் சக மனிதன் நலம்பெறுவதுடன், ஏனைய உயிரினங்களும் நலம் பெறுகின்றன.
அதேநேரம் தீயவன் ஒருவன் இருக்கின்றான் என்றால், அவனால் பாதிப்படைவது சக மனிதன் மட்டு மல்ல.. மாறாக, அவன் வாழும்பகுதி, கால்நடைகள், ஏன் மரங்கள்கூட பாதிப்படைகின்றன என்று நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக்கடந்து ஒரு பிரேதம் (ஜனாஸா) கொண்டுசெல்லப்பட்டது. அப்போது நபிகளார் (ஸல்), (இவர்) ஓய்வு பெற்றவராவார்; அல்லது (பிறருக்கு) ஓய்வு அளித்தவராவார் என்று சொன்னார்கள்.
மக்கள், “இறைத்தூதர் தூதர் அவர்களே! ஓய்வு பெற்றவர்; ஓய்வு அளித்தவர் என்றால் என்ன?” என்று கேட்டார்கள்.
நபி (ஸல்) அவர்கள், “இறைநம்பிக்கை கொண்ட அடியார் (இறக்கும்போது) இவ்வுலகத்தின் துன்பத்திலிருந்தும் தொல்லையில் இருந்தும் நிம்மதிபெற்று இறையருளை நோக்கிச் செல்கிறார். பாவியான அடியான் (இறக்கும்போது) அவனி(ன் தொல்லைகளி)டமிருந்து மற்ற அடியார்கள், நாடு நகரங்கள், மரங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியன நிம்மதி பெறுகின்றன” என்று சொன்னார்கள். (புகாரி, முஸ்லிம்)
தீயவன் ஒருவன் உலகில் உயிர் வாழ்கின்றான் என்றால் அவன் தீயவனாக இருப்பதன் பாதிப்பு அவனுக்கு மட்டுமல்ல. மாறாக, அவன் வாழும் பகுதியில் இருக்கும் கால்நடைகள், மரம் செடிகொடிகள்கூட பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஆன்மிக ரீதியாகப் பார்க்கும்போது அவனது பாவத்தின் காரணத்தால் மழை தடுக்கப்படுகிறது என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

அதேவேளை, உலகிய ரீதியாகப் பார்க்கும்போது மழைக்குக் காரணமாக அமையும் மரம் செடி கொடிகளை அவன் அழிக்கின்றான் என்பது இந்த நபி மொழியின் இன்னொரு கோணம் ஆகும். எனவேதான், ‘கெட்டவன் இறக்கும்போது படைப்பினங்கள் அனைத்தும் நிம்மதி பெறுகின்றன’ என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

اِنَّ اللهَ عِنْدَهٗ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِى الْاَرْحَامِ وَمَا تَدْرِىْ نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا وَّمَا تَدْرِىْ نَفْسٌ بِاَىِّ اَرْضٍ تَمُوْتُ اِنَّ اللهَ عَلِيْمٌ خَبِيْرٌ
நிச்சயமாக (உலக முடிவு) காலத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் (மட்டும்)தான் இருக்கிறது.
அவனே மழையை இறக்கி வைக்கிறான்.
அவனே கர்ப்பங்களில் தரிப்பதையும் அறிவான்.
(அவனைத் தவிர) எவரும் நாளைக்கு அவர் என்ன செய்வார் என்பதை அறியமாட்டார்.
எந்தப் பூமியில் இறப்பார் என்பதையும் (அவனைத் தவிர) எவரும் அறியமாட்டார். நிச்சயமாக அல்லாஹ்தான் (இவைகளை) நன்கறிந்தவனும் தெரிந்தவனுமாக இருக்கிறான். (அல்குர்ஆன் : 31:34)
1) யுக முடிவு நேரத்தைப் பற்றிய ஞானம்:
நபி(ஸல்) அவர்கள் யுக முடிவு நேரம் எப்பொழுது நிகழும் என்பது குறித்து, ஒரு விஷயம் கூட மக்களுக்கு எடுத்துச் சொல்லவில்லை.எனினும் அதன் அறிகுறிகளை மட்டுமே அதுவும் அல்லாஹ்வின் அறிவிப்பின்படி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

2) மழையைப் பற்றிய ஞானம்:
அது எப்பொழுது வரும், எவ்வளவு பெய்யும், எவ்விடங்களிலெல்லாம் பெய்யும், அதனால் மக்களுக்கு நலமா, இடரா முதலியவற்றின் முழுமையான ஞானம்.
3) கர்ப்பத்திலுள்ளவைப் பற்றிய ஞானம்:
முழுமைப் பிரசவமா, அரைகுறைப் பிரசவமா, அது பெற்றோருக்கு இணக்கமானதா, விரோதமானதா, உயிருடன் பிறக்குமா. மரித்துப் பிறக்குமா முதலியவற்றின் ஞானம்.
4) நாளை ஒருவர் தாம் என்ன செய்வார் என்பது பற்றிய ஞானம்:
ஒருவரது நாளையத் திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா, வீட்டிலிருந்து புறப்படுபவர் மீண்டும் அதில் வந்து புகுவாரா, புக மாட்டாரா, நாளையத் தொழில் லாபமா, நஷ்டமா முதலியவைப் பற்றிய ஞானம்.
5) எவருக்கு எவ்விடத்தில் (எவ்விதத்தில்) மரணம் ஏற்படும் என்பது பற்றிய ஞானம்:
ஒருவரின் மரணம் சொந்த ஊரிலா, அல்லது வந்த ஊரிலா, அல்லது எந்த ஊரில் என்பதும், தரையிலா, கடலிலா, ஆகாயத்திலா என்பதும், ஓரிடத்தில் தங்கியிருக்கையிலா, பிரயாணம் செய்கையிலா, நல்ல மரணமா, தீய மரணமா, சாதாரண மரணமா, திடீர் மரணமா என்பன போன்றவைப் பற்றிய ஞானம்.
மேற்காணும் குறிப்பிட்ட ஐந்து விஷயங்கள் பற்றிய ஆய்வு, அந்த ரப்புல் ஆலமீன் ஒருவனைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது
ஆனால் பெய்த மழையின் அளவை விஞ்ஞான ரீதியில் மழை மானி கருவியால் அளவிட முடியும் .
மழையையோ அல்லது பனியையோ சாதாரண மழைமானி மூலம் அளவிடலாம். அஃது 100மிமீ (4 அங்குலம் பிளாஸ்டிக்) அல்லது 200மிமீ (8அங்குலம் உலோகம்) என்ற அளவுகளில் இருக்கும்.
சாதாரண மழை மானி ஆடி அல்லது உலோகத்தால் ஆன இரண்டு நீளுருளைகளையும் ஒரு புனலையும் கொண்டது. உட்புற உருளை 0மிமீ முதல் 25மிமீ (0.98 அங்குலம்) வரை அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும்.
உட்புற உருளையின் மேல் உள்ள புனல் மழை நீரை அந்த உருளைக்குள் செலுத்துமாறு
அமைக்கபட்டிருக்கும். உட்புற உருளை நிறைந்தபின் மழை நீர் மேற்புற உருளையில் சேகரிக்கப்படும்.
அளவிடும் முறை

பொதுவாக ஒவ்வொரு 24 மணிநேரத்திற்கும் மழை அளவிடப்படும். எனவே மழையை அளவிடும்முன் நேரத்தை குறித்துக்கொள்வது அவசியம்.
மழைமானியை ஒரு பொதுவான, இடர்பாடுகள் இல்லாத இடத்தில் மழை பெய்யும் நேரத்தில் திறந்து வைக்கவும். சரியாக 24 மணிநேரத்திற்கு பிறகு மானியில் உள்ள நீரின் அளவை மில்லி லிட்டர் அளவில் எடுக்கவேண்டும்.

நீர் ஒரு திரவம் என்பதால் மில்லி லிட்டர் என்ற அளவைவிட லிட்டர் என்ற அளவில் மாற்றினால் தெளிவாக இருக்கும். மழையை அளவிடும் SI அலகு மில்லி லிட்டர் ஆகும்.
" ஒரு மில்லிமீட்டர் மழை அளவு என்பது ஒரு லிட்டர் / ஒரு சதுர மீட்டருக்கு சமம். "
எனவே, 10மிமீ மழை என்று பதிவானால், அதை 10 லிட்டர் / சதுர மீட்டர் என்று எடுத்துகொள்ளவும்.
ஒரு ஊரில் எவ்வளவு மழை பெய்துள்ளது என கணக்கிட, அந்த ஊரின் பரப்பளவு (சதுர மீட்டரில்) தெரிந்திருக்க வேண்டும். சென்னையின் பரப்பளவு 174 சதுர கிலோமீட்டர் (174 x 10,00,000 சதுர மீட்டர்).
எனவே சென்னையில் 1mm மழை என்பது 17,40,00,000 லிட்டர் மழை பெய்ததாகக்கொள்ளலாம்.
இப்படித்தான் இந்த பிரபஞ்சம் மழை பெய்யும் கணிதத்தை சொல்லிக் கொடுக்கிறது

(தற்சமயம் எங்களூர் மேலப்பாளையத்தில் செம மழை பெய்ந்து, வெள்ளக்காடாகி, உடனேயே அடுத்த மழைக்கும் தயாராகிக் கொண்டிருக்கிறது)

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 11

(வானம் வசப்பட்டது)

1903 ஆம் ஆண்டு, கோன்ஸ்டாண்டின் ட்சியோல்கோவ்ஸ்கை (1857–1935), தி எக்ச்ப்லோறேஷன் ஆப் காஸ்மிக் ஸ்பேஸ் பை மீன்ஸ் ஆப் ரியாக்ஷன் டிவைசஸ் என்ற ஆய்வறிக்கை நூலை ரஷ்ய மொழியில்: Исследование мировых пространств реактивными приборами) பதிப்பித்தார்.

இது ஏவுகணையைக்கொண்டு எவ்வாறு விண்கலங்களை ஏவலாம் என்பதைப்பற்றி வெளிவந்த முதல் புத்தகமாகும்.

இந்நூல் விண்வெளிக்கு மனிதன் செல்லவும், அங்கு அவனது செயல்கள் உணரப்படவும் ஒரு திட்டமாக விளங்கியது. அவர் ஒரு விண்வெளி நிலையத்தை கற்பனையாக மிக விவரமாக உண்டாக்கி, அதனது நிலையான புவி கோளப் பாதையையும் கணக்கிட்டுள்ளார். பிரபஞ்சம் எவ்வளவு அழகாக கணித ரீதியில் கோட்பாடாக பேசியிருக்கிறது . பார்த்தீர்களா ?

அவர் விண்வெளி எவ்வாறு அறிவியல் பரிசோதனைகளுக்கு உதவி புரிகிறது என்பதைப்பற்றியும் விளக்கியுள்ளார். இந்த நூல் ட்சியோல்கோவ்ஸ்கை குறிப்பிட்ட ஒரே இடத்தில் புவியை சார்ந்து இருக்கும் செயற்கைக்கோள்களைப்பற்றி விவரிப்பதுடன், பூமியுடன் அவை எப்படி தகவல்களை பரிமாறுகின்றன என்பதைப்பற்றியும் குறிப்பிடுகின்றது.

"இவை பெரியளவில் தொலைத்தொடர்பு கருவிகளாக பயன்படுத்தப்படலாம்" என்றும் இந்த நூல் குறிப்பிடுகின்றது.

அவர் கோளப்பாதையில் சுற்றிவரும் விண்கலங்களின் இராணுவ மற்றும் அமைதித்துவ முக்கியத்துவங்களை விளக்கியுள்ளார். (...ஆனால் இஸ்ரேலில் கன்ட்ரோல் ரூமில் உட்கார்ந்து கொண்டே ராக்கெட் ஏவுகணைகளை ஏவி காசாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி, ஹமாஸ் அமைப்பினர் 200-க்கும் மேற்பட்டவர்களை கொன்றொழிக்கவும் முடிகிறது) இதற்கெல்லாம் காரணம் வானவெளி சொல்லும் கணக்கு வழக்குகள்தான்.

இந்த செயற்கை கோள் மூலமாக வானில் உள்ள மழை மேகங்கள் , புயல் காற்றுகளை மிக எளிதாக சாட்டிலைட் மூலமாக கணக்கிட முடிகிறது .

இன்று விண்ணில் வலம் வரும் மிகப்பெரிய செயற்கைக்கோள் "சர்வதேச விண்வெளி" நிலையம்மாகும். அதிநவீன விஞ்ஞானம் பெற்றெடுத்த அற்புத குழந்தை இது .

وَلَوْ فَتَحْنَا عَلَيْهِمْ بَابًا مِّنَ السَّمَآءِ فَظَلُّوْا فِيْهِ يَعْرُجُوْنَۙ

இவர்களுக்காக நாம் வானத்திலிருந்து ஒரு வாயிலைத் திறந்து விட்டு, அவர்கள் அதில் (நாள் முழுதும் தொடர்ந்து) ஏறிக் கொண்டிருந்தாலும் (அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்). (அல்குர்ஆன் : 15:14)

அவர்கள் இறைவன் மீது ஈமான் கொள்ளாவிட்டாலும், இறைவன் படைத்த படைப்புகளின் சூட்சமத்தை மிக எளிதாக வசப்படுத்திக் கொள்கின்றனர் .


இந்த செயற்கை கோள்கள் மூலமாக வானம் மட்டும் அல்ல பூமியும்வசப்பட்டே இருக்கிறது உட்கார்ந்த இடத்திலே இருந்து பூமியின் அடி ஆழம் வரை மனிதனால் உற்றுப் பார்த்து துளாவ முடிகிறது .

ஆம் . வானம் மனிதனுக்கு வசப்பட்டிருக்கிறது .

https://m.facebook.com/story.php?story_fbid=2303613983231277&id=100007480923921

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 12
பூமி சொல்லும் கணிதம்



வானைத் தொடும் அளவுக்கு உயர்ந்த பல மாடிக்கட்டிடங்கள் பெரிய பெரிய நகரங்களில் கட்டப்பட்டுள்ளன. பூமியின் மேற்பரப்பு உறுதியாகவும், அசையாமலும் இருப்பதால் நமது பூமியின் மேற்பரப்பு ஆடாமல் அசையாமல் உறுதியாக இருப்பதாகக் கருதுகிறோம். திடீரென கட்டிடங்கள் குலுங்குவதும், கட்டிடங்களில் இருப்பவர்கள் ஏதோ படகில் நகர்வதுப் போல் உணர்வதும் , பின் அத்தனையும் சீட்டுக்கட்டுப் போல நொறுங்கி விழுவதும் பூகம்பத்தின் விளையாட்டு .

إِذَا زُلْزِلَتِ الْأَرْضُ زِلْزَالَهَا ۙ
பூமி பெரும் அதிர்ச்சியாக - அதிர்ச்சி அடையும் போது-
وَأَخْرَجَتِ الْأَرْضُ أَثْقَالَهَا ۙ
இன்னும், பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது-
وَقَالَ الْإِنْسَانُ مَا لَهَا
“அதற்கு என்ன நேர்ந்தது?” என்று மனிதன் கேட்கும் போது-
يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ۙ
அந்நாளில், அது தன் செய்திகளை அறிவிக்கும்.
بِأَنَّ رَبَّكَ أَوْحَىٰ لَهَا
(அவ்வாறு அறிவிக்குமாறு) உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறிவித்ததனால் (இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறது) (அல்குர்ஆன் : 99: 1_ 5)

2004ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் இந்தோனேஷியாவில் ஏற்பட நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து உண்டான சுனாமி அலைகளின் தாக்குதலுக்கு 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பலியாயினர். 2001ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் காலை நாம் குடியரசு தின விழாக் கொண்டாட்டங்களைத் துவக்க இருந்த சமயத்தில், "உங்க ஆட்டமெல்லாம் குளோஸ்"ன்னு குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 20,000 க்கும் மேற்பட்டோர் உயிரழந்தனர். 4,00,000 வீடுகள் இடிந்து விழுந்தன.

1993ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள் அதிகாலை அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது மகாராஷ்டிர மாநிலம் லாத்தூர் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10,000 பேருக்கு மேல் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உயிரழந்தனர். 30,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பெரிய அளவிலான நிலநடுக் கங்களைத் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. இதனால் ஏராளமான அளவில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்கள் உண்டாகின்றன. ஆகபூமியின் மேற்பகுதியில் அவ்வப்போது திடீரென நில அதிர்வுகள் ஏற்பட்டு பூமி ஆட்டம் காணும் நிகழ்வே நிலநடுக்கம் அல்லது பூகம்பம் எனப்படும்.

பெரிய அளவில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட பின் சிறு அளவிலான அதிர்வுகள் நெடுநாள் வரை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். இவை பின் அதிர்வுகள் எனப்படும்.
பூமிக்கு அடியிலுள்ள பாறைகள், கனிம தாதுப்பொருட்கள் அனைத்தும் உருகி, பாகுபோன்ற நிலையில் உள்ளன. பூமியின் மேல் அடுக்கு இதன்மீது மிதந்தவாறு, தொடர்ந்து அசைந்து கொண்டே உள்ளது. பூமியின்மேல் அடுக்கு பூமித்தட்டு என்றும் அழைக்கப்படும்.

பூமித்தட்டில் ஆங்காங்கே பிளவுகள் காணப்படுகின்றன. இப்பிளவுகளின் விளிம்பு எல்லையை ஒட்டி பூமித்தட்டுகள் அசைந்தவாறு நகர்ந்து கொண்டுள்ளன.
ஒருசிறு மூங்கில்குச்சியை இருகைகளிலும் பிடித்துக்
கொண்டு வளைத்தால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அது
வளைந்து கொடுக்கும். அதன்பின்னர் நாம் கொடுக்கும் அழுத்தம் தாளமாட்டாமல், குச்சி இரண்டாக உடைந்துவிடும். அதே போலத்தான் பூமித்தட்டுக்களின் இயக்கத்திலும் நிகழ்கின்றது.
குளத்து நீரில் கல்லைப் போட்டால் நீரில் கல் விழுந்த இடத்திலிருந்து அலைகள் உருவாகி வட்ட வடிவில் பரவி செல்வதைக் காணலாம். இவ்வாறுதான் நில நடுக்கத்தின் அதிர்வு அலைகளும் பரவிச் செல்கின்றன நில அதிர்வுமானி (Seismograph) என்ற கருவியின் மூலம் நிலநடுக்கத்தின் போது ஏற்படும் அதிர்வலைகள் பதிவு செய்யப்படுகின்றன. நம்மால் உணர இயலாத மிகவும் துல்லியமான அதிர்வுகளையும் இக்கருவி கணக்கிட்டு பதிக்கிறது.
இந்த சிறு அதிர்வலைகள் கூறும் சேதிகளை பூமியில் உள்ள ஜீவராசிகள் உணர்ந்து இடம்பெயர்கின்றன. இதில் பாம்பு , எலிகள் , மனிதன் கட்டிப்போடாத விலங்குகள் எல்லாம் தப்பியோடி விடுகின்றன. அதிர்வுமானி பேசும் சிறு சிறு பரிபாஷைகள் புரியாத மனிதர்கள்தான் மாநகராட்சி அடிச்சிப் போட்ட நாய் மாதிரி பிணங்களாகின்றார்கள் .

நில நடுக்க அதிர்வலைகள் இக்கருவியினால் உணரப்பட்டு மின் அலைகளாக மாற்றப்படும்.பின்னர் இவை மின் கருவியில் பதிவு செய்யப்படும். கணிணியின் உதவிகொண்டு இப்பதிவுகளை ஆய்வு செய்தால் நிலநடுக்கம் ஏற்பட்ட இடம், ஏற்பட்ட நேரம், நிலநடுக்க சக்தியின் அளவு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். இதற்கு குறைந்தது மூன்று வெவ்வேறு இடங்களில் செய்யப்பட்ட பதிவுகள் தேவைப்ப டும். நிலநடுக்கம் எந்த அளவு சக்தி வாய்ந்தது என்பது அது வெளியிடும் ஆற்றலைப் பொறுத்து மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதை ரிக்டர் அளவு கோல் ஆகும்.

அமெரிக்கா வைச் சேர்ந்த சார்லஸ் ரிக்டர் என்ற புவி அறிவியல் ஆய்வாளர் 1935 ஆம் ஆண்டு இந்த அளவுகோல் முறையைக் கண்டறிந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.
இதன் வரையறை 1லிருந்து 10 வகை மதிப்புடையதாக உள்ளது. ரிக்டர் அளவுகோலில் 1 என்பது குறைந்த சக்திகொண்ட நில நடுக்கத்தைக் குறிக்கும். இதை நாம் உணர இயலாதளவுக்கு மிகவும் குறைவாக இருக்கும். அதிகபட்சமாக 9.3 ரிக்டர் வரை நிலநடுக்கங்கள்பதிவு செய்யப்பட்டுள்ளன• இது தீவிரமான நில நடுக்கத்தைக் குறிக்கும்.

2004 ம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து ராட்சத அளவில் சுனாமி அலைகள் ஏற்பட்டன அல்லவா ? இவற்றின் பாதிப்புகளால் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது நாம் அறிந்ததே !
ரிக்டர் அளவுகோலில் இந் நில நடுக்கத்தின் சக்தி 9 எண்
கொண்டதாக பதிவுசெய்யப்பட்டது. இதன்சக்தி 1500 ஹிரோஷிமா அணு குண்டுகளுக்கு சமமானதாகும். எனவே இதன் தீவிரத்தன்மையை நீங்களே கற்பனை செய்து பார்க்கலாம்.
மனிதன் உருவாக்கிய நில அதிர்வுமானி (Seismograph) கூறும் கணித வரைபடத்தின் நுட்ப சேதிகளைக் கூட முழுமையாக மனிதனால் புரிந்து கொள்ள முடியாததுதான் மிகப் பெரிய சோகம்.

ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 13

சந்திர காலண்டர்



காலண்டர் முதன் முதலில் பண்டை காலத்து மனிதர்கள் (bronze age) இரவு பகல் மாறிவருவதை வைத்து நாட்களை வகைப் படுத்தினாலும், சந்திரனின் சுழற்சியை வைத்து மாதங்களை எலும்புகளில் குறித்து வந்தார்கள் என்று அறியமுடிகிறது.

சந்திரக் காலண்டரை முறையாகப் பயன்பாட்டுக்கு முதலில் கொண்டுவந்தது மெஸபடோமியர்கள் (கி.மு.2800) என்றும் பண்டைய எகிப்தியர்கள் என்றும், ரோமானியர்கள் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
சந்திரன் ஒருமுறை பூமியைச் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம் 27.321582 நாட்கள்(27D 7Hr 43.1Min) என்று கணக்கிடப்பட்டுள்ளது.
...என்றாலும் பூமியுடைய சுழற்சி, பூமியின் சுற்றுப்பாதை இவைகளினால் சந்திரன் ஒரு முழு சுற்று பெற (The synodic month) 29.530589 நாட்கள் (29D 12Hr 44min 2.9 s) ஆகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு வருடம் முழுமைபெற அது எடுத்துக்கொள்ளும் காலம் 354.375 நாட்கள். இதெல்லாம் வானவியல் கணக்கு, இது நமக்கு தேவையில்லை.

ஒரு பிறைக்கும் மறு பிறைக்கும் இடைப்பட்ட காலம் சரியாக 29/30 நாட்கள் வராததால், ஒரு மாதம் 29 ஆகவும் மறு மாதம் 30 ஆகவும் கணக்கிடப்படுகிறது. ஆக ஒரு வருடத்துக்கு 354 அல்லது 355 நாட்களைக் கொண்டுள்ளது.
நபி பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்துக்கு முன்பிருந்தே சந்திரக் காலண்டரை அரேபியர்கள் பின்பற்றி வந்துள்ளனர். அந்த அடிப்படையிலேயே ஹஜ் உள்பட அவர்களுடைய எல்லா செயல்களும் நடைபெற்று

வந்தன. இதில் எந்த மாற்றம் ஏற்படாமல் இஸ்லாத்தின் எல்லா செயல்களும் இறை உத்திரவுகளும் அமையப் பெற்றுள்ளன.
பெருமானார் (ஸல்) அவர்களும் அப்படித்தான் செயல்பட்டு வந்தார்கள். இன்று வரை அனைத்து முஸ்லிம்களும் மார்க்க சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களையும் ஹிஜ்ரி காலண்டரை பின்பற்றியே செயல்பட்டு வருகிறார்கள்.

ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் சில யூதர்கள் வந்து,
" முஹம்மதே, குகை மனிதர்கள் 300 ஆண்டுகள் இருந்ததாக இன்ஜீல் கூறுகிறது. உங்கள் குர்ஆனில் 300 ம் பின் ஒரு 9 வருடங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. குர்ஆன் அல்லாஹ் இறக்கியதாக சொல்கிறீர்கள். இன்ஜீலும் அல்லாஹ் இறக்கியிருக்கும்போது உங்களுக்கு ஒரு மாதிரியாகவும் எங்களுக்கு ஒரு மாதிரியாகவும் எப்படி சொல்ல முடியும்? இதில் எது உண்மை? என்ற வினாவை வைத்தனர்.
அப்போது அருகிலிருந்த அலி (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதிபெற்று, “சூரியனைப் படைத்தவனும் அல்லாஹ்தான் சந்திரனைப் படைத்தவனும் அல்லாஹ்தான், உங்களுக்கு சூரிய கணக்குப்படி சொல்லியிருக்கிறான். எங்களுக்கு சந்திர கணக்குப்படி சொல்லியிருக்கிறான்” என யாருடைய மனமும் புண்படாதவாறு சரியான விளக்கத்தை அளித்தார்கள்.
ஒரு சர்ச்சைக்குரிய விஷயத்தை மிக எளிமையாக பதிலுரைத்து தெளிவுபடுத்தியுள்ளார்கள் அலி (ரலி) அவர்கள்.
ஹிஜ்ரி காலண்டர் முஸ்லிம்களிடமிருந்து அந்நியமாக்கவும் மறக்கடிக்கவும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்போதுள்ளவர்களில் குறிப்பாக பெண்கள் அரபி மாசத்தை சரிவர புரிந்து வைத்திருந்தாலும், வயதானப் பெண்களுக்கு மாதங்களின் பெயர் தெரியாவிட்டாலும், அந்தந்த பகுதியில் நடக்கும் கந்தூரியை வைத்து மாதங்களின் பெயர்களைத் அறிந்து வைத்திருந்தார்கள்.
1) முஹர்ரம் – ஆஷுரா மாசம்
2) சஃபர் – அப்பா கந்தூரி(சதக்கத்துல்லாஹ் அப்பா கந்தூரி)/சபர் மாசம்
3) ரபியுல் அவ்வல் – ரசூலுல்லாஹ் மவுலிது மாசம்
4) ரபியுல் ஆகிர் – முஹைதீன் ஆண்டவர் மாசம்
5) ஜமாத்துல் அவ்வல் – முத்துப்பேட்டை கந்தூரி மாசம்
6) ஜமாத்துல் ஆகிர் – நாகூர் கந்தூரி மாசம்
7) ரஜப் – மெஹ்ராஜ் மாசம் / அஜ்மீர் காஜா மாசம்
😎ஷஹ்பான் – பராத்து /வராத்து மாசம்
9) ரமலான் – நோன்பு மாசம்
10) ஷவ்வால் – நோன்புப் பெருநாள் மாசம்
11) துல் கஃதா – ஏர்வாடி கந்தூரி மாசம்
12) துல் ஹஜ்ஜு – ஹஜ்ஜுப் பெருநாள் மாசம்
இம்மாதங்களை வைத்து அந்தந்த மாதங்களில் ஹத்தம் ஃபாத்திஹா ஓதி இரண்டுமூன்று ஏழைகளுக்கு சோறு கொடுத்துவந்தார்கள். வஹாபிசம் வந்தபிறகு இது மறையத் தொடங்கியுள்ளதால் ஏழைகளுக்கு கிடைத்துக்கொண்டிருந்த இறைச்சிக் கறி நெய் சோறு கிடைக்காமல் போனது.

தாய்மார்களின் கர்ப்பம் கூட மேற்கண்ட மாத பெயர்களில் கணக்கிட்டார்கள் . கர்ப்பம் என்பது கர்ப்பமுறுதலில் இருந்து குழந்தைப்பேறு வரை உள்ள காலகட்டம் ஆகும். கருமுட்டை விந்தணுவால் சினைப்படுத்தப்பட்ட பின் அது கருப்பையின் உட்புறத்தில் பதியமாகி நஞ்சுக்கொடியாகவும் முளையமாகவும் (முதிராக்கரு) பின் முதிர்கருவாகவும் உருவாகிறது.


கர்ப்ப காலம் பெண்ணின் இறுதி மாதவிடாயின் முதல் நாளில் தொடங்கி, பொதுவாக 40 வாரங்கள் நீடிக்கின்றன. 40 வாரம் என்பது 280 நாட்கள். சந்திர கணக்கின்படி 28 நாட்கள் கொண்ட பத்து மாதம். ‘சந்திரனின் வளர்பிறையையும் தேய்பிறையையும் முறையாக தொடர்ந்து பார்க்கக் கூடிய ஒருவரால் அதன் தோற்றத்தை வைத்தே தேதியை கூறிவிட முடியும் எனும் அளவிற்கு எளிதான நாட்காட்டி அது. படகோட்டிகளும் விவசாயிகளும் இன்றும் இதற்கு சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட எளிதான சந்திரக் காலண்டர் இன்று முஸ்லிம்களிடம் அந்நியமாகி வருவது பெரும் வேதனைக்குரியதும் ஆபத்தானதுமாகும்’

கடல் ஆமைகளின் ஓட்டில் சந்திர காலண்டரை இறைவன் பதித்து , பிரபஞ்சம் படைக்கப்பட்ட நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை 12தான் என்பதை தன் திருக்குர்ஆனிலும் பதித்தான் .

اِنَّ عِدَّةَ الشُّهُوْرِ عِنْدَ اللّٰهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِىْ كِتٰبِ اللّٰهِ يَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ مِنْهَاۤ اَرْبَعَةٌ حُرُمٌ ذٰ لِكَ الدِّيْنُ الْقَيِّمُ ۙ فَلَا تَظْلِمُوْا فِيْهِنَّ اَنْفُسَكُمْ وَقَاتِلُوا الْمُشْرِكِيْنَ كَاۤفَّةً كَمَا يُقَاتِلُوْنَكُمْ كَاۤفَّةً وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ
நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை (ஓர் ஆண்டுக்கு) பன்னிரண்டுதான். (இவ்வாறே) வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்து அல்லாஹ்வின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.(அல்குர்ஆன் : 9:36)
ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 14

(மூன்றாம் விதி)



நியூட்டனின் மூன்றாவது விதியானது "ஒவ்வொரு வினைக்கும் (action) அதற்கு இணையான எதிர் வினை (reaction) உண்டு." என்று கூறுகின்றது. ஐசக் நியூட்டன் தான் 1687 ஆம் ஆண்டில் இலத்தீன் மொழியில் எழுதிய 'பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா' என்னும் நூலில் இந்த விதி கூறுகிறார்

"எல்லா விசைகளும் இரட்டையாக உள்ளன, அவ்விரு விசைகளும் அளவில் இணையாகவும், திசையில் எதிரெதிராகவும் இருக்கும் "
தமிழில் திருவள்ளுவர் இந்த விசைகளை வினையாக உருவகப்படுத்தி , "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும் " என்கிறார்
முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால், அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.
பத்தாம் நூற்றாண்டில் சீனத்துவ தத்துவத்தில் " யின் - யாங் " என்கிற தத்துவம் மிகப் பெரிய தத்துவ தாக்கத்தை ஏற்படுத்தியது.(குர்ஆன் ஆறாம் நூற்றாண்டிலேயே அருளப்பட்டது என்பதை கவனிக்கவும்)
" யின் - யாங் " தத்துவம் என்பது எதிர்மறைகளைப் பற்றி அவதானிப்பது.அதாவது உலகின் ஆதார உண்மையில் "யின் - யாங் " என்கிற எதிர்மறை சிந்தனை இருக்கிறது .அதுதான் உண்மையின் இரு வேறு வடிவங்கள் .
"யன் - யாங் " என்பது உண்மையின் இரட்டை நிலையின் குறியீடு .சீனர்கள் யின், யாங் என்று இருவித சக்திகளைச் சொல்கிறார்கள். இதைப்பற்றிய படத்தைப் பாருங்கள். இதுதான் பிரபஞ்சத்தின் சக்தியைக் காட்டும் ஓர் அடையாளக் குறியாகக் குறிப்பிடுகிறார்கள்.
வெளியில் உள்ள வட்டம் உலகிலுள்ள அனைத்தையும் குறிப்பிடுகிறது. கருப்பும் வெள்ளையும் இரண்டு விதமான சக்திகளைக் குறிக்கிறது.
“யின்'' எனும் கருப்பு நிறமும் "யாங் " எனும் வெள்ளை நிறமும் சேர்ந்துதான் உலகின் பல செயல்களும் சரிவர நடக்கக் காரணம் என்று சொல்லப்படுகிறது.
கருப்பும், வெள்ளையும் ஒன்றுக்கொண்டு மாறுபாடானதல்ல. ஒன்றைச் சார்ந்துதான் மற்றொன்றின் செயல்பாடுகள் நடந்து வருகின்றன. இப்புவியில் உள்ள அனைத்திலும் இவ்விருவித சக்திகளும் அடங்கியுள்ளன.
உதாரணமாக வெளிச்சம் என்பதை அறியவேண்டுமாயின், இருட்டும் இருக்கத்தானே வேண்டும்? இல்லையெனில் வெளிச்சம் என்று ஒன்றைத் தனியாக எப்படி அறிய முடியும்?

சூரியன் X சந்திரன்
வான் x பூமி
நன்மை X தீமை.
அழகு X குரூரம்,
நிஜம் X பொய்,
ஆண் X பெண்,
இரவு X பகல் ,
சந்தோஷம் X துக்கம்
இடது X வலது....... சொல்விக் கொண்டே போகலாம் .
அட , கம்ப்யூட்டர் ஆதாரமாக இந்த இரட்டை - பைனரி (0, 1) வடிவத்தில்தான் கணக்கே போடுகிறது.
" யின் - யாங் "குறிப்பிட ஒரு வட்டத்தை கருப்பு - வெள்ளையாக இரண்டு பகுதிகளாக பிரித்து அதற்கு வடிவம் கொடுத்தார்கள் கொரிய தேசத்துதேசியக் கொடியில் இந்த வட்டம் இருக்கிறது .
இந்த வடிவத்தின் இரு பகுதிகளும் முழுவதும் கருப்போ வெளுப்போ இல்லை. வெண் பகுதியில் ஒரு கருப்புப் புள்ளியும் .கருப்புப் பகுதியில் ஒரு வெண்புள்ளியும் உள்ளது.
ஒவ்வொரு நல்ல காரியத்திலும் கொஞ்சம் கெடுதல் இருக்கத்தான் இருக்கிறது. ஒவ்வொரு அழகிலும் சிறிது அழுக்கு, ஒவ்வொரு குரூரத்திலும் சிறிது அழகு .
'அழகு' என்று நாம் பிரித்துப் பார்க்கும் போதுதான் அவலட்சணத்தை சிருஷ்டிக்கிறோம்
உண்மையை கேட்கும் போதுதான் இதில் பொய்யின் பங்கு எவ்வளவு சிந்திக்கிறோம் .
இந்த எதிர்மறையெல்லாம் கடந்து சிந்திக்கும் போது இவையெல்லாம் தனிப்பட்ட அனுமானங்கள் அல்ல , எல்லாமே ஒரே நித்தியத்தின் இரண்டு பக்கங்கள் . ஒரே முழுமையின் இரண்டு வர்ணனைகள் என்பதே .
இந்த முரண்பாடுகளின்படி, இந்த இடத்தில் 'ஒரு வினை' என்பதை நாம் முதலில் 'துன்பமாக' எடுத்துக் கொண்டாலும் சரிதான்; அதன் எதிர்வினை இன்பமாகத் திரும்பவும் வாய்ப்பிருக்கிறதுதான்.
ஆனால், நாம் உலகியலின்படி பார்த்தோம் என்றால் மனிதன் துன்பத்தைவிட இன்பத்தையே அதிகம் விரும்புகிறான். அவனது துன்பங்கள்கூட இன்பம் தேடும் முயற்சியில்தான் விளைகின்றன. எனவே 'வினை' என்பதை நேர்மறையாகவும், 'எதிர்வினை' என்பதை எதிர்மறையாகவும் எடுத்துக் கொள்ளலாம்.
திருக்குர்ஆனிலும் மனித வாழ்வின் நித்தியத்தை சொல்லும் போது துன்பத்துடன் இன்பம் இருக்கிறது என்கிறான் இறைவன்.
فَاِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۙ
ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.
اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا
நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.
(அல்குர்ஆன் : 94:5 ,6)
மேலும் இறைவன் இந்த எதிர்மறைகளை மிகத் துல்லியமாக கணக்கிட்டு தன்னுடைய திருக்குர்ஆனில் அருளியுள்ளான்
வானவர்கள் - 68 x சைத்தான் - 68
இப்லீஸ் _11 x இறை உதவி - 11
செயல் (ஃபஅல) - 108 X கூலி (அஜ்ரு) _108
துன்பம் (ஷித்தத்) - 102 X பொறுமை - (ஸப்ரு) 102
நஃபா (பயன்படும் தன்மை) -50 X ஃபசாத் (குழப்பம்) - 50
ஹர் (வெப்பம்) -14 X பர்த் (தட்பம்) -14
துன்யா - 115 X மறுமை - 115
களிமண் (தீன்) - 12 X இந்திரியம் (நுத்பா) - 12
வாழ்வு (ஹயாத்) - 145 X இறப்பு (மௌத்) - 145
நன்மை (ஸாலிஹாத்) -167 X தீமை (ஸய்யீஅத்) - 167
துன்பம் (முஸீபத்) - 75 X நன்றி (ஷுக்ரு) - 75
இவைகள் மட்டுமல்ல குர்ஆனின் எல்லா வார்த்தைகளுமே நேர்ரெதிரே சமன் செய்யப்பட்டுத்தான் அருளப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அதனால்தான் குர்ஆனுக்கு " பிரிதறியக் கூடிய வேதம்" என்ற பெயரும் உண்டு.
இன்னும் பிரபஞ்சத்தின் எல்லா அம்சங்களுமே நேர் எதிராக மிக துல்லியமாக கணக்கிட்டுதான் நம்மோடு பேசப்படுகிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டாமா ? இவை அனைத்தையுமே ஒன்று கூட விடாமல் தன் திருமறையில் எடுத்தியம்யிருப்பதை...
اَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ اخْتِلَافًا كَثِيْرًا
இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் காண்பார்கள். (அல்குர்ஆன் : 4:82)
ரஹ்மத் ராஜகுமாரன்

பிரபஞ்சத்தின் மொழி கணிதம் 15
(மின்னல்)



மின்னல் எப்படி உருவாகிறது? என்ற கேள்விக்கு பலர் விடையளிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையா? இல்லையா? என்பது குறித்து அறிவியல் சொல்லும் காரணங்களை பார்க்கலாம்.

முதன் முதலாக அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலாளர் பெஞ்சமின் பிராங்கிளின் மின்னல் எப்படி உருவாகிறது? என்பதையும், அதில் மின்சாரம் இருக்கிறது என்பதையும் நிறுவ முயன்றார்.
அதற்காக மழைபெய்யும் போது பட்டம் ஒன்றை செய்து அதனுடன் உலோக கம்பியை இணைந்து பரிசோதனை மேற்கொண்டார். அப்போது, மின்னல் அடிக்கும்போது உலோக கம்பி வழியே அதிர்வை உணர்ந்த அவர், மின்சாரம் இருகிறது என்பதை உறுதி செய்தார். மின்சாரம் பலமாக அவரை பலமாக தாக்கியதா என்பது குறித்து தகவல் இல்லை .

குளிர்ச்சியான மற்றும் வெப்பமான காற்று மேகக்கூட்டங்களில் இருக்கும். இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்கும்போது வெப்பக் காற்று மேலே சென்று இடியை உருவாக்கும் மேகங்களை உருவாக்குகிறது. குளிர்ச்சியான காற்று பனிப்படிகங்களாக மேகத்தில் இருக்கும். பேட்டரியைப்போல் பிளஸ்(+) மற்றும் மைனஸ்(-) முனைகளைப் பெற்றிக்கும் அந்தக் மேகக் கூட்டங்கள், மழைக்காலத்தில் காற்று வேகமாக அடிக்கும்போது ஒன்றோடொன்று உரசிக்கொள்ளும்.
“(உங்களுக்கு) பயத்தையும், ஆதரவையும் தரக்கூடிய மின்னலை அவனே உங்கள் முன் பிரகாசிக்கச் செய்கிறான். (மழையை) சுமந்த பளுவான மேகங்களையும் அவனே உண்டாக்குகிறான்.’’ அல்குர்ஆன் 13:12
மேல் பகுதியில் இருக்கும் நேர்மறை ஆற்றல், கீழ் பகுதியில் இருக்கும் எதிர்மறை முனைக்கு ஆற்றலைக் கடத்தும்போது மின்னல் வெளிப்படுகிறது. இந்த நிகழ்வின்போது உருவாகும் சூடான காற்று பலத்த சத்தத்துடன் இடியை உருவாக்குகிறது.
அப்போது திறந்தவெளியில் இருக்கக்கூடாது. மரங்களுக்கு அடியில் நிற்கக்கூடாது. ஏனென்றால் பச்சை மரங்கள் மின்கடத்தியாக இருப்பதால், மின்சாரம் அதன்வழியே நிலத்தில் இறங்கும்.
மழை பெய்யும்போது நீச்சல் அடித்துக்கொண்டிருந்தால், நீரில் இருந்து வெளியேறிவிட வேண்டும். மழை வருவதற்கு சிறிது நேரம் இருப்பதாக கருதினாலும், மின்னல் முன்கூட்டியே வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.கட்டடங்களுக்குள் இருப்பது பாதுகாப்பானது.
வீட்டில் இருக்கும் மின்சாதனங்களை உடனடியாக ஆஃப் செய்துவிடுவது பாதுகாப்பானது. குறிப்பாக, மொபைல் போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இரும்பு உள்ளிட்ட பொருட்களை இடி இடிக்கும்போது எடுத்துச் செல்ல வேண்டாம்.


மழைக்காக பயன்படுத்தும் குடை கூட ஆபத்தானது. ஆய்வாளர்களின் கூற்றுப்படி, நம் கண்களுக்கு ஒரே ஒருமுறை மட்டும் மின்னல் தெரியலாம். ஆனால், அவை நொடிப்பொழுதில் தொடர்ச்சியாக 25 முறைவரை கூட மின்னும் என கூறுகின்றனர். இதனால் ஏற்படும் இடி மிகவும் பயங்கரமானதாக இருக்கும், கண்ணிமைக்கும் நேரத்தில் அவற்றின் செயல்பாடு முடியும் என எச்சரிக்கின்றனர்.
இவ்வாறு காற்று வழியே மின்னூட்டம் பாயும் பொழுது மின்பொறியாய் (தீப் பொறிகளாக) ஒளி விடுகிறது. ஒளிக் கீற்று போல் ஒளி இழைகளாய் தெரியும் பகுதியில் காற்று மின்மயமாக்கப்படுகிறது. ((Ionised)
மின்னலின் போது சுமார் 300000c வெப்பம் ஏற்படுகிறது.இவ்வெப்பம் சூரியனின் மேல் பகுதியில் உள்ள வெப்பத்தைப் போன்று மூன்று மடங்கு.

நமது காற்று மண்டலத்தில் 78% நைட்ரஜன் வாயு உள்ளது. சுமார் 21% ஆக்ஸிஜன் உள்ளது. மின்னலின் போது ஏற்படும் வெப்பமானது காற்றில் உள்ள நைட்ரஜனில் கடினமான அணுக்களை உடைத்து ஆக்சிஜனுடன் சேர்ந்து நைட்ரஜன் சேர்மங்களான அமோனியா, நைட்ரேட், நைட்ரஸ் ஆக்ஸைடாக மாற்றுகிறது.

இவை உயிர் உள்ள தாவரங்கள், மிருகங்கள், மனிதர்களுக்குத் தேவையான அமினோ அமிலம், புரோட்டின், டி.என்.ஏ. உற்பத்திக்கு மிக அவசியமான ஒன்றாகும்.
இப்படி மின்னலினால் உண்டாகும் இயற்கை உரமான அமோனியா நைட்ரேட்கள் வருடத்திற்கு 10 மில்லியன் மெட்ரிக் டன்னாக உள்ளது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இந்த இயற்கை உரங்கள் மழை நீரில் கலந்து பயிர்கள் தாவரங்களில் சேர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுத்து நமக்கு ஆதரவாக உள்ளது.
“(உங்களுக்கு) பயத்தையும், ஆதரவையும் தரக்கூடிய மின்னலை அவனே உங்கள் முன் பிரகாசிக்கச் செய்கிறான்.
குர்ஆன் (13:12)
மின்னலைப் பற்றி படிக்கும் அறிவியல் ஃபுல்மினாலஜி ஆகும்.
மின்னலால் உண்டாகும் பயம் பேரச்சம் ஆஸ்ராஃபோபியா என்று அழைக்கப்படுகிறது.
இடியினால் உண்டாகும் பயத்திற்கு பரான்டோஃபியா என்பதாகும்.

ரஹ்மத் ராஜகுமாரன்
(பிரபஞ்சத்தின் மொழி கணிதம் இத்துடன் நிறைவு பெறுகிறது)

ஆன்மாக்களின் உலகம் 1



ரூஹ் என்பது "உயிர்" (Life) ஆகும் ."நஃப்ஸ்" என்பது "உயிருள்ளது" அல்லது " உயிரி " (Life Fore) ஆகும் . உயிர் மட்டும் தனியாக இருந்தால் அதை "ரூஹ்" என்போம் . உடலுடன் உயிர் காக்கும் போது அதை " நஃப்ஸ் " என்போம் .

ரூஹ் மட்டும் உடல் இல்லாமல் தனியாக ஆலம் அர்வாஹ் என்ற ஆன்ம உலகில் இருந்தது . உடலும் உயிருமாக இவ்வுலகில் நாம இருக்கிறோம்.
நல்ல உயிர் , கெட்ட உயிர் என்பதெல்லாம் உடலுடன் இருக்கும் போது அது நடந்து கொள்ளக் கூடிய நடைமுறையைப் பொருத்ததாகும் .
அவ்வாறு உயிரியில் ஏற்படும் இன்பம் - துன்பம் , சுகம் - துக்கம் ,வலி - வலியின்மை ஆகியவையெயல்லாம் உடலுக்குள் ஊடுருவி இருக்கும் உயிரின் அனுபவங்களாகும் .
இருப்பினும் உயிருக்கே "நஃப்ஸ்" என்றும் , உயிரினத்திற்கே "ரூஹ்" என்றும் சொல்லப்படுவதுண்டு.இது உரு வழக்கு ஆகும் இப்படி தத்துவஞானிகள் உயிரைப் பற்றிய கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள் .
உங்களுக்கு ரூஹ் எங்கிருந்து வந்ததது ? இறைவனிடமிருந்துதான். குர்ஆன் (32 : 9) இதை புரியும்படி சொல்வதென்றால், சூரியனும், குளத்தில் தெரியும் அதன் பிம்பமும் மாதிரி !
ரூஹ் , ஆன்மா என்பதெல்லாம் மனித மரணத்திற்குப் பிறகு ஏற்படும் நிலை என்று நாம் தவறாக விளங்கியிருக்கிறோம். ஆனால் இறைவன் நம்மை முதலில் படைத்தது ரூஹ் என்ற உடலில்லா ஆன்மா.
அந்த ஆன்மாவாகிய நம்மிடம் இறைவன் கேட்ட உறுதிமொழி


وَ اِذْ اَخَذَ رَبُّكَ مِنْ بَنِىۡۤ اٰدَمَ مِنْ ظُهُوْرِهِمْ ذُرِّيَّتَهُمْ وَ اَشْهَدَهُمْ عَلٰٓى اَنْفُسِهِمْ اَلَسْتُ بِرَبِّكُمْ قَالُوْا بَلٰى ۛ شَهِدْنَا ۛ اَنْ تَقُوْلُوْا يَوْمَ الْقِيٰمَةِ اِنَّا كُنَّا عَنْ هٰذَا غٰفِلِيْنَ ۙ
(நபியே!) உங்களது இறைவன் ஆதமுடைய மக்களை அவர்களுடைய (தந்தைகளின்) முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளாக வெளியாக்கி, அவர்களையே அவர்களுக்கு சாட்சியமாகவும் வைத்து (அவர்களை நோக்கி)
"நான் உங்கள் இறைவனாக இல்லையா?" என்று கேட்டதற்கு,
"ஏன் இல்லை (நீதான் எங்கள் இறைவன்! என்று) நாங்கள் சாட்சியம் கூறுகிறோம்" என்று அவர்கள் கூறியதை (நீங்கள் அவர்களுக்கு) ஞாபகமூட்டுங்கள்.

ஏனென்றால் (இதனை ஒருவரும் எங்களுக்கு ஞாபகமூட்டாததால்) நிச்சயமாக நாங்கள் இதனை (மறந்து) விட்டுப் பராமுகமாகி இருந்தோம்" என்று மறுமை நாளில் சொல்லாமல் இருப்பதற்காகவும்,
(அல்குர்ஆன் : 7:172)
இவ்வாறு உடலற்ற ஆன்மாவாக இருந்து, பின்பு உடலும் ஆன்மாவுமாகிய மனிதர்கள் நபியிடம் கேட்டார்கள் .
وَيَسْـــَٔلُوْنَكَ عَنِ الرُّوْحِ قُلِ الرُّوْحُ مِنْ اَمْرِ رَبِّىْ وَمَاۤ اُوْتِيْتُمْ مِّنَ الْعِلْمِ اِلَّا قَلِيْلًا
(நபியே!) “உம்மிடம் ரூஹை (ஆத்மாவைப்) பற்றி அவர்கள் கேட்கிறார்கள். “ரூஹு” என் இறைவனுடைய கட்டளையிலிருந்தே உண்டானது; இன்னும் ஞானத்திலிருந்து உங்களுக்கு அளிக்கப்பட்டது மிகச் சொற்பமேயன்றி வேறில்லை” எனக் கூறுவீராக. (அல்குர்ஆன் : 17:85)
இம்மையில் பூத குணத்தின் மிகைப்பால் ரூஹு உடலுக்குள் மறைந்து காணப்படுவது போல,மறுமையில் ரூஹானியத்தின் மிகைப்பால் தேகம் ரூஹுக்குள் மறைந்து காணப்படும் என்பது நிதர்சனமான உண்மையாக இருந்தாலும், அதை அவ்வளவு எளிதாக சொல்லி விட முடியாதுதான் என்றாலும், அந்த மறுமை வாழ்வும் ஆன்மாக்களின் பலமும் மனித மரணித்திலிருந்தே ஆரம்பிக்கிறது.

ரஹ்மத் ராஜகுமாரன்

ஆன்மாக்களின் உலகம் 2

(நாளை நடப்பதை ஆன்மாக்கள் நன்கு அறிகின்றன)



" VOICE FROM THE UNIVERSE (அண்ட வெளியில் குரல்கள்) - சுவிடன் நாட்டு ஜிர்கென்சன் என்ற ஆய்வாளர் எழுதிய புத்தகம் ரொம்பவும் சுவராசியமானது .
இறந்தவர்களைப் புதைத்தப்பிறகோ , அவர்கள் மண்ணோடு மண்ணாகி மக்கிய பின்போ அவர்களின் குரல்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா ...? அதெப்படி அவர்களால் பேச முடியும் நாம எப்படி அதைக் கேட்க முடியும் ?
"முடியும் " என்கிறார் ஜிர்கென்சன் .
இந்த ஆய்வு நூலின் விஞ்ஞானி ஜிர்கென்சன் இசை ஆர்வம் உள்ளவர். மனித சஞ்சாரமற்ற காடுகளிலும் மலைப் பிரதேசங்களிலும் பல சப்த ஒலிகளை டேப் ரிக்கார்டு மூலம் பதிவு செய்தார் . அவற்றை பொறுமையாக வீட்டில் போட்டுக் கேட்ட பொழுது சில வித்தியாசமான குரல்கள் ஒலிப்பதைக் கேட்டார் . நிச்சயமாக அது பறவைகளின் குரல்கள்களோ, மிருகங்களின் குரல்களோ அல்ல என்பதையும் மெல்ல மெல்ல புரிந்து கொண்டார் .
மீண்டும் ஏகாந்தமான பல வனாந்திர வெளியில் பறவைகள் இல்லாத இடங்களில் டேப்பை ஓடச் செய்தார். இப்படி நூற்றுக்கணக்கான முறை ஆய்வு செய்தார் .அதில் பல வித்தியாசமான குரல்கள் டேப்பில் பதிவானது.
சில சமயங்களில் ஆராய்ச்சியாளரது இறந்து போன நண்பர்கள் மற்றும் உறவினர் குரல்களும் பதிவாயின . மேலும் முகம் தெரியாத பல மனித குரல்களும் பதிவாயின. மற்ற விஞ்ஞானிகள் இவரின் ஆய்வை பரிசோதனை செய்து ஒத்துக் கொண்டுள்ளனர். ஜிர்கென்சன் தாம் செய்த ஆய்வை நம்மையும் செய்யத் தூண்டுகிறார் . நீங்கள் தயாரா ?
" (நிராகரித்துக் கொண்டிருக்கும்) அவர்களில் எவனுக்கும் மரணம் வந்தாலோ (அவன் தன் இறைவனை நோக்கி) "என் இறைவனே! என்னை (உலகத்திற்கு) திரும்ப அனுப்பிவிடு.
நான் விட்டு வந்த அ(ந்த உலகத்)தில் (இனி) நல்ல காரியங்களையே நான் செய்து கொண்டிருப்பேன்" என்று கூறுவான்.

(எனினும்,) அது ஆகக்கூடிய காரியமன்று. (இத்தகைய சந்தர்ப்பங்களில்) அவன் கூறக்கூடியது வெறும் வார்த்தையே (யன்றி வேறில்லை.) அவர்களுக்கு முன் ஓர் அரண் ஏற்பட்டு விடும். (உயிர் கொடுத்து) எழுப்பப்படும் நாள் வரையில் அதில் தங்கிவிடுவார்கள் ." (அல்குர்ஆன் : 23: 99,100)
நாம் உலகில் ரூஹும் உடலும் இணையப் பெற்று வாழ்வதைப் போன்று, மரணித்தவர்களும் ஆலம் பர்ஜக்கேற்ற (மண்ணறை) முறையில் ரூஹும் , உடலும் இணையப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனினும் அது நம் உடலைப் போன்று அல்ல.
புரியும்படி ஒரு நிகழ்வோடு சொல்றேன்

ஸஃது இப்னு ஜிதாமா (ரலி) , அவ்பு இப்னு மாலிக் (ரலி) இருவரும் நண்பர்கள் இருவரில் யார் முதலில் மரணம் அடைந்தாலும் இருப்பவரின் கனவில் வந்து அங்குள்ள நிலவரம் பற்றி சொல்ல வேண்டும் என்ற முடிவு செய்திருந்தனர்.
ஸஃது (ரலி)முதலில் இறந்து, அவ்பு (ரலி) கனவில் தோன்றி ,
'பல கஷ்டங்களுக்குப் பிறகு எனக்கு மக்ஃபிரத் கிடைத்தது' என்பதை சொல்லும் போது , ஸஃது (ரலி) நினைவில் சொல்வது போல் இருந்ததாம் அவ்பு (ரலி) அவர்களுக்கு .
ஸஃது கழுத்தில் கரு நிற கோடு இருந்ததை அவ்பு விசாரித்தார்கள். அதற்கு ஸஃது (ரலி) அவர்கள் " இன்ன யூதனுக்கு 10 அஷ்ரப் காசுகள் கடன் கொடுக்க வேண்டும். என் வீட்டில் இன்ன இடத்தில் அந்த காசுகள் இருக்கிறது. அதை எடுத்து அந்த யூதனுக்கு கொடுத்து விடவும் .
என் மரணத்திற்குப் பிறகு என் வீட்டில் நடந்த சகல காரியங்களும் எனக்கு தெரியும் ; நான் வளர்த்த பூனை இறந்தது உட்பட எனக்கு எல்லாமே தெரியும் , இன்னும் 6 நாட்களில் என் அன்பு மகள் இறக்கப் போவதையும் என் வீட்டில் தெரிவித்து விடுங்கள் " .
ஸஃது இட்ட கட்டளைகளை அவ்பு நிறைவேற்றினார்கள். பூனை இறப்பும் சரியாக இருந்தது , அதே மாதிரி 6 நாட்களில் அவருடைய மகள் இறப்பும் துள்ளியமாக நடந்தது .
(ஆதாரம் உயூனுல் ஹிகாயத்)

நாளை நடப்பதை ஆன்மாக்கள் நன்கு அறிகின்றன. அதையும் சொல்றேன் .
அண்டவெளியில் மரணித்த ஆத்மாக்களால் சலனத்தை ஏற்படுத்த முடியும் என்பது மட்டும் அல்லாமல், உயிருடன் இருக்கும் நம்முடைய ஆன்மாக்களும் அண்ட வெளியில் சலனத்தை ஏற்படுத்துகிறது. நம்புங்கள் . சொல்றேன் .
திண்ணமாக உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு படையை மதீனாவிலிருந்து நிஹாவந்த் என்னும் இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். ஸாரியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அப்படைக்கு தளபதியாக நியமித்தார்கள்.
(மதீனாவில்) சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ''யா ஸாரியா! அல் ஜபல்!' (ஸாரியாவே! மலையை கவனித்து சண்டையிடுங்கள்)" என சப்தமிட்டார்கள்.
பிறகு படையிலிருந்து ஒரு தூதர் வந்து சொன்னார்.
" அமீருல் முஃமினீன் அவர்களே! எங்கள் எதிரிகளோடு நாங்கள் போர் புரிந்தபோது, அவர்கள் எங்களை விரட்டியடித்தார்கள். அப்போது 'யா சாரியா அல் ஜபல்' என்று சத்தம் கேட்டது. பின்னர் மலையை எங்களுக்கு பின்புறமாக ஆக்கி கொண்டு போர் செய்தோம். அல்லாஹ் அவர்களை விரட்டி விட்டான்."ஹழ்ரத் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) நூல் – பைஹகீ (தலாயிலுந் நுபுவ்வா) – 2655

ரஹ்மத் ராஜகுமாரன் .

ஆன்மாக்களின் உலகம் 3

(கால வெளியிலும் ஆன்மாக்கள் உடலோடு பயணிக்கிறது)



நான் ஓர் உணவகத்தில் உள்ளே நுழைந்து சற்று காலியாக இருந்த இடத்தை நாடி அமர்ந்துகொண்டு எனக்குத் தேவையானவற்றை எடுத்து வர சர்வரிடம் சொல்லிவிட்டு, வாஸ்பேஷன் அருகே சென்று முகம் கழுவி கை அலம்பி வந்து அமர்ந்தேன்.

சர்வர் நான் கேட்ட பலகாரங்களை கொண்டு வந்து வைத்தார். நான் இரண்டு வாய் சாப்பிட்ட போது சாலையில் ஏதோ ஒரு வாகன சத்தம் கேட்டது . திரும்பி பார்த்தேன். அது வேனோ காரோ தெரியவில்லை அதற்குள் மறைந்து விட்டது.

அந்த வாகனத்தில் இருந்து ஒரு பெண் இறங்கி உணவகத்தை நோக்கி வந்தாள்.அந்த பெண் பார்ப்பதற்கு இந்தியாவைச் சேர்ந்தவர் போலவும் காணப்பட்டாள் . மாநிறத்தில் இருந்தாள் கருமையான கூந்தல் அவளை மிக அழகாக காட்டியது.

அவள் நேராக எனக்கு எதிரே வந்து அமர்ந்தாள். அந்த உணவகமே ஏறக்குறைய காலியாக இருக்கின்றபோது, அவள் என் எதிரே வந்து உட்கார்ந்தது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஏனென்றால் எல்லோருமே ஆளில்லாத மேஜையை நாடிச்சென்று அமர்வதுதானே வழக்கம்.

அவள் தனக்கு பலகாரம் வேண்டாம் என்று சர்வரிடம் கூறிவிட்டு, மதிய உணவை கொண்டு வரப் பணித்தாள்.அவள் என்னை பார்த்து தோழமையோடு புன்னகை புரிந்தாள். பிறகு உபசாரமாக இரண்டு மூன்று வார்த்தைகளை பேசிவிட்டு,

"நீங்கள் நடத்தும் வகுப்புகள் எப்படி போகின்றன " என்றார்

எனக்கு ஆச்சரியமாக இருந்தது நான் அவளிடம் நான் யோகா வகுப்புகள் எடுக்கும் ஆசிரியன் என்பதை கூறவே இல்லை. இருந்தாலும், அவள் அதைப்பற்றி விவரங்களை அன்போடு விசாரித்தாள். நானும் அவளது கேள்விகளுக்கு பதில் அளித்தேன்.

எங்கள் பேச்சு இறந்த பின் மனிதர்கள் நிலை, ஆன்மா , பாவம் மற்றும் புண்ணியம் ஆகியவற்றை பற்றி திரும்பியது. சொல்லப்போனால், அவள்தான் அப்படி திசை திருப்பினாள் அவளுடன் பேச பேச எனக்கு எனது கருத்துக்களில் ஒரு தெளிவு பிறப்பதை அறிந்தேன்.

அந்தப் பெண் கேள்விகளைக் கேட்டுவிட்டு, என்னை பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். அவளுக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் நான் விரும்பியதை விட அவள் விரும்பியவாறே அந்த கேள்விக்கான பதில்கள் அமைந்திருப்பதே நான் கவனித்தேன்.

அப்போதுதான் எனக்கு மேலும் ஒரு சில விபரங்கள் தெளிவானது. அவளுக்குத் தெரியாத எதையும் நான் சொல்லவில்லை. எனக்கு தெரிய வேண்டிய விவரங்களைத்தான் அவள் என்னை சொல்ல வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தேன்.

அவள் பார்வை என் கண்களின் வழியாக என் ஆன்மாவில் ஊடுருவியது.மேலும் அந்தப் பெண் கண் இமைப்பது கூட இல்லை எனக்கு லேசாக ஒரு சந்தேகம் ஏற்பட்டது.யார் இவள் ? கேட்டிட வேண்டும் என்று எண்ணினேன். நான் பேசி முடிக்கும் வரையில் அவள் ஒரு கவளம் உணவை கூட சாப்பிட்டதே இல்லை. நான் கடிகாரத்தை பார்த்தேன். அரை மணி நேரத்திற்கு மேலாக ஓடி இருந்தது. ஆகவே எனது பேச்சை அத்துடன் முடித்துக் கொண்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். மேலும் எனக்கு சில சில்லறை சாமான்கள் வாங்க வேண்டியதிருந்தது. ஆகவே அருகிலுள்ள பல்பொருள் அங்காடி நோக்கி சென்றேன்.

அங்கே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. உணவு விடுதியில் நான் பார்த்த அதேப் பெண் அங்கே நின்றிருந்தாள். அவளுடன் ஒரு கை வண்டியும் அதில் பாதி அளவிற்கு மேலாக கடையில் வாங்கப்பட்ட பொருட்களும் இருந்தன.

அதற்குள் அவள் எப்படி அங்கே வர முடியும் நான் கிளம்பும் அறையில் அவள் மதிய உணவில் ஒரு கவளத்தை கூட அவள் சாப்பிடவில்லை, அதற்குள் முழு சாப்பாட்டை அந்த பெண்ணால் எப்படி சாப்பிட முடியுமா ? அதுவே ஆச்சரியம் என்றால் அவள் வந்தவுடன் எவ்வாறு அத்தனை பொருட்களை வாங்கி பின் போட்டு வெளியே கொண்டுவர முடிந்தது ?

எனக்கு ஒன்றும் விளங்காமல் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தேன். அவளும் தொலைவில் நின்றபடியே கையசைத்தாள்.

நான் சாலையை வேகமாக கடந்து அங்காடி வாயிலுக்குச் சென்று அந்தப் பெண் எங்கே என்று பார்த்தேன். அவளைக் காணவில்லை .அங்கு பக்கத்தில் உள்ள தெருவில் ஓடிச்சென்று பார்த்தேன். அவளையும், அந்த கைவண்டியும் காணவில்லை. அத்தனை நீண்ட தெருவை அவள் சில நொடி நேரத்தில் கடந்து இருக்க வாய்ப்பே இல்லை. நிச்சயமாக அவள் வேற்று உலகத்தை சேர்ந்தவள் தான் என்பதை முழுமையாக நம்பினேன்.
(ஆசிரியர் வேணு சீனிவாசன் எழுதிய "அமானுஷ்யம்.. ஆனால் உண்மை !" என்ற நூலிருந்து...)

இச்சம்பவம் வேற்றுகிரக வாசிகள் நம் பூமிக்கு வந்து போவதைப் போல் , பூலோகவாசிகளும் வேற்றுகிரகத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள். சொல்றேன்.

சூஃபியிஸத்தின் தலைவர் ஹளரத் ஜுனைதுல் பாக்தாதி(ரஹ்) அவர்களின் சீடர் ஒருவர் குளிப்பு கடமையாகி குளிப்பதற்காக தஜ்லா நதிக்கு வருகிறார்.அந்நேரம் சுபுஹ் தொழுகைக்கு சற்று முந்தைய நேரம். ஆடைகளை களைந்து ஆற்றின் ஓரத்தில் வைத்து விட்டு நதியில் இறங்கி, ஒரே ஒரு முங்குதான் போட்டார்...
அவ்வளவுதான். அவர் கண்டம் விட்டு கண்டமோ அல்லது இந்த பிரபஞ்சத்தின் வேறு ஏதோ ஒரு கிரகத்தின் நதியிலோ குளித்தவாறு வெளியே வருகிறார்.அங்கு ரொம்ப காலம் அங்குள்ள தன் மனைவியோடும் மக்களோடு மக்களாகவும் வாழ்ந்து வருகிறார்
ஒரு நாள் அங்குள்ள நதியில் யதார்த்தமாக குளிக்கிறார் . அந்த நதியில் ஒரே ஒரு முங்கு போட்டார்.அவ்வளவுதான் மீண்டும் தஜ்லா நதியில் நின்று கொண்டு இருக்கிறார்.
ஆச்சரியம் அதே சுபுஹ் நேரம் இன்னும் சுபுஹ் தொழுகை நடைபெறவில்லை. களைந்து வைத்த துணி கூட அங்கு அதே இடத்தில் அப்படியே இருக்கிறது. துணி உடுத்துக் கொண்டு சுபுஹ் தொழுகையில் கலந்து கொள்கிறார் .
சுபுஹு தொழுகையின் பாங்குக்கும் இகாமத்திற்கும் இடையே உள்ள நேரத்தில் ஒரு மனிதரால் இப்பிரபஞ்சவெளியில் எங்கோ ஓரிடத்தில் பெருவாழ்வு வாழ முடிகிறது .
இதைப்பற்றி தனது ஷைகான ஜுனைதுல் பக்காதி (ரஹ்) அவர்களிடம் கூறிய போது " சில சமயம் ரொம்ப அதிகமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட நினைக்கும் சாதாரண சாதகருக்கு, பல காலம் வணங்கும் பாக்கியத்தை இப்படியும் இறைவன் வழங்குகின்றான் .
நூல் : மள்ஃபூஸாத்தே ஃபகீஹுல் உம்மத்
உங்களுக்குக் கூட ஒரு சமயத்தில் சொற்ப நேரத்தில் பெருவாழ்வு வாழ்ந்ததாக நினைவு இருக்கலாம்.அது கனவு அல்ல ; நிஜம். அது உங்கள் ஆன்மா செய்யும் மாயம் .
ரஹ்மத் ராஜகுமாரன் .

ஆன்மாக்களின் உலகம் 4

(மரித்தவரின் ஆன்மாக்கள் நம் ஆன்மாக்களோடு தொடர்பு கொள்கிறது)
H. V ஹெல்பிரெக்ட் .இவர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் வேலை செய்துவந்த சிறந்த பேராசிரியர். தனக்கேற்பட்ட அற்புதமான அனுபவம் ஒன்றைப்பற்றி தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.
"ஒரு சனிக்கிழமை மாலை. சில பாபிலோனியர்களின் கைவிரல் மோதிரங்களின் பகுதியாகக் கருதப்பட்ட இரு சிறிய இரத்தினக்கற்களின் ரகசியத்தை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தேன். விபரம் கிடைக்கவில்லை. சோர்வடைந்தேன் .

நடு இரவில் படுக்கச் சென்றேன். அப்போது ஒரு கனவு வந்தது. நிப்பூரைச் சேர்ந்த ஓர் உயரமான ஒல்லியான சுமார் 40 வயது உடைய பாதிரியார் என்னை ஒரு கோவிலின் புதையலறைக்குள் வழிநடத்திச் சென்றார். அந்த அறை சிறியதாகவும் அதன் கூறை தாழ்வாகவும் இருந்தது.
இரத்தினத் துண்டுகளும், பலவண்ணக் கற்களின் துண்டுகளும் தரை முழுதும் சிதறிக் கிடந்தன. அதை ஒரு கொத்தாக எடுத்து பேப்பரில் வைத்து என்னிடம் காண்பித்தார்.

" உன் புத்தகத்தில் பக்கம் 22 மற்றும் 26-ல் நீ பிரசுரித்துள்ள இரண்டு இரத்தினக் கற்களின் துண்டுகளும் தனித்தனியானவை அல்ல . அவை மோதிரப் பகுதிகளும் அல்ல. அது இரு வளையங்களின் பகுதி . அந்த இரண்டு வளையங்களும் கடவுளின் சிலையில் காதணியாக அணிவிக்கப்பட்டிருந்தவை. உன்னிடம் உள்ள இரண்டு துண்டுகளும் அவற்றின் பகுதிகள். அவற்றை ஒன்றாக வைத்துப் பார்த்தால் என் வார்த்தைகள் உண்மை என்று உனக்கு புரியும் "
நான் உடனே விழித்தெழுந்தேன். அந்த துண்டுகளை ஆராய்ந்தேன். எனக்கு வியப்பூட்டும் வகையில், அந்த கனவு நிரூபணமாகியது. இறுதியாக பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

நிப்பூர் சென்று, "ஓர் ஒல்லியான... 40 வயது பாதிரியார்.." என்றதும், அந்த வீட்டுக்காரர் ஒரு போட்டோவை எடுத்துக் காட்டினார் . அவரேதான் . அதுவும் அது அவர் வீடுதான். இறந்து 15 வருடங்களாகிறது என்றார்கள் . பாதிரிவுடைய ஆன்மா இரவில் கனவில் என் ஆன்மாவோடு எப்படி தொடர்பு கொண்டது ? என்னுடைய புத்தகத்தை வரி விடாமல் முழுமையாகப் எப்படி படித்திருக்க முடிகிறது ? இதெல்லாம் எப்படி ? "தெரியவில்லை" என்கிறார் பேராசிரியர் ஹெல்பிரெக்ட்.

اَللّٰهُ يَتَوَفَّى الْاَنْفُسَ حِيْنَ مَوْتِهَا وَالَّتِىْ لَمْ تَمُتْ فِىْ مَنَامِهَا فَيُمْسِكُ الَّتِىْ قَضٰى عَلَيْهَا الْمَوْتَ وَ يُرْسِلُ الْاُخْرٰٓى اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ
மனிதர்கள் இறக்கும்பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும்பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர், எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை(த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்க(ளின் உயிர்க)ளை, குறிப்பிடப்பட்ட காலம் வரையில் வாழ அவன் அவர்களிடமே அனுப்பி விடுகின்றான். சிந்திக்கக் கூடிய மக்களுக்கு, நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன.
(அல்குர்ஆன் : 39:42)
அவன் கைப்பற்றிய உயிரை வைத்துக் கொண்டு, திருப்பி அனுப்பும் பேராசிரியர் ஆன்மாவை மரித்த பாதிரியார் ஆன்மா எப்படி இடமறித்து விபரம் சொல்ல முடிகிறது ?

ஆன்மாக்களின் உலகம் 5

(மரணத்திற்கு அப்பால் இறைநேசர்களின் ஆன்மாக்கள்)

"அல்லாஹ்வுடைய அவுலியாக்கள் நிச்சயமாக மரிப்பதில்லை. ஆனால் ஓர் இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்குச் செல்கிறார்கள்" என்ற ஹதீதை, ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் முஹம்மது கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் அர்பயீன் ஹதீது நூலிலும் , இமாம் பக்ருத்தீன் ராஜி (ரஹ்) அவர்கள் தப்ஸீர் கபீர் 3-வது பாகம் 95 ஆவது பக்கத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

உதாரணமாக, பிரபல்யமான வலியுல்லாஹ் அபூஸயீது கர்ராஜ் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்த காலத்தில் ஒரு வாலிபரின் மையத்து பனூஷைபா வாசலில் இருந்தது.

அதை அவர்கள் உற்று நோக்கினார்கள். " அபூஸயீதே ..! இறை நேசர்கள் ஜீவன் உள்ளவர்கள். அவர்கள் ஓர் இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு செல்வதே மரணம் ஆகும் என்பதை தாங்கள் அறியவில்லையா ? என்பதாய் அந்த மையத்து சிரிப்புடன் சொல்லியது.

இந்த நிகழ்ச்சியை இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி (ரஹ்) அவர்கள் ஷரஹுஸ்ஸுதூர் 86-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள்.

முஷாஹிதீன் , முஹக்கிகீன்களுடைய உடல்களும் கோர்வை

குறையாது. குத்ஸியான ரூஹ் எனும் ஆன்மா நிச்சயமாக ஒருபோதும் அழியாது. இது போல் கியாமத் வரை ஹயாத்தும் அழியாது .

இத்தகைய ஹயாத்தும், ரூஹும் உடையவர்கள் கபுரில் (ஆலமுல் பர்ஜகில்) ஜீவனுள்ளவர்களாகவே இருப்பார்கள் அவர்களுடைய தேகம் உலகிலிலிருந்து போலவே இருக்கும்.

உங்களின் மேலான சிந்தனைக்கு :

இது உண்மையான வரலாற்று நிகழ்வு.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

நீங்கள் இங்கே படத்தில் காண்பது ஸையுதுனா ஷைக் முஹம்மத் ஐய்யூப் தாஹிர் குர்தி رحمه الله அவர்களின் திருப்பாதம். தமாஸ்கஸ்ஸில் அவர்களது புனித கபுர் ஷரீஃபில் இருந்து அது வெளியாகி, அந்த அமைப்பிலேயே நல்லடக்கமாகி இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உயிரோடு இருக்கும் போது தமாஸ்கஸ்ஸில் இரண்டு குழுக்களுக்கிடையே வலிமார்கள் குறித்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இரண்டு குழுக்களும் முஹம்மத் ஐய்யூப் தாஹிர் குர்தி رحمه الله அவர்களிடம் சென்றார்கள், இரு குழுக்களும் தங்கள் கருத்துக்களில் எது சரி, எது பிழை என்று கூறும்படி கேட்டார்கள். ஷைகவர்கள், "நாளை வாருங்கள் கூறுகிறேன்" என்றுக்கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவைத்தார்கள்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அடுத்த நாள் அவர்கள் சென்றப்போது ஷைகவர்கள் மரணித்து விட்டதை அறிந்தார்கள். நேராக அவர்களது மண்ணறைக்கு அவர்கள் சென்று, " ஷைகவர்களே, நீங்கள் எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதாகப் பொருந்திக் கொண்டீர்களே" என்றுக் கூறினார்கள்.

இவர்கள் இதை சொன்னவுடனேயே ஷைக் முஹம்மத் ஐய்யூப் தாஹிர் குர்தி رحمه الله அவர்களுடைய திருப்பாதம் அவர்களின் மண்ணறையிலிருந்து வெளியாகியது.

அப்போது யாரோ ஒருவர் இவ்வாறு கூறினார், "நாங்கள் அறிந்தவரை குர்துகளில் அல்லாஹ்வின் வலிமார்கள் இல்லை"

இதை இவர் சொன்னவுடன் அந்த மண்ணறையிலிருந்து ஒரு குரல் ஒலித்தது, "நான் ஒரு குர்தி, அல்லாஹவின் வலியுல்லாஹ். நான் இப்போது என் பாதத்தை என் மண்ணறையிலிருந்து வெளியே எடுத்து வைத்துள்ளேன். இது ஒன்றே நான் ஒரு வலியுல்லாஹ் என்பதற்குத் தக்க சான்றாகும்."

ஆயிரம் ஆயிரம் மக்கள் இந்த அற்புதத்தைக் கண்கூடாகக் கண்டார்கள்.

இப்போது இவர்கள் மரணித்து 800 வருடங்கள் ஆகின்றன. இப்போது வேண்டுமானாலும் தமாஸ்கஸ் சென்று பாருங்கள். அவர்களுடைய பாதம், அவர்களின் மண்ணறையிலிருந்து வெளிப்பட்ட நிலையில் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது. ஸுப்ஹானல்லாஹ்!

مُحَمَّد صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

#நல்லடியார்களின்அடிச்சுவடுகள்

தமிழில்: Abdur Raheem Muhammad Jaufer

நன்றி: Guidance Hub

The true story and picture of Shaykh Muhammad Ayub Tahir Kurdi رحمه الله who is buried in Damascus, with his foot, out of his grave and preserved.

There was a dispute between two groups in Damascus regarding the Awliya, the groups went to Shaykh Tahir al Kurdi رحمه الله to ask which group is right and which group is wrong, the Shaykh told them to come back tomorrow.

When they went back the next day they found that the Shaykh had passed away. They went to the Shaykh's grave and said, "Ya Shaykh you said you would sort out this issue!"

As soon as they said this Shaykh Tahir al Kurdi's رحمه الله foot came out of his grave.

Someone said, "We don’t know if there has ever been a Wali of Allah, from the kurds."

When he said this a voice came from the grave, "I am Kurdi, I am a Wali of Allāh, I have taken my foot out of my grave, this must be enough proof that I am a Wali of Allah."

Thousands of people witnessed this miracle. It has been 800 years since he passed away, if you visit his grave in Damascus today, you can still see his foot is out of his grave and preserved. Sūbhan'Allah!

مُحَمَّد صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

#FootstepsOfTheRighteous

ர.ரா

ஆன்மாக்களின் உலகம் 6

(தன் மனசுடன் போராடி வென்ற மகத்தான ஆன்மாக்கள்)



இஸ்லாமிய வரலாற்றிலே பத்ர் யுத்தம் மிக பிரபலமானதும் பெரிய யுத்தமும் ஆகும். இப்படியான பெரியதோர் யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து திரும்பும் போது, நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் " நாம் சிறிய யுத்தத்தில் இருந்து பெரிய யுத்தம் அளவில் மீண்டிருக்கிறோம் " என்று சொன்னார்கள்.
நபித்தோழர்கள் அதிர்ச்சியுடன் " நாயகமே எத்தனை உயிர் தியாகம். எவ்வளவு பெரிய யுத்தம் இதை முடித்து நாம் திரும்பிக் கொண்டிருக்கிறோம்;அப்படி இருக்க யாரஸூலல்லாஹ்! சிறிய யுத்தம் என்று சொல்கின்றீர்கள்" என கேட்க,

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். " வாளேந்தி போராடுவது பெரிய யுத்தமல்ல; தனது நப்ஸ் என்ற மனோ இச்சையுடன் போராடுவதே பெரிய யுத்தம் " என்று சொன்னார்கள்.
இதிலிருந்து மனோ இச்சையை கொள்வதே பெரிய யுத்தம், அதை செய்பவரே உயர்வான ஷஹீத் என்பது ஹதீஸ் மூலம் எமக்கு தெளிவாகி விட்டது. அவ்லியாக்கள் என்பவர்கள் இறை நேசத்தை பெற்ற நன்மக்கள் அவர்கள் தமது மனோ இச்சையை அழிக்காமல் அவனை நெருங்கி இருக்க முடியாது. அப்படி மனதோடு போராடி அதை வெல்லாதவர் ஒரு இறை நேசராக இருக்க முடியாது. அப்படி இரண்டு யுத்தத்தில் வெற்றி கொண்டவர்களே அல்லாஹ்வின் இறைநேசர்களாகிய வலிமார்கள் என்று கருதப்படும்.
கூண்டில் கிளியிருப்பது போல் மனிதனிலேயே தங்கியுள்ள நப்ஸு எந்த நேரத்தில் எந்த உருவத்தில் தீமை செய்யும் என்பதை அறிந்து கொள்ள முடியாது,

இஸ்லாத்தின் எதிரிகளை வாள்போன்ற ஆயுதத்தினால் வெட்டி விடலாம். ஆனால் நப்ஸ் என்பது வாள் போன்ற ஆயுதத்தினால் வெட்ட முடியாத ஒன்றாகும். ஒரு இஸ்லாத்தின் எதிரியை வெட்டி வீழ்த்துவதை விட நப்ஸை வெட்டி வீழ்த்துவதுதான் மிகவும் சிரமமானது.
நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்: " உனது பகைவர்களில் உனக்கு மிகவும் கொடிய பகைவன் யாரெனில் உனது இரண்டு விலாவுக்கும் இடையிலுள்ள நப்ஸ் ஆகும் " என்று கூறியுள்ளார்கள்.
புத்திசாலிகள் நப்ஸை பசியால்தான் அடங்குவார்கள். அல்லாஹ்வின் பகைவனான இப்லீஸுக்கு பேரிடியாக அமைவது பசிதான். அந்த அடிப்படையில் நபிகள் நாயகம் ஸல்லலாஹூ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், “மனிதரில் குருதி ஓடும் இடமெங்கும் ஷைத்தான் ஓடுகின்றான். அதனால் அவன் ஓட்டத்தை பசியால் கட்டுப்படுத்துங்கள்”.
அப்படி நப்ஸைக் கட்டுப்படுத்தி மிகச் சாதாரணமாக வாழ்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களின் உடலையும் மண் தின்னாமல் பாதுகாக்கிறான் என்பதற்கு சாட்சியாக
வங்கதேசத்தில் ரங்க்பூர் மாவட்டம் கஷ்மார்கா என்ற கிராமத்தைச் சேர்ந்த பாட்டி ஆயிஷா காத்தூன் 1997 ஆம் ஆண்டில் 106 வயதில் இறந்தார்கள் .

6 வருடம் கழித்து தன் 3 மகன்களின் கனவில் தனித்தனியாக தோன்றி , " ஆற்றில் வெள்ளம் வரும் போது நான் இருக்கும் இடத்தில் தண்ணீர் புகுந்து ஓடுகிறது. எனவே என்னை இடம் மாற்று " என்று சொல்ல ,

மகன்கள் தத்தம் கனவில் தாயார் வந்து சொன்னதை சொல்ல , ஊர் ஜமாத்தார்கள் முன்னிலையில் தாயார் அவர்களின் புனித உடலை மேட்டுப்பாங்கான இடத்தில் மாற்றியமைக்கப்பட்டது ஆதாரம் : தினமலர் 4.9. 2003.
எவன் தன் இறைவன் முன் நிற்பதை அஞ்சி மனதையும் இச்சைகளை விட்டு விலக்கிக் கொண்டானோ, நிச்சயமாக அவனுக்குச் சுவர்க்கம்தான் தங்குமிடமாகும்.
(குர்ஆன் : 79: 40, 41)
எனவே இவ்வுலகிற்கு நாம் வரும் போது எப்படி பரிசுத்தமான ரூஹ் ஆக, சாந்தி அடைந்த ஆன்மாவாக எப்படி வந்தோமோ, அதேபோன்று இவ்வுலகில் இருந்து நாம் கண்ணை மூடும் போதும் , சாந்தி அடைந்த ஆத்மாவாக திரும்பி போக அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

ரஹமத் ராஜகுமாரன்

ஆன்மாக்களின் உலகம் 7

(மண்ணறை ஆன்மாக்களின் சகவாசங்கள்)
மண்ணறை வாசிகளுக்கும் புவியில் இருப்பவருக்கும் மூச்சு விடுவதில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. புவியில் இருப்பவர்கள் உந்தியின் கீழிருந்து மூச்செழும்பி மூளைக்கேறி வெளிப்படுவது இயற்கை. ஆனால் மண்ணறையில் உள்ளவர்களுக்கு இயற்கைக்கு மாற்றமாக மூச்சு மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும். கர்ப்பப்பைக்குள் இருக்கும் சிசுக்களும் சொர்க்கவாசிகளுக்கும் இவ்வாறே சுவாசம் நடை பெறும். என்பதாக மிர்அத்துல் முஷாஹிதீனில் சொல்லப்பட்டுள்ளது.
ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் வபாத்தான பிறகு அவர்களே தங்களது வீட்டிற்கு வந்தார்கள். தங்களது வெள்ளாட்டியைக் கண்டு அவளது சுக செய்திகளையும் நிலைமைகளையும் விசாரித்தார்கள். எல்லா விஷயங்களையும் அவள் எடுத்துக் கூறியதை அவர்கள் கேட்டு தெரிந்து சென்றார்கள் என்பதாக ஸஆதத்துத் தாரைன் 402 பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது .
"நபி (ஸல்) அவர்கள் மரணித்த தங்களது நபித்தோழர்களின் அர்வாஹுகள் சகிதம் எல்லா உலகங்களையும் சுயேச்சையாகச் சுற்றி வருவதை அவுலியாக்கள் கண்கூடாகக் கண்டிருக்கின்றார்கள் " என்பதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் பல ஆதாரத்துடன் கூறுவதை , தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் 10 ,பக்கம் 99-ல் குறிப்பிடுகிறார்கள்.
اَوَمَنْ كَانَ مَيْتًا فَاَحْيَيْنٰهُ وَجَعَلْنَا لَهٗ نُوْرًا يَّمْشِىْ بِهٖ فِى النَّاسِ كَمَنْ مَّثَلُهٗ فِى الظُّلُمٰتِ لَـيْسَ بِخَارِجٍ مِّنْهَا كَذٰلِكَ زُيِّنَ لِلْكٰفِرِيْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ
மரணம் அடைந்த ஒருவனை நாம் உயிர்ப்பித்து எழுப்பினோம் - இன்னும் அவனுக்கு ஓர் ஒளியையும் கொடுத்தோம். அதைக்கொண்டு அவன் மனிதர்களிடையே நடமாடுகிறான். மற்றொருவன் இருள்களில் சிக்கிக்கிடக்கிறான்; அதைவிட்டு அவன் வெளியேறவே முடியாது - இவ்விருவரும் சமமாவாரா? இவ்வாறு காஃபிர்களுக்கு அவர்கள் செய்யக்கூடிய (பாவச்)செயல்கள் அழகாக்கப்பட்டுள்ளன. (அல்குர்ஆன் : 6:122)
இறந்தவர் ஆன்மாவுக்கு வழிகாட்ட 15 கிலோமீட்டர் நூல் கட்டிய உறவினர்கள்! 31,Aug 2017
மரணத்திற்கு பிறகு என்ன என்பது யாரும் அறியாத ஒன்றுதான் ஆனால், இறந்தவரின் ஆன்மா தங்களின் வீடுகளுக்கு வந்து போகவதாக சிலர் நம்புகிறார்கள்.. அப்படிப்பட்ட நம்பிக்கையில், இறந்தவரின் ஆன்மாவை சாந்தியடைய வைக்கும் விநோதமான பழக்கம் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் நடந்துவருகிறது.
கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியை அடுத்த மேட்டுக்கடை மோட்டூரை சேர்ந்த மாதப்பன் என்பவர் 10 நாட்களுக்கு முன் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் இறந்துவிட்டார். இவருக்கான இறுதிச்சடங்குகளை செய்துவிட்ட நிலையில், மேலும் ஒரு விநோத சடங்கை மேற்கொண்டனர் உறவினர்கள். அவர் உயிர்விட்ட இடத்தில் சிறப்பு பூஜைகள் செய்து, அங்கிருந்து நூல்கட்டி வீடு வரை கொண்டுவரும் இந்த விநோத சடங்கு மூலம் வீடு தெரியாமல் சுற்றும் ஆன்மாவுக்கு வீட்டுக்கான வழியை காட்டி அதனை சாந்தியடையச் செய்வதாக இவர்கள் கூறுகிறார்கள்.
இறந்த இடத்தில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் வரை நூல் மூலம் ஆன்மாவுக்கு வழிகாட்டிய இந்த சம்பவத்தின் மூலம் இறந்தவர் உயிர் வீடு வந்து சேர்வதாகவும் தம்மோடு அவர்கள் இருந்து விட்டு போவதாகவும் நம்புகிறார்கள் அந்த கிராம மக்கள்.

ஆன்மாக்களின் உலகம் 8

(மறைந்து வாழும் மண்ணறை ஆன்மாக்கள்)
இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷஃறானீ (ரலி) அவர்கள் ஸியாரத்துச் செய்வதற்காக ஸெய்யித் உமர் இபுனு பாரிது (ரலி) அவர்களுடைய கபுர் ஷரீபுக்கு சென்றபோது, அங்கு அவர்களை காணாதபடியால் திரும்பிவிட்டார்கள்.

பிறகு உமர் இபுனு பாரிலு (ரலி) அவர்கள் இமாம் ஷஃறானீ (ரஹ்) இடம் சென்று தேவையை முன்னிட்டு வெளியே சென்று இருந்ததாகத் தெரிவித்து மன்னிப்பு கோரியதாக இமாம் ஷஃறானீ (ரலி) அவர்களே தங்களுடைய" லதாயிபுல் மினன்'' 1வது பாகம் 144 - வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள்.
ஸெய்யிது ஷைகு அப்பாஸ் முர்ஸீ (ரலி) அவர்களை சனிக்கிழமை சூரிய உதயத்திற்கு முன்னும்,
ஸெய்யிது இபுராஹிமுல் அஃரஜ் (ரலி) அவர்களை வெள்ளிக்கிழமை மக்ரிபுக்கு பின்பும்,
ஸெய்யிது யாக்கூத்துர் அர்ஷீ (ரலி) அவர்களை செவ்வாய்க்கிழமை லுஹருக்குப் பின்பும் அவர்களுடைய கபுருக்குச் சென்று ஸியாரத்துச் செய்யும்படியும்,
அவர்கள் எல்லோரும் குறிப்பிட்ட அந்த நேரங்களில்தான்
கபுரில் ஆஜராகி இருப்பார்கள் என்றும், இவ்வுண்மையே அகக் கண்ணைத் உடையவர்களை தவிர மற்றெவரும் அறியமாட்டார்கள்.
ஆகையால் கபுர்களில் அவர்கள் இருக்கவே செய்கின்றார்கள் என்ற எண்ணத்துடன் கஷ்பில்லாதவர்கள் செய்ய வேண்டும் என்றும் ஸெய்யிது அலி பதவி (ரலி) அவர்கள் உபதேசித்து இருப்பதாக மேற்சொன்ன அதே "லதாயிபுல் மினன்'' அதே பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.
ஹஜரத் கிலுரு (அலை) அவர்கள் இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களது வஃளு மஜ்லிஸ் க்குத் தினந்தோறும் காலை வேளையில் ஆஜராகி, ஷரீஅத்துடைய இல்முகளைக் கற்று வந்தார்கள்.
இமாம் அவர்கள் வபாத்தான பிறகு அந்த மஜ்லிஸ் நடைபெறவில்லை. கிலுறு (அலை) அவர்கள் இறைவனது உத்தரவு பெற்று, ஹயாத்தில் நடந்தது போலவே மவுத்துக்குப் பின்பும் இமாமுல் அஃலம் (ரஹ்) அவர்களது கபுரு ஷரீபுக்கு ஒவ்வொரு காலையிலும் சென்று, ஷரீஅத்துடைய
இல்முகளைக் கேட்டு வந்ததாக..
இமாம் இபுனு ஜவ்ஸீ (ரஹ்) அவர்களைக் கொண்டு 'பதாயிஉ ' எனும் பிக்ஹுக் கிதாபில் எழுதியுள்ளதாக ஷைகு ஹஸனுல் அதவீ மிஸ்ரி (ரஹ்) அவர்கள் மஷாரிக்குல் அன்வார் 69 -வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

ஆன்மாக்களின் உலகம் 9

கெளதுல் அஃலத்தின் மறைந்தும் மறையாத உடல்



Sayyid Abdul Rahman Naqeeb with his son Sayyid Safa'Uddin Father of Sayyid Hassan Mansur al-Gaylani

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பிஸ்மில்லாஹிரஹ்மானிர்ரஹீம்
ஷையுதுனா ஷேக் அப்துல் காதிர் அல்-ஜிலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உடல், அவர்கள் மறைந்து 900 ஆண்டுகளுக்குப் பிறகு புதியதாக அப்படியே இருந்தது.
கெளதுல் அஃலமின் அருள்மிகுந்த கரங்களை முத்தமிட்ட கடைசி நபர் ஸையித் ஹாஷிம் அப்துல் காதிர் மன்சூர் அல்-ஜீலானி அவர்களின் அருள்மிகுந்த பாட்டனார் ஆவார்கள்.
இவர்களின் பெயர் ஸையித் ஹஸன் பின் மன்சூர் பின் ஸையித் ஸஃபாவுத்தீன் பின் ஸையித் அப்துல் ரஹ்மான் நகீப் ரஹிமஹுல்லாஹ்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

1920 ஆம் ஆண்டு சையிதுனா ஷேக் அப்துல் காதிர் அல் ஜிலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மக்காமுக்கு வெள்ளம் வந்து புகுந்தது.
மகாம் ஆற்றின் அருகில் சுமார் 20 கிலோமீட்டர் தொலைவிலேயே உள்ளது.
அந்த ஆண்டு ஆற்றில் இருந்து வலுவான நீர் வெளியேறி பாக்தாத் நகருக்குள் வெள்ளம் புகுந்தது.
ஸையிதுனா ஔதுல் அஃலம் ஷேக் அப்துல் காதிர் அல்-ஜிலானி ரழியல்லாஹு அன்ஹுவின் மகாம் அந்த நேரத்தில் ஸையித் ஷேக் அப்துல் ரஹ்மான் நகிப் அல் அஷ்ரஃப் ரஹிமஹுல்லாஹ் இவர்களின் பொறுப்பில் இருந்தது.
அவர்கள் முல்லா காஜி, முல்லா மஹ்தி ஆகிய இரண்டு சேவகர்களுக்கு வருமாறு உத்தரவிட்டார்கள்.
"கேட்டைத் திறந்து உள்ளே செல்லுங்கள், ஸைதுனா ஷேக் அப்துல் காதிர் அல்-ஜிலானியின் கல்லறைக்குள் தண்ணீர் இருக்கிறதா என்று பாருங்கள்"
என்று கூறினார்கள்.
முல்லாக்கள் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.
“மண்ணை அகற்றி உள்ளே தண்ணீர் புகுந்துள்ளதா என்று பாருங்கள்.”
என்று கூறியவுடன் இரண்டு சேவகர்களும் பயந்து ஓடிவிட்டார்கள்.
அப்போது அவருடைய பேரர் ஸையித் ஹசன் மன்சூர் அல்-ஸபாவுத்தின் ரஹிமஹுல்லாஹ்வுக்கு 14 வயது.
“பாட்டனாரே, இது என் வேலை, எங்கள் வீடு நான் இறங்குவேன்”
என்றார்கள்.
ஷேக் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.
அது மிகவும் இருட்டாக இருந்தது,
வெளிச்சம் இல்லை,
அவர் ஒரு தடுப்பைத் தொட்டார்,
அதை அகற்றினர்,
அவர்கள் அந்தத் தடுப்பைக் கையால் அகற்றி, கீழே கையை வைத்தபோது, ஸையிதுனா அல்-கௌதுல் அஃலத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட உடலைக் கண்டார்கள்.
அப்துல் காதிர் ஜிலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உடல் சில மணிநேரங்களுக்கு முன்பு அங்கு வைக்கப்பட்டது போல் அப்படி புதியதாக இருந்தது.
ஸையிதுனா ஷேக் அப்துல் காதிர் அல்-ஜிலானியின் உடலை ஸையித் ஹஸன் அவர்கள் தொட்டபோது அவர்களின் இடது கையையே தொட்டார்கள்,
அது அவருடையது என்று அவர்கள் அறிந்தார்கள்,
அவர்கள் அந்த முபாரக்கான கரத்தை கஃபனிலிருந்து வெளியே எடுத்து முத்தமிட்டார்கள்.
பின்னர் அவர்கள் கஃபனுக்குள் தண்ணீர் இல்லாததைக் கண்டார்கள்•••
அதனால் அவர்கள் தடுப்பை மீண்டும் வைத்துவிட்டு மேலே திரும்பத் தொடங்கினர்கள்•••
அப்போது கல்லறையின் இடது பக்கத்திலிருந்து ஒரு வெளிச்சம் வருவதை அவர்கள் கவனித்தார்கள்•••
அத்துடனே அவர்கள் மயங்கி விழுந்துவிட்டார்கள்•••
குடும்பத்தினர் அவரை மருத்துவரிடம் [ஹக்கீம்] அழைத்துச் சென்றனர்•••
3 மணி நேரத்திற்குப் பிறகு ஸையித் ஹசன் எழுந்தார்.
தந்தையும் பாட்டனாரும் அவருக்கு என்ன நடந்தது என்று யோசித்துக்கொண்டிருந்தனர்.
ஹக்கீம் மருத்துவர் அவரை பரிசோதித்தார்•••
அவரது இடது கண்ணைப் பார்த்தபோது, ஸையித் ஹசனின் இடது கண் ஒளி இழந்து இருப்பதையும் இனி அவரால் பார்க்க முடியாது என்பதையும் அவதானித்தார்•••
பாட்டனாரும் தந்தையும்
“என்ன நடந்தது”
என்று கேட்டார்கள்.
ஸையித் ஹஸன் கூறும்போது,
"நான் கீழே இறங்கிய போது பாக்கியம் பெற்ற உடலைப் பார்த்தேன்•••
பின்னர் நான் அந்த கையை முத்தமிட்டேன்•••
நான் திரும்பி மேலே செல்லும் போது ஒரு விளக்கைக் கண்டேன்•••
ஸையிதுனா ஷேக் அப்துல் காதிர் அல்-ஜிலானி வந்தார்கள்•••
என்னிடம்•••
"மகனே, என் அறையில்
என்ன தேடுகிறாய்?"
என்று என்னிடம் கேட்டார்கள்
“நீ தண்ணீரைத் தேடுகிறாயா? நான் சுல்தான் அல்-அவ்லியா என்று உனக்குத் தெரியாதா? உலகம் முழுவதும்•••
“மதத் யா கௌவத் அல்-அஃலம் தஸ்தகீர்!”

என்று கூறி என் உதவியை தேடுகிறது.
என் அனுமதியின்றி தண்ணீர் உள்ளே வர முடியாது!"
மேலும் கூறினார்கள்•••
"நீங்கள் என் குடும்பம் என்பதால்
உங்கள் கண்ணில் நான் ஒரு
சிறிய ஜுர்மானா (தண்டனை) கொடுத்தேன்,
அது வேறு யாராக இருந்தாலும் அவருக்கான தண்டனை மிகக்கடுமையாக இருந்திருக்கும்!"
-ஷேக் ஸையித் ஹாஷிமுதீன் அல்-ஜீலானி கத்தஸல்லாஹு சிர்ரஹுல் அஸீஸ்
தமிழில்: Abdur Raheem Muhammad Jaufer
ஸையித் அப்துர்ரஹ்மான் நகீப் அவர்கள் அவர்களின் மகனார் ஸையித் ஷபாவுத்தீனோடு
இன்ஷா அல்லாஹ் இதையும் ஒரு பதிவில் கொண்டு வாருங்கள்•••!
(இதுவரை நான் அறியாத செய்தி .நண்பர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பதிந்துள்ளேன்.)
ர.ரா

ஆன்மாக்களின் உலகம் 8

(மறைந்து வாழும் மண்ணறை ஆன்மாக்கள்)
இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷஃறானீ (ரலி) அவர்கள் ஸியாரத்துச் செய்வதற்காக ஸெய்யித் உமர் இபுனு பாரிலு (ரலி) அவர்களுடைய கபுர் ஷரீபுக்கு சென்றபோது, அங்கு அவர்களை காணாதபடியால் திரும்பிவிட்டார்கள்.
பிறகு உமர் இபுனு பாரிலு (ரலி) அவர்கள் இமாம் ஷஃறானீ (ரஹ்) இடம் சென்று தேவையை முன்னிட்டு வெளியே சென்று இருந்ததாகத் தெரிவித்து மன்னிப்பு கோரியதாக இமாம் ஷஃறானீ (ரலி) அவர்களே தங்களுடைய" லதாயிபுல் மினன்'' 1வது பாகம் 144 - வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள்.
ஸெய்யிது ஷைகு அப்பாஸ் முர்ஸீ (ரலி) அவர்களை சனிக்கிழமை சூரிய உதயத்திற்கு முன்னும்,
ஸெய்யிது இபுராஹிமுல் அஃரஜ் (ரலி) அவர்களை வெள்ளிக்கிழமை மக்ரிபுக்கு பின்பும்,
ஸெய்யிது யாக்கூத்துர் அர்ஷீ (ரலி) அவர்களை செவ்வாய்க்கிழமை லுஹருக்குப் பின்பும் அவர்களுடைய கபுருக்குச் சென்று ஸியாரத்துச் செய்யும்படியும்,
அவர்கள் எல்லோரும் குறிப்பிட்ட அந்த நேரங்களில்தான்
கபுரில் ஆஜராகி இருப்பார்கள் என்றும், இவ்வுண்மையே அகக் கண்ணைத் உடையவர்களை தவிர மற்றெவரும் அறியமாட்டார்கள்.
ஆகையால் கபுர்களில் அவர்கள் இருக்கவே செய்கின்றார்கள் என்ற எண்ணத்துடன் கஷ்பில்லாதவர்கள் செய்ய வேண்டும் என்றும் ஸெய்யிது அலி பதவி (ரலி) அவர்கள் உபதேசித்து இருப்பதாக மேற்சொன்ன அதே "லதாயிபுல் மினன்'' அதே பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.
ஹஜரத் கிலுரு (அலை) அவர்கள் இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களது வஃளு மஜ்லிஸ் க்குத் தினந்தோறும் காலை வேளையில் ஆஜராகி, ஷரீஅத்துடைய இல்முகளைக் கற்று வந்தார்கள்.
இமாம் அவர்கள் வபாத்தான பிறகு அந்த மஜ்லிஸ் நடைபெறவில்லை. கிலுறு (அலை) அவர்கள் இறைவனது உத்தரவு பெற்று, ஹயாத்தில் நடந்தது போலவே மவுத்துக்குப் பின்பும் இமாமுல் அஃலம் (ரஹ்) அவர்களது கபுரு ஷரீபுக்கு ஒவ்வொரு காலையிலும் சென்று, ஷரீஅத்துடைய
இல்முகளைக் கேட்டு வந்ததாக..
இமாம் இபுனு ஜவ்ஸீ (ரஹ்) அவர்களைக் கொண்டு 'பதாயிஉ ' எனும் பிக்ஹுக் கிதாபில் எழுதியுள்ளதாக ஷைகு ஹஸனுல் அதவீ மிஸ்ரி (ரஹ்) அவர்கள் மஷாரிக்குல் அன்வார் 69 -வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆன்மாக்களின் உலகம் 11

(கெட்ட ஆவிகளின் தொடர்பு)
" நீங்கள் விழிப்போடு தனியாக இருக்கும்போது, என்றைக்காவது எங்கேயாவது யாரேனும் அல்லது ஏதேனும் உங்களைத் தொடுவது போலவோ உங்கள் அறையில் உங்களுடன் இருப்பது போலவோ, அருகில் நடமாடுவது போலவோ உங்களிடம் மட்டும் யாரோ முனுங்குவது போலவோ உணர்ந்திருக்கிறீர்களா? "
இப்படி ஒரு கேள்வியை லண்டனிலுள்ள பரவலான மனோதத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் இயக்கமான SPR - (society for Psychical Research) 1882_லேயே இந்தக் கேள்வியை 17,000 பேருக்கு அனுப்பி ஒரு சர்வே எடுத்தது. அதற்கு 15,316 உண்டு என்று பல ஆதாரங்களுடன் பதில் வந்தது. இதில் கணிசமானோர் பெண்கள் .
ஸ்ரீ அன்னை,பக்தர்களால் அன்புடன் 'மதர்' என்றும் 'அன்னை' என்றும் அழைக்கப்படுபவர் ஸ்ரீ அன்னை. பிரான்ஸில் பிறந்த இவர், இந்தியாவையே தனது வாழ்விடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பக்தர்களின்

ஆன்ம முன்னேற்றத்துக்காக உழைத்தவர். அன்னை தனது இளவயதில் ஆவிகளுடன் பல அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

ஒரு முறை அன்னை ஜப்பானில் தங்கியிருந்த சமயம். திடீரென கொடிய நோயால் பாதிக்கப்பெற்றார் அவர். மிகக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டுவிட்டது. மருத்துவர் வந்தார். பல மருந்து, மாத்திரைகளைத் தந்தார். பலனில்லை. நோய் குணமாகவில்லை.
அன்று இரவு அவருக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. ஒரு கரிய பெண் உருவம் ஒன்று, தலையில்லாத முண்டமாய் அன்னை அருகே வந்தது. அவர் மேல் அமர்ந்து அவரை மூச்சு விட முடியாமல் அமுக்கியது. அன்னை கொஞ்சமும் அஞ்சாமல் தனது ஆன்ம சக்திகளை ஒன்று திரட்டினார். அந்த தீய சக்தியுடன் போராடி அதனை விரட்டி அடித்தார் என்பதாக அவர்களின் வரலாற்றில் அறிய முடிகிறது.
"ஆன்மீக சிகிச்சை "என்று சொல்லக் கூடிய தல்சுமாத் என்னும் அஸ்மா வேலையில் ரூஹானியத்தைப் பற்றி நிறைய சொல்லப்படுகிறது .இந்த ரூஹானியத் கெட்டவர்களின் ஆத்மாக்களினால் உண்டாகிறது . உடல் அழிந்தாலும் , ஆத்மா அழியாதல்லவா ? அந்த ஆத்மா பூமியில் வாழ்ந்த காலத்தில் தான் செய்த கெட்ட வினையின் காரணமாக அதற்கேற்ற கெட்ட உருவத்தை எடுத்துக் கொண்டு கெட்ட ஆத்மாவாகவே வாழும். இந்த கெட்ட ஆத்மாக்கள் மனிதர்களின் வாழ்வில் குறுக்கிட்டு தன் கெட்ட வினையை செய்து அவர்களை நிம்மதி இழக்கச் செய்யும் .

கடவுளாகிய இயேசு கிறிஸ்த்துவை பிசாசு 40 நாள் சோதித்ததாக பைபிள் கூறுகிறது. (மத்தேயு-4:1) இயேசு கிறிஸ்து பேயோட்டிய சம்பவத்தையும் பைபிளில் காணலாம். (மத்தேயு-12:24)
இதுகளைப் பற்றி பரஞ்ஜோதி மஹான் என்னும் பெரியார் " பூதலோகம் " என்ற கிதாபு எழுதி உள்ளார் . "பூதலோகம் " என்றதோர் உலகம் உண்டு .நம் பூமிக்குச் சிறிது அப்பால் உள்ளது. இந்த லோகத்தில் இறந்தவர்களின் என்றுமே அழிவே இல்லாத ஆத்மாக்கள் சுமார் ஒன்னரை பனை உயரத்திற்கு அதாவது 80 அடியில் இருந்து 90 அடி உயரத்திற்குள் உலாவுவார்கள் .
இது மனித சரீரங்கள் ஆகி வெகுகாலத்திற்குப் பின், அறிவின் அபிவிருத்திக்கிடையிலும், ஆசையின் பற்றுதலுக்குப் பின்னும் ஏற்பட்டது. மனித சரீரம் எடுத்து இறந்த பின்னர், கொடிய குணத்தின் சூக்கும சரீரம் இந்த பூதலோகத்தில் தங்குகிறது.
இவைகளுக்கு பேய், பிசாசு , முனி , சாத்தான் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது .இவைகளில் படிப்படியாய் தாழ்வு, உயர்வு உண்டு.
இவைகளின் கூட்டத்திற்கு தலைவர்கள் உண்டு. தலைவர்கள் சொற்படி கூட்டத்தினர் காரியங்களை முடிப்பர் .

மனித சரீரத்தில் இருக்கும்போது கொடிய நயவஞ்சக துரோகிகளாயிருத்தவர்களும் , அநேக பொருள்களை அநியாயமாக சம்பாதித்து அவைகளை அனுபவிக்காமல் புதைத்து மறைத்து வைத்திருந்தவர்களும் , தம் மனமார சரீரத்தில் , மனம் கேட்டப் படி இச்சையிருந்தும் , அதை அனுபவியாமல் இறந்தவர்களும் , தற்கொலை செய்து கொண்டவர்களும். அநேக பேருக்கு மன ஹிம்சை செய்தவர்களும் , வன்னெஞ்சத்தவர்களும், ஒரு வஸ்துவின் பேரில் அழுத்தமான மாறாத இச்சை வைத்திருக்கும் சிறு மனதுடையவர்களும் ,
பெரும் படிப்பாளிகளாகி அதில் நயவஞ்சகத்தவர்களும் , மக்களை ஏமாற்றி தின்பவர்களும் , உறுதியிலே நிலைத்து, அவ்வுறுதிக்கு மேல் உறுதியடையாமல் மாறிக் கொள்ளும் சலனப்புத்தியுடையவர்களும் . ராஜ விசுவாசத்தில் பேதழித்த போர் வீரர்களும் , அசந்தர்ப்பமாய் வெட்டுப்பட்டு அபாயமாய் இறந்தவர்களும் , பேத குண சச்சரவு உள்ள பெண்களுமாகிய இவர்களே பேயாகவும் , பிசாசுகளாகின்றனர்

பிசாசு என்பது சரீரம் உள்ளபோது செய்த சேட்டைகளை தன் அரூபா ரூப வாயிலாக சிறிது காலம் செய்து முடிப்பதேயாகும் .
இவைகளின் சரீரம் ஊதா , மயில் துத்தம் போன்ற நிறமுடையது. இதிலும் கொஞ்சம் நல்லவர்கள் சிறிது வெள்ளை நிறமாக இருப்பார்கள் .
இவர்களுடைய உடம்பில் கால் தெரிய வராது. பூமிக்குச் சுமார் 1 அடி முதல் 4 அடி உயரத்திற்கு மேல் உலாவுவார்கள் .
இவர்கள் உடையோடு இருப்பதாக தெரிந்தாலும் இவர்களுக்கு உடை கிடையாது . இவர்கள் தோன்றினால் மூன்று நிமிஷங்களிலிருந்து கால் மணிக்கு மேல் நிலைக்க மாட்டர்கள் .
நல்லடியார்கள் , கண்கள் இமையாமல் விழித்த பார்வையுடையவர்கள் , பக்தர்கள் , திட துணிவுள்ளவர்கள் , சக்கரங்கள் உள்ள ஓடும் வாகனங்களில் செல்பவர்கள் ... இப்படிப்பட்டவர்கள் முன்பு இவர்கள் பயந்து தோற்றமளிக்க மாட்டார்கள் . ஆனால் மற்றவர்களை பயப்படுத்துவார்கள்.
பூ , சாம்பிராணி , புகை , மாமிசத்தின் சுவைகள் , மற்றும் பதார்த்தங்களின் சுவைகள் , பெண்கள் மீது மோகம், முதலியவைகளில் இவைகளுக்குப் பிரியம் அதிகம்.

இவர்கள் எல்லா இடங்களிலும் உலாவுவார்கள் .இவர்களுடைய நேரம் ,நடு இரவிலிருந்து விடிவெள்ளி தெரியும் வரையிலும் , சூரியன் அஸ்தமனமாகி ஒன்னரை நாழிகை வரையிலும் , நடுப்பகலிலிருந்து இரண்டரை மணி வரைக்கும் இவர்கள் தோன்றி பயமுறுத்துவார்கள் .
இந்த ரூஹானியத்களையும் வைத்து சிலர் காரியங்களை செய்து முடிப்பர். இவைகளிடம் கொஞ்சம் ஏமாந்தால் அவர்களையும் கொன்று தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வார்கள் .
பிசாசு பயத்தில் அகப்பட்டவர்களின் கதி பலவாறு இருக்கின்றது. அதைச் சொன்னால் விரியும். (பேய் , பிசாசுகளின் குணங்களான மீதியை பின்னூட்டத்தில் சொல்றேன்)
பெரும் ஆசாபாசத்தில் இறந்தவர்களாக இருந்தால் , சரீரத்தை விட்டு ஒரு கெஜத்திற்கு மேல் ஊதா பளிங்கு நிறமாக இதுகளைப் பார்க்கலாம்.
பார்க்க விரும்புவோர் சிறிது தொலைவில் இருந்து இமையாதபடி கூர்ந்து கவனித்தால் தெரியவரும் . அவைகளின் சரீரத்தைக் கொண்டு போகும் பெட்டி ,தேர் இவைகள் கூடவே சமீபத்தில் வருவதைக் காணலாம்.

புதைக்கும் போதும் அல்லது சுடும் போதும் விலகி நிற்கும்.
பின் மரணித்த இடத்தில் 40 நாட்கள் வரை இருக்கும் . ஆகையால் அவ்விடத்தில் விளக்கு இருப்பது நல்லது .
நல்ல ஆத்மாக்கள் அவ்விடத்தில் 3 நாளைக்கு மேல் இருக்காது.
மிக நல்ல ஆத்மாக்கள் அக்ஷணமே விலகி சூக்கும யோகம் போய் விடும்.
ஆதார நூல் : பரஞ்ஜோதி மஹான் எழுதிய " பூதலோகம் "

திடனாக முஸ்லிம்களின் ஆன்மாக்கள் பூமியிலுள்ள " பர்ஸக் " என்னுமிடத்தில் இருக்கின்றன .அவைகள் எங்கே செல்ல விரும்புகின்றனவோ அங்கே செல்கின்றன. இவ்வாறே ஈமான் கொள்ளாத ஆன்மாக்கள் 'ஸிஜ்ஜீன் ' என்னுமிடத்தில் முடக்கப்பட்டுள்ளன.
- அல்லாமா இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் எழுதிய கிதாபுஸ் ஸுஹ்த்
ஒருவர் பேய் பிடித்தவர்களுக்கு ஓதிப் பார்க்குமுன் முதலில் தம் உடலை அது தாக்கி விடா வண்ணம் தற்காத்துக்கொள்ள வேண்டும் இதற்கு "உடலை கட்டுதல் "என்று பெயர்
" ஹதம்து பில்லாஹி அலிய்யில் அளீம் வபிஹக்கி ஹாத்திமி சுலைமான் இப்னு தாவூத் அலைஹிஸ்ஸலாம் " என்ற இஸ்மை மூன்று தடவை ஓதி ஒருவர் தம் நெஞ்சில் ஊதி கொள்வதுடன், இதனை ஓதி ஊதி ஒருவர் தன் உடலை முதலில் கட்டி கொள்ளாமல் பேய் பிசாசு பிடித்தவர்களுக்கு ஒருபோதும் ஓதிப் பார்க்கக்கூடாது .
இதனை ஓதி ஊதிக்கொள்ளும் ஒருவருக்கு எந்த ஷைத்தானாலும் யாதொரு தீங்கும் செய்துவிட இயலாது இந்த இஸ்மு பாதுகாக்கும்.
ஒருவர் தனியே இரவிலோ இருட்டிலோ செல்லும் போது இதனை ஓதி நெஞ்சில் ஊதிக்கொண்டு சென்றால் வழியில் ஏதேனும் கண்டு திடுக்குற்று விட்ட போதிலும் அவருக்கு அதனால் யாதொரு தீங்கும் ஏற்படாது .இது அனுபவ உண்மையாகும்.
(மௌலவி முஹம்மது கௌது பாக்கவி அவர்களால் தொகுக்கப்பட்ட மறை வழங்கும் மாமருந்து புத்தகத்தில் இருந்து...)

கராமத் 01



ரசூல்மார்கள், நபிமார்களுக்கு வல்ல அல்லாஹ் “முஃஜிஸத்” என்ற அற்புதத்தைக் கொடுத்தான். அதைக் கொண்டு அவர்கள் “ரிஸாலத், நுபுவ்வத்” என்பவற்றை நிலைநிறுத்தினார்கள்.
அதேபோல் வலிமார்களுக்கு இறைவன் “கராமத்” என்ற அற்புதத்தைக் கொடுத்தான். அதைக் கொண்டு அவர்கள் “விலாயத்” என்பதை உலகில் நிறுவினார்கள். அந்த அடிப்படையில் நபிமார்கள்,

ரசூல்மார்களிலிருந்து அற்புதம் வெளியாகும் போது அதை “முஃஜிஸத்” என்றும் வலிமார்களிலிருந்து வெளியாகும் போது அதை “கராமத்” என்று அழைக்கப்படுகிறது.
இரண்டின் மூலமாக வெளியாகும் செயல்கள் ஒன்றுதான். அதற்கு பெயர் அற்புதம். ஆயினும் நபிமார்கள், வலிமார்கள் என்று பிரித்துக் காட்டுவதற்காக முஃஜிஸத், கறாமத் என்று சொல்லப்பட்டுள்ளது.
முஃஜிஸத் பொறுத்த வரை எந்த நபியும் சுயமாக எந்த அற்புதத்தையும் செய்ய விரும்பவில்லை.அதே சமயம் தன்னால் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்று எந்த ஒரு நபியும் வாதிடவுமில்லை. மக்கள் அவர்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளை வரும் போது அவ்வப்போது செய்து காண்பித்தார்கள்.

وَمَا كَانَ لِرَسُوْلٍ اَنْ يَّاْتِىَ بِاٰيَةٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ لِكُلِّ اَجَلٍ كِتَابٌ وَلَقَدْ اَرْسَلْنَا رُسُلًا مِّنْ قَبْلِكَ وَ جَعَلْنَا لَهُمْ اَزْوَاجًا وَّذُرِّيَّةً
(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னரும், நாம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; அவர்களுக்கும் மனைவியரையும், சந்ததிகளையும் நாம் ஏற்படுத்தியிருந்தோம்; மேலும், எந்தத் தூதரும் அல்லாஹ்வின் அனுமதியில்லாமல் எந்த அத்தாட்சியையும் கொண்டுவந்ததில்லை; ஒவ்வொரு தவணைக்கும் ஒரு (பதிவு) ஏடு உள்ளது. (குர்ஆன் : 13:38)

முதலில் முஃஜிஸத் பற்றி பார்ப்போம். இந்த முஃஜிஸத் என்னும் அற்புதங்களை நபிகளிடம் மக்கள்தான் கேட்டார்கள்
اِذْ قَالَ الْحَـوَارِيُّوْنَ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ هَلْ يَسْتَطِيْعُ رَبُّكَ اَنْ يُّنَزِّلَ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَآءِ قَالَ اتَّقُوا اللّٰهَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ
“மர்யமுடைய மகன் ஈஸாவே! உங்கள் இறைவன் வானத்திலிருந்து எங்களுக்காக உணவு மரவையை (ஆகாரத் தட்டை) இறக்கி வைக்க முடியுமா?” என்று ஹவாரிய்யூன் (சீடர்)கள் கேட்டபோது அவர், “நீங்கள் முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்” என்று கூறினார். (குர்ஆன் : 5:112)

قَالُوْا نُرِيْدُ اَنْ نَّاْكُلَ مِنْهَا وَتَطْمَٮِٕنَّ قُلُوْبُنَا وَنَـعْلَمَ اَنْ قَدْ صَدَقْتَـنَا وَنَكُوْنَ عَلَيْهَا مِنَ الشّٰهِدِيْنَ
அதற்கவர்கள், “நாங்கள் அதிலிருந்து புசித்து எங்கள் இதயங்கள் அமைதி பெறவும், நிச்சயமாக நீங்கள் எங்களுக்கு உண்மையையே கூறினீர்கள் என்பதை அறிந்து கொள்ளவும், இன்னும் நாங்கள் அதைப்பற்றி சாட்சி கூறக் கூடியவர்களாகவும் இருக்க விரும்புகின்றோம்” என்று கூறினார்கள். (குர்ஆன் : 5:113)

நபி மூஸா(அலை) அவர்களிடம் உணவை கேட்க, இறைவன் வானத்திலிருந்து மன்னு சல்வாவை இறக்கி வைத்ததாக..
يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ قَدْ اَنْجَيْنٰكُمْ مِّنْ عَدُوِّكُمْ وَوٰعَدْنٰكُمْ جَانِبَ الطُّوْرِ الْاَيْمَنَ وَنَزَّلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى
இஸ்ராயீலின் சந்ததிகளே! நிச்சயமாக நாம் உங்களை உங்களுடைய எதிரிகளிடமிருந்து காப்பாற்றி "தூர்" என்னும் மலையின் வலது பாக(ம் வந்தால் உங்களுக்குத் தவ்றாத்)த்தை(த் தருவதாக) வாக்களித்து (உணவு கிடைக்காத பாலைவனத்தில்) உங்களுக்கு "மன்னு சல்வா"வையும் (வானத்திலிருந்து) இறக்கி வைத்தோம். (அல்குர்ஆன் : 20:80)


அபுஜஹில் தலைமையில் இக் கூட்டம் " மினா" என்ற இடத்தில்
நபி (ஸல்) அவர்களை சந்தித்து . "இன்று முழு பௌர்ணமி நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்றால், இந்த முழு நிலவை இரண்டாக பிளக்க வேண்டும்.
நபி (ஸல்) அவர்கள் தங்கள் ஆள்காட்டி விரலினால் சந்திரனை இரண்டாகப் பிளக்கச் செய்தார்கள். இதற்கு சாட்சியாக நீங்கள் இருங்கள் என்று நபித்தோழர்களான அனஸ் இப்னு மாலிக் (ரலி), அப்துல்லாஹ் இப்னு மசூது (ரலி), அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) ஆகியோர்களைப் பார்த்து சொன்னார்கள்
சந்திரன் இரண்டாக பிளந்தது.பின் நபி (ஸல்) அவர்கள் அதே ஆள்காட்டி விரலாலேயே பிளந்த சந்திரனையும் சேர்த்தும் வைத்தார்கள். இது பற்றி குர்ஆனில் அல்லாஹ் ...

اِقْتَـرَبَتِ السَّاعَةُ وَانْشَقَّ الْقَمَرُ
மறுமை நெருங்கிவிட்டது. (அதற்கு அத்தாட்சியாக) சந்திரனும் பிளந்து விட்டது. (குர்ஆன் : 54:1)
وَاِنْ يَّرَوْا اٰيَةً يُّعْرِضُوْا وَيَقُوْلُوْا سِحْرٌ مُّسْتَمِرٌّ
எனினும், அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும் (அதனைப்) புறக்கணித்து "இது சகஜமான சூனியந்தான்" என்று கூறுகின்றனர். (குர்ஆன் : 54:2)

முஃஜிஸத் என்னும் அற்புதங்களை மக்கள் நபிமார்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளை வரும் போது அவ்வப்போது செய்து காண்பித்தார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

கராமத் 2



இறந்தவைகளை உயிர்பிக்க அவுலியாக்களால் முடியுமா ?
"ஹயாத்திலும், வபாத்திற்குப்பாலும் அவுலியாக்கள் கராமத்துச் செய்ய சக்தி பெற்று இருக்கின்றார்களா ? மவுத்தாகிப் போனவைகளை அவர்களால் ஹயாத்தாக்க முடியுமா ? "என்று இமாம் ஷைகு முஹம்மது கலீலீ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்டது.
அதற்கு " அவர்கள் கராமத்து செய்ய அவுலியாக்கள் சக்தி பெற்றிருக்கிறார்கள். மவுத்தாகிப் போனவைகளை ஹயாத்தாக்கவும் அவர்களால் முடியும் " என்று அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இதன் விபரம் பதாவாகலீலீ 1 -வது பாகம் 79 -வது பக்கத்தில் காணப்படுகிறது.

ஹஜ்ரத் தக்கலை மீர் முஹம்மது அப்பா அவர்கள் காலத்தில் திருவனந்தபுரத்தை ஆண்டு வந்த முத்துச்சாமி தம்பிரான் பீர் அப்பா அவர்கள் சகவாசத்தில் சிறிது காலம் இருந்து பெரிய ஞானி மகானாகிவிட்டர் . தன் சற்குரு அப்பா அவர்களை அரச குடும்பத்தினர் பெரிதும் கண்ணியப்படுத்தி மரியாதையோடு உபசரிப்பதை பெரிதும் விரும்பினார்.
அந்தச் சந்தர்ப்பத்தில் அரண்மனயில் அடுத்த வாரத்தில் இளவரசராக பட்டம் சூட்டுவதற்கு நியமிக்கப்பட்ட அரச குமாரனுக்கு திடீரென நோய் உண்டாயிற்று . ராஜ வைத்தியம் செய்தும் பலனில்லாமல் இளவரசன் உயிர் துறந்தான் .
அரச அவையும் சமஸ்தானம் துக்கத்தில் ஆழ்ந்தன. முத்துச்சாமி தம்பிரானோ " "என் சற்குரு அப்பா அவர்கள் அருகில் இருந்திருந்தால் , என் மகன் நோயில் இருந்து காப்பாற்றபட்டிருக்கலாம் " என்று புலம்ப ஆரம்பித்து விட்டார் .

தகனக் கிரியைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தச் சமயத்தில் பீர் முஹம்மது அப்பா அவர்கள் அரண்மனைக்குள் திடும் பிரவேசமாக நுழைந்தார்கள். அரச குடும்பத்தாரின் பரிதாப நிலையைக் கண்டு மனமிரங்கினார்கள் .
"முத்துச்சாமி தம்பிரானே , ஞானியான உமக்கு விசனம் வேண்டாம்" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள் .
பின்பு இளவரசன் பிணமாகக் கிடந்த மாடத்திற்குள்ளே சென்று எல்லோரையும் வெளியே போகச் செய்து , கதவை அடைத்துக் கொண்டு, பிணத்துடன் தனிமையாக இருந்தார்கள் . சற்று நேரத்திற்குள் அப்பா அவர்கள் சரீரம் முழுவதும் வியர்த்து வடிந்தவர்தளாய் , இறந்து போன இளவரசனை உயிர் பெற்றெழச் செய்து , தன்னுடன் ஒன்றாக அழைத்து வந்து , அரசனது கையில் ஒப்புவித்து ,"இனி நீர் எம்மைப் பார்ப்பது அரிது " என்று கூறி மறைந்தும் விட்டார்கள் .
அரசர் தம்பிரான் , அப்பா அவர்களைக் கண்டு கொள்வதற்கு எவ்வளவோ பிரயாசை எடுத்துத் தேடியும் அப்பா அவர்கள் கிடைக்கவே இல்லை.
அதன் பின் சற்றேறக்குறைய நூறு வருடங்களுக்குப் பிறகு அப்பா அவர்கள் வந்து சேர்ந்தார்கள் .அப்பா அவர்கள் முந்நூறு வருட காலம், ஜீவித்திருந்ததாய் சரித்திரம் கூறுகின்றது.
ஆதாரம் :- இவ் வரலாற்றை உரையுடன் அப்பா அவர்கள் எழுதிய "ஞானமணிமாலை " யில் ஜீவி சரிதைப் பகுதியில் காணலாம்.
ஒரு நாள் பாக்தாத் நகரில் கடைத்தெரு வழியாக கௌதுல் அஃளம் (ரலி) அவர்கள் சென்று கொண்டிருந்தபோது, ஒரு கிறிஸ்தவரும் ஒரு முஸ்லிமும் தர்க்கம் செய்து கொண்டிருப்பதை கண்டு அவ்விடம் இன்று கவனித்தார்கள்.
கிறிஸ்தவர் நபி ஈஸா (அலை) அவர்களது முஃஜிஸாத்துக்கள் பலவற்றை கூறி, அவர்களே மேலானவர்கள் என்று கூறினார்.

முஸ்லிம், நபி முஹம்மது (ஸல்) அவர்களது முஃஜிஸாத்துக்கள் பலவற்றை கூறி அவர்களே மிகவும் மேலானவர்கள் என்று கூறினார்.
கடைசியாக அந்த கிறிஸ்தவர் எங்கள் ஈஸா மரித்தவர்கள் உயிர்ப்பித்திருக்கிறார்கள். உங்கள் நபி அவ்விதம் செய்திருக்கிறார்களா ? என்று வினவினார்.
அதற்கு பதில் சொல்ல தெரியாமல் அந்த முஸ்லிம் சிறிது தயங்கினார். உடனே தான் ஜெயித்து விட்டதாக அந்த கிறிஸ்தவர் ஆரவாரம் செய்யலானார்.
இவருடைய விவாதங்களை கவனித்துக் கொண்டிருந்த கௌதுல் ஆஃளம் (ரலி) அவர்கள் முன் வந்து ,அந்தக் கிறிஸ்தவரை நோக்கி, " நீர் கூறிய அத்தனை விஷயங்களும் உண்மைதான். அவற்றை நாங்களும் ஒப்புக்கொள்ளவே செய்கின்றோம். நான் ஒரு முஸ்லிம். முஹம்மது நபி (ஸல்) அவர்களது உம்மத்துக்களில் நானும் ஒருவன். இறந்துபோன மையத்து எதையாவது நீ காண்பி அதை உயிர்பெறச் செய்கிறேன்" என்றார் .
அந்த கிறிஸ்தவர் தமது முன்னோர்களை அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஒரு மையவாடிக்கு அழைத்துச் சென்று,
"பல்லாண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட ஒரு புராதான புதைகுழியை காண்பித்து,
" இதில் அடக்கம் செய்யப்பட்டு இருப்பவர் ஒரு பாடகர்.இவர் உயிர் பெற்று எழுந்து என்னுடன் பேசுவாராகில், நான் உங்களது மார்க்கத்தை தழுவுகிறேன் . இல்லாவிடில் நீங்கள் எனது மார்க்கத்தை தழுவவேண்டும் சம்மதம்தானா ?" என்பதை சபதம் கூறினார்
"அப்படியே சம்மதம் "என்பதாக ஹஜரத் கௌதுல் ஆஃளம் உடன்பட்டு, "உங்கள் நபி மரித்தோரை எவ்வாறு உயிர்ப்பித்தார்கள் ? என்று விளங்கினார்கள்.
" அல்லாஹ்வுடைய உத்தரவு கொண்டு எழுந்திரு என்பார்கள். உடனே எழுந்திருக்கும் " என்று அவர் விடையளித்தார்.
" அப்படியா ? இப்போது நான், எனது உத்தரவு கொண்டு எழுந்திருக்க செய்கிறேன் பார்" என்று கூறி, "எனது உத்தரவு கொண்டு எழுந்திரு" (கும்பி இதுனீ) என்று மொழிந்தார்கள்.
அந்த உடனே மடிந்து மண்ணோடு மண்ணாக கிடந்த அந்தப் பாடகர் வாத்தியத்தை இசைத்தவாறு பாடிக்கொண்டே குழியிலிருந்து வெளியே வந்தார்.
அந்த இந்த சங்கீத வித்துவான் கிறிஸ்தவரை நோக்கி, திருக்கலிமாவை கூறி இஸ்லாத்தை தழுவ இன்னும் தாமதம் ஏன் ? என்று வினவினார் .அந்த கிறிஸ்தவர் பேராச்சரியமுற்றவராய் அக்கணமே கலிமா மொழிந்து முஸ்லிம் ஆகிவிட்டார்.
சரித்திர பூர்வமான இவ்வரலாற்றை தப்ரீஜுல் காத்திர் 16-வது பக்கத்திலும் , மனாகிபு கௌதிய்யா 66 -வது பக்கத்திலும் பார்வையிடலாம்.

கராமத் 3


(ஓங்கி அடித்தால் ...)
ஒருவன் ஹஜ்ரத் செய்யிதுனா அலி (ரலி) அவர்களை நிந்தித்து அவதூறாகப் பேசுவதையே வழக்கமாகவும், பழக்கமாகவும் கொண்டிருந்தான்.
அவன் ஓரிரவு நித்திரையில் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் அவனது கனவில் தோன்றி, அவனுடைய முகத்தில் ஓங்கி அறைந்தார்கள்.
அவன் பயந்து திடுக்கிட்டு விழித்துப் பார்க்கும் போது , தன்னுடைய ஸூரத் (கோலம்) மாற்றப்பட்டிருப்பதைக் கண்டு கை சேதப்பட்டான் " என்பதாக கிதாபுர் ரூஹ் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது .
காரீ ஒருவர் மதரஸாவில் குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கிறார். அந்நேரம் 'மந்திக் ' என்னும் தத்துவ யதார்த்த சாஸ்திரத்தை கற்ற ஒருவன் அந்தப் பக்கமாக போய்க் கொண்டிருக்கிறான்.
அப்போது காரீ, (குல் - அர- அய்த்தும் - இன் அஸ்பஹமாஉக்கும்..)

قُلْ اَرَءَيْتُمْ اِنْ اَصْبَحَ مَآؤُكُمْ غَوْرًا فَمَنْ يَّاْتِيْكُمْ بِمَآءٍ مَّعِيْنٍ
" உங்களின் (குடி) தண்ணீர் பூமியினுள் (உறிஞ்சப்பட்டுப்) போய்விட்டால், அப்பொழுது ஓடும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார்? என்பதை கவனித்தீர்களா? (அல்குர்ஆன் : 67:30) என்ற திருவசனத்தை ஓதிக் கொண்டிருப்பதை அவன் காதில் கேட்டான்.
உடனே அந்தத் தத்துவ யதார்த்த சாஸ்திரி , " ஏன்...கடப்பாறை, மண்வெட்டி கொண்டு பூமியைத் தோண்டி தண்ணீரை நான் வெளியே கொண்டு வருவேனே !" என்று நக்கலாக சொன்னான்.
அன்றிரவு சாஸ்திரி கனவொன்று காணுகிறான் .அதில் ஒரு பெரியார் தோன்றி, "நீ தண்ணீர் கொண்டு வருவதிருக்கட்டும். முதல்ல உனது கண்ணொளியைக் கொண்டு வா பார்ப்போம்" என்று கூறி அவனது முகத்தில் ஓங்கி அறைந்தார்.

உடனே அவன் திடுக்கிட்டுப் பதறி விழித்தெழுந்து அமருகிறான். உண்மையிலேயே தனது கண்ணொளி மறைந்து கபோதியாகி விட்டதை உணர்ந்து கைசேதப்பட்டான்.
ஆதாரம் : மஸ்னவீ ஷரீப் 2-வது பாகத்திலும் , தப்ஸீர் ஜாஹிதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(கராமத்தை கிண்டல் செய்யபவர்கள் ஓங்கி அறைப்படுவதை கவனத்தில் கொள்ளவும்)

கராமத் 4

(கஃபா இறைநேசர்களை தவாபு செய்கிறது !)



ஹள்ரத் அபூயஸீதுல் புஸ்த்தாமீ (ரஹ்) அவர்கள் வழியில் ஷைகைத் தேடினவர்களாய், ஹஜ்ஜு உம்றாவுக்குப் புறப்பட்டார்கள். இறுதியில் ஒரு குத்பையடைந்தார்கள்.
"நீர் செல்வதெங்கே? பிராயணத்திற்காக வைத்திருப்பதென்ன? என குத்பு அவர்கள் வினவியதற்கு, அபூயஸீதுல் புஸ்த்தாமீ(ரஹ்) அவர்கள் "நான் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டுச் செல்கிறேன். பிரயாணத்திற்கு 200 திர்ஹங்கள் வைத்துள்ளேன்" என விடையளித்தார்கள்.
அப்படியானால், திர்ஹமை எனக்குக் காணிக்கையாக வைத்து என்னை தவாபு செய்யும். ஹஜ்ஜும், உம்றாவும் உமக்கு நிறைவேறிவிடும். ஸபா,மர்வாவில் ஸயீ செய்வதும் நிறைவேறிவிடும். ஆண்டவன் மீது சத்தியமாக, அவன் கஃபாவை விட எனக்குச் சங்கையளித்துள்ளான்.
கஃபா வணக்கத்திற்குரிய வீடு. எனது உள்ளமையோ அவனது அகமியத்தின் இல்லம்.கஃபாவும் அவனுடைய தஜல்லியாத்தின் தோற்றந்தான்; ஆனால், இன்ஸான் காமிலின் மீது உண்டாகும் தஜல்லியாத்து கஃபாவில் உண்டாவதில்லை.

நீர் என்னைத் தரிசித்தது இறைவனைக் கண்டது போலாம். உண்மை கஃபாவை நீர் தவாபு செய்துவிட்டீர். நீர் எனக்குச் செய்த ஊழியம் இறைவனைப் புகழ்ந்து அவனுக்கு வழிபட்டதாகும்.
உஷார்! ஆண்டவனை விட்டும் நான் வேறானவனல்லன். ஆண்டவனுடைய நூர் உம்மீது உண்டாவதாக! கண்ணைத் திறந்து, என்னை நோக்கிப் பாரும்! கஃபாவை என்னுடைய வீடு என்று ஆண்டவன் ஒரு முறை தான் சொன்னான். "என் அடியானே!என்று என்னை எழுபது விடுத்தம் கூப்பிட்டுள்ளான்.
அபாயஸீதே! உமக்குக் கஃபா கிடைத்தது. ஆண்டவனிடத்தில் உமக்கு நூர் பிராகசமும், சங்கையும், மகத்துவமும் உண்டாகிவிட்டது" என்பதாக அந்த குத்பு கூறினார்கள்.
இவ்விபரத்தை மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் மஸ்னவி-ஷரீபு. 2 ஆவது பாகத்தில், பீர்-முரீது ஹிகாயத்தில் கூறியுள்ளார்கள்.

ஹள்ரத் உமர் (ரலி) அவர்கள் கஃபாவை நோக்கி "சந்தேகமின்றி, இறைவன் உனக்குச் சிறப்பைக் கொடுத்துள்ளான். ஆனால் இறையிடத்தில் முஃமின் உன்னை விட அதிகச் சிறப்பை உடையவன்" என்று கூறினார்கள் என்பதாக, மிஃப்தாஹுல் உலூம்-ரஹு மஸ்னவீ மௌலானா ரூமி, 7 வது பாகம்,142 வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒரு நாள்,உமர் (ரலி) அவர்கள் கஃபாவை நோக்கி, "உனக்குப் பெருமையும் சங்கையும் உண்டு, அல்லாஹ்விடத்தில் முஃமின் உன்னைவிட அதிக சங்கை உடையவன்" என்று கூறினார்கள் என்பதாக இபுனுஉமர் (ரலி) அவர்களைக் கொண்டு திர்மதி ஷரீபில் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.
"கியாமத்து நாளில் கஃபத்துல்லாஹ், என்னுடைய கபுருக்கு வந்து 'அஸ்ஸலாமு அலைக்க' என்று ஸலாம் சொல்லும். "வஅலைக்கஸ்ஸலாம்' என்று பதில் கூறி, "பைத்துல்லாஹ்வே, எனக்குப் பிறகு என்னுடைய உம்மத்து உன்னளவில் வந்து எவ்வாறு நடந்து கொண்டார்கள்?" என்று கேட்பேன்.
அவ்வமயம் அது சொல்லும்; "என்னிடத்தில் வந்தவர்களுக்கு நான் போதுமானவன். அவர்களுக்காக நான் மன்றாடுவேன். என்னிடம் வராதவர்களுக்கு தாங்கள் போதுமானவர்கள். அவர்களுக்காகத் தாங்கள் மன்றாடுவீர்கள்"என்பதாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருள் செய்திருப்பதை ஜாபிர் (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்வதாக,

இஸ்பஹானீ (ரஹ்) கிதாபுத்தர்கீபில் அறிவித்துள்ளதாக, அல்லாமா, காஜீ, உபைதுல்லாஹ் ஸாஹிபு மத்றாஸீ (ரஹ்)"துஹ்பதுஸ் ஸலாயிரீனில்" வரைந்துள்ளார்கள்.
(குல்லுகுத்பின்-யத்தூபு-பில்-பைத்தி-ஸப்ஆவ-அனல்-பைத்து-தாயிபுன்-பி-கியாமீ)
"ஒவ்வொரு குத்புமார்களும் கஃபாவிலுள்ள இல்லத்தை ஏழு முறை தவாபு செய்வார்கள். நானோ, அந்தக் கஃபாவின் இல்லமாகிறது என்னுடைய கூடாரத்தைச் சுற்றி தவாபு செய்கிறது என்று செய்யிதுனாகுத்புல்-அக்த்தாபு முஹிய்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் தங்களது முபாரக்கான,"துப்-பி ஹானீ" பைத்தில் கூறியுள்ளார்கள்.
ஆகவே,மேலே குறிப்பிட்டுள்ள அத்தாட்சிகளிலிருந்து இன்ஸான்-காமில் கஃபத்துல்லாஹ்வை விட மேலாம்பரத்தி லுள்ளவர். எனவே, அத்தகைய தகுதி வாய்ந்த அவுலியாக்களை கஃபத்துல்லாஹ் தேடிச் சென்று தரிசிக்கிறது என்பதில் வியப்பில்லை அல்லவா?
அன்பியா,அவுலியாக்களுக்கு ஆண்டவன் பக்கமிருந்து எல்லாவிதமான தத்துவங்களும் உண்டாயிருக்கின்றன அவர்கள் உயிரோடு இருந்து வந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கிருந்த திரேக பலமும், பார்வையின் கூர்மையும், கேள்வியின் வலிமையும், ஆன்மசக்தியும் மரணத்திற்கு அப்பால் மேலும் அதிகப்பட்டு வலுவடைகின்றன.

ஹயாத்தில், சரீரம் என்ற கூண்டில் அடைப்பட்டுக் கிடந்த ஆன்மாக்கள்,வபாத்திற்குப் பிறகு விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைகின்றன. அப்போது அவர்கள் ஈருலகையும் கைக்கடுகு போலப் பார்க்கிறார்கள். நாடிய இடங்களுக்கு நொடிப் பொழுதில் செல்கிறார்கள்.
அவர்கள் ஜீவனோடிருந்த காலங்களில் எங்ஙனம் மனிதர்களுடைய நாட்ட தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்து வந்தார்களோ. அங்ஙனமே, மரணத்திற்குப் பின்பும் செய்யக்கூடிய ஆற்றலை ஆண்டவன் அவர்களுக்களித்துள்ளான்.

அவர்கள் எங்கிருந்த போதிலும் சரி, ஆபத்துக் காலத்தில் அவர்களது திருநாமத்தை விளித்துக் கூப்பிட்டவர்களுக்கு உடனே கைகொடுத்துக் காப்பாற்றி இரட்சிக்கும் தத்துவத்தையும் ஆண்டவன் அவர்களுக்குக் கொடுத்துள்ளான்.
"அவுலியாக்களுக்கு ஆண்டவன் பக்கமிருந்து குத்ரத்து (சக்தி) உடையகரம் உண்டாயிருக்கின்றது. எதிர் நோக்கிப் பாய்ந்து வரும் அம்பையும் கூட வேறு வழியில் திருப்பி அகற்றக் கூடிய வல்லமையுடையவர்கள் அவர்கள்" என்று மஸ்னவீ-ஷரீபு முழங்குகின்றது.
"நான் அஸ்தகிரியிலும், எனது முரீது உதயகிரியிலும் இருந்த போதிலும் சரியே, அவனை ஓநாய் கடிக்க வந்தாலும் எனக்குத் தெரியும். உடனே அதிலிருந்தும் அவனைக் காப்பாற்றுவேன். அத்தகைய கரமும் ஆண்டவனால் எனக்கு அளிக்கப்பெற்றதேயாகும்" என்று தாஜுல் அவுலியா, ஷைகு முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் அருளியுள்ளார்கள்.

பூலோக ஜனத் தொகையில் ஐந்திலொரு பாகத்தினராக, கோடானு கோடி முஸ்லிம்களில், ஆண்களும், பெண்களும்,அவ்விருபாலரும், தத்தமக்கு ஆபத்து, இடர்கள் சம்பவிக்கும் சந்தர்ப்பங்களிலும், ஆனந்த சமயங்களிலும், இந்த அப்துல் காதிர் முஹிய்யித்தீன் ஜீலானி (ரலி) அவர்களது திருநாமத்தைத் தாராளமாக உச்சரிப்பதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கலாம்.
கடல் போல விரிவான அவர்களது அற்புத காரணங்கள், கறாமத்துகள், மனாக்கிபு கௌதிய்யா, பஹ்ஜத்துல் அஸ்றார், தப்ரீஜுல்காத்திர் முதலிய கிரந்தங்களில் நிறைந்துள்ளன.
"கௌதுல் அஃளம் (ரலி) அவர்களது அற்புத காரணங்கள் ஏராளமாக ஏடுகளையும் கிரந்தங்களையும் நிரப்பிப் பொங்கி வழிகின்றன" (மலஅத் முதல்வனத்தன், குத்பன் முஅல்ல பதன்....) என்று மாதிஹுர் ரஸூல், ஸதக்கத்துல்லாஹ் அப்பா (ரஹ்) அவர்கள், 'யாகுத்பா மாலையில்', சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார்கள்.
- ஆதார நூல் : ஹிதாயதுல் அனாம் இலாஜியாரதில் அவுவியாஇல் கிராம்

ரஹ்மத் ராஜகுமாரன்

கராமத் 5

(மீண்டும் உயிர்த்தெழுதல்)



மரத்தவளை (wood frog) என்பது ஒரு தவளை இனமாகும். இது வட அமெரிக்காவின், ஆப்பலேச்சிய மலைத்தொடரின் வனப்பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன.
கடந்த நூற்றாண்டு உயிரிரலாளர்களின் கவனத்தை அது மிகவும் ஈர்த்ததது. காரணம் அளவுக்கு அதிகமான குளிரைத் தாங்கி மரணத்தை வெல்லும்.அதாவது மரணித்து பின் உயிர்த்தெழும் இந்தத் தவளைகளின் ஆற்றல்தான் அந்த உயிரியல் அறிஞர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குக் காரணமாக அமைந்தது.

வட அமெரிக்காவில் குளிர்காலத்தில் குளிர் கடுமையாக இருக்கும் வெப்ப நிலை உறைநிலைக்குச் சென்றுவிடும் இந்த குளிரிலிருந்த மரத்தவளைகள் தங்களுடைய ரத்தம் உறைவதையும், திசுக்கள் சுருங்குவதையும் தாங்கிக் கொள்ளக்கூடிய தகவமைப்பைப் பெற்றிருக்கின்றன. கடும் குளிரைத் தாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு அவற்றின் திசுக்கள் செயலாற்றுகின்றன.
குளிர்காலம் தொடங்கும்போது, தவளையின் கல்லீரலில் இருக்கக்கூடிய கிளைக்கோஜன், மிகுதியான அளவில் குளுக்கோசாக மாற்றப்படுகிறது. இந்தக் குளுக்கோசுடன் தவளையின் திசுக்களில் உள்ள யூரியாவும் சேர்ந்து கிரையோபுரொட்டக்டன்ஸ என்ற பொருளாக மாறிவிடுகிறது.
இந்தக் கிரையோபுரொட்டக்டன்ஸ் என்ற பொருள் அதன் செல்கள் குளிரால் சுருங்கிடாதவண்ணம் பாதுகாப்பு அளிக்கிறது.

குளிர் காலத்தில் மரத்தவளையின் உடம்பில் உள்ள நீர் 65 சதவீதம் உறைந்து விடும். இதயத் துடிப்பும் முழுவதுமாக நின்றுவிடும். இந்த நிலையில் இந்தத் தவளைகள் பனிப்படர்வுக்குக் கீழ் உறைந்து குளிர்கால உறக்கம் கொள்கின்றன. குளிர் காலம் முடிந்து கோடைக் காலம் தொடங்கும்போது, தவளைகள் கண் விழிக்கின்றன.
ஒரு சாதாரண மரத்தவளைக்குக் கூட மரணித்து பின் மீண்டும் உயிர்த்தெழுதலை சாத்தியமாக்கிய இறைவன், இறைநேசர்களாகிய அவுலியாக்களுக்கு இந்த தன்மையைக் கொடுக்காமலா இருப்பான்... சற்று சிந்தியுங்கள் .
அவ்லியாக்கள் ஜீவியத்திலும், மரணத்துக்கப்பாலும் காண்பித்து வரும் கராமத்து என்னும் அற்புதங்களை நாம் கண்ணாரக் கண்டும், காதால் கேட்டும் வருகின்ற இக்காலத்தில் ஒரு சிலர் இவற்றை இன்கார் (நிராகரிப்பு) செய்கின்றனர்.
நான்கு மத்ஹபுகளில் ஒன்றை கடைப்பிடித்து ஒழுக வேண்டியது மார்க்கக் கடமையாகும். முஸ்லீம்கள் எல்லோருமே மதஹபைப் பின்பற்றி நடப்பதாகவே ஒப்புக்கொள்கின்றனர்.
எப்பொழுது மதஹபை ஏற்கிறார்களோ அப்பொழுது அந்த மதஹப்புக்குரிய அகீதாக் (கொள்கை) களையும் அங்கீகரிக்க வேண்டும்.


அன்பியாக்களுடைய முஃஜிஸாத்களையும், அவுயாக்களுடைய கராமத்தையும் உண்மை என்பதும் அகீதாக்களுள் ஒன்று .
முஃஜிஸாத்தையோ, கராமத்தையோ ஒப்புக் கொள்ளவில்லையானால், அவனுக்கு மதஹபு இல்லை. மதஹபு இல்லையானால் அவன் சுன்னத்து-வல் - ஜமாஅத்தைச் சேர்ந்தவனல்லன்.
மனிதர்களுடைய நாட்டதேட்டங்களை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அல்லாஹுத்தஆலா இரு வழிகளை ஏற்படுத்தி உள்ளான்.
ஒன்று வலிமார்கள் உடைய கபூரின் ஒரு மலக்கைச் சாட்டுவான்.

மற்றொரு விதமாக வலிமார்களை கபுரை விட்டும் வெளிப்படுத்தி,மனிதர்களது நாட்டதேட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கவும் செய்வான்" என்பதாக அப்துல் வஹ்ஹா புஷ்ஷஃறானீ (ரஹ்) அவர்கள் யவாக்கீத்துல் ஜவாஹிரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

اَوَمَنْ كَانَ مَيْتًا فَاَحْيَيْنٰهُ وَجَعَلْنَا لَهٗ نُوْرًا يَّمْشِىْ بِهٖ فِى النَّاسِ كَمَنْ مَّثَلُهٗ فِى الظُّلُمٰتِ لَـيْسَ بِخَارِجٍ مِّنْهَا كَذٰلِكَ زُيِّنَ لِلْكٰفِرِيْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ
(வீழ்ச்சி அடைந்து) மரணித்தவர்களாக இருந்தவர்களில் எவரை நாம் உயிர்ப்பித்து மனிதர்களுக்கிடையில் நடமாடுவதற்குரிய ஒளியையும் கொடுத்திருக்கின்றோமோ அவர், இருளில் சிக்கி அதிலிருந்து வெளியேற முடியாமலிருப்பவனுக்குச் சமமாவானா? இவ்வாறே நிராகரிப்பவர்களுக்கு அவர்களுடைய (தீய) செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன. (அல்குர்ஆன் : 6:122)

கராமத் 6

(1 : 10)



ராபியத்துல் அதவிய்யா (ரஹ்) அவர்களின் இல்லத்திற்கு 9 நபர்கள் வந்தார்கள். வந்தவர்கள் தங்களுக்கு ஹலாலான உணவினை கொடுக்கும்படி வேண்டினார்கள். அவர்களின் இல்லத்தில் அன்று இரண்டு ரொட்டிகள்தான் இருந்தன.
வந்த விருந்தினருக்கு அந்த இரு ரொட்டிகளை அவர்கள் முன்வைத்தார்கள். அது சமயம் வாசலில் ஒரு ஏழை பசிக்கு உணவு கேட்டு நின்றான். ராபியத்தில் பஸரிய்யா அவர்கள் விருந்தினர் முன் இருந்த அந்த இரு ரொட்டிகளை எடுத்து, ஏழைக்கு வழங்கி விட்டனர். விருந்தினருக்கு பெரும் ஏமாற்றமாகிவிட்டது.
சற்று நேரம் கழித்து, ஒரு பணிப்பெண் பாத்திரத்தில் 18 ரொட்டிகளை கொண்டு வந்து கொடுத்தாள். ராபியா அவர்கள் எண்ணிப்பார்க்க 18 ரொட்டிகள், 'இவை நமக்குள்ள உணவு இல்லை ' என்று திருப்பிக் கொடுத்தார்கள்.

மீண்டும் அவள் சென்று 20 ரொட்டிகளை கொண்டுவந்தாள். ரொட்டியை ராபியா அவர்கள் எண்ணிப்பார்க்க, 20 ரொட்டிகள் இருந்ததை கண்டு சந்தோஷத்துடன், விருந்தினர் முன் சமர்ப்பித்து இதைப் புசியுங்கள் எனப்பணித்தார்கள்.
விருந்தினருக்கு ஒரே வியப்பாக இருந்தது. அது சமயம் ராபியா (ரஹ்) அவர்கள் கூறினார்கள் அல்லாஹ் திருமறையில் :

مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ عَشْرُ اَمْثَالِهَا وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ فَلَا يُجْزٰٓى اِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُوْنَ
எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு; எவர் ஒருவர் (ஒரு) தீமையைச் செய்கிறாரோ அதைப்போன்ற அளவுடைய கூலியே கொடுக்கப்படுவார் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் : 6:160)
ஒரு நன்மை தர்மம் செய்ய அல்லாஹ் பத்து மடங்கு நன்மை தானம் வழங்குவான் என்று கூறி இந்த ஆயத்தை ஓதி காண்பித்தார்கள். நான் இரு ரொட்டிகளை தர்மம் செய்தேன். முதலில் 18 ரொட்டிகள்தான் வந்தது. திருப்பிக் கொடுத்து விட்டேன். பின்பு அல்லாஹ் 20 ரொட்டிகளை வழங்கியுள்ளான். நான் பெற்றுக் கொண்டேன்" என்று கூறினார்கள். அல்லாஹ் கூறுவது பொய்யல்ல ! உண்மை என்றுரைத்தார்கள்.
...... x .... x .... x .... x .... x .... x........... x................ x.................... x....
இமாம் ஜாபர் சாதிக் (ரஹ்) அவர்களின் இல்லத்தில் ஒருநாள் ஏழை தம் பசியை கூறி முறையிட்டார். தன் மனைவியிடம் ஏதும் இருந்தால் கொடுத்து அனுப்புங்கள் என்று பணித்தார்கள்

இமாம் அவர்கள் வீட்டில் எந்த உணவும் அன்று இல்லை. இரண்டு நல்ல முட்டையும் ஒரு கூமுட்டையும்தான் இருந்தது. அதை அந்த ஏழைக்கு அறமாக வழங்கி விட்டார்கள் .
சிறிது நேரத்தில் ஒரு பெண் வந்தாள் . அவள் கூடை நிறைய முட்டைகளை வைத்து இமாம் அவர்களிடம் கொடுத்தாள் . அவள் கோழிப்பண்ணை வைத்திருக்கலாம் . இமாம் அவர்கள முட்டைக் கூடையை பெற்று , தன் மனைவியிடம் கொடுத்தார்கள் .
அந்த பெண் கொடுத்த கூடையில் உள்ள முட்டைகளை எண்ணிப் பார்க்க 30 முட்டைகள் இருந்தது. அதை பரிசோதித்ததில் 20 நல்ல முட்டையும் பத்து கூமுட்டையும் இருக்கிறதே... என்று மனைவி தன் கணவரிடம் முறையிட,
" நீ கொடுத்த ரெண்டு முட்டையில் ஒன்றுக்கு கூமுட்டைதானே.. நீ வழங்கியது போன்று அல்லாஹ் உனக்கு 1க்கு 10 வீதம் கொடுத்துள்ளான் என்று கூறி,
مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ عَشْرُ اَمْثَالِهَا وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ فَلَا يُجْزٰٓى اِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُوْنَ
எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு; எவர் ஒருவர் (ஒரு) தீமையைச் செய்கிறாரோ அதைப்போன்ற அளவுடைய கூலியே கொடுக்கப்படுவார் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் : 6:160) என்ற வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.
அவுலியாக்கள் தங்களுக்கு நிகழும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் குர்ஆனோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். குர்ஆன் அல்லாஹ் தஅலாவின் வார்த்தையல்லவா

கராமத் 7

காவலர் செய்த கராமத்



கடமையைத் தாண்டி ஒரு நற்செயலை எவர் செய்தாலும் அல்லாஹ் நிச்சயமாக நன்றி பாராட்டுகிறவனாகவும் மிக்க அறிந்த வனாகவும் இருக்கிறான். அல்குர் ஆன் : (2 : 158)
இறைவழிபாட்டில் தன்னுயிரை தியாகம் செய்த காரணத்தால் மரணத்தை மரணிக்க செய்ய முடிந்தது, பசியைப் பசிக்க வைக்க முடிந்தது, தாகத்தை தாகிக்க வைக்க முடிந்தது, உறக்கத்தை உறங்க வைக்க முடிந்தது. அச்சத்தை அச்சப்பட வைக்க முடிந்தது. எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை எட்டி உதைக்க முடிந்தது.

தனக்கு மிஞ்சியதை கொடுப்பது தர்மம் தனக்கு உள்ளதை கொடுப்பது தயாளம் தன்னையே கொடுப்பது தியாகம் இறைவனுக்காக முற்றிலும் அர்பபணித்துக் கொண்ட தியாகிகளே வலிமார்கள் எனப்படும் இறை நேசச் செல்வர்கள். இவர்கள் செய்த தியாகத்தை சொல்ல வேண்டுமானால் மிகையாகாது
வலிமார்கள் எனப்படும் இறைநேசச் செல்வர்கள். இவர்கள் செய்த தியாகத்தின் காரணமாக இறைவன் இவர்களுக்கு கராமத் என்னும் அற்புதங்களைக் கொண்டு சிறப்பாக்கினான். அல்லாஹ் கூறுகின்றான்
اَلَاۤ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.
الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ
அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள்.
لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ لَا تَبْدِيْلَ لِكَلِمٰتِ اللّٰهِ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ
அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நன்மாராயமுண்டு; அல்லாஹ்வின் வாக்கு(றுதி)களில் எவ்வித மாற்றமுமில்லை - இதுவே மகத்தான பெரும் வெற்றி ஆகும்.

(அல்குர்ஆன் : 10: 62 -64)
முற்காலத்தில் அரபகத்தின் ஒரு பகுதியில் கனி மரங்கள் அடர்ந்த தோப்பு அமைந்திருந்தது, முபாரக் என்பவர் அதன் காவலராக பணிபுரிந்து வந்தார்.
அத்தோப்பின் சொந்தக்காரர் ஒரு நாள் தனது நண்பர்கள் புடை சூழ அங்கே வருகை தருகிறார். காவலரை அழைத்து மதுரமான கனிகளை பறித்து வரக் கூறினார். ஆணையேற்ற முபாரக் சில கனிகளைக் கொணர்ந்து எஜமானர் முன் வைக்கிறார்.
அவற்றை பரிசோதித்துப் பார்த்த சொந்தக்காரரின் முகத்தில்
கோபக்கனல் தெறிக்கின்றது, வார்த்தை வெடிக்கிறது. "முபாரக்..! சுவையானபழத்தை பறித்துக் கொண்டு வரச் சென்னால் புளிப்பான பழத்தைக் கொண்டு வருகிறீரே!
"சொந்தக் காரரின் கோபத்துக்கான காரணத்தைப் புரிந்து கொண்ட காவல்காரர் மீண்டும் ஒடுகிறார். வேறு மரத்திலிருந்து பழங்கள் பறித்துக் கொண்டுவருகிறார்.
அதையும் கவைத்துப் பார்த்த சொந்தக்காரரின் முகம் மீண்டும் சிவக்கிறது.
முபாரக்! என் நண்பர்கள் முன்னால் என்னைக் கோப்படுத்த முடிவு செய்துவிட்டீரா ? முதலில் புளிப்பான பழங்களைக் கொண்டுவந்தீர், இப்போது சப்பென்றிருக்கும் பழங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்"
சுடு சொல்லைத் தாங்காத முபாரக் பேசினார்; "எஜமானரே! எந்த மரத்துப் பழம் புளிக்கும்? எந்த மரத்துப் பழம் இனிக்கும் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அதனால் தவறு நடந்து விட்டது. தங்களை வருத்தப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் செய்யவில்லை" .
பதிலைச் செவியுற்றதும், சொந்தக்காரர் ஆச்சரியத்தின் எல்லையை அடைந்தார்.
" என்ன...? இத்தனை ஆண்டுகளாக இந்தத் தோப்பில் வேலை செய்கிறீர். இந்த விபரம் கூடத் தெரியாதா ?" என வினவினார்.
"ஆம்! எனக்குத் தெரியாது தோப்பைக் காக்கும் பணியைத்தான் எனக்கு தாங்கள் தந்தீர்கள். அஃதில்லாமல் பழங்களை உண்டு பார்க்கத் தாங்கள் இதுவரை கூறியதில்லையே! நான் எனக்கிடப்பட்ட பணியை முறையாகச் செய்து வருகிறேன். ஆனால் இத்தனை ஆண்டு காலங்களில் எந்த மரத்துப் பழத்தையும் நான் சுவைத்துப் பார்த்ததில்லை" என்று கூறினார்.

காவல்காரரின் பதில் சொந்தக்காரருக்கு அதிர்ச்சியைத் தந்தது என்றாலும், அவரைப் பற்றி தான் ஏற்கனவே அறிந்திருந்த விபரங்கள் அந்த பதிலை உண்மை என்றே நம்பச் செய்தன.
ஆம்! அவர் காவல்காரர்களில் ஒரு அதிசய மனிதர். தனது கடமைகளுக்கு அதிகமாக உழைத்து தோப்பை அழகுபடுத்தி இருந்தார். விளைச்சலை அதிகப்படுத்தியிருந்தார். அத்தகைய
மனிதர் நாணயத்திலும் சிறந்து விளங்குவதைப் பார்த்த எஜமானருக்கு அவரின் மீது மட்டற்ற பாசம் ஏற்பட்டது. அவருக்கு பரிசில் கொடுக்க ஆவல் கொண்டார்
ஆம். அவரை தன் மகளுக்கு மணாளராக்கிக் கொண்டார்.
நபி மொழித் திரட்டுக் கலையில் சிறந்து விளங்கிய ஹளரத் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரலி) அவர்கள் அந்த அதிசயத் தம்பதிகளக்குப் பிறந்தவராவார்.
" என்னுடைய இறைநேசர்கள் (அவுலியாக்கள்) எனது பரிவட்டத்திற்குள்ளிருப்பார்கள். என்னை தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். (ஹதிது குத்ஸி) '
இறைவன் அறிந்திருந்த தோட்டக் காவலரை தோட்ட சொந்தக்காரர் அறியாமல் தன்னை மறைத்துக் கொண்டதுதான் காவலர் செய்த கராமத் .

வலிமார்கள் எனப்படும் இறைநேசர்கள் இறைவனுக்காக வாழ்ந்த காரணத்தால் மரணத்தை வென்ற மஹான்களாக உலகில் அனைத்து பகுதிகளிலும் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கராமத் 8



தஜ்லா நதிக்கரையோரம் ஒரு ஞானி பக்கீர் கோலத்தில் இருந்தார். ரொம்ப தூரத்திலிருந்து கற்றறிந்த ஒருவன் அவரின் கராமத்தைப் பார்க்க வந்தான்.
அமைதி குலைந்து இருந்தான். ஒருவேளை கடினமான பயணம் செய்ததால், இருக்கலாம். அவன் தனது செருப்பை கோபத்துடன் கழற்றி ஒரு மூலையில் எறிந்து விட்டு, கதவை தடாலென்று அழுத்தி தள்ளினான் . கோபத்தில் இருக்கும்போது ஒரு மனிதன் தனது செருப்புக்களை ஏதோ தனது விரோதிகளை போல் எண்ணிக் கொண்டு, அவைகளை கழற்றி எறிவான். அப்போதுதான் அவன் தனக்கும் கதவுக்கு இடையே ஏதோ ஒரு பெரிய கருத்துவேறுபாடு வந்ததுபோல் தடாலென்று தள்ளுவான்.
இப்படி கதவை திறந்து கொண்டு அந்த ஆள் உள்ளே வந்ததும், அந்த ஞானிக்கு மரியாதை செலுத்தினான். உடனே அந்த ஞானி " உன் மரியாதையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் போய், அந்தச் செருப்பிடமும், கதவிடமும் மன்னிப்பு கேட்டு விட்டு வா ! என்று கட்டளையிட்டார்.
அதற்கு அந்த ஆள், " இது என்ன கோளாறு ? கதவிடமும் ஒரு ஜோடி செருப்பிடமும் மன்னிப்பு கேட்க வேண்டுமா ? ஏன் ? அவைகள் உயிருடனா இருக்கின்றன ? " என்று அந்த ஆள் முணுமுணுப்புடன் பேசியதை ஞானி கேட்டார்.
அதற்கு அந்த ஞானி, "நீ உனது கோபத்தை அவைகள் மீது காட்டும் போது, அவைகளை உயிர் அற்றவைகளாக நீ நினைக்கவில்லையே.. செருப்புகள் ஏதோ பெரிய குற்றத்தைச் செய்து விட்டது போல் அல்லவா நீ தூக்கி எறிந்தாய்... மேலும் ஒரு விரோதியை போல் எண்ணிக் கொண்டு, அந்தக் கதவுகளைத் தள்ளினாய். உனது கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் அவைகளுக்கு உயிர் இருப்பதாக நீ உணரும் போது, நீ அவைகளிடம் மன்னிப்பு கேட்பதற்கும் அவைகளுக்கு உயிர் உள்ளதை போல் எண்ணிக் கொள்ள வேண்டுமல்லவா..! போ.. அவைகளிடம் மன்னிப்பு கேள். இல்லையெனில் நான் உன்னை ஏறெடுத்துப் பார்க்கமாட்டேன்" என்று கூறினார்.

விசித்திரமான கராமத்துடைய இந்த ஞானியை சந்திக்க எவ்வளவு கஷ்டப்பட்டு பிரயாணம் செய்து வந்தோம் என்பதை அவன் மனதில் எண்ணி, தம்முடைய பகுத்தறிவை புறந்தள்ளி விட்டு, செருப்புகளிடமும், கதவுகளிடமும் மன்னிப்பு கேட்டான்.
அந்த கண நேரம் அவனுக்கு எப்படி இருந்தது தெரியுமா ! அந்த ஞானி கூறியது முதலில் அது முட்டாள் தனமாக இருந்ததாகவும், ஆனால் அவன் அப்படி மன்னிப்பு கேட்டு முடித்தவுடன் அவனுள் புதிதாக ஏதோ ஒன்று மனதிற்குள் பிரவாகம் எடுத்தது போல் இருந்தது. இது அந்த ஞானி செய்த கராமத்தாக அவன் எண்ணினான்

மனிதன் எந்த அளவுக்கு அமைதியும் சந்தோஷமும் பெறமுடியும் என்று அவனால் கற்பனை பண்ணி கூட பார்க்க முடியவில்லை. அப்படி மன்னிப்பு கேட்ட பின்னர் அவன் உள்ளே சென்று அந்த ஞானியின் அருகில் அமர்ந்த பொழுது, அந்த ஞானி சிரித்துக்கொண்டே " இப்போது எல்லாம் சரியாகி விட்டது. உனக்கு கிடைக்க வேண்டியதும் கிடைத்து விட்டதா ? என்று கேட்டார்.
" கிடைத்துவிட்டது " என்றான் .
.... x .... x .... x .... x .... x .... x............... x............... x ....
ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும் போது "ருகூஉ" விற்குச் சென்றார்கள். அப்போது ஒரு மனிதர் ஓடோடி வந்து தொழுகையில் சேர்ந்தார்.
தொழுகை முடிந்ததும், அம்மனிதரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழைத்து "நண்பரே..! அல்லாஹ் உமது ஆவலை அதிகரிக்கச் செய்வானாக! ஆனாலும் இனியொரு முறை இப்படிச் செய்யாதீர். அமைதியையும், கண்ணியத்தையும் கடைப்பிடியுங்கள். ஜமாஅத்துடன் கிடைத்த ரக் அத்துக்களை தொழுது கொள்ளுங்கள்" என்று உபதேசித்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் அந்த கூற்றிலிருந்து தொழுகை துவங்கும் தருணத்தில் மனதில் அமைதியும், கண்ணியமும் நிறைந்திருக்க ஆவன செய்ய வேண்டுமென்ற கருத்து இறை சந்திப்பையல்லவா பெற வந்திருக்கிறோம் என்ற கருத்து தொனிக்கவில்லையா..?

ரஹ்மத் ராஜகுமாரன் .

கராமத் 9

" எவரொருவருக்கு தமது தேவைகள், நாட்ட தேட்டங்கள் நிறைவேற வேண்டும் என்று இருக்குமானால், அவர் சூரத்துல் ஃபாத்திஹா, ஆயத்துல் குர்ஸி , அலம் நஷ்ரஹ் சூரா இவர்களை ஓதி, அவற்றின் தவாபை குத்புல் அக்த்தாபு, ஹஜரத் அஷ்ஷைகு அப்துல் காதிரு ஜீலானி (ரலி) அவர்களுக்கு அளிக்க வேண்டும் . பிறகு பகுதாது திசையை முன்நோக்கி 11 எட்டெடுத்து வைத்து, '' யா செய்யிதீ யா அப்துல் காதிர்" என்று 10 விடுத்தம் அழைத்து வேண்டி, தமது நாட்ட தேட்டர்களைக் கேட்க வேண்டும்" என்பதாய் இமாம் ஷெய்கு ஜலாலுத்தீன் ஸுயூத்தி (ரஹ்) அவர்கள் கித்தாபுர் - ரஹ்மா-பித்திப்பி -வல் ஹிக்மா "என்ற நூலின் 284 வது பக்கத்தில் உரைத்துள்ளார்கள்.

. x.................. x .... x.................. x .... x................... x ....

அஷ்ஷெய்கு அபூ அம்று உதுமான் அஸ்ஸரீபின் அஷ்ஷெய்கு அபூ முஹம்மது,அப்துல் ஹக் அல் ஹரிமி ஆகிய இருவரும் பின்வரும் விடயத்தைக் கூறுகின்றனர்.

" நாங்கள் ஷெய்கு முஹ்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் திருச்சபையில், ஹிஜ்ரி 555, ஸபா - 3 ஞாயிறு அன்று இருந்தோம். ஷைய்கவர்கள் எழுந்து சென்று அவர்களின் மிதியடியிலிருந்து கொண்டு வுழுச் செய்தார்கள். பின் இரண்டு ரக்அத் தொழுதார்கள். தொழுது முடித்து ஸலாம் கூறியபின் பயங்கரமாக சப்தமிட்டார்கள்.

பின் மிதியடிகளில் ஒன்றை எடுத்து ஆகாயத்தில் வீசினார்கள். எமது பார்வை விட்டும் அது பறந்து சென்றது. பின் மீண்டும் கூச்சலிட்டார்கள். மற்றைய மிதியடியை எடுத்து எறிந்தார்கள். அதுவும் எமது பார்வையை விட்டும் மறைந்தது. அதன் பின் இருக்கையில் வந்து அமர்ந்தார்கள். இது பற்றி அவர்களிடம் கேட்பதற்கு யாருக்கும் துணிவு இருக்கவில்லை.

இது நடந்து இருபத்து மூன்று நாட்களுக்கு பின் அஜமி பிரதேசத்திலிருந்து ஒரு கூட்டம் வந்தது. எங்களிடம் ஷைய்கவர்களுக்கான நேர்ச்சைப் பொருட்கள் இருக்கின்றன என்று அவ்வர்த்தக கூட்டம் கூறியதும், ஷைய்கவர்களிடம் இது பற்றி அனுமதி கேட்டோம். அனுமதி வழங்கினார்கள். ஹரீர் பட்டும், பட்டுப் புடைவைகள், தங்கம் அந்த நாள் ஷெய்கவர்கள் வீசிய மிதியடி உட்பட இவற்றை எம்மிடம் கையளித்தனர். இந்த மிதியடி உங்களுக்கு எப்படி கிடைத்தது? என்று அவர்களிடம் வினவினோம்.

அவர்கள் தங்கள் கதையை விபரித்தனர்.ஸபர் மூன்றாம் நாள் நாங்கள் பயணித்துக் கொண்டிருந்தோம். அறபு நாட்டு முன்னணிக் கொள்ளைக் கூட்டம் திடீரென எம்மைத் தாக்கி எமது பொருட்களை சூறையாடியும்,எங்களில் சிலரை கொன்றும் வெறியாட்டம் ஆடின.

பின் ஒரு ஓடையருகே உட்கார்ந்து கொண்டு சூறையாடி எமது பொருட்களை பங்கீடு செய்து கொண்டிருந்தனர். நாங்கள் ஓடையின் மறு கரையில் ஒதுங்கி நின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் ஷைய்கவர்களை நாம் நினைத்துக் கொண்டு, இதில் நாம் பாதுகாக்கப்பட்டால் அவர்களுக்கு நமது உடமைகளில் சிலதை நேர்ந்து கொள்வோம் என்று கூறினோம்.

இப்படி நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பாரிய இரு சப்தத்தைக் கேட்டோம். இச்சத்தம் ஓடையை நிறைத்து நின்றது. கொள்ளையர்கள் பதற்றப்பட்டவர்களாக நின்றதை நாங்கள் கண்டோம். மற்றுமொரு அறபுக் கொள்ளையர் கூட்டம் வந்துவிட்டதோ என்று நாம் அஞ்சினோம். அப்போது கொள்ளையர்களில் சிலர் எம்மிடம் வந்து, உங்கள் உடமைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்! எங்களுக்கு நேர்ந்த கதியை வந்து பாருங்கள் என்றனர்.

பின், எங்களை அழைத்துச் சென்று அவர்களின் இரு தலைவர்களையும் காட்டினர். அவ்விருவரும் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் நனைந்த மிதியடிகள் இரண்டு காணப்பட்டன. பின் எங்களின் அனைத்து சாமான்களையும் திருப்பித் தந்துவிட்டு, இது ஒரு பாரதூரமான விடயம் என்று கூறிவிட்டு நகர்ந்தனர்.

ஆதாரம் : பஹ்ஜத்துல் அஸ்றார், பக்கம் - 132

கராமத் 10

கராமத் என்றால் சங்கை, மரியாதை என்று பொருள்.
கராமத் என்ற ஒன்று உள்ளதா என்று கேட்டால்,ஆம் உள்ளது என்பதுவே நம் பதில்
கராமத் என்றால் என்ன.?

கராமத் என்பது நல்லடியார்களின் வாழ்வில் அவர்கள் எதிர்பார்க்காது அல்லாஹ் நிகழ்த்திக் காட்டும் சில உதவிகள் ,
முஹ்ஜிஸாவுக்கும் கராமத்துக்கும் உள்ள வித்தியாசம்
முஹ்ஜிஸா என்றால் நபிமார்கள் சவாலாக அல்லாஹ்வின் நாட்டப்படி செய்து காண்பித்தவை.
கராமத் என்றால் எதிர்பாராது நல்லடியார்களின் வாழ்வில் அல்லாஹ்வின் நாட்டப்படி நிகழ்ந்தவை. இதற்கு (உ-ம்)
கௌதுல் ஆஃலம் (ரலி) அவர்கள் ஆரம்பத்தில் கல்வியை தம் சொந்த ஊரான ஜீலான் நகரிலேயே கற்றார்கள். பதினெட்டு வயதை அடைந்த பொழுது உயர்கல்வி கற்பதற்காக பகுதாது நகர் செல்ல முடிவு செய்தார்கள்.
அதற்காக தம் அன்னையிடம் அனுமதி கோரினார்கள். அவரின் இந்த முடிவைக் கேட்டு மனம் மகிழ்ந்து, உடனே அனுமதி அளித்தார்கள் அன்னாரின் தாயார் அவர்கள்.
தந்தையார் அபூசாலிஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் குடும்பத்தினருக்காக விட்டுச் சென்ற 80 பொற்காசுகளில் 40 பொற்காசுகளை நாயகம் அவர்களின் சட்டைப் பையில் வைத்து தைத்து கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள் தாயார் அவர்கள்.
அச்சமயம் தம் மைந்தரை நோக்கி, எப்போதும் உண்மையே பேச வேண்டும் என்று உபதேசித்து அனுப்பி வைத்தார்கள்.

பகுதாதிற்காக பயணமாகிச் செல்லும் வியாபாரிகளுடன் சேர்ந்து கொண்டார்கள் நாயகமவர்கள்.
இவ்வியாபாரிகள் ஹமதான் எனும் நகரைக் கடந்து செல்லும் போது வழிப்பறித் திருடர்கள் அறுபது பேர் இவர்களை வளைத்துக் கொண்டார்கள்.

நாயகமவர்களை கொள்ளையர்கள் சோதித்து கேட்டபோது, தம்மிடம் நாற்பது பொற்காசுகள் இருப்பதாக உண்மையை சொன்னார்கள். ஆனால் திருடர்கள் நம்பவில்லை.
இறுதியாக திருடர்கள் தலைவரிடம் கொண்டு சென்றனர். அங்கும் அவர்கள் உண்மையே பேசினார்கள்.
நாயகமவர்களை சோதித்துப் பார்த்த போது, அவர்கள் சொன்னது உண்மை என்று தெரியவந்தது.
வியப்புற்ற கள்வர்கள், காரணம் கேட்டபோது, தாயாரிடம் கொடுத்த வாக்குறுதிபடி நான் உண்மையையே பேசினேன் என்றுரைத்தார்கள்.
இதைக் கேட்டு கள்வர்கள் திருந்தி, இனிமேல் பாவச் செயல்களில் ஈடுபட போவதில்லை என்று நாயகமவர்களிடம் சத்தியம் செய்து கொடுத்தனர். இறைவனிடமும் பாவமன்னிப்புத் தேடினர்.
பிற்காலத்தில் இவர்கள் அனைவரும் வலிமார்களாக திகழ்ந்தனர் என சரித்திரம் கூறுகிறது.
இந்த கராமத் இறைவனால் நாடி செய்யப்பட்டது.
நூல்: கலாயிதுல் ஜவாஹிர்

கராமத் 11

" சூஃபிகள் சென்ற பாதை மிகச் சரியானது. தெய்வீக அருள் பெற்றவர்கள் அவர்களே. நடத்தையிலும் ஒழுக்கத்திலும் பரிபூரண அடைந்தவர்களும் அவர்களே. இந்த உலகில் உள்ள அறிவுஜீவிகள், தத்துவவாதிகள், மார்க்க மேதைகள் என எல்லோருடைய அறிவையும் சேர்த்தாலும் சூஃபிகள் போன்ற பரிபூரண தூய்மை பெற்ற ஒரே ஒரு மனிதனைக் கூட உருவாக்க முடியாது .
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய வாழ்விலிருந்தே சூஃபிகள் தங்கள் வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான வாழ்வை அமைத்துக் கொண்டனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர இந்த விஷயத்தில் வழிகாட்ட வேறு யாரால் முடியும் ..? " என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கேட்கிறார்கள்
தாபியீன்களில் மிகச் சிறந்த உவைஸுல் கர்னி (ரலி)

ஸையிதுனா உவைஸ் அல்-கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கப்பட்டது,
“தொழுகையின்போது பணிவடக்கமாக எது கருதப்படுகிறது?”
ஸையிதுனா உவைஸ் அல்-கர்னி ரலியல்லாஹு அன்ஹு கூறினார்கள், “ஓர் அம்பு உங்களை ஊடுறுவி சென்றால்கூட உங்களுக்கு அது தெரியக்கூடாது. அந்த அளவுக்கு நீங்கள் தொழுகையில் மெய்மறந்து இருக்க வேண்டும்.”
இவர்கள் தாபியீன்களில் மிகச் சிறந்தவர்கள்.
ஸஹாபா பெருமக்கள் நபிகள் பெருமானார் முஹம்மத் ﷺ அன்னவர்களிடம் கேட்டார்கள், “உவைசுல் கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உங்களை கண்டிருக்கிறார்களா நாயகமே?”
நபிகள் நாயகம் ﷺ அன்னவர்கள் கூறினார்கள், “இல்லை, அவர்களின் ஜடத்துவ கண்களால் என்னை அவர்கள் காணவில்லை. (கண்டிருந்தால் ஸஹாபா என்ற அந்தஸ்தைப் பெற்றிருப்பார்கள்) ஆயினும் அவர்கள் என்னை தன் ஆத்மீகக் கண்களால் கண்டுள்ளார்கள்.”

ஸஹாபா பெருமக்கள் மாநபிகளார் ﷺ அன்னவர்களிடம் கேட்டார்கள், “எங்களுக்கு அவர்களை காணக்கிடைக்குமா நாயகமே?”

நபிகள் கோமான் முஹம்மத் ﷺ அன்னவர்கள் ஸையிதுனா அபூபக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்துக் கூறினார்கள், “நீங்கள் அவர்களைக் காணமாட்டீர்கள். உமரும் அலியும் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களைக் காணுவார்கள்." பின் அவர்கள் இருவரையும் பார்த்துக் கூறினார்கள் :
“(அவர்களின் அடையாளம்) அவர்களின் உடலெங்கும் ரோமம் நிறைந்திருக்கும். அவர்களின் இடது கை உள்ளங்கையில் ஒரு திர்ஹத்தின் அளவு வெள்ளை அடையாளம் இருக்கும். அது வெண்குஷ்டத்தின் அடையாளம் அல்ல.
அவர்களைக் கண்டவுடன் என்னுடைய சலாத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். என்னுடைய உம்மத்தவர்களான என் சமூகத்துக்கு அவர்களை துஆ செய்யச் சொல்லுங்கள்.
அவர்கள் அவ்லியாக்களில் ‘அத்கியா’ வானவர்கள். (பாதுகாப்பு பரணைப் போன்றவர்கள்) அவர்கள் மிக்கப் பரிசுத்தமானவர்கள்.”

رضوان الله عليهم أجمعين صلى الله عليه وعلى آله وصحبه وسلم
அல்லாஹ் عزوجل நாளை மறுமையிலே ஸையுதுனா உவைஸ் அல்-கர்னி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தோழமையை எமக்குத் தந்து அருள்பாலிப்பானாக " என்றார்கள் .
"உமரும், அலியும் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களைக் காணுவார்கள்." என்ற நபிகளாரின் முன்னறிவிப்புப்படி உவைஸுல் கர்னி (ரலி) அவர்களை இருவரும் சந்தித்தனர்.
“தாங்கள் அண்ணலெம் பெருமானின் அன்புத் தோழர்கள் தாமே! அண்ணலெம் பெருமானுக்கு உஹத் போர்க்களத்தில் வைத்து பல் முறிந்து (இஹீதாகி) விழுந்த பொழுது, தாங்கள் அவர்களின் உண்மையான தோழர்களாயிருப்பின் தாங்களும் ஏன் அதுபோன்று தங்களின் பல்லை விழச் செய்யவில்லை.
நட்பு என்றால் அஃதன்றோ உண்மையான நட்பு! என்னைப் பாருங்கள்! நான் என் பற்கள் அனைத்தையும் பிடுங்கி விட்டேன். நான் ஒரு பல்லைப் பிடுங்க, அது எம்பெருமானுக்கு வீழ்ந்த பல்லாக இல்லாதிருக்குமோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட, அடுத்த ஒரு பல்லை நான் பிடுங்க, அதேபோன்ற ஐயம் எனக்கு மீண்டும் முளையிட, அவ்வாறு நான் என் பற்கள் அனைத்தையும் பிடுங்கி விட்டேன்” என்று கூறித் தம் பொக்கைவாய் திறந்து புன்னகை பூத்தனர் அப்பெரியார்.
அது கண்டு நபித் தோழர்கள் இருவரும் ஆச்சரியப்பட்டார்கள். உண்மையான முஹப்பத்தின் அர்த்தத்தையும், உண்மையான முஹம்மதின் தாற்பரியத்தையும் உவைஸ் கர்னீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சிறப்பான வாழ்விலிருந்து நாம் அறிந்து கொண்டோம்.

சூஃபிகள் சென்ற பாதை மிகச் சரியானது. தெய்வீக அருள் பெற்றவர்கள் அவர்களே. நடத்தையிலும் ஒழுக்கத்திலும் பரிபூரண அடைந்தவர்களும் அவர்களே. இந்த உலகில் உள்ள அறிவுஜீவிகள், தத்துவவாதிகள், மார்க்க மேதைகள் என எல்லோருடைய அறிவையும் சேர்த்தாலும் சூஃபிகள் போன்ற பரிபூரண தூய்மை பெற்ற ஒரே ஒரு மனிதனைக் கூட உருவாக்க முடியாது

கராமத் 12



கராமத் எப்படி ஏற்படுகிறது ?
நீங்கள் ஒரு மீனிடம், " கடல் எப்படி இருக்கும் ? "
அந்த மீன் " இதுதான் கடல், கடல் என்னைச் சுற்றி உள்ளது. அது சுதந்திரமானது " என்று கூறும் .
ஆனால் நீங்கள் அதனிடம் "கடலைப் பற்றி விவரி " என்று வற்புறுத்தினால், திமிலங்கலம் போன்ற பெரிய பெரிய ஆபத்துக்களைப் பற்றியெல்லாம் கூறாமல், கடல் சுதந்திரமானது என்றுதான் கூறும் .

அதே மீனை கடலிலிருந்து பிடித்து ஜாடி நீருக்குள் போட்டுவிட்டு, "வாழ்க்கை எப்படி இருக்கிறது ?"
அந்த மீன் "வாழ்க்கை பயங்களாலும்,ஆபத்துக்களாலும் சூழ்ந்தது " என்று கூறும் அதே கடல் மீன் .
கடல் வாழ்வை இம்மையாகவும் , ஜாடி வாழ்வை கபுராகவும் மீன் உருவகப்படுத்திற்று
இந்த சுதந்திரத்திற்குள்ளும் , பயத்திற்குள்ளும் சிக்காமல் ஞானிகள் பற்றற்ற வாழ்க்கையை நேசிக்கிறார்கள்.

اَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ
(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (குர்ஆன் : 10:62)
"மரணம் மட்டும் சந்தையில் விற்குமானால், இறைவனின் நண்பர்கள் அதைத் தவிர வேற எதையும் வாங்கமாட்டார்கள் " -ராஸி
அல்லாஹ்வுடைய அடியார்களில் சிலர் நபிமார்களும் அல்ல, தியாகிகளும் அல்ல. மறுமை நாளில் இறைவனிடம் அவர்களுக்குள்ள பதவிகளைக் கண்டு நபிமார்களும், தியாகிகளும் பொறாமைக் கொள்வர். என்று நபி கூறினர்.
(அப்பொழுது) அவர்கள் யார்? என்று எங்களுக்கு அறிவியுங்கள் என்று தோழர்கள் கேட்டனர்.
(அதற்கு) நபி அல்லாஹ்வின் பொருத்தத்திற்காகவே தங்களிடையே நட்புக்கொள்வர். அவர்களுக்கிடையில் உறவின் முறையும் இருக்காது. பணத்திற்காகவும் அவர்கள் நட்புக் கொள்ள மாட்டார்கள். இறைவன்மீது ஆணையாக அவர்களின் முகம் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.
அவர்கள் இறை வழியில் செல்வார்கள். மக்கள் அச்சமுறும் பொழுதும், துக்கிக்கும் பொழுதும் அவர்கள் அச்சமுறவும் மாட்டார்கள். துக்கிக்கவும் மாட்டார்கள்.
".(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேயர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்." என்ற 10:62 வது வசனத்தை ஓதினர். அறிவிப்பவர்: உமர்(ரலி) நூல்: அபூதாவூத்

என் நேசரை நோவினை செய்தவனிடம் நான் பகிரங்கமாக போர் புரிவேன். கடமையாக்கிய ஒன்றை தான் செய்வதில் இருந்தே தவிர எனக்கு மிக விருப்பமான வேறொன்றை செய்து என் அடியான் என்னிடம் நெருங்கிட முடியாது.
நபிலான (உபரியான) வணக்கங்களை செய்வது மூலம் என்னிடம் நெருங்குவதில் என் அடியான் தொடர்ந்து இருப்பான் இதனால் அவனை நான் பிரியம் கொள்வேன்.
அவனை நான் பிரியம் கொண்டு விட்டால் அவன் கேட்கும் அவனது செவியாகவும் அவன் பார்க்கும் பார்வைப் புலனாகவும், அவன் பிடிக்கும் கையாகவும், அவன் நடந்து செல்லும் காலாகவும் நான் ஆவேன். என்னிடம் அவன் கேட்டால் அவனுக்குக் கொடுப்பேன். என்னிடம் நெருங்குவதில் என் அடியான் தொடர்ந்து இருப்பான். இதனால் அவனை நான் பிரியம் கொள்வேன்.
அவனை நான் பிரியம் கொண்டு விட்டால் அவன் கேட்கும் அவனது செவியாகவும் அவன் பார்க்கும் பார்வைப் புலனாகவும், அவன் பிடிக்கும் கையாகவும், அவன் நடந்து செல்லும் காலாகவும் நான் ஆவேன். என்னிடம் அவன் கேட்டால் அவனுக்குக் கொடுப்பேன். என்னிடம் அவன் பாதுகாப்புத் தேடினால் அவனை நான் காப்பாற்றுவேன்.

மரணத்தை அஞ்சும் என் மூமினான அடியானின் உயிரை கைப்பற்றுவதை நான் தயங்குவது போல் வேறு எதற்கும் நான் தயங்குவதில்லை. அவனின் மரண வேதனையை நான் நீக்குகிறேன் என்று அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்.
....இப்படித்தான் இறைநேசர்களுக்கு கராமத் என்னும் அற்புதத்தை இறைவனே செய்து விடுகிறான்.

கராமத் 13
(ஏழ்மையின் விலை ஒரு சாம்ராஜ்ஜியம்)
ஒரு முறை இப்ராஹீம் இப்னு அத்ஹம் : " நான் வானவர் ஜிப்ரயீலைக் கனவில் கண்டேன். கையில் அவர் ஒரு புத்தகம் வைத்திருந்தார்.
"அதில் இருப்பது என்ன ?" என்று கேட்டேன்
" இறைவனுடைய நண்பர்களுடைய பெயர்கள் " என்று அவர் சொன்னார்.
" அதில் என் பெயர் இருக்கிறதா ? " என்று கேட்டேன்
" இல்லை " என்று அவர் சொன்னார்.
" சரி பரவாயில்லை. இறைவனுடைய நண்பனாக நான் இல்லாவிட்டாலும், இறைவனுடைய நண்பர்களுக்கு நண்பராக இருக்கிறேன் " என்று சொன்னேன்

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த ஜிப்ரீல், " இறைவனின் நண்பர்கள் என்ற பட்டியலில் இப்போது உங்கள் பெயர் எல்லா பெயர்களுக்கும் மேலே இப்போது பதிவு செய்யப்பட்டடு இருக்கிறது ஏனெனில் ஆன்மிகப் பாதையில் நம்பிக்கை இழந்த நிலையில் இருந்துதான் நம்பிக்கை பிறக்கிறது "

ஒரு நாள் ஒருவர் இப்ராஹிம் இப்னு அத்ஹம் அவர்களிடம், ஒருவர் வந்து, " பல்க் நாட்டின் அரசாட்சியை விட்டுவிட்டு வந்ததன் மூலம் உங்களுக்கு என்ன கிடைத்தது ? என்று கேட்டார்.
அந்த நேரத்தில் இப்ராஹீம் இப்னு அத்ஹம் ஒரு ஆற்றின் கரையோரமாக அமர்ந்திருந்தார். கையில் இருந்த ஒரு ஊசியை உடனே அவர் ஆற்றில் வீசி எறிந்தார். பின் அந்த ஆற்றின் மீன்களுக்கெல்லாம் ஊசியைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். உடனே கும்பலாக மீன்கள் ஒவ்வொன்றும் தன் வாயில் ஒரு ஊசியை வைத்துக் கொண்டு நீருக்கு மேலே வந்தன. அதில் தன் ஊசியை மட்டும் எடுத்துக்கொண்டு, இப்ராஹிம் சொன்னார் :
"ஆன்மிகப் பாதையில் நான் வந்ததனால் எனக்கு கிடைத்த மிக அற்பமான தகுதி இது. என் ராஜ்ஜியத்தை விலையாகக் கொடுத்து இந்த ஏழ்மையை நான் வாங்கி இருக்கிறேன் "
ரஹ்மத் ராஜகுமாரன் .

"கட்டி வைத்ததை அவிழ்த்து விடு ;
அவிழ்த்து விட்டதை கட்டி வை "

கராமத் 14
(பாத்திரத்திற்குள் ஏரி)
ஹிஸ்ரி 588 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் 10 ஆம் நாள் (கி.பி.1192) அன்று அஜ்மீர் நகருக்கு காஜா நாயகம் வருகை தந்தார்கள் .அப்போது அவர்களுக்கு வயது 57.

இந்நகரம் பிருதிவிராஜ் என்ற ராஜபுத்திர அரசனின் ஆட்சியில் இருந்தது. அவனுடைய அரண்மனை அதன் அருகிலுள்ள தாராகட் என்ற குன்றின் மீது இருந்தது. அதன் அடிவாரத்திலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். அங்கேயே அவனுடைய குதிரை,ஒட்டகை ஆகியவற்றின் தொழுவங்கள் இருந்தன.
அங்கு வந்த காஜா நாயகம் தம் சீடர்களுடன் வெட்ட வெளியில் இளைப்பாற அமர்ந்தனர். அரசரின் ஆட்கள் வந்து நீங்கள் இங்கு தங்க கூடாது. இது அரசரின் ஒட்டகை அடைக்கும் இடம் என்று சொன்னார்கள்.
அதுகேட்ட காஜா நாயகம் அவர்கள் "அரசரின் ஒட்டகை இங்கேயே அடைபட்டுக் கிடக்கட்டும் " என்று சொல்லி விட்டு தம் சீடர்களுடன் அருகிலுள்ள அன்னாசாகர் என்ற ஏரிக் கரையில் போய் தங்கினர்.
காலையில் ஒட்டகம் மேய்ப்பவர்கள் வந்து ஒட்டகையை எழுப்ப முற்பட்ட போது அவைகளால் எழும்ப முடியவில்லை. உடனே அவர்களுக்கு நேற்று நடந்த சம்பவம் நினைவுக்கு வரவே காஜா நாயகத்திடம் வந்து மன்னிப்புக் கேட்டனர்.
அவர்களும் மன்னித்து, " ***இது எந்த எசமானுடைய ஆணைக்காக அமர்ந்திருந்ததோ அந்த எசமானுடைய ஆணை மீது அவை எழுந்து நடக்கும் " என்று கூறினர். அவ்விதமே ஆயிற்று. அதுகண்டு ஒட்டகம் மேய்ப்பவர்கள் வியந்து அரசனிம் இச்சம்பவம் பற்றி சொன்னார்கள்.
இதைக் கேட்ட அரசன் அதிர்ந்தான். ஏனெனில் மன்னனின் அன்னை வாசவதத்தா சோதிடத்தில் மிகவும் புலமை பெற்று விளங்கினாள். அவள் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பே இன்ன இன்ன அடையாளமுள்ள ஒருவர் இங்கு வருவார். அவரின் வரவால் உன் ஆட்சி வீழும் என்று தன் மகனிடம் முன்னறிவிப்பு செய்திருந்தாள்.***
அதைக் கேட்ட மன்னன் அப்போது அவர்களின் படத்தை தம்அன்னையிடமே வரைந்து கேட்டு, அதன்படிப் பல பிரதிகள் எடுத்து இத்தகு உருவமுடையவர் எவரேனும் தம் நாட்டு எல்லைக்குள் நுழைந்தால் அவரைப் பிடித்து என் முன் கொண்டு வர வேண்டும் என்று ஆணையிட்டிருந்தான்.
எனவே இச்செய்தியைக் கேட்டவுடன் அந்த நபர் இவர்களாகத்தான் இருக்குமோ என்று எண்ணி அவர்களை அங்கிருந்து விரட்ட ஆட்களை அனுப்பினான். அரசரின் ஆணையை சிரமேற்றோங்கிச் செயலாற்ற அவனின் பணியாளர்கள் முயன்ற போது நாயகம் அவர்கள் ஒருபிடி மண்ணை அள்ளி, அதில் ஆயத்துல் குர்ஸீயை ஓதி ஊதி, அவர்கள் மீது வீசி எறிந்தார்கள். அவர்கள் அதனைத் தாங்க இயலாது, பெரும் கூச்சலிட்டுக் கொண்டு வெருண்டோடினர்.
இதனை அறிந்த அரசன் காஜா அவர்களைப் பெரிய மந்திரவாதி என்று எண்ணிக் கொண்டு, மந்திரத்தை மந்திரத்தால் தான் வெற்றி கொள்ள வேண்டுமென்று எண்ணி, சாதுராம் என்ற மாபெரும் மந்திரவாதியைக் காஜா அவர்களிடம் அனுப்பி வைத்தான்.
அவர் காஜா நாயகத்தைப் பார்த்ததும் திடுக்கம் ஏற்பட்டு அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அன்னாரின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவி, அவர்களின் ஊழியத்தில் இருந்து கொண்டார். அவருக்கு ஷாதிதேவ் (மகிழ்ச்சியாளர்) என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

இதன்பின் காஜா அவர்களை எதிர்த்து, மந்திர ஆற்றலினால் போராடி, அவர்களை அங்கிருந்து விரட்டிவிட ஜெய்ப்பால் என்ற மற்றொரு மந்திரவாதியை அனுப்பி வைத்தான் அரசன்.

அவர் தம்முடைய 1500 சீடர்களுடன் தம்மை எதிர்க்க வருகிறார் என்பதை அறிந்த காஜா நாயகம் அவர்கள் தம்முடைய கைக்கோலை கொடுத்து, நம்முடைய ஜமாஅத்தினரைச் சுற்றி பூமியில் ஒரு கோடு கிழியும். அதற்குள் நாம் இருக்கும் வரையில், அவர்களால் நமக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாது என்று கூறினார்கள். அவ்விதமே அவரும் செய்தார்.

சற்று நேரத்தில் ஜெய்ப்பாலும்,அவரின் சீடர்களும் அங்கு வந்து, அக்கோட்டிற்குள் தம் கால்களை வைத்ததும், அவர்கள் மயங்கிக் கீழே விழுந்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த அவர்கள், தள்ளாடித் தள்ளாடி அன்னாசாகர் ஏரிக்கரையின் ஒரு புறத்தில் சென்றமர்ந்து, அன்னாசாகரின் தண்ணீரைக் காஜா அவர்கள் இருக்கும் பக்கம் செல்லவிடாது தடுக்கும் முயற்சியில் ஈடுபடலாயினர்.
இதனைக் கண்ட காஜா நாயகம் அவர்கள் ஷாதிதேவை அழைத்து, அவரின் கரத்தில் ஒரு பாத்திரத்தை கொடுத்து 'நீர் அன்னாசாகரின் நீரை இந்தப் பாத்திரத்தில் எடுத்து வாரும்' என்று கூறினர்.
அவர் சென்று அவ்வாறே நீர் எடுத்து வந்ததும், அந்த ஏரியிலுள்ள அனைத்துத் தண்ணீரும் அப்பாத்திரத்துக்குள் வந்து அந்த ஏரி மட்டுமில்லாது, அதனைச் சூழ இருந்த எல்லாக் கிணறுகளும் வற்றி வரண்டு விட்டன. மக்களும், மாக்களும் நீரின்றி செத்து மடிய வேண்டிய அவலநிலை ஏற்பட்டு விட்டது.
ஜெய்ப்பால் திடுக்கிற்று காஜா நாயகம் அவர்களிடம் இரங்கி வேண்ட, பாத்திரத்தில் எடுத்த நீரை ஏரியிலேயே கொட்டும்படி பணித்தனர். அவ்வாறே செய்ய ஏரி தண்ணீரால் நிரம்பி தளும்பியது.

ரஹ்மத் ராஜகுமாரன் .
" கடலுக்குள் கலந்த பிறகு உப நதிகளைப் பற்றி ஒரு வார்த்தையும் தேவையில்லை "
ஹகீம் சனாய்

கராமத் 15
நாகூர் ஷாஹுல் ஹமீது வலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களது காலம் கி.பி 1532-1600 என அறிஞர்கள் கருதுகின்றனர்.
முஹம்மது நபியின் வழித்தோன்றல் சையிது ஹஸன் குத்தூஸ் என்பவருக்கும், நபியின் மருமகன் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வழித்தோன்றலான சையித் ஹமீதுத்தீன் மகளுமான அன்னை பாத்திமாவுக்கும் மகனாக சுமார் ஐநூறு வருடங்களுக்கு முன்னால் இந்தியாவின் மாணிக்கப்பூர் நகரில் பிறந்தவர்கள்தான் ஷாஹுல் ஹமீது (ரலி) அவர்கள்.

வாலிப பருவம் அடைந்தது ஷாஹுல் ஹமீது (ரலி) அவர்கள் தங்களுக்கான ஞானகுருவைத் தேடி, ஹிஜ்ரி 928ம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் ஒரு திங்கட்கிழமை வழித்துணையின்றி, கைச்செலவுக்குப் பொருள் இன்றி, துறவுக்கோலத்துடன் குவாலியர் பட்டணத்துக்கு விரைந்தார்கள்.
நடை பயணமாக காடுகளை கடந்து வந்து கொண்டிருந்த நாயகத்தை திருடர்கள் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் நெருங்கினார்கள்.
அவரிடம் பொருள் இல்லாததால் நாயகத்தை கொலை செய்யக் கருதி, ஆயுதங்களால் வெட்டியவர்கள் தங்கள் உடல்களே துண்டாகி விழுந்தனர்.
கொள்ளையர்களின் உறவினர்கள் மன்னிப்பு கோரியதைத் தொடர்ந்து அவர்களின் உடலை ஒட்டி, உயிர் கொடுத்து அற்புதம் நிகழ்த்தினார்.
முஹம்மது கௌது (ரஹ்) அவர்களிடம் சென்று அவரது மெய்ஞ்ஞான பயிற்சிக் கூடத்தில் பயின்று மெய்ஞ்ஞானத் தீட்சை பெற்றுக் கொண்டார்கள்.
பத்து ஆண்டுகள் மெய்ஞ்ஞானக் கல்வி பயின்றவர், பின்னர் அங்கிருந்து கிளம்பினார்கள். அவருடன் நானூற்று நாற்பது சீடர்கள் உடன் சென்றனர்.
ஊர்தோறும் மக்களுக்கு உபதேசித்தும், உண்மையைப் பேணச் செய்து இஸ்லாத்தை நிலை நாட்டிக் கொண்டே நாயகம் அவர்கள் மாணிக்கப்பூர் வந்தடைந்தனர்.
அங்கு கொஞ்ச காலம் இருந்தவர்கள் வீட்டில் திருமண ஏற்பாடுகள் செய்வதை தடை செய்தவர்களாக சீடர்களுடன் லாகூர் சென்றார்.

அங்கு இறைவனின் ஆணைப்படி காழி நூருத்தீன் முஃப்தி என்பவரின் மனைவி ஜஹாரா பீபிக்கு தான் மென்ற வெற்றிலை தாம்பூலத்தை கொடுத்து அவரை கருவுறச் செய்தார்கள்.
அவர் பெறப்போகும் முதல் குழந்தைக்கு 'முஹம்மது யூசுஃப்' என பெயரிட நூருத்தினிடம் தெரிவித்ததோடு, குழந்தையின் தன்மை குறித்தும் தெரிவித்த நாயகம் தன் சீடர்களுடம் பயணத்தை தொடர்ந்தார்கள்.

ஒருநாள் இரவு தொழுகையின் போது, தனது தந்தை மரணிப்பதை அறிந்த நாயகமவர்கள் தன் சீடர்களுடன் ஒரே இரவில் ஆசியா மைனரிலிருந்து இந்தியாவின் மாணிக்கப்பூரை நடந்தே அடைந்து அதிசயம் நிகழ்த்திய நாயகம், தந்தை மறைந்து 40 தினங்களுக்குப் பின் அரேபியாவுக்கு கிளம்பினார்கள்.
நாயகம் அவர்கள் தங்களின் 37 ம் வயதில் ஜித்தா துறைமுகத்திலிருந்து கப்பல் ஏறி கேரளாவின் பொன்னாணி எனும் ஊரில் கரையிறங்கினார்கள். அப்போது நாயகத்துடன் அவரது மகன் யூசுஃப் ஆண்டகையும் இருந்தார்கள்.
பின்னர் அங்கிருந்து லட்சத்தீவுகள், சிலோன் முதலிய வெளிநாடுகளுக்கும் காயல்பட்டணம், நத்தம், மேலப்பாளையம் போன்ற பகுதிகளுக்கும் சென்று இறைப்பிரசங்கம் செய்தவர் தஞ்சாவூரை அடைந்தார்கள்.
அதை ஆட்சி செய்த அச்சுதப்ப நாயக்கன் உடல்நலம் குன்றியிருந்தார். நாயகத்தின் சிறப்புகள் தெரிந்து அவரைக் கண்டு நோய் நீங்கப்பட்ட மன்னன், அதற்கு வெகுமதியாக நிலங்களைக் கொடுத்தார். அந்த இடத்தின் பகுதியில் தான் தர்காவும், அதைச் சேர்ந்த குளம் முதலிய கட்டிடங்களும் அமைந்துள்ளன.
ஒவ்வொரு நாளும் நாகூர் தர்காவில் ஜாதி ,மதபேதங்கள் இன்றி அனைத்து மக்களும் ஜியாரத்திற்கு வருகின்றனர்

"அவனது வாசலில் முஸ்லீம் யார் ? கிறிஸ்தவன் யார் ? நல்லவன் யார் ? கெட்டவன் யார் ? எல்லோரும் தேடுபவர், அவனோ தேடப்படுபவன் " _ ஸனாய்

நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் கராமத்

கராமத் 16

(முஃஜிஸாத்தா ? கராமத்தா ?)
அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் சமுகத்திற்கு அஸீதுப்னு ஹுளைர் (ரலி) அவர்களும் , உப்பாதுப்னு பஷர் (ரலி) அவர்களும் இருள் சூழ்ந்த ஓர் இரவில் சென்றிருந்தார்கள் .
பிறகு அவ்விருவரும் ஒன்றாக திரும்பி வரும்போது அவர்களுக்கு முன்பாக இரு ஜோதிப் பிரகாசங்கள் அவ்விருவர் முன் ஜொலித்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தன .
அவ்விருவர்கள் பிரிந்து தனித்தனியே செல்ல முற்பட்ட போது அந்த இரு ஜோதிகளும் தனித்தனியே பிரிந்து அவர்கள் வீடு சேரும் வரை அவரவருடன் போய்க் கொண்டிருந்தன என்பதாக அனஸ் (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள் .
அது என்ன ஒளி ? இது முஃஜிஸாத்தா ? கராமத்தா ? நீங்கள்தான் சொல்ல வேண்டும் .
இந்த ஹதீது ஸஹிஹுல் புகாரியிலும் கூறப்பட்டுள்ளது. (புகாரி 3639)

கராமத் 17

(முஃஜிஸாத்தும் Vs கராமத்தும்)

அரூபியான அல்லாஹ் ﷻ அகிலத்தில் தனக்குப் பிரதிநிதியாகச் சொரூபியான ஸெய்யிதுனா அபுல் பஷர் ஆதம் عليه السلام அவர்களை உண்டாக்கினான் .
"லாயஸாலு அப்தீ ... என்னுடைய அடியான் நபிலான வணக்கங்களையும் விருப்புடன் பேணிச் செய்பவனாக நீங்கா வண்ணமாகி எனது பொருத்தத்தை பெறும் வண்ணம் நெருங்கி, நான் அவனை நேசிக்கும் அளவுக்கு அகிவிடுகின்றான் ." என்ற ஹதீது குத்ஸியின்படி
ஆதம் عليه السلام அவர்கள் குர்பூ- பறாயிலு , குர்பூ-நவாபிலு அமல் செய்து நிறப்பமானபடியால் அல்லாஹ் ﷻ வுக்கு கலீபாவாயிருந்து ,உலகத்தின் காரியாதிகளை நடத்தி வந்திருக்கின்றார்கள். அவர்களில் நின்றுமே பஷரிய்யதென்னும் மனுவர்க்கம் இறுதித் தீர்ப்பு நாள் பரியந்தம் வெளியாகிக் கொண்டே வருகின்றது.
ஸெய்யிதுனா அபுல் பஷர் ஆதம் عليه السلام அவர்கள் உள்ரங்கத்தில் விலாயத்தும் வெளிரங்கத்தில் நுபுவ்வத்தும் உடையவர்களாயிருந்தார்கள்.
அவர்களுக்குப் பிறகு பல நபிமார்கள் வெளியாகி இறுதி நபியாக எம்பெருமானார் ﷺ அவர்கள் தோன்றினார்கள்.
எம்பெருமானார் ரஸூலே கரீம் ﷺஅவர்களுக்குப் பிறகு நபியில்லையாகையால், அவர்கள் பால் பகிரங்கமாக இருந்த நுபுவ்வத் அந்தரங்கமாகி, அந்தரங்கமாக இருந்த விலாயத் பகிரங்கமாயிற்று .
அந்த விலாயத்தைச் சுமந்தவர்கள் தான் அவ்லியாக்களாவர் . ஆகவே நபியுடைய முடிவு வலியுடைய ஆரம்பமாகும் .
நுபுவ்வத்தாகிய நபித்துவத்தில் தொடர்பு முடிவடைந்து விட்டபடியால், ஒவ்வொரு காலத்திலும் நபியின் பிரதிநிதியாக ஒருவர் நியமனமாகின்றார் .அத்தகையவர் யுகமுடிவு நாள் வரை ஏற்பட்டுக் கொண்டேயிருப்பர் .

அவரே ஆண்டவனுக்கு முடுகுதல் (திருப்தியைப்) பெற்ற வலி,கூட்டத்தினருக்கு இமாம் ,ஒரே நேர்வழி காட்டக்கூடிய ஹாதியும் மஹ்தியுமாவார் . வலது ,இடது இரு பக்கங்களிலும் அன்னாருக்கு அமைச்சர்கள் இருக்கின்றனர். அவர்களும் வலிமார்களாவே இருக்கின்றனர் என்பதாக மவ்லானா முஹம்மது ஜலாலுதீன் ரூமி رضي الله عنه அவர்கள் மஸ்னவி ஷரீபில் குறிப்பிட்டுள்ளார்கள் .
'அல்லாஹ் ﷻ நபிமார்களுக்கு தந்து திருவசனமாகிய வஹியைக் கொண்டு பயிற்சி அளித்தான் . அவ்லியாக்களுக்கு தெய்வீக உதிப்பாகிய இல்ஹாமைக் கொண்டு பயிற்சி அளிக்கிறான் . அவ்லியாக்கள் நபிமார்களுடைய நிருவாகப் பொறுப்பாளர்களாவும், பிரதிநிதிகளாகவும் ,வாரிசுகளாகவும் ஊழியர்களாகவும் இருக்கின்றார்கள் .
இத்தகைய நல்லடியார்களே உலகப் பிரஜைகளுடையவும், உலகத்துடையவும் காரியஸ்தர்களாகவும், உலகத்தை நிலைப் பெறச் செய்பவர்களாவும் இருக்கின்றார்கள் . அவர்களைக் கொண்டே உலகமும் நிலை பெற்றிருக்கின்றது .
அவர்கள் சிருஷ்டியை ஆளுபவர்களாகவும் ,மெய்ப்பொருளின் பிரதிநிதிகளாகவும் இருப்பது புறத்தோற்றத்தில் அன்று உள்ரங்கத்திலேயாம் ' என்பதாக மஹ்பூபே ஸுப்ஹானி,மஹ்ஷுக்கே ரஹ்மானி ,கிந்திலே நூரானி தாஜுல் அவ்லியா ஸெய்யிதுனா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் பத்ஹுர் ரப்பானில் உபதேசித்துள்ளார்கள்
'அன்னாரே சர்வ இரட்சகர் ,அன்னாரைப் பொறுத்தே சகல லோகக் காரியாதிகளெல்லாம் சுற்றியாடுகின்றன. அண்ணரைக் கொண்டே அல்லாஹ் ﷻ உலகங்களைக் காக்கின்றான் .
அன்னாரே மஹ்தீ என்றும்,காத்தமுல் அவ்லியா என்றும் சொல்லப்படும் .அன்னவர் காலத்தில் அன்னார் தான் காத்தமுல் அன்பியா ,ஸெய்யிதுனா முஹம்மது ﷺ அவர்களின் பதவியாகிய மகாமுன் மஹ்மூதாவில் தரிப்பட்டிருப்பவர். அன்னாரே கலீபதுல்லாஹ் என்ற தெய்வப் பிரதிநிதியாக இருக்கின்றார் ' என்பதாக ஆரிபு ரப்பானி ஹழ்ரத் ஸெய்யிது அப்துல் கரீம் ஜீலி رضي الله عنه அவர்கள் இன்ஸான் காமில் நூலில் கூறுகிறார்கள் .

ஆதாரம் : ஹிதாயதுல் அனாம் இலாஜியாரதில் அவுலியாஇல் கிராமிலிருந்து ....

" வாயை மூடு , கண்ணை மூடு , காதை மூடு , இறைவனின் ரகசியம் உனக்குத் தெரியாவிட்டால் , என்னைப் பார்த்துச் சிரி.
_ மௌலானா ரூமி

கராமத் 18
(சித்திக்காரன் வரைந்த கஃபா)

அபுல் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பதாயிகு நகரத்தில் அபூபக்கர் ரிஃபாயி அவர்கள் புதல்வி ஆயிஷாவை திருமணம் முடித்ததாக பல்வேறு கிரந்தங்களில் காணப்படுகிறது.
நிறைமாத கர்ப்பிணியாய் இருந்த ஆயிஷா அம்மையார் அவர்கள் தொழுகை முடிந்து தம்முடைய வயிற்றைப் பார்த்துக் கொண்டே "அஸ்ஸலாமு அலைக்கும் என் மகனே" என்று விளிக்கிறார்கள். அதற்கு கருவிலிருந்து, வஅலைக்குமுஸ்ஸலாம் என்று பதிலும் வந்தது
இதை அம்மையாரின் சகோதரர் கவனித்தார். இந்த சம்பவத்திற்கு நாற்பதாவது நாள் ஹிஜ்ரி 512ஆம் வருடம் ரஜப் மாதம் வியாழக்கிழமை பதாயிகு நகரில் ஹஸன் என்ற இடத்தில் செய்யிது அஹ்மது கபீர் நாயகம் ஜனனம் ஆனார்கள்.

காலங்கள் உருண்டோடின. நாயகத்திற்கு நாலரை வயது. செய்கு அலீ என்ற பெரியாரிடம் கல்வி கற்பதற்காக ஒப்படைக்கப்பட்டார். பத்து வயது அடையும் முன்போ அனைத்து விதக் கல்வியிலும் தேர்ந்து விட்டார்.
தமது 28ஆவது வயதிற்குள் ஆண்டகை அவர்கள் மிகப் பிரபலமாகி விட்டார்கள். வெகு காலம் வரை தனித்தே இருந்த ஆண்டகை அவாக்ள் மெய்ஞ்ஞானப் பெருவள்ளலாய் விளங்கிய ஷெய்கு அலியுல் வாஸ்தி காதிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் 'இர்ஷாத்' பெற்றுக் கொண்டதும் மக்களுக்கு உபதேசிக்கவும் அவர்களைக் கடைந்தேற்றவுமான காரியத்தில் ஈடுபடத் துவங்கினார்கள்.
கஃபத்துல்லாஹ்வை தரிசிக்க வேண்டும் என்ற ஆசை அவர்கள் மனதில் உண்டானவுடன் திடீரென ஒருநாள் எவ்விதமான பிரயாண முன்னேற்பாடுகளும் இன்றி மாற்றுடை கூட இல்லாமல் திடீரென ஒருநாள் காலையில் புறப்பட்டு விட்டார்கள்.
ஊர் எல்லையை தாண்டி சில கஜ தூரமே சென்றிருப்பார்கள். சற்றுத் தொலைவில் கஃபாவின் ஹரம் பளீரென்று தோன்றியதும் திடுக்கிட்டு நின்றனர்.

அவர்களுடன் கூட சென்ற யாகூப் என்பவர் என்ன பிரமை பார்த்தீர்களா? என்றார்.
பிரமை அல்ல நிஜம் என்று ஆண்டகையின் முகம் விசனத்தால் மலர்ச்சியை இழந்தது. கண்களில் நீர் மணிகள் மின்னின. அந்த கஃபா தரிசனத்தை 'சித்திக்காரன் வரைந்த கஃபா படத்தை வீட்டில் இருந்தவாறு பார்க்கிறதை கஃபா தரிசனம் என்று எனக்குள் கொள்ள முடியாது' என்று உரத்த குரலில் சொன்ன ஆண்டகை அவர்கள் சட்டென்று ஊரை நோக்கி திரும்பினார்கள்.

இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வமிசவழியில் வந்துதித்த மன்சூர் அலி ரலியல்லாஹு அன்ஹு என்ற பெரியார் ரிபாஃயாக் கிளையாரில் தோன்றிய மாபெரும் மகான். தம் இளம் வயதிலேயே ஆயிரக்கணக்கான முரீதீன்களை பெற்றிருந்தார்கள்.
மன்சூர் அலி (ரலி) இறைநேசராகவும், மிகப் பெரிய ஞானியாகவும் கருதப்பட்ட அவர்கள் பிற உயிர்களிடம் பேசக் கூடிய ரகசிய ஞானம் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். துஷ்ட மிருகங்களை கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.
தன் மாமனார் மன்சூர் அலி நாயகத்திடம் பைஅத் பெற்றுக் கொண்டு, அன்னாரிடம் கிலாபத்தும் பெற்றுக் கொண்டார்கள். ரிஃபாயிய்யா தரீகாவில் ஆண்டவர்கள் முரீதானதும் அந்த தரீகா விரைவில் பிரபலமாயிற்று.
அதன்பின் மரணத்திற்கு பின் மரணித்தல் என்ற நிலையை பெற்றுக் கொண்டார்கள்.
ஷரீஅத்தை மீறுவது என்பது ரிபாயி ஆண்டகை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்று. அந்தளவிற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது காதல் கொண்டிருந்தார்கள்.
தம்மிடம் முரீது வாங்க வருபவர்களிடம் பெயர், குலம், கோத்திரம், கல்வி, முகவரி பற்றி விசாரிப்பதில்லை. முதலில் ஒளு செய்துவிட்டு வரச் சொல்வார்கள். தம் எதிரே உட்காரச் செய்வார்கள். பின்னர் அவரைப் பார்த்து அல்லாஹ்வின் தொண்ணூற்று ஒன்பது திருநாமங்களையும் வரிசையாக ஒவ்வொன்றாய் நிறுத்தி நிறுத்தி சொல்வார்கள்.

அவ்விதம் சொல்கையில் ஏதாவது ஒருநாமம் வந்தவரை உணர்ச்சி கொள்ளச் செய்யும். அவரது அமைதியான நிலையிலும் மூச்சிலும் மாறுதல் உண்டாகும். உடனே அந்த மனிதனின் ஆன்ம குணத்தின் அடிப்படையை ஆரிஃப் நாயகம் புரிந்து கொள்வார்கள். அதன்பின் அவரிடம் பைஅத் எனும் உறுதிப்பிரமாணம் வாங்கிக் கொண்டு தீட்சை வழங்கி, அவர் செய்ய வேண்டிய திக்ர்களை உபதேசித்து அதை பயிற்சி செய்யும்படி அனுப்புவார்கள்.
மூன்று முறை ஓதியும் கேட்டவர் உள்ளத்தில் அது எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லையெனில், "இன்னும் நீங்கள் பக்குவம் பெறவில்லை. உங்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டும் .உங்கள் வீட்டின் நான்கு சுவர்களும் இடிந்து கிடக்கின்றன. வெட்ட வெளி சங்கீதத்தை எதிரொலிப்பதில்லை " என்று சொல்லி திருப்பி அனுப்பி விடுவார்கள்.
வேறு எந்த ஞானப் பாதையிலும் இல்லாத ஒரு சிறப்பான அம்சம் இது. அல்லாஹ்வின் திருப்பெயர்களோடு தொடர்பு இல்லாத பொருளோ , குணமோ இந்தப் பிரபஞ்சத்தில் கிடையாது.
படைத்தவனிடமிருந்து படைப்பினம் வேறுபட்ட பெயரோடும், தோற்றத்தோடும் இருந்தாலும், படைத்தவனின் உயிர்க்குணம் எங்காவது பிரதிபலிக்கத்தான் வேண்டும் என்பது ஆரிஃப் நாயகத்தின் கருத்து .
அதே சமயம் தன்னிடம் வந்தது இனிய சங்கீதத்தை எழுப்பக் கூடிய மெல்லிய நரம்புத்தந்தி தானா அல்லது மரக்கட்டையா என்று தெரிந்து கொள்ளவும் இந்த முறை பயன்பட்டது .

ஹிஜ்ரி 555ல் தமது 48வது வயதில் கருத்த கம்பளி ஒன்றைப் போர்த்திக் கொண்டு தன்னந்தனியாக திருமதினா மாநகர் நோக்கிப் புறப்பட்டார்கள்.
மதீனா நகரின் தலைவாயிலை மிதித்ததுமே "யாரஸூலல்லாஹ், யாரஸூலல்லாஹ் " என்று பிதற்றிக் கொண்டே ரவ்லா ஷரீபுக்குள் நுழைந்தார்கள். தலை குனிந்தவாறு வெகுநேரம் மௌனமாய் நின்றிருந்தார்கள்.
அங்கே எதிர்பாராமல் ஏராளமான வலிமார்கள் அங்கே குழுமியிருந்தார்கள். கௌதுல் அஃலம் முஹ்யித்தீன், ஷெய்கு இத்தீ இப்னு மூசாஃபிக், ஷெய்கு அப்துர் ரஜ்ஜாக் ஹுசைனி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் உட்பட அங்கே 9900வலிமார்கள் இருந்தனர் என நூருல் அஹ்மதிய்யா என்ற நூலில் திட்டமாகக் கூறியிருப்பதாக ருமூஜுல் ஃபுகாரா என்ற உர்து நூலில் காணப்படுகிறது.
காதலனின் ஒருமித்த மனத்துடன் புறச் செயலை மனம் அறியாத பித்தனின் ஆசை வெறியுடன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ரவ்லாவையே பார்த்தவாறு நின்றிருந்த ஆண்டகை உரத்தக் குரலில்,
'அஸ்ஸலாமு அலைக்கும் யாஜத்தீ –எனது பாட்டனாரே!' என்றதும் 'வ அலைக்குமுஸ்ஸலாம் யா வலதீ- எனது பேரனாரே' எனப் பெருமானாரின் ரவ்லாஷரீஃபின் உள்ளிருந்து பதில் வந்ததை அனைவரும் கேட்டனர்.

அதன்பின் உணர்ச்சி வசப்பட்ட ஆண்டகையின் தூய கோரிக்கைகள் கவிதைத் துளிகளாய் வடிய ஆரம்பித்தன.
‘நான் தூரத்தே இருக்கும்போது
தங்கள் கபுரை முத்தமிடுவதற்காக
எனது உயிரை அனுப்பிக் கொண்டிருந்தேன்
அந்த உயிர் உடலோடு இப்போது
தங்கள் சமூகம் வந்திருக்கிறது.
தங்கள் வலது கரத்தை நீட்டுங்கள்,
என் உதடுகள் அதனை முத்தமிட்டுக் கொள்ளட்டும்’
இந்தக் கவிதை அமுதின் கடைசிச் சொல் அவர்களது நாவினின்று கழன்று விழுந்ததும் மின்னல் ஒன்று பளீரிட்டு நிலைத்தாற் போன்ற உணர்ச்சி பெருமானாரின் கபுர்
ஷரீஃபினின்று அவர்களது புனிதக் கரம் வெளிப்பட்டதைக் கண்ட ஆண்டகை யாரஸூலல்லாஹ்! எனக் கத்திக் கொண்டே ஓடினார்கள்.
வானமும் வையமும் அடைந்திராத அந்தப் பாக்கியத்தை நினைத்துப் பூரித்துக் கொண்டே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்கரத்தை ஆசைதீர முத்தமிட்டுக் கண்ணீர் சொரிந்தார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்

கராமத் 19

(விதிப் பலகையைப் பார்ப்பவர் அவ்லியா அல்ல; விதியை மாற்றி எழுதுபவரே அவ்லியா)
பிரபல்ய வியாபாரியும், செல்வந்தருமான ஸ்பெயின் வாசி ஒருவருக்கு எல்லாவிதமான ஐசுவரியச் சம்பத்துக்கள் இருந்தும் , ஒரே ஒரு பெருங்குறை அதுதான் புத்திரர் சம்பத் இல்லாத குறை.
தான் கேள்வியுற்றிருந்த பெரியவர்கள் யாவரிடத்திலும் தேடிச் சென்று, தனது மனக்குறையை அவர் தெரிவித்தார். யாவரும் அவருக்கு " விதியிலேயே பிள்ளை பாக்கியம் பெறுவதற்கு எழுதப்படவில்லை " என்ற பதிலையே கூறினர். அவரும் மிகவும் மன கவலையோடு இருந்து வந்தார்.
கடைசியாக ஹஜரத் கௌதுல் அஃளம் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களது கீர்த்திப் பிரஸ்தாபத்தைக் கேள்வியுற்று, பாக்தாத் நகருக்கு சென்று, தனது நிலைப்பாட்டை அவர்களிடம் கூறினார்.
கௌதுல் அஃலம் அவர்கள், " லவ்ஹை நோக்கினேன் அதில் உமக்கு பிள்ளைகுட்டி பாக்கியம் இல்லை என்றே தெரிய வருகிறது " என்று சொன்னார்கள்.
உடனே அம்மனிதர் கலங்கி பரிதவித்து , "நாயகமே இந்த துர்பாக்கியவனக்கு பிள்ளை இல்லை என்று எல்லோருமே கூறிவிட்டார்கள். இரப்போர்க்கு இல்லை என்று சொல்லாமல் கேட்டதை ஈந்து வழங்கும் வள்ளலாகிய தங்கள் வாயிலைத் தேடி வந்துள்ளேன். இந்த பாவியின் கோரிக்கை தயவுகூர்ந்து, பூர்த்தியாக்கி கிருபை செய்தருள வேண்டுகிறேன் "
அவரது மனோ நிலையை அறிந்து மனமிறங்கி, கௌதுல் அஃளம் (ரலி) அவர்கள், " அலியே..! என்னில் நின்றும் உமக்கு ஒரு பிள்ளையை தருகிறேன். உமது முதுகை எனது முதுகுடன் சேரும்.எனது முதுகுத்தண்டில் இருப்பது ஓர் ஆண் குழந்தை. அது உமது இல்லத்தில் பிறக்கும் . எமது எல்லாவித இல்முகளுக்கும் அந்த பிள்ளையே வாரிசாவார். அவர் எமது நாவாகவே பேசுவார். எவரும் வெளிப்படுத்தாத அகமிய ரகசியங்களை எல்லாம் அவர் பகிரங்கப் படுத்துவார். புகழோடும், கீர்த்தியோடும் விளங்குவார். அவருடைய பெயர் முஹம்மது .ஆனால் "முகையதீன் " என்ற காரணப் பெயருடன் விளங்குவார் " என்று ஆசி கூறி அனுப்பினார்கள்.
அவரும் சந்தோஷத்துடன் வீடு திரும்பினார் .அன்று அவர் மனைவி கர்ப்பவதியாகி அப்பால் ஜனனமானார்கள்தான் ஹஜ்ரத் ஷைகுல் அக்பர், ஸையிதுனா முஹம்மது ,
முஹிய்யத்தீன் இப்னு - அரபி (ரலி) அவர்களாவர்கள்.
இவ் வரலாறு, 'மனாகிப் கௌதிய்யா '76-வது பக்கத்திலும் , 'கலாயிதுல்_ ஜவாஹிர் 'கிரந்தத்திலும் காணலாம்.
விதிப் பலகையைப் பார்ப்பவர் அவ்லியா அல்ல; விதியை மாற்றி எழுதுபவரே அவ்லியா

கராமத் 20

(அறுத்து கொன்று உயிர்பித்தல்)
வலிமார்கள் மூலம் செய்யப்படும் அற்புதங்களை கராமத் என்றும் , நபிமார்கள் மூலம் செய்யப்படும் அற்புதங்களை முஃஜிஸாத் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு அற்புதங்களையும் இறைவன் புறத்தாலே செய்யப்படுகிறது.

وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اَرِنِىْ كَيْفَ تُحْىِ الْمَوْتٰى قَالَ اَوَلَمْ تُؤْمِنْ قَالَ بَلٰى وَلٰـكِنْ لِّيَطْمَٮِٕنَّ قَلْبِىْ قَالَ فَخُذْ اَرْبَعَةً مِّنَ الطَّيْرِ فَصُرْهُنَّ اِلَيْكَ ثُمَّ اجْعَلْ عَلٰى كُلِّ جَبَلٍ مِّنْهُنَّ جُزْءًا ثُمَّ ادْعُهُنَّ يَاْتِيْنَكَ سَعْيًا وَاعْلَمْ اَنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ
அன்றி, இப்ராஹீம் (இறைவனை நோக்கி) "என் இறைவனே! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய். (அதை) நீ எனக்குக் காண்பி" எனக் கூறியபோது, அவன் (இதை) "நீங்கள் நம்பவில்லையா?" என்று கேட்டான்.
(அதற்கு) அவர் "நான் நம்பியே இருக்கின்றேன். ஆயினும், (அதனை என் கண்ணால் கண்டு) என்னுடைய உள்ளம் திருப்தியடைவதற்காக (அதனைக் காண்பி)" எனக் கூறினார்.
(அதற்கவன்) "நான்கு பறவைகளைப் பிடித்து நீங்கள் அவைகளைப் பழக்கி, பின்னர் (அவைகளைத் துண்டு துண்டாக அறுத்து) அவற்றில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு மலையின் மீதும் வைத்துவிட்டு (நடுவில் இருந்துகொண்டு) அவைகளை நீங்கள் கூப்பிடுங்கள். அவை உங்களிடம் பறந்துவந்து சேரும் (எனக் கூறி, அவ்வாறு செய்து காண்பித்து)
"நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், மிக்க நுண்ணறிவுடையவனுமாக இருக்கின்றான் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்" என்றான்.
(அல்குர்ஆன் : 2:260)

அடுத்து ,
فَقُلْنَا اضْرِبُوْهُ بِبَعْضِهَا ‌ كَذٰلِكَ يُحْىِ اللّٰهُ الْمَوْتٰى ۙ وَيُرِيْكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ
“(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு துண்டால் அ(க்கொலையுண்டவனின் சடலத்)தில் அடியுங்கள்” என்று நாம் (மூஸாவுக்கு) சொன்னோம்.
இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான்; நீங்கள் (நல்ல) அறிவு பெறும் பொருட்டுத் தன் அத்தாட்சிகளையும் அவன் (இவ்வாறு) உங்களுக்குக் காட்டுகிறான் (அல்குர்ஆன் : 2:73)
மேற்கண்ட இரு நிகழ்வுகளில் நபிமார்கள் கேட்டதற்கிணங்க இறைவன் அறுத்து கொன்று உயிர்பித்துக் காண்பித்தான். ஆனால் நபி (ஸல்) அவர்கள் ஒரு நிகழ்வில் .....
.... X .... X ....
அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு விருந்தளிக்க ஜாபிர் (ரலி) அவர்கள் தனது வீட்டில் ஓர் ஆட்டுக்குட்டியை அறுத்து சமையலுக்கு ஏற்பாடு செய்தார்கள்.
ஆட்டுக்குட்டியை தந்தை அறுப்பதை பார்த்துக்கொண்டிருந்த அவர்களது மூத்த புதல்வன் தன்னுடைய தம்பியை பிடித்து அவ்வாறே அறுத்து விட்டான்.
இதைக்கண்ட அவனுடைய தாய் விரட்டி பிடிக்க ஓடவே, மூத்த மகனாகிய அவன் மாடியில் ஏறி கால் தவறி கீழே விழுந்து அவனும் இருந்தான்.
அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் விருந்துண்ண வந்த சந்தர்ப்பத்தில், மூத்த மகனுடையவும், இளைய மகனுடையவும் மரணச் செய்திகளை அறிந்து துஆ செய்தார்கள். இறைவன் அருளால் அவ்விருவரும் உயிர் பெற்று எழுந்தார்கள்.
இவ்வரலாறு ஷவாஹிதுன் னுபுவ்வத்தில் வருவதாக அன்வாரே - ஆப்த்தாபே - ஸதாகத் , 2-வது பாகம், 207 வது பக்கத்தில் கூறப்படுகின்றது .
மேலும் இஹ்யாஉல்குலூப் -பீ - மவுலிதில் மஹ்பூப் 94 - வது பக்கத்திலும் சொல்லப்பட்டுள்ளது

கராமத் 21
(பிதாவின்றி பிள்ளையை வெளிப்படுத்தல்)
தகப்பன் இன்றி ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பிறந்த வரலாறு குர்ஆனில் கூறப்படுகின்றது.
قَالَتْ اَنّٰى يَكُوْنُ لِىْ غُلٰمٌ وَّلَمْ يَمْسَسْنِىْ بَشَرٌ وَّلَمْ اَكُ بَغِيًّا
அதற்கு அவர் (மர்யம்), “எந்த ஆடவனும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை பிசகியவளாக இல்லாதிருக்கும் நிலையிலும் எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்?” என்று கூறினார்.
قَالَ كَذٰلِكِ قَالَ رَبُّكِ هُوَ عَلَىَّ هَيِّنٌ وَلِنَجْعَلَهٗۤ اٰيَةً لِّلنَّاسِ وَرَحْمَةً مِّنَّا وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا
“அவ்வாறேயாகும்; “இது எனக்கு மிகவும் சுலபமானதே; மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாகவும் நாம் அவரை ஆக்குவோம்; இது விதிக்கப்பட்ட விஷயமாகும்” என்று உம் இறைவன் கூறுகிறான்” எனக் கூறினார்.
فَحَمَلَتْهُ فَانْتَبَذَتْ بِهٖ مَكَانًا قَصِيًّا
அப்பால், மர்யம் ஈஸாவை கருக்கொண்டார்; பின்னர் கர்ப்பத்துடன் தொலைவிலுள்ள ஓரிடத்தை சென்றடைந்தார்.
(அல்குர்ஆன் : 19:20-22)
ஹஜ்ரத் ஷாஹ் ஹஸன் அலீ அஜீமாபாதீ (ரலி) அவர்கள் மிகவும் வலுப்பமான வலியுல்லாவாகவும், பிர்தவுஸிய்யாத் தரீக்காவின் ஷைகாகவும் இருந்தார்கள்.

அவர்களது முரீதுகளில் ஒருவருக்கு வெகுகாலமாக குழந்தை இல்லை. அவரது மனைவி மலடியாக இருந்தாள். அவர் இந்தக் குறையை ஷைகு அவர்களிடம் முறையிட்டார்.
ஷைகு அவர்கள் அவரது மனைவியை தனி அறையில் கல்வத் இருக்கச் செய்து கன்னிப்பெண் யாவரும் அப்பக்கத்தில் போகக்கூடாது என்றும் தடை விதித்திருந்தார்கள்.
கல்வத்தில் இருந்த அப்பெண்மணியை வெளியிலிருந்து கொண்டு ஷைகு அவர்கள் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

தற்செயலாய் ஒன்பது வயதுள்ள ஒரு சிறுமி, கதவு துவாரத்தின் வழியாக பார்த்தாள் . ஷைகு அவர்களின் கூர்மையான நோக்கு அந்த சிறுமி மீதும் விழுந்தது. மலடியான இந்தப் பெண்ணும் கர்ப்பவதியானாள். அந்த சிறுமியும் கர்ப்பவதியானாள்
அற்புத வரலாறு, "மிர்ஆத்துல் கவனைன் "என்ற நூலில் 443 - வது பக்கத்தில் சொல்லப்படுகின்றது.
ஆகவே எக்காலமும் அவ்லியாக்களுக்கு கராமத்து செய்ய சக்தி உண்டு . மவுத்தானவர்களை ஹயாத்தாக்கவும் தத்துவம் உண்டு . பிதாவின்றி பிள்ளையே வெளிப்படுத்தவும் வல்லமை உண்டு. அவுலாது பிள்ளைக்குட்டி பாக்கியம் வேண்டும் என்று அவர்களிடம் கேட்பது ஆகும் .
இவை எல்லாம் குர்ஆன், ஹதீது, மற்றும் பெரியவர்களின் சரித்திரங்களை கொண்டு ஸ்திரமாகின்றன. இவற்றை மறுப்பவன் சத்தியத்தை மறுப்பவன் ஆவான்.
"கராமத்தைக் கொண்டு தகப்பன் இன்றி பிள்ளையை வெளிப்படுத்த அவுலியாக்களுக்கு சக்தி உண்டா ? " என்று ஆரிபுபில்லாஹ் ஷைகு முஹம்மது கலீலீ , ஷாபியீ (ரலி) அவர்களிடம் வினவப்பட்டது
"அங்ஙனம் செய்ய அவர்களுக்கு சக்தி உண்டு" என்று விடை பகர்ந்தார்கள். இது விவரம், பதாவா கலீலீ 1 - வது பாகம் 79 - வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதார நூல் : ஹிதாயதுல் அனாம் இலாஜியாரதில் அவுலியாஇல் கிராம் .

கராமத் 22

('கராமத் ' தொடர் பதிவுகள் ஏற்படுத்தும் சலனங்கள்)

கராமத் தொடர் பதிவுகள் சில மாற்றுக் கொள்கையுடைய பகுத்தறிவு நண்பர்களுக்கு மிகவும் கடுப்பை ஏற்படுத்தி இருக்கிறது.
" அறிவியல் ரீதியாக குர்ஆனையும், விஞ்ஞானத்தையும் இணைத்து அழகாக சொன்னீர்கள். இப்போது பதிவிடும் பதிவுகள் பகுத்தறிவுடைய எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் " என்று முகநூல் சார்பாக கேட்டுக் கொண்டார்.
சரி, நீங்க சொல்ற அறிவியலின் நவீன கோட்பாடுகளும் உங்கள் பகுத்தறிவை பதம் பார்க்கக் கூடியதையும் நானே ஆரம்ப நாட்களில் சொல்லியிருந்தேனே !...அப்போது இதே நவீனத்துவ கொள்கைக்காரர்களாகிய நீங்கள் பகுத்தறிவு பற்றி எதுவும் பேசவில்லை. 'ஆஹா அற்புதம் ' என்று கூட பின்னூட்டமிட்டீர்களே !
இப்போது இதே அறிவியலுக்கும் கராமத்துகள் உண்டு. அந்த கராமத்துகளைப் பற்றியும் சொல்றேன். உங்கள் பகுத்தறிவை பதமாக பத்திரப்படுத்தி பார்த்துச் சொல்லுங்கள்.
எட்வார்ட் லோரன்ஸ்' (Edward Lorenz) என்பவர் 1963 -ல் அறிவித்த சித்தாந்தம் ஒன்றை சொன்னார் அதற்கு கேயாஸ் தியரி என்று பெயர் . லோரன்ஸின் ஆதார மேற்கோள் ஒன்று அறிவாளிகளை மிகவும் சிந்திக்க வைத்து , இது ஒரு தனி இயலாக வளரும் அளவுக்கு ' கேயாஸ் தியரி ' முக்கியம் அடைந்துள்ளது .
கேயாஸ் தியரி என்பது ஒரு மிகச்சிறிய நிகழ்வு, காரணம்-விளைவு (cause - effect) சுழற்சியில் சிக்கி, காலப்போக்கில் மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கும் சாத்தியக்கூறு உண்டு. இதை இப்படியும் விளக்குவார்கள் .
அவர் கேட்ட கேள்வி " பிரேசில் வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பில் அமெரிக்காவின் டெக்ஸாஸில் புழுதிப் புயலை ஏற்படுத்துமா ? "
உங்களது பதில் என்ன ? ஏற்படுத்தாது என்கிறீர்களா ? ஏற்படுத்தும்.
ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு என்பது எப்போவோ பறந்து, சிறகடித்தது. அந்த சிறகடிப்பினால் காற்றில் அசைவு ஏற்படுத்தப்பட்டது . அதற்கு இப்போ என்ன ?
அந்த ஒரு சிறு காற்றழுத்தம் இடம் மாறி இடம் மாறி எங்கோ கடலிலே உருவாகிய காற்றுக்கு அழுத்தம் கொடுத்தது, இந்தக் காற்றின் அழுத்தம் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஒரு புயலாக

மாறுவதுதான் இந்த கேயாஸ் தியரி அல்லது வண்ணத்து பூச்சி விளைவு ! நம்புங்கள். நான் சொல்றது அதி நவீன விஞ்ஞானம்.
இந்த மாற்றத்திற்கான ஆரம்ப விதை மிக சிறிதாக என்றோ எங்கேயோ போடப்பட்டது ! இதை ஆன்மிகவாதிகள் "விதி " என்கிறார்கள். அறிவியலாளர்கள் அதற்கு "கேயாஸ் தியரி" என்று பெயர் இட்டுள்ளார்கள். அவ்வளவுதான் !
எனவேதான் சொல்கிறேன். "பிரேசிலில் ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பில் அமெரிக்க டெக்ஸாஸில் புழுதிப் புயலை ஏற்படுத்தலாம் என்று !"
இதையே நபிமொழி வாயிலாக சொல்றேன்.
நபித் தோழரின் மரணத்தின் சிறுஅதிர்வு இறை பெரியோனின் மிகப் பெரிய அர்ஷின் அரியணையை அசைத்ததாக நபிமொழி ஒன்று கூறுகிறது
ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:
" சஅத் பின் முஆத் (ரலி) அவர்களின் பிரேதம் (ஜனாஸா) மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டிருந்தபோது , அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "சஅத் பின் முஆத் அவர்களின் இறப்புக்காக அளவற்ற அருளாள(னான இறைவ)னின் அரியணை (அர்ஷ்) அசைந்தது" சொன்னார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் : 4869.
அதே மாதிரி '' ஒரு பெண்ணுக்கு கட்டப்பட்ட தாலி அறுபடும்போது , அல்லாஹ்வின் அர்ஷ் குலுங்குகிறது '' என்பதை உங்கள் ஊரில் சொல்லக் கேட்டிருக்கிறீர்களா ? கேட்டுப் பாருங்கள்.
மிகப்பெரிய இறைவனின் மாபெரும் அர்ஷ், ஒரு முழம் தாலி சரடு அறுபடும்போது குலுங்குகிறது, என்றால் நீங்கள் நம்ப வேண்டும் .இப்போது உங்கள் பகுத்தறிவுக்கு சேதாரம் இல்லையோ ?
கேயாஸ் தியரி என்பது ஒரு மிகச்சிறிய நிகழ்வு, காரணம்-விளைவு (cause effect) சுழற்சியில் சிக்கி, மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கும் சாத்தியக்கூறு உண்டு.
சரி, நவீன விஞ்ஞானத்தின் இன்னொரு கோட்பாடு என்ன சொல்கிறது பாருங்கள் .
பிரபஞ்சத்தின் அத்தனை அங்கங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. அதாவது ' ஒரு புல்லை வெட்டும் போது இந்த பிரபஞ்சத்தையே அசைக்கிறோம்' - இது குவாண்டம் இயற்பியலின்படி நிஜம்.
ஒரு மரத்தின் நான்கு கிளைகளை வெட்டினால் அந்த இடத்தில் நான்கு செ.மீ மழை குறைவாக பெய்கிறது. காரணம் அந்த இடத்தில் செய்யப்பட்ட செயல் கர்ம வினை மரத்தின் கிளையை வெட்டியதற்காக மழை குறைகிறது !
அடுத்து . . . ஒரு பொருளைப் பற்றி சிந்திக்கும் அந்தச் செயலே அந்தப் பொருளையும்,உங்கள்களையும் மாற்றி விடுகிறது என்பதாக குவாண்டம் இயற்பியல் ஆதாரத்துடன் மிகத் தெளிவாக நிரூபிக்கிறது !
ஆனால் ....
' அஜ்மீர் காஜா நாயகம் அன்னாசாகர் ஏரியின் தண்ணீர் முழுவதையும் ஒரே ஒரு கூஜாவில் அடைத்து வைத்துக் கொண்டார்கள் ' என்றதும், பகுத்தறிவுடைய எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று உங்கள் பகுத்தறிவு சொல்லச் சொல்கிறது !
' இனி உங்களிடம் என்ன சொல்ல இருக்கிறது ? '
ரஹ்மத் ராஜகுமாரன் .

கராமத் 23

(இறைநேசர்களின் இறுதிப் பொழுதுகள்)

எல்லாப் புகழும் இறைவனுக்கே. அவ்லியா, அப்தால், குத்பு, கௌது என்றெல்லாம் புகழப்படும் இறைநேசர்களின் படித்தரங்களில் வித்தியாசம் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பொதுவான குணாம்சங்கள் பல உள்ளன. அவற்றைத் தெரிந்துகொள்வது நமக்கு நிச்சயம் நன்மை பயக்கும். அந்த குணங்களை நபிமார்களிடமும் நாம் பார்க்க முடியும். அவ்லியாவெல்லாம் அன்பியாவின் வாரிசுகள்தானே?!
அதற்குமுன், இறைவனைத் தவிர வேறு எதையும், எவரையும் நேசிக்காத இறைநேசர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்ற நினைப்பிலிருந்து நாம் முதலில் வெளியே வரவேண்டும். அது அறியாதவர்களின் பேச்சு. தன் அறிவு மட்டுமே வழிகாட்டி என்று நினைக்கும் அகந்தையின் பேச்சு. இறைநேசர்களும் நம்மைப் போன்றவர்கள்தான் என்று கூறுபவர்கள் அறியாமையில் இருப்பவர்கள்.
மனிதர் செய்வதையெல்லாம் செய்து பார்க்கும் குரங்கு
குறைமனிதரெல்லாம் இறைநேசராக முடியாது விளங்கு
கொஞ்ச நேரம் அவ்லியாவோடு இருங்கள் நூறாண்டுகளின் தூய தொழுகையைவிட அதிக நன்மையைப் பெறுங்கள்
என்றும் சூசகமாக மௌலானா ரூமி இறைநேசர்களின் மகிமையைப் பற்றிப் பேசுகிறார்கள்.

இறைநேசர்களும் உண்கிறார்கள், உடுக்கிறார்கள், தொழுகிறார்கள், நோன்பிருக்கிறார்கள், ஹஜ்ஜு செய்கிறார்கள், நாமும் அதைத்தானே செய்கிறோம் என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் அவர்களது மனநிலைக்கும் நம் மனநிலைக்கும், அவர்களது இபாதத்துக்கும் நமது இபாதத்துக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் உள்ளதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

எல்லா இறைநேசருர்களுக்கும் தான் எப்போது இந்த மண்ணுலகை விட்டும், உடலை விட்டும் நேரடி இறை நெருக்கத்துக்கு செல்லப்போகிறோம் என்று தெரிந்திருந்தது. அது சில மணி நேரங்களுக்கு முன்னதாக இருக்கலாம். சில மாதங்கள், சில ஆண்டுகளுக்கு முன்னதாகவும் இருக்கலாம்.

முஆத் இப்னு ஜபல் (ரலி) என்னும் நபித்தோழரை யெமன் தேசத்துக்கு அளுநராக அனுப்பும்போது பெருமானார் (ஸல்) சில உபதேசங்களை அவருக்குச் செய்தார்கள். செய்துவிட்டு, நான் சொன்னபடியே செய்யுங்கள், ஏனெனில் அடுத்த ஆண்டு நீங்கள் இங்கே வரும்போது நான் இருக்க மாட்டேன் என்று கூறினார்கள்! ஒரு ஆண்டுக்கு முன்பே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தனது மறைவு பற்றித் தெரிந்திருந்தது.

97 ஆண்டுகள் வாழ்ந்த க்வாஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்கள் தான் இறக்கப்போவதை முன்னறிந்து, தன் பிரதிநிதியாக தனக்குப் பிறகு குத்புத்தீன் பக்தியார் அவர்களே இருக்க வேண்டும் என்று சொல்லி, அவரை அஜ்மீருக்கு வரும்படி கடிதம் எழுதினார்கள். அவர் வந்தபிறகு, 'நான் சில நாட்களில் இந்த இடத்தில் அடக்கமாவேன்' என்று கூறினார்கள். அதேபோல, ரஜப் பிறை 06 அன்று மறைந்தார்கள்.
திருமுல்லை வாசலில் அடங்கியுள்ள வலியுல்லாஹ் யாசீன் மௌலானா அவர்கள் மௌத் ஆன பிறகு யார் யாருக்கெல்லாம் சொல்லியனுப்புவது என்று பார்க்க, அவர்களது உற்ற உறவினர், நண்பர்கள் யாரும் விடுபட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக அவர்களது டயரியைப் புரட்ட, அதில் அன்றைய தேதியில் 'இன்று மாலை 5.30 மணிக்கு' என்று அவர்கள் கையால் எழுதப்பட்டிருந்தது. அன்று மாலை அந்த நேரத்தில்தான் அவர்கள் வஃபாத் ஆனார்கள்!

தான் இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு பல்லாக்கு வலியுல்லாஹ், 'இன்னா லில்லாஹி, பல்லாக்குத் தம்பி மறையவல்லவா போகிறார்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அதேபோல நான்கு நாட்களுக்குப் பிறகு, ஹிஜ்ரி 1360 / 1939ல் ரபியுல் ஆகிர் பிறை 25ல் தமது 92ம் வயதில் மறைந்தார்கள்.
நான்கு ஆண்டுகள் 'கல்வத்'தில் இருந்த குணங்குடி மஸ்தான் சாஹிப் அவர்கள் கனவில் தன் நண்பர் புலவர் நாயகத்துக்குத் தோன்றி, அந்த ரமளான் மாதத்தோடு தான் மறைந்துவிடப்போவதாகவும், காவாந்தோப்பில் தன் உடல் இருப்பதாகவும், அதை எடுத்து வந்து இப்போது தண்டையார் பேட்டையில் அடங்கியிருக்கும் இடத்தில் அடக்கம் செய்யுமாறும் சொல்லி மறைந்தார்கள்.
அதன் படியே சென்று பார்த்தபோது நறுமணம் வீசும் அவர்களது உடல் கஃபனிடப்பட்டு காவாந்தோப்பில் இருந்தது
'120 வயது நி
றைவடையும் ஒரு நாளில், ஹிஜ்ரி 1244, ஷஃபான் பிறை 19-ல்...செவ்வாய் பகல் பொழுதில் இவ்வுலகை விட்டு மறைந்து இறையுலகு செல்லப் போகிறோம்' என்று காரைக்கால் மஸ்தான் சாஹிப் தனது இறப்பு பற்றி தன் ஊழியராக இருந்த படேசா பீவியிடம் சொன்னார்கள்
திருச்சி நத்ஹர் வலீ அவர்கள் ஹிஜ்ரி 417ம் ஆண்டு ஒரு ரமாளான் பிறை ஒன்பதாம் இரவு தராவீஹ் தொழுத பிறகு தன் சீடர்களை அழைத்து, 'நான் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது, ரமளான் பிறை 14 வெள்ளிக்கிழமை நான் இவ்வுலகை விட்டுப் போய்விடுவேன்' என்று முன்னறிவிப்பு செய்து, அதேபோல இஷாத்தொழுகைக்காக தொழுகை விரிப்பில் ஸுஜூதில் இருந்தபோது மறைந்தார்கள்.
ஸஹ்ல் இப்னு அப்துல்லாஹ் அல் துஸ்தரீ அவர்கள், 'இன்னும் சில கணங்களில் நான் இறந்துவிடப் போகிறேன்' என்று தன் சீடரான ஷாத்தில் என்பவரிடம் சொல்லிவிட்ட அடுத்த கணமே உயிர் துறந்தார்கள்.
என் எண்பதாவது வயதில் இறப்பு அண்மிவிட்டதை உணர்ந்துகொண்ட ஜுனைதுல் பக்தாதி தன் மாணவர்களை சமைக்கச் சொன்னார். பின் கஷ்டப்பட்டு வுளூ செய்துவிட்டு, தொழுதுவிட்டு, சஜ்தாவில் அழுதுவிட்டு, திருமறையை ஓதி முடித்தார்.

நோயுற்ற இந்த நிலையில் இப்போது ஏன் ஓதுகிறீர்கள் என்று கேட்டபோது, 'என் வாழ்வுச் சுருள் சுருட்டப்படும் நிலையில் இருப்பதைப் பார்த்தபின், நான் இப்போது ஓதாமல் எப்போது ஓதுவது' என்று சொல்லி மீண்டும் திருமறையை ஓத ஆரம்பித்தார். சூரா பகராவின் 70-வது வசனத்தை ஓதிக்கொண்டிருந்தபோது அவரது உயிர் பிரிந்தது.

ஒரு கட்டத்தில் மயங்கி விழுந்த அபுல் ஹுசைன் நூரியை நண்பர்கள் வீட்டுக்கு எடுத்து வந்து லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை சொல்லச் சொன்னபோது, 'நான் ஏன் சொல்லவேண்டும்? அவனிடம்தானே போய்க் கொண்டிருக்கிறேன்' என்றார்கள். அத்துடன் அவர்கள் உயிர் பிரிந்தது.
எண்பத்தேழு வயது வரை வாழ்ந்த அபூ பக்ர் ஷிப்லி அவர்கள் நோயுற்றபோது, ஒரு வெள்ளியன்று தன் சீடர் ஒருவரோடு பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். வழியில் எதிர்ப்பட்ட ஒருவரைப் பார்த்து, 'நாளைக்கு இவரின் உதவி எனக்குத் தேவைப்படும்' என்று கூறினார்கள். மறுநாள் அவர்கள் உயிர் பிரிந்தது.
கஃபனிடுவதற்கான ஆளை அழைத்துவர ஆள் அனுப்பியபோது, கதவைத்திறந்ததும் அவர், 'ஷிப்லி இறந்துவிட்டார்களா?' என்று கேட்டார்.
உங்களுக்கு எப்படித்தெரியுமென்று கேட்டபோது, 'சற்று முன் கனவில் அவரைக் கண்டேன். நான் இறந்துவிட்டேன். எனக்கு வந்து குளிப்பாட்டி, கஃபனிட்டு நல்லடக்கம் செய்யவும்.அது நீர் எனக்குக் கடன் பட்ட தொகைக்கு பிரதியாக இருக்கும்' என்று கூறினார்கள் என்றார்!
அந்த நபர் வேறு யாருமல்ல. முதல் நாள் பள்ளிவாசலுக்குச் சென்றபோது ஷிப்லியின் எதிரில் வந்தவர்தான் அவர்!

120 வயதுவரை வாழ்ந்த ஞானி கைருன் நஸ்ஸாஜ் ஒரு நாள் அஸர் தொழ வுளூ செய்தபோது உயிரை வாங்கும் வானவரின் நிழல் அவர் மீது பட்டது. உடனே அவர் வானவரிடம் தொழுது முடித்தபின் உயிரை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு தொழுதார். அதேபோல தொழுது ஸலாம் கொடுத்தபின் அவரது உயிர் வாங்கப்பட்டது.

ஆரிஃப் நாயகத்துக்கு இருபது நாட்களுக்கும் மேலாக வயிற்றுப் போக்கு ஏற்பட்டிருந்தது. என்னுடைய கொழுப்பும் தசைகளும் கரைந்து வெளியாகிக் கொண்டுள்ளன. நாளை என் மூளை உருகி வெளிவரும். அத்துடன் என் உயிரும் உடலை விட்டு வெளியேறி இறை சன்னிதானத்தை அடைந்துவிடும் என்று கூறினார்கள். அதேபோல அவர்கள் மறுநாள் பிற்பகல் வியாழன் அன்று ஜமாதுல் அவ்வல் பிறை 22ல் வஃபாத் ஆனார்கள்.

ஞானி ஜிந்தாஷாஹ் மதார் அவர்கள் 390 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். ஒரு ஜமாதுல் அவ்வல் முதல் நாளன்று தன் சீடர்களை அழைத்து, 'நான் அல்லாஹ்வை அடையும் நாள் நெருங்கிவிட்டது' என்று கூறினார்கள். சொன்னதுபோலவே அதே ஜமாதுல் அவ்வல் மாதம் பிறை 17அன்று தியானத்திலும் வணக்கத்திலும் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது அவர்களது உயிர் பிரிந்தது.
மௌலானா ரூமியின் அந்திமக்காலம் நெருங்கியது. அப்போது அவர், 'மக்கள் என்னை இவ்வுலகில் இருக்கவேண்டும் என்று விரும்பினாலும், ஷம்ஸ் தப்ரேஸ் (அவருடைய ஞானாசிரியர்) என்னை அழைத்துக்கொண்டிருக்கிறார்' என்றார்.
அவர் இறப்பதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பிருந்தே கொன்யா நகரில் லேசான நில அதிர்வுகள் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன. அவர் இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு அதிர்ச்சிகள் சற்று அதிகமாக ஏற்பட்டன.
அப்போது ரூமி, 'பாவம், பூமிக்கு மிகவும் பசிக்கிறது. அதற்கு ஒரு கொழுத்த உணவு தேவைப்படுகிறது. விரைவில் அதற்கு அந்த உணவு கிடைக்கும். பின்பு அது அமைதி யாகிவிடும்' என்று கூறினார். ஜமாத்துல் ஆஹிர் பிறை 05ல் அவர் மறைந்தார்.

குத்புத்தீன் பக்தியார் காக்கி அவர்களும் தன் இறப்பை முன்கூட்டியே அறிந்திருந்தார்கள். தனக்குப் பிறகு ஆன்மிகப் பாதையின் பொறுப்புகளை தன் சீடர் ஃபரீதுத்தீன் கஞ்ச ஷகர் செய்ய வேண்டும் என்றும், தான் இறக்கும் தருவாயில் அவர் தன்னோடு இருக்கமாட்டார் என்றும், இறந்த ஐந்து நாட்களுக்குப் பிறகே அவர் வருவார் என்றும், அப்படி வரும்போது தன்னுடைய கிர்க்கா, தலைப்பாகை, பாதக்குறடுகள் ஆகியவற்றை அவரிடம் ஒப்படைக்கும்படி கூறிவிட்டு ரபியுல் அவ்வல் பிறை 14 அன்று இறையடியைச் சேர்ந்தார்கள்.
நிஜாமுத்தீன் அவ்லியா அவர்களும் தான் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே, தன்னைப் பார்க்க பெருமானார் ஆவலுற்றிருப்பதாக கனவில் வந்து சொன்னதாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறப்பதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பிருந்தே எதையும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை. ரபிய்யும் அவ்வல் பிறை 18ல் மறைந்தார்கள்.

க்வாஜா பந்தா நவாஸ் என்று அறியப்பட்ட ஞானி சையித் முஹம்மது அவர்கள் தான் இறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக, 'சையித் முஹம்மது இந்த உலகை விட்டுப் போய்விட்டார். இன்னாலில்லாஹி' என்று கூறி தனக்குத்தானே ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றினார்கள். ஐந்து நாட்களுக்குப் பின் துல்காயிதா பிறை 16-ல் மறைந்தார்கள்.

அஹ்மது வலி அவர்கள் தன் மாணவர்களுடன் நாகை சென்று திரும்பும்போது வழியில் உள்ள ஒரு பள்ளிவாசலில் தங்கினார்கள். அன்று வியாழக்கிழமை. அப்போது அவர்கள் மாணவர்களை அழைத்து, 'நாளைக்கு நான் இறந்துவிடுவேன். என் உடலை மஞ்சக்கொல்லைக்கு எடுத்துச் சென்று என் ஆசான் அப்துல் காதிர் வலியின் அருகில் அடக்கம் செய்யுங்கள்' என்று கூறினார்கள். அதேபோல நடந்தது, அதேபோலவே செய்யப்பட்டது.

பெரிய லெப்பை அப்பா, சின்ன லெப்பை அப்பா என்று இரண்டு ஞானி சகோதரர்கள் காயல்பட்டினத்தில் இருந்தனர். ஞானி ஷைகு சுலைமானின் மகன்களாவர். அதில் சின்னவரைப் பார்த்து ஒருநாள் பெரியவர், 'உன்னுடைய ஜனாஸா தொழுகையை யார் முன் நின்று தொழ வைப்பார்?' என்று கேட்டார்கள். கேள்வியால் சின்ன லெப்பை அப்பா அதிர்ச்சி எதுவும் அடையாமல், 'நீங்கள்தான் அண்ணா' என்று கூறினார். அதேபோலவே சின்ன லெப்பை அப்பா ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று மறைந்தார். பெரிய லெப்பை அப்பாதான் தன் தம்பிக்கு ஜனாஸா தொழுகையை முன் நின்று நடத்தினார். மூன்று ஆண்டுகள் கழித்து பெரிய லெப்பை அப்பாவும் மறைந்தார்.

ஷெய்கு சதக்கத்துல்லா அப்பாவின் பேரரான காயல் பட்டினம் உமர் வலி அவர்களுக்கு 53 வயது ஆனபோது, தான் வாழப்போகும் இறுதி ஆண்டு அதுதான் என்று அறிந்து மறுமைப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார். அந்த ஆண்டு துல்காயிதா பிறை 16ல் வெள்ளிக்கிழமை இரவு இஷா வேளையில் மறைந்தார்.

கீழக்கரை தைக்கா சாஹிப் வலியவர்கள் தங்கள் இறுதி நேரம் நெருங்கியதும், சீனி முஹம்மது லெப்பை ஆலிம் அவர்களை அழைத்து, தன் இறுதி வந்துவிட்டதாகவும், தன் ஜனாஸா தொழுகையை அவர்தான் தொழவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அதன்படியே அந்த ஆண்டு ஷவ்வால் பிறை 03ல் மறைந்தார்கள்.
ஹஸன்(ரலி) அவர்களின் பரம்பரையில் உதித்த குத்பெ வேலூர் என்று அழைக்கப்பட்ட முஹ்யித்தீன் சையித் ஷா அப்துல் லத்தீஃப் காதிரி அவர்கள் மக்கா சென்றிருந்தபோது உடல்நலக்குறைவு ஏற்பட்டது. விக்டோரியா மகாராணி பரிசுப்பொருள்கள் அனுப்பியபோது, அதை வாங்க மறுத்து, எனக்கு இதெல்லாம் தேவையில்லை, நீங்கள் இஸ்லாத்துக்கு வந்தால் எனக்கது சந்தோஷம் என்று துணிச்சலாக பதில் எழுதியவர் குத்பெ வேலூர். அவர் வேலூரில் பிறந்தால் அவருக்கு அந்த பெயர்.
மறைந்துவிடுவோம் என்பதை உணர்ந்து கொண்ட அவர்கள், என்னை ஹஸன் (ரலி) அவர்களின் அடக்கவிடத்துக்கு அருகில் அடக்கம் செய்யுமாறு கூறினார். அல்லாஹ் அல்லாஹ் என்று கூறிக்கொண்டிருந்த அவர் முஹர்ரம் பிறை 08ல் மறைந்தார். அன்றிரவு மதினா ஆளுனரின் கவனைல் பெருமானார் தோன்றி, 'இன்ன இடத்தில் இன்ன பெயருள்ள என் மகன் இறந்துள்ளார். அவரை நல்லடக்கம் செய்யுங்கள்' என்று கூறி மறைந்தார்கள்!

கல்வத்து நாயகம், கல்வத்து நாயகம் ஆகியோரின் தந்தையாகிய அறிஞரும் மாபெரும் ஞானியுமான மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களுக்கு உடல் நிலை ஹிஜ்ரி 1315ல் மோசமாகியது. பதினேழு ஆண்டுகளாக வீட்டுக்குள்ளேயே தனிமைத் தவமிருந்த மகனார் கல்வத்து நாயகம் தன் தனிமையை விட்டு வெளியே வந்து தந்தையைப் பார்த்துவிட்டு, 'அவர்கள் இப்போது இறக்க மாட்டார்கள். அவருக்கு தயிறும் சோறும் கொடுங்கள்' என்று கூறினார்.

ஆனால் அடுத்த ஆண்டு தன் இறுதி நெருங்கிவிட்டதை அறிந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் தன் சீடர்களையும் உறவினர்களையும் அழைத்து, கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, சொல்ல வேண்டியதைச் சொல்லி கண்களை மூடிக்கொண்டார்கள். அது ரஜபு பிறை 05.
கல்வத்து நாயகமும் தன் முடிவை அறிந்து, தன் பணிப்பெண் ஆமினா உம்மாவை அழைத்து நான் இறக்கப் போகிறேன் என்று கூறினார்கள். அவர் நம்பவில்லை. மகளும் மருமகனும் வந்து பார்த்து சுஜூதில் இருந்த தந்தையைத் தூக்க முயற்சித்தார். தூக்கி நேராக வைத்த பிறகு உயிரோடு இருப்பவரைப் போல சம்மணம் போட்டு அமர்ந்துகொண்டார்கள். காலை தானே நீட்டிக் கொண்டார்கள். ஆனா அவ்வளவுதான். அவர்களின் உயிர் பிரிந்திருந்தது. அது ஷவ்வால் பிறை 22.
இவையெல்லாம் சில உதாரணங்கள் மட்டுமே.

நாகூர் ரூமி
இறைநேசர்களின் பொதுப்பண்புகள் பதிவிலிருந்து

ரஹ்மத் ராஜகுமாரன்

கராமத் 24

(இறைநேசர்களின் படித்தரங்கள்)

உலகில் ஏக காலத்தில் பல எண்ணிக்கையுள்ள, பலவகை படித்தரங்கள் உடைய அவுலியாக்கள் - குதுபுமார்கள் - அப்தால்கள் - அவுத்தாதுகள் - நுகபாக்கள் - நுஜபாக்கள் என்ற பதவி உடையவர்கள், உலக முடிவு நாள்வரையில் இருந்தே வருவார்கள் என்றும்,

ஹகீகத்தில் ஈருலகையும் கண்காணிப்பவர்கள் அவர்கள் தானென்றும், அவர்களை முன்னிட்டே பலாய், முஸீபத்துகள் விலக்கப்படுவதாயும் ஹதீதுகள் பல காணப்படுகின்றன,

அன்னார் அனைவருக்கும் குத்பே அதிபராவார். அன்னாரை "கௌது " என்றும் சொல்லப்படும். இது பற்றிய ஆதாரங்கள் பல இருப்பினும் சிலவற்றை மட்டிலும் இங்குக் குறிப்பிடுவது போதுமெனக் கருதுகின்றோம்.

" இறைவா...! என் மீது நபிமார்கள் நடந்து திரிந்தார்கள், அவர்களுக்குப் பிறகு நபிகள் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சுமந்திருந்தேன். தற்போது அவர்களும் சென்று விட்டார்களே, நான் தனித்துவிட்டேனே, என் மீது எந்த நபியும் இல்லையே " என்பதாய் பூமி பிரலாபித்து இறைவனிடம் முறையிட்டுக் கொண்டது.

" நான் சில அவுலியாக்களை அனுப்புவேன். அவர்களது இருதயங்கள் நபிமார்களது இருதயங்களைப் போலிருக்கும். அவர்கள் யுகமுடிவு வரை உன் மீது சஞ்சரிப்பார்கள்" என்று இறைவன் பூமிக்கு அறிவித்தான்.

இவ்விஷயத்தை ஸாலிஹான, இறையருள் நேசரான, பெரியார் ஒருவர் தமது உலக யாத்திரையின் போது, நித்திய ஜீவனுடைய ஹஜ்ரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்த சமயம் அன்னாரைக் கேட்டுத் தெரிந்து கொண்டதாக, ஷமவாஹிபுல் மஜீது பீ மனாகிபி ஷாஹில்ஹமீது எனும் கிரந்தத்தில் காணப்படுகிறது.

அவுலியாக்கள் ஏகத்தில் 440 பேர்கள். அவர்களுள் நுஜபாக்கள் 300, நுகபாக்கள் 70, அப்தால்கள் 40, அகியார்கள் 10, உறபாக்கள் 7, அன்வார்கள் 5, அவுத்தாதுகள் 4, முக்த்தார்கள் 3, குதுபு ஒருவர். குத்பே அனைவருக்கும் அதிபராவார்.

இன்னாரை கௌது என்றும் சொல்லப்படும். இவர்களுள் யாரும் மரணமாவார்களாயின் அவர்களுக்கடுத்த (தரஜா) படித்தரத்திலிருப்பவர்கள் அந்த ஸ்தானத்திற்கு மாற்றப்படுவார்கள்.

அங்ஙணம் பதவியில் உயர்த்தப்படும் போது, கீழ்ப்படித்தரத்திலுள்ள நுஜபாக்கள் காலியாகுமிடத்தில் ஸாலிஹீன்களான முஸ்லீம்களில் ஒருவர் அந்தத் தானத்தில் அமர்த்தப்படுவார்

என்று கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாக மனாகிபுகுத்பில் மஜீதிஸ்ஸையிது ஷாஹுல் ஹமீதில் மாணிக்கப்பூரியில் மவுலிதிந் நாகூரிய்யில் மர்கதி என்ற கித்தாபில் மாதிஹுர் ரஸூல் அல்லாமதுஷ் ஷைகு ஸதக்கத்துல்லாஹில் காஹிரிய்யிஸ் ஸித்தீக்கி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சீடர் அல்லாமா ஆரிபுபில்லாஹ் மஹ்மூது தீபிரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள் .

மேலும், என்னுடைய உம்மத்துகளில் நாற்பது நபர்கள் நபி இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய இருதயத்தையுடையவர்களாய் என்றும் இருந்தே வருவார்கள் . அல்லாஹ்தஆலா அந்த நபர்களைக் கொண்டு பூலோகத்தில் வாழுபவர்களை விட்டும் பிணிகளைப் போக்குவிப்பான்.

அவர்களுக்காக மழையைப் பொழியச் செய்வான். அன்னவர்களைக் கொண்டுதான் பூலோகத்தில் உள்ளவர்களுக்கு உதவி புரியப்படும் என்பதாய் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுதபறானீயில் காணக் கிடைக்கின்றது.

குத்புக்கே கௌது என்று பெயர். அவர் ஒருவருக்குப் பின் ஒருவராக வருவார். படைப்புகளை எல்லாக் கருமங்களிலும் அன்னார் இரட்சிக்கக் கூடியவராக இருப்பதனால் கௌது என்று பெயர். அன்னவருக்கு வலம், இடம் இருபக்கங்களிலும் அரசர்களுக்கு இருப்பதுபோல இரு அமைச்சர்கள் உள்ளனர்.

கௌது உடைய உத்தரவு கொண்டு வலது பக்கமிருப்பவர் மறைவுலகங்களான ஆலமுல்கைபு, ஆலமுல் மலகூத்தை நிருவகித்து வருகின்றார்.

இடது பக்கமிருப்பவர், வெளியுலகமான ஆலமுஷ் ஷஹாதத்தைக் கண்காணித்து வருகின்றார் என்பதாக ரூஹுல்பயான் தப்ஸீர் பாகம் 2, பக்கம் 363லும், இபுனு அரபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அறிவிக்கிறார்கள்.

அந்தரங்க, பகிரங்க ஆபத்துக்களில் நின்றும் குத்புமார்களைக் கொண்டே இறைவன் அகிலத்தைப் பாதுகாத்துக் கொள்கிறான் என்று தப்ஸீர் ரூஹுல்பயான் 9-வது பாகம், 102-வது பக்கத்திலும் கூறப்பட்டுள்ளது.

அவுலியாக்களுள் இரு வகுப்பாருண்டு, ஒரு வகுப்பார் இறைவனுடைய பாதையில் கஷ்டப்பட்டுத் தெண்டித்து அவனளவில் தன்னையழித்து பனாவாகியவர்கள்.

இவர்களுக்கு "கஸ்பீ " என்று சொல்லப்படும்.

மற்ற வகுப்பார் ஆலம் அர்வாஹ் எனும் ஆன்ம லோகத்திலேயே ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு "அத்தாயீ " என்று கூறப்படும். குத்பு கௌதுகள் அத்தாயீ வகுப்பைச் சேர்ந்தவர்களே. - ஜவாஹிருஸ்ஸூலுக்கு 114-வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது

குத்பு என்ற பதத்திற்கு "முளை துருவம் " என்றும், கௌது என்ற பதத்திறகு " இரட்சிப்பவர் - நாயன் நோட்டமிடும் ஸ்தானம் " என்றும் பொருளைப் பயக்கி நிற்பினும், அவற்றின் அந்தரங்கம் பல அரும்பெரும் இரசகியப் புதையல்களைத் தன்னுள் அடக்கியதாய் அமைந்து கிடக்கின்றன.

இன்னவர்கள் மூலமாகத்தான் முதலவன் தன்னிருக்கையை அறிக்கை செய்ய வேண்டியதிருக்கிறது அன்றேல், அஞ்ஞான இருள்படர்ந்து மூடி, அகிலம் அந்தகாரத்துள்ளாழ்ந்து பாழ்பட்டுப் போடும்.
இறைவன் தன்னடியார்களுக்கு அளித்துள்ள கைம்மாறிளக்க வொண்ணாப் பெரும் அருட்கொடைகள் அத்தனையையும் ஒரு தட்டிலும், குத்பை அனுப்பித் தந்த அருட்பெருங்கொடையை மற்றொரு தட்டிலும் வைத்து சீர்தூக்கிப் பார்ப்போமாயின், குத்பால் பெற்ற கிருபையளவே கனத்து முறுகி நிற்கக் காண்போம்.
இன்னாரைப் பற்றி இறைவன் குர்ஆன் ஷரீபில்

اَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ
(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.
(அல்குர்ஆன் : 10:62)
ஆதார நூல் : ஹிதாயதுல் அனாம் இலாஜியாரதில் அவுலியாஇல் கிராம் .

ரஹ்மத் ராஜகுமாரன்

கராமத் 25
(கொடுக்க வல்லமையுடையவனுக்கு, எடுத்துக்கொள்ளவும் வல்லமையுண்டு !)
ஷைகு ஷாஹ் ஹசன் அலி அஸீமாபாதீ (ரலி) அவர்களது சமுகத்தில் தனக்கு குழந்தை உண்டாக துஆச் செய்யும்படியும் அவர்களுக்கு 500 திர்ஹம் நேர்ச்சை செய்திருப்பதாகவும் மீர் ஜாபர் முஸப்பர்பூரி என்பவர் முறையிட்டுக் கொண்டார்.

ஷைகு அவர்களின் துஆ பரக்க்கத்தைக் கொண்டு அவருடைய மனைவி கர்ப்பமானாள். ஒன்பது மாதம் கழித்து பிரசவ வேதனை உண்டாயிற்று. குழந்தையின் தலை மாத்திரம் வெளியே காணப்பட்டது. ஆனால் பிரசவம் ஆகாமல் அந்தப் பெண் அதிகம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள் .
" ஷைகு அவர்களுக்கு நீர் வாக்களித்த நேர்ச்சையை நிறைவேற்றாத காரணத்தாலேயே பிரசவம் ஆகாமல் கஷ்டப் ஏற்பட காரணமாக இருக்கலாம். ஆகையால் நேர்த்திக் கடனை உடனே நிறைவேற்றும் " என்று மீர்ஜாபரிடம் அவரது நண்பர்கள் கூறினார்கள்.

"அல்லாஹ் எனக்குக் குழந்தையைக் கொடுத்தான். எவருடைய துஆவைக் கொண்டும் ஆவதென்ன ? "என்பதாய் மீர் ஜாபர் இறுமாப்புடன் சொன்னார்.
இவ்விஷயம் ஷைகு அவர்களுக்கு தெரியவந்தது. அவர்கள் சக்தி மயமான ஜலாலியத்தில் ஆனவர்கள். " கொடுக்க வல்லமை உடையவனுக்கு, எடுத்துக்கொள்ளவும் வல்லமை உண்டு" எனக் கூறினார்கள்.
அடுத்த வினாடியிலேயே குழந்தை வயிற்றில் இருந்து மாயமாக மறைந்து விட்டது. கர்ப்பத்தின் அறிகுறியோ , பேறுகால சங்கதியோ ஏதும் ஏற்படாத நிகழ்வு மாதிரி அதாவது கர்ப்பம் தரிப்பதற்கு முந்தைய நிலைமையை அவர் மனைவி அடைந்தாள்.
இந்த அற்புத வரலாறு, "மிர்அத்துல் கவுனைன் ",442 -வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது.
ரஹ்மத் ராஜகுமாரன்
மகனே..! ஓ மகனே...!
என் விந்திட்ட விதையே...!
செடியே...! மரமே...! காடே....!
மறுபிறப்பே...!
மரண சௌகர்யமே...! வாழ்...!
- கமலஹாசன்
எழுதிய கவிதைதான் என் நினைவுக்கு வந்தது.

கராமத் 26

(சரியான வழியைக் காட்டுங்கள் ...!)
இறைவனே நேரில் பிரசன்னமாகி எந்த காரியத்தையும் செய்வதில்லை. பிறர் மூலமாகவே உதவியளிக்கின்றான்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பத்ரு போரில் மலக்குமார்களைக் கொண்டு உதவி புரிந்துள்ளான்.
பனீ இஸ்ரவேலர்களின் நிறைய நபிமார்களுக்கும் இவ்வாறே உதவி செய்துள்ளான்.
சில நபிமார்களுடைய ஞாபகர்த்த சின்னங்களைக் கொண்ட தாபூத் என்னும் 'ஸகீனா' என்னும் பெட்டியைக் கொண்டு யுத்தங்களில் வெற்றிகளைக் கொடுத்துள்ளான்.
இவ்வாறே அவுலியாக்கள் மூலம் இறைவன் உதவி உபகாரம் புரிந்துத் தனது கிருபையைப் பொழிகின்றான்.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் பாக்தாத்திலிருந்து மக்காவுக்குச் சென்று கொண்டிருக்கையில், வழி தவறி விட்டார்கள். பாதை தெரியாமல் பிரயாண கூட்டத்திலிருந்து பிரிந்து விட்டார்கள்.
அப்போது அவர்களுக்கு, "யா இபாதல்லாஹி அயீனூனீ " என்னும் ஹதீது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அந்த விதம் செய்து பயன் பெற்றார்கள். அவர்களே தங்களது வாயால் கூறுவதை பாருங்கள்.
" அல்லாஹ்வின் நல்லடியார்களே...! என்னை சரியான பாதையிலே கொண்டு போய் சேர்த்து விடுங்கள்" என்று யாருமற்ற வனாந்தர வெளியில் சத்தமிட ஆரம்பித்தேன். சரியான பாதை வந்தடையும் வரை இவ்வாறு நான் கூறிக் கொண்டே இருந்தேன்"
என்பதாக அவர்கள் தங்கள் பிரயாணக் கஷ்டம் பற்றி சொல்லி வரும் விவரத்தை அவர்களுடைய சரித்திரத்தில் காணலாம்.
- மௌலவி எம்.அப்துல் வஹ்ஹாப் எம், ஏ , பி.டி.எச் அவர்கள் இயற்றியுள்ள " நன்மணி நால்வர்கள் " என்ற நூலின் 137 வது பக்கத்தில் விவரம் காணலாம்.

رواه الطبراني في المعجم الكبير (17 /117) من طريق عبد الرحمن بن شريك قال : حدثني أبي ، عن عبد الله بن عيسى ، عن زيد بن علي ، عن عتبة بن غزوان ، عن نبي الله
صلى الله عليه وسلم قال : (إِذَا أَضَلَّ أَحَدُكُمْ شَيْئًا ، أَوْ أَرَادَ أَحَدُكُمْ عَوْنًا ، وَهُوَ بِأَرْضٍ لَيْسَ بِهَا أَنِيسٌ ، فَلْيَقُلْ : يَا عِبَادَ اللَّهِ أَغِيثُونِي ، يَا عِبَادَ اللَّهِ أَغِيثُونِي ، فَإِنَّ لِلَّهِ عِبَادًا لا نَرَاهُمْ).
நபி (சல்) அவர்கள் சொன்னதாக உத்பா இப்னு கஜ்வான் (ரலி) அவர்கள் அரிவிக்கிரார்கள்.
உங்களுக்கு ஒரு இடத்தில் பாதையில் ஒரு பொருள் தவரி விட்டால் அல்லது உங்களுக்கு ஏதாவது ஒரு உதவி (பிறரிடமிருந்து) தேவைப்படுமானால், நீங்கள் இருக்கும் அந்த பாதையில் உங்களுக்கு உதவக் கூடிய நபர் யாரும் இல்லாது போனால்,
ஓ! அல்லாஹ்வின் அடியார்கள் யாரேனும் (இங்கு) இருக்கிறீர்கள் தானே? எனக்கு உதவி செய்யுங்கள்!
ஓ! அல்லாஹ்வின் அடியார்கள் யாரேனும் (இங்கு) இருக்கிறீர்கள் தானே? எனக்கு உதவி செய்யுங்கள்!
என்று கூறுங்கள். ஏனெனில்
நமது கண்களுக்கு புலப்படாத அல்லாஹ்வின்
அடியார்கள் அங்கு இருப்பார்கள். (அவர்கள் மூலம் அல்லாஹ் நமக்கு உதவி செய்வான்.)
ஆதாரம்; இமாம் தப்ரானி, முஃஜமுல் கபீரில் பாகம் 17, பக்கம் 117,
ரஹ்மத் ராஜகுமாரன்.
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَۙ
நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக! (குர்ஆன் : 1:6)

கராமத் 27

வர்த்தகக் கூட்டமொன்று வியாபாரத்தை முன்னிட்டுப் பிரயாணப்படுவதற்கு முன்பு ஷைகு அபுல்ஹஸன் கிர்கானீ (ரஹ்) அவர்களிடம் சென்று ,
"நாங்கள் போகும் பாதை பயங்கரமான ஆபத்துக்கள் நிறைந்த இடம். ஆகையால் பாத்திரமாகப் போய் வர துஆ செய்து அனுப்பும் படி ஷைகுவிடம் பைஅத் வாங்கிய முரீது வேண்டினார் .
" உங்களுக்கு ஆபத்து நேரிடின் இந்த அபுல்ஹஸனை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் " என்று கூறிப் பயணம் அனுப்பி வைத்தார்கள் .
ஷைகுவின் இந்த வார்த்தை அவரது முரீது தவிர வர்த்தக கூட்டத்தின் மற்றையோருக்கு ஒரு மாதிரியாக , பெருத்தக் கேடாக நினைத்தனர் .
பல நாள் பிரயாணத்தில் ஒரு நாள் கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களை வழிமறித்துப் பொருள்களைச் சூறையாடினர் .
முரீது மட்டும் , ஷைகு அபுல்ஹஸன் கிர்கானி (ரஹ்) அவர்களை விளித்து உதவி தேடினார் . பொருளுடன் அவர் கொள்ளைக் கூட்டத்தாரின் பார்வையை விட்டும் தப்பினார் .

மற்றவர்கள் இறைவனை விளித்து உதவி தேடினர். அவர்களுடைய பொருள்கள் ஒன்று விடாமல் சூறையாடப்பட்டன .
எல்லோருடைய பொருளும் கொள்ளை போயிருக்க, ஒரேவொருவருடைய பொருள் மாத்திரம் தப்பிப் பத்திரமாக இருப்பதையெண்ணி, வர்த்தகர்கள் பேராச்சரியப்பட்டு, ஷைகிடம் வந்தனர்.
" நாங்கள் அல்லாஹ்வைக் கூப்பிட்டு உதவி தேடினோம். பொருளை இழந்தோம் . ஒருவர் மட்டும் உங்களைக் கூப்பிட்டு உதவி தேடினார் . அவருடைய பொருள்கள் பாதுகாக்கப்பட்டது .இதன் காரணம் என்னவென்று நீங்கள் கூறுங்கள் " என்றனர்.
" உங்களை நீங்களே அறியாத போது, நீங்கள் அல்லாஹ்வையும் அறியாது ,வாக்கு மனம் வேறுபட்டு வெறுமனே அவன் பால் உதவி தேடினீர்கள் . இந்த அபுல்ஹஸனோ தன்னை அறிந்து அதன் மூலம் தன் இறைவனை அறிந்து , வாக்கு மனம் ஒன்றுபட்டு அவன்பால் உதவி தேடினார் . அபுல்ஹஸனை ஞாகப்படுத்தி உதவி தேடினால் உங்களுக்காக அபுல்ஹஸன் அல்லாஹ்வின் உதவி தேடுவார் .அவ்வமயம் உங்கள் காரியம் நிறைவேறும் . நீங்கள் அல்லாஹ்வை அறியாத புறத்தில் , என்றும் அவனைக் கூப்பிடும் வழக்கம் போல் ஆயிரம் முறை அழைத்தாலும் யாதொரு பயனுமில்லை"
என்பதாக ஷைகு அபுல்ஹஸன் கிர்கானீ (ரஹ்) அவர்கள் அறிவுறுத்தினார்கள் .
ஆதாரம் : மிர் அத்துல் கவுனைன் - பக்கம் 244

اَلَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا فِىْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۛ اَلرَّحْمٰنُ فَسْــٴَــلْ بِهٖ خَبِيْرًا
அவனே வானங்களையும், பூமியையும், அவற்றிற்கிடையிலுள்ளவற்றையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் அவன் அர்ஷின் மீது அமைந்தான்; (அவன் தான் அருள் மிக்க) அர்ரஹ்மான்; ஆகவே, அறிந்தவர்களிடம் அவனைப் பற்றிக் கேட்பீராக.
(அல்குர்ஆன் : 25:59)

கராமத் 28

(நீர் இந்த ஹனபியை அறியாதிருக்கையில் இறைவனை எங்ஙனம் அறிவீர் ?)
குத்பு செய்யிது ஷம்சுத்தீன் முஹம்மது ஹனபி (ரலி) அவர்கள் தங்கள் முரீது ஒருவருடன் கடற்கரைக்குச் சென்று, கடலில் தண்ணீர் மேல் நடந்து செல்ல ஆரம்பித்தார்கள்.
" யா ஹனபீ "என்று தன்னை கூப்பிட்டுக்கொண்டே தண்ணீர் மீது நடக்கும்படி தன் முரீதுக்கு கூறினார்கள். இருவரும் தண்ணீரில் நடந்து சென்று கொண்டிருக்கையில் "யாஅல்லாஹ்" என்று ஷைகு ஹனபி அவர்கள் சொல்லிக் கொண்டு போவதைச் செவியேற்ற முரீது, " யாஹனபி " என்னும் சொல்லை விடுத்து, தானும் "யாஅல்லாஹ்" எனக் கூறவே கடலில் முரீது தாழ்ந்துவிட்டார்.
ஷைகு அவர்கள் அவரின் கையைப் பிடித்துத் தூக்கி, " என்ன சொன்னீர் ?" என்று வினவினார்கள்.
ரஹ்மத் ராஜகுமாரன்.
தாங்கள், " யா அல்லாஹ் " எனக் கூறியதை கேட்டு, நானும்
"யா அல்லாஹ்" என்று மொழிந்தேன். உடனே கடலில் தாழ்ந்து விட்டேன்" என்றார்.
" நீவிர் இந்த ஹனபியையே அறியாதிருக்கையில், அல்லாஹ்வை எங்ஙனம் அறிவீர் ? அல்லாஹ்வை அறிந்து சொன்னால் தாழ்ந்திருக்க மாட்டீர் . அல்லாஹ்வை அறியாமல் கூப்பிட்டதால் , தாழ்ந்தீர் "என்பதாய் அறிவுறுத்தினார்கள்.
இது ஷவாஹிதுல் ஹக்கில் கூறப்பட்டுள்ளது
(அவன் தான் அருள் மிக்க) அர்ரஹ்மான்; ஆகவே, அறிந்தவர்களிடம் அவனைப் பற்றிக் கேட்பீராக." (குர்ஆன் : 25:59)

" உடலுக்குள் ஆன்மா மறைந்துள்ளது. ஆன்மாவுக்குள் நீ மறைந்துள்ளாய். மறைந்திருப்பதில் மறைந்திருப்பவனே நீயே எல்லாம் " _ அத்தார்

கராமத் 29

(குர்ஆன் கூறும் அவ்லியாவும் அவரது கராமத்தும்)
ஸபா நாட்டு அரசி பில்கீஸ் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு நபி சுலைமான் (அலை) அவர்களிடம் வந்து கொண்டிருக்கிறார். பைத்துல் முகத்தஸை நெருங்கிவிட்டார் இன்னும் இரண்டொரு நாளில் சுலைமான் அவர்கள் சமூகம் வந்துவிடலாம்.
பில்கீஸ் வருவதற்கு முன்னர் அவருடைய அரியாசனத்தை இங்கு கொண்டு வருவதன் மூலம் இறைவனின் வல்லமையையும், தம்முடைய நபித்துவத்துக்குரிய அற்புதத்தையும் பில்கீஸ்க்கு காட்டுவதற்காகவே நபி சுலைமான் (அலை) அவர்கள் அந்த சிம்மாசனத்தை கொண்டு வருபவர் உங்களில் யார் ? என்று தன்னுடைய அரசவையில் கேட்டார்கள் .

ஏறத்தாழ ஸபா நாட்டிற்கும் பைத்துல் முகத்தஸ்க்கும் 1500 மைல் இருக்கலாம் .அந்த ஸபா நாட்டிலிருந்து அந்த அழகிய சிம்மாசனத்தை நபி சுலைமான் (அலை) அவர்கள் ஆட்சி செய்யும் பைத்துல் முகத்தஸ்க்கு கொண்டு வருவது என்றால் மனித சக்தியை கொண்டு வரக் கூடியது அல்ல.

அந்த சிம்மாசனம் ஸபாவில் பில்கீஸ் அரசின் மாளிகைக்குள் மிகவும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது. முதலில் அரண்மனைக்குள்ளே செல்வது மிகவும் கடினம். அப்படியே சென்றாலும், அதனை தூக்கிக்கொண்டு விரைவில் கொண்டு வருவது இன்னும் அதிக கடினம். இது மனித சக்தியால் முடியாத ஒன்றாகும். மேலும் ஸபா அரசி பைத்துல் முகத்தஸை நெருங்கிவிட்டாள் அவர் வந்து சேர்வதற்கு முன்னர் அவருடைய சிம்மாசனம் நபி சுலைமான் (அலை) அவர்களிடம் வந்து சேர வேண்டும் என்று நபியவர்கள் விரும்பினார்கள்.

பலம் பொருந்திய " இப்ரீத் " என்னும் ஜின் , " நீங்கள் இந்த இடத்தில் இருந்து எழுவதற்கு முன்னர் (ஒரு வஃக்து பொழுதிலிருந்து அடுத்த வஃக்து பொழுதுக்குள்) அதனை கொண்டு வந்து உங்கள் முன் வைக்கிறேன். நான் அத்தகைய வலிமை உடையவன். அதில் உள்ள எந்த பொருளும் தவறி விழாத படியும் ,வேறு எங்கும் நான் அதனை கொண்டுசென்று விடமாட்டேன் என்பதிலும் என்னை நீங்கள் நம்பலாம் நான் உங்கள் நம்பிக்கைக்கு உரியவன்தான் " எனக் கூறியது .

' இப்ரீத்' என்றால் மூர்க்கத்தனமும், பலமும் பொருந்திய பயங்கரமான உருவத்தை கொண்டவன். மனிதனால் முடியாத காரியத்தை மிக இலகுவாகச் செய்து முடிப்பவன். இவன் ஜின் வர்க்கத்தை சேர்ந்தவன். 'கூஜன் ' என்ற பெயரும் இவனுக்கு உண்டு எனக் கூறப்படுகிறது.
قَالَ الَّذِىْ عِنْدَهٗ عِلْمٌ مِّنَ الْـكِتٰبِ اَنَا اٰتِيْكَ بِهٖ قَبْلَ اَنْ يَّرْتَدَّ اِلَيْكَ طَرْفُكَ‌ فَلَمَّا رَاٰهُ مُسْتَقِرًّا عِنْدَهٗ قَالَ هٰذَا مِنْ فَضْلِ رَبِّىْ لِيَبْلُوَنِىْٓ ءَاَشْكُرُ اَمْ اَكْفُرُ‌ وَمَنْ شَكَرَ فَاِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهٖ‌ وَمَنْ كَفَرَ فَاِنَّ رَبِّىْ غَنِىٌّ كَرِيْمٌ
இறைவேதத்தின் ஞானத்தைப் பெற்றிருந்த ஒருவர்: “உங்களுடைய கண்ணை மூடித்திறப்பதற்குள், அதை உங்களிடம் கொண்டு வந்து விடுகிறேன்” என்று கூறினார்;
(அவர் சொன்னவாறே) அது தம்மிடம் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும்: “இது என்னுடைய இறைவனின் அருட் கொடையாகும் நான் நன்றியறிதலுடன் இருக்கின்றேனா, அல்லது மாறு செய்கிறேனா என்று (இறைவன்) என்னைச் சோதிப்பதற்காகவும்; எவன் ஒருவன் (இறைவனுக்கு) நன்றி செலுத்துகின்றானோ அவன் நன்றி செலுத்துவது அவனுக்கே நன்மை)யாவும்; மேலும், எவன் (நன்றி மறந்து) மாறு செய்கிறானோ (அது அவனுக்கே இழப்பாகும்; ஏனெனில்) என் இறைவன், (எவரிடத்தும்) தேவைப் படாதவனாகவும், மிகவும் கண்ணியம் மிக்கவனாகவும் இருக்கின்றான்” என்று (ஸுலைமான்) கூறினார். (அல்குர்ஆன் : 27:40)

"ஆஸிப் இப்னு பர்கியா " எனும் பெயர் கொண்டவர். சுலைமான் நபியின் அமைச்சர் என்றும் உறவில் அவருடைய சகோதரி மகன் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

இவர் மகத்தான இறைநாமம் (இஸ்முல் ஆஃலம்) ஒன்றை கற்றிருந்தார். அதனைக் கொண்டு அவர் மகத்தான காரியங்களைச் செய்வார் என்றும் கூறப்படுகிறது. இஸ்முல் ஆஃலம் ஓதி இறைவனிடம் பிரார்த்தனை செய்தால் இவரது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும். இதனை ஓதி எதைக் கேட்டாலும் வழங்கப்பட்டு விடும் எனவும் கூறுகின்றனர்

ஆதார நூல்கள் : காஜின் , ரூஹுல்மஆனி

கராமத் 30

(குர்ஆன் கூறும் கராமத்)
முற்காலத்தில் பனீ இஸ்ரவேலர்களில் ஓர் அரசன் இருந்தான். அரச சபையில் குறி சொல்லும் வயோதிகன் ஒருவனும் இருந்தான் .
ஒரு நாள் குறிகாரன் : " மன்னரே ! எனக்கு அந்திம காலம் நெருங்கி விட்டதால் , நல்ல புத்தி தீட்சண்யமுடைய ஒரு சிறுவனைக் கொடுத்தால், அவனுக்கு நான் கற்ற சூனியத் தொழிலைக் கற்றுக் கொடுக்கிறேன் "

அரசன் அப்படி ஒரு சிறுவனை தேர்ந்தெடுத்து சூனியக்காரரிடம் சூனியம் கற்க அனுப்பி வைத்தான் . சூனியக்காரன் வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு இறைஞானி வீடு இருந்தது. அச்சிறுவன் அந்த இறைஞானியின் உபதேசங்களை கேட்டு விட்டு, பின் தாமதமாகவே சூனியக்காரனிடம் செல்லலனான் . தாமதமாக வருவதை கண்டித்து அச்சிறுவனை சூனியக்காரன் அடித்து துன்புறுத்தினான்.

சூனியக்காரனின் துன்புறுத்தலை அந்த இறைஞானியிடம் சிறுவன் சொல்ல , இறைஞானி சிறுவனிடம் , "தாம் வரும் வழியில் ஒரு புலி வந்து தன்னை வழிமறித்ததால், தாமதமாகி விட்டது " என்று சூனியக்காரனிடம் சொல்லுமாறு கூறினார்.
உண்மையிலேயே புலி வழிமறித்து மனிதர்களுக்கு இடையூறு செய்து கொண்டிருக்க, இச்சிறுவன் "இறைஞானி சிறந்தவரா ? சூனியக்காரன் சிறந்தவனா என்பதை நான் அறியேன் "யா அல்லாஹ்.. ! சூனியக்காரனது காரியத்தைப் பார்க்கினும் இறைஞானியின் காரியம் உனக்கு அதிகப் பிரியமாக இருக்குமாயின் , மனிதர்களுக்கு தடையை ஏற்படுத்தும் இந்த புலியை கொன்று விடுவாயாக ! " என்று பிரார்த்தித்து கல்லை எறிந்தான். புலி கல்லடிப் பட்டு இறந்தது .
இந்த விஷயம் இறைஞானிக்கு தெரிந்தது. சிறுவனை அழைத்து , " அருமைப் புதல்வரே !... இன்று நீ என்னிலும் சிறந்தவன். நான் அறிந்த காரியம் உன்னிலிருந்து வெளியாயிற்று . இதனால் வெகு விரைவில் நீ சோதனைக்கு உள்ளாக்கப்படுவாய் அந்த சோதனையில் நீ என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே ! " என்று இறைஞானி எச்சரித்தார் .

அன்று முதல் சிறுவனிடம் பிறவிக் குருடர், முடவர், வெண்குஷ்டரோகி, கருங்குஷ்டரோகி ஆகியோர்கள் வந்து சிறுவன் கூறும் அல்லாஹ்வை விசுவாசித்து குணமடைந்து சென்றனர் .
அரச சபையில் உள்ள கண் தெரியாத குருட்டு அமைச்சர் பெருஞ் செல்வத்தைப் பாத காணிக்கையாகக் கொடுத்து கண் பார்வையை மீட்டித் தர வேண்டினார் .
அதற்கு அந்த சிறுவன் " நான் எதையும் குணப்படுத்த முடியாது. குணப்படுத்துபவன் அல்லாஹ்தான் நீங்கள் அல்லாஹ்வை ஈமான் கொண்டால், நான் பிரார்த்திக்கிறேன் . அல்லாஹ் குணப்படுத்துவான் " என்று கூறினான். அதன்படி கண் பார்வையைப் பெற்றார்.
கண் பார்வை பெற்றதும் அரச சபைக்கு அமைச்சர் சென்றார். அரசன் எப்படி கண் பார்வை கிடைத்ததுப் பற்றி விசாரித்தான் .
" அல்லாஹ்தான் " என்றார்.
அதற்கு அரசன் " என்னைத் தவிர்த்து உனக்கு வேறு இறைவன் இருக்கிறானா ? "
" எனக்கும் இறைவனாக , உனக்கும் இறைவனாக உள்ள ஒரே அல்லாஹ் " என்று அமைச்சர் பதில் கூறினார்.
அரசன் அவரை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்த , அவர் சிறுவனைக் காட்டிக் கொடுத்தார் .
அச்சிறுவனை பிடித்து துன்புறுத்த, "நான் யாரையும் எப்போதுமே குணப்படுத்தியதில்லை. குணப்படுத்துவதெல்லாம் அல்லாஹ்தான் " என்றான்.
அரசன் சிறுவனைக் கொடுமைப்படுத்த , சிறுவன் இறைஞானியைக் காட்டிக் கொடுத்தான் .
உடனே இறைஞானியைக் கட்டி இழுத்து வந்து , மதம் மாற அரசன் வற்புறுத்தினான். அதற்கு ஞானி மறுக்கவே , உடனே ரம்பம் கொண்டு உச்சியிலிருந்து உடல் இரண்டு துண்டாகப் பிளக்கப்பட்டது.
பின்னர் அமைச்சரையும் மதம் மாற வற்புறுத்த அவரும் மறுக்கவே, அவரையும் ரம்பத்தால் இரண்டாக பிளக்கப்பட்டார் .
பின்னர், அச்சிறுவனை அவனையும் மதம் மாற வற்புறுத்த , அதற்கு மறுப்புத் தெரிவிக்க , மலையில் இருந்து சிறுவனை உருட்டி விட ஆணைப் பிறப்பித்தான் .

சிறுவனை மலை உச்சியில் உருட்டி விட முயலும் போது , " யா அல்லாஹ் இவர்களது தீங்கை விட்டும் நீ விரும்பிய விதத்தில் என்னைக் காப்பாற்றுவாயாக! என்று பிரார்த்தித்தான் . உடனே மலையில் நில நடுக்கம் ஏற்பட்டு சிறுவனைத் தவிர்த்து மற்ற பணியாளர்கள் மலையிலிருந்து உருண்டு இறந்தனர் .
சிறுவனை மீண்டும் அரசன் பிடித்து விசாரிக்க , " அல்லாஹ் அவர்களை விட்டு என்னைக் காப்பாற்றினான் " என்று கூற , சிறுவனை படகில் ஏற்றி நடுக் கடலில் கொண்டு போய் கடலில் போட முயற்சிக்கும் போது, " யாஅல்லாஹ் இவர்களது தீங்கை விட்டும் நீ விரும்பிய விதத்தில் என்னைக் காப்பாற்றுவாயாக! என்று பிரார்த்தித்தான்.
அப் படகு கவிழ்ந்து சிறுவனைச் தவிர்த்து அனைவரும் கடலில் மூழ்கி இறந்தனர் .
அரசன் சிறுவனைப் பிடித்து " உன்னை கொல்வதற்காக மற்றவர்கள் இறந்து போகிறார்கள். எனவே உன்னைக் கொல்வதற்கு நீயே ஓர் உபாயத்தை சொல் " என்றான்.
" நான் கூறுவதுபோல் நீ செய்யாத வரையில் என்னை நீ கொல்ல முடியாது "
அரசன் , " என்ன செய்ய வேண்டும் ?"
" மனிதர்களை யாவரையும் ஒரு இடத்தில் ஒன்று கூட்ட வேண்டும் என்னைக் கழுவிலேற்றி , எனது அம்புக் கூட்டிலிருந்து ஒரு அம்பை எடுத்து, நாணிலேற்றி ,
" பிஸ்மில்லாஹி ரப்பில் குலாம் " அதாவது இந்தச் சிறுவனின் ரப்பாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் எய்கின்றேன்" என்று அவ்வம்பை எய்ய வேண்டும். என் மரணத்தை என் இறைவன் தர முடியுமே தவிர , உன்னால் முடியாது " _என்று கூறினான்.
சிறுவன் கூறிய வண்ணம் திறந்த வெளியில் அவ்வூரில் உள்ளவர்கள் யாவரையும் ஒன்று கூட்டி , அவனைக் கழுவிலேற்றி, அவனது அம்பை எடுத்து , அவன் கூறியவாறே கூறி எய்தப்பட்டது .

அவ்வம்பு சிறுவனின் கண்ணுக்கும் , செவிக்கும் இடையில் உள்ள பொட்டில் தைத்தது . அவன் அந்த இடத்தில் கையை வைத்த வண்ணம் இறந்தான் .
இதனைப் பார்த்த மக்கள் யாவரும் ," இச்சிறுவனின் இறைவனை நாங்கள் விசுவாசித்தோம் . இச்சிறுவனின் இறைவனை நாங்கள் விசுவாசித்தோம் " என்று கூறினார்கள்.
உடனே , அரசன் பெரிய பெரிய பள்ளங்களில் நெருப்புக் குண்டங்களை உண்டாக்கி , மனிதர்கள் மதம் மாறவில்லை என்றால் நெருப்புக் குண்டத்தில் வீசி எறியச் சொன்னான் .
அப்படி எறிக்கப்பட்டவர்கள் 20 ஆயிரம் என்றும் 70 ஆயிரம் என்றும் காணக் கிடைக்கிறது .
அதில் ஒரு பெண் தன் கைக்குழந்தையுடனும் மற்ற இரண்டு குழந்தைகளுடனும் நெருப்பில் குதிக்க தாமதித்த போது , கைக்குழந்தை " என் தாயே ! நீங்கள் சத்தியத்தில் இருக்கின்றீர்கள் " என்றதும் , அவளது முதல் மகனை நெருப்பில் வீசப்பட்டது . அவள் ஈமானில் உறுதியாக இருந்தாள். அடுத்து இரண்டாவது மகனை நெருப்பில் வீசப்பட்டது.அப்போதும் ஈமானில் உறுதியுடன் , இறுதியாக தன் கைக் குழந்தையுடன் நெருப்பினுள் உறுதியான ஈமானுடன் வீழ்ந்தாள். (முஸ்லிம் ,திர்மீதி இவற்றின்சாரம்)

இவ்வரலாற்றை மையப்படுத்தி திருக்குர்ஆனில் இறைவன் .....
قُتِلَ اَصْحٰبُ الْاُخْدُوْدِۙ
அகழுடையவர்கள் (பள்ளக் கிடங்குடையவர்கள்) அழிக்கப்பட்டார்கள் (அல்குர்ஆன் : 85:4)
النَّارِ ذَاتِ الْوَقُوْدِۙ
அது, விறகுகள் போட்டெரித்த நெருப்பு (அகழ் நெருப்பு)
(அல்குர்ஆன் : 85:5)
اِذْ هُمْ عَلَيْهَا قُعُوْدٌ ۙ
அதன் முன் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த சமயத்தில்,
(அல்குர்ஆன் : 85:6)
وَّهُمْ عَلٰى مَا يَفْعَلُوْنَ بِالْمُؤْمِنِيْنَ شُهُوْدٌ
நம்பிக்கையாளர்களை (நெருப்புக் கிடங்கில் போட்டு) நோவினை செய்வதை அவர்கள் (வேடிக்கையாகப்) பார்த்துக் கொண்டுமிருந்தார்கள். (அல்குர்ஆன் : 85:7)
وَمَا نَقَمُوْا مِنْهُمْ اِلَّاۤ اَنْ يُّؤْمِنُوْا بِاللّٰهِ الْعَزِيْزِ الْحَمِيْدِۙ
(நம்பிக்கை கொண்ட) அவர்களில் யாதொரு குற்றத்தையும் அவர்கள் காணவில்லை. எனினும், மிக்க புகழுடையவனும், (அனைவரையும்) மிகைத்தவனுமாகிய அல்லாஹ்வை அவர்கள் நம்பிக்கை கொண்டதையே அவர்கள் குற்றமாகக் கண்டனர். (அல்குர்ஆன் : 85:8)
الَّذِىْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَ اللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ شَهِيْدٌ
வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்குறியதே! (அவனை நம்பிக்கை கொண்டதற்காகவே அவர்களை நெருப்பில் எறிந்தனர்.) அல்லாஹ்வோ, (இவர்கள் செய்த) அனைத்தையும் அறிந்தவனாகவே இருந்தான். (அல்குர்ஆன் : 85:9)

இவ்வுண்மைச் சம்பவம் நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு 90 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது .
உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் வேறு ஒரு காரியத்திற்காக பூமியைத் தோண்டிய போது , தனது பொட்டில் அம்புக் காயமுள்ள இடத்தில் தனது விரலை வைத்த வண்ணம் அடக்கப்பட்ட ஒரு சிறுவனின் பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டது. கையை அவ்விடத்தை விட்டு அகற்றிய போது . காயத்திலிருந்து இரத்தம் வெளிவருவதும் ,கையை விட்டால் அது அக்காயத்தை அடைத்துக் கொள்வதுமாக இருந்தது.
இதனைப் பார்த்த நபித்தோழர்கள் கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்கு விஷயத்தை தெரிவித்து , மறு உத்தரவுக்கு காத்திருந்தனர் .
கலீஃபா அவர்கள் " இந்தச் சிறுவன் நெருப்பு குண்டங்களில்
சம்பந்தப்பட்டவன் .அவனை அப்படியே வைத்திருங்கள் கியாமத்து நாள் வரை இறைவன் அவனை உயிர்ப்பிக்கும் வரை அப்படியே அடக்கம் செய்யுங்கள் .- தப்ஸீருல் ஹமீத்

கராமத் 31

(குர்ஆன் கூறும் இறைநேசர்களான உயிர்த்தியாகிகளின் வரலாறு)
தினமும் நாம் ஓதும் யாஸீன் சூராவில் உயிர்த்தியாகிகளான வலிமார்களின் வரலாற்றை இறைவன் கூறியிருப்பது உங்களுக்குத் தெரியுமா ? சொல்றேன்.
"நான் உம்மை வானுக்கு உயர்த்தப் போகிறேன். உமது சிஷ்யர்களை ஒவ்வொருவராகவும் , இரண்டிரண்டு பேர்களாகும் பிரித்து, நகரங்களுக்கு அனுப்பி ஜனங்களை சன்மார்க்கத்தில் வருமாறு அழைக்கச் செய்வீராக !" என்பதாக நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான்.

" நான் வானுக்கு சென்ற பிறகு உங்களை நான் நியமனம் செய்த இடங்களுக்கு நீங்கள் சென்று சன்மார்க்க பிரச்சாரம் செய்ய வேண்டும்.உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் பேசப்படும் மொழியை நீங்கள் தெரிந்து கொள்ளாதிருந்தால், வானவர் உங்கள் பாதையில் வந்து உங்களுக்கு பானகம் அளிப்பார். அதனை நீங்கள் அருந்தினால், அந்த ஊரின் மொழியை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்" என்று நபி ஈஸா (அலை) கூறினார்கள்.என்பதாக கஷ்ஃபுல் அஸ்ரார் என்னும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.
நபி ஈஸா (அலை) அவர்கள் வானுக்கு உயர்த்தப்படுவதற்கு முன்னதாக அன்தாக்கியா நகருக்கு யோவானையும்(யஹ்யா), யூனுஸையும் அனுப்பி வைத்தார்கள். இவ்வூருக்கு செல்லுமாறு நபியவர்கள் கட்டளையிட்ட போது, தங்களுக்கு அந்த ஊர்வாசிகளின்மொழி தெரியாது' என்று இருவரும் நபியவர்களிடம் தெரிவித்தனர்.

அப்போது நபியவர்கள் அவ்விருவரையும் குறித்து இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். அவ்விருவரும் தூங்கும் பொழுது மலக்குகள் அவர்களை அன்தாக்கியாவுக்கு கொண்டு சென்று விட்டனர். அவ்விருவரும் துயிலெழுந்து பார்க்கும்போது, அவர்கள் அன்தாக்கிய நாட்டில் இருந்தனர் அந்நாட்டு மொழியை இவ்விருவரும் நன்கு சரளமாக பேசினர்.

புதிய ஏற்பாடு "அப்போஸ்தலர் நடபடிகள் " 11: 27-ல் " அந்த நாட்களிலேயே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோக்கியா (அன்தாகியா) வுக்கு வந்தார்கள் "எனக் காணப்படுகிறது.
அவ்விருவரும் அந்நகரை நெருங்கியபோது, ஆடுகளை மேய்த்துக்கொண்டும், விக்கிரகங்களை தயாரித்து விற்பனை செய்து கொண்டு இருக்கும் ஒரு வயோதிகரை கண்டு, அவருக்கு சலாம் சொன்னார்கள். அவர் இவ்விருவரையும் "நீங்கள் யார் ?" என விசாரித்தார். அதற்கு அவர்கள் நாங்கள் ஈஸாவின் தூதர்கள். உங்களை சன்மார்க்கத்தில் அழைப்பதற்காக வந்திருக்கிறோம் "என்றனர் .
அப்போது அவர் நீங்கள் ஈஸாவின் தூதர்கள் என்பதற்கு என்ன அடையாளம் உங்களிடம் இருக்கிறது ? என்று வினவினார். அதற்கு அவர்கள் "நாங்கள் நோயாளிகளை குணப்படுத்துவோம், இறைவன் கட்டளைப்படி பிறவிக்குருடு வெண்குஷ்டம், ஊனம் இவற்றை நீக்குவோம் என்று கூறினார்கள்.
நபி ஈஸா (அலை) அவர்களது பிரார்த்தனையின் காரணமாக நபிமார்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அற்புத சக்திகளை அவர்களது தூதர்களான இறைநேசர்களுக்கும் இறைவன் அளித்திருந்தான்.
அப்பொழுது வயோதிகர், " அவ்வாறாயின் எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். அவன் பைத்தியக்காரன். வெகுகாலமாக எம்பையன் நோயாளியாக இருப்பதாகவும், வைத்தியர்கள் மருத்துவம் செய்து கைவிட்டதாகவும், அவனை குணமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
இவ்விருவரும் இறைவனிடம் துஆ செய்து குணப்படுத்தினார்கள். இதனை பார்த்த வயோதிகர் சன்மார்க்கத்தை தழுவினார்.அவரது பெயர் ஹபீப் எனப்படும் யாஸீன் சூராவில் கூறப்படுவதால், இவரை 'ஸாஹிபு யாஸீன்' (யாஸீனில் உள்ளவர்) என்றும் கூறுவர்.
இந்த விவரம் ஊர் எங்கும் பரவிற்று.ஏராளமான நோயாளிகள் இவர்களால் குணம் அடைந்தனர். இறுதியாக இவர்களைக் குறித்த விபரம் அரசனுக்கு எட்டிற்று. இவ்விருவரையும் அரசன் வரவழைத்து விசாரணை செய்தான்.அப்போது அவர்கள் நாங்கள் ஈஸாவின் தூதர்கள். ஏகநாயகனை வணங்குமாறு உன்னை நாங்கள் அழைக்கின்றோம்" என்றனர்.
அதற்கு அரசன் " எங்களது தெய்வங்களை தவிர வேறு தெய்வமும் ஒன்றிருக்கிறதா ?" என்று வினவினான்.
அவ்விருவரும் "ஆம். அவன்தான் உம்மையும் உமது தெய்வங்களையும் உண்டு பண்ணியவன். அவனை விசுவாசித்தவர் சுவர்க்கம் புகுவர். அவனை நிராகரிப்பவர் நரகம் புகுவர் . அவர் அதில் என்றென்றும் நிரந்தரமாக வேதனை செய்யப்படுவர் "என்றனர்.
தனது தெய்வங்களைக் குறித்து அவர்கள் இவ்வாறு கூறியதால், அரசனுக்கு கோபம் ஏற்பட்டது.எனவே அவ்விருவரையும் சிறைச்சாலைக்கு அனுப்பினான்.

اِذْ اَرْسَلْنَاۤ اِلَيْهِمُ اثْنَيْنِ فَكَذَّبُوْهُمَا فَعَزَّزْنَا بِثَالِثٍ فَقَالُوْۤا اِنَّاۤ اِلَيْكُمْ مُّرْسَلُوْنَ
நாம் அவர்களிடம் தூதர்கள் இருவரை அனுப்பியபோது, அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினார்கள்; ஆகவே (அவர்களை) மூன்றாவது தூதரைக் கொண்டு வலுப்படுத்தினோம்; ஆகவே, “நிச்சயமாக நாங்கள் உங்களிடம் அனுப்பப்பட்ட தூதர்கள் ஆவோம்” என்று அவர்கள் கூறினார்கள். (குர்ஆன் : 36:14)
இவ்விபரம் நபி ஈஸா (அலை) அவர்களுக்கு எட்டிற்று. அவ்விருவருக்கும் உதவி புரியும் பொருட்டு ஷம்ஊன் என்பவரை மூன்றாவதாக அவ்வூருக்கு அனுப்பினார்கள். பின்னர் நபியவர்கள் வானுக்கு உயர்த்தப்பட்டு விட்டார்கள்.
ஷம்ஊன் என்பவர் சாமானியராகவே இவ்வூருக்கு வந்து, வீட்டிற்கு அருகில் வசித்தார். இவர் இன்னார் என்பதும், இந்த விஷயத்திற்காக வந்தார் என்பதும், இங்குள்ளவர்களுக்குத் தெரியாது. இவரிடம் மனிதர்கள் நெருங்கி பழகினார். ஜனங்களின் மத்தியில் இவர் மீது அன்பும் பிரியமும் ஏற்பட்டது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அரசனுக்கு இவரைக் குறித்த செய்தி தெரிந்தது.

அரசனிடம் அவருக்கு அறிமுகம் ஏற்பட்டது. அந்த ஊராரின் மத வழக்கத்தையே அவரும் கடைப்பிடிப்பதாக காட்டிக் கொண்டார். ஆகவே தங்களுடைய மதத்தை கடைப்பிடிப்பவர் என ஜனங்களும் , அரசரும் எண்ணிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் ஒருநாள் அரசனை நோக்கி ஷம்ஊன் "தாங்கள் இருவரை சிறைச்சாலையில் வைத்திருப்பதாகவும், அவ்விருவரும் உம்முடைய தெய்வத்தைத் தவிர வேறு தெய்வம் இருப்பதாக கூறியதாகவும் நான் கேள்விப்பட்டேன். அவ்விருவரையும் வரவழைத்தால்,அவர்கள் கூறுவது இன்னது என்பதாக நானும் தெரிந்து கொள்ளலாம். அவர்களிடம் உன் சார்பாக நான் தர்க்கமும் செய்யலாம்."
ஷம்ஊனின் வேண்டுகோளுக்கிணங்க, அவ்விருவரையும் அரசன் சிறைச்சாலையிலிருந்து வரவழைத்தான். அவர்களிடம் ,
ஷம்ஊன் : "உங்களை அனுப்பியவர் யார் ?"
இருவரும்: " எல்லாவற்றையும் சிருஷ்டித்தவனும்,இணையற்ற வனுமாகிய அல்லாஹுத்தஆலா "
ஷம்ஊன் : "அவனைக் குறித்து விவரம் கூறுங்கள்"
இருவரும் : "அவன் விரும்பியதை செய்வான். அவன் நாடியதை தீர்ப்புச் செய்வான் .
ஷம்ஊன் : " அதற்கு உங்களுடைய ஆதாரம் என்ன ?
இருவரும் : அரசர் சோதித்து , விரும்புவதை செய்வோம்.
உடனே ஒரு பையன் அழைத்து வரப்பட்டான். அவனுக்கு கண்ணில்லை. முகத்தில் கண் இருக்கிற இடம் தெரியாமல் இருந்தது. பையனுக்கு கண்கள் உண்டாக வேண்டும் என இவ்விருவரும் பிரார்த்தித்தனர். கண் இருக்க வேண்டிய இடம் பையனுக்கு பிளந்தது.மண் உருண்டைகளை எடுத்து கண் இருக்க வேண்டிய இரு பிளவுகளிலும் வைத்தனர். அவ்விரு உருண்டைகளும் இரு விழிகள் ஆக மாறின. பையன் நன்றாக பார்ப்பவனாகி ஆகிவிட்டான்.

அரசன் இதனைக் கண்டு ஆச்சரியமடைந்தான் . அப்பொழுது ஷம்ஊன்" உனது தெய்வத்தை நீ பிரார்த்தித்தால், இதனை போல அது செய்யுமா ? அவ்வாறு செய்தால் உமக்கும் அத்தெய்வத்துக்கும் சிறப்பல்லவா ? "என்று அரசனைக் கேட்டார் .
அதற்கு அரசன், " நீ அறியாத ரகசியம் என்னிடம் இல்லை. எங்களது தெய்வத்திற்கு பார்க்கவும் முடியாது. செவி ஏற்கவும் முடியாது. நன்மை தீமை செய்யவும் முடியாது " என்று கூறியதுடன் ,
" இங்கு ஒரு பையன் இருந்தான். அவன் மரணித்து ஏழு நாட்கள் ஆகின்றன. அவனது தந்தைக்கு பக்கத்து ஊரில் ஒரு தோப்பு இருக்கிறது. அங்கு அவர் சென்றிருக்கிறார். இன்னமும் அவர் வரவில்லை. அவர் குடும்பத்தினர் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவனை அடக்கம் செய்துவிட என் அனுமதி கோரினர். அவர் வரும் வரை பொறுங்கள் என நான் உத்தரவிட்டு இருக்கிறேன் உங்களது றப்பு அவனை உயிர்ப்பித்து விடுவானோ ? "என்று அவ்விருவரையும் வினவினான்.
பிணம் கொண்டுவரப்பட்டது. அவ்விருவரும் இறைவனை பகிரங்கமாக பிரார்த்தித்தனர். ஷம்ஊன் ரகசியமாக மனதுக்குள் அவர்களுடன் சேர்ந்து பிரார்த்தித்தார். இறைவனது கட்டளைப்படி அப்பிணம் உடனே உயிர் பெற்று எழுந்தது.

உயிர்பெற்று எழும்பிய அந்த பையன் " நான் குஃப்ரான கொள்கையில் விசுவாசித்தவனாக மரணித்தவன். என் உடலை விட்டு என் ஆவி பிரிந்த உடன் நெருப்பிலான ஏழு ஓடைகள் வழியாக ஆவி கொண்டு செல்லப்பட்டது. ஆதலால், நீங்கள் இணை வைத்து வணங்கி கொண்டிருப்பது குறித்து உங்களுக்கு நான் அச்சுறுத்துகிறேன் .ஏகநாயகனை விசுவாசிகள். இதோ வானில் தலைவாசல் திறந்திருக்கிறது. நபி ஈஸா (அலை) அர்ஷ்க்கு கீழிருந்து, ' நாயனே..! எனது தோழர்களுக்கு உதவி செய். அவர்கள் எனது தூதுவர்கள் " என்று இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு இருக்கிறார்.
எனவேதான் இறைவன் என்னை உயிர்ப்பித்திருக்கிறான். ஆகவே வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை ஈஸா அல்லாஹ்வின் ஆன்மாவாகவும் ,அவனது வார்த்தையாகவும் இருக்கிறார் .இந்த மூவரும் அல்லாஹ்வின் தூதர்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன் " என்றான்.
இதனைக் கேட்ட அரசன், "அம்மூவர் யார் ? "என்றான் அப்பையன் " யோவான் , யூனூஸ் , இவர் ஷம்ஊன்" என்றான்.

அரசன் ஆச்சரியமடைந்தார். பையனது வார்த்தைகள் அரசனின் இதயத்தில் ஆழப்பதிந்து விட்டது என்பதை உணர்ந்து ஷம்ஊன் , தாம் மஸீஹு ஈசாவின் தூதர்தாம் என்பதை தெரிவித்து, அரசனுக்கு சன்மார்க்க உபதேசங்கள் புரிந்தார்.
அவரது உபதேசத்தின் காரணமாக அரசன் மட்டும் விசுவாசம் கொண்டதாகவும் அவனின் பிரஜைகளிலுள்ள பிடிவாதக்கார்களுக்கு அஞ்சி தனது விசுவாசத்தை மறைத்துக் கொண்டதாகவும் இமாம் குஷைறி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவ்வரசனும் கூட விசுவாசம் கொள்ளவில்லை என்பதாக வஹபுப்னு முனப்பஹ் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்

அவனது சமூகத்தினர் தங்களது பழைய தெய்வங்களின் கொள்கையிலேயே ஸ்திரமாக இருந்து, அந்த தூதர்களின் கண்ணைக் கட்டியும், கைகளை பின்னால் கட்டியும் கல்லெறிந்து கொன்று விட்டனர். முதன்முதலாக இவர்களை சந்தித்து விசுவாசம் கொண்ட ஹபீப் என்பவரையும், இப்பையனின் தந்தையும் அவர்கள் கொன்றுவிட்டனர். ஹபீப் அவர்களின் அடக்கஸ்தலம் இன்னும் அந்தாகியாவில் உள்ளது. பின்னர் அல்லாஹுத்தஆலா வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களை அனுப்பினான். அவர் அவர்களிடத்தில் ஒரு சப்தமிட்டார். அச்சப்தத்தால் அவர்கள் யாவரும் மடிந்தனர்.- தப்ஸீருல் ஹமீத்

கராமத் 32

நபிமொழியில் இறைநேசர்கள் 1
இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
பனூ இஸ்ராயீல் சமுதாயத்தைச் சேர்ந்த 'ஜுரைஜ்' என்று அழைக்கப்பட்டு வந்த ஒருவர் தொழுது கொண்டிருந்தார்.
அப்போது அவரின் தாயார் வந்து அவரை அழைத்தார். அவருக்கு பதில் கூற ஜுரைஜ் மறுத்துவிட்டார். 'நான் அவருக்கு பதிலளிப்பதா, அல்லது தொழுவதா?' என்று (மனத்திற்குள்) கூறினார்.
பிறகு (மீண்டும்), அவரின் தாயார் அவரிடம் வந்து, (தான் அழைத்தும் தன் மகன் பதிலளிக்க வில்லையே என்ற கோபத்தில்), 'இறைவா! விபசாரிகளின் முகத்தில் விழிக்கச் செய்யாத வரை அவனுக்கு (ஜுரைஜுக்கு) மரணத்தைத் தராதே' என்று கூறினார்.
(ஒரு நாள்) ஜுரைஜ் தன் ஆசிரமத்தில் இருந்தார். அப்போது ஒரு பெண், 'நான் ஜுரைஜை நிச்சயம் சோதனைக்குள்ளாக்குவேன்' என்று கூறினாள். அதற்காக, ஜுரைஜின் முன்பு வந்து அவருடன் (தகாத உறவு கொள்ள அழைத்துப்) பேச முனைந்தாள். அவர் (இணங்க) மறுத்துவிட்டார்.
எனவே, அவள் ஓர் இடையனிடம் சென்று, தன்னை அவனுடைய ஆளுகைக்குள் ஒப்படைத்துவிட்டாள். அதன் காரணமாக ஒரு (ஆண்) குழந்தையைப் பெற்றெடுத்தாள்.
பிறகு, 'இவன் ஜுரைஜுக்குப் பிறந்தவன்' என்று கூறினாள். (இதைக் கேட்ட) மக்கள் (வெகுண்டெழுந்து) ஜுரைஜிடம் வந்தனர்; (கோபாவேசத்தில்) அவரின் ஆசிரமத்தைத் தகர்த்து உடைத்துவிட்டனர்; அவரை (அவரின் அறையிலிருந்து) இறக்கி அவரை ஏசினர்.
ஜுரைஜ் உளூச் செய்து தொழுதார். பிறகு அக்குழந்தையிடம் வந்து, 'குழந்தையே! உன் தந்தை யார்?' என்று கேட்டார். அந்தக் குழந்தை (வாய் திறந்து), '(இன்ன) இடையன்' என்று கூறியது.
இதைச் செவியுற்ற மக்கள், 'உங்கள் ஆசிரமத்தைத் தங்கத்தால் நாங்கள் கட்டித் தருகிறோம்' என்று (ஜுரைஜிடம் அனுமதி) கேட்டார்கள். அதற்கு ஜுரைஜ், 'இல்லை; களிமண்ணால் கட்டித் தந்தாலே போதும்' என்று கூறிவிட்டார்.
ஸஹீஹ் புகாரி : 2482.

கராமத் 33

(மேகத்திலிருந்து அசரீரி)
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஒரு மனிதர் ஒரு காட்டு நிலத்தில் இருந்த போது, ஒரு மேகத்தினிடையே "இன்ன மனிதரின் தோட்டத்திற்கு நீர் பொழி" என்று ஒரு சப்தம் வருவதைக் கேட்டார்.
உடனே அந்த மேகம் நகர்ந்து, கருங்கற்கள் நிறைந்த ஒரு பகுதியில் மழையைப் பொழிந்தது. அங்கிருந்த நீரோடைகளில் ஒன்றில் அந்த நீர் முழுவதும் ஓடியது.
உடனே அந்த மனிதர் அந்த நீர்வழியைத் தொடர்ந்தார்.
அப்போது ஒரு மனிதர் தமது தோட்டத்தில் நின்றுகொண்டு மண்வெட்டியால் தண்ணீரை திருப்பிவிட்டுக்கொண்டிருந்தார்.
அவரிடம், "அல்லாஹ்வின் அடியாரே! உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டார். அவர் "இன்னது" என மேகத்தினிடையே கேட்ட அதே பெயரைச் சொன்னார்.
அப்போது அவர், "அல்லாஹ்வின் அடியாரே! ஏன் என் பெயரைக் கேட்கிறீர்?" என்றார்.
அதற்கு அந்த மனிதர், "நான் மேகத்தினிடையே உமது பெயரைக் குறிப்பிட்டு, "இன்ன மனிதரின் தோட்டத்தில் நீரைப்பொழி" என ஒரு சப்தத்தைக் கேட்டேன். அந்த மேகத்தின் நீர்தான் இது. அந்தத் தோட்டத்தி(ன் மூலம் கிடைக்கும் வருவாயி)ல் நீர் என்ன செய்கிறீர்?"என்று கேட்டார்.
அதற்கு அந்தத் தோட்டக்காரர், "நீங்கள் சொல்வது உண்மையானால், அதன் விளைச்சலில் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைத் தர்மம் செய்கிறேன். மற்றொரு மூன்றில் ஒரு பகுதியை நானும் என்

மனைவி மக்களும் உண்கிறோம். இன்னொரு மூன்றில் ஒரு பகுதியை மறுபடியும் விவசாயம் செய்கிறேன்" என்று கூறினார்.
ஸஹீஹ் முஸ்லிம் : 5707.
இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

கராமத் 34

(நபிமொழியில் மூன்று இறைநேசர்கள்)
இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
'(முன்காலத்தில்) மூன்று மனிதர்கள் நடந்து சென்றனர். அப்போது மழை பொழிந்தது. அவர்கள் மலையில் உள்ள குகையில் நுழைந்தனர். ஒரு பெரிய பாறை உருண்டு வந்து குகை வாசலை அடைத்தது.
அப்போது அவர்கள் தமக்குள், 'நீங்கள் செய்த நல்லறங்களில் மிகச் சிறந்ததைக் கூறி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்றனர்.
அவர்களில் ஒருவர், 'இறைவா ! எனக்கு வயது முதிர்ந்த பெற்றோர் இருந்தனர்; நான் ஆடு மேய்க்க வெளியே சென்றுவிட்டுப் பிறகு வந்து, பால் கறந்து, பால் பாத்திரத்தைப் பெற்றோர்களிடம் கொண்டு வருவேன். அவர்கள் அருந்துவார்கள். பிறகு குழந்தைகளுக்கும் குடும்பத்தாருக்கும் என் மனைவிக்கும் கொடுப்பேன். ஓர் இரவு தாமதமாக வந்தேன். பெற்றோர் உறங்கிவிட்டனர். அவர்களை எழுப்புவதை நான் விரும்பவில்லை. குழந்தை பசியால் என் காலடியில் அழுதனர். விடியும்வரை இதே நிலை நீடித்தது. இறைவா! நான் இதை உன்னுடைய திருப்தியை நாடிச் செய்திருப்பதாக நீ அறிந்தால் நாங்கள் வானதைப் பார்க்கும் வகையில் ஒரிடை வெளியை ஏற்படுத்து' எனக் கூறினார்.
அவ்வாறு (பாறை விலகி) இடைவெளி உண்டானது.
மற்றொருவர், 'இறைவா! என்னுடைய தந்தையின் உடன் பிறந்தாரின் மகளை எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் விரும்புவதைவிட அதிகமாக விரும்பினேன் என்பதை நீ அறிவாய். அவள் தனக்கு நூறு தீனார் தரும்வரை தன்னை அடையமுடியாது என்றாள். நான் உழைத்து நூறு தீனாரைத் திரட்டினேன். அவளுடைய இரண்டு கால்களுக்கிடையே நான் அமர்ந்தபோது அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! உரிய முறையின்றி முத்திரையை உடைக்காதே! என்று அவள் கூறினாள். உடனே அவளைவிட்டு நான் எழுந்து விட்டேன். இதை உன்னுடைய திருப்தியை நாடி நான் செய்திருப்பதாக நீ அறிந்தால் இந்தச் சிரமத்தைவிட்டு நீக்கு' எனக் கூறினார். அல்லாஹ் அவர்களைவிட்டும் மூன்றில் இரண்டு மடங்கு (சிரமத்தை) நீக்கினான்.
மற்றொருவர், 'இறைவா ! நான் மூன்று ஸாவு கேழ்வரகு கூலிக்கு ஒரு வேலையாளை அமர்த்தினேன். கூலியை நான் கொடுத்தபோது அதை அவர் மறுத்துவிட்டார். அந்தக் கேழ்வரகைப் பயிர் செய்தேன். அதன் வருமானத்தில் மாடுகளையும் அதை மேய்ப்பவரையும் விலைக்கு வாங்கினேன்.
பிறகு அவர் வந்து, அல்லாஹ்வின் அடிமையே! என்னுடைய கூலியைக் கொடு! என்றார். இந்த மாடுகள், அதை மேய்ப்பவர்கள் எல்லாம் உமக்குரியவை; எடுத்துச் செல்லும் என்று கூறினேன்.
அதற்கவர் என்னைக் கேலி செய்கிறீரா? என்று கேட்டார். நான் உம்மைக் கேலி செய்யவில்லை; இவை உமக்குரியவைதான் எனக் கூறினேன். இறைவா! இதை நான் உன்னுடைய திருப்தியை நாடிச் செய்திருப்பதாக நீ அறிந்தால் எங்களைவிட்டு இந்தச் சிரமத்தை நீக்கு' எனக் கூறினார். முழுமையாகச் சிரமம் விலகியது.' என இப்னு உமர்(ரலி) அறிவித்தார். ஸஹீஹ் புகாரி : 2215.

கராமத் 35

(சத்தியத்தை தேடி கண்டடைதல்)
மூஸா (அலை) தவ்ராத் வேதம் அருளப்பட்ட நபி மூஸா (அலை) அவர்களை பார்க்கணும் வேறு ஒருவர் மிக அறிந்தவராக இருந்தார் என்று ஒப்புக்கொள்ள யூதர்களது மனம் இடந்தரவில்லை. வேறு ஒருவர் அதிகம் தெரிந்தவராக இருந்தார் என்பதை ஒப்புக் கொள்வதால், தங்களது நபிக்கு இழுக்கு வருவதாக அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டனர்.
அப்பொழுது பனி இஸ்ராயில்களிலுள்ள அறிஞர் ஒருவர், இது பற்றி தம் நபியிடமே தெரிந்து கொள்ள வேண்டி ,"மிக அறிந்தவர் யார் ? " என்று மூஸா (அலை) அவர்களிடமே வினவினார்.
அதற்கு மூஸா (அலை) அவர்கள், "அல்லாஹ்தான் மிக அறிந்தவன் " என்று கூறாமல், " நான் " என்று கூறினார். இதற்காக இறைவன் அவரை கண்டித்து, " நீர் மிக அறிந்தவர் அல்ல, இரு கடல்களும் சேரும் இடத்தில் எனது அடிமை ஒருவர் இருக்கிறார் அவர் உண்மை பார்க்கிலும் மிக அறிந்தவர் " என்று அறிவித்தான். அவ்வடிமைதான் ஹஜரத் கிள்று (அலை) ஆவார்கள்.

அவரது முகவரி ***'இரு கடல்கள் சேருமிடம்'*** என்று இறைவன் குறிப்பிட்டாலும், மேலதிகமான விபரங்கள் தேவைப்பட்டதால், நபி மூஸா (அலை) அவர்கள் : " எனது றப்பே..! அவரை நான் எங்கு காண்பேன் ? அவரைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் எவ்வாறு நான் வெற்றி அடைய முடியும் ? " என்றார்.
அதற்கு இறைவன் "கடற்கரையில் ஒரு பாறையின் அருகில் அவரை நீர் காணலாம் . உப்பிட்ட ஒரு மீனை உமது கூடையில் வைத்துக் கொள்வீராக ! அது உனக்கு கட்டு சாதமாகவும் இருக்கட்டும். எந்த இடத்தில் அம்மீன் உயிர்பெற்று உம்மை விட்டு மறைந்து விடுகிறதோ அந்த இடத்தில் நீர் அவரைக் காணலாம் " என்றான் .

وَاِذْ قَالَ مُوْسٰى لِفَتٰىهُ لَاۤ اَبْرَحُ حَتّٰۤى اَبْلُغَ مَجْمَعَ الْبَحْرَيْنِ اَوْ اَمْضِىَ حُقُبًا
இன்னும் மூஸா தம் பணியாளிடம், "இரு கடல்களும் சேரும் இடத்தை அடையும் வரை நீங்காது நடப்பேன்; அல்லது வருடக் கணக்கில் நான் போய்க்கொண்டிருப்பேன்" என்று கூறியதை நீர் நினைவு படுத்துவீராக. (அல்குர்ஆன் : 18:60)

மேற்கண்ட வசனத்தில் ஒரு ஹுக்பு என்பது 80 வருட காலம்; அதாவது நீண்ட காலத்துக்கு பிரயாணம் செய்வது, இரு கடல்கள் சந்திக்கும் இடத்தை அடைவது 80 வருட காலமாவது நான் நடப்பேன் அதாவது இறைஞானம் போதிப்பவர் கிடைப்பதற்காக பெரிய சிரமத்தையும் ஏற்பேன் என்ற கருத்து .

நபி மூஸா (அலை) அவர்கள் ஞானத்தை தேடும் பயணத்தின் துணையாக தம் சகோதரியின் புதல்வர் யூஷஉ (அலை) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள் .
உண்மையான சிஷ்யனுக்கு தான் பின்பற்றக்கூடிய ஞானாசிரியரைத் தேடி கண்டுபிடிக்கும் விஷயத்தில் தன் நோக்கம் வெற்றியடையும் வரை பின் வாங்குவதில்லை என்ற நிய்யத்தும் இருக்க வேண்டும். ஏனெனில் ஞானாசிரியரைத் தேடுவது, அந்தரங்கத்தில் சத்தியத்தை தேடுவதாகும் என்ற விபரங்கள் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்படுகின்றன என்பதாக **"தாவீலாத்துன்னஜ்மிய்யா"** என்ற கிதாபில் கூறப்பட்டிருக்கிறது.

فَلَمَّا بَلَغَا مَجْمَعَ بَيْنِهِمَا نَسِيَا حُوْتَهُمَا فَاتَّخَذَ سَبِيْلَهٗ فِى الْبَحْرِ سَرَبًا
அவர்கள் இருவரும் அவ்விரண்டு (கடல்களு)க்கும் இடையே ஒன்று சேரும் இடத்தை அடைந்த போது; அவ்விருவருடைய மீனை அவ்விருவரும் மறந்து விட்டனர்; அது கடலில் தன்னுடைய வழியைச் சுரங்கம் போல் அமைத்துக்கொண்டு (நீந்திப் போய்) விட்டது. (அல்குர்ஆன் : 18:61)

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களும் யூஷஉ (அலை) அவர்கள் கடற்கரை ஓரமாக நடந்து வந்து இரு கடல்களும் சந்திக்கும் இடத்தை அடைந்தனர். அங்கு ஒரு பாறை இருந்தது. அப்பாறையில் நபி மூஸா (அலை) அவர்கள் தூங்கினார்கள்.
பின்னர் மூஸா (அலை) அவர்கள் எழுந்து,பாறையின் அடியில் உள்ள சுனையில் ஒலுச் செய்து தொழுவதற்காக தயாரானார்கள். அந்த ஒலுத் தண்ணீரில் ஒரு துளி உப்பிட்ட பொறித்த மீனின் மீது விழுந்தது . உடனே அது உயிர் பெற்று, துள்ளிக் குதித்து, கடலில் விழுந்து, தனக்குரிய வழியே சென்றது . இந்த சுனையின் தண்ணீர்தான் ***"மாவுல் ஹயாத்"*** என்னும் ஜீவ தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. யூஷஉ (அலை) அவர்கள் இதனை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். என்றாலும் ,அந்த உடனேயே நபி மூஸா (அலை) இடம் சொல்ல மறந்து விட்டார்.

பின் நபி மூஸா (அலை) உணவு சாப்பிட கேட்க , அப்போதுதான் மீன் மீண்டும் உயிர் பெற்று கடலில் குதித்ததை யூஷஉ (அலை) தெரிவிக்கிறார்கள் .
قَالَ اَرَءَيْتَ اِذْ اَوَيْنَاۤ اِلَى الصَّخْرَةِ فَاِنِّىْ نَسِيْتُ الْحُوْتَ وَ مَاۤ اَنْسٰنِيْهُ اِلَّا الشَّيْطٰنُ اَنْ اَذْكُرَهٗ ۚ وَاتَّخَذَ سَبِيْلَهٗ فِىْ الْبَحْرِ ۖ عَجَبًا
அதற்கு "அக்கற்பாறையில் நாம் தங்கிய சமயத்தில் நீங்கள் பார்த்தீர்களா? நிச்சயமாக நான் மீனை மறந்து விட்டேன்." மேலும், அதை (உங்களிடம்) சொல்வதை ஷைத்தானையன்றி (வேறு எவனும்) என்னை மறக்கடிக்கவில்லை; மேலும் அது கடலுக்குள் தன் வழியை ஆச்சரியமாக அமைத்துக் கொண்டது!" என்று பணியாள் கூறினார். (அல்குர்ஆன் : 18:63)

உடனே நபி மூஸா (அலை) அவர்கள் "அதுதான் நாம் தேடி வந்த இடம் " என்று கூறி வந்த வழியே திரும்பிச் சென்று அக்கற்பாறையை அடைகிறார்கள் .
அங்கே ... ஒருவர் பச்சை துணியால் தன்னை மூடிக்கொண்டும், தலையில் பச்சை துணியைக் கட்டிக் கொண்டு தொழுது கொண்டிருந்தார் . அவர்கள்தான் கிள்று (அலை) ஆவார்கள் .
கிள்று (அலை) என்கிற விலாயத்துள்ள இறை வலியுல்லாஹ் இறைவன் இவர்களை அறிமுகப்படுத்தும் போதே ,மீன் உயிர் பெற்றெழும் கராமத்தைக் கொண்டுதான் ஆரம்பம் செய்கிறான்.

மேலும் கிள்று (அலை) அவர்கள் கியாமத் நாள் வரை ***ஹயாத்துன் வலியுல்லாஹ்*** என்பதாக சொல்லப்படுகிறது. எனவே அவர்கள் நித்தியமாக இருப்பதற்கென்று ***" மாவுல் ஹயாத் "*** என்னும் ஜீவ நீரை அருந்தியதாக வரலாற்று குறிப்பு ஒன்று காணப்படுகிறது.
எனவேதான் நபி மூஸா (அலை) அவர்கள் மாவுல் ஹயாத் நீரில் ஒலு செய்யும்போது , அந்நீர் தெறித்து மீன் மீது விழ , பொறித்த மீனும் உயிர் பெற்றெழுந்தது .
அவர்கள் தொழுது முடித்ததும் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் அவருக்கு சலாம் சொல்லவே, அவர் பதில் சலாம் சொல்லிவிட்டு, " நீர் யார் ? " என விசாரித்தார்.
அதற்கு மூஸா (அலை) அவர்கள் " நான் மூஸா " என்றார்கள்
அப்போது கிள்று (அலை) அவரை நோக்கி " பனூ இஸ்ராயில்களது மூஸாவா நீர் ? " என்று வினவினார்
அப்பொழுது அவர் "ஆம் " என்றார்.
உடனே அவர் " உமக்கு பனூ இஸ்ராயீல்களிடம் அதிக வேலை இருக்குமே " என்று வினவினார்
அதற்கு மூஸா (அலை) அவர்கள் "கல்வி பயில்வதற்காக இறைவன் என்னை தங்களிடம் அனுப்பி இருக்கிறான் " என்று பதிலளித்தார்கள் .

பின்னர் ஹஜரத் யூஷஉ (அலை) அவர்கள் அவ்விடத்தை விட்டு திரும்ப வந்து விட்டார்கள். அதனால் மூஸா (அலை) அவர்கள் மட்டும் ஹஜரத் கிள்று (அலை) அவர்களுடன் இருந்தார்கள் .
இறை நேசர்களுக்கு "விலாயத் " என்னும் மெஞ்ஞான உயர் பதவியை இறைவன் கிள்று (அலை) இவர்கள் மூலமாகவே கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கராமத் 36
(எதிரும் புதிரும்)
எதிர் வருவது என்னவென்றே தெரியாத புதிர் நிலையில்தான் நமது வாழ்க்கை நாள்தோறும் நகர்ந்துகொண்டு போகிறது. நம்மையறியாமலேயே நம்முடை நிகழ்ச்சிகள் நம் முன்னே நடக்கின்றன. நமக்குப் பிடிக்காத நிகழ்ச்சிகள் நடந்தாலும், அதனை தவிர்க்கவோ தடுக்கவோ முடியாமல் தடுமாறுகின்றோம்.
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகும்பொழுது, படுகின்ற துன்ப வேதனைகள் தொடர்கதையாவதும் உண்டு. சில நேரங்களில், வாழ்க்கையே விடுகதை போல கேட்கப்படுகின்ற கேள்விக்கு பதிலைத் தேடி அலைய வைக்கிறது .
கடலோரக் கிராமத்திற்கு ஒரு ஜென் குரு தன் சீடர்களுடன் வருகை தந்தார்.கிராம மக்கள் குருவிடம் ,
"எங்களுக்கு கடலில் மீன்பாடு அதிகம் வேண்டும் .
"அது கடலில் இல்லை ; கரையில் இருக்கிறது."
"கரையில் உள்ள எங்க குடிசையெல்லாம் கோபுரமாக வேண்டும்"
"அது கரையில் இல்லை ; கடலில் இருக்கிறது"
"எங்கள் தென்னை மரத்தில் காய்கள் செழிக்க வேண்டும். "
"அது மரத்தில் இல்லை ; வேரில் இருக்கிறது."
குருவின் எதிரும் புதிருமான எகத்தாளமான பதில்களால் கிராமத்தார்கள் குழம்பினர்கள்
தலைமைச் சீடன் "குரு சரியாகத் தானே சொன்னார் " .
"எப்படிய்யா சரியாகச் சொன்னார் ?"
"கடலில் மீன்பாடு கேட்டீர்கள் ;அது கரையிலுள்ள நீங்கள் உயர்ந்த இலட்சியத்தோடு கடலில் மீன் பிடிக்க வேண்டும்"
"கரையிலுள்ள உங்க குடிசை கோபுரமாகக் கேட்டீர்கள் அதற்கு நீங்கள் கடலில் நன்கு உழைக்க வேண்டும்"
"தென்னையில் காய் செழிக்க கேட்டீர்கள் அது வேரில் உரமிட்டு நன்கு பேண வேண்டும்"
மூஸா (அலை) அவர்கள் இறைஞானம் பெற கிழ்று (அலை) அவர்களை அடைகிறார்கள் .
உங்களுக்கு கற்பிக்கப்பட்ட ஞானத்தை நீங்கள் எனக்கு கற்பிக்க வேண்டி உங்களைப் பின்பற்றலாமா?
அதற்கவர் "உங்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவைகளை நான் செய்யும்போது எவ்வாறு சகித்துக் கொண்டு இருப்பீர்கள் ?"
அதற்கு, மூஸா "இறைவன் அருளால் சகித்திருப்பவனாக என்னைக் காண்பீர்கள் ." .
பயணம் தொடர்ந்தது .
கடலை கடக்க கப்பலில் ஏறி கிழ்று (அலை) ஒரு பலகையைப் பெயர்த்து ஓட்டையாக்கி விட்டார் .இதைக் கண்டு மூஸா (அலை) பதறினார்.
அடுத்து கப்பலை விட்டு இறங்கி நடந்தனர் ஒரு சிறுவனை கிழ்று கொலை செய்து விட்டார். மூஸா (அலை) ரொம்பவும் பதறினார்கள்

பின்னர் இருவரும் நடந்து ஓர் ஊராரிம் வரவே தங்களுக்கு உணவளிக்க வேண்டினர். அவ்வூரர் மறுத்தனர். அந்த ஊரில் சரிந்து விழக்கூடிய சுவற்றை செப்பனிட்டு சரி செய்ய கிள்று (அலை) ஆய்த்தமானார்கள்.
கிள்று (அலை) அவர்கள் எதிரும் புதிருமான செய்கைக்கு விளக்கம் அளித்தார்கள்
அந்த கப்பல் சில ஏழைகளுக்குரியது. நல்ல கப்பலை கொடுங்கோல் அரசன் அபகரிக்காமல் இருக்க கப்பலை சேதப்படுத்தினேன் .

நல்ல நம்பிக்கையாளர்களுக்கு பிறந்த சிறுவன் வாலிபத்தில் தன் பெற்றோர்களுக்கு அநியாயம் செய்யாமல் இருக்க சிறுவனை கொலை செய்தேன் .
நல்ல நம்பிக்கையாளர்கள் சேமித்த புதையல் தன் இரு அனாதை குழந்தைகள் வாலிபனாகி பெறும்பொருட்டு சுவரை செப்பனிடம் போது புதையல் மேலே வந்து அவ்விருவருக்கும் கிடைக்கும் .
குர்ஆன் (18 : 66 - 82)

"ஒன்று உங்களுக்கு மிக நன்மையாக இருந்தும் அதனை நீங்கள் வெறுக்கக்கூடும். ஒன்று உங்களுக்குத் தீங்காக இருந்தும் அதனை நீங்கள் விரும்பக்கூடும். அவை உங்களுக்கு நன்மை அளிக்குமா தீமையளிக்குமா என்பதை அல்லாஹ்தான் அறிவான்; நீங்கள் அறியமாட்டீர்கள் ".
(அல்குர்ஆன் : 2:216)

ஞானம் என்பது எதிரும் புதிருமானது

கராமத் 37
(இறை நேசர்களுக்கு அறியாத புறத்திலிருந்து உணவு)
சூரா ஆல இம்ரானில் வரக்கூடிய இம்ரான் அவர்கள் பைத்துல் முஹத்தஸ் பள்ளிவாசலின் பொறுப்பாளர்களின் தலைவராக இருந்தார்கள் .அவருடைய மனைவி ஹன்னா அவர்கள் மரியம் (அலை) அவர்களின் தாயார் ஆவார்கள்.
ஹன்னா தனக்குப் பிறக்கும் குழந்தையை பைத்துல் முஹத்தஸ் பள்ளிவாசலுக்கு பணிவிடை செய்ய இறைவனிடம் நேர்ந்து இருந்தார்கள். ஆனால் பிறந்ததோ பெண் குழந்தை இருந்தாலும், அப்பெண் குழந்தையை பள்ளி நிர்வாகத்திடம் ஹன்னா ஒப்படைத்தார்கள்.
இப்பொழுது பைத்துல் முகத்தஸின் நிர்வாக பொறுப்பின் தலைவராக இருந்த இம்ரான் அவர்கள் காலமாகி , நபி ஜக்கரிய்யா(அலை) அவர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள்.
பெண் குழந்தையாக இருப்பதால், பள்ளிவாசலினுள் வைத்து வளரக்க முடியாத காரணத்தால் வளர்ப்பு மகளாக தங்களது தலைவர் இம்ரானின் மகளை வளர்க்க பள்ளிவாசல் நிர்வாகத்தினர் 27 போட்டி போட்டனர் .

27 பேர்களில் தலைமை பொறுப்பாளராக ஹஜரத் ஜக்கரிய்யா (அலை) அவர்கள் , " குழந்தையின் தாயாராகிய ஹன்னா உடன் பிறந்த ஈஷாஉ என்பவளை தான் மணந்து இருப்பதால், அந்த குழந்தையை வளர்ப்பதற்கு தான்தான் அதிக உரிமை பெற்றிருக்கிறேன் " என்று உரிமை கொண்டாடினர்கள் .
இருந்தாலும், திருவுளச் சீட்டு போட்டு எடுக்க வேண்டும் என்று நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். அதன்படி அவர்களுடைய எழுதும் பேனாக்களை உர்துன் நதிக்குச் சென்று எழுதுகோலை தண்ணீரில் போட்டு பார்த்தனர்.

எவருடைய எழுதுகோல் தண்ணீரில் மூழ்காமல் எதிர்த்து மிதந்து வருகிறதோ, அவரே குழந்தையை வளர்ப்பதற்கு தகுதியானவர். அந்தப் போட்டியில் நபிஜக்கரிய்யா வெற்றி பெற்றார்கள். நபி ஜக்கரிய்யா (அலை) அவர்களுக்கு மரியம் (அலை) அவர்களை வளர்ப்பு மகளாக வளர்க்கும் பொறுப்பு கிடைத்தது.
குழந்தையை வளர்ப்பதற்காகவே பைத்துல் முகத்தஸ் பள்ளியிலேயே ஒரு மாளிகை கட்டி அதில் வைத்திருந்தார்கள். அந்த மாளிகைக்கு ஏழு தலைவாசல்கள் இருந்தன. அதற்குள் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் மட்டும் செல்வார்கள். பின்னர் அங்கிருந்து வரும் போது அந்த ஏழு வாசல்களையும் பூட்டி விடுவார்கள்.

இவ்வித நிலையில் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் மரியம் ஸித்தீக்காவை பார்க்க செல்லும்போதெல்லாம் அங்கு கனி வர்க்கங்கள் முதலிய உணவுகள் இருப்பதை காண்பார்கள். கோடை காலம், வசந்த காலம், மாரி காலம், பனி காலம் ஆகிய எல்லா காலங்களிலும் கிடைக்கக்கூடிய கனி வர்க்கங்கள் அங்கு இருப்பதை பார்த்து மரியம் ஸித்திக்கா (அலை) அவர்களிடம் நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள்,

"உனக்கு இவைகள் எங்கிருந்து வந்தன ? என்று விசாரிப்பார்கள் அதற்கு எனது றப்பிடமிருந்து அடைந்தேன்" என்று மரியம் ஸித்திக்கா (அலை) பதில் கூறுவார்கள்.
மரியம் (அலை) அவர்கள் தாயிடமோ, வேறு பெண்களிடமோ தாய்ப்பால் அருந்த இல்லை. மரியம் (அலை) அவர்கள் மிகவும் சிறிய குழந்தையாக இருந்ததால் பேசுவதற்கு சக்தி பெற்றிருக்கவில்லை. நபி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் கேட்ட கேள்வியை விளங்கிக் கொள்ளவும், அதற்கு பதில் சொல்லவும் சக்தி பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் மர்யம் (அலை) அவர்கள் பேசியது ஓர் அற்புதமே ஆகும்.
பூட்டப்பட்ட தனி அறையினுள் இருந்த மரியம் (அலை) அவர்களுக்கு கனி வர்க்கங்கள் முதலிய உணவுகள் இறைவனிடத்திலிருந்து வருவதும் மிகப்பெரிய கராமத்தான விஷயமாகும். இந்த கராமத் அல்லாஹ்வின் அருள் ஆகும்

எங்கு அல்லாஹ்வின் அருள் இலங்கிக் கொண்டிருக்கிறதோ அந்த இடத்தில், இறைவனிடம் கேட்கப்படும் துஆக்களும் இறைவன் நிறைவேற்றி வைப்பதாக என்பதாக சொல்லப்படுகிறது.
எனவே ஜக்கரியா (அலை) அவர்கள் தனக்கு குழந்தை இல்லாத குறையை கராமத் நிகழ்ந்த இடத்தில் இறைவனிடம் கேட்க, இறைவன் நபி யஹ்யா (அலை) அவர்களை கொடுத்ததாக கூறப்படுகிறது.
இதிலிருந்து வலிமார்கள் இருக்கும் இடத்திலும், அவர்கள் அடக்கமாகி இருக்கும் இடத்திலும் கராமத்தான அற்புதங்களும் நிகழ்ந்து கொண்டே இருக்கும்.அந்த இடத்தில் கேட்கப்படும் துஆக்கள் துரிதமாக இறைவன் நிறைவேற்றி தருகிறான் .


தேடிக் கொண்டிருக்கிறேன். இன்னமும்

' அஸ்ஹாபுல் கஹ்பு ' என்கிற குகைத் தோழர்களான வலிமார்களைப் பற்றிய பதிவு ஓரிரு பதிவுகளில் சொல்ல முடியாத நீண்ட நெடிய கராமத்தான வரலாறு .
அது பத்து பதிவுக்கும் மேலாக இருக்கலாம் , கராமத் 50 பதிவுகளின் தொடரில் கடைசி பத்து பதிவுகள் அஸ்ஹாபுல் கஹ்பு என்ற குகைத் தோழர்களின் வரலாறு பற்றி இன்ஷா அல்லாஹ் எழுத உள்ளேன்.
இந்த பழமையான கிதாபு " ஜனாப் காஜா முஹம்மது ஆலீம் சாஹிபு அவர்களால் - " அஸ்ஹாபுல் கஹ்பு ஒர் றகீம் " பழம்பெறும் தமிழ் நடையில் 1924 -ல் தொகுக்கப்பட்ட மிக **அருமையான**வரலாறு. (அணா 4)
நிறைய பேப்பர்களெல்லாம் நொறுங்கி இடம் மாறி உள்ளது . அவைகளை ஒன்று சேர்த்து மிகவும் கவனமாக xerox எடுத்துள்ளேன் .
நண்பர் (ABK காஜா) அவருடைய பாட்டனர் சேர்த்து வைத்திருந்த நிறைய கிதாபுகள் இப்போது நொறுங்கிய நிலையில் ஆற்றில் விடுவதற்காக சேகரித்து வைத்திருந்த அந்த கிதாபு மூட்டையை எடுத்து பார்த்ததில் கிடைத்த பொக்கிஷம் இது.

அப்படியிருந்தும் பக்கம் 20 , 21 காணாமல் போயிருக்கிறது. இந்த இரு பக்கங்களில்தான் இவ்வரலாற்றின் உச்சம் அடங்கியிருக்க வேண்டும்.

" யா அஹது.... யா அஹது ... " என்று தொலைந்து போனது கிடைக்க வேண்டி ஓதக்கூடிய மேற்கண்ட இந்த இஸ்முவை ஓதிக்கொண்டே என் புத்தக பீரோக்களிலும் , அந்த பழைய கிதாபு மூடையிலும் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைக்க நீங்களும் துஆ செய்யுங்கள் .

அஸ்ஹாபுல் கஹ்பு வரலாறு மற்ற கிதாபுகளில் சொல்லப்பட்ட வரலாறுகளை விடவும் மிகத் தெளிவான இதுவரை கேள்விப்படாத சேதிகளை உள்ளடக்கி, ஹக்கான வரலாறு இதுதான் இருக்கும் என நினைக்கிறேன். மேலும் குர்ஆன் வசனத்தோடும், அதன் வார்த்தைகளோடும் ஐக்கியப்பட்டு இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது.
எனவே கராமத் தொடர் பதிவு 40 பதிவுக்குப் பின் நிறைவாக 10 பதிவுகள் அஸ்ஹாபுல் கஹ்பு என்ற 7 இறை நேசர்களின் புனித வரலாற்றோடு கராமத் தொடர் இன்ஷா அல்லாஹ் நிறைவு பெறும் .
ரஹ்மத் ராஜகுமாரன்
பக்கம் 20, 21ம் கிடைத்துவிட்டது கூடவே 5, 6 பக்கங்களின் பாதியும் கிடைத்துள்ளது ! முழு வரலாறும் தங்கு தடையின்றி கிடைத்துள்ளது அல்ஹம்துல்லாஹ்



கராமத் 38

மரணத்தைக் கண்டு அஞ்சாத இறை நேசர்கள்
அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பத்துப் பேர்கள் கொண்ட ஒரு குழுவினரை உளவுப்படையாக அனுப்பி வைத்தார்கள். உமர் இப்னு கத்தாபுடைய மகன் ஆஸிமின் (தாய்வழிப்) பாட்டனார் ஆஸிம் இப்னு ஸாபித் அல் அன்சாரியை உளவுப் படைக்குத் தலைவராக்கினார்கள்.
அவர்கள் புறப்பட்டு, உஸ்ஃபானுக்கும் மக்காவுக்கும் இடையிலுள்ள 'ஹத்ஆ' என்னுமிடத்திற்கு வந்தபோது ஹுதைல் குலத்தைச் சேர்ந்த பனூலிஹ்யான் என்றழைக்கப்படும் ஒரு கிளையினருக்கு இந்த உளவுப் படையினர் வரும் விவரம் தெரிவிக்கப்பட்டது.
உடனே அக்கிளையினர் (அவர்களைப் பிடிப்பதற்காக) அம்பெய்வதில் தேர்ச்சி பெற்ற கிட்டத் தட்ட இருநூறு வீரர்களை தங்களுக்காகத் திரட்டிக் கொண்டு இந்த உளவுப் படையினரின் சுவடுகளைப் பின்பற்றி (அவர்களைத் தேடியபடி) சென்றனர்.
(வழியில்) உளவுப்படையினர் மதீனாவிலிருந்து பயண உணவாகக் கொண்டு வந்திருந்த பேரீச்சம் பழங்களைத் தின்று (அவற்றின் கொட்டைகளைப் போட்டு)விட்டுச் சென்ற இடத்தைக் கண்டனர்.
உடனே, 'இது யத்ரிபுடைய (மதீனாவுடைய) பேரீச்சம் பழம்' என்று கூறினர். எனவே, அவர்களின் கால் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றனர். அவர்களை ஆஸிம்(ரலி) அவர்களும் அவர்களின் சகாக்களும் கண்டபோது, உயரமான (குன்று போன்ற) ஓரிடத்தில் (புகலிடம் தேடி) ஒதுங்கி நின்றனர். அவர்களை பனூ லிஹ்யான் குலத்தினர் சூழ்ந்தனர்.
அவர்கள் அந்த உளவுப் படையினரிடம், 'நீங்கள் இறங்கி வந்து எங்களிடம் சரணடைந்து விடுங்கள். உங்களுக்கு நாங்கள் உறுதிமொழியும் வாக்கும் அளிக்கிறோம். உங்களில் எவரையும் நாங்கள் கொல்லமாட்டோம்' என்று கூறினார்கள்.

உளவுப் படையின் தலைவரான ஆஸிம் இப்னு ஸாபித்(ரலி), 'அல்லாஹ்வின் மீதாணையாக! இன்று நான் ஒரு நிராகரிப்பாளனின் பொறுப்பில் (என்னை ஒப்படைத்தவனாக இந்தக் குன்றிலிருந்து) கீழே இறங்க மாட்டேன்' என்று கூறிவிட்டு, 'இறைவா! எங்கள் நிலை குறித்து உன் தூதருக்குத் தெரிவித்து விடு' என்று பிரார்த்தித்தார்கள்.

எதிரிகள் அவர்களின் மீது அம்பெய்து ஆஸிம் உட்பட ஏழு பேரைக் கொன்றனர். உளவுப் படையினரில் (எஞ்சியிருந்த) மூன்று பேர் எதிரிகளிடம் உறுதிமொழியும் வாக்கும் பெற்று இறங்கினார்கள்.
அவர்கள் அன்சாரித் தோழர் குபைப் அவர்களும், இப்னு தசினா அவர்களுக்கு மற்றுமொருவரும் ஆவர்.
இவர்கள் தங்கள் கையில் கிடைத்தவுடன் நிராகரிப்பாளர்கள் தம் விற்களின் நாண்களை அவிழ்த்து அவர்களைக் கட்டினார்கள்.
(உளவுப் படையில் எஞ்சிய மூவரில்) மூன்றாவது மனிதர், 'இது முதலாவது நம்பிக்கை துரோகம் அல்லாஹ்வின் மீதாணையாக! நான் உங்களுடன் வர மாட்டேன். (கொல்லப்பட்ட) இவர்கள் எனக்கு ஒரு (நல்ல பாடமாக அமைந்துள்ளனர்' என்று கூறினார்.
உடனே, அவர்கள் அவரை இழுத்துச் சென்று தம்மோடு வரும்படி நிர்பந்தித்தார்கள். அதற்கு அவர் மறுத்து விடவே அவரைக் கொலை செய்துவிட்டார்கள்.
பிறகு குபைப் அவர்களையும் இப்னு தசினா அவர்களையும் பிடித்துச் சென்று மக்காவில் விற்றுவிட்டனர். இது பத்ருப் போருக்குப் பிறகு நடந்த சம்பவமாகும். குபைப் அவர்களை பனூ ஹாரிஸ் என்னும் குலத்தார் வாங்கினர்.

அந்தக் குலத்தின் தலைவர் ஹாரிஸ் இப்னு ஆமிர் என்பவரை குபைப் அவர்கள் பத்ருப் போரில் கொன்று விட்டிருந்தார்கள். எனவே, (அதற்குப் பழிவாங்குவதற்காக குபைப் அவர்களை பனூ ஹாரிஸ் குலத்தார் வாங்கிக் கைது செய்து வைத்திருந்தனர்.) அவர்களிடம் குபைப் அவர்கள் கைதியாக இருந்தார்கள்.
ஹாரிஸின் மகள் என்னிடம் கூறினார்:

குபைப் அவர்களைக் கொல்வதற்காக (எங்கள் குடும்பத்தார்) ஒன்று கூடியபோது, குபைப் தேவையற்ற முடிகளைக் களைவதற்காக ஒரு சவரக் கத்தியை என்னிடமிருந்து இரவல் வாங்கினார்.
அப்போது என்னுடைய குழந்தை ஒருவனை அவர் கையிலிலெடுத்தார். அவன் அவரிடம் சென்றபோது நான் (பார்க்காமல்) கவனக் குறைவாக இருந்து விட்டேன். அவர் கையில் சவரக் கத்தி இருக்க, தம் மடியின் மீது அவனை உட்கார வைத்திருப்பதை கண்டேன். அதைக் கண்டு நான் கடும் பீதியடைந்தேன். என் முகத்தில் தெரிந்த பீதியை குபைப் புரிந்து கொண்டார்.
உடனே, 'நான் இவனைக் கொன்று விடுவேன் என்று நீ பயப்படுகிறாயா? நான் அப்படிச் செய்யமாட்டேன்' என்று கூறினார். அல்லாஹ்வின் மீதாணையாக! குபைப் அவர்களை விடச் சிறந்த ஒரு கைதியை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக!

அவர் ஒரு நாள் தம் கையிலிருந்த திராட்சைக் குலை ஒன்றிலிருந்து (பழங்களை எடுத்து) உண்டு கொண்டிருக்கக் கண்டேன். அப்போது அவரின் கை இரும்புக் சங்கிலிகளால் கட்டப்பட்டு இருந்தது. மேலும், அப்போது மக்கா நகரில் பழம் (விளையும் பருவம்) எதுவும் இருக்கவில்லை.
...மேலும், ஹாரிஸின் மகள், 'அது அல்லாஹ்விடமிருந்து கிடைத்த இரணமாகும். அல்லாஹ் அதை குபைப் அவர்களுக்கு அளித்திருந்தான்' என்று கூறி வந்தார்.
அவர்கள் குபைப் அவர்களைக் கொல்வதற்காக ஹரம் (எனும் இரத்தம் சிந்துவது அனுமதிக்கப்படாத புனிதப்) பகுதியிலிருந்து 'ஹில்' (எனும் புனித எல்லைக்கு வெளியே இருக்கும் பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றபோது, அவர்களிடம் குபைப் அவர்கள், 'என்னை இரண்டு ரக்அத்துகள் தொழ விடுங்கள்' என்று கூறினார்கள்.
(தொழுது முடித்து) பிறகு, 'நான் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறேன் என்று நீங்கள் எண்ணுவீர்கள் என்ற அச்சம் எனக்கில்லாமல் இருந்திருந்தால் நான் நீண்ட நேரம் தொழுதிருப்பேன்' என்று கூறிவிட்டு, " இறைவா! இவர்களை எண்ணி வைத்துக் கொண்டு (ஒருவர் விடாமல்) பழி வாங்குவாயாக!' என்று பிரார்த்தித்தார்கள். மேலும், 'நான் முஸ்லிமாகக் கொல்லப்படுவதால் நான் எதைப் பற்றியும் பொருட்படுத்தப் போவதில்லை. எந்த இடத்தில் நான் இறந்தாலும் நான் இறைவனுக்காகவே கொல்லப்படுகிறேன் (என்பதில் எனக்கு மகிழ்ச்சியே). நான் கொலையுறுவது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகத் தான் எனும்போது, அவன் நாடினால் என்னுடைய துண்டிக்கப்பட்ட உறுப்புகளின் இணைப்புகளின் மீது கூட (தன்) அருள் வளத்தைப் பொழிவான்' என்று கவி பாடினார்கள்.
பின்னர், குபைப் அவர்களை ஹாரிஸின் மகன் (உக்பா) கொன்றுவிட்டார். அன்றிலிருந்து அடைத்து வைத்து அல்லது கட்டி வைத்துக் கொல்லப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கொல்லப்படுவதற்கு முன் இரண்டு ரக்அத்துகள் தொழுவதை முன்மாதிரியாக்கியவர் குபைப் அவர்களே என்றாயிற்று.

ஆஸிம் இப்னு ஸாபித் அவர்கள் கொல்லப்பட்டபோது, அவர்கள் செய்த பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு (அவர்களின் நிலைகுறித்து தன் தூதருக்குத் தெரிவித்து)விட்டான்.

நபி(ஸல்) அவர்கள் தங்களின் தோழர்களுக்கு உளவுப் படையினரின் செய்தியையும், அவர்களுக்கு குறைஷிக்குல நிராகரிப்பாளர்களில் சிலருக்கு ஆஸிம் அவர்கள் கொல்லப்பட்டது குறித்துத் தெரிவிக்கப்பட்டவுடன் (கொல்லப்பட்டது அவர்தான் என்று) அவரை அடையாளம் தெரிந்து கொள்ள அவரின் அங்கம் எதையாவது தமக்குக் கொடுத்தனுப்பும் படி கேட்டு அவர்கள் ஆளனுப்பினார்கள். ஏனெனில், ஆஸிம் அவர்கள் பத்ருப் போரின்போது குறைஷிகளின் தலைவர்களில் ஒருவரைக் கொன்றிருந்தார்கள். அப்போது ஆஸிம் அவர்களுக்காக (அவர்களின் உடலுக்குப் பாதுகாப்பாக) ஆண் தேனீக்களின் கூட்டம் ஒன்று நிழல் தரும் மேகத்தைப் போன்று (அவரைச் சுற்றிலும் அரணாகப் படர்ந்திருக்கும் படி) அனுப்பப்பட்டது. அது அவர்களை குறைஷிகளின் தூதுவரிடமிருந்து காப்பாற்றியது. எனவே, அவர்களின் சதையிலிருந்து அவர்களால் எதையும் துண்டித்து எடுத்துச் செல்ல முடியவில்லை. ஸஹீஹ் புகாரி : 3045.

கராமத் 39

(சிறைக் கைதி காணாமல் போகலாம் ; சிறைச்சாலையுமா காணாமல் போகும் ?)
ஆன்மிக உண்மைகளை மக்களுக்கு வெளிப்படையாக எடுத்துக் கூறிக் கொண்டும், அதன் பலனாக கொஞ்சம் ஆதரவையும், பலத்த எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள் மன்சூர் ஹல்லாஜ் (ரலி) அன்னவர்கள்.
இந்த காலகட்டத்தில் அவர்களிடம் காணப்பட்ட அதிசயத்தக்க விஷயம் அவர்களுடைய இறை வணக்கமும், தவமும் தான். ஒரு நாளைக்கு 400 ரக்அத்துக்கள் தொழுவார்கள். வெயிலில் கொழுப்பு உருகும்படி தவம் செய்வார்கள் .
கடைத் தெருவில் போகும்போது மக்களிடம், '' மக்களே... என்னை இறைவனின் கண்கள் படாவண்ணம் ஒளித்து வையுங்கள். அவன் என்னிலிருந்து என்னை எடுத்துக் கொண்டான் " என்று கூறினார்கள்.
அப்படி ஒரு சூழ்நிலையில்தான் மனநிலையின் உச்சகட்ட கொந்தளிப்பாக அவர் அந்த பிரபலமானவர் வாக்கியத்தைக் கூறினார் . " அன்தல் ஹக் "(நீயே உண்மை, அல்லது நீயே இறைவன்) என்று கூறுவதற்கு பதிலாக " அனல் ஹக் "(நானே உண்மை, நானே இறைவன்) என்று கூறினார்கள் .
அத்தோடு " என் தலைப்பாகைக்குள் இறைவனைத் தவிர வேறு எதுவும் சுற்றி இருக்கவில்லை" என்றும் சொன்னார்கள்.

அவர் தன்னையே இறைவனாகக் கூறியதாக அது எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏனெனில் " ஹக் " என்பது அல்லாஹ்வின் 99 அழகிய திருப்பெயர்கள் ஒன்றாக இருந்தது. போகும் ஊரில் எல்லாம் "அனல் ஹக்" (நானே மெய்ப்பொருள்) என்று உரக்கச் சொல்ல ஆரம்பித்தார்கள் மன்சூர் ஹல்லாஜ் (ரலி) அன்னவர்கள். கிட்டத்தட்ட 50 ஊர்களில் இவ்வாறு சொல்லித் திரிந்தார்கள் . எதிர்ப்பு வலுக்க வலுக்க அவர் இன்னும் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். பைத்தியக்காரர் என்றும், இறைவனுக்கு இணை வைத்தவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டு, ஒவ்வொரு ஊரில் இருந்தும் விரட்டப்பட்டார்கள்.

கடைசியில் அவருக்கு எதிரான சாட்சியங்களை தேடி எடுத்து அவரை சிறை வைத்தார்கள். ஒரு நாள் அந்தச் சிறையில் இருந்து காணாமல் போனார்கள் . அதில் ஆச்சரியம் என்னவென்றால், அவரை சிறை வைத்திருந்த சிறைச்சாலையின் அறையும் காணவில்லை. இரண்டு நாள் கழித்து மன்சூர் ஹல்லாஜ் இருந்தார்கள். சிறைச்சாலையின் அறையும் இருந்தது !

" எங்கே போனீர்கள் என்று கேட்டதற்கு,இறைவனைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது அவனுடைய விருப்பத்தின் பேரில் சட்டத்தை காப்பாற்ற திரும்பி வந்திருக்கிறேன் " என்றார்கள்
ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பதினோறு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

கராமத் 40
குகைத் தோழர்களின் வரலாறு 1



குகை' என்றாலே நம் மனதில் பல மர்மங்களை உள்ளடக்கிய சிந்தனைகளை தூண்டிவிடும் ஒரு பயம் .
உலகிலுள்ள எல்லா குகையின் வாயிலிலும் அதன் மர்மங்கள் பயமாக பேசப்பட்டுக் கொண்டே இருக்கிறது.
அதே மாதிரி ஒரு பயத்தை இந்த கஹ்பு என்கிற இந்த குகைத் தோழர்களின் குகையும் கொண்டுள்ளதாக இறைவனே திருக்குர்ஆனில்
"...அவர்களை நீர் கூர்ந்து பார்த்தீரானால் அவர்களை விட்டும் விரண்டோடிப் பின் வாங்குவீர் ! இன்னும் அவர்களிலிருந்து உண்டாகும் திடுக்கத்தால் நீர் நிரப்பப்பட்டு விடுவீர் " குர்ஆன் (18 : 18)

திருக்குர்ஆன் "அல்-கஹ்பு" _ குகை என்னும் ஒரு அத்தியாயத்திற்கு பெயரை சூட்டி இருப்பதால், மர்மங்களுக்கும் ஆச்சரிய வியப்பிற்கும் குறைவில்லாமல் ஒரு வரலாற்றின் மர்மத்தை அதன் வாசலிலே பதிக்கப்பட்டு, அதன் ரகசியமும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.
குர்ஆனில் குகை என்ற இந்த சூரா மறைபொருள் மிக்கதாகும்.
மலையில் உள்ள குகை சிறியதாக, குறுகியதாக இருந்தால், 'ஃகார்' என்றும் பெரியதாக விசாலமாக இருந்தால் 'கஹ்பு' என்றும் சொல்லப்படும்.

110 வசனங்கள் கொண்ட இந்த அத்தியாயம் முழுவதும் ஒரே நேரத்தில் இறங்கியதாக நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) தெரிவித்திருக்கிறார்கள்.

அல் கஹ்ப் - குகை என்கிற வரலாறு இறக்கப்பட்டதற்குரிய காரணம் நம் பெருமானார் ﷺ அவர்களைச் சோதிப்பதற்காக வேதம் வழங்கப்பட்ட யூத, கிறிஸ்தவர்கள் மக்கா இறை மறுப்பாளர்களான நுலர், உக்பா இருவர் மூலம் நபி (ஸல்) அவர்களிடம் 3 கேள்விகளை கேட்டனர்.
1) குகை வாசிகள் யார் ?
2) கிழ்று என்பவரின் அந்தரங்கம் என்ன ?
3) துல்கர்னைன் என்பவரின் வாழ்க்கை வரலாறு யாது ?
இம்மூன்று கேள்விகளும் யூத, கிறிஸ்தவர்களின் வேதங்களில் கூறப்பட்டவையாகும் மக்கா, மற்றும் ஹிஜாஸ் உள்ளவர்கள் எவருக்கும் இதைப் பற்றி தெரியாது.
ஆகவே இவற்றைப் பற்றி முஹம்மதும் தெரிந்திருக்க முடியாது' இந்த அடிப்படையில் 'முஹம்மது நபியே அல்ல' என்று நாம் நிரூபித்து விடலாம் என்பதே அவர்களின் குறிக்கோள்.
ஆனால் அல்லாஹ் இம்மூன்று கேள்விகளுக்கும் விவரமான பதிலை இந்த ஒரு அத்தியாயத்தில் மூலம் விளக்கி தனது நபியின் நாவால் கூறுமாறு செய்துவிட்டான் . பின்னர் வேதக்காரர்கள் எதுவும் பேச முடியாமல் அதிர்ச்சி அடைந்தனர்
(ஹக்கானி ,தன்தாயி)

ஒவ்வொரு ஜும்ஆ நாளிலும் இந்த சூராவை ஓதி வந்தால், அடுத்த ஜும்ஆ வரை சங்கடங்களும், சஞ்சலங்களும் ஏற்படாமல் இருக்கும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்

கராமத் 41

குகைத்தோழர்களின் வரலாறு 2



குகைத்தோழர்களைப் பற்றி குர்ஆனில் இறைவன் :

نَحْنُ نَقُصُّ عَلَيْكَ نَبَاَهُمْ بِالْحَـقِّ اِنَّهُمْ فِتْيَةٌ اٰمَنُوْا بِرَبِّهِمْ وَزِدْنٰهُمْ هُدًى

" (நபியே!) நாம் உமக்கு அவர்களுடைய வரலாற்றை உண்மையைக் கொண்டு அறிவிக்கிறோம்; நிச்சயமாக அவர்கள் இளைஞர்கள் - தங்கள் இறைவன் மீது ஈமான் கொண்டார்கள்; இன்னும் நாம் அவர்களை நேர் வழியில் அதிகப்படுத்தினோம் " (அல்குர்ஆன் : 18:13)

யூனானி தேசத்தில் மதாயின் என்னும் பட்டணத்தைச் சார்ந்த அப்சூஸ் என்னும் ஊர். அல்லது இப்படியும் சொல்லலாம் : ஆசியாமைனரின் மேற்குக் கரையிலுள்ள இபிஸியஸ் (Ephesus) என்னும் ஊர்.
வலைதளத்தில் தேடியதில் *Ephesus is an ancient city in Turkey's Central Aegean region, near modern-day Selçuk. Its excavated remains reflect centuries of history, from classical Greece to the Roman Empire என்ற* தகவல் கிடைத்துள்ளது.
அப்சூஸ் மக்கள் செல்வ செழிப்பானவர்களாகவும் , மிகவும் நற்குணங் கொண்டவர்களாகவும் இருந்தனர்.இம்மக்கள் யூனானி மருத்துவத்தில் தலை சிறந்தவர்களாகவும் விளங்கினார்கள். இதனாலேயே யூனானி மருத்துவத்திற்கு இவர்களின் தேசத்தின் பெயரான **" யூனானி "** என்ற பெயர் வந்தது என்பதாக ஒரு வரலாற்று குறிப்பு காணக் கிடைக்கிறது

யூனானி ஹுகமாக்களில் (மருத்துவர்களில்) பேர் பெற்ற ஹகீம் ஜாலினூசின் என்பவர் யூனானி மருத்துவத்தின் தந்தை இருந்தார். இவருடைய காலக்கட்டத்தில்தான் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரசூலாக அனுப்பப்பட்டார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்கள் பலவிதமான வியாதிகளை குணப்படுத்துவதும் ,இறந்து போனவர்களின் மைய்யித்தை மீண்டும் உயிர்ப்பித்துக் கொடுப்பதும் போன்ற முஃஜிஸா என்னும் அற்புதத்தை ஹகீம் ஜாலினூஸ் கேள்விப்பட்டு ஆழ்ந்து சிந்தித்துச் சொன்னார்கள் :
"மனிதனால் பரிகாரம் செய்வதற்கு வருத்தமான எந்த வியாதினாலும் சரி அதை சௌக்கியப்படுத்தும் புத்திசாலியான ஹகீமால் (மருத்துவரால்) சொஸ்தப்படுத்தல் முடிந்த காரியமேயாகும். ஆயினும் இறந்து போன மைய்யித்தை உயிர்ப்பித்து வைப்பது மனிதருடைய தத்துவத்தை விட்டும் அகன்றதாக இருக்கும் . ஆகவே இந்த கருமம் அல்லாஹுத்தஆலாவின் உதவினால் நபிமார்களை தவிர மற்றவர்களுக்கும் இது முடியவே முடியாது. ஆனதால் இவர்கள் ஹக்கான நபியாக இருக்கவேண்டும்" என கூறினார்
அவர் தமது சீடர்களுடனும் , சிநேகிதர்களுடனும் ஒரு கூட்டமாய் கடற்பயணம் புறப்பட்டு, நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் சமூகம் வந்து, அவரின் கரம் பற்றி இஸ்லாத்தை ஏற்க முடிவு செய்தனர் .
அக்கப்பல் சமுத்திரத்தில் போய்க்கொண்டு இருக்கும்போது, இடைவழியில் ஹகீம் ஜாலினூஸ்க்கு வயிற்றோட்டம் நஷல் உண்டாகி மௌத்து வேலை வந்தது.

அவர் அங்கிருந்த சீடர்களுக்கும், சிநேகிதர்களுக்கும் வஸிய்யத் செய்தார்.
"நான் மௌத்தாகிவிட்டால், நீங்கள் வழியில் காணும் ஒரு தீவில் என்னை அடக்கம் செய்தபின், தொடர்ந்து கடற்பயணம் மேற்கொண்டு ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சமூகத்தில் போய், என் நிலைமை எடுத்துக் கூறி, மானசீகமாக தங்களைக் கொண்டு ஈமான் கொண்டதாக நபியிடம் சொல்ல வேண்டும். அவர்களைக் கொண்டு நீங்கள் அனைவரும் ஈமான் கொள்ள வேண்டும் . அவர்களின் கட்டளையை சிரமேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும் " என்று கூறி மரணித்துவிட்டார்கள்.
அவர் சொன்ன மாதிரி கடற்பயண வழியில் ஒரு தீவில் ஹகீம் ஜாலினூஸ்ஸை நல்லடக்கம் செய்து விட்டு, மீண்டும் பயணம் தொடர்ந்து நபி ஈஸா (அலை) அவர்களை சந்தித்து ஈமான் கொண்டார்கள் .

ஹகீம் ஜாலினூஸின் சீடர்களாகத்தான் குர்ஆன் கூறும் குகைத் தோழர்களான
1) மக்ஸல் மீனா
2) எம்லீகா
3) நைனூனஸ்
4) ஸாரபூனஸ்
5) தூநவானஸ்
6) பல்யஸ்தத யூனஸ்
ஆகிய 6 பேர்களும் இருந்தனர் .
இவர்கள் நேரடியாக நபி ஈஸா (அலை) அவர்களிடம் நேரடியாக சந்தித்து ஈமான் கொண்டதாக ஒரு வரலாறு கூறுகிறது . ஏழாவதாக 7) மர்தூனஸ் (ஆடு மேய்ப்பாளர்) குகைத் தேடிப் போகும் வழியில் குகைத் தோழர் ஆறு பேருடன் இணைந்து கொண்டவர் .

இன்னொரு வரலாறு : " குகைத் தோழர்கள் ஆறு பேரும் நபி ஈஸா (அலை) அவர்களின் ஹவாரியூன்களில் ஒருவரான ஷம்ஊன் (அலை) அவர்கள் அப்சூஸ் பட்டணத்தில் உள்ளவர்களுக்கு ஈமான் கொடுக்க அழைத்த போது, அஸ்ஹாபுல் கஹ்புகளான ஆறு பேரும் ஈமான் கொண்டனர் என்கிறது .

கராமத் 42

குகைத் தோழர்கள் வரலாறு 3



அப்சூஸ் குறுநிலத்தை ஆண்ட ஒரு மூமினான அரசன் இருந்த காலத்தில் இன்ஜில் வேத விற்பன்னர்களும் , ஞானிகளும் கண்ணியமாக மதிக்கப்பட்டனர். இதனால் இறைவனுடைய மார்க்கம் செழிப்புற்று சாதாரண ஆடு மேய்ப்பவர் கூட ஆன்மிக தேட்டமுடையவர்களாக இருந்தனர்.

மூமினான அப்சூஸ் மன்னனுக்கு வாரிசுகள் ஏதும் இல்லை இம்மூமினான மன்னன் நோய்வாய்ப்பட்டு இறந்திருந்த காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு,பாரிஸ் தேசத்தின் அரசனாகிய தக்யானூஸ் என்பவன் படையெடுத்து அதை வெற்றி கொண்டான்.
தக்யானூஸ் மிகவும் கொடுங்கோல் அரசனாக இருந்தான் .அவன் ஏற்கனவே ரூம், பாபில் முதலிய ஊர்களை கையகப்படுத்திக்கொண்டு, அஸ்ஹாபுல் கஹ்புகள் இருந்த அப்சூஸ் என்னும் இந்த பட்டணத்தையும் மிக எளிதாக வெற்றி அடைந்தான்.
அப்சூஸை கைப்பற்றி வெற்றியடைந்ததும் , தன்னுடைய சிலையை நிறுவி அதற்கு வழிபட வேண்டும். பலியிடல் ,

சாஸ்டாங்க வணக்கம் முதலிய அத்தனை அனுஷ்டாடங்களும் தன் சிலைக்கு மட்டுமே செய்யப்பட வேண்டும் என்று கட்டளையை பறையடித்து பிறப்பித்தான்.
அந்தவுடனேயே அதை அமலாக்கவும் செய்தான் .தன் சிலையை வணங்குபவர்களை ஆதரிக்கவும் , அதை மறுப்பவர்களின் கை விரல் , கால் விரல் போன்ற அவயங்களை துண்டித்து அங்கஹீனமாக்கினான்.இதனால் பொது ஜனங்கள் அநேகர் மரணமடைந்தனர்.

அஸ்ஹாபுல் கஹ்பு தோழர்கள் ஏக இறைவனுக்கு மட்டும் மறைவாக இபாதத் செய்து வருவதும், சிலை வழிபாடுகளை வெறுத்து ஒதுக்குவதும் உளவாளிகள் மூலம் அரசன் தக்யானூஸ்க்கு தெரிய வருகிறது.
உடனே அவர்களை தன் முன் நிறுத்தி, "நீங்கள் ஏன் எனக்கும் , என் சிலை உட்பட மற்ற தெய்வச் சிலைகளை வணக்காமல் என்னுடைய உத்தரவுக்கு ஏன் மாறு செய்தீர்கள் ?
அதற்கு மக்ஸல்மீனா என்ற கஹ்பு தோழரில் ஒருவர் :

" மன்னா...! இந்த சிலைகளுக்கு எங்களை ஸஜ்தா என்னும் வணக்க வழிபாடு செய்யச் சொல்கிறீர் . நீர் நன்றாக யோசனை செய்து பாரும் எவ்வித அறிவுமற்ற, தன்னைத் தானே இயக்கும் சக்தியற்ற, ஒரு கல்லை இறைவன் என்று வணங்குவது எவ்வாறு அது எமது அறிவிற்கு பொருந்தும் ? அதோ மனிதன் கையினால் செய்யப்பட்ட சிலை ஒரு காலத்தில் அது மனிதனுடைய காலின் கீழ் இருந்தது . அதைப்போய் இறைவன் என்று சொல்வது பெரும் மடத்தனமாக இருக்கிறதல்லவா .. அதன் முன் தலை சாய்க்க எப்படி எங்களது மனம் ஒப்பும் ? அஸ்தஃபிருல்லாஹ். இச்செயல் ஒருபோதும் எங்களுக்கு ஆகாது" என்று கூறினார் .

" நீங்கள் எந்த இறைவனை ஸஜ்தா செய்கிறீர் ? என்று மன்னன் கேட்டான் .
அதற்கு மக்ஸல்மீனா :
"எங்களுடைய இறைவன்தான் உனது இறைவனையும், எங்களையும் , உன்னையும் , இன்னும் உலகங்களையெல்லாம் ' குன் ' என்ற ஒரு சொல்லால் படைத்து , பூமியை நாம் இருப்பதற்காகவும், அதில் பகலை உணவை தேடுவதற்காகவும், இரவை நாம் ஓய்வு பெறும் நித்திரை செய்வதற்காகவும் படைத்தான் . தவிர பூமிக்கு மேல் வானம் , வானத்தில் சூரியன் ,சந்திரன் , நட்சத்திரங்கள் இவைகளை உண்டாக்கி பிரகாசமாக்கினான். இந்தப் பிரகாசத்தின் பேரில் அவனுடைய குத்ரத்தின் பிரகாசத்தைக் காணாவிடில் கண்கள் பயனற்று கழன்றுவிட வேண்டும்" என்று இன்ஜில் வேதத்திலுள்ளதைக் கூறினார் .
இப்படி பேசியதைக் கேட்ட தக்யானூஸ் மன்னன் எந்த பதிலும் சொல்ல முடியாமல், அவர்களை வெட்டி கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.

அப்போது மக்ஸல்மீனா புத்தி கூர்மை உடையவராக இருந்தபடியால், தத்யானூஸை நோக்கி, "மன்னா..! நீ எங்களுக்கு இன்று இரவு தவணை கொடும். அப்படிக் கொடுத்தீரானால் , நாங்கள் யோசனை செய்து நாளை தினம் உனது மார்க்கத்தை ஒப்புக் கொள்கிற விஷயம் பற்றி சொல்கிறோம்" என்றார்.
அது கேட்டு தக்யானூஸ் மன்னன் மனதில் , " இந்த மேலான தலைமை தனமுடையவர்கள் பயந்து, நாளைய தினம் நாம் கொண்டுவந்த மதத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டால், அப்சூஸ் பட்டணம் முழுவதும் உள்ள ஜனங்கள் நம் கைவசம் ஆகிவிடுவார்கள் என்றெண்ணி ஓர் இரவு தவணை ஒப்புக் கொண்டு அவர்களை சிறைச்சாலையில் அடைத்து வைத்தான்.

சிறைச்சாலையில் அஸ்ஹாபுல் கஹ்பு தோழர்கள் உறங்காமல் விடிய விடிய இறைவனிடம் மன்றாடிய வண்ணம் இருந்தனர்.
இவ்விதமாய் இருக்கையில் அல்லாஹ்வுடைய நாட்டம் அன்றிரவு விடிந்ததும் , பக்கத்து தேசத்தின் அரசன் அப்சூஸ் மீது படையெடுத்து வந்தான் .
இச்செய்தி தக்யானூஸ்க்கு எட்டவே, அவன் மதியற்றவனாகி பகைவர்களை எதிர்த்து சண்டை செய்ய முடியாமல். சோர்ந்து விட்டான்.

இதற்கிடையில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்கள் இதுதான் சமயம் என்று எண்ணி, ஒவ்வொருவர்களும் ஓட ஆயத்தமாகி, அப்படியே தங்கள் தங்கள் வீட்டிற்கு போய் வேண்டிய பொருட்கள் மற்றும் ரொக்கம் முதலிய சாமான்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இறைவன் பேரில் நம்பிக்கை வைத்து வேறுவேறு தேசங்களுக்கு போக துணிந்தார்கள்.
அதேபோல் அஸ்ஹாபுல் கஹ்பு தோழர்கள் ஆறு பேரும் அப்சூஸ் ஊரை விட்டு கிளம்பினார்கள் என்பதாக ஒரு வரலாறு கூறுகிறது.

கராமத் 43
குகைத் தோழர்கள் வரலாறு 4



குகைத் தோழர்களான
1) மக்ஸல் மீனா
2) எம்லீகா
3) நைனூனஸ்
4) ஸாரபூனஸ்
5) தூநவானஸ்
6) பல்யஸ்தத யூனஸ்
ஆகிய 6 பேர்களும் இருந்தனர் .

இதில் எம்லீகா என்பவரும் இன்ஜில் வேதத்தை கற்ற ஆலிமாகவும் , புத்திசாலியாகவும் இருந்தார் .மன்னன் தக்யானூஸ் தன்னை இறைவன் என்று கூறிக்கொண்டு, பக்கத்து தேச மன்னன் படையெடுத்து வருகிற சேதியைக் கேட்டதும் ஏன் பயந்து நடுங்க வேண்டும் ? இறைவன் பயப்படக் கூடியவனாக இருப்பானா ? தவிர இவனும் நம்மைப்போல் ஊண், உறக்கம், விழிப்பு முதலிய மனிதர்களின் குணங்களைக் சேர்ந்தவனாக இருக்கிறான்.இறைவனும் இவ்விதமான காரியங்கள் அனைத்தையும் விட்டும் தூய்மையானவனாக இருக்கிறான் என்று பலவாறாக யோசித்து,
சிறைச்சாலையை விட்டு வெளியே வந்தபின் நாம் இதற்கு பின் என்ன செய்வோம் ? என்று யோசனையில் ஆழ்ந்து , இந்த இறை நிராகரிப்பாளர்களை விட்டும் நாம் நீங்கிக் கொள்வோம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

எம்லீகா நம்முடைய பேரீத்தம்பழம் தோட்டத்தை மூவாயிரத்திற்கு விற்கிரையம் செய்து விட்டு, அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு ஆறு பேர்களுடன் அல்லாஹ்வின் பெயரில் தவக்கல் வைத்தவராக குதிரையில் ஏறி பயணமானார்கள்.
பின்பு ஊரைவிட்டும் மூன்று காத வழிதூரம் போனதும் எல்லோரையும் நோக்கி, எம்லீகா சொன்னார் :
"சகோதரர்களே..! நீங்கள் எல்லோரும் ஒரே மனதோடு உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். இக்கணம் முதல் நம்மை விட்டும் துனியாவுடைய ராஜாங்கம், சொத்து, சுகம் முதலிய தௌலத்துக்கள் யாவும் நீங்கி விட்டன. இறைவனுக்கு ஸஜ்தா செய்து கொண்டே , கண்களைக் பூமியில் படிய வைத்து கண்டு கீழ்க்கண்ட நிய்யத்தை சொல்லுங்கள் :
" இறைவா...! நாங்கள் மிகவும் தாழ்மையான அடிமைகளாக இருக்கிறோம். எங்களது சொந்த ஊரை விட்டும் , சொந்தம் பந்தங்களை விட்டும் அந்நியமாய் உன்னுடைய திருப்தியை மட்டுமே மேலான எங்களது குறிக்கோளாக்கி , உன்னிடமே தஞ்சம் புகுந்துள்ளோம். எங்களை நீ காப்பாற்றி உன்னுடைய நேரான பாதையில் எங்களை தரிப்பாடாக்கி வை. இப்போது எங்களுக்கு முன் கடுமையான பாதைகள் முன்னிட்டிருக்கின்றன.உன்னுடைய உதவியினால் மட்டுமே எங்களுக்கு உண்டான எல்லா கஷ்டத்தை விட்டும் கடந்து, எங்களுக்கு கிருபை செய்வாயாக !
பின்பு அவர்கள் எல்லோரும் குதிரையை விட்டுக் கீழே இறங்கி அவைகளுடைய லகானை அறுத்து காட்டில் விட்டுவிட்டு கால்நடையாக நடந்தார்கள்.

அவர்கள் எல்லோருமே சிறுபிள்ளையிலிருந்து செல்வமாக வளர்ந்து ,சௌபாக்கியம் உடையவர்களாக இருந்தவர்கள். இப்போது நடக்கும்போது கால்களில் கொப்புளங்கள் உண்டாகி, ஆயிரம் வருத்தம் முசிபத்துகளை சுமந்து தட்டுத்தடுமாறி, இருபத்தியோரு காத வழி நடந்து ஒரு ஓடைக் கரையில் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது தாகத்தினாலும் , பசியினாலும் சக்தியற்று மதிமயங்கிவர்களாக இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி இருக்கும்போதுதான் திடுமென தூரத்தில் ஒரு ஆடு மேய்ப்பவர் ஒருவர் காணப்பட்டார். அப்போது அவர்கள் தங்கள் மனதில் நாம் இந்த ஆடு மேய்ப்பவரிடம் போனால், அவர் நமது நிலையைப் பார்த்து, ஏதோ கொஞ்சம் தண்ணீர் அல்லது பால் கொடுப்பார் என்றெண்ணி அவர் அருகில் போனார்கள் .

அவரிடத்தில் வந்து, " களைப்பாக இருக்கிறோம் ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டார்கள்.
அப்போது ஆடு மேய்ப்பவர் ஆறு பேர்களுடைய அழகையும் வடிவையும், நற்குண பேச்சும் கண்டு , யாதொரு சந்தேகமின்றி இவர்கள் மேலான குடும்பத்தில் உள்ளவர்களாக இருக்கும். இவர்கள் நம்மிடத்தில் வந்து தண்ணீர் கேட்பதும் அல்லாஹுத்தஆலா உடைய நாட்டத்தில் உள்ளதாக இருக்கிறது என்று எண்ணி, கைகட்டி நின்று கொண்டு,
அவர்களை நோக்கி, " நீங்கள் இவ்விடத்திற்கு எதற்காக வந்தீர்கள் ? உங்களுக்கு என்னிடம் இருக்கும் உணவை நீங்கள் உண்பீர்களா ? இதோ என்னிடத்தில் தயாராக இருப்பதை தருகிறேன்.
நீங்கள் இருந்து சாப்பிட்டு விட்டு செல்லுங்கள். ஆயினும் உங்களுடைய ஊர், தலம், பேர் இவைகளை எனக்கு நன்றாக தெரியுங்கள்.உங்களைப் பார்த்தால் ஏதோ ஒரு பட்டணத்திலுள்ள ராஜகுமாரர்களைப் போல் தெரிகிறது. மேலும் தொலை தூரமான உங்களின் வீடுகளை விட்டும் பயந்து ஓடி வந்திருக்கிறீர்கள் போலவும் தெரிகிறது " என்று மிகவும் உருக்கத்துடன் சொன்னார். அதுகேட்டு எல்லோருக்கும் ஒரு தைரியம் உதயமாயிற்று.

பின்பு அவர்கள் தங்கள் நிலைமைகளைப் பற்றி சொன்னார்கள் ." எங்களுடைய மார்க்கம் உண்மையானதாக இருக்கிறது என்று ஆரம்பித்து கடைசியில் அவர்களின் தற்போதைய நிலைகள் வரை விவரித்தார்கள்.
ஆடு மேய்ப்பவர் அவற்றை கேட்டதும் அவர்களின் பாதங்களில் விழுந்து, " எனது வேண்டுகோளும் இதுவாக இருந்தது. வெகுகாலமாக நான் இறைவனிடம் நேர்வழி காட்டுகிறவர் கிடைத்து விட்டால், அவர்களுக்கு பணிவிடை செய்து, அவர்களது சகவாசத்திலே என் வாழ்நாளை கழிக்க வேண்டும் என்று துஆ செய்து கொண்டிருந்தேன்.

இன்றைக்கு அந்த நேரம் வாய்த்தது.என் சகல கஷ்டங்களும் தீர்ந்துவிட்டது. இனி உங்களை போல் உள்ள கிருபையாளர்களை நான் எங்கு பெற்றுக் கொள்வேன் ? நானும் உங்களுடன் வர மனம் துணிந்து விட்டேன். ஆயினும் இந்த ஆடுகளை அதன் எஜமானனிடம் ஒப்படைத்து விட்டுவிட்டு, நான் வருகிற வரையில் சற்று எனக்காக தாமதியுங்கள் " என்று மிகவும் கெஞ்சி கேட்டு உத்தரவு பெற்று , ஆடுகளை ஒப்படைத்துவிட்டு , ஆடு மேய்த்தவர் இவர்கள் ஆறு பேருடன் சேர்ந்து ஏழு நண்பர்களாயினர்.

உங்கள் பெயர் என்ன ?

மர்தூனஸ்

கராமத் 44

குகைத் தோழர்கள் வரலாறு 5



குகைத் தோழர்கள் 7 பேரில் ஒருவர் மர்தூனஸ். அவர் ஆடு மேய்ப்பாளராக இருந்ததால், ஆட்டு மந்தையை சுற்றி வந்து ஆடுகளை பாதுகாக்க நாய் தேவைப்பட்டது .

இந்த நாயின் உருவ அமைப்பை பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதாவது : " அஸ்ஹாபுல் கஹ்பு நாயின் நிறம் கருப்பு வெள்ளையாக இருந்தது .அதனுடைய தலை சிவப்பாகவும், முதுகு கருப்பாகவும் ,வயிறு வெண்மையாகவும். வால் கருப்பு வெள்ளை கலந்த நிறமாகவும் இருந்தது ".(ஆதார ஹதீஸ் நண்பர்களிடம் எதிர்ப்பார்க்கிறேன்)

ஆகவே அந்த நாயானது திடமாகவும், அழகிய கோலமாகவும் இருந்தது. அந்த தோழர்கள் ஏழு பேர்களும் பிரயாணமாகி நடந்து போகையில், விசுவாசம் உடைய அந்த நாயும் ஆடு மேய்ப்பவருக்குப் பின்னாலே தொடர்ந்தது வந்தது.

அதைப்பார்த்து அன்னவர்கள் தங்கள் மனதில் எண்ணிதாவது: " நாம் ராத்திரிகளில் ஓரிடத்தில் போய் தங்கினால், இந்த நாய் வழக்கம்போல் மாற்றானைக் கண்டால் குலைக்க தலைப்படும். அதனால் அவ்விடத்தில் யாராவது நம் தேசத்தவர்களில் நம்மை அறிந்தவன் பார்த்துவிட்டால், நம் ரகசியம் வெளியாகி, நாம் பிடிபட்டு பிரச்சனையில் சிக்கிக் கொள்வோம்" என்று எண்ணி அந்த நாயை கல்லினால் அடித்து விரட்டினர்கள்.

தோழர்கள் மனதில் எண்ணியதை நாய் அறிந்து கொண்டு, வாலை ஆட்டி ஆட்டி ஒவ்வொருவருடைய காலில் விழுந்து புரண்டது என்றாலும், அவர்கள் அதை விரட்டுவதையும் கல்லால் அடிப்பதையும் நிறுத்தவில்லை.

அப்போது அந்த நாய் மிகவும் தாழ்மையாக இறைவனிடம் கேட்டது : "இறைவா ! நான் தூய்மையற்ற ஒரு படைப்பாக நாயாக இருந்தபோதிலும் , உன்னுடைய நேசத்தினால் , பிரியத்தினால் நெஞ்சுருகி உன்னிடம் எத்தனையோ இரவுகளில் இறைஞ்சியிருக்கிறேன். ஆகவே எனக்கு உன் வல்லமையைக் கொண்டு நீ இச்சமயம் பேசும்படியான நாவைக் கொடு ; நான் உன் இறைநேசர்களிடம் என்னுடைய இறை பிரியத்தையும் எடுத்துச் சொல்றேன் "

அப்போது அல்லாஹுத்தஆலா அதற்கு பேசும் நாவைக் கொடுத்தான். அது , " என் சினேகமானவர்களே ! என் பெயர் கித்மீர். நீங்கள் ஏன் என்னை உங்களை விட்டும் நீக்க விரும்புகிறீர்கள். இதோ என்னுடன் இருந்த இந்த மர்தூனஸ் ஆடுமேய்ப்பாளர் என் தோழமையில்தான் இன்னும் இருக்கிறார். நீங்கள் என்னை கல்லால் அடித்து விரட்டி விட்டு நீங்கள் மட்டும் உங்கள் எஜமானாகிய இறைமாலிக்கின் சமூகத்திற்கு போகிறீர்கள். நானும் அவனின் படைபல்லவா ? அதுவும் இறைநம்பிக்கை கொண்ட நாய் அல்லவா ? நீங்கள் தூங்கும் காலமெல்லாம், நான் தூங்காமல் விழித்திருக்கும் இறைவனின் அற்புத படைப்பல்லவா நான் . (இந்த நாய் சொன்ன '' தூக்கம் " என்ற வார்த்தைக் கொண்டுதான் இறைவன் அவர்களுக்கு 309 வருடங்கள் தூங்க வைத்தானோ என்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்)

நான் உங்களுக்கு ஊழியக்காரனாக இருந்து என்னால் என்ற மட்டிலும் காலை-மாலை உங்கள் வணக்க வழிபாடுகளிலும் ஷரத்தை பேணி நிறைவேற்றி வருவது மட்டுமின்றி என் சரீரத்தில் ரூஹாக ஆன்மா இருக்கும் காலமெல்லாம் இரவு பகலாக உங்களுக்கு காவல் கிடந்து, உங்கள் ரகசியங்களை பேணி மறைக்கிறவனாக இருப்பேன் தவிர உங்களை காட்டிக் கொடுக்க மாட்டேன்.

மேலும் உங்களுக்கு சிநேகமானவன் எனக்கும் சிநேகமானவன்தான். ஆகவே உங்களின் பகையாளிகள் எனக்கும் பகையாளிகள். அவர்களின் சதையும் தோலும் நான் பிய்த்து விடுவேன். அதனால் எதிரி என்னை கொன்று போட்டாலும் சரி, உங்கள் ரகசியத்தை நான் ஒருபோதும் வெளியாக்கமாட்டேன்.

தவிர எந்த ஈமான் என் மனதில் இருக்கிறதோ அதை உங்களுக்கு சாட்சியாக்குகிறேன்.ஹக்கு சுபஹானல்லாஹ்த்தாஆலாவிற்காக நீங்கள் என் பெயரில் கிருபை செய்யுங்கள். அப்படி கிருபை புரிவதில் உங்களுக்கு என்ன பாவ தோஷம் அல்லது என்ன கஷ்டம் இருக்கிறது சொல்லுங்கள் ? நானும் நாவின்றி எதுவும் பேசத் தன்மை இல்லாதவனாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இருப்பினும் என் துஆவை இறைவன் அங்கீகரித்து, என்னை உங்களிடம் பேச வைத்தானே இந்த ஓர் அங்கீகாரம் உங்களுக்குப் போதாதா ? " அதைக் கேட்டு தோழர்கள் அழத் தொடங்கினார்கள். தங்கள் கையிலுள்ள சுமைகளை தூக்கியெறிந்து விட்டு, அந்த ஈமான் உள்ள நாயை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டும், தோளில் சுமந்து கொண்டும் மெதுவாக அதன் தலையை தடவிக் கொடுத்துக் கொண்டும் அதன் அருமை பாராட்டி சொன்னார்கள் :
" நீயும் எங்களுக்கு ஒரு சினேகமானவனாய் இருக்கிறாய். இறைவனிடத்தில் எங்கள் பெயர் பொறிக்கப்படும் இடத்திலெல்லாம் உன் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும் " என்று சொல்லி அதை ஒவ்வொருவரும் மாற்றி மாற்றி வாங்கி சுமந்து கொண்டே வந்தார்கள்.


سَيَـقُوْلُوْنَ ثَلٰثَةٌ رَّابِعُهُمْ كَلْبُهُمْ وَيَقُوْلُوْنَ خَمْسَةٌ سَادِسُهُمْ كَلْبُهُمْ رَجْمًا بِالْغَيْبِ وَيَقُوْلُوْنَ سَبْعَةٌ وَّثَامِنُهُمْ كَلْبُهُمْ قُلْ رَّبِّىْۤ اَعْلَمُ بِعِدَّتِهِمْ مَّا يَعْلَمُهُمْ اِلَّا قَلِيْلٌ فَلَا تُمَارِ فِيْهِمْ اِلَّا مِرَآءً ظَاهِرًا وَّلَا تَسْتَفْتِ فِيْهِمْ مِّنْهُمْ اَحَدًا
(குகையிலிருந்த அவர்கள்) மூன்று பேர்தாம்; நான்காவது அவர்களுடைய நாய் என்று (சிலரு)ம்; (அவர்கள்) ஐந்து பேர், அவர்களுடைய நாய் ஆறாவதாகும் என்று (வேறு சிலரு)ம்; மறைவான விஷயங்களைத் தாங்கள் கண்டுபிடித்து விட்டவர்களைப் போல் (மிக்க உறுதியாகக்) கூறுகின்றனர். மற்றும் சிலரோ அவர்கள் ஏழு பேர், எட்டாவது அவர்களுடைய நாய் என்றும் கூறுகின்றனர்.
(அல்குர்ஆன் : 18:22)
1) மக்ஸல் மீனா
2) எம்லீகா
3) நைனூனஸ்
4) ஸாரபூனஸ்
5) தூநவானஸ்
6) பல்யஸ்தத யூனஸ்
7) மர்தூனஸ் (ஆடு மேய்ப்பாளர்)
😎கித்மீர் என்ற நாய்
அது சிலவேளை அவர்கள் கையில் இருக்கும். சிலவேளை அவர்களின் தோலில் இருக்கும். இவ்விதமாக ஒவ்வொரு மனதிலும் அந்த நாய் இடம் பிடித்து, சந்தோசத்துடன் அதை தூக்கி நடந்தார்கள்.
ஆடு மேய்ப்பவர் எல்லோருக்கும் முன் வழிகாட்டியாக நடந்தார். அவருக்கு அந்த காட்டைப் பற்றியும், மலைகளைப் பற்றியும், தங்கும் இடங்களைப் பற்றியும் அவருக்கு நன்றாக தெரியும். கடைசியாக அவர்கள் எல்லோரும் அழைத்துக்கொண்டு ஒரு மலையில் ஏறினார்.

ரஹ்மத் ராஜகுமாரன் .

இந்த குகைத் தோழர்கள் 7 பேரின் பெயரும் நடுவில் கித்மீர் என்ற நாயின் பெயரும் அச்சரமாக பொறிக்கப்பட்டிருக்கும் இடம் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்பதாக பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

கராமத் 45

குகைத் தோழர்கள் வரலாறு 6



கஹ்பு தோழர்களில் ஒருவரான மர்தூனஸ் என்கிற ஆடுமேய்ப்பாளர் வழிகாட்ட ரக்கீம் என்ற மலைப் பொதும்பில் உள்ள குகையை தோழர்கள் வந்தடைந்தனர்.
அவர்கள் வந்து சேர்ந்த மலைபொதும்பில் உள்ள குகை வெகு காலத்துடையதாக இருந்தது. குகையினுள் மிகவும் இருட்டாகவும் இருந்தது . அதனுள் விசாலமான தங்குமிடமும் இருந்தது .அதில் எல்லோரும் தங்கினார்கள் .

குகைக்கு முன்னதாக மதுரமான ஒரு நீர் சுனை இருந்தது. அதில் தெளிவான ஜலம் ஓடிக்கொண்டிருந்தது . அதனருகில் வகை வகையான கனி வர்க்கங்கள் நிறைந்த மரங்களும் செடிகளும் இருந்தன.
இவர்கள் மிக்க விருப்பத்துடன் கனிகளை பறித்து தின்று சுனையில் ஓடும் மதுரமான ஜலத்தை அருந்தி தாகம் தீர்த்து சந்தோஷம் அடைந்தார்கள். இவர்கள் மிக தொலைவில் இருந்து வந்த அலுப்பினால் பசியை தணிக்கும் பொருட்டு கனிவர்க்கங்களைத் தின்று திருப்தி அடைந்த களைப்பினால் அப்பொதும்பிலுள்ள குகையிலுள்ள நித்திரை செய்தார்கள்.
விசுவாசமுள்ள அந்த நாயானது அந்த குகையின் வாசலில் இரண்டு கால்களையும் விரித்து உட்புறம் உட்கார்ந்து காவல் காத்துக் கொண்டிருந்தது . அல்லாஹுத்தஆலா தோழர்களுக்கு நித்திரையை மிகைப்பாக்கி விட்டான். அவர்கள் உறங்கினாலும் கண்கள் விழித்திருந்தன.
" மேலும், அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோதிலும், நீர் அவர்களை விழித்துக் கொண்டிருப்பவர்களாகவே எண்ணுவீர்;அவர்களை நீர் உற்றுப்பார்த்தால், அவர்களை விட்டும் வெருண்டு ஓடிப் பின்வாங்குவீர்; அவர்களில் நின்றும் உண்டாகும் பயத்தைக் கொண்டு நிரம்பிவிடுவீர்,
(அல்குர்ஆன் : 18:18)

"அவர்களுடைய நாய் தன் இரு முன்னங்கால்களையும் வாசற்படியில் விரித்திருக்கிறது; அவர்களை நீர் உற்றுப்பார்த்தால், அவர்களை விட்டும் வெருண்டு ஓடிப் பின்வாங்குவீர்; அவர்களில் நின்றும் உண்டாகும் பயத்தைக் கொண்டு நிரம்பிவிடுவீர், (அல்குர்ஆன் : 18:18)
பொதுவாக நாய் இரவில் உறங்காது .ஆனால் குகைத் தோழரின் கித்மீர் நாய் குகையினுள் உறங்கியதாக எந்த தகவலும் இல்லை.

அல்லாஹுத்தஆலா அவர்களுடைய சரீரத்தை பூமியின் சூடு சங்கடம் செய்யாமலிருப்பதற்காகவும், ஒரே மாதிரியாக படுத்திருந்தால் உடல் உணர்வுசெயல் இழந்துப் போகாமல் இருப்பதற்காகவும் வலம் இடமாக அவர்களைப் புரட்டிப் புரட்டி போடும்படி இரண்டு மலக்குகளை அந்த மலைப் பொதும்பு குகையினுள் நியமித்திருந்தான்.
அதிகாலையில் சூரியன் உதிக்கும்போது, அதன் கதிர்கள் குகையை விட்டு விலகி வலதுபுறமாகப் பாயும். மாலையில் மறையும்போது குகையைக் கடந்து இடதுபுறமாகத் தாழும். இத்தகைய அமைப்பில் மலைக்குகை அமைந்திருந்தது.

இந்த சூரிய ஒளி வலம் இடம் தகவல்களால் அந்த குகை இருக்கும் முகவரியை இறைவன் சொல்லியுள்ளான். சூரிய ஒளி உதிக்கும் போது வலது புறம் என்றும் மறையும் போது இடதுபுறம் என்றும் குறிப்பிடப்படும் குகை உலகில் வேறு எங்கும் இல்லை. இக்குகை ஜோர்டான் நாட்டு தலைநகரம் அம்மானுக்கு அருகில் ரக்கீம் என்ற இடத்தில் மட்டுமே இருக்கிறது.

وَتَرَى الشَّمْسَ اِذَا طَلَعَتْ تَّزٰوَرُ عَنْ كَهْفِهِمْ ذَاتَ الْيَمِيْنِ وَاِذَا غَرَبَتْ تَّقْرِضُهُمْ ذَاتَ الشِّمَالِ وَهُمْ فِىْ فَجْوَةٍ مِّنْهُ ذٰ لِكَ مِنْ اٰيٰتِ اللّٰهِ مَنْ يَّهْدِ اللّٰهُ فَهُوَ الْمُهْتَدِ وَمَنْ يُّضْلِلْ فَلَنْ تَجِدَ لَهٗ وَلِيًّا مُّرْشِدًا
சூரியன் உதயமாகும் போது (அவர்கள் மீது படாமல்) அது அவர்களுடைய குகையின் வலப்புறம் சாய்வதையும், அது அஸ்தமிக்கும் போது அது அவர்களுடைய இடப்புறம் செல்வதையும் நீர் பார்ப்பீர்; அவர்கள் அதில் ஒரு விசாலமான இடத்தில் இருக்கின்றனர் - இது அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளதாகும், எவரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகிறானோ, அவரே நேர் வழிப்பட்டவராவார்; இன்னும், எவனை அவன் வழிகேட்டில் விடுகிறானோ, அவனுக்கு நேர் வழிகாட்டும் உதவியாளர் எவரையும் நீர் காணவே மாட்டீர்.
(அல்குர்ஆன் : 18:17)

கராமத் 46

குகைத் தோழர்கள் வரலாறு 7



பக்கத்து தேசத்தின் அரசன் அப்சூஸ் மீது படையெடுத்து வந்தான் .
இச்செய்தி தக்யானூஸ்க்கு எட்டவே, அவன் மதியற்றவனாகி பகைவர்களை எதிர்த்து சண்டை செய்ய முடியாமல். சோர்ந்து விட்டான்.
இதற்கிடையில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்கள் இதுதான் சமயம் என்று எண்ணி, ஒவ்வொருவர்களும் ஓட ஆயத்தமாகி, அப்படியே தங்கள் தங்கள் வீட்டிற்கு போய் வேண்டிய பொருட்கள் மற்றும் ரொக்கம் முதலிய சாமான்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இறைவன் பேரில் நம்பிக்கை வைத்து வேறுவேறு தேசங்களுக்கு போகத் துணிந்தார்கள்.
(என்பதாக கராமத் 42, குகைத்தோழர்கள் வரலாறு 3ம் பதிவில் பார்த்தோம்)

பக்கத்து தேசத்து அரசன் அப்சூஸ் மீது படையெடுத்து வரும் முடிவை மாற்றிக் கொண்டான்.தக்யானூஸ் அரசன் யுத்த களத்திலிருந்து நேராக அப்சூஸ் பட்டணத்திற்கு வந்திருந்தான். வந்ததும் சிறையிலிருந்து தப்பிய ஆறு பேர்களைப் பற்றி விசாரிக்க, அவர்கள் ஆறு பேரும் அவர்களின் வசிப்பிடத்தில் இல்லை.
பின்பு அவன் அவர்களின் பெற்றோர்களை அழைத்து விசாரிக்க, அவர்கள் : " எங்களுக்கு யாதொன்றும் தெரியாது ஆனால் ஆறு பேர்களும் வேண்டிய மட்டும் வீட்டிலிருந்த செல்வங்களை எடுத்துக் கொண்டு ஓடிப்போய் விட்டார்கள்"
அப்போது அஸ்ஹாப் தோழர்களுக்கு பகையானவர்கள் தக்யானூஸ் மன்னனிடம், " அவர்கள் 6 பேரும் உன்னை இறைவனாக வணங்காமல், அவர்கள் வேறு ஒரு மஹா இறைவனை வழிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரக்கீம் என்னும் மலை பொதும்பில் அவர்கள் மறைந்து விட்டதாக தகவல் எங்களுக்கு கிடைத்துள்ளது " என்றார்கள்.

தக்யானூஸ் இதனைக் கேட்டு, " தன்னைத் தவிர வேறு ஒரு இறைவனை அவர்கள் ஏற்றுக் கொண்டால், நாளடைவில் அப்சூஸ் மக்கள் தன்னை இறைவனாக ஏற்காமல் புறந்தள்ளி விடுவார்கள். எனவே இந்த விஷயத்தை இப்போதே தீவிரமாக எடுத்து அந்த ஆறு பேர்களையும் கொன்றொழிக்க வேண்டும். அப்படி மரண தண்டனை கொடுக்கும்போது, அப்சூஸ் படை வீரர்களும் அந்த தண்டனையைப் பார்த்து மக்களிடம் கூறுவார்கள். இதனால் மக்கள் இழந்த பயத்தை நாம் மறுபடியும் நிலைநாட்டி, நாம் மக்களின்

இறைவனாகவே தொடர்ந்து இருக்க முடியும் " என்று எண்ணி தக்யானூஸ் படை பலத்தோடு ரக்கீம் மலைப் பொதும்பை நோக்கி பயணமாக ஆய்த்தமானான்.
தக்யானூஸ் மன்னனின் கஜானா அதிகாரியாக (நிதி அமைச்சராக) கஸான்ஜீ மார்னூஸ் என்பவர் அந்தரங்கத்தில் ஏக இறைவனுக்கு ஈமான் கொண்டவர். இவர் ஈமான் கொண்ட விஷயம் ஊரில் யாருக்குமே தெரியாது.

கஜானா அதிகாரி கஸான்ஜீ மார்னூஸ் , தக்யானூஸ் மன்னனிடம் , "அந்த ஆறு பேர்கள்களும் அப்சூஸ்ஸை விட்டு போய் விட்டார்களே... நாம் ஏன் அவர்களை தேடியலைய வேண்டும் ? ராஜங்கத்தில் பல பணிகள் முடங்கி கிடக்கின்றன.அதில் கவனம் செலுத்துங்கள். அவர்கள் அப்படியே அப்சூஸ் திரும்பி வரும்போது, பார்த்துக் கொள்ளலாம்" என்று தட்டிக் கழிக்கப் பார்த்தார்.


தக்யானூஸ்க்கு அந்த ஆறு பேர்களையும் கொல்ல வேண்டும் என்கிற கோபம் குறையவில்லை .ரக்கீம் மலைப் பொதும்பிற்கு போயே ஆகவேண்டும் என்றான். படை பயணம் புறப்பட்டது .
குகையில் இருந்த தோழர்களில் ஒருவரான எம்லீகா குகை வாசலில் உள்ள கனிகளைப் பறிக்க வரும் போது தூரத்தில் பெரிய படை பலம் வருவதற்கான தூசி படலம் வானில் மிதந்தது.

எம்லீகா திடுக்கமுற்று குகையில் உள்ள தோழர்களுக்கு இந்த செய்தியை அறிவித்தார். அவர்கள் பயமெதும் கொள்ளாமல் , "இறைவனிடம் நம்மை நாம் ஒப்படைத்தப் பிறகு உயிர் வாழ்வைப் பற்றி நமக்கென்ன கவலை ? எது நடந்தாலும் அது இறைவனிடம் நாட்டமே " என்று சொல்லி அவர் பறித்து கொண்டு வந்த பழங்களை சாப்பிட்டுவிட்டு,கவலை கொள்ளாமல் நித்திரையில் ஆழ்ந்து விட்டார்கள்.
தக்யானூஸ் படைகள் மலை பொதும்பை சுற்றி சூழ்ந்து கொண்டது . கஸானா அதிகாரியை கஸான்ஜீ மார்னூஸ்ஸை குகையினுள் அனுப்பி கஹ்பு தோழர்களின் நிலையை அறிந்து வரச் சொன்னான்.
அவர் போய் நித்திரையில் இருப்பவர்களின் பெயரைக் கூறி கூடிய மட்டிலும் எழுப்பி பார்த்தார். ஒருவரும் அசைந்து கொடுக்கவில்லை. அதனால் அவர் தக்யானூஸிடம் , "அவர்கள் இன்னும் உங்களின் பயத்தினாலும், பசியினாலும் செத்துக் கிடக்கிறார்கள். ஒருவரும் உயிரோடு இருக்கவில்லை"
இதைக் கேட்டதும், தக்யானூஸ் அரசன் ரொம்பவும் சந்தோஷமாகி, குகையின் வாசலை அடைக்க கல்லும், சுண்ணாம்பும் தரிவித்து கட்டிடம் கட்டும் பணி ஏவினான். அப்படியே கட்டடமும் கட்டப்பட்டது.
அப்போது தக்யானூஸ் மன்னன் "இவர்கள் தாங்கள் வணங்கும் கண்ணுக்குத் தெரியாத அந்த இறைவனைக் கூப்பிட்டு தப்பித்துக் கொள்ளட்டும் " என்று சொல்லி செருக்குடன் தன்னைத்தானே பெருமை பாராட்டிக் கொண்டு திரும்பிப் போய்விட்டான்.

கஸான்ஜீ மார்னூஸ்க்கு இறைவன் இல்ஹாம் என்னும் உதிப்பைக் கொடுத்து, ஈயத்தினாலான ஒரு பலகையில் அஸ்ஹாபுல் கஹ்பு என்ற ஏழு தோழர்களின் பெயர்களையும், அவர்களின் குடும்பத்தின் குறிப்புகளையும் அவர்கள் அப்சூஸ் பட்டணத்தை விட்டு வெளியேறிய வருஷம், தேதி இவைகளை விவரமாக எழுதி, பொதும்பின் வாசலில் உட்புறமாக தூக்கி வைக்கும்படி இறை உதிப்பு உண்டாயிற்று .அப்படி அவர் செய்து முடித்தார்.
ஏனெனில் இறைவனுடைய நாட்டம் பிந்திய ஒரு காலத்தில் இதில் அடைப்பட்டவர்களின் வாழ்வும், அவர்களுக்கு நடத்தப்பட்ட கொடுமையுமான இந்த ரகசியம் வெளி உலகுக்கு தெரிய வேண்டியது இருக்கும் என்று எண்ணி, அவ்விதமாக பலகையை ஒழுங்குப்படுத்தி, தக்யானூஸ்க்கு தெரியாமல் மறைவாக பதித்து விட்டு, குகைத்தோழர்கள் அனைவரையும் இறைவனிடம் ஒப்பித்து விட்டு,
" இறைவா ! அஸ்ஹாபுல் கஹ்ப் தோழர்கள் உன்னையே ஈமான் கொண்டார்கள். உனக்காகவே வாழ்வையும் மரணத்தையும் துச்சமென ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு நீயே போதுமானவனாக என்றென்றும் இருக்க வேண்டும் " என்று மனமுறுகி வேண்டிக் கொண்டு .....
தக்யானூஸ்சுடன் அப்சூஸ் திரும்பினார் .

கராமத் 47

குகைத் தோழர்கள் வரலாறு 8



தக்யானூஸ் மன்னன் அஸ்ஹாபுல் கஹ்பு தோழர்கள் தங்கியிருந்த குகையின் வாயிலை கல்லாலும், சுண்ணாம்பு காரையாலும் மூடினான்.

முன்பு கஹ்பு தோழர்கள் குகையின் வாசலில் விளையும் கனிவர்க்கங்களும் , சுனை நீர் குடிப்பும் இனிமேல் நிரந்தரமாக கிடைக்காமல் தடையேற்பட்டது.

கஸான்ஜீ மார்னூஸ் என்கிற தக்யானூஸ் மன்னனின் கஸானா அதிகாரி குகையினுள் வந்து இவர்களை தட்டி எழுப்பியதையோ , குகையின் வாசலை தக்யானூஸ் மூடியதையோ ஆக எதுவுமே தெரியாமல் அவர்கள் அனைவரும் நித்திரையில் ஆழ்ந்தனர் .

فَضَرَبْنَا عَلٰٓى اٰذَانِهِمْ فِى الْـكَهْفِ سِنِيْنَ عَدَدًا ۙ

ஆகவே நாம் அவர்களை எண்ணப்பட்ட பல ஆண்டுகள் வரை அக்குகையில் (தூங்குமாறு) அவர்களுடைய காதுகளின் மீது (திரையிட்டுத்) தடையேற்படுத்தினோம். (அல்குர்ஆன் : 18:11)

(காதுகளுக்கும் தூக்கத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி

https://m.facebook.com/story.php?story_fbid=1932891413636871&id=100007480923921)

وَلَبِثُوْا فِىْ كَهْفِهِمْ ثَلٰثَ مِائَةٍ سِنِيْنَ وَازْدَادُوْا تِسْعًا

அவர்கள் தங்கள் குகையில் முன்னூறு வருடங்களுடன் மேலும் ஒன்பது அதிகமாக்கி (முன்னூற்றி ஒன்பது வருடங்கள்) தங்கினார்கள். (அல்குர்ஆன் : 18:25)

தக்யானூஸ் மன்னன் குகைத் தோழர்களுக்கு அநியாயம் செய்துவிட்டு, அப்சூஸ் போய் சேர்வதற்குள் எதிரிகளால் கொலை செய்யப்பட்டான் .

பின் அப்சூஸை பல மன்னர்கள் ஆண்டு, 309 வருடங்களுக்கு பின் அப்சூஸை நாமூஸ்ஷாஹ் என்கிற நீதவான் ஆண்டார். அதே 309 வருடங்களுக்குப் பிறகு குகையினுள் உறங்கிய கஹ்பு தோழர்களில் மக்ஸல்மீனா என்பவர்தான் முதன்முதலில் நித்திரையிலிருந்து விழித்துத் தன்னுடன் நித்திரை செய்தவர்கள் 6 பேரையும் எழுப்பினார்.

இது பற்றி குர்ஆனில் இறைவன் தாம் தாம் அவர்களை எழுப்பியதாக...

" இன்னும் அவர்களிடையே ஒருவரையொருவர் கேட்டுக் கொள்வதற்காக நாம் அவர்களை இவ்வாறு எழுப்பினோம்;

அவர்களிலிருந்து சொல்பவர் (ஒருவர்) “நீங்கள் எவ்வளவு நேரம் (நித்திரையில்) இருந்தீர்கள்?” எனக் கேட்டார்;

"ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் தங்கியிருந்தோம்” எனக் கூறினார்கள்;

(மற்றவர்கள்) “நீங்கள் (நித்திரையில்) இருந்த காலத்தை உங்கள் இறைவன்தான் நன்கு அறிந்தவன்"

(அல்குர்ஆன் : 18:19)

குகைத் தோழர்கள், " மறதியுற்று நித்திரை கொண்டோம். இதனால் இரவின் இபாதத்தும் காலவாதியாகிவிட்டது " என்று கை சேதம் கொண்டார்கள்.

பின்பு குகைத் தோழர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக கைவசம் வைத்திருந்த ஈட்டியை கையில் எடுத்துப் பார்க்க , அது துருப்பிடித்து மண்ணைப் போலாகித் துண்டு துண்டாகி விழுந்து விட்டது.

இதனால் அவர்களுக்கு பலத்த சந்தேகம் எழ ஆரம்பித்தது. ஓர் இரவு கொண்ட நேரத்தில் இரும்பினால் செய்யப்பட்ட ஈட்டி எப்படி துருவேறி அதுவும் உப்பு மாதிரி உதிர்ந்து போகும் ? ஓர் இரவுக்குள் குகையின் வாசலை யார் வந்து எப்படி மூடினார்கள் ?

குகையின் வாசலை தோழர்கள் உடைத்து வெளியில் வந்து மலை பொதும்பிற்கு வெளியே ஓடிக் கொண்டிருந்த சுனை ஊற்றினை தேடிய போது அது காணப்படவில்லை.

சுவை மிகுந்த கனி வர்க்கங்களை தந்த மரங்களும் காணப்படாமல், அவ்விடம் புதர் மண்டிக் கிடந்தது. அந்த ஓடைக்கரையில் உண்டான பள்ளம் மேடு முதலிய அடையாளங்கள் ஒன்றுமில்லாமல் வேறு விதமாக மாறி இருந்தது. தவிர மேடாக இருந்த இடத்தில் பள்ளமாகவும் , பள்ளமாக இருந்த இடத்தில் மேடாகவும் இருந்தது. தவிர அந்த மைதானம் பயங்கரமான தளமாய் காணப்பட்டது .

இதனால் அவர்கள் மதி மயங்கிவர்களாக எல்லோரும் ஒலுகு செய்து இறைவனுடைய நாட்டத்தை வேண்டி குகையினுள் சென்றனர். பசியால் இளைத்தவர்களாகவும் இருந்தார்கள்.


அப்போது எம்லீகா என்பவர் ஆடு மேய்ப்பாளர் மர்தூனஸின் உடுப்பை அணிந்துகொண்டு உணவு வாங்கிக் கொண்டு வருவதற்காக ஊருக்குள் செல்லலானார்.

அப்போது மற்ற சிநேகிதர்கள், " எமிலீகாவே...! நீர் போய் நல்ல , சுத்தமான உணவு வாங்கிக் கொண்டு வாரும் தவிர ஒவ்வொரு மனிதருடனும் மிருதுவாக பேச வேண்டும். ஏனெனில் ஒருக்கால் நமது ரகசியம் வெளியாகி விட்டால், மார்க்கம் இழந்த தக்யானூஸ் மன்னன் நம் எல்லோரையும் பிடித்து கொன்று போடலாம். அல்லது அவனது மார்க்கத்தில் சேரும்படி துன்புறுத்தலாம் என்று சொல்லி அப்சூஸ் பட்டணத்திற்கு போகும்படி அனுப்பி வைத்தார்கள்.

ரஹ்மத் ராஜகுமாரன்.

கராமத் 48

குகைத் தோழர்கள் வரலாறு 9



எம்லீகா அப்சூஸ் பட்டணத்திற்கு போகிற பாதையில் எல்லாம் புதிது புதிதாக வித்தியாசமாக இருந்தது. எவ்விடத்தில் பாழ் பூமியாக இருந்ததோ அவைகளெல்லாம் உயர்ந்த கட்டிடங்களாகவும் , செழிப்பாக இருந்த இடங்களெல்லாம் பாழ் பூமியாகவும் மாறியிருந்தது .
தெரு வீதிகளும், சந்துக்களும், வீடுகளும் கூட பலவித மாற்றங்கள் இருப்பதைக் கண்டு மிரண்டு போனார் எம்லீகா .

அப்போது ஊரில் கடைகோடியில் ஒரு இடத்தில் "லா இலாஹ இல்லல்லாஹ் ஈஸா ரூஹுல்லாஹ் " என்ற கலிமா எழுதப்பட்டிருந்தது. அந்த கலிமாவைப் பார்த்ததும் எம்லீகா ஓடிப்போய் அதில் தமது கண்களை வைத்து அழுத்தியவாறு எண்ணினார்:
" இந்த வெளிப்படையான செய்தி எப்படி மன்னன் தக்யானூஸ்க்கு தெரியாமல் இருக்கிறது ? என்று ஆச்சரியப்பட்டார்.
அவ்வாறு நினைத்து போய்க் கொண்டிருக்கையில் மஸீஹ் உடைய ஆலயங்களும் பரிபாலனம் செய்யப்பட்டிருப்பதை கண்டார். அவைகளுடைய வாசல்களிலும், சுவர்களிலும் நபி ஈஸா (அலை) அவர்களுடைய படங்கள் ஜோடிக்கப்பட்டு இருந்தது. அதை கண்டு ,
" இறைவனே ! இது என்ன ஆச்சரியம் ..! ஓர் இரவுக்குள் எத்தனை பெரிய பெரிய புதுப்புது மாற்றங்கள் உண்டாகியிருக்கிறது. ஜனங்களின் சொல், செயல்களில் நபி ஈஸா (அலை) அவர்களைக் கொண்டும் அல்லாஹுத்தஆலாவின் நாமத்தைக் கொண்டும் மக்கள் சத்தியம் செய்கிறார்கள்.
இன்னும் பல இடங்களில் ஜனங்கள் இன்ஜீல் வேதத்தை மிக தைரியமாக ஓதுகிறார்கள். இதற்கு முன் இன்ஜீலை யாரும் ஓத முடியாமல், தக்யானூஸ் மன்னனுக்கு பயந்து இருந்தார்களே. அட , இந்த தக்யானூஸ் மன்னன்தான் எங்கே ?

" இறைவனே அப்சூஸ் பட்டணத்தில்தான் வந்திருக்கிறேனா... அல்லது வேறு எந்த ஊரிலாவது வழி தப்பி வந்து விட்டேனா... எனக்கு ஒன்றும் தெரியவில்லையே . தவிர ஆயிரக்கணக்கான மனிதர்களை பார்க்கிறேன் ஒருவரும் எனக்கு அறிமுகமாகத் தெரியவில்லையே "
கடைசியாக ஒரு ரொட்டிக்கடைகாரனிடம் வந்து, " தம்பி இந்த ஊரின் பெயர் என்ன ? என்று கேட்டார். அவன் "அப்சூஸ்" என்று சொன்னான். இவ்விடத்தின் அரசன் யார் ? என்று கேட்க, அதற்கு அவன் " நாமூஸ் ஷாஹ்" என்று சொன்னான் .
இந்த பதில்கள் யாவும் அவரின் அனுபவத்திற்கு புதுமையாக இருந்தது. சரி இங்கு இருந்த மன்னன் தக்யானூஸ் எங்கே இருக்கிறான் ? யாருக்கும் ஒன்றும் தெரியவில்லையே.
எம்லீகா , தன்னிடம் இருந்த சில நாணய திர்ஹகத்தை அவனிடம் கொடுத்து, " இதற்கு ரொட்டி கொடு" என்றார்.

அப்போது அந்த கடைக்காரன் அந்த நாணயத்தை பார்த்ததும் "இந்த மனிதன் எங்கேயோ ஒரு காலத்தில் உள்ள ஒரு புதையலைப் பெற்றிருக்கிறான். இந்த நாணயம் இக்காலத்தில் உள்ள ரூபாய் இல்லை. இது எடையில் பத்து பங்கு அதிகமாக காணப்படுகின்றது " என சொல்லி,

எம்லீகாவைப் பார்த்து, " நீ முற்காலத்தில் உள்ள ஏதோ ஒரு புதையலை கண்டெடுத்து இருக்கிறாய்.ஆகவே நீ எனக்கு அதில் பங்கு கொடு. இல்லாவிடில் நான் உன் ரகசியத்தை வெளியாக்கி விடுவேன்" என்றான். அதற்கு எம்லீகா, " நான் எந்தப் புதையலையும் பெற்றுக் கொள்ளவும் இல்லை. எவருடைய உடைமையும் அபகரிக்கவும் இல்லை . நான் மூன்று நாளைக்கு முன் என்னுடைய ஈத்தம் பழத் தோட்டத்தை விற்று கிரயத்தை எடுத்துக் கொண்டு ஊரை விட்டு கிளம்பி வெளியூருக்கு வந்தேன். அப்போது ஊரில் உள்ள ஜனங்களெல்லாம் தக்யானூஸ் மன்னனை வணங்கினவர்களாக இருந்தார்கள்" என்று சொன்னார் .

இதை ரொட்டிக் கடைக்காரன் கேட்டு, " நீ என்ன பைத்தியக்காரனா ? அந்த கொடுங்கோலன் தக்யானூஸ் மன்னன் செத்து, 300 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நீ இப்போது வந்து மூன்று நாளைக்கு முன்னாள் நடந்த விஷயத்தைப் போல பேசிக் கொண்டிருக்கிறாய். என்னை பைத்தியக்காரன் என்று பரிகாசம் செய்கிறாயா ?" என்று சத்தம் போடவும் கடைவீதியில் ஜனங்களும் , சேவகர்களும் வந்து கூடிவிட்டார்கள் .
எம்லீகாவை நீதமான மன்னன் நாமூஸ் ஷாஹ் சமூகத்திற்கு அனுப்பப்பட்டது. அப்போது நாமூஸ் ஷாஹ் மன்னர் எம்லீகாவைப் பார்த்து," நீர் யாருக்கும் பயப்படாதீர். எங்கள் நபி ஈஸா (அலை) அவர்களின் மார்க்கம் எவருடைய முதலையும் பறித்துக் கொள்ளும்படி கட்டளை கொடுக்கவில்லை. ஆனால் நீர் பெற்றுக்கொண்ட புதையலில் ஐந்தில் ஒரு பங்கு மட்டும் எங்கள் ராஜ்ஜியத்திற்கு கொடுத்து விடும். இந்தமட்டும் தான் வாங்கிக் கொள்ள எங்கள் நபி எங்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்.

அப்போது எம்லீகா மன்னனைப் புகழ்ந்து துஆ செய்து, "மார்க்கப்பற்றுள்ள மன்னரே..! அல்லாஹுத்தஆலா உம்முடைய ராஜாங்கத்தை தரிபாடக்கி வைப்பானாக..! நான் இந்த படுமோசமான சந்தேகத்தை விட்டும் நீங்கியவனாக இருக்கிறேன். நான் எந்த புதையலும் பெற்றுக் கொள்ளவில்லை. தவிர நானும் இந்த ஊர்க்காரன்தான் " என்று சொன்னார்.
அதற்கு மன்னர் " அப்படியானால் ,இந்த ஊரில் உங்களுக்கு தெரிந்தவர்கள் பெயரை சொல்லுங்கள்" என்று கேட்க , சுமார் ஆயிரம் பெயர்களை சொல்லிக் காட்டினார்.

அப்போது மன்னர் தனது அதிகாரிகள் இடத்தில், "இந்த பெயர் உள்ளவர்கள் யாரேனும் இவ்வூரில் இருக்கிறார்களா ? " என்று கேட்க,

ராஜ தர்பாரில் இருந்த அதிகாரிகள் கைகட்டி நின்று,
"ஆச்சரியம் ஆச்சரியம் " இந்தப் பெயர் உள்ளவர்கள் ஒருவரும் இந்தப் பட்டணத்தில் கிடையாது. தவிர நம்முடைய காலத்திலும் இவ்விதமான பெயர்கள் எதுவும் இல்லை. ஆனால்... முந்தின காலத்தில்தான் இப்படிப்பட்ட பெயர்கள் இருப்பதை சில பழைய பத்திரங்களிலும், பழமையான காகிதங்களிலும் காண்கிறோம் " என்றார்கள்.


அப்போது மன்னர் எம்லீகாவிடம், " உம்முடைய வீடு வாசல் எங்கு எங்கு இருக்கிறது ? "என்று கேட்க , அவர் அந்த தெரு பெயரையும், வீட்டின் அடையாளத்தையும் சொன்னார்.
எம்லீகாவுடன்,மன்னரின் காரியதரிசிகளும் சேர்ந்து அந்த தெருக்குப் போயினர். எம்லீகா தம்முடைய வீட்டை தேடி கடந்து போகையில், ஒரு இடத்தை கூர்ந்து பார்த்து தேர்ந்தெடுத்தார். அதில் பழைய கட்டடத்தின் அடையாளம் காணப்பட்டு இருந்தது. ஆகவே அவர் நன்றாக ஆலோசித்து விட்டு, இதுதான் நம்முடைய வீடு என்று நிச்சயப்படுத்தி அதன் வாசலில் நின்று கை தட்டினார்.
அதிலிருந்து 100 வயதுக்கும் மேலான கிழவர் ஒருவர் வந்தார்.அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். சரீரத்தில் உதறுதல்களும். தலையில் ஆட்டமும் கொண்டு, கம்பு ஊன்றி கொண்டு வீட்டிற்கு வெளியில் வந்தார்.

அப்போது அவர் வாசலில் நிற்கும் ஜனக் கூட்டத்தையும் , அரசனுடைய ஆட்களையும், 25 வயது மதிக்கதக்க ஓர் அழகான இளைஞனையும் பார்த்து திகைத்து, இது என்ன விஷயமோ என்று பயந்து, அவரை நோக்கி, " நீங்கள் என் வீட்டைச் சூழ்ந்து கொண்டு ஏன் நிற்கிறீர்கள் ? "என்று கேட்டார்
அப்போது அரசனுடைய ஆட்கள் " இதோ உனக்கு முன்னால் நிற்கிறாரே இந்த இளைஞர் இந்த வீட்டை தன் வீடு என்று சொல்கிறார் "
அதற்கு அந்த கிழவர் மிகவும் கோபித்து, எம்லீகாவை நோக்கி முகம் கடுகடுத்து, " உன் பெயர் என்ன சொல் "என்று கேட்க,
அதற்கு அவர் "எம்லீகா " என்றார். பின்பு அவர் உன் தகப்பனாரின் பெயர் என்ன என்று கேட்க "குஸ்தனீகீன்" என்றார்.
அப்போது அந்தக் கிழவர் மறுபடியும் எம்லீகாவின் முகத்தை கூர்ந்து பார்த்து, மறுபடியும் " உனது பெயர் என்ன ?" என்றார். அதற்கு அவர் " எம்லீகா, தன்னுடைய தகப்பனார்"குஸ்தனீகீன்" பெயரையும் சேர்த்து சொன்னார்.
அப்போது அந்த கிழவர் எம்லீகாவுடைய கால் பாதத்தில் விழுந்து, இரு கை கால்களை முத்தமிட்டும் கட்டியணைத்தும் கண்ணீர் சொறிந்தனர் .
கிழவர் : " நான் இறைவன் பெயரில் சத்தியமாக சொல்கிறேன் இவர்தான் என் மேலான பாட்டனார் எம்லீகா. கொடுங்கோலன் தக்யானூஸ் மன்னனின் கொடுமையால் அல்லாஹ்வின் பாதையில் ஓடிப்போய் றகீம் என்னும் பொதும்பில் மறைவாக இருந்த சாலிஹான ஏழு தோழர்களில் இவரும் ஒருவரே ஆவார். இவரைப் பற்றி எங்கள் குடும்பத்தில் கடக்கும் ஒவ்வொரு பரம்பரையினருக்கும் சொல்லி சொல்லி இவர் வரலாற்றை எங்கள் குடும்ப மனதில் பதிந்துள்ளோம் .
ஆகவே கஹ்பு தோழர்கள் இவர்களுடைய சரித்திரங்களை பற்றி நமது நபி ஈஸா இப்னு மரியம் அலைஹிவஸல்லம் அறிவிக்கிறார்கள்:
" அஸ்ஹாபுல் கஹ்புகள் வருகிற காலம் மிகவும் சமீபத்தில் இருக்கிறது. அவர்கள் கூடிய சீக்கிரம் நித்திரையை விட்டு எழுப்பப்படுவார்கள் " என்று திருவுளமாயிருக்கிறார்கள் என்று சொல்லி முடித்தார்.
இந்த நிகழ்வுகளை மன்னர் ரகசிய காரியதரசிகள் மூலம் கேட்டு எம்லீகாவுடைய பாதத்தில் மன்னரும் விழுந்தார்.
இந்த சங்கதி எங்கும் பிரசித்தமாகி, அப்சூஸ் பட்டணத்திலுள்ள ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வந்து ஒவ்வொருவரும் கைகளையும், கால்களை முத்தமிட்டும் இறை வல்லமை மீது சந்தோஷம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.
25 வயதுடைய முப்பட்டனார் எம்லீகாவிற்குக்கு 100 வயதில் தன் பேரக்குழந்தையை நிதர்சனமாக சந்திக்கின்றார் .
ஆல்பர்ட் ஐன்ஸ்டினின் சிறப்பு சார்பியல் கோட்பாட்டின்படி , " சம்பவமே இல்லை என்றால் அவருக்கு காலமே இல்லை "
309 வருடங்கள் குகையில் நித்திரையில் கழித்த எம்லீகாவிற்கு உலகத்தின் எந்த சம்பவத்தின் தாக்கமும் இல்லை .எனவே 309 வருடமாகியும் , அவர் நித்திரை கொண்ட வயது 25-லேயே இருக்கிறார். இதுதான் காலத்தின் கோலம்.

இது போன்று அஸ்ஹாபுல் கஹ்பு வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அற்புதங்கள் , ஆச்சரியங்கள், அதிசயங்கள் நிறைந்ததுதான் என்பதை இறைவன் திருக்குர்ஆனில்,

اَمْ حَسِبْتَ اَنَّ اَصْحٰبَ الْـكَهْفِ وَالرَّقِيْمِۙ كَانُوْا مِنْ اٰيٰتِنَا عَجَبًا
(அஸ்ஹாபுல் கஹ்ஃபு என்ற குகையிலிருந்தோரைப் பற்றி) அந்த குகையிலிருந்தோரும், சாஸனத்தையுடையோரும் நம்முடைய ஆச்சரியமான அத்தாட்சிகளில் நின்றும் உள்ளவர்கள் என எண்ணுகிறீரோ?
(அல்குர்ஆன் : 18:9)

கராமத் 49
குகைத் தோழர்கள் வரலாறு 10



எம்லீகா 300 வருடத்திற்கு முந்தைய புனிதர் என்றதும் அப்சூஸ் பட்டணத்தின் மக்கள் அவரின் கை, கால்களை முத்தமிட்டனர்.

அப்சூஸ் பட்டணத்தை இரு அரசர்கள் ஆட்சி செய்தனர். ஒருவர் நாமூஸ் ஷாஹ் என்னும் மார்க்கப்பற்றுள்ளவர் , இன்னொருவர் யுஹீம் என்ற நஸ்ரானி. இவர்கள் இருவரும் எம்லீகாவை கட்டி அணைத்து முஸாபஹத்து செய்து விட்டு மற்ற தோழர்கள் ஆறு பேருடைய நிலையைப் பற்றி கேட்டறிந்தனர்.

அதற்கு எம்லீகா, " ரக்கீம் என்னும் மலைபொதும்பில் உள்ள குகையினுள் இருக்கின்றார்கள்" என்று சொன்னார். இரண்டு அரசர்களும் தங்கள் தங்கள் கூட்டத்துடன் மற்ற கஹ்பு தோழர்களை தரிசிப்பதற்காக எம்லீகாவுடன் மலை பொதும்புக்கு புறப்பட்டுப் போனார்கள்.
அவ்வாறு போகையில் நடு வழியிலேயே எம்லீகா தம்மோடு குகையில் இருந்த மற்ற சினேகிதர்களுக்கு இந்த செய்தியை முன்பே அறிவிப்பதற்காக இவ்விரு அரசர்களை விட்டு விட்டு குகையை அடைந்த போது , அதன் வாசலில் 309 வருடத்திற்கு முன் கஸான்ஜீ மார்னூஸ் என்ற தக்யானூஸ் கஸானா பொறுப்பாளர் தங்கள் ஏழு பேரின் வரலாறு பதித்திருந்த ஈயத் தகட்டை எம்லீகா பார்வையிட்டார். இது மேலும் 309 வருடங்கள் தாங்கள் தூங்கியதை உறுதிப்படுத்திற்று.
வந்திருந்த இரு அரசர்களும் மலைப் பொதும்பின் வாசலில் பதிக்கப்பட்ட தகட்டை பார்வையிட்டு, திரும்பி வரும் எம்லீகாவிற்காக காத்திருந்தனர். ஆனால் அவர் திரும்பி வரவே இல்லை.
குகையினுள்...

தம் ஊர் சென்ற எமிலீகாவின் நிலையைக் குறித்து குகைத் தோழர்கள் ஆறுபேரும் கவலைப்பட்ட வண்ணம் இருந்தனர்.
எம்லீகா குகையினுள் திரும்ப வந்தபோது, அவருடைய தோழர்கள் அனைவரும் எழுந்து நின்று அவரை கட்டி அணைத்து, " இறைவன் உம்மை தக்யானூஸ் மன்னனின் தீங்கை விட்டும் காப்பாற்றி சௌக்கியமாக கொண்டு வந்து சேர்த்தானே என்று என்று ஆறுதலாய் சொன்னபோது,
எம்லீகா , " அந்த கொடுங்கோலன் தக்யானூஸ் பேச்சை எடுக்காதீர்கள். நீங்கள் எந்தமட்டில் இங்கு நித்திரை கொண்டீர்கள் என்பதை சொல்லுங்கள் ? "என்றார்
அதற்கு அவர்கள் "ஒரு நாள் அல்லது அதைவிட குறைவாக இருக்கலாம் " என்று சொன்னார்கள்.

அப்போது எம்லீகா, " நண்பர்களே நாம் 309 வருஷம் வரை நித்திரை கொண்டிருந்தோம். அனேக நூற்றாண்டுகள் நம்மை விட்டு கடந்துவிட்டன. இதற்கிடையில் தக்யானூஸ் மன்னனும் மாண்டு விட்டான். இப்போது அப்சூஸ் பட்டணத்தை இரண்டு அரசர்கள் இருந்து ஆட்சி செய்து வருகிறார்கள். அவர்களில் ஒருவர் நீதமான மன்னர் நாமூஸ் ஷாஹ். மற்றொருவர் நஸ்ரானி. இப்போது இந்த இரண்டு அரசர்களும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசையால் இதோ வந்து கொண்டிருக்கிறார்கள். இது பற்றி நான் உங்களுக்கு முன்பே இந்த சமாச்சாரம் தெரியப்படுத்த வேண்டும் என்று எண்ணி குகைக்குள் முந்தி வந்துவிட்டேன் "
உடனே தோழர்கள் , எம்லீகாவே ..! நாம் இதுவரையிலும் இக்குகையினுள் இறைவனோடு மட்டும் இருந்து வந்துள்ளோம். நமது ரகசியம் இப்போது வெளியாகி உள்ளது. இனி ஜனங்களுக்கு இடையில் நாம் தொந்தரவு அடைவதை நீர் நாடுகிறீரோ ?" என்று கேட்டார்கள்

அதற்கு எம்லீகா, "அப்படி ஆனால் உங்களுடைய யோசனை என்ன?" கேட்டார்.
அதற்கு அவர்கள்: " நம் நிலைமைகளை இறைவனைத் தவிர ஒருவரும் அறியாதிருப்பதற்காகத்தான் நாம் இந்த குகையை நாடி இதனுள் தஞ்சமடைந்தோம். இறைவனும் நம்மை பொருந்திக் கொண்டு, அவனின் மாபெரும் வல்லமையால், 309 வருடங்களாக நம்மை நித்திரை செய்ய வைத்து மக்களிடமிருந்து பாதுகாத்தான். இது இதுவரையிலும் யாருக்கும் கிடைக்காத பாக்கியம். இந்த ரகசியம் நமக்கும் நம்மைப் படைத்தரப்புக்கும் இடையே மட்டும் இருந்து வந்தது. இப்போது இது மக்களுக்குத் தெரிய வந்துள்ளது . இதனால் ஏற்படும் பஸாயித்திலிருந்து நம்மை பாதுகாக்க, நமது ரூஹ் - உயிர்களை கைப்பற்றிக் கொள்ளும்படி இறைவனிடம் துஆ கேட்க வேண்டும்" என்றார்கள்.
அதுவே சரியான முடிவாக தீர்மானிக்கப்பட்டது.

எல்லோரும் எம்லீகாவுடன் தங்கள் தங்கள் கைகளை உயர்த்தி இறைவனிடம் துஆ கேட்டார்கள்.
அந்த உடனே அல்லாஹ்தஆலா அவர்களின் துஆவை கபூல் செய்து, அவர்களுடைய ரூஹ்களைப் பெற்றுக் கொள்ளும்படி இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான். அப்படியே அன்னவர்களின் ரூஹும் கைப்பற்றப் பட்டது. குகையின் வாசல் முன் போலவே அடைபட்டு விட்டது. அந்த இரண்டு அரசர்களும் குகையின் வாசலைத் தேடி ஏழு இரவும் எட்டு பகலும் சுற்றித்திரிந்தார்கள். ஆயினும் எந்த ஒரு அடையாளமும் தென்படவில்லை.
அப்போது இரு அரசர்களும் மதிமயங்கியவர்களாயும் பயம் கொண்டவர்களாயும் ஒன்றும் இயலாதவர்களாயும் ஆகி விட்டனர். பின் இந்த குகையை உள்ளடக்கி ஒரு மஸ்ஜிது கட்ட அவர்கள் முடிவு செய்தனர்.

رَبُّهُمْ اَعْلَمُ بِهِمْ قَالَ الَّذِيْنَ غَلَبُوْا عَلٰٓى اَمْرِهِمْ لَنَـتَّخِذَنَّ عَلَيْهِمْ   وَكَذٰلِكَ اَعْثَرْنَا عَلَيْهِمْ لِيَـعْلَمُوْۤا اَنَّ وَعْدَ اللّٰهِ حَقٌّ وَّاَنَّ السَّاعَةَ لَا رَيْبَ فِيْهَا اِذْ يَتَـنَازَعُوْنَ بَيْنَهُمْ اَمْرَهُمْ فَقَالُوا ابْنُوْا عَلَيْهِمْ بُنْيَانًـا
مَّسْجِدًا
இன்னும், நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது என்றும், நிச்சயமாக கியாம நாளிலும் சந்தேகமில்லை என்றும் அப்பட்டணவாசிகள் அறிந்து கொள்வதற்காகவே, இவ்வாறு அவர்களைப் பற்றிய (விஷயத்)தை வெளியாக்கினோம்;
(அப்பட்டணவாசிகளோ) “இவர்கள் யார் என்பதை பற்றி தர்க்கித்துக் கொண்டதை (நபியே! நினைவு கூறும்) “இவர்கள் (இருந்த இடத்தின்) மீது ஒரு கட்டடத்தைக் கட்டுங்கள்; இவர்களை(ப் பற்றி) இறைவனே நன்கறிவான் என்றனர்;
இ(வ்விவாதத்)தில் எவர்களுடைய கருத்து மிகைத்ததோ அவர்கள்: “நிச்சயமாக அவர்கள் மீது ஒரு மஸ்ஜிதை அமைப்போம்” என்று கூறினார்கள். (அல்குர்ஆன் : 18:21)
ரஹ்மத் ராஜகுமாரன்.

கராமத் 50

குகைத் தோழர்கள் வரலாறு 11


ஹஜரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் :
" ரோமர்களை எதிர்த்து முஆவியா (ரலி) அவர்களுடன் ஜிஹாது செய்ய நானும் சென்றிருந்தேன். இது "முலீக் போர்" என்று சொல்லப்படும். அப்போது இந்த குகையை கடந்து செல்லவேண்டி இருந்தது.
அதன் உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்றும் முஆவியா விரும்பினார் . நான் கூடாது என்றேன். நம்மை விட எவ்வளவோ சிறப்புடைய ரசூல் (ஸல்) அவர்களிடமே , " நீர் கூர்ந்து பார்த்தீரானால் ...." என்று அல்லாஹ் கூறுகிறானே தவிர , போய் பார்க்கச் சொல்லவில்லை என்றேன் .முஆவியா என் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

"திட்டவட்டமாக யாரும் உள்ளே போகலாகாது என்று தடை செய்யப்படவில்லையே" என்று காரணம் சொல்லி சிலரை முஆவியா (ரலி) உள்ளே அனுப்பினார்கள்.
குகையில் நுழைந்ததுமே, கடும் வெப்பத்துடன் அனல் காற்று வீசி உள்ளே போகவோ, எதையும் பார்க்கவோ முடியாதபடி அவர்களைத் தடுத்து விட்டது. (காஸின் , குர்துபீ)

ஆங்கிலச் சரித்திர லார்டு வில்லியம் முய்ர், "கிறிஸ்துவ கோயில்களின் வரலாறு ,, என்ற நூலில் இந்த நிகழ்ச்சியை குறிப்பிட்டு, இது உண்மையே என்று உறுதிப்படுத்துகிறார்.
இந்த உண்மையை ஹிஜ்ரி 842 முதல் 846 வரை ஆட்சி புரிந்த கலீஃபா வாஹித் என்பவர் ஒரு படையுடன் சென்று வந்து தான் கண்டதை எழுதி வைத்துள்ளார் என்று வரலாற்று ஏடுகள் சுட்டிக் காட்டுகின்றன .
பண்டைய அயோனிய கிரேக்க நகரமான எஃபெஸ்ஸில்தான் அக்குகை இருந்தது என்பர் சிலர் .
மேற்கு துருக்கியில் உள்ள செல்சுக் என்னும் கிராமத்தின் அருகில் இந்நகரத்தின் சிதிலங்கள் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பகால நிலைக்களனாக விளங்கிய இந்நகருக்கு பால் (Paul) வந்தார். இங்குதான் இருந்தது என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக இருக்கலாம்.
ஆப்பிரிக்க நாடான துனிசியாவின் தென்பகுதியில்

"குகை " (அல்கஹ்ஃப்) என்று அழைக்கப்படும் ஓர் இடம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.
ஸ்பெயின் நாட்டில் ஆண்டலூசியா மாகாணத்தில் கிரேனடா நகரின் தென்மேற்கில் உள்ள லோஷா (Loja) என்ற ஊருக்கு அருகில் அக் குகை இருப்பதாக வேறு சிலர் கூறுவர்.
இதற்கெல்லாம் மேலாக குகைவாசிகள் கிறிஸ்தவர்கள் அல்லர்; யூதர்கள் என்றும் ஒரு தகவல் உண்டு.
அதனால் தான் மக்கா குறைஷிகளிடம் குகை வாசிகள் குறித்து முஹம்மதிடம் கேளுங்கள் என மதீனா யூதர்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.

குகை வாசிகள் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தால், கிறிஸ்தவர்களை அங்கீகரிக்காத யூதர்கள் குகைவாசிகள் குறித்து கேட்குமாறு குறைஷியருக்குச் சொல்லிக் கொடுத்திருக்க மாட்டார்கள் என்பது இவர்களின் வாதமாகும்.
இவ்வாறு யூதர்கள் தமக்கு நேர்ந்த கொடுமைகளிருந்து தம்மை தற்காத்துக்கொள்ள குகைகளில் தஞ்சமடையும் பழக்கம் இருந்து வந்துள்ளது.
இதற்கெல்லாம் மேலாக குகைவாசிகள் கிறிஸ்தவர்கள் அல்லர்; யூதர்கள் என்றும் ஒரு தகவல் உண்டு.



அதனால் தான் மக்கா குறைஷிகளிடம் குகை வாசிகள் குறித்து முஹம்மதிடம் கேளுங்கள் என மதீனா யூதர்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.
குகை வாசிகள் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தால், கிறிஸ்தவர்களை அங்கீகரிக்காத யூதர்கள் குகைவாசிகள் குறித்து கேட்குமாறு குறைஷியருக்குச் சொல்லிக் கொடுத்திருக்க மாட்டார்கள் என்பது இவர்களின் வாதமாகும்.
இவ்வாறு யூதர்கள் தமக்கு நேர்ந்த கொடுமைகளிருந்து தம்மை தற்காத்துக்கொள்ள குகைகளில் தஞ்சமடையும் பழக்கம் இருந்து வந்துள்ளது.
ஆனால் முஸ்லீம் ஆய்வாளர்கள் பலர் கண்டுபிடித்து அவர்கள் கிருஸ்துவர்கள் என்று சரி கொண்டுள்ள குகை முன்பு நாம் குறிப்பிட்ட ஜோர்தான் குகை என்பது குறிப்பிடதக்கது.
அல்லாஹ்வே அறிவான்.
இன்று கிருஸ்துமஸ். கிருஸ்துமஸ்
வாழ்த்துகள்

ரஹ்மத் ராஜகுமாரன் .

(இத்துடன் கராமத் தொடர் பதிவுகள் நிறைவு பெறுகிறது)

Vali Poakkan Parathesi DEC 23 2021
கிட்டத்தட்ட 100 ஆண்டுகளை கடந்த ஒரு கிதாபை அடிப்படையாக வைத்து அதை மீட்டெடுத்து அதை எங்களுக்கு உங்களது எழுத்து நடையில் புரிய வைத்தமைக்கு மிகப்பெரிய வாழ்த்துக்கள்....
இது ஒரு பிரமிப்பான சம்பவம் 100 ஆண்டுகளுக்கு முன்பு எந்தவித தொழில்நுட்பமும் அவ்வளவு இலகுவாக கிடைக்காத காலகட்டத்தில் ஒரு ஆத்ம திருப்தியுடன் (அந்த ஆலீம்) எழுதிய கிதாபு எத்தனையோ கைகளுக்கு சென்று கடைசியாக தங்களது கைகளுக்கு வந்து அதை இன்றைய காலகட்டத்தில் உள்ள தகவல் தொழில் நுட்ப உதவியுடன் எங்களுக்கு எழுதியுள்ளீர்கள் அவங்களுக்கு நீண்ட ஆயுளும் பரக்கத்தும் அளித்து எழுத்து பணிகளில் மேலும் மேலும் வளர உதவி புரிவானாக ஆமீன்

NOTES-:

COMPILED ON 01/JUNE/2022